

1

பதிப்பாசிரியர்

முனைவர் த.கோ. பரமசிவம்

முனைவர் வே.இரா. மாதவன்

புலவர் ப.வெ. நாகராசன்

திரு மோ.கோ. கோவைமணி

தண்டபாணி சுவாமிகள்

நினைவு நூற்றாண்டு விழா வெளியீடு

கோயம்புத்தூர்

1998

தண்டபாணி சுவாமிகள் ஆய்வு மாலை

தொகுதி ஒன்று

பதிப்பாசிரியர்

முனைவர் த. கோ. பரமசிவம்
முனைவர் வே. இரா. மாதவன்
புலவர் ப. வெ. நாகராசன்
திரு. மோ. கோ. கோவைமணி

தண்டபாணி சுவாமிகள் நினைவு
நூற்றாண்டு விழா வெளியீடு
கோயம்புத்தூர்
1998

○ தண்டபாணி சுவாமிகள் ஆய்வு மாலை
தொகுதி ஒன்று

○ தண்டபாணி சுவாமிகள் நினைவு நூற்றாண்டு விழா
வெளியீடு

திருவள்ளுவராண்டு 2029, ஆனித்திங்கள் 5, 6, 7
(19, 20, 21—6—1998)

○ முதற்பதிப்பு : 1998 சூன் திங்கள்

○ விலை : உருபாய் 150/-

○ நூல் கிடைக்குமிடம் : தவத்திரு ஆதீன முதல்வர் அவர்கள்
கௌமார மடாலயம்
சின்னவேடன்பட்டி அஞ்சல்
கோயம்புத்தூர் - 641 006.
0422 / 86370, 866094.

○ அச்சாக்கம் : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
சிதம்பரம் - 608 001.

பதிப்புரை

'தண்டபாணி சுவாமிகள் ஆய்வுமாலை' என்னும் இந்நூல், தமிழ்ப்பெரியார் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் நினைவு நூற்றாண்டு விழாக் கருத்தரங்கில் படிக்கப்பெறும் நூற்று எழுபத்திரண்டு ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். தனியொரு தமிழ்ப்புலவருக்காக நிகழும் இந்நூற்றாண்டு விழா மிகப் பெரிய மாநாடாக, கருத்தரங்காக அமைந்திருப்பது தமிழ் இனத்தார் அனைவருக்கும் பெருமை சேர்ப்பதாகும். சுமார் இருநூறு பேராளர் மற்றும் ஐநூறு பார்வையாளர்களைக் கொண்ட பெருந்திரளான ஆய்வறிஞர்களால் நடத்தப் பெறும் இம் மாநாட்டுக் கருத்தரங்கு எல்லாவகையிலும் ஏற்றம் கொண்டதாகப் போற்றப் பெறுகிறது. தம் வாழ்நாளில் நூறாயிரம் பாடல்களுக்கு மேலாகப் பாடிய தமிழ்ப் பெருங் கவிஞரை நினைவு கூர்ந்து, அவர்தம் படைப்புகளைப் பயின்று கருத்தூன்றி, இவ்வளவு பெரிய ஆய்வு மாலையை உருவாக்கத் துணைநின்ற ஆய்வறிஞர்கள் பெரிதும் பாராட்டுக்குரியர் ஆவர்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சென்ற ஆண்டு இறுதியில் நடைபெற்ற ஆறாவது உலகச் சைவ மாநாட்டிற்கு வருகை புரிந்த கோவை கௌமார மடாலயத்தின் ஆதீன முதல்வர் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித் துறைக்கும் வருகை தந்து சிறப்பித்தார்கள், அப்போது அவர்களிடம், நம் குரு முதல்வர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் நினைவு நூற்றாண்டாக இவ்வாண்டு அமைவதைக் குறிப்பிட்டு, தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையும் கோவை கௌமார மடாலயமும் இணைந்து சுவாமி களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினால் பொருத்த மாக இருக்குமே என்று விண்ணப்பித்தோம். அவ் விண்ணப்பத்தை மிக மகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட ஆதீன முதல்வர் அவர்கள் அப்போதே நூற்றாண்டு விழாவுக்கான பெருந்திட்டங்களைத் தொடங்கி விவாதித்து அருளாணை வழங்கினார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் களுள் தலை சிறந்தவர் தண்டபாணி சுவாமிகள் (28—11—1839—5—7—1898) ஆவார். செந்தமிழ்ப் பாண்டி நாட்டில் திருநெல்வேலியில் செந்தினாயகம் பிள்ளைக்கும் பேச்சி முத்தம்மாளுக்கும் திருமகனாக அவதரித்த இவர் தம் எட்டாவது வயதிலேயே தமிழ்ப் பாக்களை இயற்றும் ஆற்றல் கைவரப் பெற்றவர். சங்கரலிங்கம் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் வண்ணச்சரபம், திருப்புகழ்ச் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் எனவும் அன்பர்களால் அழைக்கப் பெற்றார்.

தமிழ் இலக்கிய வகைகளில் அமைந்த மிக அதிகமான பாடல்களைப் பாடி, ஓலைச்சுவடிகளில் தம் கைப்பட எழுதி வைத்த ஒரே புலவர் இவர். நால்வரைப் போன்று தலங்கள் தோறும் சென்று பாடும் இயல்பினைக் கொண்ட இவர் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவிகளைப் புனைவதில் வல்லவர். இலக்கியம், இலக்கணம் எனப் பல வகைகளில் இவர் இயற்றிய நூறாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களுள் அனலிலும் புனலிலும் மறைந்தவை போக இப்பொழுது சுமார் ஐம்பதாயிரம் பாடல்கள் ஓலைச்சுவடிகளிலேயே கோவை சிரவை ஆதீனத்தில் பாதுகாப்பாக உள்ளன. இவை அனைத்தையும் நுண்படச் சுருளில் பதிவு செய்து, தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையினரும் பாதுகாத்து வருகின்றனர்.

சமய வாதங்கள் என்னும் வேறுபாட்டிற்கு முற்றிலும் அப்பாற்பட்டவர் இவர். இறைவன் ஒருவனே என்ற கொள்கையை அழுத்தமாக வலியுறுத்தி, பல்வேறு உருவங் களிலும் பெயர்களுடனும் அந்த ஒரு இறைவனை வழிபடுவதில் சமயப்பூசல் எழுதல் கூடாது என்பதை அறிவுறுத்தியவர். திருமால், சிவன், முருகன், அம்பிகை, கணபதி, சூரியன் என எல்லாக் கடவுளர் மீதும் இவர் பாடியுள்ள பாடல்கள் சமய சமரச நிலையை வலியுறுத்தக் காணலாம்.

'எம்மொழியிலும் தமிழே உயர்ந்தது' என்ற முருகன் அருள் மொழியை வேலூரில் பலர் முன் நிறுவிய பெருந்தகையாளர் இவர். அதன் விளைவாக இவர் இயற்றிய தமிழலங்காரம் நூலும், மூவாயிரம் பாடல் கொண்ட தமிழ்ப் புலவர் புராண

நூலும், அறுவகையிலக்கணமும், வண்ணத்தியல்பும் பிறவும் தமிழ்மொழியின் மேன்மையினைப் பறைசாற்றுவனவாம்.

குருபர தத்துவம் என்ற பெயரில் தன்வரலாற்று நூலை முதலில் இயற்றிய தனிச்சிறப்பும் இவருக்குண்டு. பல இசைத் தமிழ்ப் பாடல்களையும் முசுகுந்த நாடகமும் இயற்றிய இவர் ஒரு முத்தமிழ் வித்தகராகவும் திகழ்கின்றார். சாத்திரம், தோத்திரம், காவியம், மொழிபெயர்ப்பு, மருத்துவம், அரசாட்சி, தத்துவம் எனப் பல துறைகளிலும் பற்பல நூல்களை இவர் இயற்றியளித்துள்ளார்.

வடலூர் இராமலிங்க வள்ளலார், வளவனூர் சண்முக சுவாமிகள், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, வண்ணக்களஞ்சியம் நாகலிங்க முனிவர், அட்டாவதானம் கல்யாணசுந்தர யதீந்திரர், மாம்பழக் கவிச்சிங்க நாவலர் போன்ற பல பெரியார்களோடு தொடர்பு மிகக் கொண்டவர் இவர். நாடக மேதை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் போன்றோர் இவருடைய மாணாக்கர்களாவர்.

இளமையிலேயே தவப்பொலிவினைப் பெற்ற இவர் நூலாசிரியர், உரையாசிரியர், வரலாற்றாசிரியர், பதிப்பாசிரியர் எனப் பல நிலைகளிலும் சிறப்புற்றவராவார். இத்தகைய தமிழ்ப் பெரியாரை நினைந்து போற்றுவதில் தமிழ்ப் பல்கலைக் கழகமும் ஓலைச்சுவடித் துறையும் பெருமையும் பூரிப்பும் கொள்கின்றன.

உயிர்க்கொலை, புலால் உணவு எவ்வகையிலும் கூடாது என்ற தீவிரக் கொள்கையை உடையவரான இவர் இதற்காகவே அன்றைய அந்நிய ஆட்சியாளராக விளங்கிய ஆங்கிலேயரைப் பல நிலைகளில் எதிர்த்துப் பாடியுள்ளார். ஆங்கிலியர் அந்தாதி போன்றவை இத்தகையனவாம். இந்திய விடுதலைப் பொன் விழா ஆண்டாகிய இவ்வாண்டில் தவத்திரு சுவாமிகளின் நூற்றாண்டு விழா அமைவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழகத்தில் நடுநாட்டு சிவத்தலமான திருவாமாத்தூரில் இறையருளாணையின் வண்ணம் எல்லை தாண்டா விரதத்துடன் தங்கித் தவம் புரிந்த சுவாமிகள் 5—7—1898-இல் அருட்சமாதி கொண்டார்கள்.

நூறு ஆண்டுகட்கு முன்பு சுவாமிகள் அருட்சமாதி கொண்ட திருநாளைப் போற்றும் வகையில் இவ்விழாவும் கருத்தரங்கும் ஏற்பாடு செய்யப் பெற்றன. இதற்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் ஆர்வலர்களையும் தொடர்பு கொண்டோம். பலரும் தாமாக முன்வந்து முழு ஒத்துழைப்பை நல்கினார்கள். தண்டபாணி சுவாமிகளின் தமிழ்ப்பணியிலும் சமயப் பொதுமைக் கருத்துக்களிலும் ஈடுபாடும் விருப்பமும் கொண்ட மெய்யன்பர்களும், ஆராய்ச்சி வல்லுநர்களும், ஆய்வாள மாணாக்கர்களும் தகுதிமிக்க கட்டுரைகளை வழங்கிச் சிறப்பித்து உள்ளார்கள். இவ்வகையில் உருவாகியுள்ள இந்த ஆய்வுத் தொகுப்பு நூல் ஒரு சிறந்த கருத்துப் பெட்டகமாகத்திகழ்கின்றது.

சுவாமிகளின் இலக்கண நூல்கள், சிற்றிலக்கியங்கள், சந்தப் பாடல்கள், தல வரலாற்று நூல்கள், தன் வரலாறு, சாத்திர நூல்கள், நீதி நூல்கள், புலவர் வரலாறுகள், ஆயிரக்கவிகள், சித்திரக் கவிகள், சைவ நூல்கள், கௌமார நூல்கள், வைணவ நூல்கள், காணாபத்திய நூல்கள், பதிகங்கள், சுவடிப்பதிப்புகள், இசை நாடகப் படைப்புகள் எனப் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் உருப்பெற்றுள்ளன.

அவ்வாறே, சுவாமிகளின் கௌமார நெறி, தவநெறி, கொல்லாமை நெறி, சமய நெறி, சுவாமிகளின் மனித நேய உணர்வு, சுவாமிகள் கண்ட படிமக்கலை, சுவாமிகளின் தமிழுணர்வு, சுவாமிகள் கண்ட நால்வர், சுவாமிகள் கண்ட சேக்கிழார், சுவாமிகள் கண்ட நம்மாழ்வார், சுவாமிகளின் சமுதாயச் சிந்தனைகள், சுவாமிகளின் சீர்திருத்தச் சிந்தனைகள், சுவாமிகள் காட்டும் குடும்பவியல், சுவாமிகளின் பல்சமய நோக்கு, சுவாமிகள் காட்டும் கல்வியியல், சுவாமிகள் காட்டும் அறம், பொருள், இன்ப-கொள்கைகள், சுவாமிகளின் இலக்கியக் கொள்கைகள் என மிக விரிவான அளவிலும் ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

வண்ணச்சரபரும் வள்ளலாரும், அருணகிரிநாதரும் அடிகளாரும் என இவ்வாறு ஒப்பீட்டு முறையிலும் பல கட்டுரைகள் வழங்கப் பெற்றுள்ளன.

சுவாமிகள் இயற்றிய பல நூல்கள் அச்சு வடிவம் பெற்றும் இன்று கிடைத்தற்கரியனவாயுள்ளன. பல அச்சாகாமலுள்ளன.

இவற்றை உரிய வகையில் அறிஞர்களும் பொதுமக்களும் அறியச் செய்ய வேண்டும் என்னும் நோக்கிலேயே கட்டுரைகள் தேர்வு செய்யப் பெற்றன. சுவாமிகளின் வாழ்வுக்கும் வாக்கிற்கும் தொடர்பு இல்லாத சில கட்டுரைகள் மட்டுமே தவிர்க்கப் பெற்றன. பிற கட்டுரைகள் அனைத்தும் அச்சிடப் பெற்றுள்ளன. பக்க வரையறையைக் கருதி ஒரு சில கட்டுரைகள் மட்டும் திருத்தியளிக்கப் பெற்றன.

சுவாமிகளின் நூல்களால் தாக்கம் பெற்ற ஆய்வாளர்களின் கருத்துக்கள் அனைத்தும் இவ்வாய்வு மாலையில் பதிவு செய்யப் பெற்றுள்ளன. கட்டுரையாளர்களின் கருத்துக்கள் பலவும் மேலாய்வுக் குரியனவாகும். ஆயினும், அவற்றைப் பலரும் படித்தறிய வேண்டும், இதன் வழி ஆய்வுகள் பெருக வேண்டும் என்ற நோக்கிலேயே இவற்றை ஒன்றாகத் தொகுத்து வழங்கியுள்ளோம்.

முதலில் வரப்பெற்ற எழுபத்தொரு கட்டுரைகளும் ஆசிரியர் அகர வரிசையில் முதல் தொகுதியாக அச்சுக்கு அளிக்கப் பெற்றன. அதன் பின்னர் வந்த நூற்றியொரு கட்டுரைகளும் அவ்வாறே இரண்டாம் தொகுதியாக அச்சிடப் பெற்றன. இரண்டு தொகுதிகளுக்கும் பக்க எண்கள் ஒரே தொடர் எண்களாகக் கொடுக்கப் பெற்றுள்ளன. இப்பெருந் தொகுப்பு நூல் சுவாமிகளின் நூற்றாண்டு நினைவு நாளில் முழுமையாக வெளிவருவது திருவருளின் அருட்செயலே என எண்ணி மகிழ்கிறோம்.

இப்பெரிய நூற்றாண்டு விழாவின் வெற்றிக்கும் சிறப்புக்கும் முதற்காரணமாக விளங்கும் தகுதியும் சிறப்பும் கோவை கௌமார மடாலயத்தின் ஆதீன முதல்வர் தவத்திரு குமரகுருபர சுவாமிகளுக்கே உரியதாகும். அவர்களின் ஆக்கமும் ஊக்கமுமே இப்பெரிய ஆய்வு மாலை வெளிவரக் காரணமாயின. நிதிச் சுமையாலும், கால நெருக்கடியாலும் நாங்கள் துவண்ட போதெல்லாம் 'எதற்கும் கவலை வேண்டாம். எல்லாவற்றையும் யாம் பார்த்துக் கொள்வோம். தொடர்ந்து ஊக்கமாகச் செயற் படுங்கள். ஆய்வு மாலை எப்படியும் எவ்வளவு பக்கமானாலும் விழா நாளில் வெளிவந்தே ஆக வேண்டும்' என்று அடிக்கடி அருளாணை வழங்கி ஊக்கப் படுத்தினார்கள். எனவே, முதற்கண்

அவர்களின் பொன்னார் திருவடிகளை வணங்கி நன்றி பாராட்டுவதைப் பெருங் கடமையாகக் கருதுகின்றோம்.

இப் பெருந்திட்டத்தை ஆர்வமுடன் வரவேற்று ஊக்கப் படுத்திய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புநிறை முனைவர் கி. கருணாகரன் அவர்களின் பேருதவிகளுக்கு நன்றி பாராட்டுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். நிதிப் பற்றாக்குறையில் தத்தளிக்கும் சூழலிலும் இம் மாநாட்டுக் கருத் தரங்கைக் கோவையில் வைத்துக் கொள்வதற்கு இசை வளித்ததுடன் உரிய நிதியுதவியையும் வழங்கித் துணை புரிந்தார்கள். துணைவேந்தர் அவர்கள் சிறந்த கல்வியாளர் என்பதால் அவ்வப்பொழுது ஆய்வுக் கட்டுரைகள் வரவு குறித்து வினவி அறிந்த வண்ணமிருந்தார்கள். 'ஒரு தமிழ்ப் புலவருக்கு இவ்வளவு சிறப்புக்களா? இவற்றை உலகறியச் செய்ய வேண்டும், உரிய வகையில் சிறப்பாகச் செய்யுங்கள்' என்று அடிக்கடி ஊக்கப்படுத்தினார்கள். அவர்களின் சீரிய ஊக்க உரைகளுக் காகவே தனிப்பட்ட நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்கிறோம்.

மாலை எனின் மலர்களே முதற்பொருளாம். அந்த வகையில் இவ் ஆய்வு மாலை சிறப்பாக அமையக் காரணமான ஆய்வுக் கட்டுரைகளாம் மலர்களே சிறப்பாக நினைக்கத்தக்கன. ஆய்வாளப் பெருமக்கள் தண்டபாணி சுவாமிகளின் நூல்களைத் தேடித் தொகுத்துப் பயின்று எழுதியுள்ள ஆய்வுக்கட்டுரைகள் அவர்களின் பேருழைப்பைக் காட்டுவன. கம்பரைப் போலவோ வள்ளுவரைப் போலவோ மிகுதியும் பயிலப் பெறாத புலவராக நம் தண்டபாணி சுவாமிகள் விளங்குகின்ற சூழலிலும், அவர்தம் பதிப்பு நூல்களும் பெருகக் கிடைக்காத சூழலிலும், அரிதின் முயன்று, கட்டுரைகளை உருவாக்கிய ஆய்வாளப் பெருமக்கள் அத்துணைப்பேரும் பாராட்டுக்குரியவராவர். அவர்களின் இனிய ஒத்துழைப்பைப் பெரிதும் மதித்து வணங்குகிறோம்.

மிகவும் குறுகிய காலத்தில் விரைந்து அச்சிட வேண்டியதன் விளைவாக ஒருசில அச்சுப் பிழைகள் நேர்ந்துள்ளன. சான்றோர்கள் இத்தகைய குறைகளைக் களைந்து இந் நற்பணியைப் பாராட்டி ஊக்குவிப்பார்கள் என உளமார நம்புகிறோம்.

இப்பெரிய ஆய்வு மாலையை நன்கு அச்சிட்டு உரிய காலத்தில் வழங்கித் துணைபுரிந்த சிதம்பரம் சபாநாயகம் அச்சக உரிமையாளர் திரு. ஆர். கௌதம சங்கர் அவர்களுக்கும் அச்சகப் பணியாளர்களுக்கும் என்றும் நன்றி பாராட்டும் கடப் பாடுடையோம்.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தோன்றாத் துணையாக இருந்து அருள்பாலித்து இப் பெருவிழாவும் பெருமாலையும் நிறைவுறத் துணைபுரிந்த திருவருளை நினைந்து வணங்கி மகிழ்கின்றோம்.

சீலமிகும் ஆய்வுநூலைத் தேர்ந்துணர்ந்து கற்கவல்லார்
ஞாலமிசை ஏற்றமுறும் நற்றமிழின் – சாலநலம்
எய்திதண்ட பாணிமகான் இன்பவருள் மேவிநிதம்
வையமிசை வாழ்வார் மகிழ்ந்து.

ஆய்வு மலர்கள்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் ஞான பரம்பரை

தவத்திரு குமரகுருபரசுவாமிகள்

தமிழகம் செய்த தவப்பயனாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவதரித்து எண்ணரிய இலக்கியங்களால் தமிழ் மொழியை வளப்படுத்தியதோடு, சமயபேதமற்ற உயர்நிலைக் கௌமார நெறியையும் அமைத்துக் கொடுத்தருளிய ஸ்ரீலஸ்ரீ வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளே சிரவையாதீனப் பரமகுருநாதராக விளங்குகிறார். இக்காரணம் பற்றி இவரைத் தாத்தா சுவாமிகள் என வழங்குவதே சிரவை மடாலய அடியார்களின் மரபு.

வண்ணச்சரபம் சுவாமிகளின் சீடர்களில் எல்லா வகையிலும் முதன்மையானவர் சிரவையாதீனத் தாபகர் ஆகிய தவத்திரு. இராமானந்த சுவாமிகள் அவர்களே சிரவை ஆதீன அடியார் களால் சந்நிதானங்கள் என வழங்கப்பெறும் இராமானந்த சுவாமிகள் 15—10—1858 அன்று கோவையை அடுத்த சிரவணம்பட்டி என்னும் சிற்றூரின் வேலப்பக்கவுண்டர் ஆண்டாளம்மை என்னும் பெற்றோர்கட்கு தலைமகனாகத் தோன்றினார்கள்.

இளமையிலேயே கடவுள் பக்தியும் கருணையும் மிக்கவராக விளங்கிய சுவாமிகள் ஐந்தாம் வயதில் பள்ளியில் சேர்க்கப் பட்டார். ஊக்கத்தோடு கல்வி கற்றார். சிரவணம்பட்டியில் திருக்கோவில் கொண்டுள்ள சிவபெருமானை உள்ளன்புடன் வழிபட்டு வந்தார். பள்ளிப்படிப்பு முடிந்ததும் தந்தையாரின் விருப்பப்படி விவசாயத்தை மேற்கொண்டதுடன் வழிபாட்டிலும் தவறாமல் ஈடுபட்டு வந்தார்.

பெரியோர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கித் தம் இருபதாவது வயதில் தாய்மாமன் மகளாகிய சின்னம்மாள்

என்பவரை மணந்து கொண்டார். எனினும் இவருடைய மனம் உலகியல் வாழ்வில் ஆழங்காற்படவில்லை. இவர் வீட்டில் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுத் திருச்செந்தூர் சென்றுவிட்டார். சிலநாட்களுக்குப் பிறகு சொந்த ஊரிலிருந்து தேடிச் சென்றவர்கள் கண்டுபிடித்து அழைத்ததாலும், திருச்செந்தூரிலிருந்த மௌன சுவாமிகள் என்பவரின் அறிவுரைப் படியும் சிரவணம்பட்டி திரும்பினார்.

அக்காலத்தில் சிரவணம்பட்டிக்கு அருகே சாமக்குளம் என்னும் ஊரில் வெங்கடரமணதாசர் என்னும் அந்தணர் ஒருவர் வாழ்ந்திருந்தார். இவரும் இராமானந்தரும் அவ்வப்பொழுது சந்தித்து உறவாடுவது வழக்கம்.

இந்த வெங்கடரமணதாசர் இராமானந்தருக்கு வண்ணச் சரபம் சுவாமிகளைப் பற்றிக் கூறி அவரியற்றிய தியானாநுபூதி என்னும் நூலைக் கொடுத்தார். அந்நூலை ஆழமாகக் கற்ற இராமானந்தர் இதனை இயற்றியவரே தமக்குக் குருநாதர் ஆவார் என உறுதிபூண்டார்.

1880-ஆம் ஆண்டு தாத்தா சுவாமிகள் பழனியில் இருப்பதை அறிந்து, சென்று வணங்கி ஆட்கொள்ள வேண்டினார். அவரும் உபதேசம் புரிந்தார். இராமானந்தர் பிரியாவிடை பெற்றுத் தம்மூர் திரும்பினார்.

சமய ஒழுக்கத்தோடு விவசாயத்தையும் கவனித்து வந்தார். தந்தையாரின் மறைவுக்குப்பின் தமது ஊருக்கும் சின்னவேடன் பட்டி என்னும் ஊருக்கும் இடையே உள்ள தம் நிலத்தில் சிறிய தவச்சாலை ஒன்றை அமைத்துத் தனிவாழ்வு நடத்தத் தொடங்கினார்.

1890ஆம் ஆண்டு தம் தவச்சாலையில் சித்திமகோற்கட விநாயகர் கோவிலும், தண்டபாணிக் கடவுள் கோவிலும் கட்டினார். அக்கம்பக்கத்து ஊர்களைச் சேர்ந்த பலர் சுவாமி களிடத்து உபதேசம் பெற்று அடியார்கள் ஆயினர்.

1898இல் வண்ணச்சரபர் திருவாமாத்தூரில் ஞான சமாதி கொண்டார் தவத்திரு இராமானந்த சுவாமிகள் அங்கு அவருக்குச் சமாதி எழுப்பியும், திருமடம் கண்டும், வழிபாடு

தொடர்ந்து நடைபெற நிபந்தங்கள் ஏற்படுத்தியும் ஆவன செய்தார்.

சிரவணம்பட்டியில் தம் மடாலயத்திற்கு வரும் அடியார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்ததால் தனியாக மடாலயக் கட்டிடத்தையும், கௌமார சபையையும் தோற்றுவித்தார். பல உரைநடை, செய்யுள் நூல்களை இயற்றினார். தம் மாணவர்களில் தலைசிறந்த கந்தசாமி சுவாமிகளை 1923-ஆம் ஆண்டு கௌமார மடாலயத்தின் தலைவராக நியமித்தார். 27-12-1956 வெள்ளிக்கிழமையன்று இறைவன் அருளில் இரண்டறக் கலந்தார். அப்போது சுவாமிகளுக்கு வயது தொண்ணூற்றெட்டு நிறைந்திருந்தது.

சௌர சமயப்பதிகம், சைவப்பதிகம், சாத்தேயக் கீர்த்தனைகள், விநாயகர் பதிகம், கணபதி மெய்ஞ்ஞானக் காதல், கௌமாரப் பதிகங்கள், சண்முக மாலை, சற்குரு குறள், திருவுந்தியார், அநுபவானந்தம், ஆத்துமராம சரித்திரம், பல தனிக்கவிகள் ஆகியன இவரால் இயற்றப் பெற்ற நூல்கள் ஆகும். இவை அனைத்தையும் தொகுத்து **இராமானந்தத் திரட்டு** என்னும் பெயரில் சிரவைக் கௌமார சபை வெளியிட்டது. எனினும் இப்போது படிகள் கிடைப்பதில்லை. சண்முக மாலை மட்டும் பல பதிப்புகளைப் பெற்று இன்னும் கிடைக்கிறது. இப்போது கிடைத்தற்கரிய இராமானந்தத் திரட்டு நூலை எளிய குறிப்புரையுடன் நல்ல செம்பதிப்பாக மறுபடியும் வெளியிடுதல் சிறந்த சமயப்பணி ஆகும்.

சிரவை ஆதீனக் குரு முதல்வரால் இரண்டாவது பட்டத்தில் நியமித்தருளப் பெற்ற ஸ்ரீலஸ்ரீ கந்தசாமி சுவாமிகள் இராமானந்தரின் பூர்வாசிரமத்து இளைய சகோதரர் ஆகிய வெங்கடசாமிக் கவுண்டர், குட்டியம்மாள் ஆகியோரின் குமாரராக 18—4—1892 அன்று தோன்றினார். ஐந்தாம் வகுப்பு வரை உள்ளூர்ப் பள்ளியில் கல்வி பயின்று பிறகு மடாலயத்தில் தண்டபாணி கோவில் பூசையில் ஈடுபட்டார்.

சந்நிதானங்களிடம் ஞானோபதேசம் பெற்று வழிபாட்டோடு செபம், தியானம் ஆகியவற்றிலும் ஈடுபட்ட தவத்திரு கந்தசாமி சுவாமிகளுக்கு ஆழமான தமிழறிவும், இனிய கவிகள் புனையும்

பழுத்த புலமையும் இயல்பாகவே அமைந்துவிட்டன. சில சிற்றிலக்கியங்களைப் படைத்த பிறகு இவருக்கு 29—1—1923 அன்று ஆதீனத் தலைமைப் பட்டம் அளிக்கப் பெற்றது.

வடமொழியில் சந்திரதத்தரால் இயற்றப் பெற்றதும், 103 வைணவ அடியார்களின் வரலாற்றைக் கூறுவதுமாகிய பக்தமாலா என்னும் காவியம் ஒன்று உளது. இது மலையாள மொழியிலும் பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த முதல்நூல், மொழி பெயர்ப்பு ஆகிய இரண்டையும் கொண்டு கந்தசாமி சுவாமிகள் பக்த மான்மியம் என்னும் காப்பியத்தை ஏறத்தாழ 7500 செய்யுள் களால் இயற்றியருளினார் இதன் அரங்கேற்றம் மிக விமரிசை யாகச் சிரவையாதீனத்தில் 1928 ஆம் ஆண்டு பெரிய இலக்கிய விழாவாகவே நடைபெற்றது இக்காப்பியத்தைத் தவிர நம் சுவாமிகள் மூன்று தல புராணங்கள், ஆறு பிள்ளைத்தமிழ்கள், ஏழு யமக அந்தாதிகள், அகப்பொருட்கோவை, கலம்பகம், சிலேடை வெண்பா, பதிற்றுப் பத்தந்தாதி ஆகியன ஒவ்வொன்று, மாலைகள் பதிகங்கள் பற்பல எனத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களை வாரி வழங்கியுள்ளார். இவரால் இயற்றப் பெற்ற மொத்த செய்யுள்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 18000 ஆகும்.

தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் இலக்கியங்கள் செறிவானவை; பக்திச் சுவையோடு சாத்திரக் கருத்துக்கள் நிறைந்தவை; இலக்கிய மரபு மாறாதவை; பலகாற் பயின்று சிந்திக்க வேண்டியவை; நிலையாமையைப் பலவகைகளிலும் வற்புறுத்தலை ஆதார சுருதியாகக் கொண்டவை. யாப்புச் சிறப்பு, பொருட் செறிவு ஆகியவை பற்றிக் கந்தசாமி சுவாமிகள் தமிழ்நலம் தேர்ந்த அறிஞர்களால் கொங்கு நாட்டுக் கச்சியப்ப முனிவர் எனப் போற்றப்படுகிறார்.

இத்துணைப் பெருஞ்சிறப்பு வாய்ந்த சுவாமிகள் 10-12-1948 வெள்ளிக்கிழமையன்று தம் குருநாதரின் முன்னிலையிலேயே ஞான சமாதி கொண்டருளினார்கள்.

இவருடைய மாணவர்களுள் கவியரசு கு. நடேச கவுண்டர் அவர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவர் இவரைப் போற்றிப் பிள்ளைத்தமிழ், தாலாட்டு, திருப்பள்ளி யெழுச்சி ஆகிய பனுவல்களைப் பாடியுள்ளார்.

சிரவை யாதீனத்தின் மூன்றாவது குருமகா சந்நிதானங்களாக உலகப் புகழ் பெற்று விளங்கிய எம் குருநாதர் ஸ்ரீலஸ்ரீ சுந்தர சுவாமிகள் அவர்கள் திருப்பெருந் திரு. கந்தசாமி சுவாமிகளின் பூர்வாசிரம இளவலாகிய திரு. வேலப்ப கவுண்டர் அவர்களுக்கும், திருமதி சின்னம்மாளுக்கும் இரண்டாவது திருக்குமாரராக 29—11—1929 வெள்ளிக்கிழமையன்று அவதாரம் செய்து அருளினார்கள்.

இளமையிலே தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் அருட் பார்வைக்கு இலக்காகி, அணுக்கத் தொண்டராக விளங்கினார். சுவாமிகளின் திருமேனி நலிவுற்றிருந்த இறுதி நாட்களில் நிழல் போல நீங்காதிருந்து எம் குருநாதர் பணிவிடை புரிந்தார்.

தவத்திரு கந்தசாமி சுவாமிகள் 1948-இலும், சந்நிதானம் 1956-இலும் திருவருளில் கலந்தபிறகு கௌமாரமடாலயத்தின் நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். 9—2—1964 அன்று பழனியில் மூன்றாவது குருமகா சந்நிதானமாக முறைப்படி அருளாட்சி ஏற்றார். இதற்குப்பிறகு சிரவையாதீனத்தின் புகழ் தமிழகம் தாண்டியும், இந்தியாவிற்கு வெளியிலும் பரவத் தொடங்கியது.

எம் குருநாதர் 1957-ஆம் ஆண்டு மடாலய வளாகத்திலேயே தவத்திரு இராமானந்த அடிகளார் உயர் தொடக்கப்பள்ளியைத் தொடங்கினார். அது 1960-ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளி ஆயிற்று. அது இன்று ஆயிரம் மாணவர்களையும் நாற்பது ஆசிரியர்களையும் கொண்டு மேனிலைப்பள்ளியாக வளர்ச்சி அடைந்துள்ளது. இத்துடன் 1977-ஆம் ஆண்டு சிறு குழந்தை களுக்காக தவத்திரு கந்தசாமி சுவாமிகள் மெட்ரிக் குழந்தைகள் பள்ளி என்னும் பெயரில் மற்றொரு கல்வி நிறுவனத்தையும் தோற்றுவித்தார். இந்த மழலையர் பள்ளி இன்று இருநூற்று ஐம்பது மாணவர்களையும் பத்து ஆசிரியைகளையும் கொண்டு வளர்ந்து வருகிறது. இக்கல்வி நிறுவனங்கள் மடாலயத்தை அடுத்துள்ள கிராமங்களில் வாழும் பொதுமக்களுக்கு எம் குருநாதர் அளித்த கல்விக் கொடை ஆகும்.

தவத்திரு சுந்தரசுவாமிகள் மடாலயத்தின் திருக்கோவிலில் பெரிய அளவில் திருப்பணி செய்து 1—6—1966 அன்று சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்தார். 1971-இல் இராஜகோபுரம்

கட்டப்பெற்றது. 1972-ல் விமானங்கள் புதுப்பிக்கப்பட்டன. 1977-ல் மிக அழகிய சித்திரத்தேர் உருவாக்கப்பெற்றது' 1978-ல் அவிநாசிலிங்கேசுவரர் கற்றளி அமைக்கப்பெற்றது. 1982-ல் பண்டரிபுரத்தில் இருப்பதைப்போலவே பாண்டுரங்கர் கோவில் நிறுவப்பெற்றது. 1985-ஆம் ஆண்டு முருகப்பெருமான் கோவில் கற்றாளியாக்கப்பெற்றது. கோவில் கட்டுமானக் கலையில் இது சிறப்பாகக் குறிக்கப்பெற வேண்டியவகையில் பெரிய பெரிய கற்களால் அமைந்துள்ளது.

எம் குருநாதர் எந்தச் செயலிலும் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்பதைக் கடைபிடித்துச் சிறியன சிந்தியாதாராக விளங்கினார். இமயம்தொட்டுக் குமரிவரை உள்ள திருத்தலங் களில் வழிபட்டும் புனித நீராடியும் அடியார்களையும் ஆற்றுப் படுத்தினார். கடல்கடந்தும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா. இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சமயப்பணியாற்றச் சென்றுள்ளார். 1987-இல் 108 யானைகளை நிறுத்தி உலக சமாதானத்தையும், மக்கள் குலம் முழுவதும் நன்மைபெறவும் வேண்டிச் செய்யப்பெற்ற உலகப்பெரு வேள்வி யாகிய கஜபூசை உலக வழிபாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுவிட்ட ஒன்றாகும்.

நம் சுவாமிகளின் தமிழ்ப்புலமையை யாவரும் அறிவர், இனிய கவிதை புனையும் ஆற்றல்படைத்த இவர் தோத்திரப் பாக்களாகக் கிட்டதட்ட 1000 செய்யுள்களை இயற்றியுள்ளார். அவற்றுள் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் வாழ்க்கை வரலாற்று வண்ணம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். தொன்மையான சாதுக்களில் ஒருவரும், நல்ல தமிழறிஞரும் ஆகிய தவத்திரு மருதாசல சுவாமிகள் என்னும் தம்பிசுவாமிகள், ''தவத்திரு சுந்தரசுவாமிகள் பேச்சாற்றல் நாடறிந்த ஒன்று; எவ்வளவு நுட்பமான கருத்தையும், அவையின் தன்மையை உணர்ந்து, அவ்வவையினர் புரிந்து கொள்ளுமாறு எடுத்துக்கூறுவதில் இவர் நிகரற்றவர்; தமிழ்ப் பெருங்கடலின் பல்வேறு துறைகளிலும் மூழ்கித் திளைத்தவர்; என்றாலும் தன் இயல்பிற்கேற்றபடி சேக்கிழாரின் பெரியபுராணத்தில் தன்னையே இழந்துவிடும் பேரீடுபாடு கொண்டவர். அனைத்தையும் துறந்தபின்பும் திருத் தொண்டர்களின் புனிதவாழ்விலும் வாக்கிலும் அளவிறந்த காதல் கொண்டுள்ள துறவி நம் குருநாதர்'' என்கிறார்.

தம் காலத்திலிருந்த சமய, இலக்கிய, சமுதாய, அரசியல் பிரமுகர்கள் அனைவராலும் இவர் போற்றப்பட்டார். இத்துணைச் சிறப்பு வாய்ந்த எமது குருநாதர் அவர்கள் 14—6—1994 அன்று இறைவன் திருவருளில் கலந்தார்கள்.

வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் ஆகிய இருவருடைய நூல்கள் அனைத்திற்கும் நல்ல உரையோடு கூடிய செம்பதிப்புகளை வெளியிட்டு, அந்நூல்களைத் தமிழ் அறிஞர்கள் அனைவருக்கும் அறிமுகம் செய்ய வேண்டுமென்று எம் குருநாதர் விரும்பியிருந்தார். இதன் தொடக்கமாகப் புலவர் புராணம் வெளியாக ஆவன செய்தார்.

தவத்திரு சுந்தரசுவாமிகளின் திருவுள்ளப்படி தமிழ் இலக்கியப் பணியில் இப்போது சிரவையாதீனம் தன்னால் இயன்ற அளவு ஈடுபட்டுள்ளது. தமிழார்வலர்களின் முழுமையான ஒத்துழைப்பால் இப்பெரும்பணி நல்லமுறையில் நிறைவேறத் திருவருளும் குருவருளும் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.

வண்ணச் சரபகுரு வண்டமிழ்தேர் கந்தமுனி
எண்ணி வழங்கும் இயல்எல்லாம் – மண்ணுலகில்
எங்கும் பரவிடுமா றேற்றபணி செய்திடற்காம்
சங்கற்பம் எம்தம் தவம்.

மாலைப் போற்றும் மாலைகள்

தி. அரங்கநாதன்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தமிழ்ப் பெரும் புலவர்களில் தனிச்சிறப்பு வாய்ந்தவர். தன் புலமையாற்றலாலும் ஆன்மீகச் சிந்தனையாலும் தமிழ்ச் சமய நெறிகளை ஒருங்கிணைக்க முயன்றவர். வைதிக சமயங்கள் தம்மில் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டுத் தத்துவக் கருத்துக்களை வலியுறுத்தியபோது அவையெல்லாம் ஒரு பரம்பொருளையே பேசுகின்றன என்பதைச் சுவாமிகள் எடுத்துரைக்க முயற்சி செய்தார். கௌமாரத்தில் ஈடுபட்டு முருகனே முதல்வன் என்றிருந்தவர் அறுசமயங்கள் காட்டும் நெறிகள் ஒன்றே என்பதை வலியுறுத்த தலப்பயணங்கள் சென்று அத்தலங்களில் எழுந்தருளியுள்ள அறுசமயக் கடவுளரையும் வழிபட்டுப் பதிகங் களையும், தனிப்பாடல்களையும், பிரபந்தங்களையும் பாடினார்.

சமயப்பொதுமை

வைதிக சமயங்களில் சைவ வைணவப் பூசல் பக்தி இயக்கக் காலம் முதலே இருந்து வந்துள்ளது. ஆயினும் அப்பூசலைப் போக்க வேண்டும் என்ற முயற்சியைச் சைவக் குரவர்களும் ஆழ்வார்களும் கூட மேற்கொண்டிருந்தனர். இதை அவர்களின் பாக்களின் மூலம் அறிய முடிகிறது. ஆனால் சுவாமிகள் அவர் களுக்கும் மேலாகத் தம் உருவத்தின் மூலமே இரு பெரும் சமயங் களும் வலியுறுத்தும் கருத்து ஒன்றே என்பதை உணர்த்தினார். பாதாதி கேசமாகத் திருநீறணிந்து, இரு தோள்களிலும் தென் கலை, வடகலைத் திருநாமம் அணிந்து, கண்டத்தில் உருத்திராக்க மாலையுடன் துளசிமணி மாலையையும் தாமரை மணிமாலையையும் அணியும் நியமம் உடையவராய் வாழ்ந்தார்.

சுவாமிகளின் கடவுட்கொள்கை தெய்வம் ஒன்றே என்பதாகும். இக்கருத்தைப் பல பாடல்களிலும் அவர் எடுத்தாளுகின்றார். ஆதிசங்கரர் தத்துவவிளக்கங்களைக் கூறிப்

பின்னர், சிவன், திருமால், முருகன், விநாயகர், சக்தி, சூரியன் ஆகிய தெய்வங்களின் வழிபாட்டு மரபையொட்டி அறுசமய வகைப்பாட்டை விளக்கினார். அடுத்த நிலையில் தமிழகத்தில் தோன்றிய தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரசம் காண முயன்றார். சமூகச் சிந்தனையை அடித்தளமாகக் கொண்டு இராமலிங்கர் சமரச சுத்த சன்மார்க்க நெறி கண்டார். இச்சமயச் சான்றோரர்க்குப் பின்னர் அவர்களைப் போன்று, புது நெறி வகுக்க முயன்றவர் சுவாமிகளே ஆவார். 'தெய்வங்களிடம் பிரிவினை ஏதும் இல்லை, தெய்வம் ஒன்றே என்பது சத்திய மாகும்' என்ற கருத்தை வலியுறுத்தி வழிபாட்டு முறையில் ஆறு சமயங்களையும் ஒன்றாக இணைத்துச் சமயக் காழ்ப்பு அகல வழிவகுத்தார் என்று கூறலாம். ஆறு சமயக் கடவுளரையும் சமயம், வழிபாடு, தலப்பயணம், இலக்கியம், தத்துவம் என்ற பல நிலைகளில் ஒருங்கிணைத்துக் காட்டினார். ஆதி சங்கரர் அறுசமயக் கொள்கையை வடமொழியில் கூறினார். சுவாமி களோ தம் பாநலத்தாலும், பழகு தமிழாலும் தமிழக மக்களுக்கு உணர்த்தினார்.

சுவாமிகளும் திருமாலும்

மிகப் பழங்காலம் முதற்கொண்டே சைவமும் வைணவமும் தமிழகத்தில் தழைத்தோங்கி மக்களின் வழிபாட்டு நெறிக்கும் ஆன்மீக உணர்வுக்கும் நன்னெறி காட்டி வந்துள்ளன. ஆறு சமயக் கடவுளரில் சிவன், சக்தி, விநாயகர், முருகன் ஆகியோரைச் சைவ சமயக் கடவுளராய்க் கொள்ளுதல் மரபு. சூரியனைப் பெருந் தெய்வமாய்க் கொண்டு வழிபடும் மரபு மிகுதியாகக் காணப்படவில்லை. திருமால் தனிப்பெருந் தெய்வமாய் வைணவர்களால் போற்றப்படுவதைக் காணலாம். ஆதலின் சுவாமிகள் திருமாலிடமும் மிகுந்த பக்தி கொண்டு பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றை இருவகையாகப் பகுத்துக் கூறலாம். 1) திருமால் எழுந்தருளியுள்ள திருப்பதிகள் தோறும் சென்று விஷ்ணு பதிகங்களாயும், திருமால் பதிகங்களா யும், அந்தாதிகளாயும், திருப்புகழாயும் பாடப்பட்டவை. இவை ஏறக்குறைய நாற்பத்தைந்துக்கும் மேலானவை. 2) திருமாலைப் போற்றித் துதிக்கும் பாடல்களைக் கொண்டுள்ள திருவரங்கத் திருவாயிரம் இதில் முப்பத்தெட்டுப் பிரபந்தங்களில் ஆயிரத்து ஏழு பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

மாலைப் போற்றும் மாலைகள்

திருவரங்கத் திருவாயிரத்தில் இடம் பெற்றுள்ள மாலை இலக்கியங்கள் ஆறாகும். அவையாவன. (1) திருவரங்க வெண்பா மாலை (2) ஸ்ரீரங்கநாயக மாலை (3) பசுக்காப்பு மாலை (4) இரட்டை மணிமாலை (5) நான்மணி மாலை (6) நவமணி மாலை. இந்த ஆறு மாலைகளும் சுவாமிகளால் திருமாலுக்குச் சூட்டப்பட்ட பாமணி மாலைகளாகும். இவற்றில் இருநூற்று நாற்பத்திரண்டு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவையே இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளன.

மாலை என்ற சிற்றிலக்கிய வகை பக்தி இலக்கியக் காலத்தில் எழுந்தது. சைவத்தில் அப்பரின் அங்க மாலையும் வைணவத்தில் தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருமாலையும் அக்காலத்தில் தோன்றிப் புது இலக்கிய நெறியை உண்டாக்கியவை. இம் மாலைநூல்கள் பொருள், யாப்பு, அமைப்பு, எண்ணிக்கை எனப் பல அடிப்படைகளில் அமைந்தவை என்பதைப் பாட்டியல் நூல்கள் கொண்டு உணர முடிகிறது.

திருவரங்க வெண்பா மாலை

திருவரங்கமே என முடியும் இம் மாலைநூல் திருவரங்கத்துப் பள்ளி கொண்ட பிரானின் சிறப்பைக் கூறுவதாய் அமைந்துள்ளது. வெண்பா மாலை என்பது பாவகையால் பெயர் பெற்றதைக் குறிக்கிறது. இதில் இருபத்தைந்து வெண்பாக்கள் உள்ளன.

சிரங்க நாயக மாலை

திருவரங்கப் பெருமாளின் புகழ்பாடும் இப்பிரபந்தம் கட்டளைக் கலித்துறையால் ஆனது. சிரங்கநாயகனே என்ற ஈற்றைப் பெற்றுவரும் இவ்விலக்கியத்தில் ஐம்பத்தொரு பாடல்கள் அமைந்துள்ளன.

பசுக்காப்பு மாலை

தெய்வம் காப்பதாக மூன்று, ஐந்து அல்லது ஏழு கவிகளால் பாடப்படும் பிரபந்தம் காப்பு மாலை என்று கூறப்படும். ஆனால் சுவாமிகள் புனைந்த பசுக்காப்பு மாலை பாட்டியல்

வகுத்த இலக்கணத்திற்கு உட்படாது அமைந்துள்ளது. திருவரங்கப் பெருமாளைப் 'பசுக்காத்தற் கெழுவாயே' என எழுப்பும் வகையில் கொச்சகக் கலிப்பாவால் அமைந்துள்ளது. இது இருபத்தைந்து பாக்களைக் கொண்டது. 'பசுவாகிய உயிரைக் காப்பாய்' என இறையை வேண்டும் வகையில் இப்பிர பந்தம் அமைந்தது என்பர். உயிரைக் குறிக்கப் 'பசு' என்ற சொல்லை வைணவம் பயன் படுத்துவதில்லை. அதனால் அப் பொருளைச் சுவாமிகள் குறிக்கவில்லை எனலாம். இடையர் குலத் தலைவனாம் கண்ணனாகிய திருவரங்கன் ஆநிரை காக்க எழவேண்டும் என்று அத்தொடர் குறிப்பதாகவே கொள்ளலாம்.

இரட்டை மணி மாலை

இரட்டை மணி மாலை என்பது வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும் மாறி மாறி வந்து அந்தாதித் தொடையுடன் அமைவது இவ்வகை இலக்கியமாகும். இதில் இருபது பாடல்கள் உள்ளன.

நான்மணி மாலை

நான்மணி மாலை என்பது அந்தாதித் தொடையில் அமைவது. சுவாமிகளின் நான்மணி மாலை இலக்கணத்திற்கேற்ப வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என மாறி மாறி இயைந்து நாற்பது செய்யுள்களைக் கொண்டுள்ளது. விருத்தத்திற்குப் பதிலாகத் தாழிசையும் அமைதல் உண்டு.

நவமணி மாலை

நவமணி போல ஒன்பது பாவகையால் அந்தாதியாக இயற்றப்படும் ஒரு வகைப் பிரபந்தம் நவமணி மாலையாகும். சுவாமிகள் திருவரங்கத் திருவாயிரத்திலும் பழனித் திருவாயிரத் திலும் நவமணி மாலை இலக்கியம் இடம் பெற்றுள்ளது. பொதுவாக இப்பிரபந்தம் ஒன்பது செய்யுளைப் பெற்றுவரும். ஆனால் சுவாமிகளின் நவமணி மாலைகள் அவற்றிலிருந்து வேறு பட்டவை. ஒன்பது பாடல்களாலன்றி ஒன்பது மடங்கான எண்பத்தொரு பாடல்களால் ஆனவை. அவை, வெண்பா, கட்டளைக் கலித்துறை, கொச்சகம், கட்டளைக் கலிப்பா,

அம்மானை, அறுசீர் விருத்தம், எண்சீர்த் தாழிசை, ஆசிரியம், சந்தம் என்பன நவமணி போலமையப் பாடப் பெற்றுள்ளன.

ஆழ்வார்களும் சுவாமிகளும்

திருமாலின் எழிற் தோற்றத்திலும் திருக்குணங்களிலும் ஆழங்கால் பட்டவர்கள் ஆழ்வார்கள். பேரெழில் கொண்ட பெருங் கருணைப் பெருமாளைப் பாடி வைணவ நெறி தழைக்கச் செய்தவர்கள். வண்ணச்சரபம் சுவாமிகள் அவ்வாழ்வார்களை அடியொற்றியே திருமாலின் புகழ் பேசுகின்றார். ஆழ்வார்களின் அருஞ்செயல்களையும் சுட்டுகின்றார். திருமங்கையாழ்வாரைத் 'தாழாத பெருவரந் தலைகொண்ட பரகாலன்' (பசுக்காப்பு மாலை – பா. 11) என்றும் பெரியாழ்வாரை,

விண்டுசித்தன் வேம்பணிவான்முன்
பண்டுதூக்கொரு பைம்பொற்கிழியை
யறுத்தது போலும், (நான்மணி மாலை – பா. 20)

என்றும் குறிக்கிறார். ஆழ்வார்களுள் தலைவரான நம்மாழ்வாரைத் 'தென் குருகைப் புளிக்குளே நான்மறைக்கும் தமிழ் செய்துற்றவன்' (பசுக்காப்பு மாலை – பா. 52) என்று குறிப்பிடுகின்றார். இவருடைய திருவாய்மொழி முதற் பாசுரமான 'உயர்வற உயர் நலம்' என்ற பாசுரத்தின் சந்தம் ஒட்டி.

உலகுகண் முழுமையும் உதவுநன் எவனவன்உவல
அலகறும் உயிர்களும் அருள்பவன் எவன் இருள்
மலமுறும் அவைகெட மலைபவன் எவன் அவன்
நலமலி திருவருள் நடைமிக விழைவதே.
(திருவரங்கத் திருவாயிரம் – பாயிரம் பா. 1)

என்ற பாடலைப் படைத்துள்ளமை நோக்கத்தக்கது. திருமங்கை மன்னனின் அர்ச்சாவதார ஈடுபாடும், பெரியாழ்வாரின் கண்ணன் அவதாரப் பெரும்புகழ்ப் பேச்சும், குலசேகரரின் இராமாவதார திருவருள் வேட்கையும், நம்மாழ்வாரின் பரத்துவப் பார்வையும் சுவாமிகளின் மாலைப் பாடல்களில் பரந்து காணப்படுகின்றன. மேலும் ஏனைய ஆழ்வார்களின் ஒருமித்த உணர்வும் இவ்விலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது.

குருபர தத்துவக் கோட்பாடு

சுவாமிகள் ஆறு சமயக் கடவுள் கொள்கையை எடுத்துரைக்கும் போதும் அதனூடே சிறப்புடைய குருபர தத்துவத்தை வலியுறுத்துகின்றார். முதுபெரும் சமயங்களான சைவமும் வைணவமும் ஆசாரியனுக்குச் சிறப்பிடம் தருபவை. புராணக் கதைகளும் தத்துவ விளக்கங்களும் அதை விளக்குகின்றன. கௌமாரம், காணாபத்தியம், சாக்தம். சௌரம் ஆகியவற்றிலும் குருவிற்குச் சிறப்பிடம் அளிக்கப்பெறுகின்றது. அவ்வடிப்படையில் சுவாமிகள்,

> **பரிதி ஈசன் பராசத்தி மாயவன்**
> **கரிமுகன்குக னென்னக் கவின்தரும்**
> **பெரிய சற்குரு பொற்பதம் பேணுவார்**
> **அரியதாள் மகரந்த மணிந் துய்வாம்.**
>
> (காப்பு, விட்டுணு தெரிசனச் சருக்கம்)

என்று பாடுகின்றார். இதில் மூன்று நிலைகளில் குருவாய் இருந்து உபதேசித்த வரலாறு திருமால் பற்றிய புராணக் கதைகளில் காணலாகின்றது அவை (1) நரனாயும் நாரணனாயும் இருந்து உபதேசித்தமை (2) திருமகட்குத் திருமால் உபதேசித்தமை (3) அர்ச்சுனனுக்குப் போர்க்களத்தில் அறநெறியைப் போதித்தமை. இவற்றை நோக்க, குருபர தத்துவம் வைணவத்தில்தான் மிகுதியாகப் போற்றப்படுகின்றது என்று எண்ணியே, சுவாமிகள் திருவரங்கனுக்கு மாலைகள் நிறைந்த ஆயிரம் பாக்கள் படைத்தார் என்றே கொள்ளலாம்.

திருக்கலியாண குணங்கள்

ஆழியும் சங்கும் ஏந்தி அடியவர்க்கு அருளும் பெருமான் கொண்ட திருக்கலியாண குணங்கள் எண்ணற்றவை என்பதை வைணவம் எடுத்துரைக்கின்றது. அவற்றை ஆழ்வார்கள் போன்றே சுவாமிகளும் இலக்கியச் சிறப்பாலும் புராணக் கதைகளாலும் விளக்குகின்றார். அவற்றில் நான்கு குணங்கள் மிகச் சிறப்பாய்க் கொள்ளத்தக்கவை அவையாவன: (1) வாத்சல்யம் (2) சௌசில்யம் (3) சுவாமித்துவம் (4) சௌலப்பியம் என்பன.

வாத்சல்யம்

வாத்சல்யம் என்பது குற்றத்தையும் குணமாகக் கொள்ளும் அளவற்ற அன்பைக் குறிக்கும். உலக உயிர்கள் வாழ்க்கை

நெறியில் நல்வினை தீவினை ஆகிய இரண்டையுமே இயற்றும் இயல்புடையவை. இறையுணர்விலும் நன்னெறியிலும் உயிர்கள் ஒரு நிலைப்படும் போதுதான் நற்கதி அடைகின்றன. வைணவம் குற்றம் தள்ளிக் குணம் கொள்ளும் திருமாலின் குணத்தைப் பெரிதும் போற்றுகின்றது. திருமங்கையாழ்வார் இறைவனின் இத்திருக்குணத்தைக் குறிக்கும் வகையில்,

மறந்தேன் உன்னைமுன்னம் மறந்தமதியின் மனத்தால்
இறந்தேன் எத்தனையும் அதனால் இடும்பைக் குழியில்
பிறந்தே எய்த்தொழிந்தேன் பெருமான் திருமார்பா
சிறந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகர் மேயவனே.

(பெரிய திருமொழி 6. 2. 2.)

என்று பாடுகின்றார்.

வண்ணச்சரபம் சுவாமிகள் இத்தகைய வாத்சல்ய குணத்தில் மிக ஈடுபட்டுப் பாடுவதைக் காணமுடிகிறது. இவர்க்கும் ஆழ்வாராதிகளுக்கும் மிகுந்த வேறுபாடுண்டெனினும், அவர்களை அடியொற்றியே திருமாலின் திருக்குணத்தைத் திருவரங்கத் திருமாலின் அர்ச்சை வடிவில் காணும் இவர்,

கல்லாதார் அன்பின்றிக் கண்டுகரங் கூப்பிடினும்
நல்லாறு அளிக்கும் நகர்.

(திருவரங்க வெண்பா மாலை – பா. 16)

என்று பாடுகின்றார். தாயின் நற்கருணை கொண்ட பிரான் தனக்கு அருளியதை உணர இயலா நிலையில் ‘மாதர் இன்பம் பெற நச்சி நாய் போன்று உழலவிடாது’ அருள வேண்டும் என்பதை,

ஆய்போன்றுயிர்கள் அனைத்தையும்காக்குநின் ஆடல்சொல்வேல்
சேய்போன்றுவக்கத் தடுத்தாளின்மெய்யருட் சீர்குன்றுமோ

(சிரங்க நாயக மாலை – பா. 32)

என்று இறைஞ்சுகிறார். தாய் போன்று வாஞ்சையுடன் காத்து அருளும் திருமாலின் வாத்சல்ய குணம் உயிர்களுக்கு உய்ய வழி வகுப்பது என்பது சுவாமிகளின் கருத்தாகும்.

சௌசில்யம்

உயர்ந்தவன் தாழ்ந்தவனொடு கலக்கும் நிலையைச் சௌசில்யம் என்பர். திருமாலின் இத்திருக்கலியாண குணம்

மற்றக் கடவுளர்க்கு இல்லாதது என்று வைணவம் கூறுகிறது. அவ்வாறு கலக்கும் போது தன் உயர்வும் கலக்கப்படுபவனின் தாழ்வும் சிறிதேனும் தோன்றாமல் புரையறக் கலக்கும் பண்பு இதுவாகும். இராமாவதாரத்தில் இராமன் குகன், சுக்ரீவன், வீடணனொடு கொண்ட நட்பும், கண்ணன் அவதாரத்தில் கண்ணன் அர்ச்சுனனோடு கலந்து பரிமாறியதும் அத்தகையது என்பர். இவ்வாறு உயர்வு தாழ்வு பாராநிலையில் இறைவர்க்கு ஒரு பயனும் இல்லை. ஆனால் மற்றவர்க்குப் பெரும் பயன் நிகழும். இச்சௌசில்ய குணத்தை ஆழ்வார்கள் பலவாறாக எடுத்துரைக்கின்றனர். பெரியாழ்வார்,

> நாந்தகமேந்திய நம்பிசரணென்று
> தாழ்த்த தனஞ்சயற்காகித் தரணியில்
> வேந்தர்களுட்க விசயன் மணித்திண்தேர்
> ஊர்ந்தவன் ... ... (பெரியாழ்வார் திருமொழி 1 9 4)

என்று பாடுகின்றார்.

தண்டபாணி சுவாமிகளும் திருமாலின் இக்குணத்தில் மிக ஈடுபாடு கொண்டவராகத் திகழ்கிறார். அவதாரங்கள் அனைத்துமே அக்குணத்தை வெளிப்படுத்துபவைதான் என்பது அவரின் முடிபு. அதை,

> மாலை யரங்கமணி மாளிகையின் வாஞ்சையினால்
> வேலையிடைக் கண்டுயில்கை விட்டானை — சேலைநிகர்க்
> கண்ணாய்ச் சியர்மகிழும் காமுகனென் றோர்ந்தோனே
> நண்ணார் குடிக்கு நமன். (நவமணி மாலை பா. 19)

என்ற பாடல் வழி விளக்குகின்றார். பரத்துவ நிலையில் இருக்கும் பரந்தாமன் தன்னை அடியவர் கண்ணுக்கு இலக்காக்கிக் கொண்டு அவரோடு பழகி வாழ்ந்த நிலை அவதார நிகழ்வுகளில் உண்டு. அதையே சுவாமிகள் இப்பாடலில் சுட்டுகின்றார்.

சுவாமித்துவம்

இக்குணம் தன்னை யொழிந்த எல்லாப் பொருட்கட்கும் தலைவனாய் இருக்கும் திருமாலின் சிறப்பைக் குறிப்பது, எல்லாச் சமயங்களும் தத்தம் கடவுளரை இவ்வகையில்

குறித்தாலும் திருமாலின் சுவாமித்துவம் அவற்றிலிருந்து வேறுபட்டது என்பதைத் திருமழிசையாழ்வார்,

நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
நான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்
(நான்முகன் திருவந்தாதி - பா. 1)

என்று பாடுகின்றார். இவ்வண்டத்தையும் உயிர்களையும் படைத்துக் காக்கும் பரமனின் அருட் சிறப்புச் சொல்லுதற் கரியது. உணர்வதற்கெளியது என்பதை ஆழ்வாராதிகள் எடுத்துரைக்கின்றனர். சுவாமிகளும் தம் பாக்களில் திருமாலின் இக்குணத்தைப் போற்றிப் பாடும் நிலையைக் காண முடிகிறது. 'சுட்டியறியப்படும் இவ்வுலகம் அவன் அவள் அது என்ற பகுப்புடையது. இப்பகுப்பில் தோன்றிய அடியேனுக்கு அருளி நற்கதி செலுத்தும் பரமன் எவன் எங்குளன் என்று எண்ணி ஏங்கிச் செய்வதறியாது திகைத்திருந்தபோது, அதற்கு விடையாக உலகு இயக்கும் பொருள் திருவரங்கத்து உயோகு நித்திரை செய்து அலமரும் இவ்வுலக உயிர்களுக்கு அருளிக் கொண் டிருக்கிறது' என்பதை உணர்ந்த சுவாமிகள்,

சிவனொடு நான்முகன் இந்திரன்போற்றத் திருவரங்கத்து
இவளவுநாளென்று அளவாதுறங்கும் இறைவனே
(இரட்டை மணி மாலை - பா. 4)

என்று திருமாலின் சுவாமித்துவ குணத்தைப் போற்றித் துதிக் கின்றார். போற்றிப் பணிந்தேத்தி வாழ்த்தி வணங்கும் தெய்வங்களுக்கும் அடியவர்களுக்கும் அருள் செய்யும் ஆற்றல் கொண்டவன் கருமுகில் வண்ணனாகிய கண்ணன். சிவனுக்கு நான்முகன் இட்ட சாபத்தைப் போக்கியவனும் அவனே என்பதைப், 'பணியணிவான் கைத்தலை மண்டையோடு பறித்தெறிந்தாய்' (இரட்டை மணி மாலை - பா. 12) என்று எடுத்துரைக்கின்றார். இத்தகைய தலைவனாம் தன்மை கொண்ட தாமோதரன் தனக்கும் அருளிய தன்மையை,

கண்டார்வினையும் களியுந்துயரும் களையுமுன்னைக்
கொண்டாடப்பெற்றும் இனிமேலும்எற்கோர் குறைவருமோ.
(சீரங்க நாயக மாலை - பா. 48)

என்று பாடுகின்றார்.

சௌலப்பியம்

பரமபத நாதனாய் எல்லோரினும் மேம்பட்டு நிற்கும் திருமால் இப்பூவுலகில் வந்து அவதரித்துக் குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை எல்லோரும் அருகில் வந்து தம் ஊனக் கண்ணால் காணும்படி எளியனாய் இருக்கும் தன்மையைக் குறிப்பது இக்குணம். இந்தக் குணம் அடியவர்கள் தங்கள் தாழ்வை நினைத்து அகலாமல் எப்படியும் தாம் விரும்பிய அருளை, பெரும் பயனை இறைவன் அளித்தருளுவான் என்ற நம்பிக்கைக்குச் சாதனமாக அமைவது.

தன்னைத் தாழவிட்டுக்கொண்டு இடையர் வாழும் ஆயர்பாடியில் வந்து தங்கி வாழ்ந்து ஆய்ச்சியர் மகிழ அவர் களோடு கலந்து பழகிய கண்ணன் அவதாரம் சௌலப்பிய குணத்துக்குச் சான்றாய் அமைவது. எளிவந்த தன்மை என்று இதைக் குறிப்பர். பேயாழ்வார் இக்குணத்தை வலியுறுத்தும் வண்ணமாக,

> **கோவலனாய் ஆநிரைகள் மேய்த்துக் குழலூதி**
> **மாவலனாய்க் கண்ட மணிவண்ணன்**
>
> (மூன்றாந் திருவந்தாதி – பா. 42)

என்று பாடுகின்றார்.

தண்டபாணி சுவாமிகளும் இக்குணத்தைப் போற்றும் வகையில் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவதார காலத்தில் தான் ஆய்ச்சியரும் மற்றவரும் அக்குணத்தை அனுபவித்தனர் என்பதில்லை; அர்ச்சாவதார வடிவங்களிலும் அக்குணத்தைக் காண முடியும் என்பதைச் சுவாமிகள்,

> **கடலும் பச்சாலிலை யும்தொண்டர்நெஞ்சமும் காவிரியாற்று**
> **இடமன்னுசீரங்கத் தானிடமே** (நான்மணி மாலை – ப. 38)

என்று எடுத்துரைக்கின்றார். இக்குணம் உணர்ந்த அடியார்கள் விடமன்ன கூற்றினுக்கும் விதிக்கும் அஞ்ச வேண்டியதில்லை என்பது அவர் முடிவாகும்.

திருமாலின் திருக்கலியாண குணத்திலும் வடிவிலும் ஈடு பட்டுத் துதிப்பவர்கள் உயர்ந்த பேறு பெறுவர் என்றும் பரமபத நாதனின் அணுக்கராய் இருந்து தொண்டாற்றுவர் என்றும் வைணவம் கூறுகிறது. சுவாமிகளோ, திருமாலைப் போற்றித்

துதிக்கும் அடியவர்கள் சங்கரனுக்கும் நான்முகனுக்கும் ஒப்பாவர் என்பதை வலியுறுத்துகிறார். அதை

இடங்கொள்நன்மனத் தேமிகநினைபவர் எக்குலத்தினரேனும்
நடங்கொள் சங்கரன் பிரமனொப்பவரலால் நரர்எனல்
கூடாதே
(நான்மணி மாலை – பா. 9)

என்ற தொடர்கள் விளக்குகின்றன.

அருட்பேறு வேண்டல்

வைணவத்தில் முற்றூட்டுச் சரண் 'பிரபத்தி' என்று கூறப்படும். ஆழ்வாராதிகளும் ஆசாரியர்களும் இப்பிரபத்தி மார்க்கத்தையே பின்பற்றினர்; வலியுறுத்தினர். இவ்வுலகத் துன்பத்தில் இருந்து விடுபட வேண்டும் என்பது அவர்களின் பேரவா. சுவாமிகளும் இவ்வுலக இன்பங்கள் யாவும் துன்பத்துக்கு இட்டுச் செல்லும் புதைகுழிகள் என்பதைப் பல இடங்களில் குறிக்கின்றார். அதிலும் மோகத்தால் வரும் சிற்றின்பம் இப்பிறவியிலேயே துன்பத்தைக் கொடுத்து மறுமையிலும் தொடரச் செய்யும் இயல்புடையது. இத்துன்பம் தொடரா நிலை வேண்டும் என்பது சுவாமிகளின் விழைவு, அதை,

பாவைநல்லார் இச்சைக் கடலின்
மறுகும்என்னை வாழ்விக்க வாராய்
(இரட்டை மணிமாலை – பா. 9)

என்றும்,

கட்டாரிக்கண்ணியர் மோகவிகாரக் கடலிற்பட்டுக்
கெட்டாலும் உன்னைமறவேன்சற்றின்று கிருபைசெய்வாய்
(சீரங்கநாயகர் மாலை – பா. 44)

என்றும் இறைஞ்சுகிறார். தன்னையும், இவ்வுலக உயிர்களையும் இத்துன்பங்களில் இருந்து காக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தின் வெளிப்பாடே மாலை இலக்கியங்கள் என்றால் அது மிகையாகாது.

உலக உயிர்களின் துன்பங்களைத் தன்மேல் ஏற்றிக்கொண்டு பாடும் சுவாமிகள் அருள்பெற்ற நிலையையும் பல இடங்களில் எடுத்துரைக்கின்றார். அவ்வருட்பேறு கிடைத்த நிலையை,

அறிவரும்சாக்கிர சொற்பனத்தேயன் றறைந்தமொழி
குறியெனநம்பும் தமியேனைமின்னங் குலையவிடேல்

(சீரங்கநாயக மாலை - பா. 35)

என்று உரைக்கின்றார். அருட்பேறு இறைவன் திருமொழியால் சுவாமிகளுக்கு வாய்த்தபோதும், இவ்வுலகத்தார் உணர்ந்து நன்னெறி படர வேண்டும் என்ற விழைவே மாலை இலக்கியங்கள் உணர்த்தும் கருத்தாம்.

தொகுப்புரை

1. திருமாலைப் பற்றி ஆறு மாலை இலக்கியங்களைப் பாடியுள்ள சுவாமிகள் அவற்றில் திருமாலின் சிறப்பைப் புராண, இதிகாச, அவதார நிகழ்ச்சிகள் மூலம் விளக்குகிறார்.
2. குருபரதத்துவத்தின் அடிப்படையில் திருமால் வழிபாட்டுக்குச் சிறப்பிடம் தருவதை உணரமுடிகிறது.
3. சுவாமிகள் அர்ச்சை வடிவில் திருவரங்கப் பெருமானிடம் மிக ஈடுபாடு கொண்டுள்ளார்.
4. இலக்கியச் சிறப்பிலும் பக்திப்பெருக்கிலும் சுவாமிகளின் மாலை நூல்கள் ஆழ்வாராதிகளின் பிரபந்தங்களுக்கு ஒப்பானவை.
5. உலக வாழ்வில் துன்பத்திற்கு சிற்றின்பமே அடிப்படையானது. அதைத் தவிர்த்தால் நற்கதி பெறலாம் என்பது சுவாமிகள் வலியுறுத்தும் கருத்து.

துணை நூல்கள்

கிருஷ்ணசுவாமி அய்யங்கார், ஸ்ரீ (பதிப்) நாலாயிர திவ்ய பிரபந்தம், சுதர்சனம் வெளியீடு, திருச்சி, 1987.

கிருஷ்ணவேணி அம்மையார், எஸ். செம்பொருள், திருமலை - திருப்பதி தேவஸ்தான வெளியீடு, திருப்பதி, 1952.

தண்டபாணிசுவாமிகள்: திருவரங்கத் திருவாயிரம், பி.ஆர். ராமையர் அச்சுக்கூடம், சென்னை, சித்தார்த்தி ஆண்டு.

அறுவகை இலக்கணம் கூறும் வேற்றுமை இலக்கணம்

வே. சா. அருள்ராஜ்

முன்னுரை

இலக்கண உலகில் எழுத்திலக்கணம், சொல் இலக்கணம், பொருளிலக்கணம் என மூன்று இலக்கணங்களாகப் பகுக்கப் பட்ட தமிழ் இலக்கணம் யாப்பு, அணி ஆகிய இரு இலக்கணங் களையும் சேர்த்து ஐந்திலக்கணமாக வளர்ந்த உண்மையை யாவரும் அறிந்ததே. வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார் மேற் கூறப்பட்ட ஐந்திலக்கணங்களுடன் புலமை இலக்கணம் என்ற ஒன்றையும் சேர்த்து அறுவகை இலக்கண நூலை உருவாக்கினார்.

முந்து நூல்களின் வழியே நமக்குக் கிடைத்திருக்கும் முழு முதல் இலக்கண நூல் தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று பகுதிகளால் ஆனது. தொல்காப்பியர் கூறிய பொருளிலக்கணத்தைத் தனித் தனியே வாங்கிக் கொண்டு அகப்பொருள். புறப்பொருள் என இலக்கணங் களைக் கூறும் நூல்கள் தோன்றின. அது பொருளிலக்கணத்தைப் பகுத்துகொண்டதேயாகும், தொல்காப்பியர் கூறியசெய்யுளியலை எடுத்துக் கொண்டு 'யாப்பருங்கலம்' முதலிய யாப்பு இலக்கண நூல்கள் தோன்றித் தமிழ் இலக்கணம் நான்கு வகை இலக்கண மாக உருவானது. தொல்காப்பியம் கூறிய உவமையியலையும் செய்யுளியலில் சில பகுதிகளையும் தழுவிக் கொண்டு வடமொழி இலக்கணத் துணையோடு அணியிலக்கணம் என ஒரு இலக்கணம் தோன்றித் தமிழ் இலக்கணம் ஐங்கூறுடையதாயிற்று. இவ்வைந் துடன் ஆறாவது இலக்கணமாகச் சொல்லப்படுவது 'புலமை இலக்கணம்' என்பதாகும் இது தமிழின் மாட்சி தமிழ்ப் புலவர் களின் மாட்சி ஆகியவற்றை விரிப்பதாகும். ஆக மூன்றிலக் கணத்துள் ஆறு இலக்கணக் கூறுகளையும் மேலும் உண்டாகும் விரிவாக்கங்களையும் தன்னகத்தே கொண்டதாகத் தொல்

காப்பியம் காணப்படினும் தனித்தனி இலக்கணங்களாகப் படைத்துத் தமிழ் மக்களுக்கு வழங்கி இருக்கும் அறுவகை இலக்கணம் போற்றுதற்கு உரியதாகும்.

இதன் ஆசிரியர் வண்ணச்சரபம் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் ஆவார். இவர் 19-ம் நூற்றாண்டின் தமிழ்ப் பெரு மக்களுள் தலைச் சிறந்தவராவர். தமிழ் மொழிக்கு இவர் செய்த பணி பாராட்டுதற்குரியது. இவர் புலவர் புராணம், அறுவகை இலக்கணம், ஏழாமிலக்கணம், திருவரங்கத் திருவாயிரம், பழனித் திருவாயிரம், தில்லைத் திருவாயிரம் எனப் பல புதிய நூல்களைப் படைத்துள்ளார்.பல்வேறு இலக்கியவகைகளையும் படைதுள்ளார் அறுவகை இலக்கணம் என்னும் இலக்கணநூல் இவர்தம் தமிழ் இலக்கிய, இலக்கணப் பயிற்சிக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இவ்விலக்கணம் இன்றைய மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் இன்றியமையததாகக் காணப்படுகிறது ஐந்திலக்கணங்கள் குறித்தே பேசிய முந்தைய இலக்கண ஆசிரியர் களிலிருந்து புலமை இலக்கணம் என்ற ஒன்றைத் துணிந்து கூறி மரபிலிருந்து விலகிச் செல்வதை அறுவகை இலக்கணத்தில் காண முடியும். மற்ற ஆசிரியர்களைப் போன்று கிளிப்பிள்ளையாக இலக்கணத்தை வகுக்காமல் அவரது சொந்தக் கருத்துக்கிணங்க இலக்கணம் ஆக்கியிருப்பது பாராட்டுதற்குரியது. இருப்பினும் இந்நூலின் அமைப்பு முறை சரியான இலக்கணக் கட்டுக்கோப் புடன் அமையாமல் உதிரிக் கருத்துக்களின் தொகுப்பாகவே பற் பல இடங்களில் காணப்படுகிறது. இந்நூலில் கூறப்பட்டிற்கும் வேற்றுமைகள் பற்றிய செய்திகள் இவண் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பொதுவாக இலக்கண நூல்கள் சொல்லதிகாரத்தில் சொற் களைப் பெயர், வினை, உரி, இடை எனப் பிரித்துக் கூறித் திணை, பால், இடம், வேற்றுமை போன்ற சிறப்பிலக்கணங்களை விரித்துக் கூறும். ஆனால் அறுவகை இலக்கண ஆசிரியரோ வேறொரு புதிய நெறியில் தம் போக்கில் செல்கிறார். ஒரு தொடருக்கு – குறிப்பாகச் சொல்லுக்கு வேண்டிய இன்றியமை யாத சில இலக்கணங்கள் - குறிப்பாக வேற்றுமை இலக்கணம் அறுவகை இலக்கணத்தில் ஒரு தனிப் பகுதியாகக் கொடுக்கப்பட வில்லை.

அறுவகை இலக்கணப் பகுப்பு முறை

இந்நூல் முதலில் பொதுப்பாயிரத்தையும் அடுத்து சிறப்புப் பாயிரத்தையும் கூறுகின்றது. இந்நூல் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம், புலமையிலக்கணம் என ஆறு இயல்களைக் கொண்டு விளங்குகிறது. எல்லா இலக்கணங்களிலும் வேற்றுமை இலக்கணம் சொல்லிலக்கணத்திலே கூறப்படுகின்றது. அறுவகை இலக்கணச் சொல்லிலக்கணம் பொது இயல்பு, பிரிவு இயல்பு, சார்பு இயல்பு, திரிபு இயல்பு என்னும் நான்கு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

பொதுவியல்பு 16 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. எழுத்துக்களால் சொற்கள் பிறக்கின்றன என்பதும் சொற்களின் பெருக்கம் நிகண்டுகளால் அறியப்படும் என்பதும் சொற்கள் வழக்கில் திரிந்து வழங்கும் என்பதும் சொற்களின் நிறங்களும் திசைச்சொல் ஆட்சியும் இப் பொதுவியல்பில் கூறப்பட்டுள்ளன.

பிரிவியல்பு 44 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. சொற்களைச் சுட்டுப் பெயர், வினை, ஏவல், அமைதி, தன்மை, உரி, ஒப்பு, விளி, இரக்கம், வியன் முதலிய பலவாறாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளதால் பிரிவியல்பு என இவ்வியல் அமைகிறது

சார்பியல்பு 25 நூற்பாக்களைக் கொண்டது. இவ்வியலுள் சில விகுதிகள், அசை, சாரியை, உவமை, மங்கலம், யாப்பிலக்கண வாய்ப்பாடு, புது மொழியாக்கம், பற்றிய பல்வகைச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் சொற்களைச் சார்ந்து வருவதால் இது சார்பியல்பு எனப்பட்டது.

திரிவியல்பு 27 நூற்பாக்களைக் கொண்டது. சில சொற்களின் வடிவங்கள் திரிதல், அன்மொழித் தொகை, ஆகுபெயர் பொருள் மயக்கம் இல்லாமல் கூறுதல், குறைச்சொல், முன்னோர் மொழியைப் பின்னோர் எடுத்தாளல், வகையுளி, சில சாரியைகள், விகுதிகள், சில இடைச் சொற்கள், சில புணர்ச்சி விதிகள், முதலியன இவ்வியலுள் இடம் பெற்றுள்ளன. இவைகளில் பெரும்பாலும் சொற்களின் வடிவமோ அல்லது பொருளோ மாறி வருவதால் இவையனைத்தும் திரிவியல்பில் தொகுக்கப் பெற்றன.

மற்ற இலக்கண ஆசிரியர்கள் சொல்லிலக்கணத்தில் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என மூன்று இயல்களில் வேற்றுமை இலக்கணம் குறித்துக் கூற அறுவகை இலக்கண ஆசிரியர் அது குறித்து ஒன்றும் கூறாது விட்டிருப்பது பெருங்குறையாகவே காணப்படுகிறது. இதிலிருந்து அறுவகை இலக்கண ஆசிரியருக்கு வேற்றுமை இலக்கணம் குறித்த சிந்தை இல்லையெனக் கூறிவிட முடியாது. இவர் சொல்லிலக்கணத்தில் திரிவியல்பு என்னும் இயலில் விகுதிகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறும்போது இன்ன விகுதிகள் இன்னின்னப் பொருளைத் தரும் என்று கூறுவதிலிருந்து ஆசிரியருக்கு வேற்றுமை பற்றிய சிந்தை இருந்தமை தெரிய வருகிறது. ஆனால் வேற்றுமை பற்றிய விளக்கமோ, எத்தனை வேற்றுமை உருபுகள் உண்டு என்ற செய்தியோ, என்னென்ன பொருட்களில் அவ்வுருபுகள் வரும் என்பனவோ குறிப்பிடாது ஒட்டு மொத்த மாக விகுதிகள் குறித்துக் கூறும்போது சில வேற்றுமைகள் இவ்விலக்கண நூலில் எடுத்தாளப்பட்டிருப்பதைக் காணலாம்.

எல்லா இலக்கணங்களும் 8 வேற்றுமைகள் கூற இவ்விலக் கணம் வேற்றுமையின் எண்ணிக்கை குறித்து எதுவும் கூற வில்லை. எழுவாய் வேற்றுமை பற்றிய கருத்துக்களும் காணப் படவில்லை.

இரண்டாம் வேற்றுமை

ஒரு சொல்லின் இறுதியில் -ஐ என்ற உருபு சேருமாகில் அது அச்சொல்லைச் செயப்படு பொருளாகக் காட்டும் என நூற்பா 265 கூறுகிறது.

(1) குரவனை வணங்கு

தொடர் 1ல் குரவன் என்னும் பெயரோடு இரண்டாம் வேற்றுமை உருபாகிய -ஐ இணைந்து குரவன் என்னும் பெயரைச் செயப்படு பொருளாக மாற்றியுள்ளது.

ஐகாரத்தினால் இறும் இயல்பான யானை, வாழை போன்ற சொற்களை அன்றித் தனியாக -ஐ உருபு சேர்தலைக் குறிக்க மொழி ஈற்று 'ஐ' வரில் என்றார்.

நூற்பா 272-ல் நிலைமொழி ஈறு ன, ள, மெய்களுள் ஒன்றாக இருந்து அவை வருமொழி முதல் வல்லினத்தோடு

புணர்ந்து ற, ட மெய்களாகத் திரியும் போது அங்கு (இரண்டாம் உருபாகிய) -ஐயின் பொருளைக் கொள்வதே சரியாகும் என கூறப்பட்டுள்ளது.

(2) முருகற் பணிதல்

(3) கலைமகட் கருதல்

(4) வேந்தர்ச் சேர்தரல்

என்பது போல ரகரமும், இனமெய்யும் பெற்று வருபவை பன்மையில் இரண்டாம் வேற்றுமைப் பொருள் விளைக்கும் என்பர்.

2அ) முருகன் பணிதல் – எழுவாய்த் தொடர்

2) முருகற் பணிதல் – முருகனைப் பணிதல் என்னும் பொருளில் வந்த இரண்டன் தொகை.

(5) வேந்தன் சேர்தரல், வேந்தர் சேர்தரல் – அல்வழிப் புணர்ச்சி

(6) வேந்தற் சேர்தரல் – வேந்தனைத் சேர்தரல் – வேற்றுமை ஒருமை

(7) வேந்தர்ச் சேர்தல் – வேந்தர்களைச் சேர்தரல் – வேற்றுமைப் பன்மை

மூன்றாம் வேற்றுமை பற்றிய செய்தி கூறப்படவில்லை.

நான்காம் – வேற்றுமை

நான்காம் வேற்றுமை உருபு – கு என்பதாகும். இவ்வுருபு தனியாகவோ தனக்கு முன் உகரத்தைப் பெற்றோ, தான் புணரும் நிலை மொழியினை ஈற்றைத் திரித்தோ, திரிக்காமலோ, மெய்யெழுத்து மிகுத்தோ, அத்துச் சாரியையும் பெற்றோ ஒரு சொல்லுடன் புணர்ந்தால் பொருளை முற்றுவிக்க வேறொரு சொல்லை வருவிக்கும்.

(8) அவற்கு நலம் – கு உருபு தனித்து வந்தது.

(9) ஆவுக்கு நீர் – உகரத்தை முன் பெற்று வந்தது.

(10) எதுக்குச் சரி – இனமெய் மிகுத்துப் புணர்ந்தது.

(11) வீரத்துக்கு வேல் – அத்துச் சாரியை பெற்று புணர்ந்தது.

தொடர் எண்கள் (8) மற்றும் (9) - ல் நிலைமொழி ஈற்றைத் திரித்துப் புணர்ந்ததற்கான எடுத்துக்காட்டுகளாகும். தொடர் எண் (10) – நிலைமொழி ஈறு திரியாத புணர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகும். தொடர் எண் (11) நிலைமொழி ஈறு திரிந்து அத்துச் சாரியை பெற்று வந்தது.

ஒரு பெயர்ச் சொல்லுடன் அதனுடைய உடைமைப் பொருளில் வரும் மற்றொரு பெயர்ச் சொல்லைச் சேர்க்கும் பொழுது 'இன்' என்னும் சாரியை இல்லாமலும் இருக்கலாம் என நூற்பா 274 கூறுகிறது.

(I2) உமைமகன்

இன் சாரியை பெற்று உமையின் மகன் எனவும் வரலாமாதலின் உரையில் அவ்வாறு கூறப்பட்டது. உமைக்கு மகன் என்னும் உறவு முறையை இந்நூலாசிரியர் பேச்சு வழக்கை நோக்கி உடைமைப் பொருளாகக் கொள்கிறார். ஆனால் கொடை,பகை, நேர்ச்சு, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, ஆதியின் இதற்கு இது எனல் என நன்னூல் நூற்பா 298 கூறுகிறது. நான்காம் வேற்றுமைப் பொருள் என்பதே தமிழ் இலக்கண மரபாகும்.

உடைமைப் பொருளிலும் ஆண்பாலைச் சுட்ட ஆன், அன், ஒன் ஆகிய உருபுகள் பயன்படுத்தப்பட்டு வருவதை நூற்பா 264 கூறுகிறது.

13. மயிலான் மயில் ஆன் மயிலை உடையவன்

14. முருகு அன் முருகன் முருகை உடையவன்

15. சேவல் ஒன் சேவலோன் சேவலை உடையவன்

இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்று வந்தாலும் இது உடைமைப் பொருளையே தருவதை தொடர் 13 முதல் 15 வரைக் காணலாம்.

உடைமைப் – பொருள் வேற்றுமை

ஒரு சொல்லொடு அதன் ஈற்றைத் திரித்தோ அல்லது தன் முதல் எழுத்துத் திரியும் படியாகவோ அன், இன் என்ற இரு விகுதிகளும் சேர்ந்தால் உடைமைப் பொருளைத் தரும், என நூற்பா 263 கூறுகிறது.

16. அது அன் அதன் – நிலைமொழி ஈறு திரிந்தது

17. பசு இன் பசுவின் – வகர உடம்படு மெய்யால் இகரம் திரிந்து பசுவின் என ஆனது.

18. பசுவின் கன்று என்பதற்குப் பசுவினுடைய கன்று என உடைமைப் பொருளைத் தருகிறது.

ஏழாம் வேற்றுமை

இல் என்பது இதன் உருபாகும். இது உவமை, உடைமை, உயர்வு, தாழ்வு, வினை என்றபொருள்களில் வரும் என நூற்பா 267 கூறுகிறது.

19. மதியில் மறு மதியினுடைய மறு (உடைமைப் பொருள்)

20. மதியின் மறு மதியினுடைய மறு (உடைமைப் பொருள்)

மதியில் மறு என்பதை ஏழாம் வேற்றுமை உருபாகக் கொள்வதே தக்கது.

இல் சாரியை எங்கும் ஆறாம் வேற்றுமையில் வருவதாகத் தெரியவில்லை.

21. பாலில் வெண்பொடி பால் போன்ற வெண்ணீறு என (உவமைப் பொருள்)

22. அதில் நலம் அதன்கண் உள்ள நலம் (7-ம் வேற்றுமை)

23. இதில் இழிவு இதன்கண் உள்ள இழிவு

24. அவையில் பேரல் (வினை)

மதியில் மறு என்பதை பெயர் எனக் கூறலாம். எனவே, இல் என்பதனை 7-ம் வேற்றுமை உருபாகவும், உவம உருபாகவும் கொள்வதே ஏற்புடையது எனக் கருதலாம்.

முடிவுரை

மற்ற இலக்கணங்களைப் போன்று வேற்றுமை இலக்கணத்திற்கு விளக்கமோ, எண்ணிக்கையோ மற்றும் அது ஏற்று வரும் பொருளையோ அறுவகை இலக்கணம் கூறவில்லை. இருப்பினும் இரண்டாம் வேற்றுமை உருபாகிய – ஐ யைக் குறித்தும் நான்காம் வேற்றுமை உருபாகிய – குவைக் குறித்தும் உடைமைப் பொருளைக் குறித்தும் – இல் உருபாகிய ஏழாம் வேற்றுமை குறித்தும் அதன் பொருள்களாக உவமை, உடைமை, உயர்வு, தாழ்வு, வினை ஆகியவற்றைக் குறித்தும் கூறுகிறது. ஆசிரியர் ஏன் மற்ற வேற்றுமைகள் குறித்து ஏதும் கூறவில்லை என்பது ஆய்வுக்குரிய பொருளாகும். முற்றிலுமாக வேற்றுமை இலக்கணம் பற்றிய அறிவு நூலாசிரியருக்கு இல்லை எனக் கூறமுடியாது.

அறுவகை இலக்கணம் - ஓர் அறிமுகம்

த. இரத்னமாலா

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எழுதிய இலக்கண நூல்கள் மூன்று. அவை அறுவகை இலக்கணம், ஏழாமிலக்கணம் இலக்கணத்தியல்பு எனப்படுவன. இந்நூல்கள் தமிழ் மாணவரிடையே அதிகமாக அறியப்படாத காரணத்தால், அறுவகை இலக்கணம் என்னும் நூலை அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

"இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்"[1] என்னும் அகத்தியர் கொள்கைக்கு மாறாக அமைந்தது அறுவகை இலக்கணம். இந்நூல் தோன்றியமைக்கு ஐந்து காரணங்கள் பாயிரத்தில் சொல்லப்பட்டுள்ளன.[2] இவற்றுள் சமயக் காரணங்கள் மூன்று. மாண்பொருள் சில பெறும் தெளிவு, புலவோர் கவிக்கடல் அமுது உண்ணும் களிப்பு ஆகியவை மற்றும் இரண்டு காரணங்களாகும். நூற்பயன் கூறுமிடத்து 'அறுவகை இலக்கணம் அறிந்தவர் முதிர்தமிழ் முனிக்கு ஒரு துணை போல்வார்' என்றும் 'கலி முழுது ஒழித்து அகம் மகிழ் கூர்வார்' என்றும் கூறுகிறார். மேலும் கடுக்கையன் உறவு, குகன் அருள், வினையிருள் அறல், விழுப்பொருள் அறிதல் என்னும் பயன்களையும் கூறியுள்ளார்.[3] இவற்றை நோக்க, சமயத்தையும் மொழியையும் இரு கண்களாக, சமமாக நோக்கினார் சுவாமிகள் என்று அறிவதில் ஐயமில்லை. இதனால் நூலின் தொடக்கத்தில் மட்டுமல்லாது எழுத்திலக்கணம் தொடங்கி உள்ள ஆறு பகுதிகளுக்கும் தனித்தனியாக கடவுள் வாழ்த்து அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நூலின் பொதுப்பாயிரம் 'இவ்விலக்கண நூல் முன்னோர் மொழியைப் பெருக்கிக் குறுக்கி மொழிவதன்றே' எனக் கூறியிருந்தாலும், பிற இலக்கண நூல்களில் இடம் பெறாத சில புதிய கருத்துகள் சுவாமிகள் வாழ்ந்த காலச் சூழ்நிலை மற்றும் சுவாமிகள் புலமைத் திறம் காரணமாக இந்நூலில் இடம்

பெற்றுள்ளன. எனவே அத்தகைய புதிய, வேறுபட்ட கருத்துகள் மட்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

நூலின் அமைப்பு

அறுவகை இலக்கணம், எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம், புலமை இலக்கணம் என ஆறு பகுதிகளை உடையது. ஒவ்வொரு பகுதியிலும் உட்பிரிவுகள் உள்ளன. பாயிரமாக அமைந்த பன்னிரு நூற்பாக்கள் நீங்கலாக எழுநூற்று எண்பத்தியாறு நூற்பாக்களை உடையது.[5]

எழுத்திலக்கணம்

எழுத்திலக்கணம் உருவோசை இயல்பு, நிலையியல்பு, புணர்ச்சி இயல்பு என மூன்று பகுதிகளை உடையது. எழுத்துக்களை உயிர், ஆய்தம், மெய், உயிர்மெய், அலகு, கூட்டு, குறிப்பு என ஏழு வகைகளாகக் கூறுகின்றார் (2)[6]. இவற்றுள் அலகு எழுத்துக்கள் மேல், கீழ், நடு, அளவு என நால்வகைப்படும். கூட்டெழுத்துக்கள் குறிப்பெழுத்துக்கள் வரையறுத்துக் கூற இயலாதவை (4). உயிரெழுத்துக்களுக்கு ஒலிவடிவம் கூறிப் பின்னர்,

> .... உரித்த தேங்காய்க்
> கண்போல் முச்சுழி கவினுறக் காட்டல்
> ஆய்தம் துணை இழந்து அலமரும் காக்கை
> குளறலில் மிடற்றில் குழுறொலி தருமே (14)

என ஆய்த எழுத்திற்கு வரிவடிவமும் ஒலிவடிவமும் கூறியுள்ளார். மெய் எழுத்துக்களின் தன்மைகள் மட்டும் சொல்லப்பட்டுள்ளன (16). உயிர் மெய் எழுத்துக்கள் வருக்கங்களாக சொல்லப் பட்டுள்ளன. ஒவ்வொரு எழுத்திற்கும் தனித்தனியாக வடிவமும் வருக்கத்திற்குப் பொதுவாக ஒலிப்பிடமும் ஒலிப்பு முயற்சியும் கூறப்பட்டுள்ளன (18-35).

அலகு எழுத்துக்களுக்குப் பெயரும் வடிவமும் கொடுக்கப் பட்டுள்ளன.

> ணவ்வே முந்திரி ட அரைக்காணி
> நிலைவரை ஒன்றே காணி ஆகும் (37)

கீழ் முந்திரி (1/102400) முதல் முந்திரி (1/320) வரை உள்ள பின்ன அளவுகள் கீழ் அலகு என்றும் முந்திரி முதல் ஒன்று வரை உள்ள பின்ன அளவுகள் நடு அலகு என்றும் ஒன்றிற்கு மேற்பட்ட எண்கள் மேல் அலகு என்றும் முகத்தலளவை பற்றிய எண் வடிவங்கள் அளவலகு என்றும் பெயர் பெற்றுள்ளன. இம்மி எனும் மிகச் சிறிய கீழ் அலகு, சங்கம் என்னும் மிகப்பெரிய மேல் அலகு ஆகியவை உருவிலா ஓசைகள்.

குறிப்பெழுத்துக்கள் நான்கனுக்கு வடிவம் கூறிப் பின்னர் 'பொறி அனைத்தும் குறிப்பே' (47) என எல்லா எழுத்து வடிவங்களும் ஒன்றை உணர்த்துவதற்காக ஏற்பட்ட குறியீடுகளே எனப் பொருள் கொள்கிறார்.

தவறாக எழுதப்படும் சில எழுத்து வடிவங்களைக் கூறுகிறார். அ, ஒ இவற்றின் இறுதியில் சகரத்தின் ஈற்றுப் பகுதி போல் வரைந்த வடிவை ஆ, ஓ எனல் இடம் நோக்கிய குறில், நெடில் வேறுபாடு, இ வடிவத்தின் இறுதியில் ஒரு சுழியிட்டு ஈ எனவே ஏ வடிவத்தை அரை எனல், கூ வடிவத்தை ஆய்தம் எனல் ஆகிய வழக்குகள் தவறான வரி வடிவங்கள் என்று சுட்டிக் காட்டுகிறார். இவை பழஞ்சுவடிகள், செப்பேடுகள், கல்வெட்டுகள் ஆகியவற்றில் இடம் பெற்றிருக்கலாம். இவை சரியான வடிவங்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டால் மொழியின் செம்மை கெட்டு விடும் என்பதால் பிரித்துக் கூறியுள்ளார் எனல் பொருந்தும். எ, ஒ எழுத்துக்களின் மேல் புள்ளி வைத்த மரபை மாற்றியவரை வாழ்த்துகிறார் . (49) இத்திருத்தம் எழுத்துத் தெளிவை ஏற்படுத்தியுள்ளது என்பதனால் வாழ்த்துகிறார்.

எழுத்துக்களின் ஒலியளவு குறிப்பிடுங்கால் ஐ, ஔ நடு எழுத்துக்கள் என்றும் ஒன்றரை மாத்திரை பெறுபவை என்றும் கூறுகிறார். அ, இ, உ என்னும் மூன்றும் பிறப்பினால் – ஏ எனத் தொடங்குவதால் ஒத்தவை; அகரமும் இகரமும் அணைவுறின் எகரம். அகரமும் உகரமும் ஒ என்று ஆமே ஆகிய கருத்துகள் புதுமையானவை. ஆய்தமும் ஒற்றும் பிணமே போல்வன (72) எனக் கூறி அவற்றின் இலக்கணங்களை உயிர் மெய் மேல் ஏற்றிக் கூறியுள்ளமை பிற இலக்கண நூல்களினின்றும் வேறுபடுகிறது.

வல்லினம் ஆணே மெல்லினம் பெண்ணே
இடையினம் அலியே என்பா ரிடைசிலர்
குறில் நெடில் நடுவினைக் கூறலும் உளதே

என எழுத்துக்களை ஆண், பெண், அலி எனப் பாகுபடுத்திக் கூறல் புதுமையாக இருந்தாலும் பொருத்தமாகத் தெரியவில்லை.

எழுத்துக்களில் தெய்வங்கள் நிலை பெறுவதாகக் கூறப்படும் செய்திகள் (96 - 101) சுவாமிகள் சமய நோக்கினால் எழுந்தவை எனலாம். 'ஒற்றினம் தோறும் உருவொடு தோன்றாத் தெய்வம் புகும்' என்றமை முன்னர் கூறிய 'பிணமே போல்வன' கருத்திற்கு முரணாகின்றது.

எழுத்துக்களின் தன்மை கூறுங்கால் அ, ஆ, இ, உ, எ, ஏ, ஐ, கு, கை, மை, மோ ஆகிய எழுத்துக்கள் உணர்த்தும் பொருளைக் கூறி அவற்றுக்குச் சான்றுகளும் தாமே தருகிறார் (103 - 111) இப்பகுதி நன்னூல் கூறும் ஓரெழுத்தொரு மொழி களை நினைவூட்டுகிறது.

புணர்ச்சியியல்பு பகுதியில் புணர்ச்சி விதிகள் கூறிச் சான்று களும் நூற்பாக்களில் தந்துள்ளமை சிறப்பாகின்றது. இரு சொற்புணர்ச்சி மட்டுமின்றி ஒரு சொல்லில் எழுத்துக்கள் புணரும் முறையும் சொல்லப்பட்டுள்ளது. (122 - 132) புணர்ச்சிக்குச் சான்றுகளும் ஆசிரியரே தந்துள்ளமையால் சில இடங்களில் இரு சொற் புணர்ச்சியாகவும் காட்டியுள்ளமை எழுத்துப்புணர்ச்சிக்கு இவர் கொண்ட கொள்கையினைத் தெளிவற்றதாக்குகின்றது. புணர்ச்சித் திரிபுகள் பற்றிய பொதுக் கொள்கை எதனையும் கூறாமல் ஈறுகளைத் தனித்தனியே குறிப்பிட்டு இலக்கணம் தந்துள்ளார். வடமொழிச் சந்திகளும் அளபெடைகளும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. ஒற்றளபெடையினை 'எமக்கு இனிது அஃது அன்றே' (164)என ஒதுக்குகிறார்.

சொல்லிலக்கணம்

சொல்லிலக்கணம் பொது இயல்பு, பிரிவு இயல்பு, சார்பு இயல்பு, திரிபு இயல்பு என்னும் நான்கு பகுதிகளை உடையது. இவ்விலக்கணம் பிற நூல்களைப் போன்று சொற்களைப் பாகு படுத்தவில்லை ஒவ்வொரு பகுதியிலும் பல வேறுபட்ட

இலக்கணங்களைக் கூறி அவற்றுக்குப் பொதுவான பெயர் தந்துள்ளார்.

பொதுவியல்பு சொற்களைப் பற்றிய பொதுவான செய்திகளை அறிவிக்கிறது. தனிப் பொறிச் சொல் புணர்பொறிப் பதம் என எழுத்துக்களால் ஆகிய சொற்களை வகைப்படுத்தி ஒரு சொல்லின்கண் பிறழ்ந்து வரக் கூடிய எழுத்துக்களைச் சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ளார். சொற்கள் பொருளை விளக்கும் தன்மை அடிப்படையில் அவற்றுக்கு ஐவகை நிறங்கள் சொல்லப்பட்டுள்ளன. (172–176). இப்புதுமையினைப் பிறர் நகையாடக் கூடாது என்பதற்காகச் சான்றும் தந்துள்ளார். (178)

பிரிவியல்பு சொற்களைச் சுட்டு, பெயர், வினை, ஏவல், அமைதி, தன்மை, உரி, ஒப்பு, விளி, இரக்கம், வியன் முதலிய பலவாகப் பிரித்துக் காட்டுகிறது. சுட்டுச் சொற்களை ஆண்பாற் சுட்டு, பெண்பாற் சுட்டு, அலிப்பாற்சுட்டு எனச் சான்றுகளுடன் தருபவர், வினாச் சொற்களையும் இவற்றுடன் இணைத்துள்ளமை பொருத்தமாக இல்லை.

பெயர்ச் சொற்களைக் கூறுங்கால், பகாப்பதங்கள் இடுகுறிப் பெயர்கள், பகுபதங்கள் காரணப் பெயர்கள் எனப் பாகு படுத்திப் பின்னர் ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள், அலிப்பாற் பெயர்கள் எனச் சான்றுகளுடன் தந்துள்ளார். வினைச் சொல் வகை கூற வந்தவர், வினைச் சொற்களின் பட்டியல் தந்துள்ளார்.

ஈகை ஆதிய நல்வினை ஏற்கை
ஆதிய தீவினை அறிஞராம் அவற்கே (214)

என, சமய நோக்கில் நல்வினை, தீவினை என்னும் பாகுபாடு அமைந்து விட்டது. தன் வினை, பிறவினைப் பாகுபாட்டினைச் சான்றுகளுடன் கூறினாலும் பாகுபாடு தெளிவாக இல்லை. தன் வினைச் சொற்களாகக் குறிப்பிடுபவை தன்மையிடம் சார்ந்த வினைகளாகவும் பிறவினைச் சொற்களாகக் குறிப்பிடுபவை படர்க்கையிடம் வினைச் சொற்களாகவும் காணப்படுகின்றன. (207–209)

ஏவற் சொற்கள், அமைதிச் சொற்கள், தன்மைச் (பண்பு) சொற்கள், உரிச் சொற்கள், ஒப்புச் சொற்கள், விளிச் சொற்கள்,

இரக்கச் சொற்கள், கூட்டும் சொற்கள், வியப்பைக் காட்டும் வியன் சொற்கள் ஆகிய வகைகளைச் சான்றுகளுடன் சொற் களஞ்சியமாக்கியுள்ளார்.

சார்பியல்பு சொற்களைச் சார்ந்து வரும் சில செய்திகளைச் சொல்கின்றது. பலவகையான விகுதிகள் அசைச் சொற்கள், போலி, உவமச் சார்புச் சொற்கள், மங்கலச் சொற்கள், நூற் பெயர்ப் பொருத்தம் (குமாரம், அரசு, விருத்தம், மரணம் என்னும் நால்வகைப் பொருத்தங்கள்) யாப்பிலக்கணத்தின் அசை வாய்பாடுகள் (236 – 245) புதிய சொல்லாக்கம் ஆகிய பகுதிகள் இப்பிரிவில் அமைந்துள்ளன.

பெரும்பாலும் வடிவம் அல்லது பொருள் திரிந்து அமையும் சொற்களைத் திரிபியல்பு விளக்குகிறது. அன்மொழி, ஆகுபெயர், சொற் குறைகள், சொற்திருட்டு புணர்ச்சித் திரிபுகள், சொற் களைச் சொல்ல வேண்டிய முறை, இல், இன், உம் ஆகிய சொற்கள் உணர்த்தும் பொருள், வினை முற்று விகுதிகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. வேற்றுமை உருபு புணர்ச்சி கூறி இறுதியில் 'சொல் திரிவு எலாம் அருந்தமிழ்ப் புலவோர் மரபால் தேறிடல் வழக்கு' (275) என முடிக்கிறார்.

பொருளிலக்கணம்

அகப்பொருள், புறப்பொருள், அகப்புறப் பொருள் என்னும் மூவகை உடைய பொருளிலக்கணம் பிற பொருளிலக்கண நூல் களினின்றும் வேறுபட்டுள்ளது.

> இயற்கையின் மனத்தினுக்கு இன்பமே இனிது
> ஆதலின் அகப்பொருள் அஃது எனல் இசைவு (282)

என அகப் பொருளுக்கு விளக்கம் தருகிறார். இதனால் அகப் பொருள் என்பது இன்ப உணர்வே என்னும் அடிப்படையில் இன்பம் தருதற்குரிய பொருட்களை அகப்பொருள் பகுதியில் கூறுகிறார். புறப்பொருள் பகுதியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலப்பாகுபாடு வெவ்வேறு தொழில் செய்வோர் இயல்புகளை, விலங்குகள், பறவைகள், வெவ்வேறு தொழிற்குதவும் கருவிகள் ஆகியவை சொல்லப்பட்டுள்ளன. அகப்புறப் பொருள் நிலையில் உள்ளும் புறமும் பெற்றவை, உள்ளும் புறமும் கடந்தவை ஆகிய பொதுப் பொருள் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது.

அகப்பொருளின் உறுப்பியல்பு 23 நூற்பாக்களில் மகளிர் உறுப்பு நலனை கேசாதி பாத வருணனையாகப் பகர்கிறது. குறிப்பியல்பு என்னும் பகுதி ஏழு வகைப் பருவ மகளிர் அகவை, அழகு, அவர்களது காதல் உணர்வுகள் பற்றிக் கூறுகிறது. பழமையியல்பு பகுதி பிற அகப்பொருள் நூல்களில் இடம் பெற்றுள்ள சில காதல் மரபுகளைக் கூறுவதோடு, ஊடலில் ஆண், பெண் இயல்பினைக் குறிப்பிடுகிறார்.

தவமும் சமயமும் சாதியும் பொருளும்
அங்கசன் தொடும் கணைக்கு ஆற்றாது அலமரும்
மயலாற் கழிவது மாநிலத்து இயல்பே (322)

என்கிறார். எனவே வாழ்க்கையை அறவழியில் நெறிப்படுத்தும் தொல்காப்பிய அகப்பொருள் நெறிக்கு மாறாக ஆண்-பெண் காதலின்பத்தையே அகப்பொருள் என அறுவகை இலக்கணம் காட்டுவதாகத் தெரிகிறது.

பிழையாது ஒழுகிய பெண்மகட்டு எதிர்செலும்
முனிவரும் தெய்வமும் இலை எலை முறையே

என்ற நூற்பாவை அறியுங்கால் அறுவகை இலக்கணம் நீதி நூலாகப் புலப்படுகிறது. துறையியல்பு பகுதியில் அகப்பொருள் நிகழ்ச்சித் துறைகள் ஆயிரம் வரை அமையலாம் என்றும் அவை கட்டளைக் கலித்துறை, கடல் உறழ் சந்தம் ஆகியவற்றில் அமைதலே சிறப்பு என்றும் கூறப்பட்டுள்ளது.

புறப்பொருள் பகுதியில் இடம் பெறும் வேற்றுயிர் இயல்பு இந்நூலை விலங்கியல் நூலாக விளக்குகிறது. உழியியல்பு பகுதி தவசிகள், அந்தணர், அரசர், வணிகர், நாலாம் குலத்தினர், சேரியினர் ஆகியோர்க்குரிய பொருளைக் கூறுகிறது.

நால்வகைக் குலங்களைத் தனித்தனி தமது எனப்
பகர்தரும் சிற்சிலர் மனைப் பொருள் பலவும்
கூறிலம். சொல்முறை குறித்தவர் தம்மில்
பெரியர் யாம் யாம் எனப் பிணங்குமாறு உணர்ந்தே

எனக் குறிப்பிடுவது சுவாமிகள் வாழ்ந்த சமுதாய நிலையை-குல வேறுபாட்டைக் குறியிட்டுக் காட்டுகிறது. தொகுப்பு இயல்பு நில உலகம், தமிழுலகம், இந்து சமயம் ஆகியவற்றிற்குப் புறமான வற்றைக் கூறுகிறது.

யாப்பிலக்கணம்

யாப்பிலக்கணம் இயலிசைத் தமிழ் இயல்பு, நாடகத் தமிழ் நிலை, வண்ணவியல்பு, மோனையியல்பு, எதுகையியல்பு, நாற்கவியியல்பு, பனுவலியல்பு என ஏழு பகுதிகளை உடையது.

சூத்திரப்பா என்னும் புதிய பா வகையினையும், நலம், சீர் என்னும் அமைப்புடைய ஐந்தகைச் சீர்களையும் இரண்டு குறள்வெண்பா இணைந்த சவலை வெண்பாவினையும் புதியனவாகக் காண்கிறோம். நாடகத்தமிழ் நிலை இயற்றமிழோடு இசைத்தமிழ் இலக்கணம் கூறுகிறது. சிந்து, கீர்த்தனை ஆகியவை சொல்லப்பட்டுள்ளன. வண்ணவியல்பு வண்ணம் அல்லது சந்தப் பாடல்களுக்கு இலக்கணம் கூறுகிறது. பாவலர் உயிர் போல் போற்றுதற்குரியது சந்தம் (458) சந்த யாப்பிற்குரிய தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான, தன்ன, தய்ய என்னும் எட்டு அடிப்படை அலகுகள் எத்தகைய எழுத்துக்களின் புணர்ச்சியால் ஏற்படுகின்றன என்பதும் சொல்லப்பட்டுள்ளது. இவற்றுக்கும் நால்வகைக் குலங்களும் (459, 460) மூவகைப் பால்களும் (461–464) கற்பித்துள்ளார். இறைவன் தன்மையினை எப்படி உரைத்தாலும் ஆறுவகை சமயத்துள் அடங்குதல் போல எல்லா வகையான சந்தங்களும் இந்த எட்டினுள் அடங்கி விடும் என்கிறார். இதனால் சுவாமிகளுடைய சமயமும் சாதியும் மறக்காத சந்தப் புலமை புலப்படுகிறது. 'மோனை இல்லா முத்தமிழ்ப் பாட்டு நாணமில்லா நங்கை' (495) எனக் கூறி மோனையினை யாப்பிலக்கணத்தின் முக்கிய உறுப்பாக்குகிறார். எதுகைத் தொடையினை ஓசைத் தொடை, சிதைந்த தொடை, இனத் தொடை, அலங்காரத் தொடை, வண்ணத் தொடை என வகைப்படுத்தியுள்ளார் நாற்கவியியல்பு பகுதியில் நால்வகைக் கவியிலக்கணமும், குளகம், எழுவாய், பயனிலை, செயப்படு பொருள், தன்மை, முன்னிலை, படர்க்கை (511) ஆகியவற்றுக்கு இலக்கணமும் தந்துள்ளார்.

பனுவல் இயல்பு பகுதி நூல், பிரபந்தம், புராணம் காவியம் ஆகிய நூல் வகைகள் அவற்றின் பாடுபொருள், பாயிரம் தசாங்கம், பவனி, தூது ஆகிய பிரபந்தங்கள் அவற்றின் எண்ணிக்கை, பனுவல் பெயர்கள் ஆகியவை பற்றிக் குறிப்பிடுகிறது.

அணியிலக்கணம்

அணியிலக்கணம் உவமை இயல்பு, உடைமை இயல்பு, கற்பனை இயல்பு, நிகழ்ச்சி இயல்பு, ஆக்க இயல்பு என்னும் ஐந்து பிரிவுகளை உடையது. உவமையியல்பு இன்னின்ன பொருளுக்கு இன்னின்ன உவமைகள் எனக் காட்டுகிறது. உடமை இயல்பு பகுதியில் கடவுளர், மானிடர், நூல் ஆகியோர் உடமைகள் அவரவர் அடையாளங்களாகச் சொல்லப்பட்டுள்ளன. தூது செலுத்துதற்குரிய பொருட்கள், தூதுவன் இலக்கணம், விரிவாகப் புனையக் கூடாதவை ஆகியவை இடம் பெற்றுள்ளன. கற்பனை இயல்பு பகுதியும் உவமை அடிப்படையிலேயே உள்ளது. நிகழ்ச்சி இயல்பு பகுதியில் எந்தெந்தக் காலத்தில் என்னென்ன இயற்கை நிகழ்ச்சிகள் காணப்படும் என்பதனைக் காட்டியுள்ளார். இப்பகுதி பெரும் பொழுது, சிறு பொழுதுகளின் நிகழ்ச்சி வருணனையாக உள்ளது. ஆக்க இயல்பு பகுதியில் பரம்பொருள், துறவோர், புலவர், உயர்குலத்துள்ளார், மன்னர், வண்கர், வேளாளர், புலால் உண்போர் ஆகியோர்க்குச் சிறப்புத் தரும் செயல்களும், யானை வாவி, கோவில், நா, பூ ஆகியவற்றுக்கு அழகு வருதலும் சொல்லப்பட்டுள்ளன.

புலமை இலக்கணம்

புலமை இலக்கணம் வேறு இலக்கண நூல்களில் இடம் பெறாத பகுதியாகும். தேற்ற இயல்பு, தவறியல்பு, மரபியல்பு, செயல்வகை இயல்பு என்னும் பிரிவுகளை உடையது.

> **அறியும் தன்மையைப் புலமை ஆம் எனப்**
> **பற்பல பெரியோர் பகர்ந்தனர் அன்றே (644)**

எனப் புலமைக்கு இலக்கணம் கூறிப் புலமை பெறுதற்குரிய சில வழிகளையும் புலமை பெற்றபின் மேற்கொள்ள வேண்டிய நடை முறைகளையும் இப்பகுதியில் வகுத்துக் கூறியுள்ளார். தேற்ற இயல்பு அறிவு பற்றிய தெளிவு பெற வழி காட்டுகிறது.

> **காலமழை எனப் புதுக்கவி கழறலும்**
> **சொற்படி நடக்கக் காண்டலும் பிறவும்**
> **தெய்வத் தன்மைப் புலமை ஆமே. (667)**

தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் உளது எனில் அஃது தமிழ் உணர்ந்த அலகையில் தாழ்வு எனல் சுவாமிகளின் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்துகிறது. தவறு இயல்பு தமிழ் மாணவர்களிடமும் புலவர்களிடமும் இருக்கக் கூடாத தவறுகளைத் தெரிவிக்கின்றது

தமிழ்மொழிக்கு உயர்மொழி தரணியில் உளது எனின்
வெகுளியற்று இருப்போன் வெறும் புலவோனே (705)

மரபியல்பு பகுதி செவிவழிச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு அமைந்த தமிழ் இலக்கிய வரலாறு ஆகும். செயல்வகை இயல்பு பகுதி தெளிந்த புலவரும், தமிழ் மாணவர்களும் செயல்பட வேண்டிய நெறியினைக் காட்டுகிறது.

தமிழ்க்கும் தனக்கும் சார்தரு நெறிக்கும்
தன்இனத் தினர்க்கும் தவறுஉறா வண்ணம்
முயல்வோன் புலமை முதன்மைத்து ஆமே. (745)

முடிவுரை

அறுவகை இலக்கணம் பெயரளவில் மொழி இலக்கணக் கூறுகளைப் பெற்றிருந்தாலும் முழுமையான மொழி இலக்கண நூலாக அமையவில்லை. சுவாமிகள் வாழ்ந்த சமுதாய நிலையை விளக்கும் சமுதாயவரலாற்று நூலாக உள்ளது எனல் பொருந்தும். சுவாமிகள் கௌமாரர் ஆகையால் சமயச் செய்திகளும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. சுவாமிகளின் தமிழ்ப் புலமை காரணமாகப் பழைய இலக்கண நூற் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன, சுவாமிகள் பண்டைத் தமிழ் இலக்கண மரபை மாற்றிச் சமுதாயத்தோடு ஒட்டிய புதிய தமிழ் இலக்கண மரபைப் படைத்துள்ளார்.

அடிக்குறிப்புகள்

1. ப. வெ. நாகராசன் (ப . ஆ), அறுவகை இலக்கணம், தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, 1991, ப. 3.
2. அறுவகை இலக்கணம் 6.
3. அறுவகை இலக்கணம் 2.
4. எழுத்திலக்கணம் 165 நூற்பாக்களையும், சொல்லிலக்கணம் 112 நூற்பாக்களையும், பொருளிலக்கணம் 122 நூற்பாக்களையும், யாப்பிலக்கணம் 134 நூற்பாக்களையும், அணியிலக்கணம் 109 நூற்பாக்களையும், புலமையிலக்கணம் 144 நூற்பாக்களையும் உடையது.
5. அடைப்புக் குறிகளுக்குள் தரப்பட்ட எண்கள், அறுவகை இலக்கணம் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பில் குறிக்கப் பட்டுள்ள நூற்பா எண்களாகும்.

அடிகளாரும் அருந்தமிழும்

நா. இராசகோபாலன்

அண்மைக் காலத்தில், இசைத் தமிழ் வளர்த்த மூவர் என்ற சிறப்புக்கு உரியவர்கள் முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை, அருணாசலக் கவிராயர் என்பவர்கள். ஆனால், இந்த மேன்மையின் மலைமுடிகளைக் காலத்தின் கைகள் மறதி மேகத்தால் மூடி வைத்துவிட்டன. அண்மையில் அருந்தமிழுக்குத் தொண்டாற்றிய மற்றொரு மணிமுடிகள் மூவர். வடலூர் இராமலிங்க அடிகள், வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள், பாம்பன் குமரகுருதாச அடிகள் ஆகியவர்களே அவர்கள். ஆனால் அவர்களையும் மறதியின் கைகள் திரையிட்டு மறைத்திருக்கின்றன. தமிழுக்குத் தொண்டாற்றிய தகை சான்ற நல்லோரின் பணியையும், புகழையும் தழைக்கச் செய்ய வேண்டியது, தமிழ்கூறு தொல்லுலகின் தலையாய - நிலையான - நலமான கடமையாகும்.

வண்ணச்சரப அடிகளின் எண்ணத்தக்க சிறப்புகள்

1. அடிகளார் ஓர் இலட்சம் பாடல்கள் பாடினார் என்று வரலாறு கூறும். இவற்றுள் எரியுண்டன போக எஞ்சியவை 50, 000 பாடல்கள். இந்த அளவுக்கு, மனத் தோட்டத்தின் பாடல் பூக்களை எந்தப் பாவலரும் தொடுத்து நூல் மாலை ஆக்கவில்லை.

2. அடிகளார் முத்தமிழையும் வளர்த்தார். (எ.டு. முசுகுந்தன்- நாடகம்; கீர்த்தனைகள் - இசை; சத்தியவாசகம் - உரை நடை;+ இவர் அளவற்ற சிற்றிலக்கியங்களைப் படைத்தார்).

3. ஐந்திலக்கணம் என்ற தமிழ் மரபை மாற்றி, அறுவகை இலக்கணமும், ஏழாம் இலக்கணமும் எழுதினார்.

4. ஆசு கவியாராலும் பாடுதற்கு அரிய வண்ணம் பாடி, ''வண்ணச் சரபம்'' ஆனார்.

5. "குருபர தத்துவம்" என்ற பெயரில் தன் வரலாறு எழுதி வழிகாட்டினார். 72 புலவர்களின் வரலாற்றைப் புலவர் புராணமாகப் படைத்தார்.

6. இவர் பெண்மையைப் போற்றினார். கைம்பெண் மறு மணமும், கலப்புத் திருமணமும் நடைபெற வேண்டும் என்று அன்றே நவின்றார்.

7. அடிகளார் சமுதாய நலன் பற்றியும் ஆழ்ந்து சிந்தனை செய்தார். கள்ளுண்ணாமை, பிறனில் விழையாமை, தெய்வத்திற்கு உயிர்ப் பலி ஒழிப்பு, ஒப்புரவு மேற்கோடல் ஆகியன பற்றி எடுத்துரைத்தார்.

8. இவர் ஆங்கில ஆட்சியை எதிர்த்தார். அதன் பொருட்டு "ஆங்கிலியர் அந்தாதியை"ப் பாடினார்.

9. இவர் சமகாலப் புலவரையும் போற்றிய பெருந்தகையாளர். புலமைக் காய்ச்சலால் உளம் நலியாமல், வடலூரார், மாம்பழச் சிங்கக் கவிராயர் போன்றோரைப் போற்றிப் பண்புடைமையின் பாதம் நடக்க வளமான பாதை அமைத்தார்.

10. இவர் தன் குடும்பத்தையே தமிழ்க் குடும்பம் ஆக்கினார். இவருடைய துணைவியார், மகன் செந்தில் விநாயகம், பெயரன் முருகதாச அடிகள் ஆகிய அனைவரும் தமிழ்ப் புலவர்களே.

11. இவர் சிற்றிலக்கியத் துறையில் புது வகைப் பெயர் கொண்ட நூல்களைப் படைத்தார். (எ.டு). நூல் – முன்னிலை நூல், ஆயிரம் – கணபதி ஆயிரம், விஜயம் – கௌமார விஜயம்).

12. இவர் சொல்லாக்கத் துறையிலும் வழிகாட்டியுள்ளார். நீரோட்டகம் என்ற வடசொல்லை "இதழகல்" என்ற புதுச் சொல்லால் குறித்தார்.

13. இவர் தமிழின் சிறப்பைத் தன்னுடைய பல நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார். தாய்மொழிப் பெருமையை நிலை நாட்டத் "தமிழலங்காரம்" பாடினார். "முத்தமிழ்ப்பா மாலை" என்ற நூலையும் அருளினார்.

தமிழலங்காரத்தின் தோற்றம்

தமிழுக்குக் காலந்தோறும் பல்வகை வளங்கள் கிடைத்தன. அதுபோலவே, நலம் அழி பகைமையும் தொடர்ந்தன. சங்க காலத்துக் குயக் கொண்டான் முதலாகத் தற்காலத் தேசிகன் வரை, தமிழைத் தாழ்த்துவதில் முனைப்பாகச் சிலர் செயற் பட்டனர். வடலூராரும் வடமொழிக்கு எதிர்ப்பாகத் தமிழின் பெருமைக் கொடியை உயர்த்திப் பிடித்தார். வண்ணச்சரப அடிகளாரும், அதே நெடுஞ்சாலையில் நடை பயின்றார். 1864 இல் அவர் இராயவேலூரில் தங்கியிருந்தபோது அவருடன் இருவர் மோதினர். வடமொழியே உயர்வுடையது என வாதிட்டனர். வடமொழி, வேதங்களைப் பெற்றுள்ளது என சான்று நீட்டினர். உயிர்க் கொலையைப் போற்றும் வடமொழி வேதத்தை விட, "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலை" மறுத்த நெறி உரைத்த தமிழே சிறந்தது என்றார் அடிகளார். தமிழ் "அக்கர லோபத்தினது" என்றனர், வடமொழியை மிக்குயர்த் தியோர். அம்மொழியில் ற, ழ, ன, எ, ஒ என்று எழுத்துகள் இல்லை என்று தக்க மறுமொழி தந்தார், செந்தமிழ்ச் செம்மல். முடிவில், இறைவன் முன் திருஉளச் சீட்டு போடப்பட்டது. கன்னி ஒருத்தியின் உதவி நாடப்பட்டது. அவள் எடுத்துக் கொடுத்த சீட்டில், "தமிழே உயர்ச்சி" என்று எழுதப்பட்டிருந்தது. தமிழுக்குப் பழுது சொன்னோரின் வாய் அடைக்கப்பட்டது.[1] அதன்பின்னர் 100 பாடல்கள் கொண்ட தமிழலங்காரத்தை அடிகள் பாடியருளினார்.

வடலூர் அடிகள் சொன்னது போலவே, வண்ணச்சரப அடிகளார் தமிழே எல்லா மொழிகட்கும் தந்தை மொழி என்று தமிழலங்காரத்தில் எழுதியிருக்கிறார் "இராவணன் உருவாக்கிய மொழி ஆந்திரம்"; எல்லா மொழிகட்கும் 'தல்லி' (தாய்) ஆரியம் என்பார் சிலர். தெலுங்கிலுள்ள 'செப்பு' என்பது தமிழின் வழியது. தெலுங்கு உள்ளிட்ட அனைத்து மொழி களுக்கும் தமிழே, தந்தை மொழி என்று அவர் கூறுகிறார்.[2]

உடன்பாட்டு நிலையில் தமிழின் சிறப்பு கூறல்

அடிகளார் தமிழின் பெருமையைப் பல 'நூல்களில்' பல நிலைகளில் இயம்புகிறார். கேட்போர் உளம்கொள நயமாக அறிவித்திருக்கிறார்.

"தேனை அமுதைக் கனியை
நேரு மதுரத் தமிழ்ச் சொல்"[3]

என்றும்

'இருமை நலஞ்தோய்ந்த தமிழே'[4]

என்றும் கூறுகிறார்.

"இளநகைச் சிறுமியர் சொல்மொழியினும் தித்தித்
திருக்கின்ற தமிழ்"

என்ற அவர் எழுதிய இத்தொடரில், "குழல் இனிது" எனத் தொடங்கும் திருக்குறளின் வேறுமுகம் தெரிகிறது.

"கோங்கரும்பனை குவிமுலைக் கோதையர்
தீஞ்சுவைச் சொல்லினும் செந்தமிழினிதென"[5]

என்ற தொடர்களின் மூலம் அவர் தமிழின் இனிமையைக் கூறுகிறார்.

"மங்கை ஒருத்தி தரும் சுகமும் – எங்கள்
மாத்தமிழுக்கீடில்லை"

என்ற பாரதிதாசனின் வரிகள் இங்கே நினைவில் எழுகிறது.

தமிழைப் படிக்காமல் வீழ்ந்து கிடப்போரின் தாழ்வை நீக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகிறார்.

"பாலும் அமுதும் பழமுமிகர் முத்தமிழால்
நாலும் கவியும் நலியாமல் – காலும்
தலையுமறி யாதுழலும் தாழ்வுதீர் அண்ணா
மலையின் சிகரிமன்ன வா"[6]

என்று அவர் இறைவனிடம் கோரிக்கை விடுக்கிறார்.

தமிழின் தெய்வமான முருகனே புலவர்களிடமிருந்து யாசித்துத் தமிழ் கேட்டான் என்று தமிழுக்கு உயர்வு சேர்க்கின்றார் அவர்.

"கீரனைப் பொய்யா மொழியைப் பகழிக்கூத்
தனைக் குருகைக்கிழவன் தன்னை
நேரனந்தம் புலவர்களை நீ இரந்து
தமிழ் கேட்ட நிலைமையாவும்"[7]

என்று அவர் பாடுகிறார்.

செந்தமிழை அறிந்தோர் தேவருக்கெல்லாம் தேவர் என்று தாய்மொழிக்கு மாபெரும் சிறப்பைத் தந்து தன் திருவாயால் பாடிப் பெருமிதம் கொள்கிறார்.

"தமிழ் மூதுலகத்து,
எத்தகவோரையும் தேவர்தம் தேவர்எனச் செய்யுமே"[8]

என்று கூறித் தமிழை மீஉயர் நிலையில் வைத்து மகிழ்ச்சிக் கூத்தாடுகிறார்.

எதிர்மறை நிலையில் தமிழின் சிறப்பு கூறல்

கல்வியின் சிறப்பைக் கூறிய திருவள்ளுவப் பெருமகனார் 'கல்லாமை' என்ற எதிர்மறை நிலையிலும் அதன் சிறப்பை அறிவிப்பது போல, அடிகளாரும் தமிழைத் தாழ்த்திப் பேசுவோரை மறுத்து, அதன் சிறப்பை நிலை நிறுத்துகின்றார்.

தமிழை மற்றொரு மொழி பயந்தது என்று சொல்பவன் மற்றொரு மங்கைக்குரியவனை, முகந்து மகிழும் பொதுமகள் போன்றவள் என்று இகழ்ந்துரைக்கிறார்.[9]

தமிழை விட மற்றொரு மொழி உயர்வு என்று பிறர் சொல்லக் கேட்கும் ஒரு புலவன், உடனே சினம் பொங்கி எழுந்து மறுத்துரைக்கவில்லை என்றால் அவன் பயனற்ற 'வெறும் புலவன்' என்று வெறுத்துரைக்கிறார்.

"தமிழ்மொழிக்கு உயர்மொழி தரணியில் உளதெனில்
வெகுளியற்றிருப்போன் வெறும் புலவோனே!"

என்று அடிகளார் எடுத்துரைக்கிறார்.[10]

தமிழை இகழ்ந்தோரின் நாக்கை அறுக்க வேண்டும். அதை நெருப்பில் எரிக்க வேண்டும் என்றும் அவர் ஆவேசமாய்ப் பொங்கி எழுகிறார்.

"மதுரத் தமிழை இகழ் தீயோர்
மணிநா அறுத்துக் கனவிட"

என்று சிறிச் சினக்கிறார் தீராத் தமிழ்க்காதலர்.

தமிழைத் தோற்றுவித்தவன் அகத்தியன் என்று அன்று நம்பப்பட்டது. அந்தப் பெரும் புகழுக்குரிய அகத்தியனே, மற்றொரு மொழி, தமிழுக்கு இணையானது என்று சொல்லி

விட்டால், அந்தக் குறுமுனியே அறிவற்றவன் என்று மட்டம் தட்டிவிடுகிறார், நட்ட நெடும்புகழ் வண்ணச்சரப அடிகளார்.

> ''சந்தனக் குன்றின் முனிக்கோன் மற்றொன்றைச் சரிசொலினும்
> முந்தறிவற்றவன் என்றே துணிந்து மொழிகுவனே''[11]

என்று எந்தப் புலவனும் சொல்லாத சொற்களை இந்தத் தமிழ் வல்லார் துணிந்து மொழிகிறார். இதற்கும் ஒரு படி மேலே செல்கிறார் அடிகளார். ஒரு தெய்வத்திற்குத் தமிழ் தெரிய வில்லை என்றால், அது தெய்வமே அல்ல; அது பேயைவிடத் தாழ்ந்தது என்று கடுமையின் நெடுமுடிக்கே சென்றுவிடுகிறார். அருந்தமிழ் அடிகளார்.

> ''தமிழ்ச் சுவை அறியாத் தெய்வம் உளதெனில்
> அஃதுணர் அலகையில் தாழ்வேனல் அறமே''[12]

என்று கூறி, அப்படிச் சொல்வது அறம் என்று கூட அடிக் கோடிட்டுக் காட்டுகிறார். இத்தகைய பெருந் துணிச்சலை எவரிடமும் காணுதல் இயலாது. வண்ணச்சரப அடிகளார் தமிழலங்காரத்தில் பின்வரும் எட்டு நிலைகளில் தமிழின் சிறப்புகளைப் பாடுகின்றார். அவை: 1. பக்தி நிலை, 2. கருணை வழி, 3. இயற்கை அமைப்பு, 4. சொல்லாய்வு முறை, 5. தெய்வங் களால் பெற்ற சிறப்பு, 6. சிவனடியாரின் செயல்கள், 7. விட்டுணு அடியாரின் செய்கைகள், 8 புலவர்களின் செயற்பாட்டு நிலை என்பன.

1. பக்தி நிலை

வைணவத்தில் வடகலை, தென்கலை என்ற இரு பிரிவுகள் இருக்கின்றன. வடகலை கருமத்தையும், தென்கலை பக்தியையும் முக்கியமாகக் கொண்டவை. (கலை என்ற சொல், குறி வேறு பாட்டையும், மொழியையும் குறிக்கும் பொதுச் சொல்) கருமத்தை விடப் பக்தியே உயர்வானது என்பது ஒப்ப முடிந்த கருத்து. எனவே பக்தியை முதன்மைப்படுத்தும், தென்கலை யான – தென்மொழியான – தமிழே உயர்ந்தது என்று பாடு கிறார், முருகனை என்றும் நாடிய அடிகளார்.[13]

2. கருணை வழி

வடநூல் யாவும் கொலை வேள்வியைப், போற்றிக் கூவும். ஆனால், நல்லியல் ஔவையும் வெல்புகழ் திருவள்ளுவரும்

மொழிந்த பழந்தமிழ், ''ஊன் முழுப்பாவம்'' என முழக்கமிடும். எனவே, தீந்தமிழ், ஓங்கிய சிறப்பினது என்கிறார் தேன்மொழி அடிகளார்.[14]

3. இயற்கை அமைப்பு

தெற்கிலுள்ள தமிழ், தென்றல் மொழி. வடக்கில் உள்ள ஆரியம் வாடைமொழி. தென்றல் உடலுக்கு நல்லது. வாடை என்றும் கேடு தருவது. எனவே தென்றல் தமிழ், பொன்றாப் பேருயர்வு கொண்டது என்று, அன்பாய் உரைக்கிறார் நன்மை பாய் நெஞ்சினர்.[15]

4. சொல்லாய்வு முறை

எந்த மொழிக்கும் சொற் சுருக்கம் சொந்தமானது. தமிழிலும் இது அமைந்துள்ளது. இரு குறில் கொண்டுள்ள சொல், சுருங்கும்போது, முதல் குறில் நீளும். இரண்டாம் குறில் மறையும் (எ.டு. அகலமரம் – ஆலமரம், மலைய மகன் – மலையமான்). சில சமயம் இது ஒலித் திரிபு பெறும். (எ.டு. தகப்பனார் – தாப்பனார் – தோப்பனார்; மகளே – மாளே – மோளே (மலையாளம்) இம்முறைப்படி ''புகல்'' என்ற சொல் 'பூல்' என்றாகிப் பிறகு 'போல்' என மாறியது. இச் சொல் ஆய்வு நுட்பத்தை அன்றே கூர்ந்துணர்ந்த அறிவுத்திருவினரான, பெருந்தகை அடிகளார், தமிழ்ச் சொல்லான 'புகல்' என்பதே, இந்துதானியில் 'போல்' என்றாயிற்று என்று சொல்கிறார். இப்படி, வடபுல மொழிகள் தமிழிலிருந்து பல சொற்களை ஏற்றுக் கொண்டுள்ளன என்பதைச் சாற்றி, ஆற்றல் அருந்தமிழ், பெருமை போற்றுதலுக்குரியது என்றார்.[16]

5. தெய்வங்களால் பெற்ற சிறப்பு

(அ) சிவனும் மாயவனும், செந்தமிழின் பின் சென்றனர்.[17]

(ஆ) சுந்தரருடைய செந்தமிழ் சிவனைப் பரவையிடம் தூது அனுப்பியது.[18]

(இ) மணிவாசகரின் தேன் பாடல்கள், சிவனை வந்தியின் பணியாளாக்கி மண் சுமக்கச் செய்தது.[19]

(ஈ) பகழிக் கூத்தரின் பிள்ளைத் தமிழ், முருகன் தன்னுடைய பதக்கத்தை வழங்கச் செய்தது.[20]

(உ) கந்தசாமிப் புலவர், சிந்துப் பாடல்களைப் பாடியபோது அவர் துப்பிய தாம்பூல எச்சிலை முருகனுடைய ஆடை ஏற்றுக்கொண்டது.[21]

(ஊ) ஆறுமுகப் புலவரின் பாடல் முருகனைப் பின்புறம் திரும்பச் செய்தது.[22]

(எ) கவிராசப் பண்டிதர் காசிக்குச் சென்றபோது அவருடைய மகள் உருவில், உமை வந்து அவருக்கு உணவு படைக்கச் செய்தது.[23]

(ஏ) குரு நமசிவாயருக்கு உமை, பாற்சோறு கொடுக்கச் செய்தது.[24]

6. சிவனடியாரின் செயல்கள்

எண்ணஞ் சிறந்த வண்ணச்சரப அடிகளார், தமிழலங் காரத்தில் பல சிவனடியார் ஆற்றிய அற்புதச் செயல்களைத் தமிழில் ஏற்றி, அதன் மூலம் அவர் தமிழின் பெருமையைத் தீட்டுகின்றார். சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர், சேரமான் பெருமாள் நாயனார், பட்டினத்தார், பத்திரகிரியார், அருணகிரியார், குகை நமசிவாயர், சிதம்பரம் சுவாமிகள், கச்சியப்ப சிவாசாரியார், திருச்சிற்றம்பல நாடிகள், ஆறுமுகசாமி ஆகியோரின் அருஞ்செயல்களை வரைகின்றார்.

7. விட்டுணு அடியாரின் செய்கைகள்

விட்டுணு சித்தர், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார், ஆண்டாள் ஆகிய வைணவ அடியார்கள் ஆற்றிய வியத்தகு செய்கைகள் மூலம், தமிழின்மேல் பெருமை மழை பெய்கிறார் அருந்திறல்வல்ல அடிகளார்.

8. புலவர்களின் செயற்பாட்டு நிலை

அகத்தியர், ஔவையார், நக்கீரர், பொய்யாமொழிப் புலவர், சிவப்பிரகாசர், குமார தேவர், குமரகுருபரர், ஒட்டக் கூத்தர், புகழேந்தி, கம்பர், இரட்டைப் புலவர், காளமேகப் புலவர், சீனிவாசப் புலவர், முத்து வயிரவன், வீரபாண்டிப் புலவர். ஆகியோரின் தமிழ்ப்பாடல்கள் புரிந்த இயற்கை மீறிய செயல்களைக் குறிப்பிட்டு, தமிழின் பெருமையை விரித்துரைக் கிறார், பரந்த புகழுக்கு உரிய அடிகளார்.

தனித் தமிழ்ப் பற்று

அக்காலத்திலேயே அடிகளாருக்குத் தனித் தமிழ்ப் பற்றும் இருந்தது என்பது தெரிகிறது.

"வடமொழி கலந்திடாத தமிழெனை விளங்கு பாடல்"

என்றும்

"வண்ணத்தளவில் வடமொழி மருஉச் சொல்
புல்லினும் மதுரப் பொலிவு குன்றலும்"

என்றும் குறிப்பிடுகிறார்.[25] அதே சமயத்தில் அவர் வட மொழியையும் மதிக்கின்றார். தமிழும் ஆரியமும் ஒத்த மொழி என்று கூறுகின்றார்.

"வாணி மின்னாள் வலக்கொங்கை ஒப்பாம் தமிழ் மற்றும் ஒரு
மாணினங் கொங்கை ஒப்பாம் ஆரியம்"[26]

என்று கூறுகிறார். இவ்வாறு அடிகளார், பரந்துபட்ட தன் நூல் களில், நீன்ற நெடுஞ்சீர் தமிழை நாவாரப் போற்றிப் புகழ் கிறார்.

ஆய்வு முடிவுகள்

1. வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளார், பன்முக ஆற்றல் பெற்ற மாபெரும் புலவர்.
2. அவர் தமிழின் சிறப்பைப் பல்வேறு நிலைகளில் நிறுவினார்.
3. தமிழை அறியாத் தெய்வத்தையும் இகழும் அளவுக்குத் துணிவு கொண்டிருந்தார்.
4. அவர் தனித் தமிழ்ப் பற்றாளராகவும் திகழ்ந்தார்.

அடிக்குறிப்புகள்

1. முருகனைப் போற்றிய மூவர், ப. 31–33.
2. தமிழலங்காரம், பா. 21
3. திருவிளக்காயிரம், பா. 253
4. தமிழ்த் துதிப் பதிகம், காப்புச் செய்யுள்
5. புலமை இலக்கணம், நூல். 67
6. திருவிளக்காயிரம், பா. 198
7. திருவருணைப் பாடற்றிரட்டு, ப. 54

8. தமிழலங்காரம், பா. 96
9. மேற்படி நூல், பா. 97
10. அறுவகை இலக்கணம்
11. தமிழலங்காரம், பா. 1
12. அறுவகை இலக்கணம்
13. தமிழலங்காரம், பா. 3
14. "ஔவை வள்ளுவன் ஆகியர் விண்ட நூல் ஊன் முழுப்பாவம் எனவே அடிக்கடி ஓதிடுமோ", தமிழலங்காரம், பா. 4.
15. மேற்படி நூல், பா. 10
16. "புகல்" எனும் சொல்லினைப் போல் எனச் சொல்லுதல் போற் பலசொல் இகல் இந்துத்தானியும் செந்தமிழிற் கொண்டு இயம்புகின்றார்; தமிழலங்காரம், பா. 22
17. "தமிழ்ச் சீர் செந்திடுக் கேள்வனும் ஈசனும் தேர்ந்துபின் சென்றனரே", தமிழலங்காரம், பா. 8
18. மேற்படி நூல், பா. 11
19. மேற்படி நூல், பா. 16
20. மேற்படி நூல், பா. 87
21. மேற்படி நூல், பா. 93
22. மேற்படி நூல், பா. 94
23. மேற்படி நூல், பா. 35
24. மேற்படி நூல், பா. 61
25. வண்ணத் தியல்பு
26. தமிழலங்காரம், பா. 5

ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்

1. தமிழலங்காரம் – வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள்
2. முருகனைப் பாடிய மூவர் – ஓவியப் பாவலர், மு. வலவன், முத்தையன் பதிப்பகம், சென்னை - 5 1985
3. தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு – வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார் சிறப்பாய்வு - டாக்டர் ஆலந்தூர் கோ மோகனரங்கன் – வசந்தா பதிப்பகம், சென்னை-16, 1991.

வீரகேரளம்புதூர்த் திருமால் திறம்

இரெ. இராசபாண்டியன்

தமிழில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகளைப் பட்டியலிட்டுப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. அவ்வாறு பட்டியலிடப்பட்ட வகைகளின் எண்ணிக்கை தொண்ணூற்று ஆறு எனப் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனினும் தமிழில் காணக் கிடைக்கும் பத்துக்கு மேற்பட்ட பாட்டியல் நூல்களுள் ஒவ்வொரு நூலிலும் இந்தச் சிற்றிலக்கியத் தொகையில் வேறுபாடு காணப்படுகிறது.

பாட்டியல் நூல்களில் முதன்மையானது என்று கருதப்படும் பன்னிரு பாட்டியல் அறுபத்து நான்கு இலக்கிய வகைகளை மட்டும் சுட்டுகிறது. பின்னர் தோன்றிய பிரபந்த மரபியல் என்ற நூலின் முதல் நூற்பா, பிரபந்தம் தொண்ணூற்று ஆறு வகைகளைக் கொண்டது என்று குறிப்பிட்டுள்ளது என்றாலும் எண்ணிக்கையில் அறுபத்தாறு வகைகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. பிரபந்த தீபிகை என்ற பாட்டியல் நூலில்தான் தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளும் பட்டியலிடப் பட்டுள்ளன. பின்னர் வெளிவந்த சதுரகராதியும் அபிதான சிந்தாமணியும் தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளைப் பட்டியலிட்டுள்ளன.

பன்னிரு பாட்டியல், தொன்னூல் விளக்கம் பிரபந்த தீபம், பிரபந்த தீபிகை, முத்து வீரியம், சுவாமி நாதம் ஆகிய ஆறு பாட்டியல் நூல்களும் சதுரகராதி, அபிதான சிந்தாமணி போன்றவையும் பதிகத்தை ஒரு சிற்றிலக்கிய வகையாகக் குறிப்பிட்டுள்ளன.

பதிகம் - இலக்கணம்

''ஆசிரி பத்துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி
எட்டின் காறும் உயர்ந்த வெண்பா
மிசைவைத் திரைந்து நாலைந் தென்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிகம் ஆகும்''

என வரும் பன்னிரு பாட்டியல் நூற்பா (197) ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் ஆகிய பாவகைகளில் நான்கடி முதல் எட்டடி வரை உள்ள பத்து அல்லது இருபது பாடல் களால் ஆனது பதிகம் இப்பதிகத்தின் தொடக்கத்தில் வெண்பா ஒன்று (காப்பு) அமைத்துப் பாடப்பட வேண்டும் என்று விளக்குகிறது.

"கோதிலோர் பொருளைக் குறித்தை யிரண்டு
பாவெடுத் துரைப்பது பதிக மாகும்"

என்று முத்து வீரியம் (1116) பதிகத்தின் இலக்கணத்தைத் தெரிவிக்கிறது.

முத்து வீரியம் தெரிவித்துள்ள கருத்துக்கு ஏற்ப, அபிதான சிந்தாமணியும் "ஒரு பொருளைக் குறித்துப் பத்துச் செய்யுள் கூறுவது பதிகம்" என்று குறிப்பிட்டுள்ளது.

பதிகத்தில் பத்துச் செய்யுள் அல்லது இருபது செய்யுள் அமைத்துப் பாடலாம் என்று பன்னிரு பாட்டியல் பாடினாலும் பெரும்பான்மையான பதிகங்கள் பத்துச் செய்யுள்களுடனே காணப்படுகின்றன. தண்டபாணி சுவாமிகள் பாடிய பதிகங் களில் பன்னிரண்டு, பதிமூன்று, பதினான்கு செய்யுள்கள் (காப்பு, நூற்பயனுடன்) காணப்படுகின்றன.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சிவன், சக்தி சூரியன், திருமால், விநாயகர், முருகன் ஆகியோரைப் போற்றி யும் பொதுவானவையுமாக ஏறத்தாழ 600 பதிகங்கள் பாடி யுள்ளார். அப்பதிகங்களில் ஒன்று வீரகேரளம்புதூர்த் திருமால் பதிகம் ஆகும்.

பன்னிரு பாட்டியல் தெரிவித்துள்ள பதிக இலக்கணத்திற்கு ஏற்ப ஆசிரிய விருத்தத்தில் பத்துப் பாடல்களால் அமைந்து காப்புச் செய்யுளாக நேரிசை வெண்பாவையும் கொண்டு விளங்கு கிறது வீரகேரளம்புதூர்த் திருமால் பதிகம். இதில் இறுதியாக நூற்பயன் தெரிவிக்கும் விருத்தப் பாடல் ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

வீரகேரளம்புதூர் – பெயர்க்காரணம்

தண்டபாணி சுவாமிகளால் வீரகேரளம்புதூர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் தென் காசிக்கு அருகில் உள்ள நகர் ஆகும்.

பதினான்காம் நூற்றாண்டின் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட அரசியல் சிக்கல் மற்றும் பின்னடைவு காரணமாக இசுலாமியப் படையெடுப்பு மாலிக்காஃபூர் தலைமையில் நடைபெற்றது. அவன் திரும்பிச் செல்கிற வேளையில் வீரகேரளன் என்பான் தமிழ்நாட்டைத் தன்வசப்படுத்தியுள்ளான்.

“திருவாங்கூரை ஆண்ட வீரகேரளன் என்ற மலையாளத்து அரசன் சேர, சோழ, பாண்டிய நாடு முழுவதையும் வென்று சீர்காழியிலும் காஞ்சியிலும் அவனுடைய படைகளை நிறுத்தினான். தமிழ்நாடு முழுவதும் அவனுடைய கொடுங்கோல் ஆட்சிக்கு உட்பட்டுக் கிடந்தது’’ என்று சி. பா. ஆதித்தனார் தமது ‘தமிழப் பேரரசு’ (ப. 10) என்ற நூலில் வீரகேரளன் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி.1311 இல் மாலிக்காஃபூர் மதுரையைத் தாக்கினான். அப்போது மதுரையை ஆண்ட சுந்தர பாண்டியனும் அவனது சித்தப்பா விக்கிரம பாண்டியனும் எதிர்த்துப் போராடினர். அவர்களுக்குத் துணைப் படையாக வேணாட்டைச் (திருவிதாங்கூர் – கேரளம்) சேர்ந்த இரவி வர்ம குலசேகரன் வந்து போர் செய்தான். போரில் விக்கிரம பாண்டியன் மறைந்தான். இரவி வர்மனின் படைகள் மாலிக்காஃபூரின் படைகளை வேகவதி (காஞ்சி) ஆற்றங்கரை வரை துரத்திச் சென்றன என்று கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, வே. தி. செல்லம் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். 1313இல் இரவிவர்ம குலசேகரன் தன்னைச் சேர சோழ பாண்டிய மும்மண்டலங்களின் அதிபதி என்று அறிவித்து வீரகேரளன் என்ற விருதுப்பெயருடன் ஆண்டு வந்தான். அவனது நினைவாக உருவான ஊர்தான் வீரகேரளம் புதூர் என்னும் ஊர் ஆகும்.

இந்த வீரகேரளம்புதூரைத் தலைமையிடமாகக் கொண்டு இருதயாலய மருதப்பர் என்னும் நிலக்கிழார் ஆண்டு வந்தார். அவரது குல தெய்வம்தான் வீரகேரளம்புதூரில் கோயில்

கொண்டு நவநீதகிருட்டிணன் என்றும் கிருட்டிண மூர்த்தி என்றும் திருமால் என்றும் மாதவன் என்றும் போற்றப்படும் கண்ணன் ஆவான்.

வீரகேரளம்புதூர்ச் சிறப்பு

வீரகேரளம்புதூர்த் திருமால் பதிகத்தில் உள்ள பத்துப் பாடல்களிலும் வீரகேரளம்புதூரின் பெயரை 'வீரை' என்று தண்டபாணி சுவாமிகள் குறிப்பிட்டதுடன் ஐந்து பாடல்களில் வீரை என்னும் பெயருக்கு முன் அடைமொழிகள் சேர்த்துள்ளார். 'தமிழ்வீரை' (பா. 1), 'தென் வீரை' (பா. 2) 'அமரர் பதிநேர் வீரை' (பா. 3), 'வியன் குலவும் வீரை' (பா. 5) 'வீரர் மலி வீரை' (பா. 6) என்று போற்றியுள்ள தன்மையைக் காணமுடிகிறது. திருமாலைப் போற்றிய சுவாமிகள் அவர் குடி கொண்டிருக்கும் ஊரையும் போற்றியுள்ளமை இவற்றால் புலனாகும். மேலும், வீரகேரளம்புதூர், சித்ரா நதி என்னும் சிற்றாற்றங்கரையில் அமைந்துள்ளமையை ''மேதகு சிற்றாறு அதன்பால் விளங்கும் அமரர் பதிநேர் வீரை'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திருமாலின் தோற்றப் பொலிவு

உலகளந்த பெருமாளாகக் கருதப்படும் திருமாலின் தோற்றத்தைத் தண்டபாணி சுவாமிகள் தமது வீரகேரளம் புதூர்த் திருமால் பதிகத்தின் வழியாகக் காட்சிப்படுத்தி யுள்ளார்.

திருமாலின் தோற்றம் கார்மேகத்தை விடக் கரியது என்றும் தலையில் மயில் இறகைத் தாங்கியவன் என்றும் மார்பில் ஒளி பொருந்திய அணிகள் தவழும்படியாகக் கழுத்தில் அணிந்தவன் என்றும் துழாய் மாலையையும் திருமகளையும் மார்பில் தாங்கியவன் என்றும் கனிபோல் சிவந்த வாயினன் என்றும் கையில் சங்கேந்தியவன் என்றும் வயிற்றில் நான்முகன் முதலானோர்க்குப் பிறப்பளித்த தாமரையைக் கொண்டுளான் என்றும் தண்டபாணி சுவாமிகள் போற்றியுள்ளார். திருமால், வேத நெறியைக் காப்பதற்காக யுகங்கள் தோறும் பல்வேறு உருக் கொள்வான் என்றும் திருமாலின் தோற்றத்தை வீர கேரளம்புதூர்த் திருமால் பதிகம் தெரிவிக்கிறது.

திருமால் மேன்மை

இப்பூவுலகில் உள்ள அனைத்து உயிர்கட்கும் உணவும் அனைத்தும் வழங்குபவன் திருமால் என்பதை உளப்பூர்வமாக உணர்ந்தவர் தண்டபாணி சுவாமிகள். முருகதாசர் என்று அறியப்பட்டாலும் கையில் தண்டத்துடன் தண்டபாணியாகக் காட்சியளித்தாலும் காய்தல் உவத்தல் இன்றி, திருமாலின் மேன்மையையும் அவர் பாடியுள்ளார்.

''பூதலத்தில் உள்ள உயிர் அத்தனைக்கும்
தகும் உணவு புகட்டும் நீ''

என்று அனைவருக்கும் புரக்கும் வள்ளலாய்த் திருமாலைப் பாடிய சுவாமிகள்,

''மாதவன்என்று இறைஞ்சினருக்கு அருள்பேற்றை
இகழ்ந்தார்க்கும் வழங்கி ஆண்டாய்'' (பா. 1)

என்றும் திருமாலின் பெருமைகளைப் போற்றியுள்ளார். மாதவன் என்று வணங்கிப் போற்றுவோர்க்கு மட்டுமல்லாமல் இகழ்வோர்க்கும் அருள் வழங்கி அவர்களை ஆட்கொள்பவன் என்று எடுத்து மொழிந்த சுவாமிகள் புராணக் கதைக் குறிப்புகளின் வழியாகவும் திருமாலின் மேன்மையைப் போற்றியுள்ளார்.

காளிய நடனம்

யமுனை நதியில் காளியன் என்னும் பாம்பு ஒரு மடுவில் இருந்து கொண்டு கொடிய நஞ்சை அந்நதி முழுவதும் பரப்பி நீரைக் குடிக்க இயலாமல் செய்துகொண்டிருந்தது. கண்ணன், அம்மடுவிற்கு அருகில் நின்ற கடம்ப மரத்தில் ஏறி அப்பாம்பின் மேல் குதித்தான். அது அழியும்படியாக அதன் படத்தின் மேலேறி நடனமாடினான் என்ற புராணச் செய்தியைத் தண்டபாணி சுவாமிகள்,

''பன்னகத்தின் தலைஏறிப் பரதம் இயற்
றியசெழுந்தாட் பசும்பொற் குன்றே'' (பா. 1)

என்று குறிப்பிட்டுள்ளார்.

கோவர்த்தன மலை பிடித்தல்

திருவாய்ப் பாடியில் ஆயர்கள் அனைவரும் கூடி மழை வேண்டி இந்திரனுக்குப் பொங்கலிட்டனர். அதைத் தடுத்த

கண்ணன் அப்பொங்கலைக் கோவர்த்தன மலைக்கு இடும்படி செய்தான். அதனால் சினம் கொண்ட இந்திரன் ஏழு நாள் தொடர்ந்து கல் மழை பெய்யச் செய்தான். கன்றுகளும் பசுக் களும் ஆயர்களும் அக்கன மழையால் வாடினர். அவர்களின் துன்பத்தைப் போக்க, கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகத் தாங்கி அனைவரையும் காத்தான் என்பதை,

> ''உன்கை ஓர்நாள்
> வரைக் குடை தாங்கியும் புரந்த பசுவினம் வாழ்
> வது குறித்து'' (பா. 5)

என்று பாடியுள்ளார்.

யானைக்கு அருளல்

பாண்டி நாட்டில் இந்திரத்யும்நன் என்று ஓர் அரசன் திருமால் பக்தியுடன் வாழ்ந்து வந்தான். அவன் ஒருநாள் திருமாலை வழிபட்டுக் கொண்டிருக்கும்போது அகத்திய முனிவர் அங்கு வந்தார். அகத்தியரின் வருகையைக் கவனிக்காத அம்மன்னன் அவரை வரவேற்கவில்லை. அம்மன்னன் தன்னை அலட்சியம் செய்ததாகக் கருதிய முனிவர், ''நீ யானை போல் செருக்குற்றமையால் யானையாகக் கடவை'' என்று சாப மிட்டார். அம்மன்னன் யானையாகக் காட்டில் அலைந்தான். அவன் முற்பிறவியில் திருமால் மீது அன்பு கொண்டவனாதலால் அப்பிறவியிலும் திருமால் வழிபாட்டிற்காக நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களைப் பயன்படுத்தி வந்தான். ஒரு நாள் அருச்சனை மலர் பறிக்க யானை உருவத்துடன் தாமரைத் தடாகத்தில் இறங்கினான். நீரில் நின்று தவம் செய்த ஒரு முனிவரின் காலைப் பிடித்து இழுத்ததால் கந்தருவன் ஒருவன் அம்முனிவரால் சபிக்கப்பட்டு அத்தடாகத்தில் முதலையாகக் கிடந்தான். யானையின் காலை அம்முதலைக் கவ்விக் கொண்டது. அதை விடுவிக்க இயலாமல் கசேந்திரன் என்ற அந்த யானை, 'ஆதி மூலமே' என்று அழைத்தது. திருமால் கருட வாகனத்தில் தோன்றித் தமது சக்கரத்தால் முதலையைத் துணித்து யானையை விடுவித்த புராணத்தை,

''கூர்த்த நெடும்கோட்டொருமால் களிறு அழைப்ப'' (பா. 8)

என்று சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

பாண்டவர்க்கு அருளல்

பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நடைபெற்ற குருசேத்திரப் போரில் பாண்டவர்கள் வெற்றிபெறும் பொருட்டு அவர்கள் பக்கம் நின்று சங்கெடுத்து ஊதியவன் என்பதை,

"பாண்டவர் கைசோரா வண்ணம்
வெள்ளிய சங்கு ஒன்றெடுத்து ஓதிய கனிவாய்" (பா. 7)

என்று பாடியுள்ளார்.

புலித்தோலை மேனியிலும் கங்கையைத் தலையிலும் அணிந்தவனாகிய சிவனை வென்ற அர்ச்சுனனுக்குத் தேரோட்டி யாகிப் போரில் வெற்றி பெறச் செய்த திருமாலை,

"புல்லில்தோல் உரித்தணிந்தான் தலைநடுச்செங்
நீரருவி பொலியத் தாக்கும்
வில்லிக்கோர் சாரதியாம்"

என்று போற்றியுள்ளார்.

யமுனைத் துறையில் கோபியரின் ஆடைகளைக் கவர்ந்த கண்ணன், கௌரவர் அவையில் பாஞ்சாலியின் ஆடை களையப் பட்ட போது அங்கு ஆடை வழங்கியவன் என்பதை,

"பந்தைநிகர் கொங்கைமின்னார் பலர்கலை கொண்டு
ஒருத்திபெறப் பலவாங்கு ஈந்த விந்தையுளாய்"

என்று பாடியுள்ளார்.

இரணியனை வதைத்தல்

தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள், மனிதர்கள் இவர்கள் கையினாலும் போர் கருவிகளாலும் பூமியிலும் ஆகாயத்திலும் பகலிலும் இரவிலும் ஓரிடத்தின் உள்ளேயும் வெளியேயும் சாகாத வரம் பெற்றவன் இரணியன். அவனது மகன் பிரகலாதன். அவனுக்குக் குருவாயிருந்து சுக்கிராச்சாரியார், 'இரணியாய நம' என்று உபதேசித்து அருளினார். ஆனால், பிரகலாதன் 'நாராயணாய நம' என்று மொழிந்தான். சினம் கொண்ட இரணியன், தன் மகன் என்றும் கருதாமல் பிரகலாதனைக் கொல்லத் துணிந்தான். பல்வேறு வகையான கொலை முயற்சி களிலிருந்து தப்பிய பிரகலாதன், 'தூணிலும் இருப்பான் எங்கள் துணைவன்' என்று கூறினான். அவ்வேளையில் திருமால் தூணிலிருந்து நரசிம்மமாக வெளிவந்து இரணியனை வதைத்துப் பிரகலாதனுக்கு அருளியதைத் தண்டபாணி சுவாமிகள்,

''தந்தை சினம் சகப்பரிதாத் தன்னுயிர்காப்
பதற்கிரங்கும் தருவப் பாலன்
சிந்தை உவப் புறத்தூணில் உதித்ததுண்டேல்'' (பா. 9)

என்று பாடியுள்ளார்.

ஆழ்வார் பின்சென்றமை

திருமழிசையாழ்வாரின் மாணவர் கணிகண்ணன். திருமழிசை யாழ்வாருடன் காஞ்சிபுரத்திற்குச் சென்ற கணிகண்ணன் அங்கு விருத்தை ஒருத்தியின் மேல் அன்பு கொண்டு அவளைக் குமரி யாக்கினான். அதை அறிந்த பல்லவராயன் என்ற மன்னன் தன்னையும் இளைஞனாக மாற்றுமாறு வேண்டினான். அதற்குக் கணிகண்ணன் மறுத்து விட்டான். அதனால் அம்மன்னன் அவனை நாட்டை விட்டுப் போக ஆணையிட்டான். இச் செய் தியைத் திருமழிசையாழ்வாரிடம் தெரிவித்து விட்டுக் கணிகண்ணன் வெளியேறினான். அவனைத் தொடர்ந்து ஆழ்வார் வெளியேறுகையில் அங்குக்கோயில் கொண்டுள்ள பெருமாளிடம்,

''கணிகண்ணன் போஎன்றான்; காமருபூங்கச்சி
மணிவண்ணா நீஇங்கு இராதே – துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன்; நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்'' (தனிப்: 99)

என்று கூறிவிட்டு வெளியேறினார். அதைக்கேட்ட பெருமாளும் நகரைவிட்டு வெளியேறினார். காஞ்சி நகர் வெறுமையடைந்தது. மன்னன் மனம் திருந்தி ஆழ்வாரையும் கணிகண்ணனையும் அழைத்ததாக அறியப்படும் செய்தியைத் தண்டபாணிசுவாமிகள்,

''கச்சியில் ஓர் புலவன்நவில் கவிஒன்றாற்
போய்மீண்ட கதைமெய் யாகில்'' (பா. 2)

என்று பாடியுள்ளார்.

அருள் வேட்டல்

காஞ்சியில் திருமழிசையாழ்வாரின் பொருட்டு எழுந்து அவரோடு சென்ற திருமாலே! அது உண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சி என்றால், எத்தனையோ பாடல்களை உன்மீது பாடியுள்ள என்னை வருந்தச் செய்யலாமோ? என்று எதிர்மறை ஓகாரத்தில் வேண்டிய சுவாமிகள் உலகம் முழுமைக்கும் உணவு புரக்கும் நீ, உனது பாதம் மறவாத என்னை வருந்தச் செய்வது அருள் செயல் செய்யும் பண்பாகுமா? (பா.3) என்று கேட்கிறார்.

திருவரங்கத்தில் தண்டபாணி சுவாமிகளின் பாடல் கேட்டு மென்னகை புரிந்த திருமால் உண்மையில் வரம் வழங்கியிருந்தால் இவ்வாறு ஊர் தோறும் அலையவேண்டியிருந்திருக்காது என்று வருந்தியுள்ளார். (பா.5)

கடலை ஆடையாகத் தாங்கிய இவ்வுலகில் வாழ்வோர் இகழா வண்ணம் எனக்கருள்வாய் (பா. 6) என்று பாடிய சுவாமிகள், செந்தமிழ்ப்புலவர்கள் என்னை மதிக்கும் பெரும்பேற்றை எனக்கு அருளிய நீ இவ்வுலக மக்கள் அனைவரும் போற்றும் வாழ்வை வழங்குவாய் (பா.7) என்று வேண்டுகிறார்.

கசேந்திரனைக் காக்க அதன்முன் தோன்றிய திருமாலே தீய குணமாகிய முதலையின் பிடியில் வாடும் என்முன் தோன்றி அருள்வாய்! என்று வேண்டிய சுவாமிகள், தமக்குத் திருமால் அருள் புரிதல் அவரது கடமை என்பதை உணர்த்தும் வகையில் 'எனக்கு உதவி செய்யத்தான் வேண்டும்' (பா.9) என்கிறார்.

பல பாடல்கள் வழியாகப் பாடிப் பரவும் எனக்கு உனது அருள் பேறும், உனது திருக்கோயில் தொண்டையே சிறந்த தொண்டாகக் கருதி வீரகேரளம்புதூரில் வாழும் மருதப்பருக்கு மகப்பேறும் வழங்கி அருள வேண்டும் (பா.10) என்று இறுதியாகத் திருமாலிடம் வேண்டுகிறார்.

அறுநூறுக்கும் மேற்பட்ட பதிகங்களைப் பாடியுள்ள வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சமயப் பொதுமையை விரும்பினார் என்பதை அவர் அனைத்துக் கடவுளர் மேலும் பாடிய பதிகங்கள் வழி அறிய இயலும். மேலும், பதிக இலக்கணத்திற்கு உட்பட்டு அவர் பாடியுள்ள தன்மையும் புலனாகும்.

வீரகேரளம்புதூர்த் திருமால் பதிகத்தின் வழியாகத் திருமாலின் பெருமைகளும் அருட்தன்மைகளும் அறியப்படுகிறது.

வீரகேரளம்புதூரின் சிறப்பும் மருதப்பர் பெருமையும் இப்பதிகத்தின் வழி வெளியாகின்றன. இறைவனைப் போற்றுதல் என்ற மரபுக்குட்பட்டுப் பாடப்பட்டுள்ள வீரகேரளம்புதூர்த் திருமால் பதிகம் பத்துப் பாடல்களுக்குள் திருமாலைப் போற்றுவதுடன் பிற செய்திகளையும் வெளிப்படுத்தியுள்ளமையைக் காண முடிகிறது.

துணை நூல்

1. வீரகேரளம்புதூர் நவநீத கிருட்டிணன் கலம்பகம், உரையாசிரியர் – பதிப்பாசிரியர், டாக்டர் வே இரா. மாதவன், பாவை வெளியீட்டகம், தஞ்சாவூர். 1994.

கௌமார முறைமை கூறும் கௌமார நெறி

வே. இராசேசுவரி

முருகன் தமிழ்ப் பெருங்கடவுள், மிகப் பழங்காலத்தொட்டே தமிழகத்தில் முருக வழிபாடு நிகழ்ந்து கொண்டு வருகின்றது. முருகனைக் குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியர் குறிப்பிட்டிருக்கிறார். மனித இனம் முதன் முதல் தோன்றியதும் மனித நாகரீகம் வளரத் தொடங்கியதும் குறிஞ்சி நிலமே. முதன் முதலில் மக்கள் குறிஞ்சி நிலத்திலேயே தெய்வ வழிபாடு நிகழ்த்தினர். இத்தகைய சிறப்பினால் முருக வழிபாட்டின் பழமை, தொன்மை களை உணரலாம்.

கௌமார முறைமை

கௌமார நெறியைப் பின்பற்றிக் கூறுகின்ற நூல் கௌமார முறைமை. குமரக் கடவுளைப் பரம்பொருளாக வைத்து வழிபடும் சமயம் கௌமாரம் இந்நெறியில் குருவழிபாடு இன்றி யமையாதது. கௌமாரம் அறுவகைச் சமயங்களுள் ஒன்று என்பதனைத் தண்டபாணி சுவாமிகள் உடன்படுவதில்லை. அறுவகைச் சமயத்துக்கும் அதீதமான பொது நெறி இது என்பதே அவர் கூறும் கருத்தாகும். கௌமார முறைமையை கர்ம காண்டம் பக்திக் காண்டம், ஞான காண்டம் என்று மூன்று பிரிவாகச் செய்துள்ளார். ஒவ்வொரு பிரிவிற்கும் நூறு நூறு செய்யுள்களாக முந்நூறு செய்யுட்களை உடையது இந்நூல்.

கருமகாண்டமும், கௌமாரமும்

கர்மம் என்ற சொல் தொழில் எனப் பொருள்படும். நாம் செய்வன அனைத்தும் தொழில்களே எனினும் சமயத் தொடர்பான கிரியைகளே இங்கு கருமம் என்று குறிக்கப்படும். தண்டபாணி சுவாமிகள் இக்கருமகாண்டத்தின் தொடக்கத்தில் மக்களினத்தின் சிறப்பு, கொலை, புலைதளர்ந்தோன் சிறப்புக்கள்

முதலியனவற்றைக் கூறுகின்றார். அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வருணாசிரமத் தருமங்களைப் பொதுவாக முந்நூல்கள் கூறிய வாறே கொள்க எனக் கூறுகின்றார். மேலும், அறுவகை சமயங் களுக்கும் உரிய கடவுள், மூர்த்தி அமைப்பு அறுவகை சமயங் களுக்கும் அப்பாற்பட்ட குருவழிபாட்டின் சிறப்பு ஆகியவற்றைக் கூறிக் காண்டத்தை நிறைவு செய்கிறார்.

இச்செய்திகளை (1) பொதுவியல்பு, (2) சிறப்பியல்பு என இரண்டாகப் பகுத்துக் கூறியிருக்கிறார். பொதுவியல்பில் முதல் பாடலில் கொல்லாமையின் சிறப்பினை சிறந்த உவமை மூலம் கூறியுள்ளார்.

''உயிர்வருந்தப் படுத்தாமை கொலை செய்யாமை
ஊன் உண்டு களியாமை உடையோரெல்லாம்
பயிரனையார் எனலாகும் மற்றையோரைப்
பாவமிகும் களையெனவே பகரலாகும்''

என்ற பாடல் மூலம் அறியலாம்.

மேலும் வேள்வியிற் கொல்வது தவறு, வேள்வியிற் கொலை செய்யலாம் என்பது வேதவாக்கியம் அன்று. கொடியவர்கள் சிலர் வேதத்தில் அவற்றைச் செருகி வைத்தனர். கொல்லாமை நெறி எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படை நெறியாக அமைகிறது என்று தண்டபாணி சுவாமிகள் கூறுகிறார்.

கருமம்

எக்கருமம் செயினும் இறைவனை முன்னிட்டே செய்தல் வேண்டும். கருமத்துக்குப் பலன் உண்டு. இவற்றை இல்லை என்பது பிழை அறுசமயம் தெய்வம் உண்டு என்னும் கொள்கை யுடையது. தெய்வம் குருவடிவாக வந்து அருள் செய்யும் எனக் கொள்வது மிகச் சிறந்த சமயம். அருட்குருவினை இறைவ னுடைய குமாரன் எனலாம். தாங்கள் வழிபடும் மூர்த்தியை இறைவனுடைய குமாரன் என்றே அனைத்துச் சமயங்களும் கூறும். அக்கொள்கை உடையவர்களெல்லாம் கௌமாரர் என்பதில் ஐயமில்லை என்று கூறுகிறார் தண்டபாணி சுவாமிகள்.

முருகன், குமரன், குரு

உலகத்திலுள்ள மலையெல்லாம் முருகனுக்குரிய இடமே. முருகனே பரம்பொருள். அவனே குமார வடிவம். அழியாத அழகிய வடிவம் உடையவன். யார்க்கும் குரு வடிவில் வந்து அருள் செய்யும் பரம்பொருள் முருகனே வேதநூல்களில் சொல்லப்படும் சௌரம், சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம் என்னும் அறுசமயம் குருவடிவில் வழிபாடு செய்யும் கௌமாரத்தில் அடங்கும் என்று தண்டபாணி சுவாமிகள் கூறுகின்றார். இதனை,

''ஆறுசமயக் கடவுள் வேறு வேறு
அன்றியான் ஒருவனே அங்கங்கிருந்து
அன்பர்க்கு முத்திதரு வித்தென்று
யாவர்க்கும் அறிவித்த வதன மணியே''

''ஆறுசமயமும் தம்மில் ஒவ்வாதிங் கலைவதென்னே?
தேறும் அறிவினதெல்லாம் அறிந்தும் தெளிந்திலரே
பேறு தரும் தெய்வம் யாவைக்கும் யான் பெருந்தெய்வமே
தென்றே
வீறுமுகங்கொண்டு போரூர் முருகன் விளக்கியதே''

எனத் திருபோரூர்ச் சந்நிதி முறையில் சிதம்பர சுவாமிகள் அருளியுள்ளார். இதன் மூலம் அறுவகைச் சமயங்களின் கடவுளாகவும் விளங்குபவன் முருகன் என அறியலாம்.

அறுசமயங்களில் ஒன்றாகிய கௌமாரம் முருகனைச் சிவனுடைய மகனென்றும் அவன் சூரபன்மனை வெல்வதற்காக வந்தானென்றும் கருதி வழிபடுவது. இதனை இளங்கௌமாரம் என்னும் பெயரால் தண்டபாணி சுவாமிகள் குறிப்பார். குரு வடிவில் வழிபடுவதும் சன்மதசமயாதீத நெறிநிற்பதுமாகிய கௌமாரத்தை இயல்பான கௌமாரம் என்றும் தண்டபாணி சுவாமிகள் குறிப்பிடுவார்.

இளங்கௌமாரம்

அறுசமயத்துள் ஒன்றாகக் கூறப்படும் கௌமாரம் இளங்கௌமாரம். இக் கௌமாரத்தில் சிவபெருமான், அகத்தியர் முதலியோர் முருகனை வழிபட்டதாகக் கூறுவர். சம்பந்தர் முருகனின் அவதாரம். வாகனம் யானை, மயில், ஆடு, மனைவியர்

வள்ளி, தெய்வானை, இடம் மலைகள், விரதநாள் - வெள்ளிக் கிழமை, சஷ்டி, கிருத்திகை நட்சத்திரம் ஆகியவை ஆகும்.

இயல்பான கௌமாரம்

இயல்பான கௌமாரம் எல்லாச் சமயத்தவரும் உறவு கொள்வர். சைவத்திற்குரிய திருநீறு, வைணவத்திற்குரிய திருமண், சாக்தத்திற்குரிய குங்குமம், அனைத்தையும் இகழாது அணிந்து கொள்வர். முருக வழிபாட்டுச் சக்கரம், அறுகோணம், இரு வகையான ஆறுஎழுத்து, 1. ஓம் நமகுமராய, 2. ஓம் சரவணபவ இதனை பிரணவத்துடன் உச்சரித்து வழிபடல் சமயாதீத வழிபாடு.

வழிபாடு பலவகை உண்டு. தொடக்கத்தில் ஒரு சமய நெறியில் வழிபடுவது. வழிபாட்டுப் பயிற்சி முதிர முதிர சமரச நெறி கைவரக் கூடும். பரம்பொருள் ஒன்றே என்ற உணர்வு தோன்றும். ஆறெழுத்து அலங்காரம், தியானனுபூதி முதலிய நூல்களில் கூறிய மந்திரங்களால் வழிபடலாம். மானத வழிபாடே போதும் என்பது தவறு, உருவ வழிபாடும் வேண்டும் உருவ வடிவத்தில் வழிபடுவதே சமயாதீத வழிபாடாகும். சக்கர வழிபாட்டில் அவரவர் விரும்பும் தெய்வத்தை நடுவில் நிறுத்தி வழிபடலாம். அவற்றைப் பிழையின்றிக் குறிப்பிடுதல் வேண்டும். ஒரே தெய்வத்தை உறுதியாக வழிபட்டால் நல்ல பயன் உண்டாகும். விரதம் அவசியம்.

கௌமாரத்திற்குரிய வழிபாட்டு முறையினைக் கூறுகின்ற போது தண்டபாணி சுவாமிகள் விரதம் பற்றிக் கூறியுள்ளார்.

> ''கொல்லாத விரதமொன்றே மிகவும் நல்ல
> குணமான விரதம் மற்றும் கூறுகின்ற
> எல்லாமும் அதனை ஒக்கும் விரதமாகா''

என்று கூறுகின்றார். இதனை,

> ''அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத்து உண்ணாமை நன்று''

என்கிறார் வள்ளுவர்.

உருவ வழிபாடு

வழிபடும் மூர்த்தியின் வடிவம் தங்கம், வெள்ளி, செம்பு கல், மரம், சாந்து, சித்திரம் முதலியனவாக அமைக்கலாம்.

உருவம் குறையற்றதாக இருத்தல் வேண்டும். தெய்வத்திருவுருவங் களைப் பற்றிச் சிற்பச் செந்நூல் மிகத் தெளிவாகக் கூறுகிறது. உலோகத் திருவுருவங்களுக்கு எண்ணெய்க் காப்பு இடலாகாது. கல் உருவங்களுக்கு எண்ணெய்க் காப்பு வேண்டும். விக்கிரகங் களுக்கு பூசை செய்யும் முறையினைத் தண்டபாணி சுவாமிகள் மிகத் தெளிவாகக் கூறுகிறார். அபிடேக நீரில் வெட்டிவேர் முதலியன கலக்க வேண்டும். தேன், இளநீர், பால், தயிர், பழவகைகள், சந்தனம் முதலியவற்றால் அபிடேகம் செய்தல் வேண்டும். மாலை, அணிகலன் முதலியவற்றால் அலங்காரம், நைவேத்தியம் தூபம், தீபம் கொடுத்தல் வேண்டும். மூர்த்தி களை ஸ்தூபிப்பதற்குரிய ஆலயம் அமைக்கும் முறைகள் ஆகமங்களில் கூறியவாறே கொள்ளலாம். தகட்டில் சக்கரம் வரைந்தும் கலசம் அமைத்தும் சிலையில் திருநீறு வைத்து அதில் சக்கரம் வரைந்து அதனை அரிசியின் மேல் வைத்து அதில் கலசம் அமைத்து வழிபடல் மிக்க பயன்தரும். எந்த வடிவத்தையும் இகழக்கூடாது. இங்ஙனம் வழிபாட்டிற்குரிய நெறிமுறைகளை வகுத்துக் கூறுகிறார்.

பக்திக் காண்டம்

பக்தி என்பது உபாசனையே, தீர்த்த யாத்திரை தலவழி பாடு முதலியன பக்தியாக அகத்தில் ஒரு உருவில் இறைவனைத் தியானிக்கும் உபாசனை முறையில் விரைவில் பயன் கிடைக்கும். குருவானவர் எந்த வடிவில் அமைத்து எந்த மந்திரத்தை உபதேச மாகக் கொடுத்தாரோ அந்த முறையில் உபாசிக்க வேண்டும். அகண்டமாயுள்ள பரம்பொருளைக் குருவடிவாகக் காண்பதற்கு முயற்சியும் பக்குவமும் மிகுதியும் வேண்டும். ஆனால் குரு வடிவைப் பரம்பொருளாகக் காணல் மிக எளிது. பசுவின் உடல் முழுதும் நிறைந்துள்ள பாலாகிய பயனை மடிவழியால் பெறுவது போல எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளின் அருளைக் குருவடிவில் பெறலாம். உபாசனைக்குச் சித்தியே பயன், சித்தி எய்தாத உபாசனை வீண். அது ஒலியில்லாத மணிபோல் ஆகும்.

இறைவனுக்கு உருவம் கொள்ளமுடியாது என்றும், போக்கு வரவு இல்லை என்றும் கூறுவது தவறு. கடவுளை இவ்வுலகில் ஒரு வடிவத்தில் கண்ணாறக் கண்டு தரிசித்தவரே முத்தி பெறுபவர் எனப் பல நூல்களும் கூறியுள்ளன. வாதவூரடிகள்,

அருணகிரிநாதர் ஆகியவர்களுக்கு இறைவன் இவ்வுலகில் காட்சி அளித்த நிகழ்ச்சிகள் பல உள்ளன. உபாசனைக்கு எந்திரம், மந்திரம் முதலியன உரியன என்றாலும் பாவனை மிக முக்கியம்.

1. விக்கிரகத்தில் மனதைச் செலுத்தி உபாசிப்பவர் இளம் பருவத்தார்.
2. நூலில் சொல்லப்பட்ட உருவத்தினை உள்ளத்தே கண்டு உபாசிப்பவர் நடுப்பருவத்தார்.
3. குருவடிவத்தை உபாசிப்பவர் முற்றிய பருவம் உடையவர்.

எனத் தண்டபாணி சுவாமிகள் கூறுகிறார். மூன்றிலும் பயன் உண்டு. குருவடிவில் உபாசிக்கும் சிறப்பு மிகச் சிலருக்கே வாய்க்கும். மனத்தில் தெய்வ வடிவத்தைக் கருதாமல் வெறும் செபம் செய்வதில் பயனில்லை. தியானம் செய்வோர்க்குத் தாம் உபாசிக்கும் வடிவம் முழுவதும் தோன்ற பலகாலம் செல்லும். இடைவிடாது தியானிக்க வேண்டும். எறும்பு ஊறக் கல் தேயும் என்பது போல இடைவிடாது உபாசனையில் சோம்பல் கூடாது. கிடைத்தது போதும் என்ற திருப்தியும் கூடாது. விடாது முயலுதல் வேண்டும். இறைவனை "வா"யென்னும் பொழுது வரவும், போ என்னும் பொழுது செல்லவும் சித்திபெறுமாறும் முயல வேண்டும். செல்வம் முதலிய சிறு பயனை மட்டும் பெறுவது சித்தி அன்று.

உபாசனையில் சித்தி பெற்றோர்க்கு வாக்குப் பலிதம் உண்டாகும். அவர்கள் உலக வினைகளைக் கண்டு அஞ்ச மாட்டார்கள். அவர்களை நாள், கோள், கூற்றம் எதுவும் சிறிதும் தீமை செய்ய மாட்டா. பக்தி நெறியில் நின்றோர் மிகப்பெருஞ் செயல்களையும் எளிதாகச் செய்வர். சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கியதும், அப்பர் கல்லில் மிதந்ததும், குகைநமச்சிவாயர் இருநூறு ஆண்டுகள் வாழ்ந்ததும் இதற்குச் சான்றாகும். இவ்வாறு உபாசனை நெறி பற்றித் தண்டபாணி சுவாமிகள் கூறுகிறார். மேலும் அறுசமயங்களுக்கும் உறுதியான முறை பற்றியும் கூறியுள்ளார்.

கௌமார முருக உபாசனை

முருகன், சிவனுக்கும், உமைக்கும் மைந்தன், கணபதிக்குத் தம்பி. தலையில் சிறிய சடையை வைத்துள்ளான். செந்நிறம் உடையவன். முருகனுக்குப் பல வகை உருவம் உண்டு.

1. பாலமுருகன் — ஐந்து, ஆறுவயதுப் பருவம்
2. குமார முருகன் — பதினாறு வயதுப் பருவம்
3. சுப்பிரமணியம் — இடப்பக்கம் பொன்னிறமான தெய்வயானை, வலப்பக்கம் நீல நிறமான வள்ளி.
4. கார்த்திகேயன் — நடுத்தோளில் வாளும், கேடகமும் ஏந்திய வடிவம்
5. சண்முகமூர்த்தி — ஆறுமுகம், இருதலைச்சூலம், குலிசம் பாணம், வாள், வில், கேடகம், ஆழி, சேவல், அங்குசம், பாசம் ஏந்தி அபயவரதம் அமைந்த வடிவம். இவ்வடிவத்தை உபாசிப்பார்க்குச் சித்தியும், முத்தியும் உண்டு.
6. தண்டபாணி — முண்டிதமான தலையும், கோவண ஆடையும் முழுநீறு பூசிய நிலையும், தண்டும், பாதுகை அணிந்த திருவடியும், கண்டிகை அணிந்த மார்பும் வேலும் அமையப் பெற்ற வடிவம். சடையுடன் கூடிய தண்டபாணி உருவமும் உண்டு.

இவ்வாறு முருகப் பெருமானுக்குரிய பலவகை உருவங்களையும் தண்டபாணி சுவாமிகள் கூறுகிறார்.

குருவடிவ உபாசனை

இவ்வடிவம் ஆறுசமயத்துக்கும் ஒன்றாகியும் அவற்றின் மேலாகியும் விளங்கும். எல்லாத் தெய்வமும் தானாக விளங்குவான். பெரும் பொருள் என்று இவ்வடிவத்தையே கூறுவர். குருவடிவ உபாசனை உடையவர்களே உபாசகர்களில் உயர்ந்தவர்கள். கோயிலில் இருக்கும் மூர்த்தியினை உபாசிப்

பவர்கள் பக்தியின் தொடக்க நிலையில் உள்ளவர்கள். எத்தெய்வத்திற்குப் பக்தி செய்தாலும் முதலில் பயன்தரும் பரம்பொருள் குருவே ஆகும்.

உபாசகர் இயல்பு

உபாசகர்கள் நால்வகையினர் உளர்.

1. மந்திரம் மட்டும் உரைப்பவர்.
2. கல் செம்பு முதலிய வடிவத்தில் வழிபடுவோர்
3. மனத்தில் உருவம் கருதி வழிபடுவோர்
4. குருவடிவில் வழிபடுவோர்.

இவர்கள் ஒருவரில் ஒருவர் உயர்ந்தவர் உபாசனையில் முயல்பவர்களுக்கு உபாசனையை விரும்பாதவருடைய உறவு, பொருளாசை, கொலை, புலை, பொய், கோபம், காமம் முதலியன தீமையாகும். மந்திரங்களை 1,000, 10,000, 10,00000 எனச் சலியாமல் ஒலிக்க வேண்டும். தான் உபாசிக்கும் வடிவத்தை, நனவில் காணும் மட்டும் உபாசித்தல் வேண்டும். சித்தி பெற்றவர் களில் தமக்கு மட்டுமே பயன் தேடுவோர் தாழ்ந்தவரே. உலகிற்குப் பயன் தேடுவோரே உயர்ந்தவர் எனலாம் என்று கூறுகிறார்.

கடவுளை நனவில் நேரே காணுதலும் உரையாடுதலும், முற்பிறவி முதலியன அறிதலுமாகிய சித்திகள் பெற்றாலும் உபாசகன் செருக்கடைதல் தவறு. உபாசனை நல்லதாக இருந்தால் கல்வியறிவு, கவிபாடும் ஆற்றல், தெய்வம் ஒன்றே என்ற உண்மை உணர்வு, அட்டமாசித்தி, வீடுபேறு ஆகிய எல்லாம் கிடைக்கும். உபாசனை தீயதாயின் கெட்ட குணமும் நரகமுமே கிடைக்கும். உறுதியான மனத்துடன் நல்ல உபாசனையில் முயல்தல் வேண்டும். இறுதியாக உபாசகன் எந்த வடிவத்தை உபாசிக்கின்றானோ அந்த வடிவமே ஆவான். அதுவரை முயல வேண்டும் என்று தண்டபாணி சுவாமிகள் கூறுகிறார்.

ஞான காண்டம்

கௌமார முறைமையில் மூன்றாவதாக அமைந்துள்ளது ஞான காண்டம். தேகம், சிவன், தெய்வம் இம்மூன்றும் ஒன்றே

என்னும் தெளிவுடையவர்கள் ஞானிகள். ஞானம் என்பது நல்லறிவு. அது பலவகைப்படும்.

1. கல்வி ஞானம் — நூலறிவு
2. கருணை ஞானம் — கொலை, புலை செய்யாமை
3. பக்தி ஞானம் — மலரிட்டு வழிபடுதல்
4. சித்தி ஞானம் — நினைத்தவற்றை நினைத்தபடி செய்தல்
5. மெய்ஞானம் — நான் என்றும், அவனென்றும் சொல்லப் படும் பதி, பசு பொருளின் இயல்பு அறிந்து நடுவுநிற்றல்.

என்று தண்டபாணி சுவாமிகள் ஞானத்தை வகைப்படுத்துகிறார்.

குருபாதமேகதி என்று உணர்பவனே உண்மை ஞானியாவான். ஞானம் அடைதல் என்பது மிக மிக அரிது எப்பொழுதும் வேதம் ஓதிக் கொண்டிருக்கும் பிரம்மாவும், ஞானம் விளக்கமின்றி முருகனால் குட்டுப்பட்டார். குருவினுடைய அருளாலே ஞானம் பெறலாம். சாத்திரம் பல ஓதுவதால் ஞானம் பெற முடியாது. ஞானம் பெற்ற அனைவரும் குமாரர் எனப்படுபவர் இவர் களுடைய இயல்பு நான்கு வகைப்படும்.

1. தாசன் — இறையருள் பெற்றும் பிறர்க்கு வேறாய் விளங்குபவன்.
2. குமாரன் — அறநெறி காத்து ஏனைய தீநெறிகளை அழிப்பவன்.
3. சகாயன் — உள்ளத்தில் விரும்பியவற்றை செய்து முடிக்கத் துணிவான்
4. சன்மார்க்கன் — அனைத்தும் தன்மயமாய்க் கொண்டுதான் அவற்றுக்குக் காட்சியாய் விளங்குபவன்.

எல்லாத் தெய்வ வடிவங்களும் குமாரர் என்றற்குரியர். ஆதலின் கௌமார நெறிக்கு அயலாவார் யாரும் இல்லை. எச்சமயமும் கௌமாரத்திற்குப் பகையானது அன்று.

தண்டபாணி சுவாமிகளின் தசாங்க வகுப்பு

தா. ஈசுவரபிள்ளை

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களை நன்னெறியில் வாழச் செய்யவும், இறைநெறியில் ஈடுபடுத்திப் பேரின்பப் பெருநிலையை அடையச் செய்யவும் காலந்தோறும் பல்வேறு அருளாளர்கள் தோன்றித் தொண்டாற்றி வருகின்றனர். அவர்களுள் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளும் குறிப்பிடத்தக்கவராவர்.

இவர் திருநெல்வேலியில் செந்தினாயகம் பிள்ளைக்கும் பேய்ச்சிமுத்தம்மையாருக்கும் மகனாக 1839–ஆம் ஆண்டு தோன்றினார். இவருடைய இயற்பெயர் சங்கரலிங்கம். பின்னர், இவர் முருகப்பெருமான் மீது எல்லையற்ற அன்பு கொண்டிருந்த காரணத்தால் முருகதாச சுவாமிகள் என்றும் அருணகிரிநாதர் மீது கொண்ட அன்பு காரணமாக திருப்புகழ் சுவாமிகள் என்றும், தண்டேந்தி கௌபீனதாரியாய் மெய்யெல்லாம் நீறு பூசி விளங்கியமையால் தண்டபாணி சுவாமிகள் என்றும் அழைக்கப் பெற்றார்.

இவர் சைவ சமயத்தின் உட்பிரிவாகிய கௌமாரசமய நெறியை மேற்கொண்டொழுகியவர். முருகப் பெருமானையே இறையாக எண்ணிப் பக்தி செலுத்தியவர்.

சமயச் சிந்தனைகளைப் பரப்புவதற்காகத் தோன்றிய அருளாளர்களால் தமிழ் இலக்கிய உலகமும் வளம்பெற்றுத் திகழ்ந்தது. பல்வேறு புதிய புதிய இலக்கிய வகைகள் சமயம் பரப்புவதற்கான இலக்கிய உத்திகளாக அமைந்தன. பக்தி இலக்கியம் எனப் போற்றப்பெறும் பன்னிரு திருமுறைகளிலும் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்திலும் பல்வேறு புதிய இலக்கிய வகைகள் இடம்பெறுகின்றமையைச் சான்றாகக் கூறலாம். இவ் வகையில் தண்டபாணி சுவாமிகளும் அந்தாதி, சிலேடை வெண்பா, சதகம், உலா, திருப்புகழ், மஞ்சரி, குஞ்சரிமாலை,

அலங்காரம், கோவை, விசயம், பிள்ளைத்தமிழ், பதிகம், பாமாலை, மூவாயிரம் முதலான யாப்பு, பொருண்மை, இசை, பாடல் எண்ணிக்கை அடிப்படையிலான பல இலக்கிய வகை களைப் படைத்துத் தமிழ் இலக்கிய உலகிற்கும் சமய உலகிற்கும் தொண்டாற்றியுள்ளார். தண்டபாணி சுவாமிகளின் படைப்புக் களில் ஒன்றாகிய தசாங்க வகுப்பு என்ற சிற்றிலக்கிய வகை குறித்து இக்கட்டுரை அமைகிறது.

தசாங்கம்

பாட்டுடைத் தலைவனின் பத்து உறுப்புக்களை - அங்கங்களைச் சிறப்பித்துப் பாடும் பத்துப் பாடல்களைக் கொண்ட இலக்கிய வகை தசாங்கம் ஆகும். பொருண்மை மற்றும் பாடல் எண்ணிக்கையின் அடிப்படையில் பெயர்பெற்று இலக்கிய வகையாக இது அமைகின்றது.

கருக்கள்

தசாங்கம் என்ற இலக்கிய வகையின் இலக்கணக் கருவாகத் தொல்காப்பிய நூற்பா அமைகின்றது. அரசனுக்குரிய பத்து உறுப்புக்களாகத் தொல்காப்பியம்,

''படையுங் கொடியுங் குடையும் முரசும்
நடை நவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவு கொள் செங்கோல் அரசர்க்குரிய''

(தொல். பொருள். மரபு. இளம்-72)

எனக் குறிப்பிடுகின்றது. இவண் படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், தார், முடி, செங்கோல் என்ற பத்து உறுப்பு கள் சுட்டப்படுகின்றன.

சங்க இலக்கியத்துள் மன்னர்களின் பெருமைகளைக் கூறுமிடத்து அங்கங்களின் சிறப்புக்கள் வருணிக்கப்படுகின்றன. பக்தி இலக்கியத்திலும் இறைவனின் உறுப்புக்கள் சிறப்பிக்கப் பெறுகின்றன. ஆனால் இவை தனித்தனியாக அமைந்து காணப் பெறுகின்றன. இத்தகைய இலக்கண, இலக்கியக் கருக்களே தசாங்க இலக்கிய வகை தோன்ற அடித்தளங்களாக அமைந்தன எனலாம்.

பாட்டியல் நூல்கள்

பாட்டின் இயல்புகளை வரையறுத்துக் கூறும் பாட்டியல் நூல்களில் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்த தீபிகை, பிரபந்த மரபியல், இலக்கண விளக்கம், முத்து விரியம், பன்னிரு பாட்டியல் என்பனவும் பத்து உறுப்புக்களைக் குறித்துச் சுட்டுகின்றன.

தசாங்கம், தசாங்கப்பத்து, தசாங்கத்தயல், சின்னப்பூ

சிற்றிலக்கிய வகை ஒன்றிலிருந்து கிளைத்துப் பல்வேறு சிற்றிலக்கிய வகைகள் தோன்றும் நிலையினைச் சிற்றிலக்கிய வரலாறு மூலம் அறியலாம். அவ்வகையில் பத்து உறுப்புக் களைப் புகழ்தல் என்ற பொருண்மையுடன் சிற்சில வேறுபாடு களைப் பெற்றுத் தோன்றியனவாகத் தசாங்கம், தசாங்கப்பத்து, தசாங்கத்தயல், சின்னப்பூ என்ற இலக்கிய வகைகளைக் கொள்ளலாம். பாட்டியல் நூல்கள் தரும் விளக்கங்கள் மூலம் பாட்டுடைத் தலைவனின் மலை, யாறு, நாடு, ஊர், தார், குதிரை, களிறு, கொடி, முரசு, செங்கோல் என்ற பத்து உறுப்புக் களையும் நஞ்சைமுத்துக் கலவாதவாறு நேரிசை வெண் பாவாலான பத்துப் பாடல்களில் பாடுவது தசாங்கம், தசாங்கப் பத்து என்றும், ஆசிரிய விருத்தம் அல்லது ஆசிரியப்பாவாலான பத்து அல்லது பதினொரு பாடல்களில் பாடுவது தசாங்கத்தயல் என்றும், ஒவ்வோர் அங்கத்தையும் அல்லது சின்னத்தையும் பத்து அல்லது ஏழு அல்லது மூன்று வெண்பாவில் பாடுவது சின்னப்பூ என்றும் அறிய முடிகின்றது.

மாணிக்கவாசகரின் திருத்தசாங்கம்

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பல்வேறு இலக்கிய வகை களைத் தம் இலக்கிய உத்திகளில் ஒன்றாகக் கொண்டு படைத்துள்ளமையை அறிய முடிகின்றது. அவற்றுள் திருத் தசாங்கம் என்பது ஒன்று ஆகும். திருவாசகத்தில், பத்தொன்பதாவது தலைப்பாக இது அமைந்துள்ளது. கிளியை அழைத்துக் கூறும் பாங்கிலும் கிளியிடம் வினவும் பாங்கிலும் இறைவனின் தசாங்கங்கள் நேரிசை வெண்பாவாலான பத்துப் பாடல்களில் போற்றியுரைக்கப் பெறுகின்றன. இப்பகுதியில் இறைவனின் மகாதேவன் என்ற நாமம், தென்பாண்டி நாடு,

உத்தரகோசமங்கை என்ற ஊர், ஆனந்தம் ஆகிய ஆறு, முத்தியை அருளும் மலை, சித் ஆகாசம் என்ற புரவி, கழுக்கடை (திரிசூலம்) ஆகிய படை, நாதப் பிரம்மம் அல்லது ஓங்காரத் தத்துவமாகிய முரசு, தாளி அறுகாசிய மாலை, ஏற்றுக்கொடி எனப் பத்து அங்கங்கள் புகழப்படுகின்றன.

கீர்த்தித் திருவகவலில் தசாங்கம்

மாணிக்கவாசகர் இயற்றியருளிய திருவாசகத்தில் இரண்டாவது தலைப்பாக அமையும் கீர்த்தித் திருவகவலிலும் தசாங்கங்கள் கூறப்படும் போக்கை உணர முடிகின்றது. ஆனந்த மாகிய ஆறு, நாதப்பிரம்மம் என்ற பறை, திரிகுலமாகிய படை, கழுநீர் மாலை, குதிரை, பாண்டிநாடு, உத்தர கோசமங்கை ஆகிய ஊர், மகாதேவன் என்ற பெயர் பேரானந்தமாகிய ஊர்தி, கயிலாய மலை எனச் சிவபெருமானின் பத்து உறுப்புக்களைப் புகழ்கின்றார்.

தண்டபாணி சுவாமிகளின் திருத்தசாங்க வகுப்பு

தண்டபாணி சுவாமிகள் திருச்செந்திற் பிரபந்தங்களாகப் பதினாறு பிரபந்தங்களைப் பாடியுள்ளார். அத்தொகையுள் பத்து உறுப்புக்களைப் புகழும் தசாங்க வகுப்பு என்ற இலக்கிய வகை அமைகின்றது. திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானின் பத்து உறுப்புக்களைப் புகழும் பொருண்மையுடைய காப்புச் செய்யுள் நீங்களாகப் பத்துப் பாடல்களைக் கொண்டதாக இவ்விலக்கிய வகை திகழ்கின்றது தனித்தனியாகப் பத்து உறுப்புக்களை வகுத்துக் கூறுதல் என்ற நிலையில் திருத்தசாங்க வகுப்பு என்ற பெயர் அமைகிறது. சந்த யாப்பில் இவ்விலக்கிய வகையைப் படைத்துள்ளார். வகுப்பு என்ற நடை எடுத்துக் கொண்ட பொருண்மையைப் பலப்பட விளக்கிச் சந்த யாப்பில் பாடும் மரபினைக் கொண்டது. கலம்பக இலக்கியத்தில் புய வகுப்பு என்ற பகுதி இடம் பெறுதல் இவண் ஒப்பு நோக்குதற் குரியதாகும். இனி, திருத்தசாங்க வகுப்பு கூறும் பத்து அங்கங்களின் சிறப்புக்களைக் காண்போம்.

தசாங்க வகுப்பு என்ற இலக்கிய வகையைச் சிறப்புற நிறைவேற்ற இறைவனாகிய கணபதி காக்கும்படி வேண்டும் காப்புச் செய்யுள் முதற்கண் இடம் பெறுகின்றது.

நாடு - தமிழ்நாடு

சோமசுந்தர பாண்டியனாக இறைவன் எழுந்தருளியபோது அவர் ஆட்சியில் இருந்த நாடு; உமாதேவியார் தடாதகைப் பிராட்டியாகத் தோன்றி அரசு புரிந்த நாடு; திருமகளும் கலை மகளும் செல்வரும் கல்வியறிவில் மிக்கவர்களும் திகழும் நாடு; உக்கிரகுமார பாண்டியன் மேருமலையைச் செண்டால் அடிக்கு மளவுக்குத் திரத்தைக் கொடுத்த நாடு; பரமனின் திருமணம் நடைபெறுமாறு அகத்தியர் இமயத்திலிருந்து வருகைதந்த நாடு; சந்தன மரங்கள் நிறைந்த நாடு; தென்றல் விளங்கும் நாடு; தாமிர பரணி நதி பாயும் சிறப்புடைய நாடு; சம்பந்தர் சமணரை வாதில் வென்ற நாடு எனத் தமிழ்த் தெய்வமாகிய முருகப் பெருமானின் தமிழ்நாடு பல்வேறு நிலைகளில் புகழப்படுகின்றது.

ஊர் - செந்தில் மாநகர்

எத்தகையோரிடத்தும் நெருங்கித் துன்பம் செய்யும் சண்டி யாகிய மன்மதன் நெருங்க இயலாத ஊர்; தாம்பூலத்தை வாயிலிட்டு மென்றுகொண்டே சிந்து பாடிய கந்தசாமிப் புலவரின் தாம்பல நீர் முருகன் உடையில் பட்டது. இதைக் கண்டு அன்பர் வியந்தனர். அவரது குமாரராகிய ஆறுமுகப் புலவர் முருகனின் உலா முன் நின்று பாடினார். அவர் தாழ்ந்த குலத்தினர் எனப் பின்புறம் செல்லப்பணிக்கவே அவரும் பின்புறம் சென்றார். ஆனால் முருகப் பெருமானோ பின்பக்கம் திரும்பி விட்டார். தேங்காய்கள் மரத்திலிருந்து உதிரும்படி வீரபாண்டியப் புலவர் பாடினார். ஊமைக் குழந்தையாம் குமரகுருபரர் நாவில் வேல்கொண்டெழுதிப் பேசும் திறனை முருகப் பெருமான் அருளினார். இத்தகைய சிறப்புக்களையுடைய செந்தில் மாநகர் முருகப் பெருமானின் ஊர் எனப் போற்றுகின்றார்.

மலை - சந்தன மலை

பரமன், திருமால், பிரம்மன், இந்திரர் போன்றோர் தம் குறைகளைக் கூறித் தொழும் சிறப்புடையது; வண்டுகள் மொய்க்கும் பொழில்கள் நிறைந்தது; மயில்கள் ஆதிசேடனாகிய பாம்பு நடுங்கும்படி உலவும். தென் தமிழின் சுவை உணர்ந்த கிளிகள் மனம் உருகிப் பொழியும் துதி ஓசை நிறைந்தது; கொங் கணர், வங்கர், கலிங்கர், தெலுங்கர் முதலியோர் பொற்குவியல் களைக் கொண்டு குவிப்பர்; பங்கமில்லாத செந்தில்பதியில் வந்த

முருகப் பெருமானின் தோள்வரிசை போன்று ஒளிரும் தன்மை யுடையது எனச் சந்தன மலையை வருணிக்கின்றார்.

நதி – தாமிரபரணி

அகத்திய முனிவரின் கரகத்திலிருந்து தோன்றிய பெருமை உடையது; வண்ணப்பாடல் போல் ஒலி எழுப்பி ஓடும் நீர்ப் பெருக்கை உடையது; யானைக் கொம்புகளை நீர் அலைகள் அடித்து வரும் சிறப்புடையது; சிவபெருமானின் சடையில் வரும் ஆறு; மன்மதனின் குடையாகிய சந்திரன் போன்ற பெண்கள் கணவரோடு குலாவும் சிறப்புடையது; அனைத்து நதிகளிலும் மேலானது என்றெல்லாம் முருகப் பெருமானின் ஆறு வருணிக்கப் படுகிறது.

யானை-திருஞானக் களிறு

தீயவர்கள் வேரறும் வண்ணம் எற்றும் சிறப்புடையது; இறப்பை அகற்றியவர் முதல் வீரச் செயல்களையுடையவர் வரையுள்ளோருடைய செயல்களுக்குத் துணை நிற்பது; இடி போல ஒலி எழுப்பும் தன்மையது; கயிலை மலை இறைவனொடு ஒப்பது; வள்ளியம்மையை அச்சுறுத்தி முருகனை மணக்க இசைவித்தது; அன்பிற்குரியது; காத அளவு மணம் வீசும் மதம் உடையது; கண்டோர் வினைகளை விரட்டுவது; மாயை நெருங் காதவாறு தடுப்பது என முருகனின் ஞானக் களிற்றைப் போற்றுகின்றார்.

ஊர்தி-மயில்

கயிலையையும் மேருவில்லையுமுடைய சிவனைப்போல் நடனமிடுவது; திருமால் போன்ற நீலக் கழுத்தை உடையது; பறவையினம் முழுதும் நாணும்படியான தோகையிடமுள்ள அழகிய கண்களைக் கொண்டது. முருகப் பெருமானை வேண்டுவோரின் துணையாகத் திகழ்வது. சூரனோடு முருகன் போரிட்டபோது தாங்கிய பெருமையுடையது; ஆதிசேடன் அலறும்படியான ஓசையுடையது என்றெல்லாம் மயிலின் சிறப்பு கூறப்படுகின்றது.

படை-வேற்படை

மலர் இட்டு வணங்குவாரின் உயிர் போன்றது; வஞ்சகனான சூரனை வென்ற வெற்றியுடையது; கிணற்றால் நீர் வருமாறு துளைக்கும் சிறப்புடையது; கடவுட் பூசையை விட்டவர் காணாத சிறப்புடையது; வள்ளி, தெய்வயானையின் கண்களைப்

போன்றது; காட்டுப்பாதையிலும் வழித்துணை ஆவது; முருகனின் கடப்பமாலையோடு அணைந்த வெற்றிவேல் எனப் புகழ்கின்றார்.

தாழ்-கடப்பமாலை

உயிர்கள் பலவாக உள்ளமைபோன்று பல தாதுக்களை உடையது; அளவற்ற வண்டுகள் மொய்க்கும் தேன் குறையாதது; திருவடிகளிலும் மார்பிலும் தோள்களிலும் நீங்காதிருப்பது; தெய்வயானையின் மார்புகளில் தழுவுவது; பெண்கள் விரும்பும் தன்மையது; இந்திரன், பிரம்மா, சிவன் முதலியோர் அணிந்த மாலைகள் நாணும்படியானது; சாபம் காரணமாகக் குதிரை ஆகிய பாண்டியன் மகள் மனித முகம் பெற்று வாழச் செய்தது எனக் கடப்பமாலையைப் போற்றுகின்றார்.

கொடி-சேவற்கொடி

ஆரணம், ஆகமங்கள் மீது குற்றமற்ற புகழ் தோயும்படி நின்றது; சூரனை வென்ற முருகப் பெருமானின் புயங்களில் தவழ்வது; வேடர்களால் வளர்க்கப் பெறுவது; உலக உயிர்களைக் காலையில் கூவி எழுப்புவது; சூரியனை ஆகாயத்தில் உலாவரச் செய்வது; ஆதிசேடன் தலையில் ஊறு செய்வது எனச் சேவல் கொடி சிறப்பிக்கப்படுகிறது.

ஆணை-திருவருள் ஆணை

தேவர்களும் முனிவர்களும் சீர்நிலை தவறாது அருள் செய்வதும், உலகம் தீமையடையாமல் கடப்பதும், ஊழ் வலியைத் தீயில் விழுந்த புழுப்போன்று அழிப்பதும், சங்கப்புலவர்களின் ஐயம் தீர்த்ததும், மூடப்பட்ட, முடிந்த உட்பொருள் எனக் கூற முடியாத பெருமையுடையதும் ஆனது மோனிகளால் வணங்கப் பெறும் திருச்செந்தூர்க் குருபரனாகிய முருகப் பெருமானின் திருவருள் ஆணை என்கிறார்.

நூலின் இறுதியில் நூற்பயனைக் கூறும் வெண்பா இடம் பெறுகின்றது.

அரசனின் பத்து அங்கங்களைப் புகழும் நோக்கில் அமைந்த தசாங்க இலக்கிய வகை பக்தி இலக்கியக் காலத்தில் இறைவனின் பத்து அங்கங்களைப் புகழவும் பயன்படுத்தப்பட்டமையை அறியலாம். இம்மரபைப் பின்பற்றிப் பல சிற்றிலக்கிய வகைகளைப் படைத்த தண்டபாணி சுவாமிகளும் தசாங்க வகுப்பு என்ற இலக்கிய வகையை முருகப் பெருமானைப் புகழ்வதற்குரிய உத்திகளுள் ஒன்றாகக் கொண்டு படைத்துள்ளார். இதனால் சுவாமிகளின் சமயத் தொண்டும் இலக்கியத் தொண்டும் புலனாகின்றன.

சுவாமிகளின் தவநிலை

வீ. உண்ணாமலை

பேரின்ப வாழ்வை அடையச் செய்யும் முயற்சியே தவமாகும். இத்தவம் பேராற்றலும், பெருமையும் வாய்ந்தது. தவம் செய்பவர்கள் ஐம்புல ஆசைகளைத் துறந்து இருவினை மயக்கமொழிந்து இருப்பர். மெய்யுணர்வு பெற்றவர்கட்கு ஆத்ம ஞானம் வந்தெய்தி விடுகின்றது. தவம் இருவகைப்படும். 1. தம்மளவில் தவத்தால் உயர்நிலை எய்துதல், 2. உலக நலனுக்காகத் தவம் செய்தல் என்பவையாகும்.

தம்மளவில் தவத்தால் உயர்நிலை எய்தியவர்களில் சீதை குறிப்பிடத் தக்கவள். அரக்கர்களும் தவமிருந்தனர். சீதையும் தவமிருந்தாள். சீதையின் அமைதியான தவமே அரக்கர்களை வீழ்த்தியது கம்பர், "தவம் செய்த தவமால்" என்று சீதையின் அமைதியான தவத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். இலங்கை மாநகரை வலம் வந்த அனுமன் இராவணன் இயற்றிய தவமே இலங்கை மாநகரத்தின் பெருமைக்குக் காரணமாகும் என்று வியந்து போனான். இராவணனின் தவம் தன்னளவில் உயர்நிலை எய்திய போதிலும் தீயவழியில் மனதை ஈடுபடச் செய்ததால் தனக்கும், சுற்றத்துக்கும், நாட்டுக்கும் அழிவைத்தேடி இராவணனைப் போலவே சூரபதுமனும் பேராற்றல், படைபலம் கொண்டிருந்தான். இவர்கள் தன்னளவில் தவத்தால் உயர்ந்தும் உலக நன்மைக்காகச் செயல்படாமையால் அழிந்தனர்.

தம்மளவில் தவத்தை மேற்கொண்ட விசுவாமித்திரமுனிவர் மன்னராக இருந்த போது பேராண்மை, படைபலம் கொண்டிருந்தார். இவை அனைத்தும் வசிட்டர் முன் சிதறிப் போனது விசுவாமித்திரர் தவத்தின் பெருமையையுணர்ந்து தவ நெறியை மேற்கொண்டார். திருமூலநாயனார் தவத்தின் வலிமையால் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றார்.

தாயுமானவர் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால் வேறொன்று மறியேன் பராபரமே என்றார்.

அப்பர் தம் தவ வலிமையால் உண்ணா நோன்பிருந்து பழையாறை வடதளியிலிருந்து சிவலிங்கத்தைச் சமணர்களிட மிருந்து மீட்டு வெற்றி எய்தினார். இதுவே தமிழகத்தில் சைவ மேம்பாட்டுக்கான முதல் சத்தியாக்கிரகமாகும். முனிவரொருவர் திருவலஞ்சுழியில் செய்த தவத்தால், உயிர்த்தியாகத்தால் காவிரி ஆற்றில் நீரை ஒழுங்குற ஓடச் செய்தார் என்பது புராணம். பெருந்தேவமுனிவர் பிருங்கி உமையம்மையைவிடுத்துச் சிவனை மட்டுமே வணங்கும் கோட்பாடுடையவர். உமையொரு பாகனாக விளங்கிய சிவனை வழிபடத் தாம் வண்டு உருவில் சென்று, உமைக்கும் சிவனுக்கும் நடுவே குடைந்து கொண்டு வழிபட்டார். பிறகு, உமையம்மையின் அருளுக்குப் பாத்திர மானார் என்பதும் புராணம். புளிய மரத்தடியில் இருந்து புரிந்த தவத்தின் புலப்பாடே நம்மாழ்வாரின் திருவாய்மொழி.

புத்தபிரானது தவம் ஞானத்தைக் கண்டடையச் செய்தது. சமணர்கள் செய்த தவமே தம்மளவில் அவர்களை மேம் பாடடையச் செய்தது.

தன்மையடிப்படையில் உயரிய நோக்கங்களுக்காகச் செய்யும் தவம் வாழ்வில் வெற்றி, பொதுநன்மை ஆகியவைக் கிட்டச் செய்கின்றது. தீய நோக்கங்களுக்காகச் செய்யப்படும் தவம் அழிவைத் தரும் என்பது உறுதி. காந்தி, விநோபா செய்த உண்ணாவிரத தவத்தால் நாடுநலம் பெற்றது. இவ்வாறான தவயோகப் பின்புலத்துடன் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தவ வாழ்க்கை வரலாற்றை இனிக் காண்போம்.

''லங்கோடு, கௌபீனம், முழுநீறு, தண்டம், பாதுகை அக்க மாலை பூண்டு விரிந்த சிகையுடன் இருந்ததால் இப்பெயர் பெற்றார் இஃதன்றி முருகன் உபாசனையையும் வேல் வழி பாட்டினையையும் மேற்கொண்டிருந்தலால் முருகதாசர் என்றும் சந்தப்பாடலான திருப்புகழைப் பாடுவதில் மிக நாட்டம் பெற்றிருந்ததால் திருப்புகழ்ச் சுவாமிகள் என்றும், வண்ணம் என்ற சந்தப் பெரும் பாலியற்றிய அருமையால் வண்ணச்சரபம் என்றும் போற்றப்படும் சிறப்பும்

பெற்றவர்'' (ச. சிவகாமி, தமிழிலக்கியக் கோட்பாடுகள், உ. த. நி., சென்னை, 1981, பக் 251-252).

மண்ணகத்தே முத்தியின்பஞ் சிந்திக்கக் கருதுபவர்கள் உரிய காலத்தில் தவம் மேற்கொள்வது நல்லது. இப்போது தாம் இளையவராயிருப்பதால் பிற்காலத்தே தவஞ் செய்து கொள்ளலாமென்று தள்ளிப்போடாமல் கருமமே கண்ணாயின ராகப் பெருந்தவத்தில் ஈடுபட்டவரே உலக மகா முனிவராக, உத்தமராகப் - போற்றப்படுகின்றார். இதனை நீதிநெறி விளக்கத்தில் குமரகுருபரர்,

'இளைய முதுதவ மாற்றுது நோற்றென்(று)
உளைவின்று கண்பாடு மூழே - பிளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேற் காண்பாரும்
தாழாமே நோற்பார் தவம்'

(பிரபந்தத்திரட்டு, நீதிநெறி விளக்கம், 90)

எனத் தரும் விளக்கம் காண்க.

மேலே கூறியவாறு எட்டரை வயதில் விநாயக மந்திரம், இலக்குமி மந்திரம், முருகக்கடவுளுக்குரிய ஆறெழுத்து மந்திரத்தையும் பூசிக்கும் முறையும், செபிக்கும் இயல்பையும் கற்றுணர்ந்தார். சரியை முதலிய தவங்களே தத்துவ ஞானத்தைக் காட்டும் என்பதனை, சிவஞானபோதம், 'விருவினை யொப்பி லிறப்பி றவத்தான் மருவுவனாம் ஞானத்தை வந்து, எனச் சுட்டுகின்றது.

சிறுவயதிலேயே இதனைச் சுவாமிகள் நன்குணர்ந்திருந்தார். சுவாமிகள் சுடுகாட்டில் பள்ளம் தோண்டித் தவமிருந்தமையால் அவரது தவ வலிமையைக் கண்டு திருமுருகனே இவர் முன் தோன்றி சடாட்சர மந்திரத்தை இவரது நாவில் எழுதினான் என்பர். அதன் பயனாகத் தலந்தோறும் சென்று பாடி ஒரு லட்சம் பாடல்கள் இயற்றினார் அவ்வப்போது முருகனிடம் கொண்ட ஊடலால் அனலிலும், புனலிலும் போட்டவை போக, 50,000 பாடல்கள் எழுதியுள்ளார். இவரது தவ வலிமை யால் முருகப் பெருமான் இவரது எழுத்தாணிக்கும் சர்வ சாதாரணி எனப் பெயரிட்டார். நீ பாடுவதெல்லாம் நான் பாடியவையே என்றும் கூறினாராம். திருமலையில் வீழ்ந்த

காலை வள்ளிநாயகி இவருக்குத் திருநீறிட்டு ஊக்குவித் தருளினார். வேலவன் வேண்டுதலால் செந்திற் பிரபந்தங்கள் முதலிய பல நூல்களைப் பாடினார்.

உண்மையான தவம் யாதெனில் மனதை ஒருநிலைப் படுத்துதல் (அ) ஒருமுகப்படுத்துதல். பகிரதன் தன் முன்னோர் களின் பாவந்தீர்க்கத் தவம் செய்து கங்கையை மண்ணுலகிற்குக் கொண்டு வந்தான்.

'ஒன்றி நின்று நற்றவம் செய்து ஊழி ஊழி தோறு எலாம்
நின்று நின்று அவன் கணங்கள் உன்னி உள்ளம் தூயராய்
சென்று சென்று தேவ தேவர் உம்பர் உம்பராய் அன்றி
எங்கள் செங்கண் மாலை யாவர் காண வல்லரே'

(பழனிக்கலம்பகம், 7)

என்னும் செய்யுள் மனமானது ஒன்றுபட்டு நிற்கத்தக்கதல்ல. தவத்தைப் பற்பல பிறவிகளிலே தொடர்ந்து பல ஊழிக்காலங் களாகச் செய்து அப்பெருமானுடைய திருக்கணங்களை, இடை விடாமல் ஈடுபட்டுத் தியானித்து, உள்ளம் தூய்மையுடையவர் களாகி, முத்தி நெறியில், கேட்டல், சிந்தித்தல் முதலிய மேன் மேற்படிகளிலே ஏறிப்போய் பரபக்தி, பரஞானம், பரமபக்தி என்னும் இவற்றையெல்லாம் அடையப் பெற்றவர்களாம். ஆனால் தேவதேவர்களாக இருந்தாலும் எங்களுடைய செங்கண் மாலை எவரும் காண வல்லவர்கள் அல்லர் என்கின்றது.

உயர்ந்த மாதவம் யாதென்று தேடி அலைய வேண்டாம். உணர்ந்த உண்மையைக் கூறுகின்றேன். உயிர்கட்கு இடர் செய்யாத விரதத்தை மேற்கொள்வீர். ஞானத்துடன் கல்வி நலம் பெற்று முருகன் வாழும் பழனிமலை அடிவாரத்திற்கும் சென்று தங்கி தியானம், செபம், பூசை செய்து, அவ்விறைவன் மீது செந்தமிழ்ப் பாடல்களைச் சொல்வதேயாகும் என்று குறிப்பிடும் சுவாமிகளின் கருத்தை,

'உயர்ந்த மாதவம் யாதென்று அலைய வேண்டாம்
உலகத்தீர் உணர்ந்த உண்மை உரைப்பக் கேண்மோ?
நயந்துயிர்கட்கு இடர் செய்யா விரக்தியராகி
ஞானமொடு கல்வி நலம் நணுகப் பெற்று

வயந்தழைக்கும் திருக்கைவேற் சேந்தன் வாழும்
மலைப்பழனி அடிவாரம் வந்து தங்கிப்
பயந்தவிகழும் தியானம் செபம் பூசை செய்து
பைந்தமிழாற் பல பாடல் பகர்வ தொன்றே'[6]
(தண்டபாணி சுவாமிகள் கீர்த்தனை, 22)

என்னும் செய்யுள்வழி காணலாம்.

மேலும் சுவாமிகள் தமது தவ வலிமையால் இறைவன் தரிசனம் கிட்ட வேண்டும் என்கிறார். தனது தவ வலிமையால் எதை எதைப் பெற வேண்டும் என்னும் அவரது வேட்கையைக் காணும் போது வறியோர்க்குக் கொடுக்க வேண்டும். மன்மதனை, விதியை, எமனை செயிக்க வேண்டும். தவம் செய்து போற்ற வேண்டும். கொல்லா விரதத்தைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பதனை,

"வாடிய பேரெல்லாம் மகிழ்ந்திடக் கொடுக்கவும்
மன்மதனை விதியை மறலியைச் செயிக்கவும்
கூடிய மட்டும் தவம் செய்து போற்றவும்
கொல்லா விரதமே குறி என்று பிடிக்கவும்
என்றைக்குத் தருவாயோ - நின் தரிசனம்"
(தண்ட. திருவந்தாதி)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமிகள் தமது தவத்தைப் பற்றி மட்டுமே புகழ்ந்து கூறாமல் அருளாளர்களின் அரிய தவத்தையும் புகழ்ந்து கூறியுள்ளதை,

"கோட்டூர் சைவன் முகங் கோணாமல் கூடத்தில்
ஈட்டு தென்னை ஓலை இலை கொணர்ந்து-போட்டெனக்குச்
சோறும் இலைக்கறியும் சுண்டைக்காயும் பருப்புச்
சாறுமிட்டுப் பெற்றான் தவம்"

என்னும் செய்யுளால் தெளியலாம்.

தண்டபாணி சுவாமிகள் பாடிய புலவர் புராணத்தில் திருச்சிற்றம்பல நாடிகள், சோலை சுவாமிகள், கவிராச பண்டிதர், சடகோபர், திருநாவுக்கரசர், குருநமசிவாயர், ஔவையார் சருக்கங்களில் தவத்தால் உயர்வு பெற்றமை, கல்வியும் தவமும் நன்கு பெற்றிருந்தமையும், தவத்தின் பெருமை

யையும், இறைவனிடம் தவப்பயன் வேண்டியமையும் முன்னர் செய்த தவத்தின் பெருமையையும் விளக்கிப் பாடியுள்ளார்.

சுவாமிகள் தமது தவத்தை மட்டுமே புகழ்ந்து கொள்ளாமல் பிற அருளாளர்களின் தவத்தின் மகிமையையும் புகழ்ந்து கூறுவதைக் காணலாம்.

சுவாமிகளின் கொள்கைப்படி எப்போதும் தொடர்ந்து தவம் செய்யும் பொருட்டு திருச்செந்திற்படிக்குச் செல்கின்றார். இறைவனைத் தஞ்சமடைந்து தளர்ச்சியில்லாமல் தவம் புரியும் வலிமைப் பெற வேண்டுவதை,

''சலியா தவஞ் செயும் பொல்லேன் அனைவரும் சாற்று புகழ்
மலியாதவனும் தொழுந்திருச் செந்திலில் வந்தடைந்தேன்
மெலியா தவத்தந்து காத்தருள்வாய்'' (தண்ட. திருவந்தாதி)

என்னும் செய்யுளடிகள் கூறுகின்றன.

விரதங்களிலேயே சிறந்தது கொல்லாமை விரதமாகும். வேத காலத்திலேயே இவ்விரதம் கடைபிடிக்கப்படாமல் இருந்ததை,

'ஒருகால் இந்திரனுக்கு நூறு எருமைகள் வெட்டிப் பலியாக இடப்பட்டமையும், மற்றொருகால் முந்நூறு எருமைகள் வெட்டி அவனுக்குப் படைக்கப்பட்டமையும் இருக்கு வேதம் ஆறாம் மண்டிலத்துப் பதினேழாம் பதிகத்தில் ஐந்தாம் மண்டிலத்து இருபத்தொன்பதாம் பதிகத்திலும் முறையே விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன'

(மறைமலையடிகள், தமிழர் மதம், பக். 272)

என்னும் பகுதி விளக்குகின்றது.

சுவாமிகளின் வாழ்வின் முக்கிய லட்சியம் பசுவதைத் தடுப்புக் கொள்கையாகும். இவர் ஆங்கிலேயராட்சியை எதிர்த்து ஆங்கிலியர் அந்தாதி பாடவும் இதுவே காரணமாகும். பசுவதை இம் மண்ணில் முற்றிலும் தடுக்கப்படும் நிலையிலேயே தான் முக்தி பெற விரும்பியதை,

'கோ வதைக்கும் பொல்லாக் குடிகேடு காண்பதன் முன்
சாவதற்ற முத்திபதம் தந்தாலும் – மேவற்(கு)

இசையேன் காண என்னையின்றும் ஈடழிக்க வேண்டாம்
திசைசேர் பழனி யரசே (தண்ட., பழனித்திருவாயிரம்)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

சிற்றுயிர்கள் ஒன்றை ஒன்று தின்பதைக் கண்டு மனம் நோவதைச் சுவாமிகள் தமது செய்யுளில் கூறுவதை,

'சிறையுடைய பறவை யொரு தவணையைப் பற்றினும்
சிந்தை நொந் தேங்குவேன் முன்
குறைமதிச் சிறுவர் பலர் உயிர் வதைத் துன்கின்ற
கொடுமையை விளைப்பதென்னோ?'
(தண்ட., திருத்தணிகைப்பதிகம்)

எனக் காணலாம்.

தொடக்கக் காலத்தில் பசுக்களுக்குக் கொம்பில்லை. இடைக் காலத்தில் திருவருள் இயக்கத்தால் அவைகள் நந்தி தேவரையும், காமதேனுவையும் கருதித் தவம் செய்தன. விட்டுனுபுவனத்துப் பசுக்கள் வருந்துமாறு தவச் சூடு தாக்கியது. அப்பசுக்கள் மண்ணுலக பசுக்களின் தவம் குறித்து வினவ கொம்பு பெற விழைந்தோம் என்றன. அது கேட்ட நந்திதேவர் சிவனை நோக்கித் தவம் புரியுமாறு கூற அனைத்துப் பசுக்களும் பம்பா நதிக் கரையிலுள்ள வன்னிவனத்தில் தவம் புரிந்தன. இவ்வகையில் பசுக்கள் திருவாமாத்தூரில் வழிபட்டதை அறிய முடிகின்றது. திருப்புகலூரில் இவர் இறைவனைப் பாடி அருள் வழங்காமையால் நிட்டையில் பசுக்கட்குக் கொம்பு தந்த சிறப்பினைக் கூறி, பசுக்கட்குக் கொம்பு பெறாதவரை இவ்வூரின் எல்லை தாண்டுவதில்லை என்று கடுந்தவம் செய்தாராம்.

ஆவதைத் தடுப்பு. அதற்குக் காரணமான அன்னியராட்சியினை அகற்றக் கோரியதை சுவாமிகளின் படைப்புகளில் காணலாம். இதை,

''தசை விருப்போர் சிலர் பசுவின் கன்றையும் தன்கைத்
தடியினாற் கொலை செய்து சமைத்துண்டுவக்கலாமோ
ஆனைந்தம் வதைத் துண்டடங்கங்கரிக்க அஞ்சாத
ஈனர் கொடுங்கோன் இகழ்ச்சி இனிச் சகிக்க முடியாதே''
(தண்ட, கீர்த்தனைப் பாடல்கள் திரட்டு)

என்பன போன்ற கருத்துக்களை ஞாயிறு ஆயிரம், திருத்தணிகை முருகன் ஆயிரம், சடகோபர் சதகத்தந்தாதி, திருமால் ஆயிரம் ஆகிய நூல்களில் காணலாம்.

சுவாமிகள் எறும்பு முதலிய சிற்றுயிர்களை துன்புறுத்துவது கொலைப் பாவமென்றே கருதினார். சுவாமிகளின் திடமான கருத்து யாதெனில் சிற்றுயிர்களை வதைப்பவர்களும், புலாலுண் பவர்களும் இறுதியில் கொடி பூதப்பிசாசு பேய் நிலையை அடைவார்களென்று சைவாகம நூல்கள் கூறுகின்றன. அவை பொய்யாகா என்று 'திருப்பா' எனும் திவ்ய நூலிலே சுவாமிகள் அறுதியிட்டு உறுதி கூறுகிறார்கள்' என்னும் பகுதி எடுத்துரைக்கிறது.

திருவொற்றியூர் சுவாமிகள் சென்றகாலை, சிவன் கோயில் வடபுறமுள்ள காளிக்குக் கொலைப் பூசை நடப்பதறிந்து அதை முற்றிலும் நீக்க வேண்டுமென்று கருதினார். இச் செயலைக் கண்டித்து,

'ஒற்றியூர்க் காளீ உனக்கேனோ ஊன் விருப்பம்
வெற்றி மழுவோன் விருப்பு வேண்டாமோ – சிற்றுயிரைக்
கொல்வார்க்கும் இன்பம் கொடாதான் அவன்கண்டாய்
நல்வார்த்தை சொன்னேன் இந்நாள்'

(தண்ட., கீர்த்தனைப் பாடல்கள் திரட்டு)

என்கின்றார்.

விழுப்புரத்தை அடுத்த கோலியனூரில் மாரியம்மன்கோயிலில் நடந்த கொலைச் செயலைக் கண்டித்து மாரிக்கு அறிவுரையும் கூறுவதனை,

'கோலியனூர் மாரீ! குணங்கெட்ட சண்டாளீ!
நீலி!உனக் கோர்சொல் நிகழ்த்தக்கேள் – தாலி
அறுத்தமுண்டை யானாலும் ஆடுதின்ன லாமோ?
வெறுத்துவிட்டா மிக நன்று''

(தண்ட., கீர்த்தனைப் பாடல்கள் திரட்டு)

என்னும் செய்யுளால் உணரலாம்.

துமிசம் பட்டியில் மகனின் வயிற்றுவலி தீர சந்நியாசியப் பனுக்கு ஆட்டினைப் பலியிடத் துணிந்த ஒருவனின் அறியாமை

யைப் போக்க ஆட்டை விட்டுவிடுமாறும் மகனைக் காப்பாற்று வதாகவும் கூறி தம் பூஜையில் வைத்திருந்த திருநீறு, தீர்த்தம் இட்டுப் பிரம்பால் தடவி நோய் போக்கினார். இவ்வாறு கொல்லாமை விரதத்தைச் சுவாமிகள் தமது வாழ்வில் கடுமை யாகக் கடைப்பிடித்திருந்ததைக் காணலாம்.

ஆய்வு முடிவுகள்

* பேராற்றலும், பெருமையும் வாய்ந்து பேரின்ப வாழ் வினைத் தரவல்லது தவம். இத்தவம் 1. தம்மளவில் தவத்தால் உயர்நிலை எய்துதல், 2. உலக நலனுக்காகத் தவம் செய்தல் என இருவகைப்படும்.

* தம்மளவில் தவத்தால் உயர்ந்தவர்களில் குறிப்பிடத்தக்க வள் சீதை அமைதியான தவமே பகையை வெல்லும் ஆற்றல் பெற்றதாகிறது. திருமூலர், தாயுமானவர், அப்பர், பிருங்கி முனிவர், நம்மாழ்வார், புத்தர் ஆகிய அருளாளர்கள் தம்மளவில் தவ வாழ்வில் உயர்நிலை யெய்தி உலக நன்மைக்காக வாழ்ந்து உயர்நிலை அடைந்தனர்.

* இராவணன், சூரபதுமன் தம்மளவில் தவத்தால் உயர்ந்த போதும் தவத்தை, அதன் பயனை தீய வழியில் புகுத்தி அழிந்தனர்.

* இவ் உயரிய தவத்தை இளமையிலேயே செய்து உய்ய வேண்டும். சரியை முதலிய தவங்களே ஒருவருக்குத் தத்துவ ஞானத்தை நல்கும்.

* வண்ணச்சரபம் தமது தவ வலிமையினாலேயே 50,000 பாடல்களை எழுதினார்.

* உண்மையான தவம் யாதெனில் மனதை ஒருமுகப்படுத்து தலேயாகும்.

* உயர்ந்த மாதவம் உயிர்கட்கு இடையூறு செய்யாமை, ஞானக் கல்வி பெறுதல், பழனிமலையடிவாரம் சென்று தங்கி, தியானம், செபம் பூசை செய்து செந்தமிழ்ப் பாடல்களால் இறைவனை வணங்குதலேயாகும்.

* தவயோகிகள் தமது தவத்தை மட்டுமே புகழ்ந்து கொள்ளாமல் பிற தவயோகிகளையும் புகழ்தல் வேண்டும்.

* தவத்தின் இயல்பு தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்தல், பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமையாகும். இத்தவமும் உண்மையான ஈடுபாடும் மனவுறுதியும் உடையவர்களிடமே நிலைத்து நிற்கும்.

* கொல்லாமை விரதம் வேத காலத்தில் இல்லாமல் இருந்தது.

* சுவாமிகள் பசு வதைத்தடுப்பு, பிற உயிர்கட்குத் தீங்கு செய்யாமை விரதத்தைப் பெரிதும் கடைபிடித்தார். என்னும் கருத்துக்கள் ஆய்வின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

குறிப்பு: – தண்ட – தண்டபாணி சுவாமிகள்

வண்ணச்சரபரும் வள்ளலாரும்

தவத்திரு ஊரன் அடிகளார்

வண்ணச்சரபரும் வள்ளலாரும் சமகாலத்தவர்கள். ஒருவரையொருவர் நேரிற் கண்டு பழகியவர்கள். வள்ளலார் காலம் 5—10—1823 - 30—1—1874 வண்ணச்சரபர் காலம் 28—11—1839 - 5—7—1898 வண்ணச்சரபர் வள்ளலாரைவிடப் 16 ஆண்டுகள் இளையவர். வள்ளலார் பிறந்து 16 ஆண்டுகளுக்குப் பின் வண்ணச்சரபர் பிறந்தார். வள்ளலார் சித்தி பெற்று 24 ஆண்டுகளுக்குப் பின் வண்ணச்சரபர் முத்தி பெற்றார். வள்ளலார் சித்தி பெறும்போது வண்ணச்சரபர்க்கு வயது 35. வண்ணச்சரபர் முத்தி பெற்ற நூற்றாண்டுவிழா இவ்வாண்டு கொண்டாடப் பெறுகிறது. வள்ளலார் சித்தி பெற்று இப்போது 124 ஆண்டுகள் ஆகின்றன.

வண்ணச்சரபம் வள்ளலார் சந்திப்பு

வண்ணச்சரபமும் வள்ளற்பெருமானும் சந்தித்ததற்கு அகச்சான்றுகள் இரண்டும் புறச்சான்றுகள் இரண்டும் ஆக நான்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன.

அகச் சான்றுகள்:

1. புலவர் புராணம் - தண்டபாணி சுவாமிகள் பாடியது.
2. குருபர தத்துவம் - தண்டபாணி சுவாமிகள் பாடிய சுயசரிதை.

புறச் சான்றுகள்:

1. தண்டபாணி விஜயம் – செந்தினாயக சுவாமிகள் பாடியது, தண்டபாணி சுவாமிகளின் சரிதை.
2. இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள் – ச. மு. கந்தசாமி பிள்ளை எழுதியது உரைநடை.

அகச்சான்றுகள் இரண்டும் தண்டபாணி சுவாமிகளே கூறுவன. புறச்சான்றுகளில் ஒன்று அவரது மகனாரும் மாணாக்கருமான செந்திநாயக சுவாமிகள் கூறுவது. மற்றொரு புறச் சான்று வள்ளற்பெருமானுடன் பழகியவர்களுள் ஒருவரும் மாணாக்கர் என்று சொல்லத் தக்கவருமான சமரச பஜனை ச. மு. கந்தசாமி பிள்ளை கூறுவது. இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

புலவர் புராணம்

புலவர் புராணம் ஒரு புதுமை. தண்டபாணி சுவாமிகள் நூல்களுள் இதுவே பெரியது. திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார்க்குப் பின்பு புலவர்களுக்குப் புராணம் பாடியவர் வண்ணச்சரபரே. புலவர் புராணம் என்பதே புதிய உத்தி. இலக்கிய வரலாறுகள் இந்நாளில் மலிந்துவிட்டன; அந்நாளில் இல்லை. புலவர் வரலாறுகளையெல்லாம் தொகுத்து வெளியிட வேண்டும் என்று வண்ணச்சரபர்க்குத் தோன்றிய எண்ணமே எண்ணி எண்ணி வியத்தற்குரியது, பாராட்டற்குரியது.

புலவர் புராணம் அகத்தியரில் தொடங்கி வள்ளலாருடன் நிறைவுறுகிறது. 72 சருக்கங்கள்; 3003 செய்யுள்கள். 72 ஆவதாகிய இறுதிச் சருக்கம் கண்கண்ட புலவர் சருக்கம். தமது சமகாலப் புலவர்களை, தாம் கண்ணாற் கண்ட புலவர்களை இதனுட் கூறுகின்றார்.

தமது முதற்குருவாகிய சீதாராமர், தூத்துக்குடி முத்துசாமி, வளவனூர் சண்முக முனிவர், கூறைநாடு தத்துவராயர், தில்லை சுப்பராயர், பாண்டியப் புலவன், காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், ஆயுள்வேத பாஸ்கரப் புலவர், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், திரிசிரபுரம் மகாவித்து வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மாம்பழக் கவிச்சிங்க நாவலர், வடலூர், வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் ஆகிய பன்னிருவர் கண்கண்ட புலவர்களாகக் கூறப்பெறுகின்றனர். இச்சருக்கத்தின் 22 பாடல்களுள் 10 பாடல்கள் வள்ளலாரைப் பற்றிக் கூறுவன. முதல் 11 பாடல்களுள் 11 புலவர்கள், 12 முதல் 21 முடிய 10 பாடல்களில் வள்ளலார். 22-ஆம் பாட்டுவேறு.

வண்ணச்சரபர் தம் கண்கண்ட புலவர்கள் பலருள் வள்ளலாரையே மிகவும் பாராட்டுகின்றார். மற்றவர்களை ஒவ்வொரு பாடலாலும் மூவரை ஒரு பாடலாலும் கூறுபவர் வள்ளலாரை 10 பாடல்களாற் கூறுகின்றார்.

''அவனுடன் மூன்று காலம் அளவளாய்ப் பேசியுள்ளேன்'' என்பதனால் (5) வண்ணச்சரபர் வள்ளலாரை மூன்று முறை சந்தித்துள்ளார் என்பது தெரிகிறது. ஒருமுறை கடலூரிற் கண்டதைக் குருபரதத்துவமும் தண்டபாணி விஜயமும் கூறு கின்றன. ஒருமுறை வடலூரிற் கண்டதை ச. மு. க. எழுதிய சரித்திரக் குறிப்புகள் கூறுகிறது. இன்னொரு முறை சந்தித்தது எங்கென்பது தெரியவில்லை.

''அவனுடன் மூன்று காலம் அளவளாய்ப் பேசியுள்ளேன்'' என்பதற்கு அடுத்த அடியில் ''எவ்வளவும் பேதமின்றி என்கருத்து இசைந்தே சொன்னான்'' என்பதால் இருவரின் சந்திப்புச் சுமுக மாக இருந்ததென்பதும், வண்ணச்சரபர் கருத்திற்கிசைந்தே வள்ளலார் வாய்மொழி இருந்ததென்பதும் தெரிகிறது. மூன்றாவது அடியில் ''தவறுதல் அடையக் கேட்டுத் தளர்ச்சி யோடு ஐயமுற்றேன்'' என்பதால் வள்ளற்பெருமானது சித்திக்குப்பின் வண்ணச்சரபர் இதைப் பாடுகிறார் என்பதும் வள்ளலார் உடம்போடு சித்தி பெற்றதைக் குறித்து இவர் தளர் கிறார் என்பதும் தெரிகிறது.

1. உடம்போடே சித்தி பெறுதல்
2. செத்தாரை எழுப்புதல்
3. ஜீவகாருண்யம்

ஆகிய மூன்று செய்திகளை வண்ணச்சரபர் மேற்பாடல்களில் ஒரு முறைக்கிருமுறையாக விமர்சிக்கிறார்.

4 நான்காவதாக, வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவரே என்றும் கூறுகிறார்.

சைவ சமய குரவர்கள் (சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர்) நால்வரும் உடம்பைப் பிணமாக விடாது உடம் போடே முத்தி பெற்றவர்கள், வள்ளலாரும் உடம்போடே சித்தி பெற்றார். இவர்கள் இவ்வாறு பேறு பெற்றதைக் குறித்துப் பெருமையுற வேண்டும். ஆனால் வண்ணச்சரபரோ வள்ளலார்

சித்தியைக் குறித்து வருந்துகிறார். மிகவும் வருந்துகிறார். இங்கெடுத்துக் காட்டிய புலவர் புராணப் பாடல்களிலும், குரு பரதத்துவ நூலிலும், வள்ளலாரைப் பற்றிப் பாடிய அனுபவப் பதிகம் வினாப்பதிகம் என்னும் இருபதிகங்களிலும், வேறு சில பல இடங்களிலும் தனிப்பாடல்களிலும் இது விஷயமாக இவர் கூறுவதையெல்லாம் தொகுத்து நோக்கின் வள்ளலார் உருவோடு சித்தி பெற்றதைப் பற்றி இவர் அளவுக்கு அதிகமாக அலட்டிக் கொள்கிறாரோ? வருந்துகிறாரோ? என்று கருதத் தோன்றுகிறது.

வள்ளலார் மீண்டும் அந்த உடம்போடு வர வேண்டும் என்று வண்ணச்சரபர் விரும்புகிறார். வருவார் என்று பாடுகிறார். வருவார் என்று இறைவன் உரைத்ததாகப் பாடுகிறார். ''உடம் போடு சித்திபெற்ற அறையைவிட்டு ஏன் இன்னும் எழுந்திடப் புரியவில்லை?'' என்று இறைவனையே வினவுகிறார். அதுவே வினாப்பதிகம்.

இவற்றையெல்லாம் இங்கு அதிகம் ஆராய வேண்டாம், ஆராய்வதற்கு இது இடமன்று என்று விடுத்து மேற் செல்கிறோம். செத்தாரை மீட்பது குறித்தும் இவ்வாறே இங்கு ஆராயப் புகவில்லை.

செத்தாரை மீட்பது, சாகாதிருப்பது ஆகியவற்றைவிட ஜீவகாருண்யத்தை விளக்குவதே மேல் என்கிறார். ''ஆதலால் வடலூராற்கும் அடியனேன் தனக்கும் இந்தப் பூதலத்தினர் ஊன் உண்ணாப் புதுமை செய்திடலே மேலாம்; சாதல் எய்தினரை மீட்கும் தகை அதில் தாழ்வே ஆம்'' என்ற 19-ஆம் பாடலைக் காண்க. வள்ளலார் ஜீவகாருண்யத்தின் வடிவமாகத் திகழ்ந்தவர். உயிர்க்கொலையும் புலைப் புசிப்பையும் மிகவும் கண்டிப்பவர். வள்ளலாரின் ஜீவகாருண்யம் வண்ணச்சரபர்க்கு முற்றிலும் (முழுக்க முழுக்க) உடன்பாடு. சித்தி வல்லபங்களுக் காக வள்ளலாரை வண்ணச்சரபர் அதிகம் பாராட்டவில்லை; புலமைக்காக அதிகம் பாராட்டுகிறார்; ஜீவகாருண்யத்துக்காக, அதைவிட அதிகம் மிக அதிகம் பாராட்டுகிறார்.

''இரக்கமே வடிவாம் வடலூரான்''

என்கிறார்.

"மிளகை நேர் ஒரு சிறிய வண்டு எழுந்து
விளக்கில் வீழினும் விழிப்புனல் சிந்தி
இளகு நெஞ்சகம் பெறும் வடலூரான்"

— வினாப்பதிகம் 1:4

என்கிறார்.

வண்ணச்சரபத்தின் தமிழ்ப்பற்றை வள்ளலாரிடமும் காண்கிறோம். வள்ளலாரின் ஜீவகாருண்யத்தை வண்ணச்சரபரிடமும் காண்கிறோம்

தமிழ்ப்பற்று, தமிழ்ப்புலமை விஷயத்திலும் ஜீவகாருண்யத்திலும் இருவரும் ஒருவராகக் காணப்படுகின்றனர். தண்டபாணி சுவாமிகள் நூல்களில் இதற்கு ஆதாரமான இடங்கள் பல. இவ்வளவில் இங்கு இப்போதைக்கு இருவரையும் புரிந்து கொள்வது போதுமானது.

வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவரே எனக் கூறும் வண்ணச்சரபர், தாம் முற்பிறப்பில் அருணகிரிநாதரே என்கிறார். இவற்றை முருகனே தனக்குச் சொன்னான் என்கிறார். அருணகிரிநாதருக்கு மறுபிறப்பு உண்டு என்பதை அனைவரும் ஏற்பது கடினம். தாயுமானவருக்கு மறுபிறப்பு இருக்கலாம் என்பதை ஏற்பது அவ்வளவு கடினமன்று. தாயுமானவர் மீண்டும் பிறந்து வருவார் என்று வள்ளற் பெருமானே ஓரிடத்துக் கூறியுள்ளார். தாயுமானவரே வள்ளலாராகப் பிறந்து வந்தார் என்பதில் அதிகம் ஆட்சேபனைக்கு (மறுப்புக்கு) இடமிராது. ஆனால் அருணகிரியே வண்ணச்சரபராகப் பிறந்து வந்தார் என்றால் அதை எவ்வளவு பேர் ஏற்பர் (ஒப்புவர்) என்பது வினாக்குறியே. ஆனால் வண்ணச்சரபர் இவ்விஷயங்களில் சாதிக்கிறார். பெரியவர்கள் விஷயம், நம் ஆய்வுக்கு அப்பாற்பட்ட விஷயம் என்று இப்போதைக்கு விட்டுவிட்டு மேற் செல்வோம்.

குருபரதத்துவ நூலில் கூறப் பெறுவதைக் காண்போம் குருபரதத்துவம் வண்ணச்சரபத்தின் சுயசரிதை. புலவர் புராணத்திற்கு முன்பே பாடப்பெற்றது. அதில் எட்டுப் பாடல்கள் வடலூரடிகள் சந்திப்பு என்ற தலைப்பிற் காணப் பெறுகின்றன. (29–36)

கூடலூரில் ஒரு வீட்டில் வண்ணச்சரபர் வள்ளலாரைச் சந்திக்கிறார். இருவரும் அளவளாவுகிறார்கள். வண்ணச்சரபர் தாம் பாடிய வண்ணத்தியல்பு நூலை (ஏட்டை) வள்ளலாருக்குக் காண்பித்துக் கொண்டு வரும்போது இருவருக்குமிடையே விவாதம் எழுகிறது.

ஆய்த எழுத்து இடையின ஒற்றெழுத்தோடு உறழும் என்பது எவ்வாறு? என்று வினவுகிறார் வள்ளலார்.

தொல்காப்பியர் முதலானவர்களும் இச்சூட்சத்தை உணர்த்தவில்லை, இதுவரை எங்கும் கூறப் பெறாத இதனை நானே விதிசெய்தேன் என்று விடையிறுக்கிறார் வண்ணச் சரபர்.

இதனைக் கேட்ட வள்ளலார், நான் நினைத்தால் நூறு வண்ணங்களைக் காலால் தேய்ப்பேன் என்கிறார்.

இது கேட்ட வண்ணச்சரபர் நகைக்கிறார். தக்க மத்தியஸ் தர்கள் இருந்தால் அவண் அங்கு அமையேன், நான் நகைத்த சீரை அறிந்து, "உன்றன் கவியைக் கேட்டு உபப்படையார் உளரோ? உனைப் பழித்தால் என்றன் கவிச்சீர் என்னாகும்? நின் கவியை இகழ்ந்தால் கோபம் வருகிறதா எனப் பார்த்தேன்" என்றாராம் வள்ளலார்.

இதன் பின் நான்கு பாடல்களில் உடம்போடு சித்திபெற்ற வள்ளற்பெருமான் மீண்டும் வரவேண்டுமென்று பாடுகிறார். இருவரது முன்னைய பிறப்புகளையும் மொழிகிறார்.

இனி, இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள் எழுதிய சமரச பஜனை கந்தசாமிப் பிள்ளை கூறுவதைக் காண்போம். அது வருமாறு:

> திருநெல்வேலியில் சைவவேளாண் மரபில் உதித்து ஒன்பது வயது முதல் முருகப்பெருமானைச் செந்தமிழ்ச் சுவை பொலிந்த திருப்புகழ்களால் தம் காலம் முழுவதும் துதித்த தண்டபாணி சுவாமிகள் என்று வழங்கும் முருகதாசர் ஒருகால் வடலூர்க்கு வந்து வள்ளலாரிடம் சிலநாள் தங்கி முருகரது திருவருளை வியந்து கொண்டிருந்தனர் முருகதாசர் தாம் பாடிய திருப்புகழ்களை வள்ளலார்க்கு

எடுத்துக்காட்டிக் கொண்டே வர, வள்ளலார் ஏடுகளை ஒரு சிறிது தள்ளினர். அதனால் அலட்சியங் கொண்டதாக அவர் எண்ணவே, வள்ளலார் முருகதாசரை அருணகிரி நாதரே என்று சிறப்பித்துப் பேசினர். எனினும் அவர்க்குத் திருப்தியில்லை. ஏடுகளைத் தள்ளினதால் கணக்கிலாமற் பாடிக்கொண்டிருப்பதோடு அனுபவ ஞானம் இருத்தல் வேண்டும், என்று வள்ளலார் எண்ணினரோ என்று அவர் ஐயமுற்றனர், பின் ஒருகால் முருகத்தியானத்திலிருந்தபோது வள்ளலார் தாயுமானவரே என்று அவர்க்கு விளங்கியது. ஒருநாள் முருகதாசர் உஷ்ணவாயுவால் சிறிது அபக்குவம் அடைய, வள்ளலார் கேட்க, வினையால் விளைந்தது என்றனர். வள்ளலார் ''இங்கேயும் வினையுண்டோ?'' என்று முருகதாசர்க்குக் கூறிச் சந்நியாசிகளை வினை தாக்குமோ என்பதைக் குறித்துப் பிரசங்கஞ் செய்தனர். வள்ளலாரைக் குறித்து வினாப்பதிகமும் அனுபவப்பதிகமும் பாடி ஜீவகாருணிய மூர்த்தியாகிய முருகதாசர் தமது நூல்களில் பலவிடத்தும் ஜீவகாருணியம் விளக்க வந்த வள்ளலாரைப் புகழ்ந்திருக்கிறனர்.

வண்ணச்சரபம் வள்ளலார் இருவர் சந்திப்பை இத்துடன் நிறைவு செய்து, இனி இருவர் கருத்தொற்றுமை, இருவரிட மிருந்தும் நாம் அறிந்து கடைப்பிடிக்க வேண்டுவனவைப்பற்றிக் கூறிக் கட்டுரையை நிறைவு செய்வோம்.

இருவரும் தமிழ்ப்பற்று, ஜீவகாருண்யம் ஆகிய இரண்டிலும் ஒத்தவர்கள் என்பதை முன்னரே மேற்கூறினோம். சமய சமரச மனப்பான்மையிலும் இருவரும் ஒத்தவர்கள் என்பதை நினைவு கொள்ள வேண்டும்.

வள்ளலார் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் என்றொரு பெருநெறியை, பொது நெறியைக் கண்டார்.

வண்ணச்சரபர் ஷண்மத சமரச நெறியைக் கண்டு கடைப் பிடித்தார். தில்லைத் திருஆயிரம் பாடியதோடு திருஅரங்கத்திரு ஆயிரமும் பாடினார். சைவ, வைஷ்ணவ, சாக்தேய, சௌர, காணபத்ய, கௌமார சமரசவாதியாகத் திகழ்ந்தார்.

வள்ளலாரின் சமரசம் ஷடாந்த சமரசம்.
வண்ணச்சரபரின் சமரசம் ஷண்மத சமரசம்

வண்ணச்சரபத்தின் சீடர் இராமானந்த சுவாமிகள் நிறுவிய கௌமாரமடத்தில் அறுசமயக் கோயில்கள் உள்ளதையும், அவற்றில் ஷண்மத வழிபாடு நிகழ்வதையும் நாம் இன்றும் காணலாம்.

அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் ஏற்பாட்டில் ஜோதிக்கோயிலும் சிரவணபுரம் கௌமாரமடத்தில் இடம் பெற்றுள்ளது பின்னும் இன்னுமொரு சமரசத்தின் அறிகுறியாம்.

பொதுவாகப் பக்தி ஞானம் முதலியவற்றோடு, சிறப்பாகத் தமிழ்ப்பற்று, ஜீவகாருண்யம், சமரச மனப்பான்மை ஆகிய மூன்றும், வள்ளலார் வண்ணச்சரபர் ஆகிய இருவரிடமிருந்தும் நாம் அறிந்து கடைப்பிடிக்க வேண்டியவாம்.

புலவர் புராணம் புதுப்பதிப்பு அண்மையில் வெளிவந்து உள்ளது. அதுபோல் குருபர தத்துவமும் தண்டபாணி விஜயமும் சிறந்த ஆய்வுப் பதிப்புகளாக, செம்பதிப்புகளாக, செய்யுள்கள் சந்தி பிரித்தல் முதலிய சீர்திருத்தங்களுடன் விரிவான ஆய்வு முன்னுரை, பதிப்புரைகளுடன் வெளிவர வேண்டும்.

குருபரதத்துவமும் தண்டபாணி விஜயமும் செய்யுள் நூல்களாதலின், உரைநடையில் ஒரு நூல் வேண்டுமென்று செந்தினாயக சுவாமிகள் ''தண்டபாணீயம்'' என்று ஓர் உரை நடை நூல் எழுதினார். அது இன்னும் வெளியாகவில்லை. அதனை நன்கு அச்சிட்டு வெளியிட வேண்டும்.

இவை மட்டும் போதாது. வண்ணச்சரபத்தின் நூல்கள் அனைத்தையும் நன்கு ஆழ்ந்து ஆராய்ந்து வண்ணச்சரபரின் வரலாறு ஒரு பெருநூலாக இக்கால முறையில் எழுதி வெளியிடப் பெற வேண்டும். வண்ணச்சரபரின் தமிழ்ப்பணி, கொள்கை விளக்கம் என்பன போன்ற தனித்தனி நூல்களும் வெளிவர வேண்டும்.

கொல்லாமை நெறியும் அடிகளார் பணியும்

இரா. கண்ணன்

எண்ணிறந்த உயிரினங்களைத் தன்னகத்தே கொண்டியங்குவது இவ்வுலகு. புல்லாய் பூடாய் புழுவாய் பறவையாய் விலங்காய் மாந்தராய் எனப் பற்பல இனங்களாய்க் காணப் பெறும் உயிர்களை அவ்வவற்றின் அறிவின் திறமுணர்ந்து பல்வேறு வகைகளாய்ப் பிரித்துக் காட்டுவர் நூலோர்.

''ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே''

(தொல். பொருள். மர. 27)

இவற்றுள் ஆறறிவுயிராம் மாந்தரே யன்றி மற்றுள பிறவெல்லாம் தத்தம் இன்பமே பெரிதென எண்ணி அவ்வின்பம் துய்க்க வேண்டி பிற உயிர்களைக் கொன்றும் சிதைத்தும் சீரழித்தும் வாழும் இயல்புடையனவே ஆம். மேலும் இவ்வுயிர்கள் எல்லாம் தம் எயிற்றகத்தே தோன்றி தன்னுயிரை வருத்தும் பசித்தீயினை அணைக்க வேண்டி தம்மினும் மெல்லியனவற்றைக் கண்டுழி அவற்றினை வலிதின் கவர்ந்து, உயிரினைக் கொன்று, உடலினைச் செகுத்து, ஊனினை உண்டு களிக்கும் இயல்பினவாம். இவ்வியல்பாம் பண்பு இவ்வுயிர்களிடத்தே காணப்பெறுவதற்குக் காரணம் இவ்வுயிர்கள் எல்லாம் மனம் எனும் புலனைப் பெறாமையும், அப்புலன்வழி தன்னுயிர் போன்றே பிறவுயிர்களையும் நோக்கும் பெற்றியைப் பெறாமையுமே ஆம். ஆதலின் தன்னினும் மெலிதாகிய சிற்றுயிர்களைக் கொன்று அவற்றின் ஊனினை உண்டு வாழும் இவ் விலங்கு நீர்மையாம் பண்பு அவ்வுயிர்களின்பால் உளதானமையால் அவை பெறும் இழுக்கு ஏதும் இன்றாம்.

ஆயின் பிற உயிர்கள் எவையும் பெறாத மனம் எனும் புலனைப் பெற்றதும் அப்புலன்வழி ஒழுகி நன்மையும் தீமையும் நாடி அவ்வவற்றின் தன்மையை உணர்ந்து அவற்றுள்ளும் நன்மையினையே நல்கும் நெறியினை ஓர்ந்து அதன்வழி சார்ந்து நடந்திட அவாவும் மாந்தரினம், தம்மினும் கடைபட்டு நிற்பனவும் தம் அருளை அவாவி தம்மைச் சார்ந்து வாழ்பனவுமாகிய சிற்றுயிர்களைக் கொன்று அவற்றின் ஊனினை உண்டு வாழுதல் அவ்வினம் பெற்ற ஆறாம் அறிவின்பாற்பட்ட செயலன்றாம். எல்லா உயிரும் இன்பம் துய்க்குந்தொறும் களித்தும் துன்பம் தாக்குந்தொறும் கலங்கியும் வாழ்னவே யாயினும் மானுடம் மட்டுமே தாம் கண்ட இன்ப துன்பங்களுக்கான காரண காரியங்களை மனதான் ஆய்ந்து அவற்றுள் துன்பம் தருவனவற்றை எல்லாம் புறம் தள்ளி இன்பம் நல்குவனவற்றை எல்லாம் தேர்ந்து கைக்கொண்டு தம் வாழ்வினை இன்பத்தின் விளைநிலமாக மாற்றிட விழையும் இயல்புடையனவாம். ஆதலின் இன்பம் ஒன்றே விழையும் மாந்தரினம் தம்மைப் போன்றே பிற உயிர்களும் விழைவது இன்பமே என உணர்ந்து, அவ்வுயிர்களின்பால் அன்பும் அருளும் கொண்டு வாழ்தலே தாம் பெற்றுள்ள ஆறாம் அறிவாகிய பகுத்துணரும் அறிவின் பண்பேயன்றி, அவ்வுயிர்களை வதைத்தும் சிதைத்தும் கொன்றும் சுவைத்தும் வாழ்வது அவ்வறிவிற்கு ஆகாப் பண்பேயாம். இதனையே வள்ளுவரும்,

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக் கடை." (குறள்: 315)

என மொழிந்தனர். ஆதலின் அறிவுடைய மாந்தரினம் என்பது பிற உயிர் உறும் துன்பம் கண்டுழி அதற்காக இரங்கும் பேருள்ளம் படைத்தது என்பதும், மாறாகத் தன் இன்பம் ஒன்றையே கருதி பிற உயிரினை வாட்டுவோர் மாந்தராகார் என்பதும் மாறாக மாக்களாய்க் கருதப் பெறுவர் என்பதும் பெற்றாம்.

கொல்லாமை நெறி

உலகத்தின் தொடக்கக் காலத்தில் விலங்கொடு விலங்காய்ச் சுற்றித் திரிந்த மனிதன் அவ்விலங்கினங்களைப் போன்றே காயும் கனியும் உண்டு உயிர் வாழ்ந்தான். அவை கிடைக்காதபோது தன்னினும் எளிய விலங்குகளை வேட்டையாடி அவற்றின் ஊனை உண்டு பசியாறினான். நாகரிகம் இல்லா அத்தொடக்க கால மனிதன் தன்னினும் பேராற்றல் ஒன்று உண்டு என்பதை

இயற்கையின்வழி உணர்ந்து அவற்றை வணங்கத் துவங்கினான். அப் பேராற்றலைத் தன் வயப்படுத்தவும் அப்பேராற்றலின் உள்ளத்தை மகிழ்வுறச் செய்யவும் உயிர்களைப் பலியிட்டுப் படைப்பதே வழி என எண்ணினான். அக்கற்கால மனிதனின் இறை வழிபாட்டில் பலியிடுதல் பெரு வழக்காய்ப் பரவிற்று. வடவாரியரின் வேள்வி வழிபாட்டில் உயிர் பலியிடுதல் பெரும் இடத்தைப் பெற்றிருந்தமையை வேதங்கள் நன்கு உணர்த்து கின்றன. முருகனுக்குச் சிறு மறியைப் பலியிட்டுக் குன்றக் குறவர் வணங்கிய செய்தி சங்க இலக்கியங்களில் காணப் பெறுகிறது. இவ்வாறு கற்கால மனிதனின் புலால் உண்ணும் பண்பின் மற்றொரு வெளிப்பாடாக இறை வழிபாட்டில் உயிர்ப் பலியிடுதல் புகுந்தது. மனிதனின் அறிவு வளர வளர அவன் தன் இறைக் கோட்பாட்டிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இவ்வுலகத்து உயிரினங்களுக்கு எல்லாம் தாயும் தந்தையுமாகி நின்று பேரருள் சுரக்கும் இறைவன் அன்பின் உருவம் என்பதை இறையடியார்கள் நன்கு உணர்ந்தனர்.

> ''அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
> அன்பே சிவமாவ தியாரும் அறிகிலார்
> அன்பே சிவமாவ தியாரும் அறிந்தபின்
> அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''

என இறைவனின் இலக்கணமாகத் தாம் உணர்ந்தவற்றை உலகிற்கு உணர்த்தினர். இத்தகு அன்பின் இருப்பிடமான இறைவன் உயிர்ப் பலி செய்தலை ஒருபோதும் ஒவ்வான் என அறிவுறுத்தினர்.

> ''அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத் துண்ணாமை நன்று'' (குறள்: 259)

என எடுத்தோதினர். சிற்றுயிர்களைச் செகுத்து அவற்றின் ஊனினை உண்டு களிப்போரையும், அன்பின் உருவமான இறைவனின் பெயரால் உயிர்ப்பலி செய்வோரையும் எவ்வுயி ரிடத்தும் அவ்வுயிராய்த் திகழும் ஈசன் வெறுப்பான் என்றும் அத்தகையோர் நரகத்தின் வெந்தீயிடையே நொந்து நலிவர் என்பதனை,

''கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடி காரர் வரிகயிற் றாற்கட்டிச்
செல்லிடு நீரென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே''

என்றும்,

''பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே''

என்றும் பண்ணிறை பாக்களால் பன்முறை எடுத்தோதினர். எவ்வுயிரையும் தன்னுயிர் போல் கருதி வாழ்பவரே இறையருள் பெறுவார் என வழிக் காட்டினர். ''கொல்லாமை எத்தனை குணக்கேட்டையும் நீக்கும்'' (தாயுமானவர் பா. 1:1) பேராற்றல் உடையது என மொழிந்து கொல்லாமை என்னும் நன்னெறியை உயிர் உய்யும் நெறியாய் உயர்த்திக் காட்டினர்.

''கொல்லா விரதம் குவலயமெல் லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே'' (54)

என இறைவனிடம் விண்ணப்பித்து நின்றனர்.

இவ்வாறு கொல்லாமை நெறியினைச் சைவம் முதலான பெருஞ் சமயங்கள் வலிந்தோதிய போதும் பாமர மக்களின் சமயமான சிறுமரபு சமயங்களில் பலியிடுதல் இன்றும் காணப் பெறும் ஒரு பெருவழக்காகவே உள்ளது. அத்தகு வழக் காற்றினைக் கண்ட போது மனம் பதைத்து அதனைத் தடுத்து நிறுத்தி பாமர மக்களையும் கொல்லாமை நெறியில் செலுத்திய இறையடியார்களுள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி அடிகள் முதன்மை யானவர் எனலாம்.

கொல்லாமை நெறி காத்த அடிகளார்

வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் தம் இளமைப் பருவம் முதற் கொண்டே கொல்லாமை நெறி ஒன்றே உய்யும் நெறி என்பதனை உறுதியாக நம்பி வந்தனர். அடிகளாரின் ஆறாவது அகவையில் அவருக்கு ஆசிரியராக இருந்து கணபதி, இலக்குமி மந்திரங்களையும் முருகக் கடவுளுக்

குரிய ஆறெழுத்து அருமறையினையும் உபதேசித்து மெய்ஞான அறிவு கொளுத்தியவர் சீதாராம நாயுடு என்பாராவார். இவர், ‘ஊன் உணவு உண்பது ஒரு மாப்பெரும் தவறன்று. ஊன் உணவு உண்போருள்ளும் மெய்ஞானம் அடைந்த பெரியோர் பலர் உளர்' எனும் கருதினர். அடிகளார் ஆசிரியர் என்றும் பாராது இக் கருத்தினை எதிர்த்து, ‘ஊன் உண்பார் யாவரும் மிகத் தாழ்ந்தவரே' எனும் தன் கொள்கையை நிறுவினார். ஆசிரியர் என்று அஞ்சாது தன் கொள்கையை நிறுவிய அடிகளாரின் இவ்வாழ்வியல் நிகழ்ச்சி அவர் கொல்லாமை நெறியில் கொண்டிருந்த உறுதியினை நன்கு உணர்த்தும். இவ்வுறுதியே அடிகளாரைப் பின்னாளில் கொல்லாமை நெறியைப் பரப்பிப் பணியாற்றிட வைத்தது போலும். கோயில் களில் நடந்த உயிர்ப் பலியைத் தடுத்து நிறுத்திய நிகழ்ச்சிகள் பல அடிகளாரின் வரலாற்றில் காணப் பெறுகின்றன.

சென்னை நிகழ்ச்சி

இடுப்பினில் கல்லாடையும் கையினில் தண்டமும் சடை முடியுமாகத் திருவுருவம் புனைந்து முற்றும் துறந்த ஞானியாக உலா வந்த அடிகளார் சென்னையில் வாழ்ந்திருந்தபோது திருவொற்றியூரில் உள்ள வட்டப்பாறை நாச்சியார் என்ற காளி கோயிலில் பலியிடுதல் நடக்கவிருப்பதை அறிந்தார். அன்பின் உருவமான அம்பிகையின் முன் கொலைப்பலி நடக்கவிருப்பதை அறிந்த அவருள்ளம் பதைத்தது. அம்மையின் முன் ஆடும் மாடும் பலியிடப்படுவதைத் தடுக்க அடிகளாரின் திருவுள்ளம் கனிந்தது. காளியின் கோயிலை அடைந்த அடிகளார் அங்கு உள்ளோரை எல்லாம் அழைப்பித்துக் கொல்லாமை நெறி குறித்து உபதேசித்துக் கொலைப்பலியைத் தடுத்தார். மேலும், காளியை நோக்கி ‘அம்மையே நின்னால் விரும்பப்படும் ஈசனின் பேரருள் நினக்கு வேண்டாவோ? அவன், சிறு உயிர் ஒன்றைக் கொல்வோரையும் மன்னித்து அருள் தர மாட்டானே. அவனருள் விழையும் நீ இக்கொலைப் பலியை நடக்கவிடலாமோ? அவ்வாறு நடப்பின் நினக்கு அவனருள் இட்டுவது யாங்ஙனம்?' எனக் கேட்கும் வகையில்,

“ஒற்றியூர்க் காளி உனக்கேனோ உன்விருப்பம்
வெற்றிமழு வோன்விருப்பு வேண்டாவோ சிற்றுயிரைக்

கொல்வார்க்கும் இன்பங் கொடாதான் அவன் கண்டாய்
நல்வார்த்தை சொன்னேன்இந் நாள்''

(தி. செ. முருகதாச அடிகள்,
அறுமுகன் அடியவர் வரலாறு, ப. 34)

என்னும் வெண்பாவினைப் பாடியருளினார். ஒற்றியூர் காளி கோயிலின் கொலைப்பலி அன்றோடு நின்றது. இவ்வாறே விழுப்புரத்தை அடுத்துள்ள கோலியனூர் மாரியம்மனின் கோயிலில் நடக்கவிருந்த பலியினையும் அடிகளார் தடுத்து நிறுத்தினார்.

சந்நாசியப்பன் கோயில் நிகழ்ச்சி

ஞானப் பண்டிதனாய் நின்று திருவருட் சுரக்கும் பழனிமலை முருகனை வணங்கும் விழைவோடு சென்று கொண்டிருந்த அடிகளார் ஒட்டன்சத்திரம் அடுத்த துமிசம்பட்டியில் தங்கி இருந்தபோது அவ்வூரில் உள்ள சந்நாசியப்பன் சுவாமி கோயிலில் ஒருவன் ஆட்டினைப் பலியிடப் போவதை அறிந்து அங்கு விரைந்தார். ஆடு வெட்டிப் படைக்கவிருந்தவனைக் கண்ட அடிகளார், உயிர்ப்பலிக் கூடாதென உபதேசித்து, ''உன் மகனின் வயிற்று வலியை நான் தீர்ப்பேன். கொலை புரிய விடமாட்டேன்'' எனக் கூறி திருநீற்றினை எடுத்து வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்த சிறுவன் மீது பூசி,

''அயிற்றலைவா தென்பழனி யப்பாஇச் சேயின்
வயிற்றுவலி முற்றுமற மாற்றி – வெயிற்புழுப்போன்
ஏழைகள்வா டப்படுத்தும் இப்பேய் உயர்குடித்திட்டு
ஊழைவென்றோர் உண்டென் றுணர்ந்து.''

(அறுமுகன் அடியவர் வரலாறு, ப. 35)

எனக் கவி பாடினார். ஆறுமுகனின் அருளால் அச்சிறுவனின் வயிற்றுவலி தீர்ந்தது. அப்பரின் சூலை நோயை மாற்றிய 'கூற்றாயினவாறு விலக்கலீர்' எனத் தொடங்கும் தேவாரத் திருப்பதிகம் போன்று இப்பாடலும் வரலாற்றில் ஏற்றம் பெற்றது.

பழனி மலையின் நிகழ்ச்சி

பழனிக்குச் சென்ற அடிகள் மலையின் இடையில் அமைந்துள்ள இடும்பன் கோயிலைக் கண்டார். இத்தெய்வம் பலிப்

பூசையை விரும்பும் செய்தியினை அறிந்த அடிகளார், முருகன் தன் கனவில் தோன்றி இடும்பன் கோயிலுக்குச் செல்ல வேண்டாம் எனக் கூறியதையும் பொருட்படுத்தாது அக்கோயிலை அடைந்தார். இடும்பனின் கோயில்முன் சென்ற அடிகளார்,

''பாடுமன்பர் போற்றும் பழனிமலைப் பாதியில் நின்று
ஆடும் இடும்பா அறையக்கேள் – நீடும்
கொலைகண்டு மாமிசம்உட் கொண்டுவுக்க வேண்டா
நிலைகண்டு மெய்யருளில் நில்.''

(அறுமுகன் அடியவர் வரலாறு, ப. 36.)

எனும் வெண்பாவினைப் பாடி அதுவரை அங்கு நடைபெற்று வந்த உயிர்க்கொலையை நிறுத்தினார். இவ்வாறு அடிகளார் கொல்லாமை நெறியைக் காக்கும் பணியினைச் செம்மையுறச் செய்தருளினார். இதே போன்று திருவாமாத்தூரில் பெரியாண்டவன் திருக்கோயிலில் செய்யப்படவிருந்த பன்றிக் கொலையையும் தடுத்து நிறுத்தினார். இவ்வாறு எந்தவகையிலும் உயிர்க்கொலையும் ஊன் உணவும் நாட்டில் பரவுதல் கூடாதென்று அரும்பாடுபட்டார் அடிகளார்.

முடிவுரை:

இதுகாறும் கூறியவற்றான் கொல்லாமை நெறியாவது யாது என்பதும் அந்நெறி செழிக்க வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி அடிகளார் ஆற்றிய பணியினையும் ஒருவாறு உணர்தற்பாலதாம்.

''நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழும் நெறி'' (குறள்: 324)

எனும் வள்ளுவனார் வாக்கிற் கேற்ப கொல்லாமை என்னும் நன்னெறியை உயிர்கள் உய்யும் வழியாக எடுத்துக் காட்டி, வழிபாடியற்றுவதில் இடம் பெற்ற கொலைப்பலியைத் தடுத்து நிறுத்திய வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகளின் அரும்பணி மானுட சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் மாபெரும் பங்களிப்பாய் அமைந்து சிறக்கிறது.

அருணகிரிநாத அடிகள் புராணச் செய்திகளும் சிறப்புகளும்

ச. கண்மணி

முன்னுரை

வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் இயற்றிய அருணகிரி நாத அடிகள் புராணத்தில் அருணகிரிநாத அடிகளின் வாழ்க்கை வரலாறும், அவரது வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்களும் இடம் பெறுவதுடன், தண்டபாணி அடிகளின் சமயக் கொள்கையும், தமிழ்ப் பற்றும், சமுதாயக் கருத்துக்களும், நீதிக் கருத்துக்களும், கொல்லாமைக் கொள்கையும் ஆங்காங்கு பளிச்சிடுகின்றன. அத்துடன் புராணம் என்ற வகையிலமைந்த இவ்விலக்கியத்தில் சில காப்பியத்தன்மைகள் பொருந்தியுள்ளன. இலக்கியச் சுவையும் பொதுளியுள்ளது.

அருணகிரிநாத அடிகள் வரலாறு

1. அருணகிரிநாத அடிகளின் முந்தைய ஆறு பிறவிகள் எவையென விரித்துரைக்கிறார் தண்டபாணி அடிகள். அகத்தியர் கிழமுனிவர் வேடங்கொண்டு நாடடைந்து பன்னகர் தோறும் புகுந்து நற்றமிழின் நலமெலாம் கண்டு திரும்பியபோது அவரைத் தொடர்ந்து சென்ற வெண்ணிற நாய்க்குட்டியே முதற் பிறவியாம்.

2. பொதிய மலையில் அகத்தியரும் அவரது சீடர்களும் நாயை அன்போடு வளர்க்க அது இந்திர பதவிக்கு ஆசைப்பட்டு அகத்தியரை வேண்டியதால் அவர் அந்நாய்க்கு அப்பதவி கிடைக்கச் செய்தார். இந்த நாய் மூன்றாவது இந்திரனாகியது. முந்தைய இரு இந்திரரும் அடுத்தடுத்து மேருமலைக் குகையில் சிறைப்பட்டனர். இதுவே இரண்டாவது பிறவி விபரமாகும்.

3. நான்காவது இந்திரன் உருவானபோது மூன்றாவது இந்திரனாக இருந்த நாய்க்குட்டியும் மேருமலைக் குகையில்

சிறைப்பட்டது. பின்னர் முறையே நான்காவது இந்திரனும், ஐந்தாவது இந்திரனும் சிறைப்பட ஐந்து இந்திரர்களும் அடுத்த பிறவியில் பாண்டவர் ஐவராயினர் இந்திரனாகிய நாய்க்குட்டி தன் மூன்றாம் பிறவியில் அர்ச்சுனனாக அவதரித்தது.

4. அர்ச்சுனன் மறு பிறவியில் திண்ணன் ஆனான். கண்ணப்ப ராகிச் சிவனருள் பெற்றார்.

5. கண்ணப்பர் முக்தி அடைந்து சிலகாலம் கழித்து மீண்டும் பிறவி எடுத்தபோது நக்கீரராகி இறையனாருடன் வாதிட்டு, அகத்தியரால் இலக்கணம் உணர்ந்து, பின் கோரவல்ல ரக்கி (கற்கிமுகி) ஒருத்தியால் சிறைப்பட்டு முருகன் மேல் திருமுருகாற்றுப்படை பாடி மீட்சி பெற்றார்.

6. அவரது அடுத்த பிறவி பொய்யாமொழிப் புலவராகும். வாணன் மேல் கோவை பாடி சிவபெருமானை மட்டுமே போற்றுவேன் என்று சாதித்துப் பின் முருகனால் ஆட்கொள்ளப் பட்டார். பாண்டிய மன்னனிடம் சென்று புலவர் பெருமையை உணர வைத்து சங்கப் புலவர் சிலைகள் தலையசைக்க, சங்கப் பலகை பொற்றாமரைக் குளத்திலிருந்து மேலெழுந்து மிதக்க, அவன் பரிவாரத்துடன் தக்க மரியாதை பெற்றுத் தனிச் சிவிகை யில் நகர் வலம் வந்தார்.

7. மேற்சுட்டிய ஆறு பிறவிகளை அடுத்த ஏழாவது பிறவியே அருணகிரிநாதரின் பிறவி ஆகும். அவர் திருவெண் காடர் என்ற பட்டினத்தாருக்கும் முத்தம்மாள் என்ற கணிகைக்கும் பிறந்தவர் ஆவார். இவரது பிறப்பு உருவாக்கம் இயல்பானதாகக் கூறப்படவில்லை. இயற்கைக்கு மாறாகப் பட்டினத்தடிகளின் வீரியத்தை முத்தம்மாள் உண்டு கருத்தரித் தார் என்கிறார் தண்டபாணியடிகள்.

8. இள வயதில் கல்வியில் நாட்டமின்றி இருந்தார். பாட்டியும், தாயும் இறைவனடி சேரத் தமக்கையால் புரக்கப் பட்டார். இவரது சிற்றின்ப வேட்கையால் பெருநோய் கொண்டார். இவரது உல்லாச வாழ்விற்குப் பொருள் தர இயலாத ஏழ்மை நிலையைத் தமக்கையார் உற்ற பின்னர் ஒரு நாள் மனம் வெதும்பி "உன் காம வேட்கையைக் கணிகை யாகிய என்னிடமே தீர்த்துக் கொள்" என்று கடுஞ்சொற்

கூறினார். இச்சொற்கள் அருணகிரியாரின் ஊனுடலில் கொள்ளும் மையல் ஒழுங்கு அறச் சுட்டன. திருவருணைக் கோயிலின் வல்லாள கோபுரம் என்ற இரண்டாவது கோபுரத்தின் மீதேறிக் குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முனைந்தார். அக் கோபுரத்தின் வடபுற மாடத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் கோவண உடையுடன் தண்டாயுதம் தாங்கியவனாய் அவர் உயிரை விடா வண்ணம் தாங்கி ஆறெழுத்து மந்திரத்தை ஓதி அருள்பாலித்து மறைந்தான்.

9. சடாட்சர மந்திரத்தை ஓதித் தன் நோய் நீங்கப் பெற்றுப் பொதுமக்கள் போற்றுபவராய் அக்கோபுர மாடத் திலேயே தங்கினார். தன் தந்தையைப் போல் இரந்துண்டார். அவரது தமக்கையும் இறைவனடி சேர்ந்தார். பாவன்மை பெற்றுத் திருப்புகழ் பாடினார். மயில் விருத்தம், வேல் விருத்தம் முதலியனவும் பாடினார். தலந்தோறும் சென்று முருகனைத் தரிசித்தார். திருச்செந்தூரில் திருப்புகழை அரங்கேற்றினார். முருகப் பெருமான் தலையசைத்து உவந்தான். திருப்புகழ் ஏடுகளைக் கடலில் விட்டார். அலை பல்வாறா நல்கிட உலகர் கொண்டார்.

10. வில்லிபுத்தூராழ்வார் திருவருணை வந்து அருணகிரி நாதரைச் சந்தப் பாடல் இயற்றும் போட்டிக்கு வலிய அழைக்க அப்போட்டியில் அருணகிரிநாதரே கந்தரந்தாதி பாடி வென்றார். பிரபுட தேவ மன்னன் அருணகிரிநாதரின் பெருமையை உணர்ந்தான். வில்லிபுத்தூராரை அவரது காதுகளை அறுக்காமல் உய்ந்து போக விட்டுப் பெருமை கொண்டார்.

11. சம்பந்தாண்டான் என்ற சமணன் வலிய அருணகிரி நாதரை போட்டிக்கழைத்து முருகனைக் காட்சி தரச் செய்ய இயலுமா என்று சவால் விட்டான். தான் சபதம் இட்டபடி சம்பந்தாண்டானால் சக்தியைக் காட்சி தரச் செய்ய இயல வில்லை. ஆனால் அருணகிரிநாதர் மயில் வகுப்பு பாடி பிரபுட தேவ மன்னனுக்கு முருகனை நேரில் காணும் பேறு தந்தார். அத்துடன் மன்னன் இழந்த கண் பார்வையையும் மீட்டுத் தந்தார். முருகன் காட்சி கொடுத்த தூணைச் சுற்றிக் கோயில் எடுப்பிக்க மன்னனை வேண்டினார்.

12. சம்பந்தாண்டான் பாரிஜாத மலரைக் கொண்டு வர இயலுமா என்று மீண்டும் வம்புக்கிழுத்தான். அருணகிரிநாதர் கூடு விட்டுக் கூடு பாய்ந்து உயிர் நீத்த கிளியின் உடலில் புகுந்து-தேவலோகம் சென்றார்.

வஞ்சனை எண்ணம் கொண்ட சம்பந்தாண்டான் அருணகிரி நாதரின் பூதவுடலைக் காட்டி அவர் இறந்து விட்டார் என்று மன்னனை நம்ப வைத்தார். சிதையில் எரியூட்ட வைத்தார். தேவலோகத்திலிருந்து பாரிஜாத மலருடன் கிளியுருவில் வந்த அருணகிரிநாதர் மலரை மன்னன் வசம் சேர்ப்பித்தார். தன் உடல் அழிந்தது குறித்துக் கவலை கொள்ளாமல் கிளிவுருவிலேயே திருவருணைக் கோபுர மாடத்தில் சில காலம் தங்கி இருந்து பல பாடல்களும் இயற்றினார். தன் அலகால் ஏடுகளில் எழுதிய பாடல்களை மக்கள் கண்டு எடுத்துப் போற்றினர். (கந்தர் அனுபூதி, கந்தரலங்காரம்) சில காலம் கழித்து கயிலையங்கிரியின் மேற்பாலுள்ள கந்த மாதன வெற்பைச் சென்று சேர்ந்து ஞானானுபூதி பாடியது. முருகப் பெருமானின் சேவற்கொடி சேர்ந்த இடப்புறத் தோளுக்கு நேரான வலத்தோளில் அமர்ந்தது. முக்தி அடைந்தது.

அருணகிரிநாதரின் அடுத்த பிறவி

தண்டபாணி அடிகள் தன்னை அருணகிரிநாதரின் அடுத்த பிறவி என்ற கொள்கை உடையவராய் இருந்தார். இப்புராணத்தில் அவரது எண்ணம் வெளிப்படையாகச் சொல்லப் படாவிடினும் குறிப்பாக இடம் பெற்றுள்ளது. இவ்வுண்மையைப் பாட ஒரு புலவன் வாய்ப்பான், முருகன் அறிவான் என்று கூறுகிறார்.

> ''அப்புறம் நடந்த காதை அதிற்சிறிது அறிந்துற்றாலும்
> இப்புராணத்தில் நாயேன் இயம்பிடும் இயல்பின் பாற்றன்று
> எப்புலவனுக்கும் மேன்மை இசையுமோ அறிகின்றிலேன்
> முப்புரம் எரித்தார் ஈன்ற முருகவேள் அறியுமன்றே''

என வரும் பாடலின் (கிளி வாழ்க்கைச் சுருக்கம் – பா. 24) பொருள் கூறும் திரு. முருகதாச அடிகளார் (தண்டபாணி அடிகளின் பெயரர்) மேற்சுட்டிய கருத்தையே எழுதிப் போந்துள்ளார். நூலின் இறுதியிலும் இக்கருத்து உள்ளது. (கோபுரத்துச் சுருக்கம். பா - 51)

தண்டபாணி அடிகளின் கொல்லாமைக் கொள்கை

1. உயிர்க்கொலையை ஒறுத்து ஊன் உணவு ஒழித்து வாழ்பவர் மனம் கருணை மிகுந்ததாகும். அத்தகையோர் மனத்தில் அவர் நினைக்கின்ற வண்ணத்தில் தெய்வம் எழுந்தருளியிருக்கும் என்ற கருத்தை அருணகிரிநாத அடிகளார் புராணத்தின் பொதுப்பாயிரத்திலேயே (பா. 6) எடுத்துக் கூறியுள்ளார்.

2. கிளி உருவில் பாரிஜாத மலருடன் பிரபுட தேவ மன்னனை அடைந்த அருணகிரிநாதர் வாய்மொழியாக ஊன் உணவின் இழிவைக் கூறுகிறார்.

''இதுவும் இவ்வுடலி னழும்நல்
லுணவலால் ஈனமுற்றவை உண்ணாப்
புதுமை தோய்வன அதுவுமுன் னாள்சில
புசிக்கொ ணாதன உண்டது''...

என்று கிளியினம் தாவரவுணவுண்ணும் மேன்மை பொருந்திய தாகப் போற்றப்படுகிறது. (பாரிஜாதச் சுருக்கம் – பா. 23)

வலியுறுத்தும் நீதிகள்: நடுவுநிலைமை

அருணகிரிநாதருடன் சந்தப் போர் புரிய வந்த வில்லிபுத்தூரார் அப்போட்டியில் தோற்று விட்டார். அவர் அருணகிரிநாதரை வலிய வம்புக்கிழுத்த பகைவரும் ஆவார். ஆனாலும் அருணகிரியார் பாடிய கந்தரந்தாதி யமகப் பாடல் கட்கு உடனுக்குடன் பொருள் கூறிய பெருமை போற்றுதற் குரியது என்று நடுவுநின்ற நன்னெஞ்சுடன் தண்டபாணி அடிகள் அவரைப் புகழவும் தயங்கவில்லை. பாட்டின் ஒரெழுத்தையும் விடாமல் கவனித்து உரை கூறிய வில்லிபுத்தூரார் 'திதத்த' என்று தொடங்கிய கந்தரந்தாதிப் பாடலுக்கு உரை கூற இயலாமல் தடுமாறித் தோல்வியை ஒப்புக் கொண்டமையை,

''தெருட்சீரான் ஆதலினால் தோல்வி யேற்றுச்
சிரங்குனிந்தான் அப்பெருமை சிறிதன்றம்மா''

என்கிறார். (வில்லிபுத்தூரார் கலகச் சருக்கம். 39) அருணகிரிநாதர் வாய்மொழி மூலமும் இந்நடுநிலைப் பண்பை வலியுறுத்துகிறார் தண்டபாணி அடிகள். (மேற். பா. 29) வில்லிபுத்தூரார் போட்டிக் கழைத்து வந்துள்ள செய்தியை அமைச்சன் மூலம் அவருக்குத்

தெரிவித்துத் தான் என்ன உதவி செய்ய வேண்டும் என்று வினவியபொழுது, "ஓரம் புகலாமல் பொதுவாதல் போதும் என்றான்" என்பதால் நடுவுநிலைப் பண்பை அருணகிரியாரும் வலியுறுத்தியதாகக் காட்டுகிறார்.

2. நம்பிக்கை மிகுந்த வழிபாடே பயனுடைத்து

"தெய்வம் அப்படி நம்பிய பேர்களைச் சீரழித்திட மாட்டாது
உய்வதற்கு மெய்ப் பத்தியிற் கருமமே உயர்ச்சியென்று"
(சம்பந்தாண்டான் பகைமைச் சருக்கம்-38)

என்ற பாடலடிகள் அன்புடையவர்கள் அருள்பெற உறுதியான வழிபாடும், நம்பிக்கையும் அடிப்படையாகும் என்கின்றன. தாசமார்க்கத்தையும், சத்புத்ர மார்க்கத்தையும் அவர் வலியுறுத்துகிறார். இவ்வாறு ஒரு நீதிக் கருத்தைக் கூற நினைத்தால் புராணத்தின் இடையில் தற்கூற்றாக அமைத்துத் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கிறார்.

3. போதுமென்ற மனம் வேண்டும்

தன் உடல் எரியுண்டது என்பதை அறிந்த அருணகிரியார் கவலை கொள்ளவில்லை. அதுவே முருகன் திருவுள்ளம் என்று அமைதி கொண்டார். இவ்விடத்து தண்டபாணியடிகள் அருணகிரிநாதரின் 'போதுமென்ற மனத்தைப்' புகழ்கிறார். "பெற்ற தாற்களிப் படைவது மேலவர் பெற்றி" என்ற அடி நோக்குக. (பாரிசாதச் சருக்கம் – பா. 18)

4. உடல் நிலையற்றது

இந்த உலகில் மனித யாக்கை நிலையில்லாதது என்ற கருத்தை கிளி உடலில் இருந்த அருணகிரியார் வாயிலாகவே (மேற். பா.24) "நிதமும் எத்தனை மானிடயாக்கைகள் நிலத்தினில் விழுகின்றது" எனக் கூறியிருப்பது காண்க.

5. கெடுவான் கேடு நினைப்பான்

அருணகிரியார் மீது வன்மம் கொண்ட சம்பந்தாண்டான் வாம முறையில் மதுவுடன் ஊன் படைத்து உயிர்க்கொலைப் பாதகம் செய்து பூசனை செய்தான். ஆனால் காளி சம்பந்தாண்டான் உயிரையே உண்டாள். நல்லோர்க்குக் கேடு நினைக்கும் தீயோர் தாமே கேடுறுவர் என்பதை தண்டபாணி

அடிகள் தற்கூற்றாகப் பாடியுள்ளார். (மேற். பா. 30) ''நன்றுளார்க்கிடை யூறுகள் விளைத்திட நாடுநர்க் கதுதான் வந்து ஒன்றும்'' என்ற அடிகளில் மேற்சுட்டிய கருத்து பொதிந் துள்ளது.

தமிழார்வம்

தண்டபாணியடிகளின் தமிழார்வம் அருணகிரிநாத அடிகள் புராணத்தில் பல வழிகளில் வெளிப்படுகிறது. அவரது பரந்த தமிழறிவைப் புலப்படுத்துவது போல பல தமிழ் நூல்களின் பெயர்களும், தமிழ்ப் புலவர் பற்றிய குறிப்புகளும் ஆங்காங்கு இடம் பெறுகின்றன. சுந்தரர் எழுதிய திருத்தொண்டத் தொகையும் அதன் செய்தியும் கூறி அந்த அடியவர் தாள்களைப் போற்றுகிறார். (பொதுப்பாயிரம், பா. 5) தமிழ் மேல் கொண்ட பற்று காரணமாக அகத்தியரின் பெருமையைப் பல பட விதந்தோதுகிறார். (பூர்வ புண்ணியச் சருக்கம் பா. 9-32) சைவ சமய குரவர் நால்வர் பதிகங்களையும் பெற்ற பெருமை திருவருணைத் தலத்திற்கு உண்டு என்று பெருமை பொங்கக் கூறும்போது அவரது தமிழறிவு வெளிப்படுகிறது. (திரு. அவதாரச் சருக்கம் பா. 7) அருணகிரிநாதர் எவ்வெப்போது எவ்வெந்நூல் களைப் பாடினார் என்ற நுட்பமான குறிப்புக்களைக்கூட அவர் பற்றிய புராணத்தில் கூறுவதால் தண்டபாணி அடிகள் அருணகிரி நாதரின் நூல்களை ஆழமாகக் கலந்து பயின்றவர் என்பதும் புலனாகிறது. பொய்யாமொழிப் புலவர், நக்கீரர், கண்ணப்பர் முதலியோர் பற்றியும் மகாபாரத நிகழ்ச்சிகள் குறித்தும் பூர்வ புண்ணியச் சருக்கத்தில் விரிவாகவே பாடியுள்ளமையும் எண்ணற் குரியது. வில்லிபுத்தூரார் அருணகிரிநாதரைப் பகையாக எண்ணியவராயினும் அவர் தமிழறிவைக் குறிப்பாகச் சுட்டி வியக்கிறார் தண்டபாணியடிகள். (வில்லிபுத்தூரார் கலகச் சருக்கம் பா. 12).

''வேதியன் தமிழ் வழவழ வென்பவர் வெருவ'' அவர் சந்தப் பாடல் பாடுவதில் வல்லவர் என்கிறார். திருவருணைக் கோயிலின் வல்லாளன் கோபுரம் மிகப் பெருமை சான்றது. அக்கோபுரப் பெருமைக்கு இணையான உவமையாகத் தமிழையே எடுத்தாள் கிறார். (திரு. அவதாரச் சருக்கம் - பா. 16).

சமுதாயக் கருத்துக்கள்

1. தண்டபாணி அடிகளுக்கு புராணக் கதைகளின் மேல் மிகுந்த நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கை இல்லாத சமுதாயத்தினரைக் கண்டு அவர் மனம் வெதும்புகிறார். (சிறப்புப் பாயிரம் – பா. 11) வியாசர் பற்றிய புராணக் கதையையும், அருணகிரிநாதரின் பிறப்பு முறை, பிறந்தபொழுது, அவரது கிளி வாழ்க்கை முதலியவற்றையும் ஏற்றுக் கொள்ளாத மக்கள் கூட்டம் இருப்பதைச் சுட்டிக் காட்டி அவர்கள் கருத்துக்களைத் தள்ளுகிறார். (திரு. அவதாரச் சருக்கம் – பா. 44, 46; கிளி வாழ்க்கைச் சருக்கம் – பா. 25).

2. அருள் வாழ்வில் ஈடுபடும் சிலர் அருட்பேறு கைவரும் முன்பே முற்றும் எய்தினர் போல உருக்கொண்டு நடிக்கின்றனர். இது ஒரு சமுதாயக் குறைபாடு ஆகும். இக் குறைபாடு இல்லாத பெருமையுடையவர் அகத்தியர் (பூர்வ புண்ணியச் சருக்கம் – பா. 12) இழிகுலத்தில் பிறந்த மக்கள் வாழ்வில் எத்தனை பேறுகளைப் பெற்றாலும் அழிவில்லாத மெய்ப்பொருளை விரும்ப மாட்டார்கள் என்கிறார். (மேற். பா. 33).

3. பொதுவாக மக்கள் மந்திரம், மகளிரை வசியம் செய்யும் எந்திரங்கள், செம்பைப் பொன்னாக்கும் இரசவாதம் போன்ற வற்றில் மிகுந்த ஈடுபாடு உள்ளோராய் இருக்கின்றனர். உண்மைத் தவசிகளை அடையாளம் கண்டு தெய்வமாகப் போற்றும் மனப் பக்குவம் சமுதாயத்தில் பெரும்பான்மை யோருக்கு வாய்க்கவில்லை என்று மனம் குறைப்படுகிறார். (மேற். பா. 15 – 17).

4. இலக்கியப் படைப்பில் கூட சில உண்மைகளையும், நடப்பியல் தன்மையையும் ஏற்றுக் கொள்ளாத பண்டிதர் கூட்டம் உள்ளது. அத்தகையோர் விமர்சனம் பற்றித் தனக்குக் கவலை இல்லை என்கிறார். பொதுவாக நகர வருணனை பாடும் புலவர்கள் இல்லாத வயலையும், கரும்பையும், கமுகையும், வாழையையும் இருப்பதாகக் கற்பனை செய்து பாடுவர். ஆனால் தண்டபாணி அடிகள் புதுமையான முறையில் இல்லது புனையும் கற்பனையை ஒதுக்கிவிட்டு அவ்வூரிலிருக்கும் மலை, கோயில், விழா, தவசிகள் பற்றி மட்டுமே வருணித்துள்ளார். இது செம்முறை அன்று என சமுதாயத்தில் யார் விமர்சித்தாலும்

அதைப் பற்றித் தனக்குக் கவலை இல்லை என்கிறார். (திரு. அவதாரச் சருக்கம், பா. 17 – 21)

சமயக் கொள்கை

1. தண்டபாணி அடிகள், சூரிய வழிபாடு, சிவ வழிபாடு, சக்தி வழிபாடு, திருமால் வழிபாடு, கணபதி வழிபாடு, முருக வழிபாடு என்ற ஆறு சமய நெறிகளையும் ஒத்த நோக்குடன் ஏற்றுக் கொள்கிறார். அவர்களுடன் கலைமகள், சைவ நாயன் மார்கள், கௌமார அடியவர்கள் நூற்றெண்மர், வீரவாகுதேவர், அகத்தியர், அருணகிரிநாதர் முதலிய அனைவரையும் வழிபடு கடவுளராகவே தன் நூலில் ஏற்றிப் போற்றுகிறார். (சிறப்புப் பாயிரம் & பொதுப்பாயிரம்) இத்தனை பேரையும் வழி பட்டாலும் தெய்வம் ஒன்றே என்ற கொள்கையை உடையவர். நினைப்பார் நினைக்குமாறு பலவாறு உருக்கொள்ளும் என்ற எண்ணத்தோடு,

"ஒருமையோடு பன்மைக்கும் நடுவாகி, உறவாகி".... வளர் தெய்வம் எனப் போற்றுகிறார். (பொதுப்பாயிரம் – பா. 6) சிவன், திருமால், பிரமன் என்ற மும் மூர்த்திகளையும் ஒப்ப நோக்குகிறார். பொதிய மலையை வருணிக்கும்போது அம்மலை சிவனை ஒத்துள்ளமைக்கும், திருமாலை ஒத்து உள்ளமைக்கும் பிரம்மனை ஒத்து உள்ளமைக்கும் தனித்தனியாக ஒப்பவே பாடல் புனைந்துள்ளார் (பூர்வ புண்ணியச் சருக்கம் – பா. 5 – 7) திருமால் சிவனை வழிபட்ட தலம் அண்ணாமலை என்று பாடும் போது அவ்விருவர்க்கும் இடையில் ஏற்றத்தாழ்வு பாராட்ட வில்லை. (திருவவதாரச். பா – 12) திருமங்கையாழ்வார் திருநெடுந் தாண்டகத்தில் திருமாலை சிவன் வழிபட்டார் என்று பாடுகின்ற, போக்கிற்கும், தண்டபாணியடிகளின் போக்கிற்கும் இடையில் உள்ள அடிப்படை வேறுபாடு ஒப்பு நோக்கின் புலனாகும்.

2. அருணகிரியார் தன் பாடல்களில் வைணவத்தின் மேல் வெறுப்பேதும் இன்றி மன்மதன் திருமால் மகன் ஆதலால் தன் மாமன் என்று பாடி இருக்கிறார். அவர் வழி போற்றும் தண்டபாணி அடிகளும் வைணவக் காழ்ப்புக் கொள்ளவில்லை. (அருட்பேற்றுச் சருக்கம் – பா. 38 & 39).

வில்லிபுத்தூரார் வைணவர் எனினும் அவர் தன் காப்பியத்தில் சிவபரத்துவம் பாடியுள்ளார். தமிழ்ச் சுவைக்காக சிவன் தொடர்பான அற்புத நிகழ்ச்சியைத் தொடர்புறுத்திப் பாட அவர் தயங்கவில்லை என்பதைக் குறிப்பிட்டு அப்பண்பு மேன்மையைப் பாராட்டுகிறார். (வில்லிபுத்தூரார் கலகச் சருக்கம்-பா. 10 & 11).

கச்சி மாநகரைச் சேர்ந்த வைணவன் வில்லிபுத்தூராரிடம் அருணகிரியாரைப் பற்றிக் கோள் மூட்டிய சிறுமையான செயலில் சமயக் காழ்ப்பு இருப்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார். ஆனால் அவ் வைணவன் எவ்வாறு தலந்தோறும் சென்று பெருமாளை வழிபட்டான் என்று தான் பாடும்போது அக்காழ்ப் புணர்வு சிறிதுமின்றி வருணிப்பது குறிப்பிடத்தக்கது. (மேற். பா. 13-18)

3. புறச் சமயங்களாகிய சமண பௌத்தங்களின் மேல் வெறுப்புக் கொள்கிறார் தண்டபாணி அடிகள். பொதிய மலையின் சிறப்பைக் கூறும்போது கூட, ''புத்தராதியர் நினை தொறும் நடுங்குறும் புகழ்'' உடையதென்கிறார் (பூர்வ புண்ணியச்., பா-2). சம்பந்தாண்டானுக்கும் அருணகிரியாருக்கும் இடையில் எழுப்பப்பட்ட சமண கௌமாரப் பூசலை சம்பந் தாண்டான் பகைமைச் சருக்கத்தில் பரக்கப் பேசுகிறார். இப் பகைமை எழும் முன்னரே திருவருணைக் கோபுரத்தின் சிறப்பைப் பற்றிப் பேசும்போது கூட 'தழைக்கைக் குரூரத்தர்' என்று சமணர்களை இகழ்கிறார் (அருட்பேற்றுச். - பா. 22) சக்தி வழிபாடியற்றும் சமணனின் திருநீறு குங்குமம் அணியாத தோற்றத்தை இகழ்கிறார் (சம்பந்தாண்டான் பகைமைச். பா. 8)

4. வாம முறையில் அமையும் பூசனை முறையை தண்டபாணியடிகள் வெறுக்கிறார். குன்றங்களிலும், குகை களிலும், கோயில்களிலும், மாடங்களிலும், தூண்களிலும் முருகப் பெருமானைக் கண்டு வணங்கிய அருணகிரிநாதர் போன்றே இவரும் முருகனைக் காணுமிடங்களிலெல்லாம் வணங்கும் கொள்கை உடையவர்.

புராண அமைப்பில் சில காப்பியப் பண்புகள்

தன்னேரிலாத் தலைவனை உடைய காப்பியம் போலத் தன்னேரிலா அருணகிரிநாதரையே தலைவனாகக் கொண்டது

இப் புராணம். பொதுப்பாயிரத்திலும் சிறப்புப் பாயிரத்திலும் முறையே 6 பாடல்களும், 8 பாடல்களும் கடவுள் வாழ்த்தாக அமைகின்றன. அக் கடவுள் வாழ்த்திலேயே வருபொருளும் உரைக்கிறார். அருணகிரிநாத அடிகள் புராணத்தைப் பாடத் தனக்கு அருள் புரியுமாறே வேண்டுகிறார். சிறப்புப் பாயிரத்தில் அவையடக்கச் செய்யுட்கள் நான்கு உள்ளன. (பா. 9-12) அதையடுத்து நூலுக்கு ஆதாரமாக அமைந்த கருத்துக்கள் எவையெனவும் கூறி விடுகிறார். (பா. 13) அறிவு, குருவின் சொற்கள், உலகோர் வழக்கு அனைத்தையும் அடியொட்டி முருகன் நெறிப்படுத்தியபடியே பாடியதாக நூலின் இறுதியிலும் கூறியுள்ளார். (கோபுரத்துச் சருக்கம் – இறுதி வெண்பா)

2. நூல் 9 சருக்கங்களாக அமைகிறது. மலை வருணனைகள் மூன்று இடங்களில் இடம் பெறுகின்றன. பொதிய மலை வருணனை பூர்வ புண்ணியச் சருக்கத்திலும் (பா. 1–7) அண்ணாமலை வருணனை திருவவதாரச் சருக்கத்திலும் (பா.1–7 &13–15) உள்ளன. தீர்த்த வருணனை கூறும் பாடல்கள் இரண்டு (மேற். பா 5 & 6) ஆற்று வருணனைக்கும் ஒரு பாடல் ஒதுக்குகிறார். சோணமாநதியின் சிறப்பு பா. 8-ல் இடம் பெறுகிறது. நாட்டு வருணனை நான்கு பாடல்களாகத் தொடர்கிறது. 9-ம் பாடலில் நாவலந்தீவை வருணித்து, பத்தாம் பாடலில் குமரிக் கண்டத்தை உள்ளடக்கிய நிலவுலகை வருணித்து, 11-ம் பாடலில் தொண்டை நாட்டை வருணித்து 12-ம் பாடலில் நடுநாட்டை வருணிக்கிறார். திருவருணை நகர வருணனை 17, 18, 19-ம் பாடல்களில் தொடர்கிறது. தேவைப்படும் இடங்களில் பிற நாட்டு வருணனையும் உண்டு. வில்லிபுத்தூரார் கலகச் சருக்கத்தில் பாண்டிய நாட்டு வருணனை முதல் ஐந்து பாடல்களில் உள்ளது. சூரியோதய வருணனை சம்பந்தாண்டான் பகைமைச் சருக்கத்தில் (பா. 32) இடம் பெறுகிறது. சூரிய அஸ்தமன வருணனை மாயை விளையாட்டுச் சருக்கத்தில் உள்ளது. (பா. 32) இவை மட்டுமின்றி திருவருணைக் கோபுர வருணனை அருட்பேற்றுச் சருக்கத்திலும் (பா. 16-22) கோபுரத்துச் சருக்கத்திலும் (பா. 52-63) மிக விரிவாக இடம் பெற்றுள்ளது.

3 மேற்சுட்டிய வருணனைகள் மட்டுமின்றி காப்பியத்தில் இடம் பெறும் கிளைக் கதைகள் போன்று வல்லாள தேவன் பெருமையை எடுத்துக் காட்டும் அற்புத நிகழ்ச்சி கோபுரத்துச் சருக்கத்தில் இடம் பெறுகிறது பருவ புண்ணியச் சருக்கத்தில் இடம்பெறும் அருணகிரிநாதரின் முந்தைய ஆறு பிறவிகளும் தனித் தனிக் கிளைக் கதைகளாகும், தகுதி உடையவையே.

4 அருணகிரிநாதரின் பிறப்பும் வளர்ப்பும் நன்மக்கட்பேறு என்னும் காப்பியக் கூறாகும் தகுதி உடையது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருட்களுள் பொருள் தவிர்ந்த பிற மூன்றும் இங்கே இடம் பெற்றுள்ளன.

முடிவுரை

இதுகாறும் கூறியவாற்றான் அருணகிரிநாத அடிகள் புராணம் ஒரு மெய்யடியாரின் வரலாறைச் சுவைபட எடுத்துக் கூறும் பெருமை புலனாகிறது.

தண்டபாணியடிகள் தவநெறி

பொன். கணேசன்

வண்ணச்சரபம் தண்டபாணியடிகள் திருநெல்வேலிப் பகுதியில் செந்தினாயகம் பிள்ளைக்கும் பேச்சிமுத்தம்மைக்கும் நன்மகனாகப் பிறந்தவர். சங்கரலிங்கம் என்பது பெற்றோர் இட்டு வழங்கிய பெயராகும். இளம் பருவத்திலேயே 'தவமும் தவமுடையார்க்காகும்! என்றபடி பூசை, செபம், தவம் இயற்றி வந்தவர். கடந்த நூற்றாண்டில் மிகுதியான பாடல்களைப் பாடி, ஒலைகளில் தம் கைப்பட எழுதி வைத்த பெரும்புலவர். அடிகள் முருகப்பிரானைப் பற்றி மட்டும் பத்தாயிரம் பாடல்கள் பாடியுள்ளார்.

அடிகள் தவக்கோலம்

சிறு வயதிலேயே இலங்கோடு, கௌபீனம், முழுநீற்றுப் பூச்சு, தண்டம், பாதுகை, அக்கமாலை பூண்டு விரிந்த தலை முடியுடன் இருந்ததால் தண்டபாணி சுவாமிகள் என்னும் பெயரினைப் பெற்றார். அடிகளின் துறவுக் கோலத்தைத் தேனூர். வரகவி. வே. செ. சொக்கலிங்கனார் தமது சேய்த் தொண்டர் புராணம் - தண்டபாணி நாயனார் புராணத்தில்

"மிகமகிழ் வொடுபெற் றென்றும் வேல்வழி பாடும் இன்பக்
குக வழிபாடும் ஆற்றிக் கோவணங் குறடு பொற்பார்
சிகைதிரு நீற்றுப் பொற்பை செபமணிமாலை மற்றும்
புகலணி பலவும் பூண்டு பொலியுமா தவசிற்கோலம்"

(2514) தண்டபாணி நாயனார் புராணம்.

எனக் கூறுகின்றனர்.

இளம்பருவம் முதற்கொண்டே சூர்தடிந்து தேவர்க்கெல்லாம் புதிய வாழ்வளித்த தெய்வப் புனிதவேல் வழிபாடே நற்கதி தரும் என்று உளத்திற் கருதி அத்தொண்டே தொண்டாய் எஞ்ஞான்றும் வேல்வழிபாடாற்றி, மிகுந்த பேரார்வத்தோடு கலியுக வரதனாகிய குமரனைப் போற்றி வந்தார். "தவஞ்

செய்வார் தங்கருமம் செய்வார்'' என்றபடி பெரு வடிவான ஆறு திருமுகங்கள் பன்னிரு கைகள் முதல் மயில் வாகனம் அதன் இரு கால்களில் நாகங்களைப் பூண்டிருப்பது வரை தியானித்துத் தவம் செய்தவர். ஆறு அகவை முதற்கொண்டே ஆறெழுத்துச் செபம், வேற்பூசை, தியானம் இவற்றை மேற்கொண்டதன் பயனாக எட்டரை அகவையிலேயே புதிய பாடல்களைப் பாடும் வாக்கு வன்மை எய்தினார். முருகப் பெருமானை மனக் கண்முன் காணப் பெற்றாராயினும் தூலக்கண்காணக் காட்சி பெற வேண்டினார்.

திருமலைக்குச் சென்றார் அங்குக் காட்சி பெறாமையால் மலை மீதிருந்து உருண்டார். முருகப் பெருமான் உடல் ஊன மின்றிக் காத்தார். இவ்வாறு முருகப் பெருமானை வழிபட்ட அடிகள், இறுதியில் குருவடிவமான பழனித் தண்டபாணி வடிவத்தையே விரும்பினார். இச் செய்தியைத் தாம் இயற்றி யருளிய 'பழனித் திருவாயிர' நூலில் பல இடங்களில் கூறியுள்ளார்.

அடிகள் மேற்கொண்ட தவம்

தெய்வத் திருவள்ளுவர் 'தவம்' என்ற அதிகாரத்தில்

''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு''

என்று தவத்திற்கு இலக்கணம் கூறியுள்ளார். இதனையுணர்ந்த தவச் செல்வராகிய அடிகளும், கொலை, புலை இவ்விரண்டும் எவ்விடத்தும் கூடாதென்ற தீவிரக் கொள்கையுடையவராய் இவ்விரண்டு அறங்களையும் மிகுதியும் வற்புறுத்துவார்.

தம் மனுநெறித் திருநூலில் கொல்லாமை என்ற அதிகாரத்தில் இறைவனே ஏவினும் கொல்லக் கூடாது என்பதனை,

''ஈசனெதிர் வந்துமற்றோர் இன்னுயிரைக் கொல் எனினும்
ஆசகன்ற சீரியரைப் பார்''

''எவ்வுயிரும் ஈசற்கிருப்பிடம் என்றுணரான்
கௌவு பெழ்வாய் நாயிற்கடை''

என்று கொல்லாமையை வற்புறுத்துபவர், 'புலையாடாமை' என்னும் அதிகாரத்தில் புலால் உண்ணாமையை,

''சேயில் இனிதாத் திகழ்சிலவற்றா னுண்பார்
நாயில் இழிந்த நார்''
''காய்ந்தமலம் தின்னும் கரம்பன்றியிற் கடையே
மாய்ந்த பிணத் தூனருந்து வார்''

என்றவாறு கூறுகின்றார்.

இனி, சைவாகமங்களில் இறைவனை அடைதற்கு நான்கு நெறிகள் கூறப்பட்டிருக்கின்றன. அவை சரியை, கிரியை, யோகம்' ஞானம் என்பன. இவை ஒன்றற்கு ஒன்று சாதனமும் சாத்தியமுமாக, இறுதியாகிய ஞானத்தால் வீடு அடையக்கூடும், என்றும் கூறப்பட்டிருக்கின்றன.

ஞான நூலாகிய சிவஞானபோதம் எட்டாம் நூற்பா உரையில் 'தவம்' என்பது சரியை, கிரியா யோகங்களை உணர்த்தும் என்ப. ''ஈண்டுத் 'தவம்' எனப்பட்டன பிறவல்ல வென்பார், சரியை, கிரியா யோகங்களை எனக் கிளந்துரைத்தார்'' என்பது சிவஞான முனிவர் உரை. ஆகலின் சரியை முதலிய மூன்றனையும் தவம் என்னும் சொல் உணர்த்தும் என்பது புலனா கின்றது. ''விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும், அரும்பு மலர் காய் கனி போல் ஆகும்'' என்பார் தாயுமான அடிகள்.

இந்த நான்கு தவநெறிகளைச் 'சரியை' (தொண்டு நெறி) கிரியை (மகன்மை நெறி) யோகம் (தோழமை நெறி) ஞானம் (அறிவு நெறி) என்பர். இவைகளை வடமொழியில், தாச மார்க்கம், சந்தான மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பர்.

சரியை என்பது இறைவனது உருவத்திருமேனிகளில் அவனை நினைந்து வாழ்த்துதலும் வணங்கலும் வேண்டிய பணிகளைச் செய்தலும் ஆகிய புறவழிபாடுகளேயாகும். இதனை அடிகள்,

''மட்டு மலரால் அரன்தாள் அருச்சனைசெய்து
இட்டுண்டு வாழ்தல் இதம்''

என்கின்றார்.

கிரியை என்பது இறைவனது அருவுருவத் திருமேனியாகிய இலிங்கமூர்த்தத்தை அணுகியிருந்து, அதன்கண் அப்பெருமானை

'மந்திரம், கிரியை, பாவனை' என்ற மூன்றினாலும் அகத்திலும் புறத்திலும் பலவகை உபசாரங்களையும் முறைப்படி செய்து வழிபடுதல்.

அடிகள் மந்திரம் செபித்தலைப் பற்றி 'மந்திர சித்தி' எண்ணும் அதிகாரத்தில்,

''எண்ணியவா றாற்றும் எழுகோடி மந்திரத்தின்
திண்ணிமையும் தெய்வச் செயல்''

''மோக்கம் வரை வேட்டோர் முழுமந்திரம் செபித்தால்
வாக்கணியும் சித்தும் வரும்''

என்றவாறு கூறுகின்றார்.

யோகம் என்னும் வட சொல்லிற்குப் பொருள், கூடுதல் அல்லது ஒன்றுதல் என்பதாகும். உயிர் இறைவனோடு அறிவால் ஒன்றுதல். முற்றத் துறந்த முனிவரே யோகத்திற்கு உரியவராவர். புறத்தே பரந்து சென்று உலகப் பொருள்களோடு ஒன்றியே பழகிவிட்ட மனம் முதலிய அந்தக் கரணங்களை அவற்றின் மேல் செல்லாதவாறு அடக்கி நிறுத்தி, இறைவனோடு ஒன்றச் செய்வதற்கு இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று யோகம் எட்டுக் கூறுகளாகப் பகுத்துச் சொல்லப்படுகின்றது.

யோகத்தில் மனத்தை அடக்குதல் இன்றியமையாதது. ஆதலின் அதனை அடிகள்,

''நெஞ்சம் ஒருகுறியா நிற்க நிறுத்துவதே
சஞ்சலம் தீர்த் தாளும் தவம்''

என்று குறிப்பிடுகின்றார்.

ஞானம் என்பது அறிதல். தத்துவ ஆராய்ச்சி வழியாக இறைவனை அறியும் அறிவே ''ஞானம்'' என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இது பதிஞானம் எனப்படும். இதனை,

''அதிகவித பேதத் தண்ட பிண்டத் திற்கோர்
பதியெனவே தேர்தல் பயன்'' (பதிஞானம்–1)

''ஒன்றுண்டு அதைத்தானே ஒவ்வொருநூல் ஒவ்வொருவாறு
என்றும் புகன்றிகலுமே'' (சாத்திரஞானம் – 3)

என்றவாறு கூறுகின்றார்.

மேலும் தண்டபாணியடிகள், சரியை, கிரியை, யோகம் ஆகிய தவம் முயல்வார் மேற்கொள்ளும் செயல்களையும் அவர் அடையும் பேறுகளையும் குறிப்பிடுகின்றார். சரியையாளராகிய தாசமார்க்கத்தார்,

''அண்டர் பெருமான் அமர்ந்தருளும் ஆலயத்தின்
தொண்டனைத்தும் செய்திடல் நன்று'' என்றும்,
''கைத்தொண்டும் வாய்த்தொண்டும் காற்றொண்டும் செய்வானே
மெய்த் தொண்டர் தங்களுக்கோர் வேந்து''

என்றும், அவர் அடையும் பயனாகிய இறையுலகு அடைதலை,

''தாசமார் கத்தோர் தமதாய சலோகம்
பேசருமெய் வீட்டின்முதற் பேறு'' என்றும் கூறுவார்

இறைவனின் உருவைப் பெற்றிருத்தலாகிய யோகியர் நிலையை,

''புழுவேட் டுவனாதல் போலும் தகைத்தே
வழுவாத யோகத்தின் மாண்பு''

''தன்னுருவம் நல்கும் தலைவன் எது நல்கான்
என்னும் அறிஞர் சிலரே''

என்றும், இறைவனுடன் ஒன்றுபடுதலாகிய ஞானியர் நிலையை,

''கசிவுறுபே ரன்பாற் கலந்துகலந் தொன்றும்
அசிபதமே சாயுச்சி யம்''

என்கிறார்.

முடிவாகத் தவநெறி நிற்பார்க்கு இறைவன் அருளும் முத்திப் பெருமையைப் பற்றி, ''ஈசன் கொடுக்குமவை எல்லாவற்றும் பெரியது ஆசகன்ற முத்தியதே'' என்கின்றார்.

அடிகள் தன் தவநிலையைப் பற்றிக் 'குருபரதத்துவம்' என்னும் நூலில், ''சோறுமனை தோறருந்துந் துணிவெய்திக் கற்கலையும் துகர்தீர் அக்கும் நீறுமிகப் புனைந்தும்'' என்று தம் தவவேடத்தைப் பற்றியும், ''நெடுநாளாகச் சண்முகனை நினைத்துத் தேறி'' என்று தம் இடையறாச் சிந்தனை பற்றியும், ''சருவசடாக் கரமெனும் மந்திரம் செபித்திட்டு'' என்று குமரனுக் குரிய ஆறு எழுத்து மந்திரம் செபித்தமையும், ''மூன்றிய

மாமலைக்குவட்டி உருண்டெழுந்தும் தவமுயன்றும்'' என்று தன் தவநிலை பற்றியும், ''ஆறுவகை நெறியினுக்கும் பொதுவாகித் தனித்தனி பாட்டளக் கொண் ணாவாய்க் கூறலுற்று'' என்று வாய்த்தொண்டு பற்றியும், ''கோலம் நீடுறு பூசைமிக் காற்றலே குணம் எனக் கொடு வாழ்ந்தேன்'' என்று மிகுந்த பூசை செய்தமை குறித்தும், ''ஒருதி னம்பெரும் பூசைசெய் துடலினைப் புடனிருந் திடும் வேளை'' என்று பெரும் பூசை செய்து உடல் இளைப்புற்றமை குறித்தும் கூறுகின்றார்.

மேலும் அடிகள், எந்த மூர்த்தியைத் தியானித்தாலும் வேறு வேறென்று பேதமுறாமல், எல்லாம் முடிவில் பரம்பொருள் என்று என்றறிந்தால் அப்படியாகும் எனக் கண்டார்.

அடிகள் மிகு தவமியற்றிச் சூரியனைக் கண்டமையையும் பிள்ளையாரைக் கண்டமையையும் தட்சிணாமூர்த்தியைப் பார்த்தமையையும் திருமாலைப் பார்த்தமையையும் சத்தியைப் பார்த்தமையையும் கூறும் அடிகள் முருகப்பிரானைக் கண்டமையை,

> ''சிவன்மகன்
> நுவல்திசை ஆறும் முகங்களாகக் காட்டி
> தவபல மொன்றே சத்தியம் என்னும்
> தன்மையும் தெரித்தனம் அன்றே''

என்கிறார்.

இதுகாறும் அறிந்தவற்றால் தண்டபாணியடிகள் இளமை முதல் வேல் வழிபாடு செய்தல், ஆறெழுத்து உருவேற்றுதல், அருந்தவம் இயற்றல், அதன் பயனாகத் தெய்வத் தீந்தமிழ்க் கவிகள் இயற்றல், பல தலவழிபாட்டையும் பல கடவுளர் வழி பாட்டையும் மேற்கொள்ளல், சமய வேறுபாடின்றித் தோத்திர நூல்கள் அருளல், பல அருள் ஆடல்கள் செய்தல் ஆகியவற்றை அறிந்து மகிழ்கின்றோம்.

முருகப்பெருமான் திருவருளும், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் திருவருளும் பெற்றுய்வோமாக.

சுவாமிகளின் சமய நெறியும் முறையும்

கு. கதிரேசன்

முன்னுரை

தென்பாண்டித் திருநாட்டில் சைவ வேளாளர் மரபில் செந்தி நாயகம் பிள்ளை, பேச்சி முத்தம்மாள் தம்பதியருக்கு மகனாகத் தோன்றிய சங்கரலிங்கம் என்பவரே பின்னாளில் தண்டபாணி சுவாமிகள் எனப்பட்டார். இளமைக் காலத்தி லேயே விநாயகர் மந்திரத்தையும் லட்சுமி மந்திரத்தையும் திரு முருகனின் ஆறெழுத்து மந்திரத்தையும் கற்று ஓதும் வாய்ப்பு கிட்டியமையால் அதுமுதல் இறை பக்தியும் இறையருளும் பெற்றுத் திகழ்ந்தார். அவர் இந்து சமயக் கடவுள்களை நினைத்துத் தவமியற்றி அவ்வலிமை மூலம் பல அதிசயங்களை நிகழ்த்தி சித்தர் போன்று வாழ்ந்தார். இறைவனைப் பொருள் ஆழம்மிக்க பல ஆயிரம் பாடல்களால் புகழ்ந்தும் வேண்டியும் பாடிச் சிறப்புப் பெற்றார். அவர் பாடிய பாடல்களின் மூலம் அவரது சமய நெறியையும் முறையையும் அறிந்து கொள்ள முடியும். அது அவரது சமயப் பணி வரலாற்றை வரையறுக்க மிகவும் உதவும். அந்த அடிப்படையில் இக்கட்டுரை தண்டபாணி சுவாமிகளின் சமய நெறியையும் முறைகளையும் அறிமுகம் செய்யும் நோக்கில் அமைந்துள்ளது.

தண்டபாணி சுவாமிகளின் சமய நெறி

தண்டபாணி சுவாமிகள் இந்து சமயத்தைச் சேர்ந்தவர். இந்து சமயம் ஏழு வகையான உட்பிரிவுகளைக் கொண்டது. இந்த ஏழு வகையான பிரிவினுள் சுவாமிகள் எந்தப் பிரிவைத் தனது சமய நெறியாகக் கொண்டார் என்று ஆராயும் இடத்து சற்று மயக்க நிலையே தோன்றுகிறது. காரணம் அவர் ஏதாவது ஒரு குறிப்பிட்ட நெறியைச் சேர்ந்தவர் என்று கூற முடியவில்லை. ஏழு சமய நெறிகளையும் ஏற்றுக் கொண்டிருக்கும் அவரது ஏக நெறிக் கொள்கையை 'ஏகன் எழுபது' என்ற நூல் மூலம்

அறியலாம். சௌரம், சைவம், சாத்தேயம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சமயாதீதம் என்னும் ஏழு சமயங்களைப் பற்றியும் அவர் எழுதிய நூலே ஏகன் எழுபது ஆகும். இவ்வாறு ஏழு சமய நெறிகளையும் பற்றி அவர் பாடி யிருப்பதால் அவருக்கு ஒரு குறிப்பிட்ட சமய நெறி இருந்தது என்று கூற முடியவில்லை எனவே அவர் ஏக சமய நெறியாளர் என்றே கூற வேண்டியுள்ளது. ஆயினும் அவர், இறைவன் ஒருவனே என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார். எனவே மார்க்கம் பலவாயினும் இறைவன் ஒருவன் என்று உறுதியாக நம்பியவர். இதனை உணர்த்தும் பல பாடல்களைப் பாடித் தனது சமயக் கொள்கையை வெளிப்படுத்தினார். இத்தகைய பாடல்கள் சுவாமிகளின் சமயநெறிக் கொள்கையையும் முறை களையும் அறியத் தருகின்றன. சமயங்கள் யாவும் ஒன்றே; அவை புலப்படுத்தும் இறைவனும் ஒருவனே!

தண்டபாணி சுவாமிகளின் இளமைக் காலமும் வழிபாட்டு முறையும்

இளமைப் பருவத்தில் கல்வி கற்பதே சிறப்பு என்பது தொன்று தொட்டு பின்பற்றப்பட்டுவரும் மரபு. அதற்கேற்ப இளமைப் பருவத்தில் சிறந்த கல்வி அறிவு படைத்த தண்டபாணி அடிகளார் தமது எட்டாவது வயதிலேயே கருத்தாழம் மிக்க செய்யுட்கள் இயற்றும் திறம் பெற்றிருந்தார். தமது தந்தையின் நண்பரான சீதாராம நாயக்கர் மூலம் மந்திரங்களையும் வேல் வழிபாட்டு முறைகளையும் கற்று அதனை வாழ்விலும் கடைபிடித்தார். பதின்மூன்றாவது வயதில் முருகதாசர் என அழைக்கப்பட்டார். வேல்பூசையில் ஆர்வம் கொண்டு ஆறெழுத்து மந்திரத்தைச் சொல்லி பூசித்து வந்தார். இதனால் இனிய தமிழ்ப்பாடலை இயற்றும் திறம் பெற்றார் என்பர்.

சுவாமிகள் இளமைப் பருவத்தில் சிறு தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கச் செய்தி. (கலைக் களஞ்சியம் தொகுதி 5: 441) இவ்வழிபாடு அவர் பிறந்த திருநெல்வேலி மாவட்டப் பகுதிகளின் கிராமங்களில் மிக அதிக மாகவும், ஆழமாகவும் பரவி வழக்கிலிருந்தது என்பதை பண்பாட்டு ஆய்வுகள் விளக்குகின்றன. அதோடு அப்பகுதி மக்களிடம் கல்வி, நாகரிகம், பண்பாடு முதலியவை போதிய

அளவில் வளர்ச்சி பெறவில்லை. எனவே அம்மக்களும் அவ்விடத்தில் வழங்கும் சிறு தெய்வ வழிபாட்டு மரபை அதிகமாகப் பின்பற்றியிருக்க வேண்டும். அதோடு தண்டபாணி சுவாமிகள் காட்டிய வேல் வழிபாட்டிற்கும் சிறு தெய்வ வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. சுவாமிகள் தாம் கற்ற லெட்சுமி மந்திரங்கள், ஆறு எழுத்து மந்திரங்கள், விநாயக மந்திரங்கள் ஆகியவற்றை வேல்வழிபாட்டின் மூலம் சிறு தெய்வ வழிபாட்டில் கலந்திருக்க வேண்டும். எனவே மக்களின் வாழ்வியல் பிரதிபலிப்பாக விளங்கும் சிறு தெய்வ வழிபாட்டை சமூக வாழ்வில் ஒன்றி வாழ்ந்த சுவாமிகளும் பின்பற்றியிருக் கலாம். அதன் தாக்கம் அவரையும் அறியாமல் அவரது பாடல் களில் வெளிப்பட்டிருக்கலாம். இந்த பின்னணியைக் கொண்டே சுவாமிகள் தொடக்க காலத்தில் சிறு தெய்வ வழிபாட்டு நெறி முறைகளைப் பின்பற்றி பிற்காலத்தில் தமது வழிபாட்டை முருகனுக்குக் கொடுக்கும் வழிபாடாக மாற்றினார். அதனால் வேல் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட சுவாமிகள் முருகன் வழிபாடு தொடக்க காலத்தில் சிறு தெய்வ வழிபாடாக இருந்து, முருகன் சிறப்புகளோ அருள் செய்யும் பண்புகளோ ஆளுமை பெற்று பெருந்தெய்வ வழிபாடாகப் பரிணமித்தன. எனவே தண்டபாணி சுவாமிகள் முதலில் சிறு தெய்வ வழிபாட்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பின்பு வேல் வழிபாட்டு முறையைக் கற்று, முருகதாசர் என்று சிறப்பு பெற்று, முருக வழிபாட்டில் ஈடுபட்டார் எனலாம்.

அடிகளின் வழிபாட்டு நெறியும் முறையும்

தண்டபாணி சுவாமிகள் சூரியன், சிவன், சக்தி, திருமால், கணபதி, முருகன் பொதுக்கடவுள் என்ற ஏழு சமயங்களின் கடவுளர்களுக்கு ஏற்ப ஏழு கிழமைகள் முறையே அமைத்து பாடல்களைப் பாடினார்.

> **''அருந்த பேதத்து அறுவகைச் சமயமும்**
> **அவைமுழுது ஒருவலும் தழுவலுமாகும்**
> **அத்த நெறி ஒன்றும் ஆய ஏழும்**
> **வழிபடற் பொருட்டே வாரம் ஏழாயவே''.**

என்ற ''சத்திய சூத்திரம்'' பாடல் ஒன்று மேற்கூறிய கருத்தை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. ஏழு கிழமைகள் ஏழு

சமயங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்னணி யிலேயே தண்டபாணி சுவாமிகள் ஏழாயிரம் பிரபந்தம் என்ற நூலை எழுதியுள்ளார். தண்டபாணி சுவாமிகள் ஒரு குறிப்பிட்ட சமய நெறியையும் முறையையும் பின்பற்றியவர் அல்ல; அவர் ஏகநெறிப்பண்பு உடையவராக இருந்தார் என்ற உண்மையை அறியத் தருகிறது.

தொடக்க காலத்தில் சிறு தெய்வ வழிபாட்டு நெறிகளிலும் முறைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சுவாமிகள் பின்னாளில் பெருந்தெய்வ மரபு முறைக்கு வருவதற்குக் காரணம் என்ன என்று பார்ப்பது அவசியம். அவர் பிறந்த சூழல் பெற்றோர் பின்பற்றிய மரபுநிலைப் பண்பாடு, வழிபாட்டு முறைகள் அவரது சமூகம் மற்றும் இடச்சூழல் ஆகிய காரணங்கள் அவரை சிறு தெய்வ வழிபாட்டு முறைகளில் ஈடுபடச் செய்திருக்க வேண்டும். ஆனால் அவர் சிறு தெய்வ வழிபாட்டு முறைகளில் இருந்த குறைபாடுகளினாலும் இளமை யிலேயே விநாயக மந்திரம் ஆறெழுத்து மந்திரம், திருமால் மந்திரம், வேல் வழிபாட்டு மந்திரம் ஆகியவைகளைக் கற்றமை யாலும் அதில் ஏற்பட்ட ஈடுபாட்டினாலும் சிறு தெய்வ வழிபாடுகளில் இருந்த உயிர் பலியிடுதல் உள்ளிட்ட வழக்காறு களினாலும் அத்தகைய உயிர்க் கொலையில் மனம் வெறுத்த மையாலும் புலால் உண்ணாத வாழ்வை விரும்பிய காரணத் தாலும் சுவாமிகள் சிறு தெய்வ வழிபாட்டு நெறிகளை ஒதுக்கி விட்டு பெருந்தெய்வ நெறிகளையும் முறைகளையும் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். உயிர்ப் பலியைப் பிரதானமாகக் கொண்ட சிறு தெய்வ வழிபாட்டை அடிகளார் கடுமையாக எதிர்த்தார். இக்கால கட்டத்தில் இராமலிங்க வள்ளலாரும் அடிகளாரும் ஜீவகாருண்யம் என்னும் உயிர் இறக்கக் கொள்கையை முழங்கி வந்தனர்'' என்ற மோகனரங்கனின் கூற்று (1991 : 86) மேற்குறிப்பிட்ட கருத்தை உறுதிப்படுத்து கிறது. இந்தப் பின்னணியில் அவர் பெருந்தெய்வ நெறிமுறை களை ஏற்றுக் கொண்ட பின்னும் அவருக்கு ஒரு நிலையான குறிப்பிட்ட சமயத்தின், குறிப்பிட்ட கடவுளின் வழிபாட்டு முறை பற்றிய கருத்தோட்டம் இல்லை. எனவே எல்லா கடவுள் களையும் எல்லா சமய நெறிகளையும் பற்றிப் பாடல்களைப் பாடி வைத்தார். ஆயினும் இறைவன் ஒன்றே என்ற அவரது கருத்திலிருந்து மாறவில்லை. அவர் முருகன் மீதே அதிக

ஈடுபாடு கொண்டு பாடியிருப்பதும் முருகனே தனக்கு மிகுந்த நம்பிக்கையையும் அருளையும் தந்தவன் என்று கூறி வேண்டி யிருப்பதும் முருகனிடம் உரிமையுடன் வேண்டி அருள் பெற்றிருப்பதும் தமது பெயரை முருகன் பெயராலேயே அமைத்துக் கொண்டிருப்பதும் தமது தோற்றத்தைப் பழனி தண்டபாணி போல் அமைத்துக் கொண்டிருப்பதும் இன்னும் பல அதிசயங்கள் நிகழ்த்திய பின் புலங்களும் அவர் திருமுருகன் மீதே அதிக ஈடுபாடு கொண்டு வாழ்ந்தமைக்குச் சான்றுகளா கின்றன. எனவே தண்டபாணி சுவாமிகளின் சமயநெறி ஏக நெறியாக இருந்தபோதிலும் அவர் முருக வழிபாட்டு முறை களையும், நெறிகளையுமே அதிகமாகப் பின்பற்றினார்; போதித்தார் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. எந்தக் கடவுளை வணங்கினும் அது முருக வழிபாட்டையே உணர்த்தும். முருகனது பல்வேறு வடிவங்களே மற்றைய எல்லா கடவுள் களும் என்று நம்பியவர் அவர். ஏழு சமய நெறிகளில் ஒன்றான சமயாதீத நெறியில் வணங்கப்படும் பரம்பொருள் உள்ளிட்ட பொதுக்கடவுள்கள் அனைத்தும் முருகனுடைய வடிவங்களே. அவற்றில் முருகனே உறைந்திருக்கிறார் என்று நம்பியவர் தண்டபாணி சுவாமிகள். எனவே சுவாமிகளின் வழிபாட்டு முறைகளில் விஞ்சி நிற்பது முருக வழிபாட்டு முறையே ஆகும்.

தண்டபாணி சுவாமிகளின் சமய ஈடுபாடு

சமய பேதச் சார்பற்ற பெருநெறிக் கொள்கையுடன் விளங்கியவர் சுவாமிகள். இவர் இந்து சமய பெருநெறி மரபின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். அதனால் சமண, பௌத்த சமயங்களை அதிகமாக வெறுத்தார். அதன் சமய நெறிகளையும் முறைகளையும் அவர் சாடினார். ஆனால் அவற்றின் கொள்கையான புலால் உண்ணாமை, கொல்லாமை, பலியிடாமை, பற்றற்ற தன்மை, ஆசைகளை வெறுத்து ஒதுக்கும் தன்மை ஆகியவற்றை அவரையும் அறியாமலேயே தம் வாழ்வில் ஏற்றுக் கொண்டார். அதோடு அச்சமயங்கள் காட்டும் துறவு நெறியை வாழ்க்கையில் பின்பற்றினார். இந்து சமயத்தில் அகச்சமயம், புறச்சமயம் என்னும் இருவகை இருப்பதை தத்துவங்கள் வழி அறியலாம். சைவம், பாசுபதம், மகாவிரதம், கானா முகம், வாமனம், வைரவம் என்ற ஆறும் ஆகச் சமயங்கள் என்றும்; தர்க்கம், மீமாம்சை, அத்வைதம், சாங்கியம், யோகம், பஞ்சரத்திரம் ஆகிய ஆறும் புறச்சமயங்கள்

என்றும் அழைக்கப்படுகின்றன. இத்தகைய பன்னிரு சமயங்களும் ஒரே பொருளையும் ஒரே கடவுளையும் உணர்த்துகின்றன என்பது தண்டபாணி சுவாமிகளின் கருத்து (அறுவகை இலக்கணம், பொருள் 116).

தண்டபாணி சுவாமிகளும் முருக வழிபாடும்

தண்டபாணி சுவாமிகள் முருகனுடைய அறுவகை மந்திரத்தையும் அறுவகைத் தெய்வங்களாகக் கொண்டு பாடியவர். ஆயினும் இறைவன் ஒன்றே; அந்த இறைவன் முருகனே என்ற கோட்பாட்டில் உறுதியாக விளங்கினார் பதிமூன்றாவது வயதிலேயே முருகதாசர் என்று அழைக்கப்பட்ட அடிகளார் காவியுடை, கௌபீனம் (கோவணம்) உத்திராட்சம், விபூதி அணிந்து வள்ளியூரில் உள்ள மலையில் துறவியாக மாறி வாழ்ந்தார்.

திருச்செந்தூர் முருகன் இவர் கனவில் தோன்றி முருக வழிபாட்டின் உயர்வையும் முருகனின் பெருமைகளையும் பாடுமாறு பணித்ததாகவும் அவ்வாறு பாடினால் இலை விபூதியும், உத்திராட்ச மாலையும் கொண்டு தருவதாகவும் கூறினார். அதை நம்பிய அடிகளார் முருகனைப் பற்றிப் பன்னிரு நூல்களை ஓலைச்சுவடிகளில் எழுதியும் முருகன் காட்சி தராததால் கோபமுற்று அந்நூல்கள் அனைத்தையும் கிழித்துப் புனலில் (கடலில்) வீசியெறிந்தார் என்றும் மற்றும் ஒரு நூலை அனலில் வீசி அழித்தார் என்றும் அவரது அறுவகை இலக்கணம் உள்ளிட்ட நூல்கள் வாயிலாக அறியலாம். திருச்செந்தூர் முருகனைப் பற்றிப் பாடிய பதினொரு நூல்களைக் கடலிலும் கழுகுமலை பற்றிய பாடல்களை அவ்வூர்க் குளத்திலும் எறிந்து அழித்தார். சத்தியக்கண்ணி என்ற நூலைத் தீயிட்டு எரித்தார் என்று மோகனரங்கன் கூறிய ஆய்வுக்கருத்து இங்கு குறிப்பிடத் தக்கது. இதனால் இறுதிவரை திருச்செந்தூர் முருகனைத் தரிசிக்கவே மாட்டேன் என்று கோபத்தில் இருந்ததாகச் செவிவழிச் செய்தி ஒன்று கூறுகிறது.

மேலும் சென்னை கந்தகோட்டப் பெருமான்மீதும் பழனியாண்டவர் மீதும் மாலை, அந்தாதி, பிள்ளைக்கவி, கலம்பகம், அலங்காரம், வகுப்பு, பஞ்சகம், சதகம் முதலிய

சிற்றிலக்கியங்களைப் பாடினார். இத்தன்மை முருகன் மீது அவருக்கு இருந்த அளப்பரிய ஈடுபாட்டையும் முருகனே எல்லாம் என்றும் அனைத்திலும் முருகனே என்று எண்ணும் அவரது முருக வழிபாட்டு நெறியையும் அறியத் தருகிறது. சுவாமிகள், மனவெளி நிட்டையிலும் உறக்கத்திலும் அருங்காட்சிகளைப் பெற்று வந்தார். தாமே முருகனை ஓவியமாக வரைந்து வைத்துக் கொண்டு அந்த ஓவிய வடிவ முருகனை வழிபட்டு வந்தார். எண்ணிலடங்காத தமிழ்ப் பாடல்களைப் பாடும் வல்லமையை ஓவிய வடிவில் அமைந்த முருகனே தமக்கு வழங்கியதாகக் கூறுகிறார். (வாழ்வியல் களஞ்சியம்: 1 88:9:179)

முருகன் அடிகளாரின் கனவில் தோன்றி அருணகிரிநாதரின் மறுபிறப்பு என்று கூறியதாகக்குறிப்பிட்டுச் செல்கிறார். இதனை, "ஏரார் தமிழ் பாடும் எனைக் கிளியென்று ஓராயிரம் உண்மை உரைத்தனனே'' என்ற பாடல் அடி மூலம் விளங்கிக் கொள்ள முடியும். முருகக் கடவுளின் வேண்டுகோளுக்கு இணங்க, 'அருணகிரிநாதர் சரித்திரம்' என்ற நூலைப் படைத்தார். தமது எழுத்தாணிக்குச் "சர்வசாதாரணி'' என முருகக் கடவுள் பெயரிட்டு அருள் செய்தார் என்று பெருமிதத்துடன் குறிப்பிடு கிறார்.

அவரது இறுதிக் காலத்தில் திருவாமாத்தூர் என்ற இடத்தில் ஒரு மடம் அமைத்துக் கொண்டு முருக வழிபாடு செய்தார். அக்காலத்தில் ஒருவருக்குக் கண்பார்வை பெறவும் ஒருவருக்குக் குழந்தை பிறக்கவும் முருகனைப் பாடிய தனிப்பாடல்கள் உள்ளன. இவை அடிகளார் ஒரு வகையில் 'சித்தர்' என்று கொள்ளும் கருத்தை உறுதி செய்கின்றன. முருகன் திருக் காட்சியைக் காண்பதே தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டிருந்தார். அவனருள் சந்நிதியில் பலவாறு வேண்டித் துதித்தும் தம் எண்ணம் நிறைவேறாமையால், மாளும் இவ்வுடலோடு மீளேன், அவனருளிருந்தால் காக்கட்டும்'' என்ற உறுதியுடன் தாமிரப்பரணி அருகில் உள்ள முருகன் திரும்பதியான திருமலையின் மேலிருந்து உருண்டார். முருகன் அவரைத் தடுத்து ஆட்கொண்டான் என்று கூறுவர். (த. கோவேந்தன் ஞாயிறு ஆயிரம் 1980:9)

முருகன் குறிஞ்சி நிலத்திற்கு உரிய கடவுள் அவனே பல பெயர்களில் வெவ்வேறு தெய்வமாக வழிபடப்படுகிறான் என்ற

கருத்தை அறுவகை இலக்கணம்: பொருள். 58 என்ற நூற்பா தெளிவுபடுத்துவதைக் காணலாம். முருகனை மிக உயர்வாகவும் உணர்வு பூர்வமாகவும் வர்ணித்துப் பாடும் சுவாமிகள் முருகனிடம் மிகுந்த உரிமை எடுத்துக் கொண்டவர். முருகன் ஒளிவீசும் தோள் ஆபரணங்களை அணிந்து விளங்கும் அழகை வர்ணிக்கும் சுவாமிகள் முருகனின் தோள்மீது கதிரவன் குடியிருப்பதுபோன்று உள்ளது என்று பாடுகிறார். இதனை,

''எல்லினங் குடியுற் றிருந்தலே போலும்
ஈகிரண் டங்தே மிசைத்தாய்''

(திருச்செந்தூர் பிரபந்தம்: செந்தினாயக சதகம் பா. 32) என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. முருகன்அவனது ஆருயிர் துணைவி தெய்வயானையுடன் அமர்ந்திருப்பதை, ''துள்ளிய சோலாடு சங்குல வும்பணை தோய்தரு செந்தியில் வாழ் தெள்ளிய மேலவர் நன்னிய வாறருள் தெய்வமடல் பாடியே''(திருச்செந்தூர் பிரபந்தம், குஞ்சரிமாலை பா: 78) என்ற பாடல் அடிகள் விளங்குகின்றன. தண்டபாணி சுவாமிகளின் இத்தகைய கருத்துக்கள் அவரது முருக பக்திக்கும் வழிபாட்டு நெறிமுறை களுக்கும் சான்றாக அமைகின்றன. இவற்றின் மூலம் அவரது முருக வழிபாட்டுச் சிந்தனைகளை ஓரளவிற்கு இனம் காண முடியும்.

தண்டபாணி சுவாமிகளின் சமய நெறியும் முரண்பாடுகளும்

தண்டபாணி சுவாமிகள், ஆறு சமயங்கட்கு ஆறு நாளும், சமயம் கடந்த பரம்பொருளுக்கு ஏழாம் நாளும் என்று பாடும் பணியே சிறந்த பணியெனக் கொண்ட பக்தராக விளங்கி வழிபட்டு வந்தார். எப்படி ஒருவர் ஆறு நாளைக் கடக்காமல் ஏழாம் நாளைக் கடக்க முடியாதோ அது போலவே இறை பற்றுடைய எவரும் ஆறு சமயங்களையும் கடக்காமல் சமயாதீதத்தை எய்த முடியாது என்று தமக்கே உரிய நடையில் தெளிவாக எடுத்துரைக்கிறார். முதலும் முடிவும் பரம்பொருளே என்பதை அவரது பாடல் மறைமுகமாகச் சுட்டிச் செல்கின்றன. ஆயினும் முருகனே அனைத்து கடவுள்களுக்கும் மூலம்; அனைத்து சமயங்களும் முருகனையே வந்து அடைகின்றன; எல்லா சமயத்திலும் முருகனே இருக்கிறான் என்பது போன்ற கருத்தை ஆங்காங்கே விட்டுச் செல்வது முரண்பாடான சிந்தனை. முருகனை மட்டுமன்று எல்லாக் கடவுள்களையும் உரிமையுடன்

திட்டுவதும் சில நேரங்களில் தமிழே சிறந்த மொழி என்பதும் தமிழ்மொழி உணர்வுடைய கடவுளே 'கடவுள்' என்று கூறுவதும் எல்லா கடவுள்களையும் விட சிறந்தது மனமே என்று பேசுவதும் ஒரு நிலையான கருத்தோட்டத்திற்கு வரமுடியாத முரண் பாட்டை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் தண்டபாணி சுவாமிகளே சமய நெறி தொடர்பாக ஒரு சரியான தீர்க்கமான கருத்து இல்லாமல் இருந்திருக்கிறார் என்று கொள்ள இடமேற் படுகிறது இளங்கோ போன்று எத்தெய்வத்தைப் பாடினாலும் அத்தெய்வத்தையே முழு முதலாகக் கொண்டவரோ என ஐயுறும் வகையில் சிறப்பாகப் பாடுகிறார். பழனித்திருவாயிரத்தில் திருமால் தாசராகவும், திருவாமாத்தூர்த் தலபுராணத்தில் சிவனடியாளராகவும் ஞாயிறு ஆயிரத்தில் சூரிய பக்தராகவும் காட்சியளிக்கிறார் (1981: 262) என்ற முனைவர் சிவகாமியின் கருத்து மேற்கூறிய தண்டபாணி சுவாமிகளின் சமயநெறிக் கோட்பாடு பற்றிய முரண்பாடுகளை உறுதிப்படுத்துமாறு அமைந்துள்ளது.

சிவகாருண்ய ஒழுக்கத்தைத் தனது சீரிய கொள்கையாகக் கொண்டு வாழ்ந்தவர் சுவாமிகள். அருளியல், சிவகருணை, தமிழ்ப்பண்பு, சமூகம், சமயம் ஆகியவற்றில் மக்கள் சிறப்புற்று வாழ வேண்டும் என்ற எண்ணம் அவருக்கிருந்தது. இறைவன் திருவருளை வேண்டி முறையீடு செய்யும் இயல்பை உடையவர். பற்றனைத்தையும் துறந்து, வடமொழி தாய் என்றால் வண்டமிழ் தந்தை என்பார் இவர். எனவே இதிலும் அவருக்கு நிலையான கருத்து இருந்ததாகத் தெரியவில்லை என்பது கண்கூடு.

சமரச சன்மார்க்க நெறியையும் கொல்லாமையாகிய அறத்தையும் வற்புறுத்திய வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளுடன் பலமுறை கலந்து பேசித் தோழமை கொண்டு வாழ்ந்தார். இவர் ஆன்மீக நெறி பற்றிய பாடல்கள் மட்டு மல்லாது அரசியல், சமுதாய சீர்திருத்தம், தமிழ்மொழி, விடுதலை உணர்வு ஆகிய பல்வேறு கூறுகளையும் பாடினார். எனவேதான் இவரது சமய நெறிக் கொள்கையில் ஒரு நிலையான நெறியையோ, கோட்பாட்டையோ இனம் காண முடியவில்லை.

முடிவுரை

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அகச்சமயம், புறச் சமயம் என்ற இருவகைச் சமயங்களையும் உள்ளடக்கிய இந்து

சமயத்தின் மீது தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். இதனால் பௌத்த – சமண சமயங்களை வெறுத்தவர். ஆயினும் அதன் சீவகாருண்ய ஒழுக்கக் கோட்பாட்டை வாழ்வில் கடை பிடித்தவர். அறுவகைக் கடவுளைக் குறிப்பிடும் அறுவகை நெறியைப் பாடி ஏழாவது நெறியான பொதுக் கடவுளைப் பாடியவர். ஆறு கடவுள்களையும் தாண்டியே பொதுக் கடவுளை அடைய முடியும் என்றவர். ஆனால் அவை அனைத்தும் முருகனையே குறிக்கும். முருகனே எல்லா வற்றிற்கும் உறைவிடம் என்று கூறி முருக வழிபாட்டு நெறி களையும் முறைகளையும் உயர்த்திப் பிடித்தவர். தன்னை முழுமையாகப் பழனி தண்டபாணிக் கோலமாக மாற்றிக் கொண்டவர். முருகனே தனக்கு எல்லாம் என்று பாடும் அடிகள் சிவன், திருமால், சக்தி, சூரியன், கணபதி, முருகன், பரம் பொருள் என்று அனைத்து கடவுள்களைப் பற்றியும் பல ஆயிரக் கணக்கான பாடல்களைப் பாடி பல அதிசயங்களை நிகழ்த்தி ஒரு சித்தர்போன்று வாழ்ந்தவர். இவரது சமய நெறியிலும் முறையிலும் காணப்படும் இந்த முரண்பாடுகளால் அவருக்கு ஒரு சமய நெறியோ முறையோ அதில் நிலையான கோட்பாடோ இருந்ததாகத் தெரியவில்லை. அவர் இந்து சமயம் முழுமை யையும் போற்றிப் புகழ்கிறார். எனவே அவரது சமய நெறியை ‘ஏகநெறி’ என்றும் வழிபாட்டு முறைகளை ‘ஏகசமய முறை’ என்றும் சொல்லலாம்.

துணைநின்ற நூல்கள்

1. தண்டபாணி சுவாமிகள், ஞாயிறு ஆயிரம், த. கோவேந்தன் (பதி) தமிழ்ப் பதிப்பகம், சென்னை – 1980.
2. மோகனரங்கன், கோ. தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார் திறம்பாய்வு, வசந்த பதிப்பகம், சென்னை – 1991.
3. தண்டபாணி சுவாமிகள், அறுவகை இலக்கணம், சிரவை யாதீனம் – கௌமாரமாடம், கோவை – 1978.
4. தண்டபாணி சுவாமிகள், திருச்செந்தில் பிரபந்தம் – 1, சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், 1969.
5. அன்னி தாமஸ், தமிழ் இலக்கியக் கொள்கை – 2, உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 1977.
6. சிவகாமி, சா. தமிழ் இலக்கியக் கொள்கை – 6, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 1981

ஞாயிறு ஆயிரம் - புறக்கட்டமைப்பும் அகவடிவும்

பொ. நா. கமலா

தோற்றுவாய்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய நூல் ஞாயிறு ஆயிரம். இஃது ஆயிரத்துநூறு பாடல்கள் கொண்டது. ஏழாயிரப் பிரபந்தம் என்ற தொகுதியுள் ஒரு பகுதி இந்நூல். வாரத்தில் ஆறு நாட்களில் சிவன், சக்தி, திருமால், கணபதி, முருகன், பொதுக்கடவுள் என ஆறு கடவுளர் மீது ஒவ்வோர் பதிகம் பாடிவந்த சுவாமிகள், ஏழாம் நாளான ஞாயிறன்று சமயங்கடந்த பரம்பொருளான ஞாயிற்றின் மீது ஒவ்வோர் பதிகம்பாடிவந்தார். ஆறுவகைச் சமயங்களைக் கடந்த அதீத நிலையை ஞாயிறு வழிபாட்டால் பெறமுடியும் என்பது அவர் நம்பிக்கை.

நூலின்கண் குறியீடுகள், உவம உருவகங்கள், தொன்மங்கள்

ஞாயிறு ஆயிரம் நூலில் ஐம்பது பாடல்களுக்கு ஒருமுறை கிணறு, கங்கை என்ற குறியீடுகள் காணப்படுகின்றன. 'படிமம் அல்லது உருவகம், குறிப்பிட்ட பொருளைக் குறிக்கும் வகையில் மீண்டும் மீண்டும் காணப்பட்டால், அவை குறியீட்டு நிலையில் அமையும்' என்பது அப்துல் ரகுமான் கருத்தாகும். (புதுக் கவிதையில் குறியீடு ப. 59) கிணறு, கங்கை என்ற குறியீடுகள் விரித்துப் பொருள் கொள்ள இடம் தந்து அடிகளாரின் உள்ளக் குறிக்கோளை விளக்குவனவாக உள்ளன. 'ஒண்ணுதல் பிடிஅனையள்' (18:1) என்ற உவமத்தொடர் பாஞ்சாலியைக் குறித்து நிற்கிறது. அவளது நிலையைக் கூறுமுகமாகப் புலவர் பாரத அன்னையின் நிலையை விளக்குகிறார்.

பாருலகம் 'பார்மகளா'க உருவகிக்கப் பெறுகிறாள். அவள் படும் அவலத்தைச் சித்திரிக்கிறார் சுவாமிகள். மேலும்

இராமாயணம், மகாபாரதம், விஷ்ணுபுராணம், கந்தபுராணம், தேவிபாகவதம் போன்ற தொன்மங்களிலிருந்து (Myths) மூலப் படிவங்களைக் (Archetypes) கையாளுகிறார் குந்தி, அனுமன், திருமால், மகிடாசுரமர்த்தினி போன்ற மூலப்படிவங்கள் தீயோரை ஒறுப்பதற்காகவும், தருமன், கண்ணன், முருகன் போன்ற மூலப்படிவங்கள் நல்லோருக்கு அருள்பாலிப்பதற் காகவும் நூலாசிரியரால் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கூறிய வற்றின் அடிப்படையில் அடியிற்கண்ட கருதுகோள்கள் அமைத்துக் கொள்ளப் பெற்று ஆய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளது.

1. கிணறு, கங்கை என்ற குறியீடுகள் தண்டபாணி சுவாமிகளின் உலகியல் குறிக்கோளையும், ஆன்மீகக் குறிக்கோளையும் விளக்குகின்றன.

2. பாரத அன்னை அடிமைத்தளையில் பிணியுண்டு இருப்பதைப் பாஞ்சாலி மூலம் உணர்த்துகிறார்.

3 பாருலகம் அந்நியராட்சியில் படும்பாட்டை ஓர் அணங்கு கொண்கனை இழந்து படும்பாட்டுக்கு உருவகிக்கிறார்.

4. தீயோரை ஒறுக்கவும், நல்லோருக்கு அருளவும் தொன் மங்களை உத்திகளாகப் பயன்படுத்துகிறார்.

5. புறக்கட்டமைப்பு ஞாயிறு வழிபாடு எனினும், இதன் அகவடிவம் தீயோரை ஒறுத்தல், நல்லோரைக் காத்தல், சூரிய வழிபாட்டின் மூலம் 'ஒரே கடவுள்' என்ற கொள்கையைப் பரப்புதல் என்பனவாம்.

குறியீடுகள் தரும் செய்தி

நூல் நெடுகிலும் குறியீடுகளாக, சங்கேதங்களாக (Codes) இருபது இடங்களில் கிணறு, கங்கை என்ற குறியீடுகள் காணப் படுகின்றன. 'குறத்தி மணவாளன் பகர்ந்த சொல்லைக் குறித்து ஓர் குன்றில் கங்கை' (788:3-4) நீரூற்றுக் கிடைக்கும் என்று எண்ணித் தன்னந் தனியாகக் கடும்பாறைக் கெல்லிக் கிணறு தோண்டும் முயற்சியில் தான் ஈடுபட்டதைக் குறிப்பிடுகிறார்.

'தனிவேலவன் மொழியத் தமியேன் அகழ்கூபத்து
இனிதாகிய நன்னீர் எந்நாள் வர அருள்வாய்'' (294 : 1-2)

'பகிர தன்போற் கங்கை வேண்டிப்பாறை
கெல்லிப் பரிசு கேட்டேன்' (500 : 1)

'கண்ணீர் விட்டழு துழல்கின்றேன் கற்கூபத்திடை கங்கையைநேர்
தெண்ணீர் ஆறெழு மாறு என்மேல் சிறப்பு நோக்கம்
செய்வாயே' (227 : 3-4)

எனத் தண்டபாணி சுவாமிகள் கதிரவனிடம் முறையிடுகிறார்.

'கிணறு', 'கங்கை' எனும் குறியீடுகள் உணர்த்தும் தத்துவக் கருத்துக்களை அகச்சான்றுகளாக விளங்கும் இருபாடல்கள் விளக்குகின்றன.

'ஆற்றுநீர் பலவும் நாணும் அரும்பெரும் புனல்என் கூபத்து
ஊற்றுரு வாகச் செய்யும் ஒருவனின் ஒளிர்வ தென்றோ?'
(449 : 1-2)

என வேண்டுவதிலிருந்தும்,

'கற்பெரிய கிணற்றூடுஓர் கங்கையாறு எழக்கண்டு ஈண்டு
அற்பநெறிக் கொடியோரை அடக்கவே விழைகின்றேன்'
(557 : 1-2)

என தன் விழைவை அவர் கூறுவதிலிருந்தும் அவரது இரு குறிக்கோள்கள் புலனாகின்றன.

பற்பல திசைகளினின்றும் பற்பல ஆறுகளும் பெருக்கெடுத்து ஓடினாலும், அவற்றைக் கிணற்றில் சுரக்கும் ஊற்றுருவாகச் செய்பவன் ஒப்பற்ற ஒருவன். 'ஆறு சமயத்தார்க்கும் ஒரே ஆண்டகையாம் பேறு' விழைந்த சுவாமிகள் அதற்குக் கதிரவன் வழிபாடு மூலம் வழிகோல விரும்பினார் என்ற அவரது ஆன்மீகக் குறிக்கோள் இதன்மூலம் பெறப்படுகிறது.

கொடுங்கோன்மை புரிகின்ற அந்நியருக்கெதிராக ஒரு புரட்சிகரமான இயக்கம் கங்கை வெள்ளமெனத் திரண்டு எழ வேண்டும் என்ற அவரது உலக வாழ்வின் குறிக்கோளையும் கிணறு, கங்கை என்ற குறியீடுகள் உணர்த்தி நிற்கின்றன

பாஞ்சாலி-பாரத அன்னை

'ஒண்ணு தல்பிடி அனையள்பொற் றானை
உரிந்த பாதகர் ஒருங்கறக் கறுத்தது
எண்ணு வார்மனம் மகிழ்தல்கண் டுள்ளாய்' (18:1-2)

எனும் சுவாமிகளின் கூற்று பாரதத்தாய் துகிலிழந்து நிற்கின்ற காட்சியையும் அதைக் கண்டு கொக்கரிக்கின்ற துச்சாதனர் கூட்டத்தையும் சித்திரிக்கிறது.

'இதுமுறையோ? நீ கருமை நீங்கி உன் உக்கிரமான கதிரை விளக்குதி' எனக் கதிரவனிடம் சுவாமிகள் வேண்டுகிறார். பாரதிக்கு முன்னரே அடிமை விலங்கால் கட்டுண்டு கிடந்த பாரத அன்னையைப் பாஞ்சாலியாகப் பாடிய பெருமை சுவாமிகளையே சாரும்.

ஊனுண்டு களித்து வாழும் தூர்த்தரான அந்நியரைப் 'புலையர்' என்றும், 'சண்டாளர்' என்றும் வசை பாடுகிறார்.

'பட்டவர்த் தனர்மணி முடித்திரள்
உருண்டஇப் பாரில் தோற்கூடு
இட்டசெம் மயிர்த்தலைத் திரள்உறக்
காணில் நிற்கு இழிவுண்டாமோ?' (390: 1–2)

எனக் கதிர்க்கடவுளிடம் வினவுகிறார். 'மணிமுடி தரித்த மன்னர் தலையெல்லாம் உருளச் செய்தாயே! தொப்பித் தலை, செம்மயிர்த் திரள் கொண்ட இவ் அந்நியர்தலைகளை உருளச் செய்தால் நிலக்கு இழிவோ?', எனக் கேட்கிறார். ஆட்சியாளர் களின் கொடுமை எல்லை மீறிப் போனதால் சூரியன் அதைச் சுட்டெரித்தல் வேண்டும் என்பது சுவாமிகளின் விருப்பம்.

அறநூல் விரும்பாத ஏதிலர் குடையைப் 'புன்குடை' (186:2) எனவும், 'பழியும் பாவமும் உள்ளவர் குடை' (680:2) எனவும், 'ஆநிணம் உண்பார் குடை' (585:3) எனவும், 'அரணழிக்கும் கருங் குடை' (925:1) எனவும் பழிக்கிறார். 'தவள நிறக் குடை மன்னவர் குடை'க் (145:4) கீழ்ச் செங்கோலாட்சி மலர வேண்டும் எனத் தண்டபாணி சுவாமிகள் ஏங்குகிறார்.

கொடுங்கோன்மையாளர் கொடுமையால் நாடெங்கும் கொடுங்கலி சூழ்ந்தது, கொடும்பாம்பினும் பொல்லாக் கலியிடை அகப்பட்ட தன் நிலையைத் தேரையின் நிலைக்கு (380:3) ஒப்பாகச் சுவாமிகள் குறிப்பிடுகிறார். உண்ணும் உணவும், உடுக்கும் உடையும் இன்றி மக்கள் அலமருவதை அடிகளார் சித்திரிக்கிறார் (30:1; 40:3).

இவ்வாறாக அந்நியராட்சியில் பாரத அன்னையின் புதல்வர்கள் விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதைச் சூரியன் ஆயிரம் நூல் விளக்குகிறது.

பாரணங்கு படும் துயரம்

புவியினை அணங்காக உருவகித்த தண்டபாணி சுவாமிகள், கதிரவனை நோக்கி, கொண்கனை இழந்த பார்மகள் படும்பாடு பாராயோ? (234:3-4) என விளித்து, 'மகர வாரிதி உடுத்தவள் அலறுகிறாள்' (14:3), 'நீர்த்தானை கொள்மானாள் நெடிது ஓலிடுகின்றாள்' (292:1) 'காசினிப்பெண் வாய்விடுதல் காணவும் கூசிலையோ?' (234:3) எனச் சுதந்திரமிழந்து வாடும் உலக மக்களின் அவலநிலையை உணர்த்துகிறார்.

கதிரவன் மறையாத பேரரசு என்று சொல்லப்படும் இங்கிலாந்து கிழக்கிலிருந்து மேற்குவரை அனைத்து நாடுகளையும் அடிமைப்படுத்தி ஆட்டி வைப்பதைத் தவிர்க்க சூரியக் கடவுளால் மட்டுமே முடியும் எனும் நோக்கில், 'பகைவர்சேனை பொடியா விழமுன் போல் கதிர்களை உமிழாய் பரிதிப் பகவானே' என அவனிடம் வேண்டுகிறார்.

பாரத அன்னையின் துயரத்தை வெளிப்படுத்தித் தன் தேசிய உணர்ச்சியை வெளிப்படுத்திய ஆசிரியர், பாரணங்கும் விடுதலை பெற வேண்டும் எனப் பாடித் தன் ஒருலக (Universal) நோக்கையும் வெளிப்படுத்துகிறார்.

தொன்மம் - உத்தியாக

தீயோரை ஒறுக்கவும், நல்லோருக்கு அருளிச் செய்யவும் கதிரவனை வேண்டும் சுவாமிகள் மூலப்படிவங்களைத் தொன் மங்களிலிருந்து எடுத்தாளுகிறார். அம்மூலப் படிவங்களைக் கதிரவனோடு தொடர்புபடுத்தி தன் கருத்து வெளிப்பாட்டுக்கு அவற்றை உத்திகளாகப் பயன்படுத்துகிறார்.

தீயோரை ஒறுக்க

குந்தியின் தோள்புணர்ந்த கதிரவன் அவளுக்குக் கர்ணன் என்ற மகவை ஈந்தான். இல்லையென்னாது ஈயும் கர்ணன் இந்திரனுக்குத் தன் கவசகுண்டலங்களை ஈந்து தந்தையாகிய

சூரியனுக்குப் புகழ் சேர்த்தான். அப்புகழுக்குக் களங்கம் விளையாவண்ணம் தன் கதிரை விளக்கித் தீயோரைத் தெறுமாறு தண்டபாணி சுவாமிகள் கதிரவனை வேண்டுகிறார் (21:4).

மாருதிக்கு ஒன்பது இலக்கணங்களைக் கற்பித்தவன் பரிதியங் கடவுள். பாருலகுய்ய இராவணனை அழித்தவன் மாருதி. அன்று நீ மாருதிக்கு அருள்செய்து அரக்கர்களை அழித்தாயே! இன்று நீ 'புலவு நசைப் பேயினமும் பூதகணங்களும் குலமடங்க ஒறுக்காமை கொடியவற்றுள் கொடிதாமே' (495 : 3-4) என்று ஆடும் பேயினங்களையும், பூதகணங்களையும் ஒடுக்குமாறு முறையிடுகிறார்.

அறம்மெலிந்து மறம்பெருகிவெரு நாளில் தன் சக்கரத்தால் தீயோர்களை ஒறுத்தவன் திருமால். 'பார்மகள் வாய்விட்டு அழுதுநிற்கையில்' திருமாலின் சக்கராயுதத்தால் துட்டர்களை அழிக்குமாறு ஆணையிடுகிறார் தண்டபாணி சுவாமிகள் (145 : 1-2).

மகிடாசுரனை வதைத்தவள் மகிடாசுரமர்த்தினி. தீமையை ஒழித்துக் கட்ட சக்தியின் தோற்றத்தை வரவேற்கும் ஆசிரியர், கதிர்க்கடவுளே! நீ வெட்கிலையோ!

'நலம்பெறும் நல்தாயர் விளையாடும் நன்நாளருள்' (152 : 3-4) என விண்ணப்பிக்கிறார்.

நல்லோருக்கு அருள்பாலிக்க

தருமனுக்கு அட்சய பாத்திரம் நல்கிக் காத்தவன் கதிர்க் கடவுள் (88 : 3-4). என் 'தண்டமிழ் மாலைவேட்டு தரித்திரம் நீக்கி எனை ஆள மாட்டாயா?' (666 : 4) எனப் புலவர் பரிதியிடம் அட்சயபாத்திரம் கேட்கிறார். நாட்டில் நிலவிய கொடிய வறுமை அவரை இவ்வாறு வேண்டுமாறு செய்தது. அது கொண்டு உலகுய்யச் செய்ய வேண்டுமென்பது அவர் எண்ணம்.

கோகுலத்தில் இந்திரன் ஏவலால் மழைபொழிந்த ஞான்று கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்த கண்ணனுக்கு ஏதுவாக ஞாயிறு கறுத்து அருளினான் (661 : 1-2). கண்ணனுக்கு அருளியது போன்று அந்நியர் ஏவலாலே விளையும் கொடுமை

களைத் தடுத்து நிறுத்தித் தனக்கும் சூரியக் கடவுள் அருள் பாலிக்க விழைகிறார்.

ஞானக்கனி பெற்ற முருகன் (655 : 1) என, வீரச்செருக்கு பெற்ற குகன் (978 : 2) என தனக்கும் ஞானமும், வீரமும் அளித்து ஆட்கொள்ளுமாறு பரிதியிடம் வேண்டுகிறார். 'இல்லறத்திலும் துறவறத்திலுமாக ஈடுபட்டு இளைக்கும் தான் குன்று தொறாடும் கந்தவேள் போல வாழ வேண்டும்' (451 : 1–2) என்பது புலவர் விருப்பம்.

இங்ஙனமாக சமகாலப் பிரச்சினைகளைச் சித்திரிக்கப் புலவருக்குத் தொன்மங்கள் கைகொடுக்கின்றன.

புறக்கட்டமைப்பும் அகவடிவமும்

ஒவ்வொரு பதிகத்திலும் இறுதிப் பாடல்களில் சூரியன் மதியை உண்டு உமிழ்ந்தது, கண்காண விளங்கும் கடவுளாகக் கதிரவன் விளங்குவது, குந்திக்கு அருளியது, அனுமனுக்கு அருளியது ஆகியன இடம் பெறுகின்றன. ஒவ்வொரு பதிகத்தின் ஈற்றடியும் ஒத்து அமைகின்றன. அவை 'கருமை நீக்குதி' (12–22), அழியப்பாரே (694–704) என ஏவலாகவும், 'காணச் சகிக்கலையே!' (111–121), காணக்கண் கூசிலையே (232–242) என இடித்துரையாகவும், கலிக்கடல் கடத்துவாயே (1002–1012), அடியேன் பகர்சூள் முடித்தருளே (595–605) என வேண்டுதலாகவும் உள்ளன.

ஊன் உணவு கூடாது என்று ஊர் ஊராகச் சஞ்சாரம் செய்த அடிகளார் (791 : 1-2; 187 : 1–2), வடலூரார் மீண்டும் வரவேண்டும் (189 : 2–3) என்று விழையும் அடிகளார் சூரிய வழிபாட்டினைப் புறக்கட்டமைப்பாகக் கொண்டு நூல் நெடுகிலும் அவனை வாழ்த்தி வழிபட்டாலும் அவர் விரும்பியது அந்நியர் ஆட்சியிலிருந்து விடுதலையும், 'ஆறு சமயத்தார்க்கும் ஒரே ஆண்டகையாம் பேறு'ம் (359 : 1–2)ஆம். இவ்விரு குறிக்கோள்களையும் அவர் கிணறு, "கங்கை என்ற குறியீடுகளால் குறிப்பிடுகிறார்.

இசை வடிவங்களின் இலக்கணம்

இரா. கலைவாணி

முன்னுரை

கடந்த நூற்றாண்டின் தன்னிகரில்லா தமிழ்ப் பெருமக்களுள் தலைசிறந்தவராகக் கருதப்படுபவர் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் ஆவார். சந்தப் பாக்களான திருப்புகழை இயற்றி "சந்தபாவல பெருமான்" என்று அருணகிரிநாதர் அழைக்கப் படுவதைப் போன்று எண்ணற்ற வண்ணப்பாக்களை இயற்றியதால் சுவாமிகள் "வண்ணச்சரபம்" என்னும் சிறப்புப் பெயருடன் அழைக்கப்படுகின்றார். சுவாமிகள் அறியாத துறையே இல்லை என்று கருதுமளவிற்கு பல்துறைப் புலமை பெற்றவர் குறிப்பாக இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய முத்தமிழ் பாக்களுக்கு சுவாமிகள் ஆற்றியுள்ள தொண்டு அளவிடற்கரியது. இன்றைய இசை உலகில் பிரபலமாக விளங்கிவரும் கீர்த்தனை, பதம் ஆகிய இரு இசை வடிவங்களுக்கு சுவாமிகள் வகுத்துள்ள இலக்கணம் குறித்து ஆராய்வதையே நுவல் பொருளாகக் கொண்டுள்ளது இக்கட்டுரை.

இசை வடிவங்கள்

அம்மானை, கலிப்பா, கட்டளைக் கலித்துறை, தாழிசை, கலி விருத்தம், கலிநிலைத் துறை, வஞ்சி விருத்தம், வெண்டுறை, மயங்கிசைக் கொச்சக்கலிப்பா, சிந்து ஆகியவற்றை இசைத்தமிழ் வடிவங்களாக வரையறைச் செய்துள்ளார். அபிநயத்துடன் ஆடுவதற்கேற்ற பாடல்களை நாடகத்தமிழ் என்றும், கீர்த்தனை, பதம் ஆகிய இரு இசை வடிவங்களும் நாடகத்தமிழில் அடங்கும் என்றும் கூறுகிறார். இன்றைய நிலையில் கீர்த்தனை, பதம் ஆகிய இரண்டும் கூத்துகளுக்கு மட்டுமின்றி இசைகளுக்கும் பொதுவான இசை வடிவங்களாகவே திகழ்கின்றன.

கீர்த்தனை

இறைவனை வழிபட இசையே சிறந்ததெனக் கண்ட சமயக்குரவர்கள் பக்திமான்கள் அனைவரும் பல இசை

வடிவங்களில் இறைவனைப் புகழ்ந்து பாடி வழிபட்டு வந்துள்ளனர். அத்தகு இசை வடிவங்களில் ஒன்றே கீர்த்தனை, இறைவனை பூசிப்பது 'பூசனை' என்றும், பிரார்த்திப்பது 'பிரார்த்தனை' என்றும், கீர்த்திப்பது 'கீர்த்தனை' என்றும் வழங்கப்படுகின்றது. 'கீர்த்தி' எனும் சொல் பொதுவாக 'புகழ்' எனும் பொருள் உணர்த்துவதை, மன்னர்களின் புகழ்பாடும் கல்வெட்டுப் பாடல்களை 'மெய்க்கீர்த்தி' என்று வழங்கு வதினின்று அறியலாம் (1988:2).

'கீர்த்தனை' எனும் சொல் வடமொழிச் சொல்லாகவே கருதப்படுகின்றது. ஆனால் தூய தமிழ்ச் சொல் என்று குறிப்பிடும் தேவநேயப்பாவாணர் கூறும் விளக்கம், 'சீர்' எனும் வேர்ச் சொல்லினின்று பிறந்த சீர், சீர்த்தி, சீர்மை ஆகிய சொற்கள் பெருமை, மதிப்பு, புகழ் எனும் பொருள்படத் தமிழ் இலக்கியங் களில் வழங்கப்படுகின்றன. இவ்வாறு வழங்கப்படுவன கீர், கீர்த்தனை ஆகியவை (1988 : 3).

'சிந்தி' என்பது 'சிந்தனை' என மாறுவது போன்று 'கீர்த்தி' என்பது 'கீர்த்தனை' என்று வழங்கப்படுகின்றது என்று விளக்குகிறார் வி. ப. க. சுந்தரம் (மேலது : 3).

கீர்த்தனம், கீர்த்தனை, கீர்த்தி, கீர்த்தித்தல் ஆகிய சொற் களுக்கு தமிழ்கராதி தரும் விளக்கம் வருமாறு (1982 : 944).

'கீர்த்தனம்' என்பது 'கீர்த்தனா' எனும் வடமொழிச் சொல்லிலிருந்து வந்த சொல், கீர்த்தனம், கீர்த்தனை என்பது ஓர் இசைப்பாட்டு. 'கீர்த்தி' என்பது புகழ்தல். 'விண்சுமந்த கீர்த்திவியன்மண் டலத்தீசன் (திருவாசகம்' 8. 8) கீர்த்தித்தல்' என்பது 'புகழ்தல்' எனப் பொருள்படும். 'தன் சொல்லாற் றான்றன்னைக் கீர்த்தித்த' (திவ். திருவாய். 7. 9. 2) இவ்வாறாக தமிழகராதி விளக்கம் தருகின்றது.

பாகவதத்தில் இடம்பெறும் பிரகலாத சரித்திரத்தில் கூறப்படுகின்ற ஸ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சகீயம், ஆத்மநிவேதனம் எனும் ஒன்பது வகை பத்தி ஒழுக்கங்களில் 'கீர்த்தனம்' என்பது இறைபுகழைப் பாடுவது' என குறிப்பிடப்படுகின்றது.

பொதுவாகக் கீர்த்தனை பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் உறுப்புகளுடன் பாடப்படுகின்றது. முடுகு, சிட்டைசுரம், சொல்கட்டு, சுரமும் சொல்லும் (சுராட்சரம்) மணிப்பிரவாள நடை, சுராசாகித்யம், யதி இராகமாலிகை முதலான இசையணிகள் காலப்போக்கில் இசை நிகழ்ச்சிகளில் (கச்சேரிகளில்) பாடுவதற்காக அமைக்கப்பட்டு வந்துள்ளன.

பதம்

'பதம்' என்பதற்கு சொல், வார்த்தை அல்லது ஒரு வரிஇயல் (சாகித்யம்) எனும் பல பொருளுண்டு (1981:328) பக்திப் பாடலைக் குறிப்பிடுவதற்கும் இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது (1982:200), காளிதாசர் இயல் எனும் பொருளில் பதத்தைப் பயன்படுத்தியுள்ளார் (1981:328) வெங்கிடபகி குறிப்பிட்டுள்ள பிரபந்தத்தில் ஆறு அங்கங்களில் ஒன்றாக இச் சொல் இடம் பெற்றுள்ளது. நாயக-நாயகி குணங்களை உடைய இயல் அமைப்பு அனைத்தையும் வெங்கிடபகி 'பதம்' என்றே குறிப்பிட்டுள்ளார். (மேலது:328).

நாட்டியத்தில் அபிநயத்திற்கு முதன்மை தரும் ஓர் இசை உருப்படி பதமாகும். (1989:1). தலைவன், தலைவி உறவுநிலை களில் சிற்றின்ப வழியில் பேரின்பமாகிய இறைவனை அடையும் உயர்ந்த நெறியைப் பற்றிப் பாடப்படுபவையே பதம்.

> ''தாடலைபோற் கூடிஅவை தான்நிகழா வேற்றின்பக்
> கூடலை நீ ஏகமெனக் கொள்'' (திருஅருட்பயன் 7:4)

எனும் சைவ சித்தாந்தக் கொள்கையின்படி இறைவனும் ஆன் மாவும் உடல், மனம் ஆகிய இரண்டும் இணைந்து இருவேறு வடிவின்றி ஒன்றறக்கலக்கும் மதுரப்பக்தியைக் கருப்பொருளாகக் கொண்டு விளங்குவதே பதம் ஆகும். இறைவனைத் தலைவனாகவும் பக்தரைத் தலைவியாகவும் தோழியை முக்தியடைய உதவும் ஞானகுருவாகவும் கொண்டு பதங்கள் படைக்கப்பட்டு வருகின்றன.

பதம், பல்லவி, அனுபல்லவி, சரணம் அல்லது பல்லவி சரணம் எனும் உறுப்புகளை உடையது.

கீர்த்தனை, பதம் ஆகியவற்றிற்கு இயலிசை வல்லுநர்கள் வகுத்த வரையறைகள் இதுவரை கூறப்பட்டது. இனி சுவாமிகள் வகுத்துள்ள வரையறைகளைக் காணலாம்.

''பல்லவத்து இருபங்கு அநுபல் லவமும்
அதன்இரு பங்காம் சரணமும் தாளம்
பிழையாது அமைத்து, அதில் பேரின் பம்சொலின்
கீர்த்தனை என்றும் மற்று ஏனையக் கிளத்தில்
பதம்என வும்சொலல் பாவலர் வழக்கே'' (1991:307)

எனும் சுவாமிகளின் நூற்பாவிற்கு உரையாசிரியர் தரும் விளக்கம், ''பல்லவியின் (எடுப்பு என்பர்) அளவைப் போல் இரு மடங்கில் அமைந்த அநுபல்லவியையும் (தொடுப்பு), அதற்கு இருபங்காக அமைந்த சரணத்தையும் (முடிப்பு) தாளம் தவறாமல் இயற்றி அப்பாடலில் இறைவணக்கமாகிய பேரின்பத்தைக் கூறினால் கீர்த்தனை என்றும் உலகியற் காதலாகிய சிற்றின்பத்தை உரைத்தால் பதம் என்றும் புலவர்கள் கூறுவர் என்கிறார். இவ்விளக்கத்தினின்று கீர்த்தனை, பதம் ஆகிய இரண்டும் வடிவில் ஒன்றே என்பதும் பாடு பொருளினால் மட்டுமே அவை வேறுபடுகின்றன என்பது சுவாமிகள் கருத்து.

''அநுபல் லவமும் சரணம் அளவில்
கூடினும் தாளம் குழம்பாது, பாவரும்
அறிவுறும் பொருள் அமைந்து அவிர்தரின் நலமே''
(1991:308)

உரையாசிரியர் தரும் விளக்கம். ''பல்லவியைவிட அநுபல்லவி, சரணம் ஆகிய இரண்டும் முறையே இருபங்கு, நான்கு பங்கு எனக் கூறப்பட்ட அளவைவிட அவைகள் மிகினும் குற்றமில்லை. ஆனால் தாளம் தவறாமலும் அனைவரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு சொற்களும் பொருளும் அமைந்ததாகவும் இருந்தால் சிறப்பு''.

''பல்லவம் போன்றே அநுபல் லவமும்
ஒன்றுஅலது ஒன்றாது; சரணம் ஒன்று அன்றி
மூன்றும் வரல்மிகை: ஐந்தேழ் ஒன்பது
பதினோன்று ஒன்றினும் பல்லவத் தலையில்
அவற்றின் ஈறுஒன்றும் அழகால் திகழ்பவே'' (1991:309)

''ஒரு பாடலில் பல்லவியைப் போன்றே அநுபல்லவியும் ஒன்றுதான் வரும். அதற்குமேல் வராது. சரணம் ஒன்றிற்குப் பதிலாக மூன்று வருதல் பெரும்பான்மை ஐந்து, ஏழு, ஒன்பது,

பதினொன்று எனச் சரணங்களின் எண்ணிக்கை கூடினாலும் ஒவ்வொரு சரணத்தின் இறுதியோடும் பல்லவி பொருளால் தொடர்புபட்டு முடிகின்ற பொலிவைப் பெற்றிருக்க வேண்டும்'' என்பது மேற்கண்ட நூற்பாவின் பொருள். எடுத்துக்காட்டாக ஒரு பாடல் வருமாறு:

பல்லவி

நின்னைச் சரண்டைந்தேன் – கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்

சரணங்கள்

1. பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று (நின்னை)

2. மிடியையும் அச்சமும் மேவியென் னெஞ்சிற்
குடிமை புகுந்தன, கொன்றவை போக்கென்று (நின்னை)

''இருவகைப் பல்லவம் இன்றி ஆடலுக்கு
இசைவுறத் தனித்தனி ஈரடி நான்கடி
காட்டியோர் பொருளைக் கருதிக் கூறித்
தொகுப்பது சிந்தெனச் சொல்வது வழக்கே'' (1991:310)

உரையாசிரியர் விளக்கம். ''பல்லவி, அநுபல்லவி இரண்டும் இல்லாமல் நடனத்திற்கு ஏற்றபடி தனித்தனியாக இரண்டு அல்லது நான்கடிகளாகக் கொண்டதாகவும் ஒரு பொருளையே கூறுவதாகவும் இயற்றிச் சேர்க்கப்பட்ட வடிவத்தைச் சிந்து என்பர்.''

எடுத்துக்காட்டு வருமாறு.

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வந்தாய்
பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா பேசும்பொற் சித்திரமே
அள்ளி அணைத்திடவே என் முன்னே ஆடிவரும் தேனே!

பல்லவி மட்டும் பெற்று ஈரடியான் வந்த சிந்து பாடலுக்கு உரையாசிரியர் தரும் எடுத்துக்காட்டு வருமாறு.

பல்லவி

தீராத விளையாட்டுப் பிள்ளை – கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை

சரணங்கள்

தின்னப்பழம் கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னைய னென்றால் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான் (தீராத)

பல்லவி மட்டும் பெற்று நான்கடியான் வந்த சிந்திற்கு எடுத்துக் காட்டு, வருமாறு

யாதுமாகி நின்றாய் - காளீ
எங்கும்நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல்களன்றி யில்லை
போதுமிங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கைகை யெல்லாம்
ஆதிசக்தி தாயே என்மீ
தருள் புரிந்து காப்பாய்.

முடிவுரை

கீர்த்தனை என்பது இறைபுகழைப் பாடுவது. பதம் என்பது உலகியற் கலையாகிய சிற்றின்பத்தை உரைத்தல் என்று குறிப் பிடப்படுமாயின் தற்காலத்தில் வழக்கில் கீர்த்தனை என்று அழைக்கப்பட்டு பயன்பாட்டிலிருக்கும் சில இசை வடிவங்களில் அகச்சுவை இருக்கின்றது.

கீர்த்தனை, பதம் ஆகிய இரண்டும் வடிவத்தினால் ஒன்றே ஆனால் பாடுபொருளினால் வேறுபடுகின்றன என்பது சுவாமி களின் கருத்து (1991:308). ஆனால் இசை வல்லுநர்கள் வர்ணம், கீர்த்தனை, பதம் ஆகிய அனைத்தும் வெவ்வேறானவை என்கின்றனர். இக்கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதே. ஒவ்வொரு இசை வடிவும் ஏதேனும் ஒரு சிறு மாற்றத்தைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது. இன்ன வடிவங்கள் இத்தகைய இலக்கணத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று வரையறை செய்யப்பட்டிருந்தாலும் காலப்போக்கில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது உண்மையே. எடுத்துக்காட்டாக இறைபுகழை மட்டுமே பாடும் கீர்த்தனைகள் காலத்தின் தேவைக்கேற்ற கருத்துக்களைக் கொண்டு படைக்கப்படுகின்றன.

கீர்த்தனைகள் எல்லா இராகங்களிலும் எல்லா தாளங்களிலும் அமையலாம். ஆனால் பதங்கள் ரக்தி ராகங்களில், விளம்ப காலத்தில் மட்டுமே அமைய வேண்டும், என்பது வல்லுநர்கள் கருத்து. பதங்களும் வேறுபட்ட இராக தாளங்களில் அமையலாம். ஆனால் பொருளின் சுவையை வெளிப்படுத்தும் வண்ணம் பாட வேண்டியது பாடுபவரின் திறமையைப் பொருத்தது.

சுவாமிகள் கீர்த்தனையின் சரணங்கள் ஒற்றை எண்ணிக்கையில் அமைய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். சரணத்தின் பொருள் பல்லவியின் பொருளோடு தொடர்புடையதாக அமைய வேண்டும் என்பதால் ஒற்றை எண்ணிக்கையில் சரணங்கள் அமைய வேண்டும் என்கிறார். சரணங்கள் இரட்டை எண்ணிக்கையிலும் அமையலாம் என்பது கருத்து. சரணங்கள் பல்லவியுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல. முடிவான பொருளுடையதாகவும் இருக்கலாம்.

மேற்கண்டவற்றினின்று கீர்த்தனை என்பது இறைவன் புகழ் பாடுவது; பதம் என்பது அகச்சுவையில் அமைந்தது. இராக தாளங்களில் முழுக்க முழுக்க வேறுபடுவதல்ல; பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகியவை இசைப்பாடல்களின் வளர்ந்த நிலையே எனும் கருத்துக்கள் பெறப்படுகின்றன.

பதங்களில் சுவை வேறுபாடு மிகுந்திருப்பதாலேயே அவை அபிநயத்திற்கு ஏற்றவையாகக் கருதி நாட்டிய அரங்குகளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. கீர்த்தனை, பதம் ஆகிய இரண்டுமே இசையரங்கிலும் பிரபலப்படுத்தப்பட்டு வந்துள்ளன. எனவே சுவாமிகள் குறிப்பிட்டது போன்று கீர்த்தனை, பதம் இரண்டும் நாடகத்தமிழான நாட்டியத்திற்கு மட்டும் உரியதன்று என்றே கருதலாம்.

பயன்பட்ட நூல்கள்

1. குப்புசாமி கௌரி, 1983, **தமிழ்ப் பதங்கள்,** கர்னாடிக் புக் மியூசிக் சென்டர், சென்னை.

2. சுப்பிரமணிய பாரதி. சி. 1968, **பாரதியார் கவிதைகள்,** வானதி பதிப்பகம், சென்னை.

3. நாகராசன், ப. வெ, 1991, வண்ணச்சரபம் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் இயற்றிய அறுவகை இலக்கணம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

5. Sambamurthy P., 1982, South Indian Music Book III, The Indian Music Publishing House, Madras.

6. Seetha, S., 1981, Tanjore as a seat of Music, University of Chennai, Madras.

ஆய்வேடு, அகராதி, ஆய்வுக்கட்டுரைகள்

1. கலைவாணி, இரா., 1997, மகாகவி பாரதியார் பாடல்களின் இசை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2. ஜான்பிரிட்டோ, அ. 1983 "கீர்த்தனை இயலும் இசையும்" தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3. தமிழகராதி, 1982., சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

4. இசைக் கருத்தரங்கு, 18, 19–1—89, 'தமிழ்ப் பதங்கள்' இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கந்தரநுபூதியும் முருகதாசர் அநுபூதியும்

சி. காயத்ரி தேவி

முன்னுரை

குன்றுதோறும் ஆடிடும் குமரனை, வேல்முருகனை நமது முன்னோர்கள் நல்வழி பகர்ந்திடும் கலங்கரை விளக்கமாகக் கண்டு வழிபட்டுள்ளனர். மனிதனின் உடலும், மனமும், சர்வ வல்லமை பொருந்திய சக்தியான குண்டலினியை இயக்கிட, பல்வேறு ஆதார சக்கரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன என்பது சித்தர்களின் கூற்று ஆகும். மனமும் உடலும் ஒருங்கிணைந்து சர்வ சக்தியின் மீது ஒரு நிலையில் லயிக்கின்ற போது ஆத்ம ஞானம் ஏற்படுகிறது. இது எளிய காரியமல்ல என்பதை அனுபவ பூர்வமாக பல யோகிகளும், முனிவர்களும் உணர்ந்து கூறியுள்ளனர். முருகப் பெருமானின் அருட்சக்தி கொண்டு ஆத்ம ஞானம் எய்தப் பெறலாம் என்பதை அருணகிரிநாதர், தண்டபாணி சுவாமிகள் போன்ற சித்தர்கள் நமக்குக் காட்டி யுள்ளனர். தகாத எண்ண அலைகளின் அசுர சக்திகளை அழித்திடவல்ல ஓர் அரிய சக்தி முருக வழிபாட்டில் உள்ளது என்றும், வேலவனின் வேலாயுதம் அதீத சக்தியைப் பெற்று உள்ளது என்றும் மெய்ப்பொருளை உணரப் பெற்றனர். இவ்விரு பெரியோர்களும். முற்றிலும் துறந்த கோவனாண்டியாக அருங் காட்சி தரும் முருகனை, முற்றும் துறந்த ஆத்ம ஞானிகளான இவ்விருவரும் ஒரே கருத்துடனும், அனுபவத்துடனும் போற்றிப் புகழ்கின்றனர்.

அநுபூதி – விளக்கம்

கந்தனின் அநுபூதி பெற்று ‘கந்தரநுபூதி’ என்ற நூலை இயற்றியதாக அருணகிரிநாதரும், முருகனின் அநுபூதி பெற்று ‘முருகதாசர் அநுபூதி’ என்ற நூலை இயற்றியதாக தண்டபாணி சுவாமிகளும் கூறுகின்றனர். அநுபூதி என்றால் அநுபவ ஞானம் என்பது பொருள். அநு – உடன்; பூதி – ஆதல் ஆன்மா இறை

வனுடன் ஒன்றாவது அநுபூதி. அதாவது இறைவனுடன் ஒன்றாவதால் உண்டாகும் அநுபவ ஞானமாகும். எனவே ஆத்மா கந்தக் கடவுளுடன் ஒன்றுபட்டு, அதனால் விளையும் மெய்யுணர்வே அநுபூதியாகும். கந்தரநுபூதி நாற்பத்தி மூன்றாவது பாடலில் ஆசையாகிய சங்கிலி பொடிப் பொடியாக ஆனபின் மௌன நிலையாகிய அநுபூதி நிலை அடியேனுக்குத் தோன்றியது என்று கூறுகிறார் அருணகிரிநாதர்.

''ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே'' (பாடல்-43)

என்பது கந்தரநுபூதி பாடல் ஆகும்.

இந்த அனுபவத்தையே முருகதாசர் தம்முடைய பாடலில்,

''சந்தக் கிளிமுருக தாசனென வந்தபின், தன்
சொந்த அநுபூதித் தோற்றத்தைச் — செந்தமிழாற்
சொல்வதற்குத் தூண்டித் துணையாகிச் சொல்விக்கை
கல்வரைதோ ராடுங் கழல்'' (காப்பு - வெண்பா)

என்று கூறுகிறார். மற்றோர் பாடலிலும் இதே கருத்தை வலியுறுத்திக் கூறுகிறார்.

''தேவா திபர்தம் சிறைவிட் டருள்கூர்
மூவா நெடுவேல் முருகப் பெருமான்
நாவா யிரம்நல் கினும்நா டுமனத்(து)
ஓவா அநுபூ திஉரைக் கரிதே'' (பாடல்-101)

கந்தரநுபூதி என்ற சொல் மூன்று வகையாகப் பொருள்படும்.

1. கந்தரைச் சேர்ந்து அடையும் அநுபூதி.
2. கந்தரால் அடையும் அநுபூதி.
3. கந்தரின்கண் அடையும் அநுபூதி.

கந்தரநுபூதியும் முருகதாசர் அநுபூதியும்

அருணகிரிநாதர் வேலவனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். ''அப்பனே! அடியேன் உமது பவளமனையை பாத மலரில் ஒரு மந்திர மலர்மாலை சாத்துமாறு அம்மலர் மாலைக்கு என் மனமாகிய தாமரை குஞ்சமாக அமைய வேண்டும். அன்பான நூலினால் தொடுக்க வேண்டும். நாவிலே அழகாகக் கட்ட வேண்டும். அதில் ஞானம் ஆகிய நறுமணங் கமழ வேண்டும்,

அம்மலர்-மாலை ஒளி செய்ய வேண்டும்; குற்றமில்லாத அறிவு என்ற வண்டு அதில் ஒலிக்க வேண்டும். ஆறு ஆதாரங்களில் உள்ள அகாரம் முதல் க்ஷகாரம் ஈறாகவுள்ள மாத்ருகா மந்திரங்களாகிய ஐம்பத்தொன்றும் மலர்களாகத் திகழவேண்டும் இத்தகைய மந்திர மலர் மாலையை ஐயனே உனது செய்ய பாத மலரில் புனைதல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். இந்த வேண்டுகோளின்படிதான் கந்தரநுபூதியென்ற செஞ்சொல் மலர் மாலையை வேலையேந்திய விமலனுக்குச் சாத்தினார்.

தண்டபாணி சுவாமிகளாகிய முருகதாசருக்கு ஞான குருவாக முருகப் பெருமானும், வழிகாட்டும் ஆசிரியனாக அருணகிரிநாதரும் இருந்தனர் என்பதை இவரது பாடல் மூலம் அறிகிறோம். முற்பிறப்பில் கந்தக் கடவுளளித்த அனுபவத்தைக் கந்தரனுபூதி மூலம் பாடிய நான், இப்போதும் அவனளித்த அநுபவத்தை வேறுபாடு தோன்ற முருகனனுபூதி என்று கூறாமல் அடிமைத்திறம் தோன்ற முருகதாசர் அநுபூதி என்று பாடலானேன் என்று முருகதாசர் கூறுகிறார். தமது முருகதாசர் அநுபூதியில் பல பாடல்களில் அருணகிரிநாதரைப் போற்றிப் பாடுகிறார்.

''ஏரார் தமிழ்பா டுமெனைக் கிளியென்(று)
ஓரா மிரம்உண் மையுரைத் தனனே'' — (பாடல்-3)

என்றும், (கிளி - அருணகிரிநாதர்)

''... ... ...
ஏரார் கிளியென் றனைஒ திடுமுன்'' - (பாடல்-45). என்றும்,

''கிளியன் றுகிளத்(து)ஒருபா டல்மொழிக்(து) — (பாடல்-54)

என்றும்,

''அறமார் அருணைக் கிளியாம் அவன்வாய்'' — (பாடல்-85)

என்றும் அருணகிரிநாதரைப் போற்றிப் புகழ்கின்றார்.

எனவே அருணகிரிநாதரின் கந்தரநுபூதியும், முருகதாசரின் முருகதாசர் அநுபூதியும் ஒப்பிட்டு நோக்கத்தக்கனவாகும்.

அருணகிரிநாதரும் தண்டபாணி சுவாமிகளும் கண்ட முருகன்

நிலையற்ற போகத்திற்கு அடிமையாகாமல், பரமனடியைப் பற்றியே வருபவர்களுக்கு முக்தி வழிகாட்டத் தவற மாட்டான்

அந்த முருகன் என்று உணர்த்தியவர்கள் அருணகிரிநாதரும், தண்டபாணி சுவாமிகளும் ஆவர். மனிதப் பிறவியின் அதிசயிக் கத்தக்க சக்திகளைப் பெரும்பாலோர் அறிவதில்லை. மனிதனின் உய்வுக்காகவே மட்டும் வாழ்ந்த ஆன்றோர்கள், முனிவர்கள், சித்தர்கள் போன்றோர், உலக சுகங்களைத் துறந்து பரமனடியே கதியாக, சமாதிநிலையிலிருந்து முக்தி நிலை கொண்டனர். இவர்களில் முதன்மையாகப் போற்றப்பட வேண்டியவர்கள் அருணகிரிநாதரும், தண்டபாணி சுவாமிகளும். இந்நிலையை எல்லோராலும் அடைய முடியாது எனினும், இப்படி ஒரு பாதையும் இருக்கிறது என்பதை இவ்விருவரும் எடுத்துக் காட்டியுள்ளனர். உன்னதமான ஒழுக்கம்தான் மனித இனத்தின் மூலதாரம் ஆகும். அத்தகைய மூலதார சக்தியாக இருப்பவனே முருகன் என்கின்றனர் இவ்விருவரும். புறக்கண்கள் இரண்டைத் தவிர, அகக்கண் ஒன்றுள்ளது. அதனைத் திறந்தால் முக்தி வழி காணலாம் என்றும், அதற்கான நேர்வழிப்பாதை முருகனை நாடுவதே எனவும் அருணகிரிநாதரின் 'கந்தரநுபூதியிலும்', முருகதாசர் என்று அழைக்கப்படும் தண்டபாணி சுவாமிகளின் 'முருகதாசர் அநுபூதியிலும்' எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதை முற்றும் உணர்ந்த இவர்கள் முருகன் அருளைப் பெற அவனை முழுமனதுடன் நாடுமாறு நமக்கு அறிவுறுத்துகின்றனர்.

முருகனின் ஆறுமுகங்களை இருவரும் நோக்கும் கருத்துக் களை பொதுவாக இப்படிக் கூறலாம். அருள் சுரக்கும் ஒளியை உலகெலாம் வீசி அஞ்ஞான இருளில் இருந்து ஞான ஒளிக்கு அழைத்து வரும் முகம்; பக்தர் அன்பினால் நம்பிக்கையினால் ஒளிவீசும் முகம்; புனிதமான வாழ்வு அமைந்திட, வேதங்களில் கூறியபடி; வேள்விகளையும் ஞான யாகங்களையும் காத்தருளும் முகம்; மறைபொருளை எடுத்துரைத்து அஞ்ஞானத்திலிருந்து பக்தர்களை விடுவிக்கும் முகம்; போர்க்கோலமும், கோபா வேசமும் கொண்ட முகம்; வள்ளியின் நினைவால், அன்பால் மலர்ந்த முகம் என்ற பொருளில் முருகனின் ஆறுமுகங்களைப் போற்றுகின்றனர்.

முருகப் பெருமானுடைய முழுமுதல் தன்மையை முழுதும் உணர்ந்தவர் அருணகிரிப் பெருமான். இவர் அருளிச் செய்த நூல்கள் ஆறு. திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங் காரம், வேல்மயில் விருத்தம், கந்தரநுபூதி. இந்த ஆறு நூல்களில்

கந்தரநுபூதி வடிவத்தில் சிறியதாயினும், மகிமையில் பெரிய மந்திர சாத்திரம் ஆகும். அருணகிரிநாதர் வெறும் இலக்கண அறிவால் மட்டும் பாடிய நூல் அல்ல இது.

மகான்-வண்ணச்சரபம் அருள்மிகு தெண்டபாணி சுவாமிகள் அவர்கள் இளமை முதல் வேற்பூசை, ஆறெழுத்து செபித்தல் ஆகியனவற்றை மேற்கொண்டு இதன் பயனாகப் புதிய கவிகள் இயற்றும் சிறப்பை முருகன் அருளால் பெற்றவர். புலவர் புராணம், தமிழ் அலங்காரம், அறுவகை இலக்கணம் போன்ற எண்ணற்ற நூல்களை இலட்சம் கவிகளில் பாடியவர். தவ வழிபாடு செய்தவர். செல்லும் இடமெல்லாம் கொல்லாமை நெறியை வளர்த்தவர். திருவாமாத்தூர் கௌமார மடத்தை நிறுவி முருகன் அருள்பெறும் நெறியை எடுத்து ஓதியவர். இறுதியில் திருவாமாத்தூர் எல்லை தாண்டாமல், விரதம் இருந்து ஞான சமாதி அடைந்தார். முருகதாசர், திருப்புகழ் சுவாமிகள் என்ற வேறு சிறப்புப் பெயர்கள் இவரின் முருக ஈடுபாட்டைக் காட்டுகின்றன.

முருகன் உபாசனையில் ஏற்பட்ட தன் சொந்த அனுபவங் களை 'முருகதாசர் அநுபூதி' என்ற நூலில் 100 பாடல்களில் இவர் கூறியுள்ளார். இந்நூலைப் போலவே பிரணவாநுபூதி, தியானாநுபூதி, தண்டபாணி அநுபூதி, தெய்வாநுபூதி என்னும் நூல்களும் இவர் முருகனுடன் ஒன்றிய அனுபவங்களைக் காட்டு கின்றன. அருணகிரிநாதர் பாடிய 'கந்தரநுபூதி'யின் கருத்துக் களுடன் ஒப்புமை உள்ளதே முருகதாசர் அநுபூதியும் ஆகும், முருகனது அருள் நெறியில் நின்று அதன் மூலம் தண்டபாணி சுவாமிகள் கண்ட அனுபவத்தை, கண்கூடாக நாம் உணருமாறு இவரது 'முருகதாசர் அநுபூதி' அமைந்துள்ளது. முருகப் பெருமானால் பெற்ற அரிய அனுபவங்களே இதன் சாரம் ஆகும். இவரது அனுபவ அடிப்படையில், முருகனைப் போற்றித் துதித்தால், முருக பக்தர்களுக்கும் அவனது அருள்கிட்டும் என இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

முருகன் அருளால் பெறும் பயன்கள்

உள்ளன்பு, மனத்திடம், இன்சொல் ஆகியவை முருகன் அருளால் கிட்டும் என்பது முருகதாசர் அனுபவமாக கூறப்படு கிறது.

"சீரம் பல(ம்)மே வியசிற் பரனார்
ஈரந் தனில்மூழ் குமெழிற் குகவேள்
வாரங் கொடு,வந் தருள்வாழ் வடைதற்(கு)
ஆரம் பமெனும் சொல்அறைந் தனனே" (பாடல். 13)

என்பது பாடல் வரி. முருகதாசர் அநுபூதி மூலம் மக்களுக்கு போதிப்பது என்னவெனில் கோபம், பொய் ஆகியவற்றை களைந்து இனிய மனத்துடன் முருகனை நாடினால் அறம், பொருள், இன்பம், வீடு என்ற எல்லா இனிய நிலைகளையும் முருகன் அருள்வான் என்று கூறுகிறார்.

"கதவே தனையும் கலியும் தருபொய்
மதவேள் கணைபெய் கைமறுத் திலனே"— (பாடல். 8)

என்ற பாடல் வரியும்,

"அறமா தியநா லும்அளித் தருளும்
திறமே வியசெஞ் சுடர்வே லவனைக்" — (பாடல். 39)

என்ற பாடல் வரிகளும் இவற்றை உணர்த்தும். மேலும் முருகன் அருளால் வினை, நல்லருள், மெய்யறிவு எல்லாம் கிட்டும் என்றும், அத்தகைய முருகன் அருளன்றி இந்திர போகம் வரினும், வேண்டாத மன நிலையை தாம் பெற்றதாகவும் முருகதாசர் தமது அநுபூதியில் கூறுகின்றார். முருகன் அருளால் பெற்ற அட்டமாசித்திகள் மூலம் மக்களை நல்வழிப்படுத்த முருகதாசர் விரும்புகிறார்.

"சத்திக் கரம்எய் தியசண் முகனே
எத்திக் கும்நிறைந் தவனென் றுணரும்
புத்தித் திறம்எய் தியபேர தினும்எண்
சித்திப் புகழ்வென வுதல்தீர் கிலனே" — (பாடல். 17)

என்பது பாடல் வரி.

அருணகிரிநாதர் கந்தரநுபூதியில் முருகன் அருளுடன் மக்களை நல்வழிப்படுத்த விழைகிறார். அவர் கூறுகிறார்:

ஏ மனமே! நீ வீணே கெட்டழிகின்றனை; உய்யும் வழியை உபதேசிக்கின்றேன் கேட்பாயாக; யாசிப்பவர்க்கு ஒளித்து வைக்காமல் அன்புடன் கொடுப்பாயாக. கூர்மையான ஞான வேலாயுதத்தை ஏந்திய முருகப் பெருமானுடைய திருவடியை

மறவாமல் நினைவாயாக; தொடர்ந்து நெடுங்காலமாக வருகின்ற பிறவித் துயரை ஞானத் தீயினால் தூளாகுமாறு சுட்டெரிப்பாயாக. வினைகள் அனைத்தையும் அறவே விட்டு விடுவாயாக.

''கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே'' — (பாடல். 7)

என்பது பாடல் வரி.

முருகனது திருவருளையே துணையாகக் கொண்டு அதனால் உண்டாகிய மெய்யுணர்வினால் அப்பரம்பொருளை அறிய மாட்டாதவர் நூலறிவினால் அறிய வல்லவர் ஆகமாட்டார் என்பது அருணகிரிநாதருடைய கருத்து.

வறுமை என்ற ஒரு பாவி தோன்றுமானால், உடலழகும், செல்வமும், நல்ல மனமும், நற்குணமும், குடிப்பிறப்பின் உயர்வும், குலப்பெருமையும் அடியோடு விட்டு வேறு இடத்திற்கு குடிபோய்விடும் என்று கூறும் அருணகிரிநாதர் முருகனருளால் வறுமை விலகி ஓடும் என்றும் கூறுகிறார்.

''வடிவுந் தனமும் மனமும் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வேல் அரசே
மிடியென்றொரு பாவி வெளிப்படினே'' — (பாடல். 19)

என்பது பாடல் வரி.

முருகன் அருளால் கிட்டிய அனுபவம்

முருகன் தம் கனவில் தோன்றி அருள்பாலித்து மெய் யுணர்வை உணர்த்தினானென்றும், பத்து நாளில் அருள் செய்வதாக தன்னிடம் முருகன் சொன்னது உண்மையென்றும் முருகதாசர் தமது அநுபூதியில் கூறுகிறார்.

''எனதுட் பலவன் னம்இலங் குமெழிற்
கனவைக் குறிஎன் றுகுணித் ததனால்'' — (பாடல். 4)

என்றும்

''எய்த்துத் தளர்என் னொடும்எம் குகவேள்
பத்துத் தினமென் றுப்பகர்ந் தனனே'' — (பாடல். 29)

என்றும் முருகதாசர் இப்பாடல் வரிகளில் கூறுகிறார். உருவமான எவையும் முருகனே என்றும், முருகனே பரம்பொருள் என்ற உணர்வை தாம் பெற்றதாகவும் கூறும் முருகதாசர் பதினெட்டு புராணங்களில் பல தெய்வநிலை கூறிய போதிலும் தாம் முருகனையே பரமென்று வணங்குவதாக கீழ்வரும் பாடலில் கூறுகிறார்.

''சுற்றுஞ் சடைமா முனிசொற் கதையால்
மற்றும் பலவா னவர்உண் டெனநான்
பற்றுந் தொழில்கொண் டுபரிந் துளநாள்
முற்றுங் குகனென் னமொழிந் துளனே'' — (பாடல். 79)

அருணகிரிப் பெருமான் முருகன் தன்னை ஆட்கொண்ட கருணைத்திறத்தை வியந்து பாராட்டுகிறார். வீண்பேச்சுப் பேசுபவனும், நலம் ஒன்றும் அறியாதவனும், மிகவும் தீய குணம் உடையவனுமாகிய அடியேனை ஆட்கொண்ட உமது கருணைத் திறம் சொல்லுந்தரமன்று என்று கூறுகிறார்.

''ஆதாளியை ஒன்றறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கிறைவா
வேதாள கணபுகழ் வேலவனே'' — (பாடல் 38)

என்பது பாடல். முருகனின் கருணைத்திறத்தால் உலகத்தவரோடு நெருங்கிய தொடர்புகளும், பேச்சும் மனமும் சுட்டியறிகின்ற அறிவும் அறியாமையும் அடியுடன் அற்றுவிட்டதாகவும் ஆசையாகிய சங்கிலி பொடிப்பொடியாக ஆனபின் மௌன நிலையாகிய அனுபூதி நிலை தமக்கு கிட்டியதாகவும் அருணகிரிநாதர் கூறுகிறார்.

''செறிவற் றுலகோடுரை சிந்தையுமற்
றறிவற் றறியாமையும் அற்றதுவே'' — (பாடல் 42)

என்றும்,

''ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே'' — (பாடல் 43)

என்றும் கூறுகின்றார்.

முருகதாசனின் தமிழ்ப்பற்று

சௌரம், சைவம், சாந்தேயம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம் என்ற மதங்களில் கௌமாரம் முருகனின் புராண வழிபாட்டை தெளிவாகக் கூறும். இந்த ஆறு மதங்களே முருகனின் திருமுகங்கள் என்பது மரபு கௌமார தத்துவத்தை போற்றிப் பரப்பிய தண்டபாணி சுவாமிகள் கௌமார மடாலயத்தை நிறுவி அதன் கொள்கையை பரப்ப வழி வகுத்தார் முருகதாசர் மிக்க தமிழ்ப்பற்றுடையவர். தமிழின் பால் தாம் கொண்டிருந்த பற்றை பல பாடல் வரிகளில் வெளிப் படுத்தி உள்ளார். கீழ்வரும் பாடல் வரிகள் இவற்றைக் காட்டும்.

"... ... ... செந்தமிழைச்
சொல்என் றுதுடிப் பதுசத் தியமே" — (பாடல் 7)

"தண்ணிற் பொலிசெந் தமிழ்கொண் டினி(து)என்
கண்ணிற் புனையக் கழல்நல் கினனே" — (பாடல் 9)

"தருசெந் தமிழ்ஓ சைடுத் ததுவே" — (பாடல் 15)

"... ... ... தமிழே தினமும்
புனையுஞ் செயல்போ தமுயன்றும்" — (பாடல் 42)

"தென்சொற்(கு) உருகும் சிவசண் முகவேன்" (பாடல் 46)

"... ... ... மலைத்
தானத் தினனைத் தமிழிற் பகர்வேன்' — (பாடல் 55)

"... ... ... வண் தமிழால்
வீடே தருகென் றுவிரும்பு மெனைக்" — (பாடல் 74)

முடிவுரை

முருகன் அருணகிரிநாதருக்கு உபதேசத்தால் மெய்யுணர்வை உணர்த்தி அருளியதாக கந்தரநுபூதியில் கூறுகிறார். இத்தகைய முருகன் அருளால் கிட்டிய அனுபவத்தில் விளையும் ஞான இன்பத்தை (அநுபூதி இன்பம்) கூற வார்த்தைகளே இல்லை என்றும் அவரவர் தத்தம் அனுபவத்திலேயே அதை உணர்தல் வேண்டும் என்றும் அதை உரைக்க இயலாது என்றும் அருணகிரி நாதர் 'கந்தரநுபூதி'யில் கூறுகிறார். திருவருட்சித்தாடல் கைவருமுன்பே முடிந்த அநுபவமாக முருகனளித்த அனுபவத்தை

உள்ளவாறு கூறியதாகவும், இது மனமறிந்த உண்மையென்றும், இதைப் பாடும்படி வைத்தது முருகப்பெருமான் திருவருளின் செயல் என்றும் முருகதாசர் தமது முருகதாசர் அநுபூதியில் கூறுகிறார். இக்கருத்தை வலியுறுத்தும் முருகதாசர் அநுபூதிப் பாடல்கள் இரண்டு இவற்றை உணர்த்தும்.

''திடமிஞ் சியசெங் கதிர்வேல் முருகோன்
இடமென் றொளிர்என் மனமாம் வெளியில்
கடலின் திரையிற் கவிவந் தெழுதா(து)
உடனங்(கு) அழிவுற் றனபற் பலவே'' — (பாடல் 30)

''என்பா டல்அனைத் தும்எழிற் குகவேள்
தன்பா டலெனப் பகர்சத் தியம்உண்(டு)
இன்பார் இசைநா ரதனோ(டு) இணைதீர்
அன்பார் முதல்வி ரனறிந் ததுவே'' — (பாடல் 60)

அறுவகையிலக்கணத்தில் உயிரெழுத்துக்கள்

ச. குமார்

முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் எண்ணற்ற தமிழ் நூல்களை இயற்றிய தலைசிறந்த தமிழ்ப் பெரியார் ஆவார். இவர் இயற்றிய அறுவகையிலக்கணம் என்ற நூல் உயிருக்கு நேரான தமிழ் மொழியின் மேன்மையினைப் பறைசாற்றி நிற்கிறது எனலாம். இந்நூலுள் எழுத்திலக்கணம் என்ற முதல் பகுதியின் வழி உயிரெழுத்துக்கள் குறித்து ஆசிரியர் தரும் செய்திகளை ஆய்வதோடு அவற்றைத் தொல்காப்பியத்தோடும் இக்கட்டுரை ஒப்பிட்டு ஆய்கிறது.

அறுவகை இலக்கணம்

யாப்பையும் அணியையும் பொருளுள் கொண்டு எழுத்து சொல், பொருள் என மூன்று இலக்கணங்களை விளக்குகிறது தொல்காப்பியம். இம்மரபே பிற்காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐந்திலக்கணமாக விரிந்தது. இந்த ஐந்திலக்கணத்துடன் ஆறாவதாகப் புலமை இலக்கணம் என்ற ஒன்றைக் கூட்டித் தமிழ் மொழியின் மேன்மையினைப் பறைசாற்றும் வகையில் தண்டபாணி சுவாமிகள் அறுவகை யிலக்கணம் என்ற நூலை அமைத்தார்.

அறுவகையிலக்கணம் என்ற நூலின் முதல் பகுதியாக எழுத்திலக்கணம் என்ற பகுதி அமைகிறது. இப்பகுதி (1) உருவோசையியல்பு; (2) நிலையியல்பு; (3) புணர்ச்சியியல்பு என மூன்று இயல்புகளைக் கொண்டுள்ளது. முதலிரண்டு இயல்பு களில் உயிரெழுத்துக்கள் குறித்து விளக்கியுள்ளார். வடிவம் மட்டுமன்றி ஓசையுடன் திகழும் உயிரெழுத்துக்கள் குறித்து

முதலிரண்டு இயல்புகளில் தரப்பட்டுள்ளக் கருத்துக்களை ஐந்தாகப் பகுக்கலாம். அவை,

1. உயிரெழுத்துக்களின் தொகை

''ஆவி ஈராறு'' (எழுத்து - 4)

என்ற சூத்திரத்தின் வழி உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு என அதன் தொகையினைச் சுட்டுகின்றார்.

2. உயிரெழுத்துக்களின் வரிவடிவும் ஒலிப்பு முறையும்

உயிரெழுத்துக்களை அ, ஆ, இ, ஈ – என இனவெழுத்துக் களின் அடிப்படையில் வகை செய்து விரிவுபட எழுத்துக்களின் வரிவடிவத்தினை விளக்குவதோடு ஒலிப்பு முறையினையும் குறிப்பிடுகின்றார்.

''கிளிமுகம் போலச் சுழித்துக் கீழ்க்கொணர்ந்து
இடப்பால் நீட்டி மேல் வளைத்து இடைவெளி
அமைதர வலத்தீர்த்து அம்முகம் அடங்க
மேலிர்த்து அம்முறை கீழும் ஈர்த்தல்
அகரக்குறியாம்'' (எழுத்து – 7)

என்று அகரத்திற்குரிய வரிவடிவத்தினை விளக்குகிறார் ஆசிரியர். இந்நூற்பாவில் அகரத்திற்குரிய வரிவடிவத்தினைச் சுட்டுவதோடு அமையாது ஒலிக்கும் முறையையும் விளக்குகின்றார்.

''... ... ... ஆன் இளங்கன்றிற்கு
இரங்கலில் மூலத்து எழும்காற் றுணைக்கொடு
சிறிது வாய் திறந்து ஒலிக்கும்'' (எழுத்து – 7)

அந்நூற்பாவிலேயே குறிலோடு சேர்த்து நெடிலுக்குரிய வரிவடி வத்தையும் ஒலிக்கும் முறையையும் விளக்குகின்றார்.

''... ... ...அக்குறியின்
ஈற்றின் வரைநுனி பிலங்க வலந்தொட்டு
இடம் வரை சுழித்தல் ஆகாரத் தியல்பாம்
அவணெழுந் திருமடங்காம் இதன் தொனியே''

(எழுத்து – 7)

இம்முறையில் அகரம் தொடங்கி ஔகாரம் ஈறாகப் பன்னிரு உயிரெழுத்துக்களுக்கும் வரிவடிவத்தையும் ஒலிக்கும் முறையை யும் விளக்குகின்றார்.

3. உயிரெழுத்துக்களின் ஒலிநிலை

நிலையியல்பு என்ற இயலில் அமையும் ஒலிநிலை என்ற பகுதியில் குறில், நெடில், நடு என்று உயிரெழுத்துக்களைப் பாகுபாடு செய்வதோடு அவற்றின் மாத்திரையினையும் குறிப்பிடுகின்றார்.

அ, இ, உ, எ, ஒ – என்ற ஐந்து எழுத்தும் ஒரு மாத்திரை யளவு கொண்ட குறில் எழுத்துக்கள் ஆகும். ஆ, ஈ, ஊ, ஏ, ஓ – என்ற ஐந்து எழுத்தும் இரண்டு மாத்திரையளவு கொண்ட நெடில் எழுத்துக்கள் ஆகும். ஐ, ஔ – என்ற இரண்டு எழுத்துக்களும் ஒன்றரை மாத்திரையளவு கொண்ட குறில், நெடில் அல்லாத நடு எழுத்துக்கள் ஆகும் என்று கூறுவதோடு இவ்விரு எழுத்துக்களையும் நெடில் என்று சிலர் கூறுவர் எனவும் இயம்புகின்றார்.

4. உயிரெழுத்துக்களின் இனநிலை

எழுத்துக்களுக்கு இனம் சுட்டும் மரபு உண்டு. அம்மரபின்படி உயிரெழுத்துக்களை எல்லா எழுத்துக்களுக்கும் பொது எழுத் தாகக் கொண்டு பொதுவினத்துள் சேர்க்கின்றார்.

5. உயிரெழுத்துக்களின் தெய்வநிலை

ஒவ்வொரு பொருளிலும் பரம்பொருள் நிறைந்துள்ளான். அணுத்திரள்கள் சேர்ந்த எழுத்துக்களிலும் பரம்பொருள் நிறைந்து காணப்படுகின்றான். உயிரெழுத்துக்களில் காணப்படும் தெய்வநிலையைக் கீழ்க்காணும் சூத்திரங்களில் ஆசிரியர் விளக்குகின்றார்.

''அகரஆ காரத்து அயனொடு கலைமகள்
இகர ஈகாரத்து அரியுடன் எழிற்றிரு
உகர ஊகாரத்து அரன்உமை எகரம்
ஏகா ரத்தில்ம யேச்சுரன் யாமளை
ஒகர ஓகாரத்து ஈசன்ம னோன்மணி
நிலைஇய பண்புணர் நெறிஎளி தலவே'' (எழுத்து–96)

''ஐகாரத்தில் அயில்வேற் குருபரன்
ஔகாரத்தில் அவன் றுணையுறுமே'' (எழுத்து–97)

அ, ஆ – என்ற எழுத்துக்களில் அயனுடன் கலைமகளும்; இ, ஈ– என்ற எழுத்துக்களில் அரியுடன் திருமகளும்; உ, ஊ – என்ற

எழுத்துக்களில் அரியுடன் உமையும்; எ, ஏ – என்ற எழுத்துக் களில் மயேச்சுரனுடன் யாமளையும்; ஒ, ஓ – என்ற எழுத்துக் களில் ஈசனுடன் மனோன்மணியும்; ஐகாரத்தில் குமரனும்; ஔகாரத்தில் விநாயகரும் வாசம் செய்கின்றனர்.

தொல்காப்பியம்

இன்று நமக்குக் கிடைக்கும் நூல்களில் மிகப் பழமையான நூல் தொல்காப்பியம் ஆகும். இதன் ஆசிரியரான தொல்காப்பியனாரை அகத்தியரின் பன்னிரு மாணாக்கருள் ஒருவர் என்பர். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. எழுத்ததிகாரத்துள் நூன்மரபு, பிறப்பியல் என்ற இயல்களில் உயிரெழுத்துக்கள் குறித்து விளக்கும் செய்தி களை நான்காகப் பாகுபடுத்தலாம். அவை,

1. உயிரெழுத்துக்களின் தொகை

"ஔகார இறுவாய்ப்
பன்னீரெழுத்தும் உயிரென மொழிப" (எழுத்து – 8)

என்ற நூற்பாவில் உயிரெழுத்துக்களின் எண்ணிக்கை பன்னிரண்டு என அதன் தொகையினைத் தருகின்றார்.

2. உயிரெழுத்துக்களின் வரிவடிவு

உயிரெழுத்துக்களுள் குறில் எழுத்துக்களான எகர, ஒகரங்கள் புள்ளி பெற்றமையும் என்பதை,

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே" (எழுத்து – 16)

என்ற நூற்பாவில் தெளிவுபட விளக்கியுள்ளார். இது இவ்வுயிர் களின் வரிவடிவம் பற்றிய குறிப்பை நமக்கு வழங்குகிறது. இவை தவிர்ந்த பிற உயிரெழுத்துக்களின் வரிவடிவங்களைக் குறிப்பிட வில்லை.

3. உயிரெழுத்துக்களின் ஒலிப்பு முறை

"அவற்றுள்
அ ஆ ஆயிரண்டங்காத் தியலும்" (எழுத்து – 85)

என்று அ, ஆ – வின் ஒலிப்பு முறையினைச் சுட்டுகின்றார். இதுபோன்று ஏனைய உயிர்களின் ஒலிப்பு முறைகளையும் தெளிவுற விளக்குகின்றார்.

4. உயிரெழுத்துக்களின் ஒலி நிலை

உயிரெழுத்துக்களின் ஒலி நிலையினைச் சுட்டும் பொழுது அவற்றைக் குறில், நெடில் எனப் பிரித்துக் கூறுவதோடு மாத்திரையின் அளவினையும் குறிக்கின்றார்.

அ, இ, உ, எ, ஒ - என்ற ஐந்து எழுத்தும் ஒரு மாத்திரை அளவு கொண்ட குறில் எழுத்துக்கள் ஆகும். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - என்ற ஏழு எழுத்தும் இரண்டு மாத்திரையளவு கொண்ட நெடில் எழுத்துக்கள் ஆகும்.

ஒப்பீடு

தண்டபாணி சுவாமிகள் உயிர் எழுத்துக்களின் வரி வடிவத்தினைத் தெளிவுபட விளக்குவதோடு ஒவ்வொரு எழுத்துக்களின் பிறப்பு முறையையும் குறிப்பிடுகின்றார். மேலும், எழுத்துக்களின் தெய்வநிலையையும் சுட்டுகின்றார். தொல்காப்பியர் எழுத்துக்களின் வரிவடிவத்தை விரிவுபட விளக்கவில்லை. ஐ, ஔ - என்ற இரண்டு எழுத்துக்கலளத் தொல்காப்பியர் நெடில் எழுத்தாகக் கொண்டு இரண்டு மாத்திரை என்று அளவினைக் குறிப்பிடுகின்றார். ஆனால் தண்டபாணி சுவாமிகளோ இவ்விரு எழுத்துக்களையும் குறில், நெடில் அல்லாத நடுவெழுத்தாகக் கொண்டு ஒன்றரை மாத்திரை என அளவினைச் சுட்டுகின்றார்.

முடிவுரை

ஐந்திலக்கணத்துடன் ஆறாவதாகப் புலமை இலக்கணம் என்ற ஒன்றைக் கூட்டி அறுவகையிலக்கணமாகத் திகழும் அறுவகையிலக்கணம் என்ற நூலில் தண்டபாணி சுவாமிகள் உயிரெழுத்துக்களுக்கு விரிவாக வரிவடிவத்தினைக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் தம் கருத்திலிருந்து வேறுபட்டு, ஐ, ஔ - என்ற இரண்டு எழுத்துக்களையும் ஒன்றரை மாத்திரையளவு கொண்ட நடுவெழுத்தாகச் சுட்டுகின்றார். அதோடு அமையாது ஒவ்வொரு எழுத்துக்களுக்குரிய தெய்வ நிலையையும் கூறுகின்றார்.

சுவாமிகள் கண்ட நம்மாழ்வார்

தி. வே. கோபாலையர்

திருமாலுடைய தனித்தன்மை, வடிவம், பண்பு, செல்வங்கள் இவற்றில் ஆழங்காற்பட்டு அப்பெருமானைப் பாமாலையாலே போற்றிப் புகழ்ந்த அடியவர்கள் பிற்காலத்தவரால் ஆழ்வார் என்ற பெயரில் போற்றப்பட்டார்கள். அத்தகைய பெருமக்கள் பதின்மர் என்பர். ஆண்டாளைப் பெரியாழ்வாரோடும் மதுர கவியாழ்வாரை நம்மாழ்வாரோடும் இணைத்துக் கொண்டு ஆழ்வார்கள் பதின்மர் என்று கூறுவதே மரபு.

ஆழ்வார்கள் பதின்மருள் மாறன், காரிமாறன், சடகோபன் என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளும் நம்மாழ்வாருக்கு அப் பெயர் மணவாள மாமுனிகளின் காலத்துக்குச் சற்று முற்பட்ட காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். இவர் ஏனைய பெயர்களைவிட நம்மாழ்வார் என்ற பெயராலேயே பிரசித்தமாக உள்ளார். இவர் அருளிச்செய்த திருவிருத்தம், திருஆசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்களும் முறையே இருக்கு, எசுர், அதர்வண சாமவேதங்கள் போலப் போற்றப்படுகின்றன. இவர் அருளிச் செய்த இந்த நான்கு பிரபந்தங்களின் பாடல்களின் தொகை $100+7+87+1102=1296$ ஆகும். இவரே ஆழ்வார் பதின்மரில் மிகுதியான பாசுரங்கள் பாடியவர்.

நஞ்சீயர் நம்பிள்ளை என்பார் மாணாக்கரான பின் பழகிய பெருமாள் ஜீயர் இயற்றியருளிய குருபரம்பராப்ரபாவம், ஏறத்தாழ இதே காலத்தைச் சேர்ந்த வடமொழியில் இயற்றப் பட்ட ப்ரபந்நாம்ருதம், மாமுனிகளின் காலத்தை ஒட்டிய கந்தாடைநாயன் அருளிய பெரியதிருமுடிஅடைவு என்பன முறையே 600, 500 ஆண்டுகளுக்கு முன்தோன்றி இன்று வரை வைணவர்களால் போற்றப்படுபவை.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அச்சேறிய இந் நூல்கள் சென்ற நூற்றாண்டின் இறுதிவரை ஏட்டுச் சுவடி களாகப் போற்றப்பட்டனவாகும்.

ஏட்டுச்சுவடிகளை வாசிக்க விரும்பியவர்களுக்கு இரவலாக வழங்கிப் பின் திரும்பப் பெறுவதும், பகவத்விஷயம் பற்றி அறிந்து கொள்ள விரும்புபவர்களுக்குத் தடங்கலின்றி அச்செய்திகளை வாரி வழங்குவதும் மிகவும் குறைவாக இருந்த சென்ற நூற்றாண்டின் இறுதிவரை அமைந்த காலத்தில், மேற்குறிப் பிட்ட நூல்களை முறையாகக் கற்று ஆழ்வார்களுடைய வரலாறுகளாக அந்நூல்களில் குறிப்பிடப்பட்ட செய்திகளைத் தெளிவாக அறிந்த வைணவர்கள் மிகச்சிலரே. ஏனைய, மிகுந்த கல்வியறிவு இல்லாத வைணவர் பலரும் ஆழ்வார்கள் வரலாறாகக் கர்ண பரம்பரையாகக் கூறப்படும் செய்திகளைக் கேட்டே மனநிறைவு கொண்டவர்களாக இருந்தனர். அத்தகைய மக்கள் பலரைக் கேட்டறிந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டே, குருபரம்பராப்ரபாவம், ப்ரபந்நாம்ருதம், பெரியதிருமுடிஅடைவு முதலிய நூல்களை ஒருமுறை காணும் வாய்ப்பு தமக்குக் கிட்டியிருக்கக்கூடுமாயினும் அதனைப் பயன்படுத்தாது, தண்டபாணி சுவாமிகள், புலவர் புராணத்தில் வரைந்திருக்கும் நம்மாழ்வார் வரலாறு அவர் வரலாற்றைக் குறிப்பிடும் மேற் குறிப்பிடப்பட்டுள்ள நூல்களில் காணப்படும் செய்திகளின் வேறுபட்டதாக அமைந்திருப்பதனை ஒப்பிட்டுக் கண்டு கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குருபரம்பராப்ரபாவம் முதலிய நூல்கள் குறிப்பிடும் நம்மாழ்வார் வரலாற்றை நோக்குவோம்.

புண்ணிய நதிகளுள் ஒன்றாகிய தாமிரபரணி ஆற்றங்கரை யிலே நல்லார்நவில் குருகூர் என்று போற்றப்படும் திருக்குருகூர் நகர்ப்பகுதி வழுதி வளநாடு என்று கூறப்படுகிறது. அப்பகுதியைக் குறுநில மன்னர்போலப் பரம்பரை பரம்பரையாக ஆட்சிபுரிந்து வந்தவரும் திருமால் திருவடிகளையன்றிப் புறம்தொழாது வாழ்ந்தவரும் திருவழுதி வளநாடர் என்பார். அவர் மகனார் அறந்தாங்கியார். அவர் மகனார் சக்ரபாணியார். அவர் மகனார் அச்யுதர். அவர் மகனார் செந்தாமரைக் கண்ணர். அவர் மகனார் செங்கண்ணர். அவர் மகனார் பொற்காரியார். அவர்

மகனார் காரியார். அவர் மகனாரே மாறன் எனப்படும் நம்மாழ் வார் என்று குருபரம்பராப்ரபாவம் கூறுகிறது.

மாறன் திருத்தகப்பனார் காரியார். அவர் தந்தையார் செந்தாமரைக் கண்ணர். அவர் தந்தையார் அச்சுதர். அவர் தந்தையார் அறந்தாங்கியார். அவர் தந்தையார் திருவழுதிவள நாடர். இது நம்மாழ்வாருடைய திருவம்சம் என்று பெரிய திருமுடிஅடைவு கூறுகிறது.

பொற்காரியார் தம் மகனார் காரியாருக்குத் திருவண்பரி சாரத்தில் வாழ்ந்த திருவாழ்மார்பருடைய மகள் உடைய நங்கையை மகட்பேசி மணம் முடித்தார். சில ஆண்டுகள் வரை மகப்பேறின்மையின் ஒரு முறை திருக்குருகூரிலிருந்து திருவண் பரிசாரம் செல்லும் வழியில் இடையிலே திருக்குறுங்குடியில் உகந்தருளியிருக்கும் திருக்குறுங்குடி நம்பியைச் சேவித்து அவர் அருள்பெற்று உடையநங்கை கருத்தரித்துக் கலியுகம் பிறந்த 43-ஆம் நாளான பகுதான்ய வருஷத்து வசந்தருது வைகாசி மாதம் சுக்கிலபட்சம் பௌர்ணமி கூடிய திருவைசாக நட்சத்திரத்தில் காவ்யவாஸர (வெள்ளிக்கிழமை) கற்கடக லக்நத்தில் திவ்யயோக திவ்யகரணங்களிலே மாறன் எனப்படும் ஆண்மகவைப் பயந்தாள். திருஅநந்தாழ்வானும் இவருக்கு முன்னரேயே திருப்புளி ஆழ்வாராக வந்து அவதரித்திருந்தார். பெரியதிருமுடிஅடைவு பகுதான்ய வருஷத்தை அடுத்த பிரமாதி வருஷம் என்று குறிப்பிடுகிறது.

மாறன் என்ற இந்த ஆழ்வார் அவதரித்தபின் தாய்ப்பால் உண்ணாமலும் அழாமலும் வாட்டமின்றிப் பரிபூரணராய் இருந்த இயல்பைக் கண்டு பெற்றோர் ஆச்சரியமுற்றுக் குழந்தை பிறந்த 12-ஆம் நாள் திருக்குருகூரில் உகந்தருளியிருக்கும் பொலிந்து நின்ற பிரான் சந்நிதியில் அக்குழந்தையைச் சேவிக்கப் பண்ணி மாறன் என்று திருநாமம் சாத்தித் திருப்புளியாழ்வார் அடியிலே ஆணிப் பொன்னால் செய்த வடத்திருத்தொட்டிலிலே வளர்த்தி இவரை எங்கள் குடிக்கு அரசே என்று சிறப்பாகப் பாராட்டிக் கொண்டிருக்கத் திருமால் அருளால் சேனை முதலியார் அக்குழந்தைக்கு மந்திர மந்திரார்த்தங்களையும் திராவிட வேதத்தையும் உபதேசித்துச் சென்றார்.

இவ்வாழ்வார் அன்னம் பானம் இன்றித் திருப்புளியாழ்வார் அடியிலேயே கண்களை மூடிக் கொண்டு மௌனமாய்த் திருமால் தியானத்திலேயே ஈடுபட்டிருத்தலைக் கண்ட உடைய நங்கையாரும் காரியாரும் இவர் உலகியலுக்குமாறுபட்டு இருக்கும் நிலை கண்டு சித்தை கலங்கியிருந்தனர்.

இவருக்குச் சில ஆண்டுகளுக்குமுன் திருக்கோளூரிலே முன் குடுமிச் சோழிய அந்தணர் மரபிலே தோன்றி, முறைப்படி உபநயனம் முடிய உள்ள சடங்குகள் நிகழ்த்தப் பெற்று வடக்கே உள்ள திவ்யதேசங்களைச் சேவிக்க எழுந்தருளிய மதுரகவியார் ஒருநாள் இரவிலே தென்திசைக்கண் ஒரு சோதியைக் கண்டார். தொடர்ந்து சில நாள்கள் அந்தச் சோதி கட்புலனாகவே, அச்சோதி காணப்பட்ட திசையைக் குறித்துத் தென்திசைப் பயணம் போந்து திருக்குருகூரை அடைந்த அளவில் அச்சோதி மறைய அங்கு ஆழ்வாரைத் தரிசித்து அவருக்கு ஐம்பொறி உணர்வு இருக்கிறதா என்று அறிய விரும்பி ஒரு சிறுகல்லை அவருக்கு அருகில் விழுமாறு எறிய ஆழ்வார் கண்களைத் திறந்து பார்க்க, அவருக்குச் செவிப்புலன் நன்கு உள்ளதா என்பதனை அறிய 'செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?'! என்று வினவ, ஆழ்வார் உடனே 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்று அருளிச் செய்ய, மதுரகவிகள் யாவையும் உணர்ந்த ஆழ்வாரை அண்டித் தாம் கடைத்தேற வேண்டும் என்று முடிவு செய்து அவரைத் தாளும் தடக்கையும் கூப்பி விழுந்து சேவித்து அவர் திருவடித் தொண்டில் முழுமையாக ஈடுபட்டிருந்தார். ஆழ்வாருக்குப் பல திவ்யதேசங்களிலுள்ள எம்பெருமான்களும் காட்சி வழங்க ஆழ்வார் அவர்களை எல்லாம் தம் பாசுரங்களால் மங்களாசாசனம் செய்து, 'உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையும், கண்ணன் எம்பெருமான்' என இறைவனுடைய குணங்களை அனுபவித்தலையே தமக்கு வாழ்முதலாகக் கொண்டு தாம் அருளிய பாசுரங்களை மதுரகவியார் ஏடுபடுத்தத் திருவிருத்தம் முதலான நான்கு பிரபந்தங்களையும் அருளிச்செய்து பரஞான பரபத்தி பரமபக்திகள் விஞ்சத் தம் 35-ஆம் வயதில் வீடுபேறடைந்தார். இவரையே தெய்வமாகக் கொண்டு வழிபட்டுக் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற பதிகத்தை அருளிய மதுரகவியார், மதுரகவி ஆழ்வாராகி இவரோடு சேர்த்து எண்ணப்படுகிறார்.

பழைய நூல்கள் நம்மாழ்வாரைப் பற்றியும் மதுரகவியாரைப் பற்றியும் குறிப்பிடும் செய்திகள் இவையே நூல்களைப் பயின்று செய்திகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாதவர்கள் கர்ண பரம்பரையாக இவ்வாழ்வாரைப் பற்றித் தாம் தாம் அறிந்தவற்றை அடுத்தவர்களுக்குக் கூறி வந்தனர். நூல்களில் உள்ள செய்திகளுக்கும் கர்ண பரம்பரைச் செய்திகளுக்கும் இடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. முருகதாச சுவாமிகள் குருபரம்பராப்ரபாவம் முதலிய நூல்கள் வாயிலாக இவர்களைப் பற்றி அறிந்திருக்கலாம் ஆனால் நூல்களில் குறிப் பிடப்பட்டுள்ளவற்றைக் கொள்ளாமல் தாம் செவிவழிச் செய்திகளாக ஆங்காங்குக் கேள்விப்பட்ட செய்திகளையே அடிப் படையாகக் கொண்டு நூல் இயற்ற முற்பட்டமையால் இந்த நூலில் செவிவழிச் செய்திகளுக்கே முதல் இடம் வழங்கப் பட்டுள்ளது. இவ்வரலாறுகளில் ஆசிரியர் கற்பனையாக வரைந்த செய்தி எதுவும் இன்று.

திருமால் அடியார்கள் ஆழ்வார்கள் என்று கூறப்படுவது போலவே, சிவனடியார்கள் நாயன்மார் என்ற பெயரால் குறிப் பிடப்படுகின்றனர். ஆழ்வார் பன்னிருவரும் திருமாலைப் போற்றிப் பாமாலை பாடியவர்கள். ஆனால் நாயன்மார் அறுபத்து மூவரில் சிவபெருமானைக் குறித்துப் பாமாலை பாடியவர்கள் தேவாரமூவர், திருமூலர், ஐயடிகள் காடவர் கோன்நாயனார், காரைக்கால் அம்மையார், சேரமான்பெருமான் நாயனார் என்ற எழுவரே ஆவர். ஆழ்வாருள் குலசேகர ஆழ்வார் பற்றியும் நாயன்மாருள் பாமாலை பாடியவர்களுள் ஐயடிகள் காடவர்கோன்நாயனார் பற்றியும் இவ்வாசிரியர் கூறாது விடுத்ததன் உண்மைக்காரணம் புலப்படவில்லை.

ஆசிரியர் புலவர் புராணம் என்றும் இந்நூலைத் தாம் இயற்றப்புக்கதன் காரணத்தையும் இந்நூலுக்குத் தாம் மேற் கொண்ட ஆதாரங்களையும் 25-ஆம் பாடலில் விளக்குகிறார். அப்பாடல் சிறப்புப்பாயிரப் பகுதியில் ஆறாம் பாடலாக உள்ளது.

நூலின் பெயர் உண்மைப்புலவர் புராணம். நூல் தொடங்கப் பட்ட இடம் திருநெல்லைநகர். நூல் இயற்றியதன் காரணம் இரப்பவருக்கு ஈபவர்தம் பெருஞ்சிறப்பு, இரப்பவருக்கு ஈயாதார் அடையக்கூடிய பொல்லாங்கு, செந்தமிழ்ப் புலவர்களின் அழகிய

புகழ் என்பனவற்றை விளக்குவதன் வாயிலாக அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பொருள் நான்கனையும் பெற விரும்புதல்.

நூல் இயற்றுதற்கு ஆதாரம் உலக மக்கள் குறிப்பிடும் செவிவழிச் செய்தியும், கலைமகள் நடனமாடும் தம்முடைய நாவின் செயலும், வேலைக் கையிலேந்தி மலைகள் தோறும் போய்த்திருவருட் பெருவெற்றியை விளைக்கும் பரம ஞானியாகிய முருகனுடைய செந்தாமரை போன்ற திருவடிகள் வழங்கிய அருளுமே என்று குறிப்பிடுகிறார்.

நெல்லை நகரில் தொடங்கப்பட்ட இந்நூலை இன்னும் பல திருத்தலங்களுக்கு யாத்திரை சென்று பலரோடும் பழகிப் பல செய்திகளையும் அறிந்துகொண்ட பின்னரே தொடரலாம் என்று முருகப் பெருமான் குறிப்பிட்டமையின் பல ஆண்டுகள் பல திருத்தலங்களுக்கு யாத்திரை செய்து பல ஆயிரம் பாடல்கள் பாடிப் பலதிற மக்களோடு பழகி அவர்கள் குறிப்பிட்ட பல செய்திகளையும் மனத்தில் தேக்கி வைத்துத் திருவாமாத்தூரில் வந்து நிலையாகத் தங்கியபின், அந்நூலைத் தொடர்ந்து பாடுமாறு முருகப் பெருமான் இசைவு தந்ததனால் தாம் பாடுவதாக 83-ஆம் பாடலில் குறிப்பிடுகிறார். எனவே, இந்நூல் எழுதுவதற்குச் செவிவழிச் செய்திகளை இவர் பல ஆண்டு தொகுத்துள்ளார் என்பது பெறப்படும். வேற்று நூல்களில் காண முடியாத பல புலவர் வரலாறுகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ள செய்தி, இது செவிவழிச் செய்தி அடிப்படையாக எழுந்த நூல் என்பதை உறுதிப்படுத்தும்.

புலவர் சிலர் வரலாறுகளைப் பற்றி விவரமாகக் கேட்டறிய முயன்றும் ஆசிரியரால் அறிய முடியவில்லை. கேட்ட அளவில் பாடலாக அமைத்துள்ளார். தம் கற்பனையாகச் சிலவற்றைச் சேர்த்துப் பாடுதல் தம் தகுதிக்கு ஏற்றதன்று என்று விடுத்துள்ளார்.

அம்மூவர் சரித்திரமும் விவரமாக்கேட்டு
அறிந்தில்லேன்; கேட்டளவில் ஐயமின்றி
இம்மூவர் இத்தகையர் என்னச் சொன்னேன்
எதுநிசமோ? எது பொய்யோ? இறைவன் தேர்வான்.
(1732).

இன்னம் வெகுவாய் அவர்தம் மகிமை சொல்ல
எனக்குஆசை; விபரம் ஒன்றும் எய்தவில்லை
என்னது கற்பனையாச்சில் புலவரே போன்று
இயம்பிடுதல் என்தகுதிக்கு ஏற்றதன்றே
1217 முதலியன காண்க.

தேவரில் சிறந்தவர்கள் செழுந்தமிழ்க் கவிகள் பாடித் தமிழ்ப் பாவலர் என்ற சிறப்பைப் பெற்றனர். தலைச்சங்கப் புலவராய்த் திகழ்ந்த சிவபெருமானுடைய உடுக்கை ஒலியின் துணைக் கொண்டு பேரகத்தியம், சிற்றகத்தியம் என்ற இலக்கண நூல்களைத் தமிழுக்கு முதல் நூல்களாக இயற்றிப் பலரும் போற்ற வாழ்ந்த அகத்தியருடைய பொதிய மலையைத் தமிழுக்கு இருப்பிடமாம் நாடும் நகரமும் போலப் போற்றி வருணித்து முதலில் அகத்தியர் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துரைத்தார். அடுத்து எந்த முனிவரைப் பற்றிப் பேசலாம் என்று ஆலோசித்தார். 'யாரைச் சொன்னாலும் எல்லோரும் தக்கது என்று ஒத்துக்கொள்ள மாட்டார்கள். சிலர் நிச்சயம் மறுப்புத் தெரிவிப்பர். சமயவாதம் முற்றும் நீங்கிய என் உள்ளத்தில் இருக்கும் தெய்வம் எப்படிக் குறிப்பிடுகின்றதோ அப்படிப் பாடுகிறேன்' என்று 123 ஆம் பாடலில் கூறி, வடமொழியில் வசிட்டர், சுகர் முதலிய பெரியோர் இருப்பினும் அவரை விடுத்துத் தமிழ்ப்புலமையில் விஞ்சிய அடியவர்களைப் பாடுவதே கடன் ஆதலின் பசிக்கனலையும் வென்று உய்ந்த பாலன் மாண்பு உரைக்கின்றேன் என்று கூறிச் சடகோபன் வரலாற்றை 40 பாடல்களில் குறிப்பிடுகிறார்.

இவ்வுலகில் நம்மைப் போலத் தோன்றினும் நம்மைப்போலப் பசி, தாகம் முதலியவற்றிற்கு அடிமைப்படாமல் இவ்வுலகில் 35 ஆண்டுகள் இருந்து தெய்வத்தமிழ்ப்பாசுரம் பாடிய சடகோபர் ஆசிரியரால் அகத்தியரை அடுத்துத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

பாண்டியநாட்டுச் சான்றோருக்கு நாட்டுப்பற்று அதிகம். திருவாதவூரில் அவதரித்துத் திருப்பெருந்துறையில் தடுத்தாளப் பெற்றுச் சிதம்பரத்தில் இறைவனோடு இரண்டறக் கலந்த மாணிக்கவாசகர்,

'தில்லையுள் கூத்தனை, தென்பாண்டிநாட்டானை,'
'அன்பாண்டு மீளா அருள்புரிவான் நாடென்றும்
தென்பாண்டி நாடே தெளி'
'தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை'

என்றாற் போல வாய்ப்புக் கிட்டும் இடங்களிலெல்லாம் தென் பாண்டி நாட்டைக் குறிப்பிடுதலைக் காண்கிறோம். அவ்வாறே பாண்டிய நாட்டுத் திருநெல்வேலியில் தோன்றிய இந்த ஆசிரியரும் பாண்டி நாட்டுத் தெய்விகப் புலவருள் உலகியலுக்கு மாறுபட்டு வாழ்ந்த சடகோபரை முன்னும், உலகியலை ஒட்டிச் சிலகாலம் வாழ்ந்த வாதவூரரை அடுத்தும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். உலகியலில் பழகி மக்கள் மனப்பான்மையை நன்கு அறிந்த ஆசிரியர் 'யாரைப் பற்றி முதலில் பாடினாலும் அதுபற்றிக் குறை கூறுவர் இருக்கத்தான் செய்வர். அதுபற்றிக் கவலைப்படாது திருவருள் கூட்டியவாறு செயல்படுவோம்' என்ற உறுதிப் பாட்டுடன் உள்ளார்.

காரியார் குருகூரைச் சூழ்ந்த வழுதி வளநாட்டை ஆண்டவர். நம்மாழ்வாரும் தம்மை வழுதி வளநாடன் என்றே கூறிக் கொள்பவர் எனினும் இந்த ஆசிரியர் குருகூரைக் குறிப்பிடாமல் நாங்குநேரி என்ற ஊரே திருமால் திருக்கோயிலும், தயிலக் கிணறும், நன்மக்கள் இருப்பிடமும், கலப்பைக் கொடியும் உடையதாய்க் காரியாரின் தலைநகராக இருந்தது என்கிறார். திருமாலையே ஏழு தலைமுறைகளாக வழிபடும் மரபில் வந்தவர் காரியார். அவரை இவ்வாசிரியர் 'தாணு மால் அயன் தாள் தொழும் தன்மையான்' என மூவராக உள்ள மூர்த்தியான பரம்பொருளை வணங்குபவர் என்கிறார். திருக்குறுங்குடிநம்பி திருவருளால் உடைய நங்கை வயிறு வாய்ந்தாள் என்று மற்ற நூல்கள் கூறவும் இவர், தம்பதிகள் திருமாலைக் குறித்துத் தவம் செய்ததால் உடைய நங்கை கருவுற்றாள் என்கிறார். குழந்தை பிறந்த நாள் கலியுகம் தோன்றிய 43–ஆம் நாள் என்பதற்கேற்பத் துவாபரயுக இறுதியாண்டில் உடைய நங்கை கருவுற்றாள் என்கிறார்.

இவ்வாழ்வாருக்குச் சடகோபன் என்ற பெயர் தேவர் களால் வழங்கப்பட்டது என்பதும், இவ்வாழ்வார் தாயின் கருப்பையிலிருந்து இத்தரைக்கு வந்த அளவில் இவருடைய ஞான ஆனந்தமான ஆன்ம இன்பத்தை மறைத்து அஞ்ஞான

மாகிய துன்பச்சூழலை விளைத்து இவரை இருள்தருமா ஞாலத்து மக்களுள் ஒருவராக்க முயன்ற சடம் என்ற மாயையை இவர் கோபித்து விரட்டி ஞான சொரூபியாய் இருந்ததனைக் கண்டு தேவர்கள் இவரைச் சடகோபன் என்ற காரணப் பெயரால் அழைத்தனர் என்பதும் பெற்றோரும் அந்தப் பெயரையே இவருக்கு இட்டு வழங்கினர் என்பதும் செவிவழிச் செய்தியை உட்கொண்டு சொற்றவை.

இவர் பிறந்த நாள் வைகாசி விசாகம் ஆகிய பௌர்ணமி நாள் என்பதனோடு விசாக நட்சத்திரம் சிவபெருமான் நெற்றிக் கண்களிலிருந்து ஆறு பொறிகளாகத் தோன்றிய முருகனுடைய நட்சத்திரம் எனவும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

குழந்தை அழுதலோ பாலுண்ணுதலோ போன்ற செயலின்றித் தெளிவோடு வளர்ந்து வரவும், 'அது சாதாரணக் குழந்தைபோல இருக்க வேண்டும்' என்று பெற்றோர் கோயில் தொறும் சென்று வேண்டினர். தெய்வச் செயல்கள் பல செய்து காட்டிய கண்ணனாகிய குழந்தைக்கு அசுரரால் இடையூறு வருமோ என்று ஏங்கிய நந்தகோபர் யசோதை என்பாரைப் போல, தெய்வத் திருவருளால் உணவின்றி வளர்ந்து வந்த தம் குழந்தையின் நலம் பற்றி காரியாரும் உடைய நங்கையும் கவலைப்பட்டனர்.

'தவழும் பக்குவம் எய்தியும், தந்தவர்
கவலை எய்தல் – முன் கண்ணனைப் பெற்றவர்
அவன அற்புதம் கண்டும் அவுணரால்
இவனி றுங்கொல் என் றேங்கிய தொத்ததே'.

திருக்குருகூர் வருணனை

விரஜை நதியின் வடகரையில் பரமபதம் அமைந்திருப்பது போலத் தாமிரபருணியின் வடகரையில் ஸ்ரீவைகுண்டம் என்ற திருத்தலம் உள்ளது. அதன் தென்கரையில் வயலும் சோலை களும் சூழ அழகாக அமைந்த தலம் குருகூர். அவ்வூர்க் கோயிலில் ஆதிநாதப் பெருமான் உகந்தருளி நிற்கிறான். கோயிலில் ஆதிசேடன் உறங்காப் புளியாகக் காட்சி வழங்குகிறான். திருமாலே பரம்பொருள் என்று கருதும் சான்றோருடைய இருப்பிடம் அவ்வூர். அடியார்கள் வேதத்தின் முடிபொருளாகிய வீடுபேறடைய உதவுவது, சித்தர்கள் பலரும் வந்து செயற்படும் இயல்பினது. வேற்றுச்சமயத்தவராகிய பாம்புகளுக்கு இடியோசை

போல் அச்சம்விளைப்பது. தலச்சிறப்பால் தன்கண்வசிப்பவருக்குச் சித்தியும் முத்தியும் கொடுப்பது.

வேதத்தின் சாரமான பொருளனைத்தும் தமிழில் குறிப்பிடும் சிறப்புடையது. ஆன்மாக்களையே பரம்பொருள் என்பவர் அணுக அரியது. மயிலும் கிளியும் குயிலும் ஒலிக்கும் மரங்களை உடையது. தங்கள் வேள்வியில் உயிர்க்கொலையைப் பயன் படுத்தாத அந்தணர்கள் வாழ்வது, வேளாளருக்கு உரிய குவளைப்பூ மாலையை அணிந்த காரியாரும் உடைய நங்கையும் உறவினரோடு தங்கள் மகன் சடகோபனையும் அழைத்துக் கொண்டு தங்கள் ஊராகிய நாங்குநேரியிலிருந்து திருக்குருகூர் வந்து வைகானச ஆகம முறைப்படி அபிஷேகங்கள் செய்து, தீபங்கள் ஏற்றித் தேவரும் விரும்பும் நிவேதனங்களை ஆதிநாதப் பெருமானுக்கும் படைத்துத் தம் மகனை ஏனைய குழந்தைகள்போல வாழச் செய்ய வேண்டும் என்று இவர்கள் பெருமானிடத்தில் வேண்டிக் கொண்டிருக்கவும் அந்தக் குழந்தை தவழ்ந்து சென்று பிராகாரத்திலிருந்த புளிய மரப்பொந்தில் தென்திசைநோக்கிப் பத்மாசனத்தில் வலக்கை சிந்முத்திரைதிகழ இடக்கை தொடையின் மீது பொருந்தப் பூரணசந்திரன் போன்று ஞானப் பிரகாசத்துடன் அமர்ந்துவிட்டது இக்காட்சியைக் கண்ட பெற்றோர்கள் 'இப்பையன் நம் மகன் அல்லன், ஏதோ திருவிளையாடல் நிகழ்த்த இவ்வுலகிற்கு வந்துள்ள தெய்வமகன்' என்று முடிவுசெய்து மகனைக் கோயிலில் விடுத்துத் தம்மூருக்குத் திரும்பினர். அவர்களுக்கு வேறு மகப்பேறு உண்டாயிற்றோ இல்லையோ என்பது நமக்குத் தெரியவில்லை. முக்காலமும் அறிந்த ஞானியரே அதுபற்றி உறுதியாகக் கூறக்கூடும்.

யானைமுகமும் ஐங்கரமும் உடையவராய்ப் பல இடங்களிலும் பொருந்தி வைகுந்தத்தில் வாழ்கின்ற சேனை முதலியார் திருமாலுடைய ஆணையால் சடகோபனுக்கு மகிழம்பூமாலை சூட்டி மற்றவர் உணராத உயர்ந்த மந்திரங்களை அவனுக்கு உபதேசித்து மறைந்தார் என்பது செவிவழிச் செய்தி

புளியமரத்தடியில் பத்மாசனத்தில் சிந்முத்திரையுடன் ஞானபானுவாய்த் தெற்கு நோக்கி வீற்றிருக்கும் சடகோபனைச் சிலர் சேனை முதலியார் என்றனர். சிலர் மன்மதன் என்றனர். சிலர் பிரமன் என்றனர். சிலர் திருமால் என்றனர். சிலர் கல்லால

மரத்தடியில் சிடர்கள் சூழவீற்றிருக்கும் தக்கிணாமூர்த்தி என்றனர். சிலர் மயில்வாகனனான முருகன் என்றனர். சிலர் இன்னும் சில தெய்வப்பெயர்களைச் சுட்டி அத்தெய்வமே இவன் என்றனர். பொதுவாகச் சடகோபன் மற்றவரைப்போலச் சாதாரணமானுடன் அல்லன் என்பதனை எல்லோரும் உட்கொண்டனர் என்று குறிப்பிடும் தண்டபாணி சுவாமிகள் சடகோபனைப் பற்றிய தம் கருத்தினை அடுத்த பாடலில் விளக்கு கிறார். 'இவன் குழந்தையாயிருக்கும் பெரியமுனிவன். என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன். எனக்கு எல்லாப் பேறுமாக இருக்கும் குருநாதன் இவன். தன்னை முதலில் தியானம் செய்து ஒருதொழிலைத் தொடங்குபவருடைய இடர்களைப்போக்கி அத்தொழிலில் வெற்றியளித்தலின் இவனை விக்நேசுவரன் எனலாம். செறிந்த மகிழம்பூமாலை அணிந்திருத் தலை நோக்கின் மன்மதன் எனலாம். ஞானசொரூபமாக இவன் பேசிடும் பேச்சுக்களை நோக்கின் இவனைப் பிரமன் எனலாம். இவன் குருகூராகிய திருப்பதியில் திருக்கோயிலில் வீற்றிருப்பதால் இத்தலத்திற்குரிய திருமால் எனலாம். கையிடைக் காணப்படும் சிந்முத்திரையை நோக்கினால் இவனைத் தீக்கண்ணனாகிய சிவன் எனலாம். இவன் விசாக நட்சத்திரத்தில் பிறந்தமை கொண்டு இவனை முருகன் எனலாம் என்று தம்மனம் திறந்து சடகோபனைப் புகழ்கிறார். இவ்வாறு மற்ற அடியவர்களை இந்நூலில் இவர் புகழ்ந்துள்ளதாகக் காண இயலவில்லை.

"முன் நினைப்பவர் இடர்கெடுத்தலின்கரி,
மொய்த்தொடையலின் மாறன்,
பன்னிடும்சொலில் பிரமன், வாழ்தலத்தின்மால்,
பழுதில் கைக்குறி தன்னால்
வன்னி நேத்திரச்சிவன், பிறந்திட்டநாள்
வாய்ப்பினில் வடிவேலான்,
என் இயற்கைக்கொள் குழந்தைமாமுனிவன், எற்கு
யாவும் ஆம் குரவோனே" – 146

சடகோபனைத் தெய்வமாக வழிபட்டு அவரவர் விரும்பிய விருப்பங்கள் நிறைவேறப் பெற்றுத் தத்தம் இருப்பிடம் சார்ந்தனர். இந்தச் சடகோபனுடைய உள்ளமே திருமால் வீற்றிருக்கும் இடம் என்று தெளியுமாறு நாட்டில் பல செய்திகள் கதைகளாகச் சொல்லப்பட்டன. மதுரகவியார் சரித்திரம் அவற்றுள் ஒன்று.

இமயமலை அடிவாரத்தில் தமிழ்த் தொடர்பில்லாக்குலத்து அந்தணன் ஒருவன் திருமால் தனக்குக் குருநாதனாக எழுந்தருளி ஞானம் அருளவேண்டும் என்று நெடுநாள் தியானித்து வேண்டினானாக, அவன் கனவில் நெடுமால் காட்சி வழங்கிச் சோதி ஒன்று தோன்றும் எனவும், அதனை நோக்கிச் சென்று தக்க குருவினைப் பெறலாம் எனவும் கூறக் கண்விழித்த அந்தணன் கண்முன் சேய்மையில் சோதி ஒன்றனைக் கண்டு, அதனைத் தொடர்ந்து சென்று திருக்குருகூரிலுள்ள புளியமரப் பொந்தில் அச்சோதி புகுவதனைக் கண்டு புளியமரத்தை அணுகித் தமிழ்ச்சுவை அமுதக்கடலாம். தன் குருநாதனுடைய அழகிய முகத்தைக் காண அவனும் கண்விழித்து இங்கு வருக என்பவனைப் போல இருகண்களாலும் அவ்வந்தணனை நோக்கினான். அவ்வேதியன் ஆன்மாவைப் பற்றி வினாவிய வினாவிற்கு உடனே தக்க விடை அளித்தமை நோக்கி அவ்வந்தணன் சடகோபன் அடிபணிந்து அவனுக்குச் சீடன் ஆனான். சடகோபன் ஆயிரம் பாடலுடைய அந்தாதிப் பாமாலை ஒன்று கூற அதனை ஏட்டில் எழுதி வைத்தான். அந்த அந்தாதிப் பாமாலையின் சிறப்பைச் செம்மொழிப் பாவலர் நன்கு அறிவர். தம்முடைய மந்த புத்தியால் அந்நூலை இகழ்பவர் கடையரிலும் கடையர். சடகோபனுடைய திருமால் அடிமை யையும் ஒப்பற்ற சீலத்தையும் உட்கொண்டு சிலர் இவனை மாறன் என்று அழைத்தனர். மாறுபட்ட சமயத்தினரைத் தன்பால் அழைத்து அவர்களை அடக்கும் இவனுடைய பண்பினை நோக்கி இவனைப் பராங்குசன் என்று சிலர் கூறினர்.

சிலகாலம் சடகோபனுக்குத் தொண்டு செய்த அந்தணன் 'இவனையன்றி வேறு தெய்வத்தை அறியேன்' என்ற கருத்தில் ஒரு பதிகம் பாட அதனை நோக்கி எல்லோரும் இவனை மதுரகவி எனவே, இவன் பெயரும் மதுரகவி என்று இவன் வரைந்த பதிக இறுதியிலே இவனாலேயே பொறிக்கப்பட்டது. தம் சீடன் மதுரகவி என்று போற்றப்படுவதனைக் கேட்டுச் சடகோபர் மகிழ் வுற்று இவ்வுலகைத் துறந்து வைகுந்தம் அடைதல் வேண்டும் என்ற நினைப்புக் கொண்டார். அப்பொழுது எம்பெருமான் வைகுந்தத்தில் வாழும் வைணவன் ஒருவன் வேடத்தில் சடகோப விடம் வந்து 'எம்பெருமான் தங்களை வைகுந்தத்துக்கு அழைக் கின்றான்' என்று கூறச் சடகோபன் 'வைகுந்தத்தைத் தவிர வேறு

பேறு ஏதும் அறியாதேன் யான். மேம்பாடும் மாயையும் உடைய திருமாலே பரதெய்வம் என்ற தெளிவுடையேன். அவ்வாறிருக்க உண்மைக்கு மாறாகப் பேசுகிறாயே. நம்பெருமான் என்று கூறாமல் எம்பெருமான் என்று கூறுகிறாயே'. 'உம்பெருமான் என்று தனியாக வேறொருவன் உளானோ?' என்று வினவ, அடியார் குழாம் உன் உயர்ச்சியினை உள்ளவாறு அறிய இங்ஙனம் கூறினேன் என்றான். இவ்வாறு சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும் தேவபிரானையே தந்தை தாய் என்றுணர்ந்த குருகூர்ச் சடகோபன் ஒருசோதி தோன்ற அதனுள் மறைந்தான். எம்பெருமான் அடியவர்களுக்கு அவர்கள் வேண்டியவாறு அருளுதலைப் பிரகலாதன் வரலாற்றிலும் காண்கிறோம்.

ஆழ்வார் திருநாட்டை எய்தியபின் மதுரகவி ஆழ்வார் சடகோபருடைய திருப்பெயரை நம்மாழ்வார் என்று மாற்றி உலகெல்லாம் பரவச் செய்து எம்மதமும் தம்மதத்துக்கு' ஒப்பாகும் என்ற கருத்தை நிலைநாட்டினார். அதற்குமுன் காணாபத்தியம், கௌமாரம், சௌரம், சாக்தம், சைவம் என்ற ஐந்து சமயத்தினரும் கைத்து ஒதுக்கிய வைணவம் எல்லோரானும் போற்றப்பட்டுக் கதிரவன் போலப் பிரகாசிக்கத் தொடங்கியது.

சிவன் முதலிய தெய்வங்களைப் பழித்துப் பேசும் இளம்பருவ வைணவருக்கு இயற்றமிழ்ச் சீர்ச்சடகோபன் விளம்பும் சொற்கள் இனிக்கமாட்டா. திருமாலைப் பரம்பொருளின் ஒருகூறு என்று கூறித் துன்புறும் செய்திகள் எல்லையற்றுள்ளன.

> 'எம்மதமும் தம்மதமாம் ஒப்பாரி நிறுவினன்' – 159
>
> 'இளம் பருவவைணவருக்கு இயற்றமிழ்ச்சீர்க் குருகூரான்
> விளம்பும்மொழி இனியாது' – 160

இந்த அளவில் சடகோபன் சரிதத்தைக் கூறி முடித்து அடுத்து வாதவூரன் சரிதம் கூறத் தொடங்குகின்றேன் என்கிறார் ஆசிரியர். சைவ மரபில் பிறந்து கையில் முருகனுடைய வேலை வைத்துக்கொண்டு திருநீறு தரித்து முருகதாச சுவாமிகள் என்று மக்களால் கூறப்படும் ஆசிரியர் சடகோபருக்கு முன் வாதவூரர் வரலாற்றைப் பாடியிருக்கலாமே என்று மொருமொருக்கலாம். 'வாதவூரர் கண்ணப்பனை மேம்பட்ட அடியவன் என்று போற்றி யுள்ளார். அந்தக் கண்ணப்பன் இதற்கு முற்பிறப்பில் அருச்சுனனாய் இருந்தவன் என்று அறிவறிந்த சான்றோர்கள்

கூறுகின்றார்கள். அருச்சுனன் வரலாறு துவாபரயுகத்தில் நிகழ்ந்தது. அந்த அருச்சுனன் சிறப்பை 'தீர்த்தன் உலகளந்த' என்ற பாசுரத்தில் சடகோபன் பாடியுள்ளார். துவாபரயுக அருச்சுனனைப் புகழ்ந்த சடகோபன் சரிதத்தை முதலில் கூறி, அருச்சுனனின் பிறப்பாகக் கலியுகத்தில் தோன்றிய கண்ணப் பனைப் புகழ்ந்த வாதவூரர் வரலாற்றை அடுத்துப் பாடு கின்றேன். நான் என்ன கூறினாலும் என் காரணங்கள் உங்கள் 'மனத்துக்கு ஒவ்வா' என்கிறார்.

'என் கனவில் சடகோபன் எழுந்தருளி எனக்குத் தன் கரத் தால் திருநீறு வழங்கி ஓர் உண்மைச் செய்தியைக் குறிப்பிட்டான். அதனைத் தேவர்கள் பலரும் அறிவர். அவர்கள் மறந்தாலும் என் மனச்சாட்சி மறக்காது. கண்ணனும் என்கனவில் வந்து எனக்குத் திருநீறு வழங்கியுள்ளான். விண்ணில் எங்கும் நிறைந்து வேண்டிய வடிவம் எடுக்கும் பரம்பொருள் ஒருவனே என்பதே உண்மையான செய்தியாகும். யான்கூறும் செய்திகள் பலருக்குப் புதுமையாகவும் ஏற்கத்தக்க அல்லவாகவும் இருக்கலாம். ஆனால் என் உள்ளத்தில் இறைவன் விளக்கிக் கூறும் செய்திகளை எடுத்து உரைப்பதற்கு யான் அஞ்சேன்' என்று முருகதாச சுவாமிகள் சடகோபர் சருக்கத்தை நிறைவு செய்கிறார்.

அருணகிரிநாதரும்
தண்டபாணி சுவாமிகளும்

எஸ். வி. கோபிநாத்

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.
(கந்தபுராணம்)

முருகப்பெருமான் புகழ்பாடி உய்ந்தோர் பலர். கலியுகவரதன் கந்தப்பெருமான் கழனிணைகளைப் பற்றிப் பரவிப் பாடிய புலவர் பெருமக்கள் பலர்.

பல சமயங்களிருப்பினும் சிறந்தது-முருகப் பெருமானுக்குரிய சமயமான கௌமார சமயம். ஏனெனில், சௌரம், சைவம், சாக்தேயம், வைணவம், காணாபத்தியம் என்ற ஐந்துடன், கௌமாரமென்ற சமயம் ஆறினையும் ஆறு திருமுகங்களாகக் கொண்ட பெருமான் குமரக்கடவுள். இந்தக் கௌமார சமயத்திலும் முருகப் பெருமானுக்குப் பதினாறு வடிவபேதம் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று தண்டபாணிக் கடவுள் வடிவம். ஆறுமுகம், பன்னிரண்டு திருக்கரம், அவற்றுக்கான படைக்கலங்கள், அணிகலன்கள், வள்ளி தேவசேனையான பத்தினிகள், மயில்வாகனம் ஆகியவற்றோடுள்ளது பெரு வடிவம். இவ்வுருவைத் தியானிப்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

முருகப் பெருமானையே முன்னிருத்திப் பாடிய பெருமை அருணகிரிநாதருக்கே உண்டு. 'வாக்கிற்கு அருணகிரி' என்று பெருமை பெற்றவர் அருணகிரிநாதர். அவர் இறையருளால் சந்தம் பொலியும் பாமாலைகளை முருகப்பெருமானுக்குச் சூட்டி மகிழ்ந்தனர், முத்துத் தமிழ்மாலை கோடிக்கோடி பாடிக்

கொடுத்தவர் அருணகிரிநாதர். கௌமார சமயம் தனித்து இயங்கும் ஆற்றலைப் பெற்றுத் தந்தன. இவர்தம் திருப்புகழ்ப் பனுவல்கள் முருகப் பெருமானை முழுமுதற் பரம்பொருளாகப் பாடுகிறார் அருணகிரிநாதர்.

திருப்புகழ்

திருப்புகழ் என்ற மொழிக்கு 'அழகிய புகழ்' அல்லது 'அழகிய பெருமை' என்பதே பொருள். இப்போதும் பெயர் முருகன் புகழ்பேசும் நூலுக்குச் சிறப்புப் பெயராக அமைந்து விட்டது. திருப்புகழ்ப் பாடல்கள் அனைத்தும் இசையுடன் பாடக்கூடிய சந்தப்பாக்கள். இவைகளில் சந்த வேறுபாடுகளும் சந்தச் சிறப்பும், ஓசை உயர்வும், இசை நுணுக்கங்களும் காணலாம். இப்பாடல் களால் ஊர்தோறும் முருகன் கோவில் தோன்றக் காரணமானார் அருணகிரிநாதர்.

காமவெறி கொண்டு விலைமாதரை நம்பி வீணாகாதீர்கள்; முருகனை நம்பி வழிபட்டு நன்மை அடையுங்கள்; ஒழுக்கத்துடன் வாழுங்கள்'' என்று மக்களுக்கு உபதேசம் செய்வதே திருப் புகழாகும்.

முருகனே முதல் தெய்வம் எனப் போற்றும் திருப்புகழ் பாடல்களிலிருந்து கந்தபுராணம், இராமாயணம், மகாபாரதம், பாகவதம் நாயன்மார் வரலாறுகள் முதலானவற்றைத் தொகுத்து விடலாம். முதல் நூல்களில் காணப்பெறாத அருமையான நுட்பமான கருத்துக்கள் ஆங்காங்கே விரவிக் கிடக்கின்றன. பிற மத வெறுப்பை எங்கும் காணமுடியாது.

அருணகிரிநாதரின் பாடல்களில் ஏராளமான வடமொழிச் சொற்கள் கலந்துதான் இருக்கின்றன. இதனால் பக்திச் சுவை கெட்டுப் போகவில்லை. தமிழின் இனிமையோ பாட்டின் இனிமையோ குறையவில்லை. மாறாக, வடமொழிச் சொற் களைத் தூய தமிழ்ச் சொற்களாக மாற்றும் வித்தையினை நமக்குச் சுட்டிக் காட்டியுள்ளார் அருணகிரியார்.

அருணாசலேஸ்வரர் இவர்முன் தோன்றி, திருநீறு அளித்து 'அப்பா அருணகிரி, இன்றுடன் நின் துயர் நீங்கட்டும்' என அநுக்ரகித்தார். தேவி உண்ணாமலை அம்பிகையும் தோன்றி 'நின் பிறப்பு ஒழிக' என திரு அருள் புரிந்து மறைந்தார்.

சிவாலயங்களிலும், தனி ஆலயங்களிலும் எழுந்தருளித் திகழும் ஆறுமுகன் சிறுவன் எனும் எண்ணத்தை அறவே நீக்கி அரி, அரன், அயன் ஆகியோர்க்கு ஈடானவன் மட்டுமல்ல, மூவர்க்கும் மேலான பரம்பொருள் என நிறுவித் தனிப்பெருமை கொண்டவர் அருணகிரியார். இவர்தம் பாடல்களால் "தேவாரம் பெற்ற தலங்களுக்கு இணையாகி திருப்புகழ் பெற்ற தலங்களும் சிறப்புப் பெற்றன. அவர் வழிபட்ட இடங்களில் முக்கியமான ஸ்தலங்களை இங்குக் காண்போம்:

தல யாத்திரை

எந்த முறையில் எப்படிப் பாடவேண்டும் என்பதை அருணகிரி நாதருக்குத் தெரியப்படுத்தவே வயலூருக்கு வரும்படி ஆணை இடுகிறார் முருகப் பெருமான். பொய்யாக் கணபதி முன்பு "கைத்தல நிறைகனி" என்ற திருப்புகழைப் பாடுகிறார். அப்போது முருகப்பெருமான் தோன்றி "அருணகிரி! நம் ஊர்தியாம் மயிலையும், கடப்ப மலர் மாலையையும், வேலையும், கொடியில் விளங்கும் சேவலையும் என் பாதமலரையும் பன்னிரு புயத்தையும், செயப்பதியாம் வயலூரையும் சிறப்பித்துப் பாடு" எனக் கூறி அருளுகிறார். "பக்கரை விசித்ரமணி" என்னும் பாடலைப் பாடுகிறார்.

வயலூரிலிருந்து புறப்பட்டு திருச்சிராப்பள்ளி மதுரை முதலிய ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு வருகிறார் அருணகிரிநாதர். சிவனார் நிகழ்த்திய திருவிளையாடற் காட்சி களை நினைவு கூர்கிறார்.

மதுரையிலிருந்து முதல் படை வீடாம் திருப்பரங்குன்றம், திருநெல்வேலி வழியாக இரண்டாம் படைவீடாம் திருச்செந்தூர் வந்தடைகிறார். முருகப்பெருமான் நடன தரிசனம் தருகிறார்; அதைக் கண்டு களித்தார் அருணகிரிநாதர். "தண்டையணி வெண்டையம்" எனும் திருப்புகழையும் பாடுகிறார்.

திருச்செந்தூரிலிருந்து திருஆவினன்குடிக்கு வருகிறார் ஜெபமாலையைத் தந்து மறைகிறார் முருகப் பெருமான். இதனைக் குறிப்பிட்டு "அபகார நிந்தை பட்டுழலாதே" எனத் தொடங்கும் திருப்புகழ்ப் பாடலைப் பாடி மகிழ்கிறார் அருணகிரிநாதர்.

பழநியில் கவிசைச் சேவகனார் என்ற சிறந்த முருகப் பக்தராகிய சிற்றரசர் அருணகிரிநாதருக்கு அதிய நண்பராகிறார். இவருக்கு நேர்ந்த தலைவலி சுரத்தை "தலைவலி மருந்திடு" என்ற திருப்புகழ் பாடி தீர்த்தருளுகிறார் அருணகிரிநாதர். மூன்றாம் படை வீடாம் பழநியில்தான் அதிகப் பாடல்களைப் பாடி அருளுகிறார்.

பழநியிலிருந்து 4-ம் படைவீடாம் "திருவேரகம்" எனப்படும் சுவாமிமலை வந்தடைகிறார். முருகப்பெருமானின் பாத தரிசனம் இங்கு கிடைக்கிறது, இதனை "செகமாயையுற்று" எனும் பாடலில் "தகையாதெனக்குனடி காண வைத்த தணிஏரகத்தின் முருகோனே" என்று குறிப்பிடுகின்றார்.

சில காலம் வயலூரில் தங்கி இருக்கிறார் அருணகிரிநாதர். ஒரு நாள் இரவில் முருகப்பெருமான் அவருக்குக் காட்சி தந்து, "நம் விராலி மலைக்கு வா" என்று கூறி அருளுகிறார். காட்டு வழி செல்லும்போது வழிதவறியது. செங்கோடனை நினைத்ததும் சூரிய ஒளிக்கொப்பான வேல் இரவு பகலாக்கி வழி காட்டி அருளியது. விராலி மலையில் அஷ்டமாசித்தியும் வந்தடைகிறது அருணகிரிநாதருக்கு.

விராலி மலையிலிருந்து ஆறாம் படைவீடாம் பழமுதிர்ச் சோலை வந்தடைகிறார் அருணகிரிநாதர். முருகன் மூவர்க்கும் மேலான பரம்பொருள் எனப் போற்றுகிறார்:- "அகரமுமாகி" எனும் திருப்புகழில்.

வடதிசை நோக்கி யாத்திரை செய்கிறார் அருணகிரிநாதர். அப்போது வேல் மட்டுமின்றி கொடிய விலங்குகளும், பாம்புகளும், அவரைத் தலை வணங்கித் துணையாக வந்தன. மாணிக்கத்தைக் கக்கி இருளைப் போக்கின; துயிலும் போது படம் விரித்து சுற்றி நின்று காப்பாற்றின. ஹரித்துவாரில் தன் தந்தையைக் காணுகிறார் அருணகிரிநாதர்.

கடல் தாண்டி ஈழ நாட்டை அடைந்து அருக்கொணாமலை, திருக்கோணமலை, கதிர்காமம் முதலிய தலங்களைத் தரிசிக்கிறார்.

வில்லிபுத்தூர் ஆழ்வார் தன்னுடன் வாது செய்து தோற்ற புலவர்களின் காதுகளைக் குறடால் அறுத்துத் தள்ளிய கொடுமையைக் கேள்விப்பட்டு, அவரை கந்தர் அந்தாதி 54-ம் பாடல் பாடி வாதில் வெல்கிறார் அருணகிரிநாதர். தோற்ற வில்லிபுத்தூராரது காதைக் குறடால் அறுத்துத் தள்ளவில்லை. இதனால் ''கருணைக்கு அருணகிரி''.

திருவண்ணாமலையில் பிரபுடதேவ மகராஜனின் அரச சபையில் மிகவும் பாராட்டைப் பெறுகிறார் அருணகிரி. பொறாமை கொண்டான் சக்தி உபாசகன் சம்பந்தாண்டான்; வாதுக்கழைத்து, அரச சபையில் தேவி பராசக்தியை வரவழைப் பதில் தோல்வியுறுகிறான். அருணகிரிநாதரோ ''அதல சேடனாராட... மயிலுமாடி நீயாடி வரவேணும்'' என்ற திருப் புகழைப் பாடியதும், முருகப்பெருமான் அனைவர்க்கும் காட்சி அளிக்கிறார்.

கண் பார்வை இழக்கிறான் பிரபுடதேவன். ''பாரிஜாத மலரால் கண்பார்வை மீண்டும் கிடைக்கும்; அதனைக் கொணர வல்லவர் நம் அருணகிரிநாதரே'' என்கிறான் சம்பந்தாண்டான். அருணகிரிநாதர் கோவில் ராஜகோபுரத்தில் தன் உடலினை விட்டு ஒரு கிளியின் உடலில் புகுந்து அமரலோகம் பறந்து செல்கிறார். அங்கு தேவர்கள் தொழ வீற்றிருக்கும் முருகப் பெருமானைக் காணுகிறார். இக்காட்சியையே கந்தபுராண ஆசிரியர் திருகச்சியப்ப சிவாச்சாரியார் ''ஏறுமயில் ஏறிவிளை யாடு முகமொன்றே'' என்ற பாடலை ''ஆதி அமராவதி அமர்ந்த பெருமாளே'' என முடிக்கிறார்.

எதிரி சம்பந்தாண்டான் அருணகிரிநாதரது சடலத்தைத் தகனம் செய்து விடுகிறான். கற்பகமலரால் கண்பார்வை திரும்பு கிறது மன்னனுக்கு. சம்பந்தாண்டான் திருவண்ணாமலையை விட்டு ஓடிவிடுகிறான்.

திருத்தணிகை வாழ் குமரனது ஆணைப்படி அருணகிரிநாதர் கிளி உருவில் அவரது வலது தோளில் அமர்ந்து கந்தர் அனுபூதி பாடி மகிழ்விக்கிறார்; வீணை மீட்டி இன்னிசை சேர்க்கிறார் வள்ளியம்மை என்று கூறுவர். முடிவில் முக்தி அடைகிறார் அருணகிரிநாதர்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

திருநெல்வேலியில் பிறந்தவர். சங்கரலிங்கம் என்னும் இயற் பெயர் கொண்டவர். தமிழில் அதிக பாடல்களை தம் கைப்பட ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தார். குருபரதத்துவம் என்ற பெயரில் தன் வரலாற்று நூலை முதலில் இயற்றிய தனிச் சிறப்பும் இவருக்குண்டு. பல இசைத்தமிழ்ப் பாடல்களையும் முசுகுந்த நாடகமும் இயற்றிய இவர் ஒரு முத்தமிழ் வித்தக ராகவும் திகழ்கிறார்.

இளமையிலேயே தவப்பொலிவினைப் பெற்ற இவர் நூலாசிரியர், உரையாசிரியர், வரலாற்று ஆசிரியர், பதிப்பாசிரியர் எனப் பல நிலைகளிலும் சிறப்புற்றவராவார்.

வண்ணச்சரபம், அருள்மிகு தண்டபாணி சுவாமிகள், ஆறு வயது முதற்கொண்டே ஆறெழுத்துச் செபம், வேற்பசை, தியானம் இவற்றை மேற்கொண்டதன் பயனாக, எட்டரை வயதிலே புதுப்பாட்டுப் பாடும் வாக்கெய்தினர், முருகப் பெருமானை மனக்கண் முன் காணப் பெற்றாராயினும், தூலக் கண்காணக்காட்சி பெற வேண்டினர். திருமலை மீதிருந்து உருண்டனர். பெருமான் உடலை ஊமின்றிக் காத்தனர் என்பது வரலாறு. இப்படி முருகப் பெருமானை வழிபட்ட அடிகள் முடிவில், குரு வடிவமான பழனித் தண்டபாணி வடிவத்தையே நாடினர். இவ்விவரத்தை, தாமியற்றிய ''பழனித் திருவாயிரம்'' நூலிற் பலவிடத்திற் கூறியுள்ளார்.

சரவணத்துற் பவித்த பெருங் கோலம்நெடு
நாள்கருதித் தவஞ்செய்(து) அப்பாற்
குரவனுருக் கொடுபழனிக் குவட்டில் நிற்கும்
திருவுருவம் குறிக்கப் பெற்றேன் என்றும்

அடிமுடியும் நடுவுமிலா அகண்டபரம்
பொருள் உளதென் றறிந்திட்டாலும்
கடிமகழ்மென் மலர்ப்பூசைக் கருள்செயும்பண்(ப)
அதற்கிலையாற் கருதமாட்டேன்
பொடியதனால் முழுக்காடிக் கீளொடுவெண்
கோவணமும் புனைந்து கையில்
தடிபிடித்துப்பழனி வெற்பிற் குலவுமவன்
றனைமறவேன் சரதம் மாதோ.

என்றும் வருவனவற்றால் அறியலாம்.

கடவுள் இயல்பாக அருவமாயிருப்பதைப் பலர் கூறினும், கருவி கரணங்களோடு வாழும் நாம், வழிபாடு செய்யவோ, தியானிக்கவோ முடியாது உருவ பாவனை முதலாவது, அதன் முடிவில் தானே வருவது அருவநாட்டம். இதைக் குறித்தே, தண்டபாணி சுவாமிகள், அருவ பாவனையை ஒதுக்கி, பழநி தண்டபாணியின் திருவுருவத்தைச் சிறப்பித்துக் கூறித் தனது கருத்தை விளக்கினார். இப்படி, பழனியில் வசித்தபோது பாடியதே ''பழனித் திருவாயிரம்'' பன்னிரு பதிகம், திருப்புகழ்ப் பதிகம் ஆகியவை. அக்கால், பழனி மாம்பழக் கவிராயர் மிக்க நட்பாக விளங்கினர். உடுமலை – கெதங்குப்புலி முத்துசாமிக் கவிராயர் – பெரியசாமி நாடார் போலப் பல புலவர்கள் அன்பர்கள் தொடர்புடையவராயினர் சிரவணபுரம் கௌமார மடாலயத்தின் முதல்வரான, அருள்மிகு இராமனந்த சுவாமிகள் உபதேசம் பெற்றுக் கொண்டவர். இப்படிப் பலர்.

பழனியாண்டவர், சுவாமிகளிடம் விளையாட்டாகப் பல நடத்தினர். பல சோதனைகளைச் செய்தனர் மனம் சோர்வடைந்தனராயினும், பழனியாண்டவர் மீது கொண்ட அபிமானம் சிறிதும் குறையப் பெற்றிலர். இதனை,

என்இதயத்தென்றும்
தெவ்வடும் வேலன்கொண்ட திருவுரு அனந்தத்துள்ளும்
எவ்வமில் பழனிக்குன்றில் இலங்குரு மேலாம் என்னும்
அவ்வபிமானம் மட்டும் அகன்றிடல் அரிதாம் அம்மா

என்பர்.

கொலை, புலை இரண்டும் எவ்விடத்தும் கூடாதென்ற தீவிர நோக்கமுடையவர் சுவாமிகள். பழனிக்கு வந்த சமயம், மலையின் நடுப்பாகத்தில் இடும்பன் கோயிலிருப்பதையும், புலால் படைப்பதையேற்பவன் என்பதையும் அறிந்து, மலையேறி வழிபடச் சற்றுத் தங்கினார். அன்றிரவு பெருமான், சுவாமிகள் மனவெளியிற் காட்சி நல்கினர் நீ அவனிருக்குமிடம் போக வேண்டாம்; நேரே நம் திருமுன் வருக! என்றனர். இதையறிந்த சுவாமிகள், இதென்ன நியாயம்? இடும்பனைப் புலால் படைப்பதை ஏற்காதே என்று தடுக்காத காரணம் என்ன? என எண்ணினர். மறுநாள் மலையேறி இடும்பன்முன் சென்று ஓர் வெண்பா ஓதினர்.

"பாடுமன்பர் போற்றும் பழனிமலைப் பாதியில்நின்(று)
ஆடும் இடும்பா அறையக்கேள் – நீடும்
கொலைகண்டு, மாமிசம்உட் கொண்டுவக்கவேண்டாம்
நிலைகண்டு மெய்யருளின் நிலை"

என்பதாம்.

என்னுடல் ஆதிமூன்றும் ஏற்றவன் பழனிக்குன்றில்
மன்னுசற் குருவேயென்கை மறுக்கூறும் சரதம்

என்று கூறும், தண்டாயுதபாணி சுவாமிகள், பழனியாண்டவனைப் போலவே முழுநீறு, தண்டாயுதம், கல்லாடை, விரிசிகை, அக்கமாலை, லங்கோடு, கௌபீனவுடை இவற்றுடன் விளங்கினார். எனவே, தண்டபாணி சுவாமிகளென அழைக்கப் பெற்றார். இவர் இளமை தொடங்கிப் பாடிய பாடல்கள் இலக்கமேயிருக்கும். முருகப்பெருமான் மீது ஊடல் கொண்டு ஆறு, குளம், கடல், தீ இவற்றிலிட்டு அழித்தவை போக இப்போதிருப்பதை ஐம்பதாயிரம் பாடல்கள் யாவும் பனையோலைச் சுவடியில் தன் கைப்பட எழுதப் பெற்றவை. வரிவடிவம் பார்க்க அழகாக இருக்கும்.

பழனித் திருவாயிரம், திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், தெய்வத் திருவாயிரம், தில்லைத் திருவாயிரம், ஏழாயிரப் பிரபந்தம் போன்ற தொகை நூல்கள் புலவர் புராணம், திருவாமாத்தூர்ப் புராணம், அருணகிரிநாதர் புராணம், குருபரதத்துவம் என்ற வரலாற்று நூல்கள், அறுவகையிலக்கணம், வண்ணத்தியல்பு என்ற இலக்கண நூல்கள், யமகம், திரிபு, ஏகபாதம் இவற்றாலான அந்தாதிகள். பிள்ளைத்தமிழ் நூல்கள், கௌமார சாத்திர சம்பந்தமான நூல்கள், சமய பேதச் சார்பற்ற பொதுத் துதிகள், சமயச் சார்புடைய துதி நூல்கள், வகுக்கக்குறள், மநுநெறித் திருநூல், அரசாட்சி நூல் போன்ற விதி நூல்கள் இப்படிப் பல வகையில் புதுநெறிப்பாடல் திருவருள் தூண்டதான் கருவியாயிருந்து பாடப் பெற்றவையே யாகும்.

தண்டபாணி சுவாமிகள் பாடிய பனுவல்கள் யாவும்தான் பாடியவையே என்று முருகப் பெருமான் கூறினாரென்றால் இதைவிடச் சிறப்பு வேறு என்ன இருக்கும்.

முடிவுரை

முருகப்பெருமானின் அருள்பெற்றவர்கள் பலர் இருப்பினும், அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் மற்றும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய பழனித்திருவாயிரம் புகழ் பெற்றது இறையருளேயாகும்.

அறுவகை இலக்கணம் கூறும் குற்றியலிகரம்

வெ. சத்யநாராயணன்

தமிழ் இலக்கண மரபு ஒலி அடிப்படையில் எழுத்துக்களை முதல் என்றும் சார்பு என்றும் பகுத்துரைக்கும். முதல் எழுத்துக்களைச் சார்ந்து ஒலிக்கும் தன்மையன சார்பு எனப்படும். சார்ந்து வரன் மரபின் மூன்று எனத் தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகியனவற்றைக் கூறுவார். அவற்றுள் குற்றியலிகரம் பற்றி இலக்கணங்கள் பல விளக்கங்கள் கூறுகின்றன.

அம்மரபில் அறுவகை இலக்கணம் கொள்ளும் இலக்கண வரையறை ஈண்டுப் பொருளாகின்றது. தொல்காப்பியம் கூறும்,

> 'குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
> யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு
> ஆவயின் வருஉம் மகரம் ஊர்ந்தே' (தொல் 34)
>
> 'புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
> உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்' (தொல். 35)
>
> 'யகரம் வ்வெழி இகரம் தோன்றும்
> உகரக் கிளவி துவரத் தோன்றாது' (தொல். 411)

என்றும் மூன்று நூற்பாக்களில் முதற் நூற்பா குற்றியலிகரப் பொது விதியாகவும் ஏனைய சிறப்பு விதிகளாகவும் அமைகின்றன. யா என்ற உரையசைக் கிளவி கொள்ளும் புணர்ச்சியிலும் குற்றியலுகரம் அடுத்து யகரம் வருவழி நிகழும் புணர்ச்சியிலும் இகரம் குறுகும் என்பதால் புணரியல் நிலையில் இகரக் குறுக்கம் நிகழும் என்பது புலனாகும். தண்டபாணி சுவாமிகளும் தம் அறுவகை இலக்கணத்தில் குற்றியலிகரத்தைப் புணரியல்பில் குறித்தது கருதற்பாலது.

குற்றியலிகரக் கருத்துக்களை விரிக்கும் முன் ஆசிரியரின் யகரம், குற்றுகரம் பற்றிய கோட்பாடுகளைக் கருதுதல் வேண்டும். அவையாவன,

1. யகரப்பிறப்பு

யகரம் நுனி நா அடியண்ணத்தைத் தொடப் பிறக்கும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ஆனால் தண்டபாணி சுவாமிகள் வேறுபட்டு,

'நுனிநா மேற்புறம் அடிப்பல் உட்புறத்து
ஒன்றக் களம்தரும் கால்துணை பற்றி
இகரம் சார்ந்து ஒலிதரும் எனல் இயல்பே' (அறுவகை. 28)

என்பார். அடியண்ணத்தை நுனிநா பொருந்த யகரம் பிறக்கும் என்ற நிலையில் நுனிநாவின் மேற்புறம் என்றுதெளிவாக்குகிறார். மேலும் காற்றின் துணை கொண்டு எழும் ஒலி இகரம் சார்ந்து ஒலிக்கும் என்பது ஈண்டுக் கருதற்குரியது. எனவே சுவாமிகளின் ஒலி மரபின் படி யகரப் பிறப்பால் இகர ஒலிப்பு முறை கலந்து உள்ளது என உணரலாம்.

2. மெய்ம்மயக்கம்

சுவாமிகள் தன்னையொழித்த மெய்யீற்றின் முன் யகரம் வரின் இகரம் தோன்றும் கருத்துடையவர் என்பது அவர் தம் குற்றியலிகர நூற்பாவால் பெறப்படும். எனவே மெய்ம்மயக்க விதிகளில் யகரம் உடனிலை மெய்ம்மயக்கம் மட்டுமே கொள்ளும் என்றும் பிறவற்றுடன் யகரம் மயங்காது என்றும் கூறுகிறார். இம்மரபிலேயே பிற மெய்ம்மயக்க விதிகளை விளக்குகிறார்.

3. குற்றுகரம்

'உயிர்மெய் உகரம்' (அறுவகை 154) என்று குறிப்பிடும் சுவாமிகள், அதனைக் குற்றியலுகரம் என்று குறிப்பிடுகிறார். சான்றாய் அவனுக்கிளவார் என்பதனைக் கூறுகிறார். உதாரணத்தால் வன்மையூர் உகரம் என்பது பெறப் பெற்றாலும் பொதுப் பட உயிர்மெய் உகரம் என்றதால் முற்றியலுகரமும் சிலவிடங் களில் குற்றுகர ஈறு போல் புணர்ந்து நிற்கும். இதனைக் குற்றியலிகர நூற்பாவிலும் (153) உணரலாம்.

குற்றியலிகர மரபு

தொல்காப்பியத்திற்குப் பின் நன்னூல் தொல்காப்பியத் தைப் பின்பற்றி, 'உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும், யவ்வரின் இய்யாம் முற்றுமற் றொரோவழி' என்று நன்னூலார்

விளக்குகிறார். ஆனால் தண்டபாணி சுவாமிகள் மொழியீற்று மெய்களும் உகரம் ஏறிய பதினெண் மெய்களும் யகர உயிர் மெய்வரின் குற்றியலிகரத்தைப் பெறுவன என்கிறார். இதனைக் கீழ்க்காணும்

'மொழியீற்று மெய்யும் அவண்உள உயிர்மெய்
உகரமும் தம்பின் யகரஉயிர் மெய்வரின்
அவ்வவ் வகுக்கத்து இகரமாய் அவிர்தரும்
அவனியாவன் எனலும் களிற்றியானை எனலும்
உதாரணம் ஆகும் குற்றியலிகரம்
என்று இதைப் புவோர் இயம்புதல் மரபே' (அறுவகை 153)

நூற்பாவால் உணரலாம்.

அவன் + யாவன் → அவன் + இ + யாவன் → அவனியாவன்
களிறு + யானை → களிற் + யானை →
களிற்ற் + இ + யானை → களிற்றியானை

இங்குச் சுவாமிகளின் மெய்ம்மயக்க விதிகளின் படி இகரம் தோன்றுகிறது. இகரச் சார்பாய் யகரம் பிறக்கும் என்பதும் ஈண்டுக் கருதற்பாலது. இவ் இகரம் குற்றியலிகரம் என்பது சுவாமிகளின் கோட்பாடாகும்.

சங்க இலக்கியத்திலும் இத்தகைய ஆட்சி காணப்படுகிறது.
இவரியார் (புறம் 201) இவனியான் (புறம் 13)
நல்லியாழ் (மலை 450) பேரியாக்கை (புறம்)

அடுத்துப் பிறந்த வீரசோழியம் லகரம் முன் ய வரின் இகரம் தோன்றும் என்கிறது (வீர. 17) நன்னூலும்,

''தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்
துன்னும் என்று துணிநரும் உளரே (நன். 206)

என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றால் மொழியீற்று மெய்களில் யகரம் நீங்கலான பிற யகரம் முன் வரின் இகரம் தோன்றும் என்ற கருத்து நன்னூலார் காலத்தில் வழக்கத்திலிருந்தது என்பதும் அக்கருத்தினில் நன்னூலார் அத்துணை ஈடுபாடு கொண்டிலர் என்பதும் புலனாகும். வடமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தும் நிலையில் தமிழின் மெய்ம்மயக்க வழிகட்கு

ஏற்ப மாற்றம் நிகழும். இம்மாற்றங்களுள் இகரம் தோன்றலும் உண்டு. கார்ய → காரியம்; புண்ய → புண்ணியம்.

சுவாமிகள் தம் கால இலக்கியப் பயிற்சியின் வழி இகரம் மொழியீற்று மெய்கள் யகரம் முன்வரின் தோன்றும் என உறுதியுடன் கூறுகிறார். அவர்கால இலக்கியக் கருத்தாவினருள் ஒருவரான மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் திருநாகைக் காரோணப் புராணத்தில் காணப்படும் சான்றுகள்;

பாலியாற்று (அவையடக்கம் – 1); தோரணமாதிகளியாத்து (57. 12);

மதமாலியானை (3.22); வானவரி யாரும் (28.31);

மருப்பனி யான் (கடவுள் – 1) இடங்களுமி யானை (3.40)

குற்றுகரப்புணரியல் வழி இகரம்

குற்றுகரம் என்பது வன்மையூர் உகரம் மட்டுமேயன்றி பிற உகரங்களும் குன்றி ஒலிக்கும் என்பது சுவாமிகளின் கோட்பாடு என்பது முன்றுரைக்கப்பட்டது. அவ்வழி குற்றியலுகரத்துடன் யகரம் புணர்கையில் இகரம் தோன்றுதல் போன்றே இவ்வகை உகரங்களுடனும் தோன்றும் என்பது பெறப்படும்.

பலியுணவியாரும் (நாகை. 50.4)

முடிபு

மேற்கூறியவாறு ஒலித்துணையாகத் தோன்றும் இகரம் சங்ககாலம், நன்னூலார் காலங்களில் குறுகி ஒலித்திருக்குமா என்பது புலனாகவில்லை. எனினும் இவற்றைக் குற்றியலிகரம் எனக் கொள்ளாமையால் முழுமையாக தனக்குரிய ஒலி மரபுடன் ஒலித்திருக்கும் எனக் கருதலாம். இவ்வாறு தோன்றும் இகரம் குற்றியலிகரம் எனப் பிற இலக்கணங்கள் கூறா மரபில் சுவாமிகள் குற்றியலிகரம் என்றது, அவர்தம் கால ஒலிப்பு முறையை ஒட்டியே அமைந்திருக்க வேண்டும். இவ்வகையில் மட்டுமின்றி பிற இலக்கணங்கள் கூறும் குற்றுகரப் புணர்ச்சியில் இகரம் தோன்றும் மரபும் சுவாமிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடாகும்.

தாம் கொண்டிருந்த ஒலி மரபு, மெய்ம்மயக்க மரபுகட்கு தண்டபாணி சுவாமிகள் குற்றியலிகரம் தோன்றும் களங்களை விரித்துரைக்கிறார். இதனால் சுவாமிகள் கால வழக்காற்றின் அடிப்படையில், முந்தைய மரபுகள் பற்றி மட்டுமே பேசாமல் சமகால மாறுபாடுகளையும் சுட்டும் நிலையில் அறுவகை இலக்கணம் திகழ்கிறது என்பதற்கு குற்றியலிகர மரபு சிறந்த சான்றாக அமைகிறது.

துணைநூற்பட்டியல்

1. அறுவகை இலக்கணம்;
2. தொல்காப்பியம் (எழுத்து);
3. வீரசோழியம்;
4. நன்னூல்
5. புறநானூறு;
6. மலைபடுகடாம்;
7. திருநாகைக் காரோணப் புராணம்;
8. யாணர் தொகுதி. 1.

சுவாமிகள் கண்ட வரதுங்கராமன்

சொ. சந்திரவாணன்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எழுதிய புலவர் புராண வரிசையில் இத் தென்காசிப் பாண்டிய மன்னர்களைக் குறிப்பிடுகின்றார். பொதுவாகச் சுவாமிகள் அனைத்துப் புலவர் களைப் பற்றிக் குறிப்பிடாமல் இறைவன் மீது பற்றுக் கொண்டு, அவனருளாலே அவன்தாள் வணங்கும் புலவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அவ்வகையில் தென்காசிப் பாண்டியர்களில் சைவ சமயப் பற்றுடைய சிவ நெறிச் செல்வர்களுக்குத் தம் நூலில் இடம் நல்கியுள்ளார். அவர்கூறும் சரிதத்தை வரலாற்றுத் தடையங்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்து இந்நூலின் சிறப்புகளை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சுவாமிகள் தாம் எழுதிய புலவர் புராணத்துள், புலவர் வரிசையில் 49 ஆவது புலவராக வரதுங்க பாண்டியன் சருக்கம் என்ற தலைப்பில் 38 கலிவிருத்தப் பாடல்களாகப் பாடியுள்ளார். அதில் வரதுங்கராமனின் வரலாற்றையும் அவனது படைப் பினையும் விதந்து ஓதுகின்றார். இவ்வரலாற்றை நாடகப் பாணியில் அமைத்து, அழகிய கவிதை நடையில் கதை கூறுவது போல் இனிய தமிழில் ஓசை நயம்பட யாத்துள்ளார். குறுநாடகம் போல நான்கு முக்கிய கதாபாத்திரங்களை மட்டும் கொண்டு படைத்துள்ளார்.

தென்காசிப் பாண்டியர் வரலாற்றை எழுதப் புகுந்த வரலாற்று ஆசிரியர்களுக்கே முறை வைப்பிலும், ஆட்சியாண்டை நிருபிப்பதிலும் பெருத்த குழப்பம் ஏற்பட்டுள்ளது. இக் குழப் பத்தை அவர்களின் நூல்களிலேயே தெளிவாகக் காணமுடி கின்றது. இதற்கு விளக்கம் அளிப்பது போல் சுவாமிகள் தம் நூலில்;

“வழுதிதன் மரபூடே வரதுங்கன் எனும் மன்னன்
முழுமதி எனவந்தான் முன்னர் அவன் பின்னே

எழுதெழில் அதிவீரராமன் எனும் தம்பி
விழுமிய புகழ்சால் வில்வேள் என வந்தானே'' (பா. 1)

என்று தெளிவாக வரதுங்கராமனை அண்ணன் என்றும், அதிவீரராமனைத் தம்பி என்றும் குறிக்கின்றார்.

வரலாற்று நூல்கள் இவ்விடத்தில் வரதுங்க ராமனும், அதிவீரராமனும் உடன்பிறந்தார் அல்லர் என்று எடுத்துக் கூறுகின்றன (பாண்டியன் வரலாறு. ப.142) குலசேகரன்-பராக்கி ரமனுக்கு, வரதுங்கராமன், குணராமன் என்று இரண்டு மகன்கள் இருந்ததாகவும், திருநெல்வேலிப் பெருமாள் குலசேகரனுக்கு; அதிவீரராமன் – ஸ்ரீவல்லபன், ஸ்ரீவல்லபன் என்று இரண்டு மகன்கள் இருந்ததாகவும் குறிப்பிடுகின்றன.

இவ்வரலாற்று வழிப்பார்க்கையில் இவர்கள் உடன் பிறந்தவர்கள் இல்லை என்பது தெரிகிறது. ஆனால் இவர்களின் தந்தையர் உடன் பிறந்தவர்கள் என்பது விளங்கும். இவர்களின் நாட்டுப் பிரிவைப் பார்க்கையில் பாண்டிய மன்னர்கட்கே உரிய முறையில் நாட்டைச் சிறு பகுதிகளாகப் பிரித்து ஆண்டுவந்து உள்ளனர் என்று தெரிகிறது. இம்மரபினைப் பின்பற்றியே வரதுங்கராமனும், அதிவீரராமனும் தங்கள் நாட்டு எல்லைப் பகுதிகளைப் பிரித்துக் கொள்கின்றனர்.

கரிவலம் வந்த நல்லூரைப் பாண்டியரின் முதுபதி ஆதலின் முன்னவர்க்கு அதனை ஈந்து, புதுப்பதியான தென்காசியைப் பின்னவர்க்கு வழங்கியிருத்தல் வேண்டும். இதனைச் சுவாமிகள்;

''முன்னவனைக் கருவை முதுபதியிலும் பின்வர்
கன்னல் வளம் பொலி தென்காசியில் வைத்தனரே'' (பா.2)

என்று மரபுவழியில் நாட்டைப் பிரித்து, கரிவலம் வந்தநல்லூரைத் தலைநகராக வைத்து ஆளுவதற்கு வரதுங்கனையும், தென் காசியைத் தலைநகராகக் கொண்டு ஆள்வதற்கு அதிவீர ராமனையும் வகை செய்துள்ளனர். இவ்விரு வரிகளின் மூலமாக அண்ணன் தம்பியரிடையே ஆட்சியுரிமையில் ஏதோ நெருடல் இருந்திருக்கிறது. அதனைச் சுவாமிகளின் பாடல் வரியின் இறுதியில் வரும் 'வைத்தனரே' என்ற சொல்லின் மூலமாக அறிய முடிகின்றது. ஆட்சிப் பூசலை நீக்கி அறிஞர்கள் பலர் கூடியிருந்து முடிவு செய்ததாக அறிய முடிகின்றது.

இதன் வாயிலாக இருவரும் ஒரே நேரத்தில் ஆட்சிப் பீடம் ஏறியிருப்பது போல் தோன்றினாலும் தம்பியாகிய அதிவீரராமன் அண்ணனுக்குப் பதினாலு ஆண்டுகளுக்கு முன்னரே ஆட்சி ஏறிலான் என்பதைக் கல்வெட்டுகளின் மூலம் (கி.பி. 1564-1606) அறிய முடிகின்றது. வரதுங்கராமன் கி.பி. 1588-ல் தான் ஆட்சிப் பீடம் ஏறுகின்றான், இதனை:

''நன்புற்றெதிர்ந்த கலிநாலாயிரத்தறு நூற்று
எண்பத்தொன்பான் இருங்கடல் சூழ் மண்பெற்று
மின்னும் மகுடம் புனைந்தான் வேல்வீரமாறறென
மன்னவர் கோமானபிராமன்''

என்ற பாடல் கல்வெட்டு வழி அறியலாம். பின்னர் 1609 வரை கரிவலம் வந்த நல்லூரில் இருந்து ஆட்சி செய்து வந்தான்.

சுவாமிகள், வரதுங்கன் இறையன்பின் உச்சத்தை மனையொடும் மாதவமே முயலுற்று அரனன்பர் பணியே செய்து அடலையோடக்கம் அணிந்து சுகபோகங்களையும், போர்த் தொழிலையும் ஒதுக்கிப் பால்வண்ணரின் இருதாள் அடைக்கலம் புகுந்தான் என்று குறிப்பிடுகின்றார். (பா.4)

அண்ணனும் தம்பியும் ஆண்டு வரும் காலத்தில் அரசுப் பணி யோடு அழகிய தமிழ் இலக்கியம் படைக்கும் இலக்கியப் பணியும் படைத்தனர். இவ்விருவரும் ஒரு சேர இலக்கியப் பணியில் ஒன்று பட்ட போதிலும் இருவரிடத்தும் உள்ளக்கருத்து வேறுபாடாய் இருந்தது. இதனைச் சுவாமிகள்; வாழைப் பழத்துள் ஊசி ஏற்றுவது போன்று, 'அதிவீரராமனுக்குக் கவித்திறம் உண்டு. ஆனால் அவன் கவிப்பொருள்தான் சரியில்லை' என்று எடுத்துக் காட்டுவது போல்,

''அவன்தம்பி எனத்தோற்றும் அதிவீரராமன்தான்
உவந்து அம்பொன் அணிமானார் உள்ளுருக்கவி செய்து''
(பா. 5)

என்ற வரிகளால் குறிப்பிடுகின்றார். இதில் 'அவன் தம்பி எனத் தோற்றும்' என்ற வார்த்தைகளில் ஆசிரியர் பலபொருள் தோன்றக் கூறுவது போல் அமைந்துள்ளது.

இறைவழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் ஒப்பற்ற வர துங்கனின் தம்பியா இப்படிக் 'காமக்கனல்' எழச் செய்யுள்

நூல்களைப் படைத்தான் என்று வியந்து கூறுவது போல் இவ்வரி அமைந்துள்ளது. இதனை வலியுறுத்துவது போல;

''அத்தகை இருவோரும் அலர்தரு வெண்கமலத்து
உத்தமி கண் அருளால் ஒண்தமிழ் உணர்வுருகிப்
பத்தர் விரும்புறவும் பாவலர் மெச்சிடவும்
தத்தம் மதியளவில் சாற்றினர் பாடல்களே'' (பா. 6)

என்ற பாடலில் சுவாமிகள் சொற்களைத் தேர்ந்தெடுத்து அமைந்திருப்பது தெளிவாகின்றது. இருவரும் மலர்மேல் அமர்ந் திருக்கும் வாணியின் அருளால் கவிபாடும் திறம் பெற்றவர்கள் தாம். இருப்பினும் 'உள்ளத்து அனையது உயர்வு' என்ற வள்ளுவர் கூற்றுக்கேற்ப அவர்களது மனப்பக்குவத்தின் படி கவிகள் அமைந்தன என்பதைத் 'தத்தம் மதியளவில்' என்ற சொல்லின் வாயிலாக வெளிபடுத்துகின்றார்.

இதனைத் தொடர்ந்து வரதுங்கராமன் எழுதிய நூல்களின் வரிசையைத்தருகின்றார். 'பிரம்மோத்திர காண்டம்' செய்ததைப் பாடல் வழியில்,

''அந்திமதிச் சடையாரது பிரமோத்திரமும்
தந்தி நன்னடை என்னத்தகுகவி ஆக்கினோன்'' (பா. 7)

என்றும், இவரே 'கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி' கலித்துறையந் தாதி— பாடியதைச் சுவாமிகள்,

''தன்னது நகர்மேவும் தவளநிறச் சிவனுக்கு
இன்னமுதுறழ் வெண்பாவில்தனி அந்தாதி
சொன்னபின் நூறுகலித்துறை திகழ் அதுபாடி'' (பா. 8)

என்றும் எடுத்துரைக்கின்றார்.

இவர் இவ்வாறு இறைவன்பால் கவி இயற்றிக் கொண்டி ருக்கும் வேளையில் தம்பி 'நளன் சரிதத்தை' தமிழ்மொழியில் காவியமாகப் பாடி முடித்தான். கவி இயற்றியதோடு மட்டு மல்லாது தன் அண்ணன் இதனை வியந்து போற்றுவான் என நினைந்து நானிலத்தும் அதனை ஓதினான். இதனைக் கேள்வி யுற்ற அண்ணன் வரதுங்கன், சங்கம் அணிந்த குழைச் சங்கரனைத் துதியாது இங்கு அழிகின்றவரைச் 'சீர் ஏத்தும் இளங்கவிஞர்' என்று கேலியாகக் கூறுகின்றார்.

இங்குதான் சுவாமிகள் மற்றவர்கள் கூறாது விட்ட அண்ணன் தம்பியரிடையே நடந்த இந்த நிகழ்ச்சியைக் கூறுகின்றார். ஆனால் உ. வே. சா. நூற்பதிப்பான பிற்காலப் புலவர்கள் வரலாறு, இந்நிகழ்ச்சியை அண்ணன் தம்பியரிடையே பூசலிருந்ததாக மேலோட்டமாகவே கூறிச் செல்கின்றது. (பக்.7)

தம் கவியைக் கண்டு அண்ணன் கேலியாகக் கூறிய பின்னரும் தொடங்கிய பணியை விட்டுவிடாது நளன் கதையை முற்றும் எழுதி முடித்தான் தம்பி அதிவீரராமன். அவ்வாறு முடித்த நூலுக்கு மதிப்புரை பெறத் தம் அண்ணியிடம் ஆவலோடு நீட்டுகின்றான். வரதுங்கனின் மனைவியும் சாதாரணப் பெண்ணல்ல. அவள் கணவவோடு இணைந்து சைவசமய இலக்கியத்தில் தோய்ந்து இலக்கியப் படைப்பாளியாகவும் திகழ்ந்திருந்தாள் என்பதை;

"... ... ... கணவனோடு அனுதினம்
பசுந்தமிழ்ச் சுவை ஆர்வாள்,
சங்கரன் புகழ்க் கூர்ம புராணத்தைத்
தமிழ் செய்தாள் .. ..". (பா. 13)

என்று கூறுகின்றார். தமிழோடு வடமொழிப் புலமையும், திறனாயும் திறனும் கொண்டு விளங்கியதால் தான் அவளிடம் தன்னூலை ஆய்வு செய்ய வழங்கினான் அதிவீரராமன் என்பது தெரிகிறது.

அன்னவளும் அந்நூலை ஆய்ந்து ஒப்புக்குச் சொல்லாமல் உண்மைத் திறனாக வெளிப்படுத்துகிறாள். இந்நிகழ்ச்சியைச் சொல்ல வந்த சுவாமிகள் உவமான உவமேயத்தோடு நூலின் தன்மையை வேட்டை நாய்க்கு ஒப்பிட்டு,

"வேங்கிராதர் தம் வேட்டை ஈாய்போம் தொறும்
விசையொடு முன் ஈர்க்கும்
ஏங்கிப்பின் இளைத்திடும் வருந்தோறும்" (பா. 14)

என்று குறிப்பிடுகின்றார். இது கேட்ட அதிவீரராமன், பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியைச் செவியில் புகுத்தியது போன்று, அண்ணியின் சொல் கேட்டு விழிகள் சினம் பொங்கத் தன்னூர் திரும்பினான்.

அதன்பின்னும் சினமாற்றாது அண்ணன் செருக்கழிப்பேன் என்று கரிவலத்திற்குப் படையொடு போருக்குப் புறப்பட்டான்,

ஊர் எல்லையில் நின்று தான் படையெடுத்து வந்த செய்தியினை ஆள்மூலம் தகவல் அனுப்புகின்றான். தம்பி தன்மீது வெகுண்டு வந்திருப்பது கண்ட அண்ணன் தக்கதோர் அறிவுரையைத் தமிழ்ப்பாவில் எழுதி; ''பரதனுக்கும் ராகவனுக்கும் உள்ள அன்பை ஒப்பிட்டுப் பார்'' (பா. 20) என்று வந்த ஆள் மூலமே ஓலை அனுப்பினான். அப்பாடல் கண்டு தம் தவறுணர்ந்த அதிவீரராமன்;

''பால்வண்ணர் தம்கிருபை பெற்றவன் முன்போய்த்
தான் துணைக் கண்வீழ்ந்தழுது யான் உய்யும்வகை சாற்று''
(பா. 23)

என்று மொழிந்தான்.

தம்பியைத் தேற்றப் புகுந்த வரதுங்கன், இது 'நகத்தினைக் குனித்தவன் செயலல்லது நம் செயலன்று' (பா. 24) என்று கூறி நீ முன்பு செய்த பாவம் நீங்க 'காசிக்காண்டம்' எனும் வடமொழி நூலைத் தமிழ்ப்படுத்தினால் பாவம் விலகும் என்று கூறினான். (பா. 25) இதனைக் கேட்டு மகிழ்ந்த தம்பியும் அண்ணியின் முன்னாலும் தம்முடி குவலயம் தொட வீழ்ந்தான். யான் செய்பிழையெலாம் பொருத்தருள்கை நும்கடன் என மொழிந்தான். அவளும், உன் கோபமே அனைத்து நிகழ்ச்சிக்கும் காரணம் என்று அறிவுரை கூறி அன்புடன் அனுப்புகின்றாள்.

மேற்படி நிகழ்ச்சியே அதிவீரராமனின் இலக்கியப் படைப்பின் திருப்பு முனையாக அமைந்தது எனலாம். இதன் பின்னர்தாம் பக்தி நூல்களும், மக்கள் நல்வழி பெற நீதிநூல்களும் படைக்கப் புகுந்தான் என்று சுவாமிகள் கூறுகின்றார். ''தீதில் மாட்சியுளா னொடு பிறந்ததால் திருந்தி உய்ந்தனன்'' (பா. 28) என்று அதிவீரராமன் திருந்துவதற்கு அவன் சகோதரன் வரதுங்க ராமனே அடிப்படைக் காரணம் என்று கூறலாம்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் வரதுங்கராமன் முழுத்துறவு நிலை மேற்கொள்ள நினைக்கின்றான். இதற்கு ஒத்த கருத்துடைய மனைவியும் ஒப்புதல் தருகின்றாள். ''உகந்தவாறு சிந்தித்து இறப்பொடு பிறப்பொழித்து மெய்க்கதி சேர்ந்தான்'' (பா. 32) என்றும், ''அம்மாதும் அக்கதி அடைந்திட்டனள்'' (பா. 34) என்றும் சுவாமிகள் தம் கவியுள் கூறி நின்றார்.

மேலும் வரதுங்கனின் செந்தகைக் கவி இனங்களை மூவர் தேவாரத்திற்கு இணையாக ஒப்பிட்டுக் கூறுகின்றனர். (பா. 34) என்று குறிப்பிட்டு இதில் வியப்பொன்றுமில்லை. பாண்டிய நாட்டில் இது சர்வசாதாரணம் என்பதை, 'பைந்தமிழ்க் கலை பிறந்து நீடுற்ற தென்பாண்டி நாட்டிடை மாதோ' (பா. 34) என்ற வரிகளால் விளக்குகின்றார்.

வரதுங்கன் போல் பாண்டியர்களுள் ஒத்த நிலையுடைய வர்கள் யாருமில்லை. அவன் போல தமிழ்ப்புலமையும், சிவ பக்தியும் ஒருங்கே வாய்க்கப் பெற்றுத் துறவறம் பூண்டவர்கள் யாருமில்லை என்று குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

''இல்லறத்திலிருந்து துறவறம் பூண்டமையால் அவருக்கு வாரிசு இல்லை. ஆதலால் பால்வண்ணநாதரே அவருக்குச் செய்யவேண்டிய இறுதிக் காரியத்தைச் செய்ததாக வழக் கொன்று உண்டு. அவ்வழக்கத்தை அனுசரித்து ஒவ்வொரு வருடமும் சோழபுரத்தில் மகாசுத்தநவமியில் பால்வண்ணநாதர் ஒரு தோப்பில் எழுந்தருளி இருந்து இவருக்குத் திதி கொடுக்கும் ஐதீகம் உற்சவ ரூபமாக நடைபெறுகிறது'' என்றும் கூறுவர்.

சுவாமிகள் வரதுங்கனை இறைவனுக்கும் மேலானவன் என்பதை இறைவனோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார். இறைவன் பாண்டிய நாட்டில் பெண் கொளத்தன் இயல்பான கோலம் நீக்கி ஆபரணங்கள் அணிந்து வருவதாகவும், மன்னன் வரதுங்கன் தாம் இயல்பாய் அணிந்து கொள்கின்ற ஆபரணாதிகளை நீக்கி அக்கமாலையை அணிந்து கொள்கின்றான். ஆதலால் இறைவன் செயலைவிட மன்னன் செயல் உயர்ந்தது என்று சுவாமிகள் தம் பாடலில் குறிப்பிடுகின்றார். (பா. 36)

மேலும் தென்காசிப் பகுதியைக் குலசேகரன் என்பவன் வரதுங்கராமனுக்குப் பின்னர் ஆண்டுள்ளான். அவனும் வரதுங்க ராமனைப் போன்றும், அதிவீரராமனைப் போன்றும் கவிபாட வல்லவனாய்த் திகழ்ந்தான் என்றும், அவன் அம்பிகை மாலை, லிங்கபுராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளான். (பா. 37) ஆனால் வரதுங்கராமன் போல் பக்தியில் சிறப்படையவில்லை என்றும் கூறுகின்றார்.

முடிவு

1. வரதுங்கராமன் சருக்கம் என்ற தலைப்பில் நூல் எழுதப் புகுந்த சுவாமிகள் அவரோடு மேலும் மூன்று புலவர்களை

அப்பகுதியில் குறிப்பிடுகின்றார். இவர்களுள் வரதுங்க ராமனையும், அதிவீரராமனையும் வரலாற்று ஆசிரியர்கள் அறிவர். ஆனால் வரதுங்கனின் மனைவி மற்றும் குலசேகரனைப் பற்றி மற்றவர்கள் அறிந்திலர்.

2. மேற்படி வரதுங்கனின் மனைவி செய்த நூல் மற்றும் குலசேகரன் செய்த நூல் ஆகியவற்றைப் பற்றிய செய்தியினை வரலாற்றாசிரியர்களும் மற்றவர்களும் கூறாததைச் சுவாமிகள் மட்டும் கூறுகின்றார்.

3. நாடக உத்தியினைக் கையாண்டு சுவாமிகள் புலவர் வரலாற்றை எழுதியுள்ளார். ஆங்காங்கே உவமை, உருவ கங்களைப் புராண இதிகாசங்களிலிருந்தும் எடுத்துச் சுவைப்படக் கையாண்டிருப்பது சுவாமிகளின் பல்துறை அறிவைப் புலப் படுத்தும்.

4. சிவனையும், சிவனால் அனுக்கிரகம் பெற்ற புலவர் களின் வரலாற்றையும் மட்டுமே சுவைபடக் கூறியுள்ளார் சுவாமிகள்.

5. கி. பி. 16ஆம் நூற்றாண்டில் நடந்த இவ்வரலாற்று நிகழ்ச்சியினை கி. பி. 19ஆம் நூற்றாண்டில் தெளிவாக விளக்கி யிருப்பதன் மூலம் சுவாமிகளின் வரலாற்று அறிவு தெரிகின்றது. இப்பகுதியினை எழுதப் பலரது தகவல்களையும் கேட்டறிந்து எழுதியுள்ளார் என்பதை இப்பகுதியை ஆழமாகப் படித்தால் அறியமுடியும்.

6. அதிவீரராம பாண்டியன் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச் சிக்குத் திருப்பு முனையாக எது அமைந்தது? என்பதையும், வரதுங்கன் அண்ணனாக இருந்த போதும், தம்பி அதிவீரராமனுக் குப்பின் ஏன் ஆட்சிப் பீடம் ஏறினான்? என்பதும் சிறப்பிலாத ஒருரைத் தலைநகராய்க் கொண்டு ஆழ்வதற்கு ஒப்புதல் அளித்தது ஏன்? என்பதையும் இந்நூல் வழியே அறியமுடிகின்றது.

7. தென்காசிப் பாண்டியர் வரலாற்றை எழுதப்புகும் ஆசிரியர்கள் இந்நூலை ஆழ்ந்து படித்தால்பல ஐயங்களைத் தவிர்த்துத் தெளிவானதொரு வரலாற்றை எழுத முடியும்.

மொத்தத்தில் புலவர் வரலாற்றை எழுத வந்த சுவாமிகள் இச்சருக்கத்தை ஒரு வரலாற்று நாடகக் காவியமாகப் படைத் துள்ளார் எனில் அது மிகையாகாது.

சுவாமிகளின் மனித நேய உணர்வு

மு. சற்குணவதி

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி நெறியில் நின்று இலக்கியங்களை படைத்து அளித்தவர்களுள் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் குறிப்பிடத் தகுந்தவராகத் திகழ் கின்றார். பல்வேறு புதுமைகளின் தோற்றுவாயாகத் திகழும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து பக்தியை மட்டும் போற்றாமல் மனித நேய உணர்வுடன் வாழ்ந்து காட்டியவர். அவருடைய படைப்புக்களின்வழி சுவாமிகளது மனித நேய உணர்வு வெளிப்படுவதைச் சுட்டுவதே இக்கட்டுரையின் நோக்க மாக அமைகிறது.

மனித நேயம்

மனம் உடையவன் மனிதன்; மன இயல்புப்படி விலங்கி லிருந்து வேறுபட்டு வாழ்பவன் மனிதன். அந்த மனிதனுடைய மன நியாயமே, மன நீதியே மனித நேயம் என்று அகராதி மனிதன் பற்றியும் மனித நேயம் பற்றியும் கூறுகின்றது. இந்த மனிதனிடமுள்ள நேசமானது எடுத்துரைக்க இயலாதது. உணர்வு களால் உணர முடிந்தது. சுருங்கக் கூறவேண்டுமானால் எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொள்ளுதல்; அன்போடு உறவு கொள்ளுதல், மனித உறவுகளை மதித்து நடத்தல், பிற உயிரினங்களிலிருந்து வேறுபட்ட மனித இயல்புகளோடு வாழ்தல் என்று கூறலாம். அதாவது அன்பு, ஒழுக்கம், நன்றி, தர்மம் முதலான மனிதப் பண்புகள் அனைத்தையும் மனித நேயம் என்று கூறலாம். இத்தகைய மனித நேய உணர்வு அடிகளாரின் பாடல்களில் வெளிப்படுமாற்றை இனிக் காணலாம்.

அடிகளாரும் மனித நேய உணர்வும்

தமிழ் செழித்த பாண்டிய நாட்டில் வளம் நிரம்பிய தாமிர பரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருநெல்வேலியில் பிறந்து

வளர்ந்து தமிழ் நாட்டில் பல இடங்களுக்கும் சென்று பக்தி நெறி பரப்பியதோடு போகும் இடம் எல்லாம் மனித நேய உணர்வோடு நடைபோட்ட அடிகளார் மனித நேயத்தை வளர்க்கின்ற மாசிலா அன்புநெறி, பரப்பும் தொண்டராகவும் தூய்மை நெறிக் காவலராகவும் திகழ்ந்தவர்.

செய்நன்றி மறவாமை

கடலூர் என்னும் ஊரில் வெறும் காலுடன் நடந்து சென்றமையால் காலில் முள் தைக்க, அடிகளார் வருந்துவதைக் கண்ட ஒரு செட்டியார் சுவாமிகளுக்கு பாதுகை அணியக் கொடுத்துவுகின்றார். அவர் செய்த உதவியை மறவாமல், செட்டியாரை நட்புடன் பாடி பாராட்டியுள்ளார் என்பதை கீழ்வரும் பாடல் சுட்டுகின்றது.

''கடலூர்ச் செட்டிமகன் கும்பிட்டு உபசரித்துப்
பாடனைந்தம் பட்டுதவும் பாத குறட்டருமை
நாடனைத்தும் மெச்சுபுகழ் நாயடியார் மங்கலத்தின்
விடடுத்த தோட்டத்தின் வேலியாற் கண்டோமே''

ஆபத்தில் உதவும் அருமை

கேரள நாட்டில் நொச்சி வழியாக பொதிகை மலையை நோக்கி வள்ளல் என்னும் சிறு தோணியில் சென்று கொண்டிருந்த சமயம் தோணி மரத்தில் ஒரு ஓட்டை இருப்பதைக் கண்டு, மற்றவர்களை காக்கும் நோக்கத்தோடு ஓட்டையை அடைத்தவர். தோணி, நீரில் மூழ்கிவிடாமல் இருக்க வேண்டுமென்று பக்தியோடு பாடிய அடிகளாரது உதவும் குணத்தை,

''சேட்டை மிகும் சாராயக் குடிவெறியர்
ஓடம் விடும் சிறுவர் ஆட்டை
மாட்டை வதைத் துண்போர் ஆங்குடன் உறைவோர்
... ...''

என்று தொடங்கும் குருபர தத்துவ மலையாள சருக்கப் பாடல் வழி அறியலாம்.

கருணை உள்ளம் வேண்டுதல்

தேவகோட்டையில் தன வணிகரான தனது நண்பர் கருப்பன் செட்டியார், அவரது நண்பர் மேலவீடு சிதம்பரம்

செட்டியாருக்கு மகப்பேறு இல்லை என்று வருந்திக் கூறவும், அவர்களுக்காக சிவன் கோவிலில் தண்டபாணி கடவுளுக்கு ஒரு பிள்ளைத்தமிழ் பாடி, சிதம்பரம் செட்டியாருக்கு பிள்ளைப் பேறு வாய்க்கச் செய்தனர். இத்தகைய கருணையுள்ளம் அனைவரிடமும் இருக்க வேண்டும் என்பதை,

"எட்டுச் சந்தமும் இயைதரு புலமையும்
கித்தி ஓர் எட்டும் சேரப் பெறுவான்
கருணை ஒன்றிலனேல் கடைபடுவானே"

என்னும் நூற்பாவால் பெற வைக்கிறார்.

பொருளுக்காக அடி பணியாமை

அடிகளாருக்கு வேம்பத்தூரில் சைவர் வீட்டில் உணவளிக்கின்றனர். ஆனால், மரியாதை இன்றி வீட்டு முற்றத்தில் இலை விரிக்கின்றனர். உடனே, சுவாமிகள் உணவிற்காக பணியாமல் சோறு கிடைத்தது போதுமென்று உண்பவன் நான் என்று எண்ண வேண்டாம், மேலிடத்தில் வைத்து இட்டால் உண்டபின் இலையெடுத்து சுத்தி செய்ய அறிவேன் என்று துணிவுடன் கூறுகின்றார். உடனே அவர்கள் தவறினை உணர்ந்து மன்னிப்பு கோரியதோடு வீட்டு கூடத்தில் அமரவைத்து உணவளித்து மரியாதை செய்கின்றனர். இதே போன்று கோட்டூர் பதியில் அன்போடு உணவளித்த ஒருவரை அகம் குளிரப் பாடலால் வாழ்த்தியுள்ளார் என்பதை,

"கோட்டூரில் சைவன் முகம் கோணாமல் கூடத்தில்
ஈட்டு தென்னை யோலை இலை கொணர்ந்து போட்டெனக்கு
சோறும் இலைக் கறியும் சுண்டைக்காயும் பருப்புச்
சாறும் இட்டுப் பெற்றாண் தவம்."

என்னும் பாடல் சுட்டுகின்றது.

அணிற் குஞ்சுகளை அன்புடன் காத்தல்

புதுவையிலிருந்து வளவனூருக்குச் சென்ற போது குமாரபுரி என்னும் பதியில், பந்தலிட்டு நிகழ்ச்சி முடிந்ததும் பந்தலை பிரித்துக் கொண்டிருந்தனர். பந்தலில் அணில் குஞ்சுகள் தாயைத் தேடி சத்தமிட்டு கொண்டுள்ளதைக் கண்ட அடிகளார், "பெரியோர்கள் திருநீற்றால் முக்தியடைந்தது உண்மையானால்

இவை பிழைக்கட்டும்'' என்று காத்தற் கடவுளான திருமாலை நினைத்து திருநீற்றை அவற்றின் மேல் இட்டனர். சிறிது நேரத்தில் பெரிய அணில் இரண்டும் வந்து குஞ்சுகளை எடுத்து ஏகின.

இதைப்போன்று பலியிட இருந்த ஆட்டினை பழனியிலிருந்து மாட்டு வண்டியில் செல்லும்போது சந்நாசியப்பன் என்னும் கோவிலில் பலியிட இருந்த ஆட்டினைக் காத்து, சிறுவனின் வயிற்று வலியை இறைவன் அருளால் தீர்த்து வைக்கிறார். இதைப் போன்றே அப்பாவி மக்களை ஏமாற்றும் மாந்திரீகத்தை யும் எதிர்த்துள்ளார்.

உயிர்ப்பலி மறுத்தல்

''ஒருயிரின் தேகந்துறு நோயொழிய மற்றோர்
சீருயிரைக் கொல்வார் சிலமாந்தர் - பாருலகில்
இத்தனைநாள் நாம் வாழ்வதென்றுமறியார் இது எண்ணிற்
சுத்த முழு மூடத் தொழில்.''

என்று உயிர்ப்பலி இடுவோரைத் தூற்றி இகழ்கின்றார். தெய்வத்தின் பெயரால் நடக்கும் கொடுமையைப் பல இடங்களில் தடுத்து நிறுத்தி,

''சுத்த பூசை தோய்தருமாயிற்
பேயும் தெய்வமாம் பிணப்பலி யேற்கிற்
தெய்வமும் பேயாம் எனுமீது திறமே''

என்று உறுதியாகப் பாடுகின்றார்.

''வேதஞ்சொல்லினும் விரிஞன் ஆதியர்
நேரிற் கூறினும் நீசர்க் குரித்தாம்''

என்று அடிகளார் பாடி வன்மையாக உயிர்ப்பலியை கண்டிக் கிறார்.

மனுநெறித் திருநூல் கூறும் மனித நேயங்கள்

வள்ளுவரின் திருக்குறள் போன்று இரண்டடிகளில் அடிகளார் ''மனுநெறித் திருநூல்'' என்னும் நூலினை எழுதி யுள்ளார். அந்நூலின் வழி புறங்கூறாமை, ஆசையின்மை, கோபமின்மை, நன்றியறிதல், இன்சொல் உடைமை, பொய்யாமை, நாணமுடைமை, அச்சமுடைமை, இரக்கமுடைமை, நட்புடைமை,

நீதியுடைமை போன்ற மனித நேய உணர்வுகளை வெளிப் படுத்தியுள்ளார்.

"கொலை போன்று கொடிய பாவம் வேறு எதுவும் இல்லை என்பதை,

"கொலை போலும் பாவமொன்று கூறுதற்கின்றென்பார்
தலையாவா ரென்னத் தகும்."

என்னும் பாடலில் குறிப்பிட்டு ஈசன் எதிரே வந்து நின்று மற்றோர் உயிரை கொல் என்றாலும் கொல்லுதல் கூடாது என்கிறார்.

"தாய் தந்தை ஆசான் தவத்தோர் புலவர் மன்னன்
காய்தலின்றிக் காக்கை கடன்."

என்று செயல் வகையைப் பற்றிக் கூறுகின்றார்.

அன்பதையும் மானத்தையும் அடிகளார் போற்றுகின்றார்.

"அன்பே பரமென்றறிவறிந்த மேலோர்கள்
முன்பேசல் உண்மை மொழி."

"தாயனையர் அன்பறிந்து தாமவர்தம் தான் வணங்கி
நாயனைபரா மிருக்கை நன்று."

என்று அன்பினையும்,

"வானம் பெரிது வகுத்துரைக்கும் பல்பொருளில்
மானம் பெரிது மகர்க்கு"

என்று மானத்தையும் போற்ற வேண்டும் என்று எடுத்துரைக் கின்றார்.

பிறன்மனை நயவாமை

ஒழுக்கத்தை உயிரென ஓம்பும் வள்ளுவர் வழியில் அடிகளாரும்

"ஏதொரு நிமித்தத் தேனும் எட்டுணை
உரிமையும் இல்லார் உடற்றழிஇ மகிழ்வார்
பதரினும் பதரெனப் பகர்வது முறையே."

என்று பாடிப் பிறன்மனை நயவாத ஒழுக்கத்தை வலியுறுத்து இன்றார்.

விதவைத் திருமணம்

இளம் விதவைகளின் துயரத்தை உணர்ந்த அடிகளார்,

> ''நூலிழந்தும் கேளிக்கை நூறாதாள் மற்றுமொரு
> தாலிகட்டிக் கொள்ளத் தகும்.''

என்று பாடி மறுமணத்தை ஆதரிக்கின்றார்.

கலப்புத் திருமணம்

ஒரு மனப்பட்ட காதலர்க்குச் சமயம், சாதி, பொருள் ஆகியன செய்யும் தடைகள் அழிந்து, அவர்கள் ஒன்றுபடுவதே சிறந்தது என்பதை,

> ''தவமும் சமயமும் சாதியும் பொருளும்
> அங்கசன் கொடுங் கணைக்கு ஆற்றாது அலமரும்
> மயலாற் கழிவது மாநிலத் தியல்பே,''

என்று பாடிக் காதலரின் கலப்புத் திருமணத்தை வரவேற்றுச் சாதி ஒழிப்பைச் சிந்திக்கத் தூண்டுகிறார்.

முடிவுரை

இவ்வாறு தண்டபாணி அடிகளார் தாம் இயற்றிய பாடல்கள் வழி மனித குலத்தைக் காக்கின்ற ஒழுக்கம், பண்பு, அன்பு, விதவை மணம், மானம், சாதிகளை எதிர்த்தல், கொல்லாமை, புலால் உண்ணாமை, பிறன்மனை நயவாமை போன்ற மனித நேய உணர்வுகளோடு வாழ வேண்டுமென்பதை சமுதாயத்திற்கு எடுத்துரைத்து, தாமும் அவ்வாறே வாழ்ந்து காட்டினார் என்பதை இக்கட்டுரை வழி அறியலாம்.

துணைபுரிந்த நூல்கள்

1. மனுநெறித் திருநூல் – தவத்திரு தண்டபாணி சுவாமிகள்.
2. அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் வரலாறு நினைவு மலர் – திருவாமாத்தூர் கௌமாரசபை வெளியீடு.
3. திருவரங்கத் திருவாயிரம் – தண்டபாணி சுவாமிகள்
4. திருவிளக்காயிரம் – தண்டபாணி சுவாமிகள்
5. திருச்செத்திற் பிரபந்தம் – தண்டபாணி சுவாமிகள்
6. தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார் சிறப்பாய்வு, ஆலந்தூர் கோ. மோகனரங்கன்.

விற்பனம் - வகுத்த புதுநெறி

பா. சிவநேசன்

மனிதன் தன் வாழ்வைச் செம்மையாக வாழக் கற்றுக் கொண்டபோதும், அவ்வப்போது நெறிகடந்த செயல்களும் அவனிடத்துத் தோன்றலாயின. ஒருவனது நன்மைக்கும், தீமைக்கும் அவனே காரணமாகிறான். 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பது புறநானூறு. தீய வழிக்குச் சென்ற மனிதனை இலக்கியங்கள் நல்வழிப்படுத்த முற்படுகின்றன. தமிழிலக்கியங் களில் அறிவுறுத்தும் போக்கு உண்டெனினும், நன்னெறிகளைப் புகட்டுவதற்கென்றே சில நூல்களும் தோன்றியுள்ளன. அவை நீதி இலக்கியங்கள் எனப்பெறும். சங்கம் மருவிய காலத்தில் நீதி நூல்கள் பல இயற்றப்பெற்றன. அக்காலத்தில் ஏற்பட்ட சீர்கேடுகளைக் களைவதற்காக அந்நூல்கள் பாடப் பெற்றன எனலாம். பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள பதினொரு நீதி நூல்களும் வாழ்வியலறத்தை வலியுறுத்துவன. இடைக்காலத்தில் குமரகுருபரர் நீதிநெறி விளக்கத்தையும், சிவப்பிரகாசர் நன்னெறியினையும் அருளினர். பிற்கால ஔவையார் ஆத்தி சூடியைப் பாடினார். அவரைப் பின்பற்றி ஆத்திசூடிகள் பல எழுந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டினரான வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளும் பல நீதி நூல்களைப் படைத்துள்ளார்.

சுவாமிகளின் நீதி நூல்கள்

சத்திய சூத்திரம், சத்தியவாசகம், மனுநெறித் திருநூல், பொதுநூல், சிறப்புநூல், திருவெண்பா, விற்பனம் முதலியன சுவாமிகள் அருளிய நீதி நூல்களாகும். பழந்தமிழ் நீதி நூல்கட்கும், இவரது நீதிநூல்கட்கும், வேறுபாடு உண்டு. இவர் நீதிகளை உணர்த்துவதில் ஒரு புதிய நெறியினை வகுத்துள்ளார். சுவாமிகள் தாமியற்றிய நூல்களைப் பற்றிக் கூறும்பொழுது,

'.........புதுநெறிப் பனுவல் பல முத்தமிழ்ச்சுவை வழாமல் இம்மணிற் புலவர் பலர் மகிழ்வுறக் கொடுத்துளேன்' என்று பாடியுள்ளார். அவர் உணர்த்திய புதுநெறி விற்பனம் எனும் நூலின்வழி ஆராயப்பெறுகிறது.

விற்பனம் - நூற்பெயர் விளக்கம்

விற்பனம் என்பது அறிவின் பெயர். இதற்குப் பிரசங்கம், கல்வி எனும் பொருள்களை அகராதி உரைக்கிறது. இப்பொருளிரண்டும் அறிவோடு தொடர்புடையவை. கல்வியிற் சிறந்தோரை விற்பன்னர் என்றும், அவரது செயலை விற்பன்னித்தல் என்றும் கூறுவர். விற்பனம் அறிவைப் புலப்படுத்தும் நூலாகும். மேலை நாட்டினர் இலக்கியத்தை அறிவிலக்கியம், ஆற்றல் இலக்கியம் எனப் பிரித்து, நீதி நூல்களை அறிவிலக்கியம் என்பர். எனவே, விற்பனம் நீதிநூல் வரிசையில் வைத்து எண்ணத் தக்கதாம்.

நூலறிமுகம்

விற்பனம் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் முத்திப்பால் எனும் நாற் பிரிவுகளையும், பதின்மூன்று அதிகாரங்களையும் கொண்டது. நாற்பாலும் பன்னிரண்டு அதிகாரங்களில் பகுத்துச் சொல்லப்பட்டுள்ளது. கடவுள் வாழ்த்துத் தனி அதிகாரமாக உள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து வெண்பாக்கள் உள்ளன. நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுளும், இறுதியில் நூற்புகழ்ச்சிச் செய்யுளும் அமைந்துள்ளன. ஆக, நூற்றி முப்பத்திரண்டு வெண்பாக்களைக் கொண்டிலங்குவது இந்நூல்.

காப்புச் செய்யுள்

புலவர்கள் தம் நூல் இனிது முடிவதற்கு வழிபடு கடவுளையோ, அல்லது காத்தற் கடவுளையோ வேண்டிக் காப்புச் செய்யுள் பாடுவர். பொதுவாகத் தமிழ் இலக்கியங்களில் விநாயக வணக்கம் அல்லது திருமால் வணக்கம் இருக்கும். ஆனால் சுவாமிகள், 'உலகத்து உயிர்கட்குத் தலைவனாக நின்ற குருவின் அருளால், விற்பனம் எனும் நூலை இயற்றுவதற்குக் கற்பனைகளைக் கடந்து நல்லவற்றைத் தேர்ந்த மெய்யடியார்களின் திருவடிகளில் வெளிப்படும் துகளே காவல்' என்று

பாடியிருக்கிறார். குருவின் அருளால் நூல் செய்வதற்கு மெய்யடியார் திருவடிகளே காப்பு என்று பாடியிருப்பது ஒரு புதுமையாகும். விற்பனத்தில் ஒரு புதுநெறியைப் படைக்கப் போவதைக் காப்புச் செய்யுளிலேயே உணர்த்திவிடுகிறார் சுவாமிகள்.

விற்பனத்தின் சிறப்பு

சுவாமிகள் அருளிய பொதுநூல், சிறப்புநூல், திருவெண்பா, விற்பனம் எனும் நான்கும் ஒரே நூலாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. விற்பனம் தவிர மற்ற நூல்களில் பால்பாகுபாடு இல்லை. அவை பத்துப் பத்து வெண்பாக்களில் நீதிகளைச் சொல்லிச் செல்கின்றன. சுவாமிகளது வெண்பா நூல்களில் விற்பனம் ஒன்று மட்டும் நூல் வடிவிலும், நுவல்பொருளிலும் சிறந்தோங்குகிறது.

அறம் அருளிய பாங்கு

தமிழ்ப்புலவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் அறத்தைக் கூறியிருக்கிறார்கள். வள்ளுவர் அறத்தை வலியுறுத்திப் பேசினார். பிற்கால ஔவையார், ‘அறம்செய விரும்பு’ என்று எளிமைப்படுத்திச் சொன்னார். சுவாமிகள் இல்லறம், துறவறம், பொதுவறம் எனும் முப்பிரிவுகளில் அறத்தை அருளியிருக்கிறார். விற்பனத்தில் அறம் பற்றிய செய்தி மிகவும் விரிவாக அமைந்துள்ளது.

இல்லறம்: ஒருவன் மனைவியோடு சேர்ந்து நடத்தும் இல்லறமே நல்லறமாகும். வாய்மை, பேரழகு, கற்பு, ஈகை எனும் இவற்றையுடைய பெண்ணை மணம் செய்து கொண்டவன் வாழ்வு சிறந்த வாழ்வாகும் என்கிறார். இவ்வுலகில் நாட்டை ஆளுகின்ற மன்னன் சிறப்பாகப் பேசப்படுவது இயல்பு. ஆனால் சுவாமிகள், அரசரினும் வீரம், கொடை, நீதி ஆகியவற்றைக் கொண்ட இல்லறத்தான் சிறப்புப் பெறுவான் என்று அருளியிருக் கிறார். இல்லறத்தில் பெண்ணே முதன்மையானவள் என்பதற்கு அவர் கூறும் விளக்கம் அருமையுடையது. வீடுபேற்றை நல்கக் கூடிய சிவபெருமானைப் பலர் சக்தியின் நாதன் என்று அறிமுகப் படுத்துவதை நோக்கினால் இவ்வுண்மை புலனாகும் என்பர்.

இல்வாழ்வான் புகழ்: இல்லறத்தான் அடையக்கூடிய புகழ் பற்றியும் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். கொடைக்குணம், இரக்கம், அறிவின்மை, கல்வி, உறவுண்மை எனும் இவற்றைப் பெற்ற இல்லறத்தானின் புகழே நிலைத்து நிற்கும் என்றும், பிறன்மனை நோக்காத பேராண்மை, முயற்சியுடைமை, நன்றியுடைமை, சினமின்மை, மானவுணர்வு இவற்றைப் பெற்று வாழ்வானின் புகழ் வானம் போன்று உயர்ந்தோங்கும் என்றும் விளக்கியுள்ளார். உணவளித்தலில் நல்லார், பொல்லார் என்று பாராது, கீழ்மக்களுக்கும் உணவு வழங்க வேண்டும் என்று இல்லறவியலில் வலியுறுத்துகிறார்.

துறவறம்: துறவறம் இல்லறத்தின் வழிவந்தது, இல்லறத்தின் வழி வாராதது என இருவகைப்படும். இல்லறத்தின் வழிவாராத் துறவைத் திருவள்ளுவர் நீத்தார் பெருமையில் கூறியுள்ளார். இல்லறத்தின் வழிவந்த துறவைத் துறவறவியலில் பேசியுள்ளார். இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவினை உடையவராய், பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய துறவறம் கூறுகின்றார் என்பர் பரிமேலழகர். உலகியலிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளுதல், பற்றற்றானைப் பற்றுதல் எனும் இரண்டும் துறவின் நோக்கமாகும். சுவாமிகள் இல்லறத்தின் வழிவாராத் துறவையே அருளுகின்றார்.

துறவிகளது இயல்பு: உண்மைத் துறவிகள் பற்றுக்களை விடுத்து இறையருளைத் தஞ்சம் என்று எண்ணுவர். மனிதனின் புற உறுப்பினும், அகவுறுப்பாகிய நெஞ்சம் தூய்மையதாய் இருப்பது நல்லதாம். பற்றில்லாத பரம்பொருளைப் பற்றுபவரே உலகியலை முழுவதுமாகத் துறக்க முடியும்.

> 'பற்றற்ற தெய்வப் பழம்பொருளைப் பற்றுநர்க்கு
> முற்றத் துறக்கை முறையாம்' (8)

என்பது சுவாமிகளது வாக்கு. இது,

> 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு' (350)

எனும் குறளை நினைவு கூர்கிறது. துறவிகள் எவ்வுதவியை யார் செய்தாலும் அவ்வுதவி இறைவன் அருளால் நிகழ்ந்தது என உணர்வர். அவர்கள் பகையையும், உறவையும் தவிர்ப்பர்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவன் உளன் என்பதை உணர்ந்திருப்பர்.

துறவறம் கைகூடாமிலை: இறைவன் தமக்கு அடைக்கலம் தருபவன் என்று கருதாதவர் வாழ்வு பயனற்றது. நாய்போல் அலைதல், பெண்ணைப் பார்த்து உருகுதல், பேய்போல் பறத்தல், தளர்ச்சி கொள்ளுதல், சினமுண்டாதல் இவ்வியல்புடையார்க்குத் துறவறம் கைகூடாது என்பர். சுவாமிகள் மனவலிமை, மாதவம், நிலை பெற்ற அருள் எனும் இவை துறந்தார் பெறும் பயனாம்.

பொதுவறம்

அறமானது இல்லறம், துறவறம் எனப் பகுத்துக் கூறப்பெறும். சுவாமிகள் இவற்றைக்கூறி, மூன்றாவதாகப் பொதுவறம் என்ற ஒன்றையும் அருளியிருக்கிறார். இயன்றவரை கொடுத்தல், புகழை நிலைநிறுத்துதல், மூது நூல் அறியும் தன்மை, அன்பு செய்தல் என்பல எல்லோருக்கும் உகந்த அறமாகும். தெய்வம், தலைவன், தொண்டர் கூட்டம், மகப்பேறு, அச்சம், சுகதுக்கம், ஆண்மை முதலியனவற்றை எச்சமயத்தாரும் ஏற்பர். அறுவகைச் சமயத்திற்கும் பொதுத் தெய்வம் ஒன்று உண்டு; வேறு தெய்வ மில்லை என்று எண்ணுவோர் ஞானம் பெறுவர். சுவாமிகள் மனித உணர்வுகளை மதித்து நடத்தலைப் பொதுவறம் என்று கருதியிருக்கிறார் எனத் தெரிகிறது. இவ்வகையில் விற்பனத்தில் அறம் அருளப் பெற்றுள்ளது.

பொருளைப் புலப்படுத்திய திறம்

திருக்குறளின் பொருட்பால், பொருள் செய்தற்குத் துணைக் காரணமான அரச நீதியைக் கூறும். ஒரு அதிகாரத்தில் பொருள் செய்யும் திறமும் இடம் பெற்றுள்ளது. சுவாமிகள் செல்வப் பொருள், கல்விப்பொருள், தவப்பொருள் எனும் மூன்றையும் உரைப்பர். வள்ளுவத்தில் கல்வியும், செல்வமும் பொருட்பாலில் வருகிறது. தவம் அறத்துப்பாலில் உள்ளது.

செல்வப்பொருள்: செல்வரின் சிறப்பும், செல்வமில்லாதாரின் இழிவும் விற்பனத்தில் விளக்கப் பெற்றுள்ளது. தவசி, அரசர், நிதியாளர் முதலியோர்க்குப் பொன் ஒரு சிறந்த துணையாகும். பொருள் புண்ணியத்தை வளர்த்து, புகழை உண்டு பண்ணுவது, எண்ணியவாறு செயல்படத் தூண்டுவது.

எவர்க்கும் உதவாதவன், இழிகுணத்தினன், பெற்றோரைப் பாதுகாக்காதவன், உறவினர்களோடு உண்ணாதவன் இவர்களிடத்துப் பொருளிருப்பின் அவர்கள் என்றும் இகழப்பட மாட்டார்கள். இது உலக நியதி என்கிறார் சுவாமிகள். முனிவர்களும், பிறரைக் குறைகூறித் திரிவோரும் செல்வரைக் கண்டால் அஞ்சி அவரைப் பணிவர். இது முதுமொழியில் கூறப்பெற்ற வழக்கு எனவும் குறிக்கிறார். சுவாமிகள் செல்வம் பற்றி ஆன்றோர் கூறியவற்றை வழி மொழிந்துள்ளார் எனலாம்.

கல்விப்பொருள்: மனித வாழ்க்கையில் கல்வி சிறப்பிடம் பெறுவது. கற்றவர் பாராட்டப் பெறுவதும், கல்லாதார் இழிவு படுத்தப் பெறுவதும் கண்கூடு. செல்வத்தினால் ஏற்பட்ட செருக்கு குன்றியழியும் கல்வியால் விளைந்த கவிதை என்றும் அழியாது என்கிறது விற்பனம்.

வேதமறிந்த ஒருவர் பொருளால் பெருமை பெற்றபோது பிறரொடு அன்புடன் பேசார். ஒரு தமிழ்ப்புலவர் இறந்தாலும் அவரது கவிதையை ஓதி அவருக்குப் பெருமை சேர்ப்பர் என்று கல்வியின் சிறப்புப் பேசப் பெறுகிறது.

கல்வியின் மேம்பாடு: கல்லாதவர் உயரிய செயலைச் செய்தாலும் அது சிறப்படையாது. கற்றவர் தீமை புரிய நேரிடினும், அது நன்மையாய் முடியும். கல்லாதவர் செய்கின்ற தவம் பொய்யாம். கல்லாதவன் தன் காதலிக்கு நல்வினை செய்யின், அது தீவினையாய் முடியும். கற்றவர் செய்யும் கொலையும் புண்ணியமாகும் என்று கூறுவதில், கல்வியை மேன்மைப்படுத்தியுள்ளமை புலனாகிறது. கற்றவர் ஒருமுறைக்கு இருமுறை ஆராய்ந்து முடிவெடுப்பர். அதனால் அச்செயல் எவ்வகையதாயினும் நன்மையதாகிவிடும்.

கல்வியின் பயன்: கல்வி கற்பது கடவுளைத் தொழுவதற்காகும். 'கல்லான் நெஞ்சில் நில்லான் ஈசன்' – என்பது சம்பந்தர் வாக்கு கல்வியின் பயனைக்,

> கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின் (2)

எனும் குறள் விளக்கும். கடவுளை வாழ்த்தும் முறைக்கு உவமை வழி விளக்கம் அருளியுள்ளமை போற்றத்தக்கது. இறைவன்

தாய் போன்று எப்பொழுதும் அருளை வழங்கக் கூடியவன். அவனை நாய்போன்று சினந்தும், நரியைப்போன்று பயந்தும், பேய்போன்று பறந்து சென்றும் பரவுதல் கூடாது என்பர் சுவாமிகள்.

தவப்பொருள்: இறைவனை அடைதற்கு மேற்கொள்ளும் செயல்முறை தவமாகும். சிவனைப் பேணுதல் தவத்திற்கு அழகு என்பர் ஔவையார். திருக்குறளில் துறவிகளுக்குத் தவம் வலியுறுத்தப் பெறுகிறது. தவம் துறவறத்திற்கு மட்டும் உரிய தன்று. இல்லறத்தில் இருந்து கொண்டும் அதனை இயற்றலாம். எல்லோரும் தவத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்ற நோக்கம் தண்டபாணி சுவாமிகளுக்கு இருந்திருக்கிறது. ஆகவே தவத்தை ஒரு சிறந்த பொருளாகக் கருதிப் பொருட்பாலில் சேர்த்துள்ளார். மாதவத்தினால் அணிமா முதலிய எண்வகை சித்திகளையும், மகிழ்வையும் தோளாற்றலையும் பெறலாம். தவசிகள் இறைவனின் குழந்தைகள். தவமியற்றாது அவம் புரிவோர் விலங்கு போல்வர். முறையாகத் தவத்தைக் கடைபிடித்தால் மன்னரது படையும், மழையும், காற்றும், தீயும், இருசுடரும் சொன்னவாறு கேட்டுச் செயல்புரியும். தவசிகளின் திருவாக்கால் மண்ணில் பொன் கிட்டும். வானில் பூ மலரும். எண்ணியவாறு எல்லாமும் வரும் என்று தவத்தின் ஆற்றலை வெளிப்படுத்தி யிருப்பது பாராட்டற்குரியது.

இன்பத்தை இயம்பிய விதம்

பழந்தமிழ் நூல்கள் இன்பம் என்றதும் சிற்றின்பத்தைக் கூறிடும். 'இன்பம் என்றது, ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை என்றார். மேலும் அவர் வடநூலுட் போசராசனும் சுவை பல என்று கூறுவார் கூறுக; யான் கூறுவது இன்பச்சுவை ஒன்றனையுமே என இதனையே மிகுத்துக் கூறினான் எனவும் கூறுவர்' என வரும் பரிமேலழகர் கூற்று இதற்கு அரண்சேர்க்கும். விற்பனத்தில் சிற்றின்பத்தோடு பேரின்பமும், புகழின்பமும் விளக்கப்பட்டுள்ளன.

சிற்றின்பம்: விற்பனத்தில் முதலில் சிற்றின்பத்தின் இழிவு உரைக்கப் பெறுகிறது. மாதர் முலையழகில் மனம் செலுத்திய பலர், தம்குலப் பெருமை, பொருள், அறநெறி, புகழ், கல்வி

ஆகியவற்றைக் கைவிட்டிருக்கிறார்கள். ஒருவன் தன் வறுமையைக் கூறிப் பணம் கேட்டபோது கொடுக்காத சிலர், பரத்தையர்க்கும், சாராயத்திற்கும் செலவழிப்பர் இது என்றும் உள்ள வழக்காகும் என்கிறார் சுவாமிகள்.

சிற்றின்பத்தின் விளைவு: சிற்றின்பத்தினால் தீமை விளைவ தோடு சில நன்மையும் கிட்டுவது உண்டு. சிற்றின்பம் தீமை களின் தாய். அதனால் வேதங்களும், சமயவாதிகளும் விளக்கம் கூற வேண்டியதாயிற்று. சமயங்கள் பேரின்பத்தைப் பெறச் சிற்றின்பம் தடையாய் இருக்கிறது என்று கூறலாயின. சிற்றின் பத்தைப் பேரின்பமாகக் கருதுவர் உலகாயதர். உலகாயதர் கொள்கையை மறுக்கச் சில சமயவாதிகள் முற்பட்டனர். எனவே தான் சுவாமிகள் வேதத்தின் விளக்கத்திற்கும், சமயவாதத் திற்கும் சிற்றின்பம் காரணமாயிற்று என்றார்.

பேரின்பம்: இறைவனுடைய திருவடியை அடைதலைப் பேரின்பம் என்பர் சமயவாதிகள். சுவாமிகளும் இக் கருத்துடையவரே. ஆயினும் இதுபற்றிய வேறு சிந்தனையும் அவரிடம் வெளிப்படுகிறது. நாற்கவிகளில் ஆசு கவியினால் இறைவனைப் புகழ்வதும், தொண்டரோடு இணங்குவதும் பேரின்பமாம். மேலும் பாசத்தை விடின் பேரின்பம் கிட்டும் என்றும், வல்லவன் ஒருவனைக் கண்டு வணங்கி, விரும்பியதைப் பெறுவதும் பேரின்பம் என்று அருளியுள்ளார்.

புகழின்பம்: திருக்குறளில் புகழ் எனும் அதிகாரம் அறத்துப் பாலில் உள்ளது. அங்குக் குறிக்கப்பெறும் புகழ் இல்லறத்தான் புகழாகும். ஆனால் விற்பனத்தில் புலவரின் புகழும், தெய்வத்தின் புகழும் கூறப்பெற்றுள்ளது. சுவாமிகள் தெய்வத்தின் புகழும், புலவர்தம் புகழும் நிலைத்து நிற்கும் என்பர். இறைவன் புகழ், பொருள் சேர்ந்த புகழ். எனவே அது சொல்லிலடங்காது. சிற்றறிவினரிடத்தும் பொருந்தும். அதனை மெய்யடியார்களும் போற்றுவார்கள் இவ்வாறு, இன்பப் பொருள்கள் விற்பனத்துள் சிறப்பிக்கப் பெற்றுள்ளன.

கடவுட் கொள்கை

சுவாமிகளின் கடவுட் கொள்கை சமரசப்போக்குடையது. அறுவகைச் சமயத்திற்கும் தெய்வம் ஒருவரே. அத்தெய்வமும்

குருவே ஆவர். குருவையும், தெய்வத்தையும் வேறுபடுத்தல் கூடாது. அவ்வாறு குருவைத் தெய்வமாகக் கருதி வழிபட்டால், வாய்மை, நீதி, குலக்கருணை, குற்றமின்மை, தாளாண்மை எனும் ஐந்தையும் பெறலாம். நாம் தெய்வத்தை எவ்வுருவில் வணங்குகிறோமோ, தெய்வம் அவ்வுருவில் வந்தருளும். இங்கு, 'எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள் அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான்' (திருக்கயிலாய ஞான உலா) – எனும் சேரமான் பெருமாள் வாக்கு ஒப்பிடற்குரியது. ஐம்பூதங் களாக விளங்கும் இறைவன், சொல்லுதற்கு அரியவன். வாக்கு, மனத்திற்கு எட்டாதவன். எல்லாமும் தாமாயிருந்து, கொல்லா விரதம் பூண்பார்க்கு மெய்யருளை வணங்கிடுவான் என்பன கடவுள் வாழ்த்தில் பெறப்படும் செய்திகளாகும்,

மும்முத்திகள்

இறைவனது திருவடியை அடைதல் முத்தியாகும். முத்தி நிலையினை அறுவகைச் சமயங்களும் பலவாறாகக் கூறியுள்ளன. தண்டபாணி சுவாமிகள் முத்திப்பாலில் சுவர்க்க முத்தி, பதமுத்தி, ஐக்கியமுத்தி எனும் மூன்றையும் கூறி விளக்கியுள்ளார். அவர் சைவ சித்தாந்தத்தின் வழி நின்று பதமுத்தியினையும், ஐக்கிய முத்தியினையும் அருளியிருக்கிறார்

சுவர்க்கமுத்தி: ஒருவன் எதைப் பெற விரும்புகிறானோ, அவன் அதைப் பெறுவது சுவர்க்க முத்தியாகும். சமணமும், மீமாஞ்சகமும் சுவர்க்க முத்தியைக் குறிக்கின்றன. வாளும், செங்கோலும் உடைய வேந்தன், கற்புடைய பெண்ணைச் சேரும் சுகம் சுவர்க்க முத்தி. முன்வைத்த காலைப் பின் வாங்கிடாது முன்னேறும் வீரன் பெறும் வெற்றியும் சுவர்க்க மேயாம். பொன் போன்ற தோற்றமும், நன்மணமுடைய உடலும் பெற்றிருப்பவர் சுவர்க்கவாசிகளாவர் என்பது சுவர்க்க முத்தி பற்றி சுவாமிகள் தரும் விளக்கங்களாகும்.

பதமுத்தி: பதமுத்தி பரமுத்தியை அடைவதற்குரிய பயிற்சி நிலையாகும். சைவ சித்தாந்தத்தில் பதமுத்தி சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் எனும் நான்கு வகையாக்கிக் கூறப்பெறும். இவற்றில் சுவாமிகள் சாலோகத்தையும் சாமீபத் தையும் முதற்கண் குறிக்கிறார். சாலோகம் என்பது

இறைவனுள்ள உலகில் வாழ்தல். இது சரியைத் தொண்டாகும். திருக்கோவிலுக்குச் சென்று தெய்வத்தை வணங்குவார்க்கு எமபயமில்லை. செம்மலர்கொண்டு அர்ச்சிப்பதும், இறைவனுக்குத் தொண்டு புரிவதும் சிறந்த கடமையாகும். எந்திரத்தில் இறைவன் திருவுருவை எழுதி, அதனை இறைவனது இருக்கை என்று கருதி மந்திரத்தால் வாழ்த்துவோருளத்தில் இறைவன் வீற்றிருப்பான். இல்லறத்தைத் துறந்து, கிடைத்த உணவை உண்டு வாழும் திருவேடத்தவரைப் பற்றுவதே மேலான பதமாகும் என்பன சாலோகம் பற்றிச் சுவாமிகள் கூறும் கருத்தாகும்.

இனிச் சாமீபம் என்பது இறைவனை அணுகியிருந்து தொண்டு செய்தலாகும். இது கிரியையாகும். மனிதனின் அகக் கருவியும், புறக்கருவியும் இணைந்து செயலாற்றுவது. மானதத் தால் பூசை செய்வோர் புனிதர்களாவர். அவர்கள் இவ்வுலகில் அருட்செயலைப் புரிந்து வாழ்வர் என்று சாமீப நிலை சுட்டப் பெறுகிறது.

ஐக்கிய முத்தி: இறைவனோடு ஒன்றுதல் இதனைச் சைவ சித்தாந்தம் பரமுத்தி எனக் கூறும். இதுவே முடிவான முத்தி (சாயுச்சியம்) நிலையாகும். சுவாமிகள், மேலான கடவுளை உணர்ந்தபின் சோம்பியிருக்கக் கூடாது என்கிறார். பத்தியினால் ஞானமுண்டாகும். சித்தி தோன்றும். முத்திபெறுவோர் புண்ணிய முடையோராதலால் அவர்களை இறைவன் மறுமுறையும் படைக்கமாட்டான் என்று இம்முத்தியின் திறம் வழங்கியிருக் கிறார். மேலும் அவர் இப்பகுதியில், முத்தியின் இன்றியமையா மையை தெளிவுபடுத்தி யுள்ளார். அடுத்து அவர், நானே முதல்வன் என்று கூறுவோருக்கும், தானே தலைமை என்போருக்கும் முத்தி எளிதில் கைகூடாது எனவும் கூறுகிறார். இவ்வகையில் முத்திப்பாலில் கருத்துக்கள் அமைந்து உள்ளன.

புதுநெறி

சுவாமிகள் அறத்துப்பாலில் பொதுவறத்தையும், பொருட் பாலில் தவத்தையும், இன்பத்துப்பாலில் பேரின்பம் மற்றும் புகழின்பத்தையும் பாடியுள்ளார். முத்திப்பாலில் முத்தியின் வகைகளைத் தெளிவுபடுத்தியுள்ளார். இவர், இவ்வாறு பாடி யுள்ளதால், பழந்தமிழ் நீதி நூல்களிலிருந்து வேறுபடுகிறார்.

முப்பாலிலும் உலகியல் நீதியோடு சமயம் சார்ந்த நீதியை இணைத்துக் கூறியிருப்பது சுவாமிகள் வகுத்த புதுநெறியாகும்.

தொகுப்புரை

சுவாமிகள் படைத்த புதுநெறியினை விற்பனத்தின் வழி ஆராய்ந்த வகையில், கீழ்வரும் உண்மைகள் தெரிய வருகின்றன. அவை,

* காப்புச் செய்யுள் பழைய மரபிலிருந்து வேறுபடல்.
* அறுவகைச் சமயத்திற்கும் பொதுக்கடவுள் சுட்டப்பெறல்.
* மனித உணர்வுகளை மதிப்பது பொதுவறமாதல்.
* கல்வி மேம்படுத்தப்பெறல்.
* எல்லோருக்கும் தவம் வலியுறுத்தப்பெறல்.
* புலவர்களின் புகழ், தெய்வப் புகழிற்குச் சமமானது எனல்.
* சைவ சித்தாந்த வழி நின்று முத்தி வகைகள் விளக்கப் பெறல் என்பன.

திருமகளந்தாதி

கு. சிவலிங்கம்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து ஒரு இலட்சம் பாடல்களைப் பாடியவர். கொலை, புலை தவிர்த்தலை வள்ளுவருக்குப் பிறகு மிக அழுத்த மாக வலியுறுத்திக் கூறியவர். சமயச் சார்பற்ற பரந்த நோக்குடையவராக விளங்கினார். இத்தகைய சுவாமிகளால் தமிழ்ப் பிரபந்த வகைகளில் அந்தாதி முறையில் பாடப்பெற்ற ஒரு நூல் 'திருமகளந்தாதி' ஆகும்.

திருமகள் அந்தாதியின் சிறப்பு

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 43 நூற்றந்தாதி களைப் பாடியவர். திருமகள் அந்தாதி என்னும் நூல் உலக மக்கள் அனைவரையும் காத்து அருளாட்சி செய்யும் திருமாலின் மார்பகத்தே குடிகொண்டு விளங்கும் திருமகளைப் போற்றி உரைக்கும் ஒரு சிறந்த இனிய தோத்திர நூலாகும். பக்தியால் உள்ளத்தை இறைவிபால் ஈடுபடுத்துகின்ற முறையிலும் புராண வரலாறுகளைச் சுட்டிக்காட்டியும் பாடப்பட்டுள்ளது. கொலை, புலை தவிர்த்தலாகிய தம் உயிர்க்கொள்கையை இந்தத் திருமகளந்தாதியிலும் கூறியுள்ளார்.

நூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்களாலான இந்நூல் 'திருமகளே' எனத் தொடங்கி, அந்தாதியாகத் தொடர்ந்து 'திருமகளே' என மண்டலித்து நிறைவு பெற்றுள்ளது. வைணவக் கடவுளாகிய திருமகளைப் போற்றும்போது அதற்குக் காப்பாகப் பன்னிரண்டு ஆழ்வார்களைக் கூறியிருப்பது ஏற்புடைக் கடவுள் வாழ்த்தின்பாற்படும். பிள்ளைப் பெருமாளையங்காரும் தம் அஷ்டப் பிரபந்தத்தில் இத்தகைய முறையைக் கையாண்டி இருப்பதைக் காணலாம்.

திருமாலின் திருப்பெயரும், செயல்களும், புராண வரலாறுகளும்

திருமாலின் பல்வேறு திருப்பெயர்களை ஆசிரியர் ஆண்டுள்ளார்.

நெடுமால் (1), நீலவண்ணன் (9), பகவன் (11), பிரான் (41), நாரணன் (13), ஐம்படையான் (19), பெருமான் (32), பசுக்காத்த நாதன் (45), நாராயணன் (46), நெடியோன் (65), கார்முகில் அன்னான் (74), அம்மான் (85), ஆளரி (86), சாமள மேனி பிரான் (93) என்பன அவை.

திருமாலின் செயல்கள் குறிப்பிடப்படும் இடங்கள் சிலவாகும். கயம் உயக்காத்தவன் (5), பல்கருவாய், அரசாய்ப் புவிகாக்கும் பகவன் (11), உண்ணமுது ஈந்த பெருமான் (32), மத்தக வேழம் புரந்த பிரான் (41), குணம்நீடு பாண்டவர் காத்தான் (44), பிறங்கல் எடுத்து உய்யும்படி பல் பசுக்காத்த நாதன் (45).

திருமாலின் அவதாரச் சிறப்பை எடுத்துரைக்கும் பாகவதக் கதைகளை ஆங்காங்கு குறிப்பிடக் காணலாம். கசேந்திரனான யானையைக் காத்தவன் (5), பன்றி வடிவம் கொண்டு அடியார் துயர் களைந்தவன் (50), கோவர்த்தன மலையை எடுத்து பலப் பசுக்களைக் காத்தவன் (45), பாண்டவர்களுக்குத் தூதன் ஆனவன் (73), யசோதையால் உரலில் கட்டப்பட்டு உரலொடு உழன்றவன் (80), நரசிங்கமாக வந்தவன் (86), இரணியனை அழித்தவன் (97).

திருமகளின் திருப்பெயரும், குணநலன்களும்

சயமகள் (5), செற்திருமங்கை (10), தாக்கணங்கு (12), செஞ்சிரணங்கு (13), கருங்குழற்கோதை (15), இந்திரை (16), மலர்மகள் (19), சிற்றிடைப்பாவை (21), செந்தாமரைச் சீர்மகள் (25), கஞ்சமாமகள் (27), செய்யாள் (30), சீமாட்டி (34), அணங்கரசு (43), நாரணி (69), சலசவல்லி (73), வனிதை (82), கொன்றைச் சடைத்தம்பிரான் தங்கை (92) எனத் திருமகளின் திருப்பெயர்கள் பலவும் கூறக் காணலாம்.

திருமகள் பெருமை

திருமகள் பெருமையைக் கூறுகின்றபொழுது தெய்வக் கணங்களும் தொழத்தக்க பெரும்பேறு பெற்றவள் என்பதைப் பல பாடல்களில் ஆசிரியர் கூறியுள்ளார்.

''சயமகள் இந்திரர் பல்லோர் வணங்கு பொற்றாள்'' (5)

''காரணங்கோடு வெண்பால் நேர் அணங்கும் கருதிய
செஞ்சீரணங்கு'' (13)

''கணங்களெல் லாம்தொழும் காலுடையாள்'' (43)

''வைகுலவு ஐம்படையான தன்னை ஆண்ட மலர்மகளே'' (19)

''நெடுமாற்கு அருள்வாழ்க்கை நல்கிப்பலகோடி அண்டமும்
காப்பாள்'' (64)

எனப் புகழ்கிறார்.

பொன்னையும், மணியையும் மட்டுமே கொடுப்பவள் திருமகள் என்னும் தவறான கருத்தை மறுத்து, எல்லா நலன் களையும் வழங்குபவள் அவள் என்பதை,

''சொன்னம் கொடுப்பதொன் றேதிரு மாதருள் தோற்றம்
என்னும்
சின்ன மதிப்புல வீர்நன்மை யாவும்அச் செல்வி பங்கே''(37)

எனத் தெளிவித்து, அவளால் கொடுக்க இயலாதது ஒன்றுமே இல்லை என்பதையும்,

''அடுத்திறைஞ் சும்புல வோர்பெற்று வாழ்வுற அம்புயப்பூ
நடுத்திகழ் செய்யவள் நல்காதது ஒன்றில்லை ... ...'' (48)

என அறுதியிட்டுக் கூறுகிறார். திருமகளின் பெருமையைக் கூறுமிடத்து,

''இராகவர் கூந்தற் திருமாது சம்பந்தம் எய்தியதால்
சராசரம் ஈன்றுளன் என்றுரைப்பேன்; என்சொல்
சத்தியமே'' (72)

எனத் திருமகளின் துணையால்தான் திருமாலுக்கு இந்த நிலவுலகைப் பெற்ற பேறு கிட்டியது என்கிறார். மேலும்,

''சாற்றணி யாலயம் தோறும் நிலாவற்கும் தாரணியின்
மேற்றவத் தோர்குழு கூடிக் குலாவற்கும் வேறெவைக்கும்
ஆற்றல்நல் கும்கடைக் கண்ணாள் ... ...'' (94)

என்று உலகவர்க்கு இன்பம் கொடுப்பவள் திருமகளே என்கிறார்.

திருமகளின் அழகு

திருமாலின் அழகைப் பற்றிப் பல இடங்களில், வாளை ஒப்பாம்விழி (2), முற்றற் பவளச் சிலை போல்பவள் (6), சுருளும் கருங்குழற்தோகை (15), நூலன்ன சிற்றிடைப் பாவை (21), செய்ய பொன் மேனித் திரு (25), முத்து நகை செய்யாள் (30), ஆலமும் நீலமும் போலவிர் உண்கண் அணித்திரு (50), நளின மலர்த்தோடும் சுரும்பும் துணையாக வாழும் சுரிகுழல் (78), அழியாப் பொன்னை ஒப்பாம் திருமேனிப்பிராட்டி (84) என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

திருமகள் உடன் தோன்றியவர்கள்

''சந்திரனோடும் அமுதோடும் பாற்கடல் தன்னில் வந்த இந்திரை'' (16), அமுதத்தோடு உதித்த வனிதை (82) எனும் இடங்களில் திருமகள் பாற்கடலில் சந்திரனோடு தோன்றிய வரலாறு காட்டப்படுகிறது.

திருமகள் பிறந்த இடம்

மலரிற் பிறந்தவள் (20), திரையிற் பிறந்துயர் சீமாட்டி (34) என மலரிலும், திருப்பாற்கடலிலும் பிறந்ததைக் கூறுகின்றார்.

திருமகள் வசிக்கும் இடம்

திருமகள் வசிக்கும் இடங்களைத் திருமாலின் மார்பு (1, 6, 15), தாமரை மலர் (4, 7, 12, 24) என்று குறிப்பிடுகிறார்.

உயர்ந்தனவாகக் கருதப்படும் இடங்களில் திருமகள் இருக்கிறாள் – என்று கூறப்படும் வழக்கையொட்டி,

''மாயவன் மார்பும், துளசியும் யானை வதனமும்நல்
தூயவர் இல்லமும், வில்வமும் தீபமும் சொன்னமுமே! (36)

என்றும் குறிப்பிடுகிறார்.

திருமகளின் விண்ணப்பம்

திருமகளிடம் நற்கதியையும் அவளது மலரடி நினைக்கின்ற மனத்தையும் தனக்கு நல்க வேண்டும் என்று வேண்டுகிறார்.

"எனக்குஉன் கடைக்கண் அருள்வாரி யின்துளி இன்றருளில்
உனக்கும் புகழுண்டு, உலகிற்கும் நன்மையுண்டு,
உன்கணவன்
தனக்கும் களிப்புண்டு இதுசத் தியம்என்சொல்
தள்ளிவிடேல்'' (38)

ஆசிரியர் மிக உரிமையோடு அன்னையாகிய எம் பெருமாட்டியிடம், தனக்கு அவள் அருள் கிடைத்தால் உண்மையாக அவளுக்கும் புகழுண்டாகும், உலகிற்கும் நன்மையுண்டாகும். அவள் கணவனுக்கும் மகிழ்ச்சி உண்டாகும் எனக் கூறி, இவ் வேண்டுகோளை தள்ளிவிட வேண்டாம் என வேண்டுகிறார். மேலும்,

"மெய்யல்லேன், தவன் அல்லேன் சரத விரதனல்லேன், உய்ய என்று ஆண்டருள்வாய்! (40) என்று தன் குறைகளைக் கூறி, குறை நீக்கி ஆள வேண்டுகிறார். "என் உள்வரும் சத்தியத்தை பிணையுள்ள பேர் அறியத்தக்கவாறு 'அருள் செய்வது என்றோ?'' (55) உலகோர் அறியும் வண்ணம் அவர் அருள் தனக்குக் கிடைக்க வேண்டும் என்கிறார்.

"புந்திக் கலக்கம் மலிந்துஉன்னை நாடிப் புலம்புகின்றேன்!
சிந்திக்க வல்லன்அல் லேன்என்னை இன்னமும் சீரழியேல்!
நிந்திக்கத்தக்க வரும் புகழ் ஆர்வ நிறையருள்வாய்'' (67)

"செல்வச் செருக்கர் மனைவாயில் தோறும் திரிந்து அழுத்துச்
சொல்வக்கணைப் பொய்ப் புலவோர் களால்மிகத்
துன்புற் றுள்ளேன்'' (75)

என்று தன் நிலை கண்டு மனமிக வருந்தி வேண்டுகிறார்.

துன்பத்திற்குக் காரணம்

"அரையில் தரிக்கத் துணியும் இலாது இங்கு அலைபவரும்
கரையற்ற துன்பக் கடலூடு அமிழ்ந்து கலங்குநரும்
திரையிற் பிறந்துயர் சீமாட்டி கண்ணருள் சேர்த்திலரே''
(34)

வாழ்வில் பெரும் துன்பப்படுவோர் திருமகளின் அருட்பார்வை அடையாதவர்களே என்கிறார்.

அருளின் சிறப்பு

திருமகள் அருள் கிடைத்தால் நல்லோர்க்கு நன்மை புரிந்து தான் தீயோரை அடக்கி வைப்பதாகக் கூறுகிறார்.

உரட்ட பெரிது தருமகள் (1), பத்தம் உற்றார்களை எந்நாளும் காக்கும் பதுமமின்! (41) என்றெல்லாம் சொல்லி,

> "பொன்னும், மணியும் புவிஆள்செங் கோலும்மென் பூந்துகிலும்,
> மின்னும் மகுடம் முதலாய பூணும், வியனழகும்
> மன்னும்வல் வீரமும், வாகையும் ஆகிய வாழ்வனைத்தும்"
> (10)

திருமகளின் கடைக்கண் பார்வையால் கிடைக்கும் என்று கூறுகிறார்.

"பதங்கள் எல்லாமும், பிறப்பொடு இறப்பில் பரத்துவமும் இதங்கள் யாவும்" (31) அருள்வதோடு, "செனிப்புறு கன்மமும் தீர்ப்பாள்" (100) என அழுத்தமாக வற்புறுத்துகிறார். திருமகளின் அருள் பெற்றவர்களாக,

> "கண்டம் கரியன், முழுதும் கரியன், கடகரியன்
> அண்டம் கடந்தவன் ஆகிய தேவர் அனைவரும்நின்
> தொண்டன்பி னால்உயந்து ளாரே..." (58)

என்னும் பாடற்பகுதியில் சிவபெருமான், மன்மதன், இந்திரர். பிரம்மன் முதலிய ஆகியோரையும் குறிப்பிட்டுள்ளார், அத்தோடு,

> "சேரியம் செம்புஇரும்பு ஆதியிற் பொன்செயும் சீரியரும்
> வாரிரக் கொங்கைத் திருமாது கண்ணருள் வாய்ந்தவரே"
> (35)

எனக் கூறுவதால் இரசவாதம் முதலியவற்றால் பொன் செய்வதற்கும் திருமகளின் அருளே துணையாகும் எனக் காட்டுகிறார்.

கொலை, புலை தவிர்த்தல்

"மறி அறுத்து உண்கின்ற பொல்லார்க்கும் செம்பொன் வழங்கிடும் நீ" (4) எனக் கூறுவதன் மூலம் பாவங்களில் எல்லாம்

மிகக் கொடிய பாவமாகிய கொலையை உணவின் பொருட்டுச் செய்யும் தீயவர்கட்கு ஆட்சியைக் கொடுத்தது திருமகள் செய்த தவறு என்கிறார். இதே கருத்து 45-ம் பாவிலும் இடம் பெற்று உள்ளது.

தன் அனுபவம்

"அன்றைக்கென் சொற்பனத்தே வந்து கூறிய அற்புதச் சொல் ஒன்றைக் கருதி மிக மகிழ்ந்தேன் .." (92) எனத் தன் கனவில் ஒரு நாள் வந்ததை நினைவுபடுத்தி மீண்டும் அந்தப் பெரும் பேற்றினை அருள வேண்டுகிறார்.

முடிவுரை

இவ்வாறு பல வகையில் சிறந்த இத்திருமகளந்தாதியைப் படித்துணர்வோர்க்கும், பாடித் துதிப்போர்க்கும் இந்நிலவுலகில் பேரின்பம் கிடைப்பதோடன்றி வீடுபேறும் கிடைக்கும் என்று நூற்பயன் வெண்பாவில் கூறி முடிக்கிறார்.

மாணிக்கவாசகர் பற்றிப் புலவர் புராணம்

ஆ. சிவலிங்கனார்

முன்னுரை

மாணிக்கவாசகர் பற்றிய வரலாறு, கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பார் பாடிய 'திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்'திலும், கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதியார் பாடிய 'திருவிளையாடற் புராணத்திலும்' இவர்க்குப் பிற்காலத்தவரான கடவுள் மாமுனிவர் பாடிய 'திருவாதவூரடிகள் புராணத்தி'லும் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. மிகப் பிற்காலத் தலபுராண நூல்களாகிய திருவுத்தரகோச மங்கைப் புராணம், கடம்பவன புராணம், திருப்பெருந்துறைப் புராணம் என்பவற்றிலும் கூறப்பட்டுள்ளது.

இப்புராணங்கள் யாவும் மாணிக்கவாசகர்க்கு மிகமிகப் பிற்காலங்களில் பாடப்பட்டன. அவற்றின் ஆசிரியர்கள் உலகில் வழங்கிய கதைகளையும் தத்தமக்கு முன்னர் பாடப்பட்ட புராணங்களையும் ஆதாரமாகக் கொண்டு தத்தம் மனதுக்கு ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும் பாடியுள்ளனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவராகிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும் தாம் இயற்றிய புலவர் புராணத்தில் திருவாதவூரார் சருக்கம் என ஒரு சருக்கம் அமைத்துப் பாடியுள்ளார். அவர் பாடிய வரலாற்றில் காணப்படும் கதை பற்றிய அவர்தம் கோட்பாடு இக்கட்டுரையில் எழுதப்படும்.

திருவாதவூரர் சருக்கம் – கதை

பாண்டிய நாட்டில் உத்தரகோசமங்கை என்ற ஊரில் ஒரு குருமுனிவர், சீடர் பலருடன் தவமிருந்தார். அவர் தவமுற்றிய பின், தாம் முத்திநிலையடையப் போவதாகக் கூறினார். சீடர்கள், ''யாம் எப்போது முத்தியடைவோம்?'' என வினவினர். அதற்கு அவர், ''இப்பக்கம் உள்ள குளத்தில் ஒளி ஒன்று

தோன்றும்; அதில் யாவரும் புகுந்தால் முத்தி கிட்டும்'' என்றார். பின் மறைந்தார். அவ்வாறே சிலநாள் சென்றபின் குளத்தில் ஒளிதோன்ற யாவரும் புகுந்து மறைந்தனர். குருவின் பாதுகையை ஏந்தும் ஒரு சீடர் மட்டும், பயந்து தீப்புகவில்லை. பின்னர் ஒளி மறைந்தது. அச்சீடர் மனம் புண்பட்டு இறந்து கயிலாயம் சென்று சாருபப் பதவி எய்தினார்.

அச்சீடர் கயிலையிறைவனிடம் பிறவாக்கதி வேண்டியிருந்த போது, இறைவன் அருளால் திருவாதவூரில் ஆமாத்திய அந்தணனுக்கு மகவாய்ப் பிறந்தார். அவரை வாதவூரர் என்றும் பிரமராயன் என்றும் மக்கள் அழைத்தனர். கல்வி கேள்விகளிற் சிறந்த அவரைப் பாண்டியன் தன் அமைச்சராக்கினான்.

ஒருகால், அவரைக் குதிரை வாங்கி வருமாறு கீழ்க்கடற் பகுதிக்கு அனுப்பினான். வேண்டும் பொன் முதலிய கொண்டு சென்ற அமைச்சராகிய வாதவூரார் கிழக்கு நோக்கிச் சென்றார். ஓரிடத்து ஒருபொழிலில் அடியார் சூழ ஒரு குரு அமர்ந்திருப்பது கண்டார்; சென்று வணங்கினார்; ஆட்கொள்ள வேண்டினார். அக்குருவும் உடல், பொருள், ஆவியாவும் தமக்கே தருக எனக்கூறி அவர்க்கு உபதேசம் செய்தார். அன்று முதல் அவர் துறவுக் கோலம் கொண்டவராய் விளங்கினார். கொண்டு வந்த பொருள் களை அடியார்க்கும் திருக்கோயில் திருப்பணிக்கும் செலவிட்டார். இது அரசனுக்குத் தெரிய, அவன் கடுமையாக ஓலையனுப்பினான். குருவின் ஆணைப்படி மதுரை சென்று மன்னனிடம் ஆவணி மூலத்திருநாளில் குதிரைகள் வரும் என்றார். குறித்த காலத்தில் குதிரை வரவில்லை, மன்னன் அவரைத் துன்புறுத்தினான். இறைவன் நரிகளைக் குதிரைகளாக்கி வந்து அரசனிடம் சேர்த்தார். அரசன் மகிழ்ந்தான். அன்றிரவு குதிரைகள் நரி களாய் மறைந்தன. அரசன் வாதவூராரைத் துன்புறுத்தினான். இறைவனை வேண்டினார் அவர். இறைவனருளால் மதுரையில் வெள்ளம் பெருகியது. அரசன் வாதவூராரை மன்னிக்க என வேண்டினான். வெள்ளம் நின்றது. அதனால் ஏற்பட்ட உடைப்பு களை அடைக்க அவன், 'வீட்டுக்கொருவராக வருக' என்றான். பிட்டுவிற்று உண்ணும் ஒரு மூதாட்டி தனக்குக் கூலி ஆள் இல்லாமல் வருந்தினாள். இறைவன் ஆளாக வந்து பிட்டினைக் கூலியாகப் பெற்று உடைப்பை அடைக்காமல் ஆட்டம் போட்டான். அரசன் அறிந்து வந்து பிரம்பால் அடித்தான்.

அவ்வடி யாவர்மீதும் பட்டது. கூலியாளும் மறைந்தான். அரசன் முதல் யாவரும் உண்மை அறிந்தனர். வாதவூராரை அரசன் வணங்கி விடுத்தான்.

வாதவூரார் பல தலங்கள் சென்று தில்லையில் தங்கியபோது பல பதிகங்கள் இறைவன் மீது பாட, இறைவன் மகிழ்ந்து அவர்க்கு மாணிக்கவாசகன் எனப் பெயர் சூட்டினார்.

அக்காலத்தில் ஈழநாட்டுப் புத்த துறவியர் இருபத்தொருவர் தில்லை வந்து மறையவர்களை வாதில்வென்று கோயிலையும் தம் வயப்படுத்த முயன்றனர். மறையவர் வருந்தினர். அவர் கனவில் இறைவன் மாணிக்கவாசகரைக் கொண்டு புத்தரை வெல்க என்றார். அவ்வாறே அவர்கள் மாணிக்கவாசகரை வணங்கி அழைத்து வந்தனர். அவரும் புத்தருடன் வாதிட்டு வென்றார். அதுகேட்ட ஈழ அரசன் தன் ஊமை மகளுடன் வந்து தன் மகளைப் பேச வைக்க வேண்டினன். பேச வைத்தார். அவனும் சைவனானான்.

தம் பாடல்களை எழுதுவதற்குத் தக்கவரை நாடியிருந்தார். இறைவன் பாண்டிநாட்டான் எனச் சொல்லி வந்து திருவாசகம், திருக்கோவையார் எனும் பாடல்களை எழுதி ''வாதவூரார் சொல்ல திருச்சிற்றம்பலம் உடையான் எழுதியது'' என முடிவில் எழுதி மறைந்து, அச்சுவடியைப் பொன்னம்பலத்தில் வைத்தார். தில்லையந்தணர் அச்சுவடி கண்டு பொருள் தெரிவதற்கு இறைவன் ஆணைப்படி மாணிக்கவாசகரை அழைத்து வந்தனர். அவரும் பொருள் நடராசரே என்று நடராசர் வடிவிற் கலந்தார்.

இவ்வளவும் திருவாதவூரார் சருக்கம் கூறும் கதை. இனி இக்கதையில் மற்றைப் புராணங்களுக்கும் இதற்கும் உள்ள மாறு பாடுகளைக் காணலாம்.

மாறுபாடு

1. தண்டபாணி சுவாமிகள் முதலில் மாணிக்கவாசகரின் பழம் பிறப்புக் கூறுவதற்கு ஆதாரம் புலப்படவில்லை. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் மாணிக்க

வாசகர் முன்னைப் பிறவியில் சிவகணத் தலைவராக இருந்த ஒருவர் என்கிறது. அவ்வளவே.

திருவுத்தரகோச மங்கைப்புராணம், அவ்வூரின் தென்மேற்குத் திசையில் ஆயிரம் முனிவர் தவமிருந்ததாகவும், இறைவன் அவர்க்கு முன்னே தோன்றி, "இலங்கையில் மண்டோதரிக்கு அருள்புரிந்து பின்னர் வந்து ஆட்கொள்வதாகவும் கூறித் தம்பிடம் இருந்த திருமுறையைக் கொடுத்து இங்குள்ள பொய்கையில் தீப்பிழம்பு தோன்றும்; அதில் மூழ்குங்கள்" என்றதாகவும், அவ்வாறே ஒருநாள் தீப்பிழம்பு தோன்ற முனிவர் யாவரும் அதில் மூழ்க மாணிக்கவாசகர் என்னும் முனிவர் மட்டும் மூழ்காமல் இறைவன் தந்த திருமுறையைக் காத்து நின்றதாகவும், மண்டோதரிக்கு அருள்புரிந்து இறைவன் மீண்டுவந்து அவரைப் பல தலங்கள் சென்று தம்மைப் பணிந்து வரின் ஓரிடத்துத்தாமே குருவாக வந்து ஆட்கொள்வதாகக் கூறி மறைந்ததாகவும், அம்மாணிக்கவாசகரே வாதவூரராக வந்ததாகவும் கூறும்.

திருப்பெருந்துறைப் புராணம், இறைவன் குருவாக எழுந்தருளிச் சிவகணநாதர் பலர்க்கும் உபதேசித்தபோது வான் வெளியில் இந்திரன் பவனி வருவதைக் கண்டிருந்த ஒருவரைப் பார்த்து நீ நம் உபதேசப் பொருளைக் கவனியாது, வேறொன்றைப் பார்த்தமையால் பூமியிற் பிறக்க எனக் கூறி, அவர் வேண்டுகோட்படி, "யாமே குருவாக வந்து ஆட்கொள் வோம்" என்றதாகவும், அவரே, வாதவூரராக அவதரித்ததாகவும் கூறும்.

இக்கதைகளைச் சுவாமிகள் கேட்டிருப்பாராயின் தாம் ஒரு கதையைக் கூறியிரார். கேட்டும் கூறினார் என்றால் தம் மனதுக்குப் பட்டவாறு மாணிக்கவாசகரின் முன்னைப் பிறப்பைக் கற்பித்தார் என்றே கொள்ளல் வேண்டியுளது.

2. வாதவூரார் பெயரைச் சிலர் பிரமராயன் என்றும் சிலர் வாதவூரார் என்றும் கூறினர் என்றார் சுவாமிகள். மற்றைப் புராணங்கள் பிரமராயன் என்பது பாண்டியமன்னன் வாதவூரரை அமைச்சராக்கியபோது சூட்டிய பட்டப்பெயர் என்று கூறும். பிரமராயன் என்பது பாண்டியன் சூட்டிய பட்டப்பெயர்

என்பதில் சுவாமிகளுக்குக் கருத்தில்லை என்று தெரிகிறது. ஏன் எனின் மாணிக்கவாசகர் பாண்டியனால் அமைச்சராக அமர்த்தப் படுவதற்கு முன்னரே மக்கள் பிரமராயன் என்று வழங்கினர் என்றார்.

''அன்னவற் பிரமராய னாமெனப் பகர்ந்தார் சில்லோர்
உன்னரும் புகழ்சால் வாத வூரனென் றுரைத்தார் பல்லோர்''

என்றார் (172).

3. திருவாலவாயுடையார் புராணமும் திருவாதவூரர் புராணமும் திருப்பெருந்துறையில் உபதேசம் பெற்றவுடன் மாணிக்கவாசகர் துறவுக்கோலம் கொண்டார் எனக் கூறும். திருவாதவூரர் புராணம் மாணிக்கவாசகர் பாண்டியனைக் காணச் சென்றபோது துறவுக்கோலம் நீக்கி முன்னைய அமைச்சர் கோலத்துடன் சென்றார் என்னும்.

இதனைச் சுவாமிகள் மறுத்துள்ளார். துறவுக்கோலம் நீக்கி அமைச்சர் கோலத்தை மீளவும் கொண்டு பாண்டியனைக் கண்டார் என்றால், முன்னமே ஒற்றர் மூலம் அவர் துறவு அற்ந்த பாண்டியன் அவரை 'நாடறி திருடன்' என்றன்றோ கூறுவான்? அதனால் அவர் துறவுக்கோலத்துடனேயே பாண்டியனைக் கண்டார் என்பதே நன்று என்றார். இங்கே ஒரு வேடிக்கையையும் சுவாமிகள் கூறினார். ''கலைமகள், திருவாதவூரர் புராணம் பாடியவர் நாவில் இருந்து, மாணிக்க வாசகர் துறவுக்கோலம் களைந்து அமைச்சர் கோலத்தில் சென்று பாண்டியனைக் கண்டார் என்று கூறுமாறு செய்தாள்; என் நாவில் அருந்து அதை மறுக்குமாறு செய்தாள். அக்கலை மகளைப் பின்ஒருகால் கண்டால் மாணிக்கவாசகர் துறவுக்கோலம் நீக்கிக் கண்டாரா?, துறவுக்கோலத்துடன்தான் பாண்டியனைக் கண்டாரா? உன் மங்கலநாண் சான்றாகக் கூறுக என்று வினவினால் அவளால் உண்மையறியலாம்'' என்றார் சுவாமிகள். மேலும்,

''பிரமனை நமனை வேளைப் பெரும்பகை எனத்தேர்ந் தெள்ளும்
வரமுனி அரசற் கஞ்சி மற்றொரு வேடம் இட்டால்
அரனருள் வலிமை குன்றும் அறநிலை யனைத்தும் போகும்
கரவினன் எனஇப் பாரும் ககனமும் இகழும் அன்றே''

(புலவர் புராணம் 191)

என்றும் கூறினார்.

4. இறைவன் பாண்டியனிடம் தாம் கொண்டுவந்த குதிரை களை ஒப்படைத்த பின் ''பாண்டியன் இறைவனுக்கு ஒரு பீதாம்பரம் கொடுத்ததாகவும், இறைவன் அதைத் தம் கைச் செண்டினால் ஏற்றதாகவும், பாண்டியன் சினந்ததாகவும், மாணிக்கவாசகர் 'இது குதிரை விற்பார் ஏற்கும் முறை' என்று சமாதானப்படுத்தியதாகவும் புராணங்கள் கூறும் அக்கதையை நான் ஏற்கவில்லை'' என்றார் சுவாமிகள் (199). ஏன் என்பது விளங்கவில்லை.

5. இறைவன் பாண்டியனிடம் குதிரைகளை ஒப்படைத்த அன்றிரவு அக்குதிரைகள் நரிகளாகிப் பாண்டியனின் மற்றைக் குதிரைகளைக் கொன்று தீங்குகள் செய்து மறைந்தன என்று புராணம் புனைந்த, புலவர்கள் கூறினார்கள். அக்கூற்று வீணான கூற்றே. இறைவன் நரிகளைக் குதிரைகளாக்கினான் என்றாலும் அக் குதிரைகளையெல்லாம் நரிகளாகாமல் குதிரைகளாகவே இருக்கச் செய்யவும் வல்லன்; ஆனால், பாண்டியன் திருக் கோயில் திருப்பணியினும் குதிரைகளே வேண்டும் என நினைத்ததை எண்ணியே குதிரைகள் நரிகளாக மறையச் செய்தார். அவை பாண்டியனின் குதிரைகளைக் கொன்றன என்பது வீணே என்றார் (200).

6. வாதவூரர்க்கு மாணிக்கவாசகர் என்னும் பெயரைத் திருப்பெருந்துறைக் குரு சூட்டியதாகத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும், பரஞ்சோதி திருவிளையாடற் புராணமும் கூறும். சுவாமிகள் இறைவன் சூட்டினார் என்றார் (216). சூட்டிய பெயரை மாணிக்கவாசகரே அறிவார் மற்றை யோர் அறியார் என்றும் கூறினார். ''இட்டபேர் பெற்றோன் ஒருவனே அறிவான்'' (217) என்பது அவர் கூற்று.

7. பிட்டுக்கு மண் சுமந்த பெருமானைப் பாண்டியன் தன் ஏவலன் ஒருவனால் பிரம்படி கொடுத்தான் என்பது திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம். திருவாதவூரடிகள் புராணமும் அதுவே கூறும். பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் பாண்டியனே அடித்தான் என்னும் இக்கருத்துகளைக் கூறித் தமது கருத்து யாது எனக் கூறாமல் விட்டார் சுவாமிகள். ஆனால் பாண்டியனே அடித்ததாகவும் கூறிச் சென்றார் (208).

8. மாணிக்கவாசகர் தம் பாடல்களை யாராவது வந்து அழகுற ஓலையில் எழுத வேண்டும் என எண்ணியிருந்ததாகவும் அதன்படி இறைவன் வந்து எழுதியதாகவும் சுவாமிகள் தம் கருத்தாகக் கூறினார்.

மாணிக்கவாசகர் பற்றி வழங்கிய கதைகளை ஆராய்ந்து முடிபு காண வேண்டும் என்ற எண்ணம் சுவாமிகளுக்கு இல்லை. மாணிக்கவாசகர் பெயராகப் பிரமராயன் எனச் சிலரும் வாதவூரர் எனச் சிலரும் கூறுவர் என்றாரேயன்றி, எது தான் பிறந்த காலத்து இடப்பட்ட பெயர் என்பதை நிறுவவில்லை. அதுபோலவே மாணிக்கவாசகர் திருமணம் ஆனவர் என்றும் ஆகாதவர் என்றும் மாறுபடக் கூறுவர் எனக் கூறினாரேயன்றித் தம் எண்ணம் யாது எனக் கூறவில்லை.

ஆனால், மாணிக்கவாசகர் குருவால் தரப்பட்ட துறவுக் கோலத்தைப் பாண்டியனைக் காணச் சென்றபோது நீக்கிப் பழைய அமைச்சர் கோலத்துடன் சென்றார் எனக் கூறப்பட்ட கருத்தைச் சில காரணம் காட்டி மறுத்துள்ளார். பாண்டியன் தந்த பீதாம்பரத்தைக் குதிரை வணிகனாக வந்த இறைவன், தன்கைச் செண்டால் வாங்கினான் என்றும் மற்றைப் புராணங்கள் கூறியதை ஏற்காமல் "யான் அதற்கு இசையேன்" (199) என்று மட்டும் கூறிப் போனார்.

இப்படியாக, முன்னோர் கருத்துகளுக்கு மாறாகவும், மறுத்தும் சில மறுக்காமலும் பாடுவதற்குக் காரணம் புலப்பட வில்லை. தமக்குத் தோன்றியவாறே பாடினார் என்பதே நன்று. கருத்து மாறுபாட்டுக் காரணம் அவர்க்கு அக்காலத்தில் மக்கள் வழங்கிய கதைகளேயாகும் எனலாம்.

மற்றைப் புராணங்கள் மாணிக்கவாசகரை மதித்துச் சிறப்பித் தமைபோலச் சுவாமிகள் சிறப்பிக்கவில்லை. ஒரு புலவன் கதையைக் கூறுவது போலவே கூறிச் சென்றார். அப்பரடிகள், ஞானசம்பந்தர் சரிதைகளையும் அப்படியே பாடிச் சென்றார்.

கோட்பாடுகள்

1. கதை சொல்லி வருவோர் கதையளவில் சொல்லிச் செல்ல வேண்டுமே தவிர, இடையிடையே தம் மனதுக்கேற்ற

கற்பனைகள் கூற வேண்டுவதில்லை என்பது சுவாமிகளின் கொள்கை போலும். மாணிக்கவாசகர் தம் திருப்பெருந்துறைக் குரு கூறியவாறே, பாண்டியனிடம், இன்னநாளில் குதிரைகள் வரும் என்று கூறினார் என்று கூறியபோது, அப்போது கண்டவர்கள் பலவாறு தத்தமக்குத் தோன்றியவாறு கூறிக் கொண்டிருந்தார்கள் எனப் பிறர் கூறுவதைத் தேவையில்லாதது என்றார். அப்படிக் கூறுவது பாடல்களை வீணே பெருக்குவதாம் என்றார்.

''இன்னநாள் பரிகள் நின்பால் எய்திடும் என்றும் யான்நின்
தன்னதாள் என்கை மாறிச் சங்கரன் அடியார்க் காளாம்
நன்னலம் பெற்றேன் என்று நவின்றனன் நகரில் கண்டார்
பன்னலும் பிறவும் பாடிப் பாத்தொகை பெருக்கல் வீணே''
(185)

என்பது சுவாமிகள் வாக்கு.

2. தில்லையில் வாழ்ந்த அந்தணர்களில் பசுக்கொலை புரிந்து யாகம் செய்யும் அந்தணர்களும், அதனை விட்டு இறைவனையே நினையும் அந்தணர்களும் இருந்திருக்க வேண்டும் என்பதும் அவர் கருத்துப் போலும் தில்லையில் புத்தகுருமார் களின் தொல்லையைப் போக்க நடராசப் பெருமான் அந்தணர் கனவில், 'மாணிக்கவாசகரைக் கொண்டு புத்தரை வெல்க' எனக் கூறினார் என்று கூறவந்த சுவாமிகள்,

''அந்தணர் பலரில் கருமமே துணையென்று
அசக்கொலை விழைவுறா தவராய்ச்
செந்தகை வடிவம் கருதி ஐந்தெழுத்தும்
செபிப்பவ ராய்ச் சிலர் கனவில்
வந்துஅரன் இவ்வூர்த் தில்லைமா வனத்தின்
மாணிக்க வாசகப் பெயரோன்
உய்ந்தருள் வலியோ டுற்றுளான் அவனால்
ஒறுக்குதிர் இவரையென் றுரைத்தான்'' (218)

என்று பாடினார்.

3. உலகப் பற்றில்லாமல் சிவபிரான் திருவடிக்கே பதித்த நெஞ்சினரான மாணிக்கவாசகர், பாண்டியன் அமைச்சராக இருந்தமையால் நாடு சிறப்பாக விளங்கியது எனக் கூற வந்த சுவாமிகள், வசிட்ட முனிவர் இருந்ததால் இராமனின் அரச சபை

சிறப்புற்றவாறுபோல இருந்தது என்றார். அதனால் சுவாமி களுக்கு ஒரு தவமுனிவர் சேர்ந்துள்ள அரசே சிறப்புறும் என்னும் கருத்துண்டு போலும் எனக் கொள்ளலாம். அம் முனிவர்க்குத் தன்னலம் இன்றி நாட்டின் நலமே குறிக்கோளாயிருக்கும் என்பது கருத்தாகலாம்.

''ஈடில்சீர் வசிட்டன் தன்னால் இராகவன் சபைவாழ்ந் தாற்போல்
கேடில்வேல் வழுதி மன்னன் கெழுவும் ஓலக்கம் பாண்டி
நாடியல் தவத்தால் முத்தி நலம்பெற உதித்த நாதன்
பீடியல் அமைச்சனாகப் பெற்றதால் பிறங்கிற் றன்றே''
(174)

என்பது சுவாமிகள் கூற்று. இராகவன் சபை என்பது தசரதன் சபை என்பதற்கு இலக்கணையும் ஆம்.

முடிப்புரை

பொதுவாகச் சுவாமிகள் நாயன்மார், ஆழ்வார்கள் போலும் சமயாசாரியர்களையும் அவர்கள் பாடிய பாடல்களால் அவர் களைப் புலவர்கள் என்றே கருதினார் என்பதும், உலகில் வழங்கிய தாம் கேட்ட கதைகளை அப்படியே நம்பியுள்ளார் என்பதும், கால ஆய்வு சிறிதும் கருதவில்லை என்பதும், கதைகளிற் காணப்படும் முரண்களுக்குக் கலைமகளும் துணை புரிந்தாள் என்னும் கருத்தினர் என்பதும் பெறப்படும்.

பயன்பட்ட நூல்

1. புலவர் புராணம், (பதிப்.) நா. மகாலிங்கம், இராமானந்த அடிகளார் அறக்கட்டளை, சின்னவேடம்பட்டி, கோவை 641 006, (1994).

திருமலை முருகப்பெருமான் பதிகங்கள்

பெ. சீதாலெட்சுமி

இறைவனைப் பாடி அவன் அருள் நாடும் இறையடியார்கள், இறைவன் கோயில் கொண்டுள்ள தலந்தோறும் சென்று பராவும் வழக்கம் பக்தி இலக்கியக் காலம் தொட்டு காணப்படுகின்றது.

ஆழ்வார், நாயன்மார்களைப் போன்றே பின்வந்த குமர குருபரர், அருணகிரிநாதர் போன்றோரும் பாடிப் பரவி, தல வழிபாட்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். அவ்வழி தண்டபாணி சுவாமிகள் பல தலங்களுக்கும் சென்று பாடும் மரபுடையராய்த் திகழ்ந்துள்ளார்.

இவர் பாடிப் பராவிய தலங்கள் நூற்றுக்கும் மேல்' அவற்றில் ஒன்று திருமலையாகும். திருமலை முருகப் பெருமான் மீது அவர் பாடிய இரு பதிகங்கள் ஈண்டு ஆய்வுப் பொருளா கின்றது.

நூலமைப்பு

இவ்விரு பதிகங்களும் எழுசீர் பாக்களால் அமைந்துள்ளன. முதற்பதிகம் ஒரு காப்பு வெண்பாவையும் எழுசீர் விருத்தத்தால் அமைந்த பதினொரு பாடல்களையும், எழுசீர் விருத்தத்தால் அமைந்த ஒரு நூற்பயனையும் உடையது.

இரண்டாவது பதிகம் காப்பு வெண்பா இன்றியும், எழுசீர் தாழிசைகளுடன் பதினொரு பாடல்களையும், எழுசீர் தாழிசையில் ஒரு நூற்பயனையும் உடையது.

பக்தி நிலை

சங்க இலக்கியத்தில் ''மடவமன்ற வாழிய முருகே'' என்று முருகன் மீது அடியவர் கொண்ட உரிமையால் எள்ளப்படு கின்றான். அதே போன்றே தண்டபாணி சுவாமிகளும் தான்

இறைவன் மீது கொண்ட ஊடலால் தாம் எழுதிய பல பனுவல் களை நீரிலும், நெருப்பிலும் இட்டு அழித்துவிட்டார். இத்தகைய பக்தி உரிமை பெற்ற சுவாமிகள் தன்னால் அழிந்த பாடல்கள் மீண்டும் கிடைத்திட வேண்டும் என்ற விருப்புடன், 'சாக ரத்தொடு தீயி லிட்டவை தந்தருட் செய் வல்லையோ?' (2:3) எனக் குறிப்பிடுகிறார்.

திருமலை முதற்பதிகம் இறைவன் எதிரில் தோன்ற வேண்டும் என்ற வேட்கையைச் சுட்டுவதாகவும், இரண்டாவது பதிகம் இறைவன் அவ்வாறு தோன்றாத நிலையில் மனம் வருந்திப் பாடுவதாகவும் அமைந்துள்ளன. முதல் பதிகத்தில்,

'தையலார் இதழ்த்தேன் பருகவே விரும்பும்
தமியேன் தனைத்தடுத் தாள
மெய்யடி யவர்தம் குழுவுடன் மயில்மேல்
விளங்கிடும் நாள் எதோ? அறியேன்' (1:3)

எனக் குறிப்பிடுவதால் அவருடைய இறைவன் தோன்ற வேண்டும் என்ற வேட்கைப் புலனாகிறது.

இறைவன் தனக்கு எதிரில் தோன்றவில்லை எனில் மலை மீதிருந்து குதிப்பேன் என்ற உறுதியுடன், இறைவனை வேண்ட, அங்ஙனம் இறைவன் தோன்றாமல் போகவே மலையிலிருந்து உருண்டார். அப்பொழுது இறைவனால் காப்பாற்றப்பட்டார். இத்தகைய பக்தி பரவச உறுதியினை,

"ஆவல் மிஞ்சிய தால்இ றந்திடற்(கு)
அஞ்சி டாமல்வி ழுந்தநான்
சேவ லங்கொடி மீதில் அன்பு
செலுத்து கின்றதும் வம்பதோ" (2)

என்ற வரிகளால் உணரலாம்.

இதுபோன்றே "நெஞ்சம் வருந்திடாது அருள் செவ்வையோ" (2:4) "நினைந்து நெட்டுயிர்ப்பு ஆகினேன்" (2:8) என்றும், "அறிவிலாச் சிறியேன் களிப்புற புரையும் நாள் உளதோ" (1:1), வந்திடாக் குறையால் மனம் மிக வருந்தினேன். (1:6) என்றும் பலவாறு கூறி இறைவனிடம் வேண்டுகிறார்.

இவ்வாறு வேண்டும்போது புலையனேன், அறிவிலேன், கொடியேன், நாயினேன் என்றும் தம்மைத் தாழ்வு படுத்திக் கொண்டு இறைவன் அருளை இரங்கி வேண்டுகிறார்.

புராண மரபுச் செய்தி

இறைவன் பெருமையைக் கூறும்போது புராண மரபுச் செய்திகளைக் கூறி வணங்கும் மரபு நாயன்மார் பாடல்கள், தேவாரம் முதலியவற்றில் காணப்படுகின்றது. தேவாரத்தில் சம்பந்தர் இராவணனுக்கு அருள் செய்தது, சோதியாய் நின்றது என்ற சிவனருள் செய்திகளைக் குறிப்பிடுகிறார். அருணகிரிநாதர் காலத்தில் முருகன், மால் மருகன், கணபதி தம்பி, சிவ பாலன், உமைபாலன் எனப் பலவாறு குறிப்பிடப்படுகிறார். அவ்வாறு உறவுநிலை குறிப்பிட்டுக் கூறும் மரபில் தண்டபாணி இரணியனின் உயிர்க்கொண்ட நரசிங்க மூர்த்தியின் மருகனே (1: 11) எனப் போற்றுகின்றார்.

நாரதர் செய்த வேள்வியில் எழுந்த ஆடு உலகை அச்சுறுத்த முருகன் அவ்வாட்டை வாகனமாகக் கொண்டு அருளினார். இதனைச் 'செந்த கர்ப்பரிமீது உலாவிய திரும லைக்கும ரேசனே' (2:5) எனக் குறிப்பிடுகிறார்.

திருஞானசம்பந்தர் தன் தந்தையின் யாகத்துக்காகப் பொருள் பெற்ற செய்தியை,

> 'மலைபி னதிதர (அ) ஈன்ற பாவைதன் வள்ள மாமுலைப்
> பாலினால்
> நிலைபெ றுந்தமிழ் பாடினானை நினைத்து நெட்டுயிர்ப்
> பாகினேன்' (2:8)

எனக் குறிப்பிடுகிறார்.

சமுதாய நிலை

சுவாமிகள் தம் காலத்தில் ஏற்பட்ட ஊன் உண்ணும் பழக்கம் கருதி அதனைப் பல இடங்களில் சாடுகிறார். இறைவன் தோன்ற வேண்டும் என்ற போதிலும்,

ஊனினை யருந்தும் கொடியர்மாண் டொழிய
ஒரு மொழி பகர்ந்திட நினைவாய் (1:7)

என வேண்டுகிறார்.

இறையடியார் மரபிலே ஆசிரியர் குறிப்பையும், இயற்கையைச் சுட்டிப் பாடுதலையும் தண்டபாணி சுவாமி பாடல் களில் காணமுடிகிறது. பண்டைய இறையடியார் மரபிலேயே தலந்தோறும் பாடும் மரபினைக் கொண்டவராய்த் தண்டபாணி சுவாமிகள் சிறப்புடன் திகழ்கிறார். பக்தி நிலையில் இறைவன் மீது தமக்குள்ள உரிமையை வெளிப்படுத்துவதில் சமயக் குரவருள் ஒருவராகிய சுந்தரருக்கு இணையாகத் திகழ்கிறார். தம் சமகாலச் செய்தியை வெளிப்படுத்துவதில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளதை இப்பதிகங்கள் உணர்த்துகின்றன.

வருக்கக் குறளில் சமயமும் சமூகமும்

வே. சீதாலட்சுமி

தண்டபாணி சுவாமிகள் இயற்றிய பனுவல்களில் ஒன்றான ‘வருக்கக்குறள்’ குறள் வெண்பாவால் இயன்றது. மிகச் சுருங்கிய வெண்பா யாப்பு குறள் வெண்பா எனப்படும். அறநூலார் தாம் கூற வந்த கருத்துக்களை எளிய முறையில் பசுமரத்தாணிபோல் படிப்பார் உளத்தில் பதிய வைக்க ஏழுசீரும், செப்பலோசையும் அமைந்த குறள் வெண்பாவைத் தெரிவு செய்தனர். தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களை அகரவரிசைப்படுத்தி ஒலிக்கச் செய்வது வருக்க நூல்களாகும். மொழி முதல் நில்லா எழுத்துக்களையும் சுவாமிகள் உயிருடன் இயக்கி ஒலிக்கச் செய்துள்ளமை புதுமை யாப்பாக விளங்குகிறது எனலாம். இந்நூற்பொருள் சைவம், சமயம் என்ற இருபா பாட்டினுள் விளக்கப்படுகிறது.

சமயம்

சமயம் என்பது இறைவனோடு தொடர்புடைய ஒழுக்க நெறியாகும். மற்றொன்று மனிதனின் ஆன்மாவைப் பக்குவப் படுத்தும் நெறி எனலாம். சுவாமிகள் உயிர்ப்பலி, கள் முதலிய வற்றை ஏற்காத சமயமும், தெய்வமுமே உயர்ந்தவை என்கிறார். சைவம் முதலாய அறு சமயங்களும் இறைவனால் தோற்று விக்கப்பட்டவை. சூரியன் முதலிய தெய்வங்களைப் போற்றும் கௌரவம், கௌமாரம் எல்லாச் சமயங்களையும் சமமாகக் கருதுகிறது. தூய ஒழுக்க, குறிக்கோளில்லாதவை இடையில் தோன்றும் சமயங்கள் நல்லவையல்ல. சைவ சமயமே யாவற்றானும் மேலானது என்கிறார். ஏனெனில்,

> ‘‘உலோகத்திலுள்ள நெறி ஒக்க நின்றே யாகும்
> கொலோர் தொழில்தீ தென்சொற் கொளில்’’

என்பதனால் கொல்லாமையைப் போற்றும் சமயமாகச் சைவம் விளங்குகிறது.

மனவுணர்வு, உலகியலறிவு, பிரணவ மந்திரங்கட்குப் பொருளாய் நிற்பவன் மெய்க்கடவுள். ஐந்தொழிற் பரனாகிய உலக முதல்வனே ஒப்புயர்விலாத முதற்கடவுள் ஆவன். சூரியனும், சந்திரனும் இறைவனுக்குக் கண்களாவர். 'ண' கரச் சுழிபோல் முக்குணங்களையுடையாரே மும்மூர்த்திகள். ''எள்ளிடத்தில் எண்ணெயென எங்கும் நிறைந்தானை'' என இறைவனது எங்கும் நிறைந்த தன்மை கூறப்பட்டுள்ளது.

வழிபாடு

நால்வகை நெறிகளும் அகப்புற வழிபாடுகளைக் குறிப்பன. மூர்த்தி, தலம் தீர்த்தமே முறையான வழியாடு. ஆகம நெறிப் படி பிரதிட்டைச் செய்த மூர்த்தங்களை வழிபடுவது சிறந்தது. உரு வழிபாடே உயர்வானது. உருத்தியானமே முக்திக்கு வழி கோலுவது. ஆலயக் கடவுளை விதிப்படி வழிபாடு செய்தால், சற்குரு தரிசனமும், உள்ளத்தில் திருவருளும் வாய்க்கப் பெறுகின்றது. எமபயம் நீக்கவல்ல மந்திரத்தை உச்சரிக்கும் இறையடியார்கள் அவ்விறைவனது தலத்தில் மரமாகப் பிறக்க வேண்டுமென விண்ணப்பிக்கின்றனர். பக்தியுடன் தலவழிபாடு செய்தால் புண்ணியம் கிடைக்கப் பெறும். ''எம்பெருமானீச னெழில் வேங்கடமலைமேல் தம்பகமாய் நிற்கும் தவ முடையனாவேனே'' என்றும், ''செண்பகமாய் நிற்கும் திருவுடையனாவேனே'' என்றும், ''இட்டபடி வருமென் றேமாந்து நாட்கழிக்கப் பட்டவர்காளல்லாம் பதர்'' என்றும் கூறுகிறார். பெண்ணாசையுடையரேனும், சற்றே இறை தியானம் இருப்பின் யாவையும் பெறுவர்.

பதிபசுபாசமெனும் முப்பொருளும் சைவசித்தாந்தக் கூறுகளாகும். செங்களினின்று நீங்கிய அநாதி முக்தனே பதி. உயிர்கள் பல. இவ்வுயிர்களைப் பீடித்துள்ளவை ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களாகும். ஆணவம் அடங்க அரனருள் கிடைக்கும். ஒருவருக்கு எல்லாத் தொழிலும் அடங்கு மாயின், அதற்கு மேலான ஆணவ மலமும் அடங்கப்பெறும். இதனை, ''அறாமல மூன்றும் அறம்பெற்றவனே பெறாநல மெய்தப் பெறும் என்பது சுவாமிகள் கருத்து.

நல்வினை, தீவினை ஆகிய கன்மங்கள் பழவினை, ஊழ் வினை, நல்லூழ், முற்பிறவி என்று வருக்கக்குறள் குறிப்பிடு

கின்றது முற்பிறவியில் செய்த தவத்துடன், இப்பிறவியிலும் நன்மை செய்தாலே இறையடி கிடைக்கும். நல்லொழுக்கமுடையார், தீய ஒழுக்கம் சார்வது ஊழ்வினைப் பயனாலேயாகும். ஊழ்வினையை வென்ற மார்கண்டேயர் வரலாறு பக்திமைக்குச் சான்றாக விளங்குகிறது. சுவாமிகள் மாயா சக்தி இறைவனது வலிமைக்கு உட்பட்டது. அவனது அருட்சக்தி பெறப்பட்ட உயிரிடத்து மாயை நீங்கிவிடும். அகங்காரம் அற்றார்க்கே முக்தியின்பம் கிடைக்கும். தூல உடலுடனே திருவருளில் ஒன்றிப்பது உண்மை முக்திப்பேறு. சிவபுண்ணியம் ஏணி போல நின்று தன்னை அடுத்தவரை நற்கதி அடையச் செய்யும். சிவக்கலப்பில் நிற்பார்க்கு அருள் விளக்கமும், ஆனந்தத் தோற்றமும் வாய்க்கப்பெறும். இதுவே உயர்ந்த பதிஞானமாகும். மெய்ஞ்ஞானியரின் அருள்திருமேனி ஒளிறுவாள் வீரர்களைக் கூட நடுங்கச் செய்தது ஞாதிருஞானம், ஞேயம் இவற்றின் உண்மையை மெய்ஞ்ஞானியர் அறிவர். இவர்கள் இரவைப் பகலாக்கவும், சாப அநுக்கிரக சாமார்த்தியமும் உலகே தமக்குத் தலைவணங்கும் பெருமிதமும் உடையவர்கள். தமது ஞானத்தால் உலக மக்களைத் தீயநெறி நின்று நல்வழிப்படுத்தியும், ஊனுணவின் கொடுமையை உலகோர்க்கு உணர்த்தி, நெறிப் படுத்தியும் அமைதலே உயர்வானது.

தவம்

மனத்தை அடக்கி ஒழுகுதலே சிரிய துறவு. புறமாகிய செல்வத்தின் கண்ணும், அகமாகிய உடம்பின் கண்ணும் உள்ள பற்றை அறவே விடுவது துறவு. இவர்க்குப் பஞ்சபூதங்களும் ஏவல் செய்யும். அட்டமாசித்திகள், பெண்களை அன்னையராய் பாவித்தல், சாபநீக்குதல், சித்தாந்தக் கொள்கைப்படி நடத்தல், சிவகாருண்யத்தை நிலைநாட்டல், கொடுங்கோலனைச் செங்கோனாக்கல் யாவும் தவசியர்க்குரியவை. "தவமும், தவமுடையார்க்காகும்" தவசிகள் இதனால் கல்வி, திருவருட்பேற்றை வலியுறுத்துவர். புலாலுண்ணலைத் தடுக்காதாரும், இம்மையில் ஒன்றைச் செய்து காட்டத் தவசியரும் செய்யும் தவம் பயனளிப்பதில்லை. 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்கிறது குறள்.

சங்கப்பாவில் கொடையும் வீரமும் அணியாய் இருத்தல்போல வருக்கக்குறள் பலி, ஊன் மறுத்தலைச் சுட்டுகின்றது. உயிர்ப் பலி ஏற்காத கடவுளே உயர் கடவுள் உயிர்க்கொலையெதிர்ப்பார் ஆசிரியர்க்கு நண்பர். கொலை, புலையார்கள் மறுபிறப்பில் விலங்குகளாய்ப் பிறப்பர். எவ்வுயிறாயும் தம்முயிராய்க் கருதுதல் நலம். "நோன்பு என்பது கொன்று தின்னாமை" என ஔவை கூறுகிறார். "எள்ளளவு இரக்கம் இருந்தாலும் போதும், என்பையும் புலால் உண்ணார், அஃதில்லாரே புலாலுண்பர்" என ஊனைத் தின்று ஊளை வளர்க்கும் இழிநெறி விளக்கப் படுகிறது.

இலக்கியத்துள் சமூகக் கூறுகள் இடம்பெறுதற்குக் காரணம் வாழ்வோடு இலக்கியத்தை ஒன்றுபடுத்தும் புலவரேயாவர். மக்கள் சமுதாயமாக வாழத் தலைபட்டபோது தமது நல்வாழ்வுக்கு ஏற்ற நெறிமுறைகளை வகுத்து வாழ்ந்தனர். இல்லற வாழ்வே அதற்கு ஆதாரமாயிற்று. அறனெனப்பட்ட வாழ்வு பிறர் பழித்தலில்லையாயின் நன்றாம். உற்றம், சுற்றம், அருந்தவர், விருந்தினர், அரசு என எல்லாக் கடமைகளையும் செவ்வனே செய்து, தூநெறிபோற்றலே இல்லறத்தார் கடமைகள். உப்பமைந்தற்ற புலவியும், கூடலும் வாழ்வில் இன்பம் பெருக்குவன. மனைவி ஊடற் கருத்தறிந்து, உண்மை அச்சம் பொருந்திய மனத்துடன் ஒழுகுதல் ஆடவர்க்கழகு. பழந்தராத இலவ மரத்திடம் பழங்கேட்டு கெஞ்சுதல் போல்வது, தன் சொற்கேட்காத மனைவியிடம் கெஞ்சுவது, மனையாட்கு அஞ்சுபவர் பூமிக்கு பாரமாவர். இல்லறக் கடமையாற்று பவனுக்கு முக்திப்பேறு கிடைக்கப்பெறும்.

மனைக்கு விளக்கம் மடவாள், மனையுறை மகளிர்க்காடவர் உயிரே என்பது தமிழர் மரபுநெறி. பெண்டிர் நாட்டின் கண்களாவும், மனையறத்தின் வேர்களாகவும் போற்றப்படுதல் உண்மை. தற்காத்துத் தற்கொண்டான் பேணித், தக்க சொற்காத்து, இல்லறம் போற்றும் மாண்புடையாள் பெண். எத்துனை உயர்வுடையயளேனும் கணவனின் கருத்திற்கிசைந்து ஒழுகாத பெண் நற்கதி அடைதல் இல்லை. தெய்வம் தொழாஅது வாழுந்தகைமையள், நளாயினி, அநசூயை போன்ற பதிவிரதை கட்கு உலகில் பெருஞ்சிறப்பு உண்டாகும். "நங்கையரிற்

கற்பினர்க்கே நானிலத்தும், மேனிலத்தும் சங்கையற்ற மேன்மை தரும்'' என்கிறார்.

பெண் கல்வி சமூக உயர்வுக்கு ஏற்புடையது என்றும், பெண் கல்வியை நிந்திப்பவர்கள் மூடர்கள், அறிவிலிகள் என்றும் குறிப் பிடுகின்றார் சுவாமிகள். ஒரு பெண்ணின் கல்வி அவளது வீடு. சமூகம் முன்னேற பயன்படும், குடும்பமாகிய மரத்தின் வேரான பெண்களின் கல்வி மேம்பாடுற்றால்தான் குடும்பம் பல்கலைக் கழகம் ஆகும். ''நாரியருங் கற்கை நலமென்றுரைக்குநர்'' என்பதாம். பாரதிதாசனும் 'பெண்கட்கு கல்வி வேண்டும் குடித்தனம் பேணுதர்க்கே' பெண்கட்கு கல்வி வேண்டும் நன் மக்களைப் பேணுதற்கே' என்று கூறுவது போற்றுதற்குரியது. ஒரு கைம்பெண் தனது மன உணர்வுகளை அடக்கியாளும் மனவுறுதி இல்லையாயின் மறுமணம் செய்துகொள்வது அவளுக்கும், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் நலம் பயக்கும் என்கிறார். 'கோரிக்கையற்று கிடக்கிறது' என்ற பாரதிதாசனின் குரலை சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

'வினையே ஆடவர்க்குயிரே' என்பதற்கேற்ப நெஞ்சுறுதியும், நேர்மையும், தீர்ந்த அறிவும், தகைசால் சான்றாண்மையும் கொண்டு தமக்கென வாழாது, பிறர்க்கென வாழும் தன்மையே ஆடவர் இலக்கணம். மன தைரியமே ஆடவர்க்கழகு, அது வீரத்திற்கு விளைநிலமாகும். வீரமும், காதலும் (அன்பும்) ஆடவரின் இரு கண்களாயின. அச்சம் வீரத்தைச் சிதைத்து நிற்கும். கற்றலாகிய அறிவுக்கண் மற்றைய ஆக்கங்கட்கு அடிப் படை. எதையும் உணரும் ஆற்றலற்ற மூடர்கட்கு கல்வி கற்பிக்க முனைந்தால் கற்பிப்பவர்கட்கே தீமை விளைப்பர். 'முதலையும் மூர்கனும் கொண்டது விடார்'' ''ஞகர மெனப்பயனில் நூல் வரிக்கு மாந்தர் இகபரத்தும் பேறான்றிலார்'' என்கிறார்.

''பிறன்மனை நயத்தல் பேராண்மையன்று'' கற்புடைப் பெண்டிரை இச்சிப்பவர்கள் பெருந்துயரைத் தழுவுவர் என்பதுண்மை. ஒருவன், ஒருத்தியென வாழாது சிற்றின்பப் பிரியராய் பரத்தையரைக் கூடிச் சுகித்திருப்பார் பெரும்பிணிக்கு ஆட்படுவர் என்பதனை, ''இழினந் தொழிலாம் இலங்கிழையார் தம்மாற், கெழீஇயார் நோய்பல் கிரி'' என்ற பாடல் உணர்த்து கின்றது. இன்றைய சமுதாயத்தை பிடித்துள்ள ''எய்ட்ஸ்''

எனும் பால்வினை நோய்க் கொடுமையை அன்றே சுட்டிக் காட்டியவர் சுவாமிகள். ஒருவன்-ஒருத்தியெனும் இல்லற தருமமே சமூக உயர்வுக்கு அடிப்படையான உயர் ஒழுக்கமாகும் என்பது சரியான சமூகநெறி.

'சான்றோனாக்கல் தந்தைக்கு கடனே' என்பதற்கொப்ப தந்தை தன் மகனை அவையத்து முந்தியிருக்குமாறு உயர்த்துதலே கடன் ஆகும். அம்மகனும் முந்தியிருக்கச் செய்த தந்தைக்குக் கைம்மாறாக நல்ல தாய் தந்தை வாய்க்கப் பெற்றேன் எனக் கொண்டு, தமது புகழால் தந்தைக்கு உயர்வளித்தல் பெருஞ் சிறப்பாகும். தமது தந்தையின் புகழ் நிழலில் வாழாது, தமது புகழைத் தந்தையின் புகழினும் மிகுத்துக் காட்டும் தயைனே உயர்வானவன் என்பதனை, 'தந்தையெனும் புகழைத் தம் புகழ்ச்சியால் மறைக்கும், விந்தையுற்றார் மானிடரில்மேல்'' என்று கூறுதலால் உணரமுடிகிறது. கொலை நிகழ்த்திப் பெறும் வேள்வியால் வரும் ஆக்கத்தினும் கொல்லாமையால் வரும் அறம் சிறிதெனினும் அதுவே சிறந்தது. வள்ளுவரும் ''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று'' என்கிறார்.

ஈகை

ஈதலறம் நில்லா உலகில் நிலைத்த புகழைத் தருவது. ஈதல் இசைப்பட வாழ்தலே உலகோர்க்கு இன்றியமையாதது. ஈகைத் தொழிலே இன்பம் தருவது. உதவி செய்யாதார் பொருள் பயனற்றது. இல்லையெனாது ஏற்றவர்க்கு ஏதாயினும் பகிர்ந் தளித்தலே மாதவம். ''ஊராக்கப் பொருளும் உடன்வாரா என்றறிந்து இரக்கமுடன் ஈதலே புகழ்தரத்தக்கது. ''கூடுவிட்டுங் காவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார் பாவிகாண் அந்தப் பணம்'' என ஈயாது சேர்த்து வைத்தபின் யாதொரு பயனும் இல்லை. புலவராற் புகழப்படும் 'கொடைக் கை' உடையானது கையேவாளன் செல்வம் பெருக்கத்தை நல்கவல்லது. மிக்க அறமே வழித்துணையாவது செல்வர் தம்பொருளைப் பிறருக்கு ஈந்து, அதன் புகழைப் பெறுதலே நலம். அல்லையேல் பதரே என்கிறார் சுவாமிகள்.

கொடுக்கிலாதானைப் பாரியே எனினும் கொடுத்தலிலாதல் பேரில, உலோபியர் பலமுறை சென்று இரந்தாலும் நல்க

மாட்டார். உலோபியர் செல்வராயினும் ஊழ்வினையால், உண்ணல், உடுத்தல் பயனை இழப்பர். தங்களைக் கொல்லத் துணியும், அரசர்க்கூடரியார். உலோபியர் மறுபிறப்பில் தரித்திரராகி உலோபியரிடத்து இரத்தலைச் செய்வர். விழுப்பம் தரும் ஒழுக்கம் உயிரினும் மேலானது. சமூக உயர்வினை ஒழுக்கமுடையாரே பெறுவர். நல்லவர் தீநெறி ஒழுகின், அது அவரது விதிப்பயனே. இலங்குநூல் கற்று ஒழுகாதார் விலங்கு கட்கு ஒப்பாவர். அற்பரால் உண்டாகும் பழிக்குப் பயந்து மெய்ப்புகழை விரும்பாதார் நல்லொழுக்கம் வாய்க்கப் பெறார். அகத்திற் கொடுமையும், புறத்தில் நன்மையும் உடைய வஞ்சகர் இப்பூமியில் உள்ளார்.

சான்றாண்மை

அனைத்து நல்லொழுக்கங்களும் உடையாரே சான்றோர். 'புகழெனின் உயிரையும் கொடுப்பர்' 'பழிஎனின் உலகுடன் பெறினும் வேண்டாத சான்றோரே திடசித்தமுடையார். பிறர் மனவருத்தத்திற்காக சான்றோர் தமது அறிவுறுத்தலை நிறுத்தார்கள். அச்சான்றோர் தன்மை மலையினும் மாணப் பெரிது. சான்றோர் அறச்செயலை விரும்புவர் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ப் பேசுவர்', "யாவர்க்குமாம் ஒரு இன்னுரைதானே" என்கிறார் திருமூலர். நன்மை செய்வதே இவர்தம் கடமை. இச்சான்றோர்கள் திருவடியைச் சுமப்பதில் பூதேவி பெருவிருப்புடையள் என்பதனை,

> "இப்பார் மகள் விருப்பம் ஈடிலரும் பேறடைந்தோர்
> மெய்ப்பாதத் துண்டே மிக"

என்று சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

அரசன்

திருமாலுக்கு நிகரான திருவுடை மன்னன், தன் குடி மக்களைத் தமீஇக் கோலோச்சுதல் கடமையாம். ஒருபாற் கோடாது, நீதி வழுவாது, நெறிமுறையுடன் ஆள்பவனே ஸ்ரீராமனையொத்த நீதிமன்னன். அறிவுடைச் சான்றோர்க்கு அஞ்சி ஒழுகுதலும், செவிகைப்ப சொல் பொறுத்தலும் மன்னனை உயர்ந்த புகழ் நிலைக்கு ஆட்படுத்தும். தவசியர்க்கு அடங்கி, மாநிலம் காக்கும் மன்னன். தன்னால், தன் பரிசனத்தால்,

கள்வரால், பகைவரால் உயிர்கள் தம்மால் துன்பம் நேராது காத்தல் வேண்டும்.

கல்வி

ஒருமைக்கும் கற்ற கல்வி எழுமைக்கும் துணை வருவது. கல்வியே அகக்கண். கசடறக் கற்றால் நற்பயன் கிடைக்கும். பெரியார் நவில்தொறும் நயந்தரும் நூல்களைக் கற்பர். தக்க கல்வியே இம்மை, மறுமைப் பயன்களை நல்குவதுடன், பிறவிக் கடலையும் கடக்கவல்லது. பக்திமையை ஏற்கும்படி கற்றலே மேலோர் குணம். 'கற்றலிற் கேட்டலே நன்று' என்பது சுவாமிகள் கருத்து. 'கேள்விப் பெரும்பயனே கேட்டற்றதென்றுணர்வார், ஆள் வித்தைக் குண்டாம் அணி' கல்வி தரும் ஆசான் வணக்கத் திற்குரியார். ஆழமான கல்வியில்லா ஆசானால் பயன் யாது மில்லை. 'பிச்சை புகினும் கற்கை நன்றே' எனக் கற்கும் மாணாக்கனது குற்றத்தையும் குணமாகக் கொள்ளும் ஆசானால் சீடனுக்கு யாதொரு பயனும் இல்லை. நூலானது பத்து குற்றங் கள் நீங்கி, எண்வகை வனப்புடன் இயைதல் நன்று. சிற்றின்பச் சுவை இலாத நூலால், படிப்பவர், கேட்பவருக்கு இனிமை தருவதில்லை. சிற்றின்பச்சுவை நூலுள் இலைமறைகாயாக கூறப்பெறுதல் நலம். இம்மை, மறுமைப் பயன் அறியாமை நீக்குவது நூலின் சிறப்பு. வள்ளுவர் குறளும், ஔவையின் மூதுரையும் யாவற்றினும் உயர்ந்தது. படிக்குங் காலத்தே தான் ஒருவர் உண்மைப்பொருளை உணர்தல் முடியும். நக்கிரர் முதலிய புலவர்களை வெல்லும் ஆற்றல் குறள் போன்ற மெய்ந்நூல் கட்கே உரியது.

> "... ... ... பொல்லா – மரத்தின்
> கனக கோட்டம் தீர்க்கு நூல் அஃதேபோல் மாந்தர்
> மனக்கோட்டம் தீர்க்கு நூல் மாண்பு"

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

கற்றார்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. பேரரசராயினும் 'கல்வி வல்ல புலவர் முன் அடங்கியே நிற்றல் வேண்டும். அறிவுடையோன்பால் அரசுஞ்செல்லும்' 'குபேர அரசனாயினும் கல்விவல்ல புலவரிடத்து அடங்கியே நிற்பர்' நூலானது தொட்டனைத்தூறும் மணற்கேணி போல கற்பார்க்கு அறிவு பெருக துணை செய்யவேண்டும். பக்குவம், சுவை பொருந்த

நூலியற்றும் புலவரே வல்லவர். அடியார்களும் அன்பினைப் பெறத் தேவர்களும் மனிதப்பிறவியை வேண்டி நிற்பர். இந்நெறியறியாத புலவர்கள், புலவர் என்ற இலக்கணமே இலாதார். இறவா இலக்கியம் படைக்கும் புலவரே புலவர். அவர்தம் நூலே உயரிய நூலாகும்.

மொழி, இலக்கியத்துடன் தொடர்புடைய நம்பிக்கைகளைச் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். முருகன் உருத்திர சன்மனாக இருந்து தமிழாய்ந்தான் என்றும், தமிழ் அகத்திய முனிவரால் தரப்பட்டது என்றும் சுவாமிகள் கூறுகிறார். காலத்தை வென்ற மதுரத்தமிழைத் தாழ்மையுடையது என்பார் புலையரே. சந்தப் பாடலுக்கு முற்றுந்துறந்த முனிவரும் அகம் குழைவர். ஏனெனில் இறைவன் ஏழிசையாய், இசைப்பயனாய் விளங்கு பவன். இயற்கோடியைந்த இன்ப வாழ்வே தமிழர் நெறி. கோரவடிவுடன் கொடுமைசெயும் பேயைக்கூட, தமிழ்மொழி தனது வல்லமையால் கெடும்படி செய்துவிடும் என்று தமிழின் உயர்வு சுட்டப்பட்டுள்ளது.

அருட்செல்வமே உயர்வுடையதாயினும், பொருட்செல்வமே இவ்வுலக வாழ்வுக்கு அடித்தளமாகும். ''அறன் கடைப்படா செல்வம், தான் தங்கியிருப்போருக்கு மிகுந்த மரியாதையை ஏற்படுத்தும். நிலையில்லா செல்வத்தின் ஆற்றல் மிகப் பெரியது கற்றாரைக்கூட சிலபொழுது செல்வந்தர்பால் நிறுத்திவிடும்.

''இரென்றிரு மென் றப்பால் இருங்களனச் செய்யும்
சரென்று பறியுந்தனம்''

என்று செல்வத்தின் சிறப்பு உரைக்கப்படும். ஊருணியின் நீர் மொள்ள, மொள்ள பெருகுவது போல நல்வோர்க்கு மனம் மகிழ்ந்து கொடுக்கும் ஒருவரது செல்வமும் பெருகும் தன்மையது.

உழவே உலகத்தார்க்கு அடிப்படையாவது, நாட்டின் வறுமையைப் போக்கி, வளம் சேர்ப்பது. பசியாகிய பிணியை நலிவடையச் செய்வது. ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே'' என மணிமேகலையும், ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று பாரதியும் கூறியிருப்பது மிக்க பொருளுடையதேயாகும். இவ்வாறு தண்டபாணி சுவாமிகள் சமய, சமுதாய நெறிகளை மிக அழகுற விளக்கியுள்ளார்.

வள்ளலார் மறைவு - சுவாமிகளின் கருத்துக்கள்

கே. சுப்பிரமணியன்

முன்னுரை

சென்ற நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட புதிய விழிப்புக்கு ஆதிகர்த்தர் என்று வள்ளலாரைப் பாரதி பாராட்டு கிறார். பழம்பெருமை வாய்ந்த பண்பாடுகளும் விழுமிய சமயக் கோட்பாடுகளும் புத்துயிர் பெற்றதற்கு வள்ளலார் பணியும் ஒரு காரணம் என வரலாற்றாசிரியர்கள் குறிக்கிறார்கள். இந்திய நாட்டில் ஏற்பட்ட சமுதாய சீர்திருத்த முன்னோடிகளில் 'மகாத்மா இராமலிங்கமும்' ஒருவர் என வெள்ளையரும் பாராட்டுகின்றனர். இத்தனைப் பெருமை பெற்ற, அருட்பிரகாச வள்ளலார் என்றழைக்கப்பட்ட சிதம்பரம் இராமலிங்கசுவாமி களைத் தமிழகம் முழுமையாக அறியாதது பெருங்குறையே.

குறிப்பாகச் சமூக, சமய, இலக்கிய வகைகளில் அவர் ஆற்றிய பணிகள் அளவிறந்தன. அவற்றைப் புறக்கணித்து அவரை வெறும் சமயவாதியாக முன் நிறுத்துவது அவருடைய உண்மையான பணிக்குப் பெருமை சேர்ப்பதாக அமையாது. அற்புதங்கள் செய்தவராகவும், மானிட எல்லையைத் தாண்டிய வராகவும் அவரைச் சித்தரித்துக் காட்டுவது அறிவார்ந்த நிலைக்குப் பொருந்தாது அத்தகைய முயற்சியே அவருடைய மறைவு பற்றிய கருத்துமாகும் அதையொட்டி ஒரு விளக்கம் தருவதாக இக்கட்டுரை அமைகிறது.

வள்ளலார் சொன்னதாக இரண்டு செய்திகள் குறிக்கப்படு கின்றன. அவர் மறைவதற்கு இரண்டு திங்களுக்கு முன்னர், தாம் வாழ்ந்து வந்த அறைக்கு முன்னால் ஒரு விளக்கை வெளியில் வைத்து அவர் சொன்னது;

"இதைத் தடைப்படாது ஆராதியுங்கள். இந்தக் கதவைச் சாத்திவிடப் போகிறேன்... நானிப்போது இந்த உடம்பி

விருக்கிறேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன்.''

30—1—1874இல் (இன்றைக்குச் சரியாக நூற்றிருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னால்) அவர் தாம் வாழ்ந்த அறைக்குள் நுழைவதற்கு முன்னால் சொல்லியது.

''நான் உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப் போகிறேன். பார்த்து அவநம்பிக்கை யடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்தால் யாருக்கும் தோன்றாது. வெறும் வீடாகத்தான் இருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார்''

இவைதாம் அந்த இரண்டு குறிப்புகள். இவற்றில் அவர் உள்புகுந்து தாழிட்டுக் கொண்டாரா, வெளியிலிருந்தவர்கள் தாழிட்டனரா என்ற குறிப்பில்லை அவர் அறைக்குள் சென்ற பிறகு நடந்தவை பற்றிப் பல செய்திகள் நம்பத்தகாதன மட்டுமல்ல கற்பனையான, உண்மைக்கு மாறானவையாகவும் உள்ளன. அவற்றுள் சில.

1. கதவை மறுநாள் திறந்து பார்த்தபோது அங்கு அவர் இல்லை.
2 ஓராண்டுக்குப் பின் கதவு திறக்கப்பட்டது.
3 சில மாதங்கள் கழித்துத் திறக்கப்பட்டது.
4. சில ஆண்டுகள் கழித்துத் திறக்கப்பட்டது.

இது கதவு திறக்கப்பட்டது பற்றிய மாறுபட்ட கருத்துக்கள். இவை ஒருபுறம் நிற்க, அவர் மறைவு பற்றிய செய்திகள்:

1. அவர் அறையுள் இறைவனுடன் சோதி வடிவில் கலந்தார்.
2. அவர் சிலரால் கொல்லப்பட்டார். அதை மறைக்கக் கற்பூரம் கொட்டித் தீயிட்டு எரித்துச் சோதியில் கலந்து விட்டதாகக் கூறினர்.
3. அவர் இயற்கையாக இறந்தார்.

இந்த நிகழ்ச்சி பற்றித் தனியே விரிவாக ஆய்வு செய்யும் வகையில் நிறைய எழுதி வைத்துள்ளனர்.

முதலில் கதவு எப்போது திறக்கப்பட்டது என்ற வினா? அவரே உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப் போகிறேன் என்று சொல்லியபிறகு 'இரண்டரை நாழிகையில்' அவர் சித்தி பெற்றார் என்று எழுதுவது எப்படிப் பொருந்தும்? கதவைத் திறந்து பார்க்க வேண்டாம் என அவர் இட்ட கட்டளையை மீறியது யார்? ஏன்? அப்படியாயின் அவர் விருப்பத்துக்கு மாறாகச் சித்தி நடந்ததா? அவருடைய மறைவைப் பற்றி விசாரிக்க அரசு அதிகாரிகள் வந்து சமர்ப்பித்த அறிக்கையில் கதவு திறந்தது பற்றிக் குறிப்பில்லை. இது ஒரு குழப்பம். சன்மார்க்க அன்பர்கள் வள்ளலாருக்குப் பெருமை சேர்ப்பதாகக் கருதிப் பலவாறு எழுதியுள்ளனர்.

இதேபோன்று அவருடைய மறைவு பற்றியும் மேற்சொன்ன மூன்று கருத்துக்கள் உள்ளன. சமயகுரவர் நால்வர் போல வள்ளலாரும் நேரடியாக, உடம்புடனேயே சோதியில் கலந்தார். மரணமிலாப் பெருவாழ்வு பெற்றார் என்று சன்மார்க்க அன்பர்கள் கூறுகிறார்கள். இதை வலியுறுத்தி ஊரன் அடிகள் ஒரு தனி நூலே எழுதியுள்ளார். ஆனால் சாகாநிலை, மரணமிலாப் பெருவாழ்வு பற்றிய கருத்துக்கள் ஆய்வுக்குரியவை. 'சாவு என்பது அரிபிரமாதிகளுக்கும் உள்ள காரியம்' என்று வள்ளற்பெருமானே எழுதியிருக்கிறார்.' 'குடம்பைத் தனித்தொழியப் புள் பறக்கும் என்பது குறள். 'எடுத்த தேகம் இறக்கும் முன் எனைக்கொடுத்து நின்னையும் காண்பேனோ?' என்று தாயுமானவர் கேட்கிறார். 'பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை' என்று வள்ளுவர் கூறுகிறார். 'பார்மீது நான் சாகாதிருப்பேன் காண்பீர்' என்று சொன்ன பாரதியும் மறைந்தார். ஆதலால் சாகாநிலை என்பது உடம்போடு முத்தியடைவதன்று என்பது தெளிவு.

அது இறவாநிலை என்பதைவிட மீண்டும் பிறவாநிலை என்பதே பொருந்தும். சாவிற்கு அஞ்சாத வீரநிலை. 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்றும் 'பிறப் பினோடு இறப்பும் அஞ்சேன்' என்றும் முன்னோர்கள் காட்டிய பாதையில் வள்ளலாரும் சென்றார். 'மரண பயத்தை விட்டொழித்தேன் எனக்கிது போதும் பண்ணிய தவம் பலித்தது' என்பது இந்த முதிர்ச்சியில் கனிந்த அருட்பா. இன்னும் இது போன்ற பல அரிய கருத்துக்களைத் தம் படைப்புகளில் பதிய

வைத்துள்ளார். அங்கெல்லாம் உடம்போடு முத்தி என்ற பேச்சில்லை. பொன்னுடம்பு பற்றிய குறிப்புண்டு. அது புன் புலால் யாக்கை பொன்னெடுங் கோயிலாகும் என்பதேயன்றி வேறில்லை.

இரண்டாவதாக, அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. அவர் சிதம்பரத்துத் தீட்சிதர்களின் வெறுப்புக்கு ஆளானவர் என்றும், அந்த வெறுப்பின் காரண மாகவே வடலூரில் உத்தரஞான சிதம்பரம் என்னும் ஞானசபை யைத் தோற்றுவித்தார் என்றும் செவிவழிச் செய்தியுள்ளது. அவர்களோ அவர்களைச் சார்ந்தாரோ அவருக்கு இறுதி செய் தார்கள் என்றும் ஒரு செய்தி.

ஆனால் வரலாற்றுக் குறிப்பு வேறாக உள்ளது. சிதம்பரத்துத் தீட்சிதர்களுக்கு வள்ளலார் துணை போனவர் என்றும், அவர்கள் தூண்டுதலால் நாவலர் பெருமானைப் பழித்துப் பேசியது தொடர்பாக வழக்கு நடந்ததாகவும் நாவலர் பெருமான் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. தவிர, அன்று மட்டுமல்ல, இன்று வரை வடலூர்த் தெய்வ நிலையங்களின் பொறுப்பு ஆடூர் சிவாச்சாரியார் என்ற அந்தணர் மரபினரிடமே இருந்து வருகின்றன. ஆதலால் அவர்கள் இப்படிச் செய்திருப்பார்கள் என்பதை நம்புவதற்கில்லை.

மூன்றாவதாக, அவர் இயற்கையாக மறைந்தார் என்ற கருத்தும் உள்ளது. மறைமலையடிகள் வரலாறு என்னும் நூலில் அவர் மகன் திருநாவுக்கரசு இதுபற்றி எழுதியிருப்பதாவது. பின்னாளில் வள்ளலார் மறைவுக்கு ஏறக்குறைய ஐம்பது ஆண்டு களுக்குப் பின்னர் வடலூர் சென்று மறைமலையடிகள் மக்களிடம் கேட்டுள்ளார். வள்ளலாருடன் வாழ்ந்தவர்கள் சிலர் அப்போது இருந்துள்ளனர். அவர் இயற்கையாக மறைந்தார் என்றும், அவர் உடம்பு இப்போது சபையில் தீபம் எரியும் இடத்தில் சமாதி செய்யப்பட்டது என்றும் கூறியுள்ளனர். இதைச் சன்மார்க்க அன்பர்கள் ஏற்க மறுத்து வன்மையாகக் கண்டனமும் தெரிவித்தார்கள்.

இந்த நிலையில்தான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடல்கள் இந்த நிகழ்ச்சிக்கு ஒரு புது விளக்கம்

தருகின்றன. தண்டபாணி சுவாமிகள் வள்ளலாருக்குச் சம காலத்தவர் என்பதோடு அவரை நேரில் பார்த்துப் பழகியவரும் ஆவார். புலவர் புராணத்தில் 'கண்கண்ட புலவர்கள்' பற்றிப் பாடியபோது வள்ளலாரை விதந்து பாடியுள்ளனர். உயிர்க் கொள்கைகளான கொலை மறுத்தல், புலாலுண்ணாமை பற்றி வியந்து பேசுகிறார்.

இவை தவிர வண்ணச்சரபம் சுவாமிகளின், அச்சில் வராத சில ஏட்டுச் சுவடிகளில் வள்ளலார் பற்றி – அவர் மறைவு பற்றிச் சில குறிப்புகள் கிடைக்கின்றன. கோவை கௌமாரமடாலயத்து ஆதீனப் புலவர் திரு. ப. வெ. நாகராசன் இவற்றைப் படி எடுத்துக் கொடுத்து ஒரு புதிய ஒளி காட்டியுள்ளார்கள். அந்தப் பாடல்களில் சில வரிகள்:

1. வடலூரான் நெஞ்சம் நோவ அநியாயம் நீசெய்
   வசை ஓர்ந்தும் வாழ்த்தும் என்றன்
   இடர்தீர் தரச்செய்வாய் கொல் அவனொடு சேர
   என்னையும் கொல்வாய் கொல் அறியேன்.

2. செய்யமால் வரை நேர் இருமகர்ப் பயந்தும்
   தெரிதமிழ் உணர் வடலூரரக
   வையநிந்தனையுள் படச்செய்தாய் நொந்தேன்
   மறுத்து அவன்வரின் அலால் மகிழேன்

3 அழுது நெக்குருகிய வடலூரானை
   அறையினுள் புகவைத்தாய்

4. வீறுசொற் சாரம்நன்கு ஓர் வடலூரான்
   வெற்றறையில் புகல் மேதினி முற்றும்
   கூறுவதால் உமதாம் இசைப் பேரும்
   குன்றுவ தோர்ந்து கொதித்துளன்.

5. நண்ணும் வடலூர்ப் புலவோனை
   நகுவார் பலரும் நாணமுறப்
   பண்ணும் திறம் நல்கிடும்வரை நின்
   பதமும் கதியும் பாழ் அன்றோ?

6. கவலுற் றழுத வடலூரான்
   கருதும்பயன் ஈந்திலை கொன்றாய்

7. இருமகர்ப் பயந்த நீதான்
இயற்றமிழ் வடலூரானை
அருமையிட்டு ஆண்டு கொள்ளாது
அழிக்கில் ஓர் அவதூறு அன்றே.

8. தருமசேனனை நால்வரில் ஒருவனாய்த் தடுத்தாள்
கருணை நம்வடலூரனைக் கழித்தது முறையோ.

9. வலுத்த பயன் கேட்டு அடையாதே
மறைந்த வடலூரான்

10. சுந்தரன் சொற்கவி இனித்த செவிகளுக்கு
வடலூரான் துதித்த பாடல்
செந்தமிழ் கைத்தமை கருதித் தியங்குறும்.

11. மாயிரும் பூதலத்தோர் விழிகாணுற
வடலூரவன் முதலாம்
ஆயிரம்பேர் எழுந்தின்புறச் செய்யும் மெய்
அருட்பெறருள் வாயோ.

12. வஞ்சக் கலியன் தன்னைப் பொருளா
மதியா வலிசால் வடலூரால்
நெஞ்சக் கவலை தீரா துற்றீர்

13. அந்நாள் நீ ஆண்டுகொண்ட நால்வர் தம்மில்
ஆரேனும் உனதருட்பே றடையா முன்னே
இந்நாளை வடலூரான் தனைப்போன் றியார்க்கும்
இதம் செயல் வேட்டு அருந்தமிழ்ப் பாட்டு
இசைத்ததுண்டோ
முந்நான்கு நெறியோரும் தொழும் ஆமாத்துந்
முதல்வா என்றனையும் வம்பில் மோசம் செய்யேல்

14. தந்தி முகத்தோனைக் குகன் தன்னை நல்கிய நீ
நொந்திறைஞ்சும் வடலூர் அவன் அணுங்கச்
செய்தல் நன்றோ?

இவை சில பாடல்களின் சில வரிகளே. இவற்றிலிருந்து கீழ்க்கண்டவற்றை உய்த்துணரலாம்.

வடலூரார் வெற்றறையில் நம்பிக்கையுடன் நுழைந்தார். அந்தப் நம்பிக்கை தகர்ந்தது. இறைவன் கைவிட்டான். அவர்

நெஞ்சக் கவலையைத் தீர்க்கவில்லை; மோசம் செய்தாள். வடலூரார் மனம் அணுங்கச் செய்தான். நொந்து இறைஞ்சியும் அருள் காட்டவில்லை. சுந்தரர் பாடல் இறைவன் செவிக்கு இனித்தது; வடலூரார் பாடல் கசந்தது. அவர் மனம் நோகுமாறு அநியாயம் செய்தான். அழுது நெக்குருகி அறைக்குள் புகுந்தார் புகவைத்தது இறைவன். அந்த வெற்றறையில் அவர் இயற்கையாகக் காலமானார். வடலூரார் கருதிய பயன் கிடைக்கவில்லை. இறைவன் அவரைக் கொன்றான். அழித்தாள். இதைக் கேட்டு உலகம் வடலூராரை நிந்தித்தது; பலர் எள்ளி நகையாடினர். அவர்கள் வாயடங்குமாறு அவர் எழுந்து வருவார் என மக்கள் எதிர்பார்த்தனர். அப்படி வரவில்லை என்றால் இறைவன் திருப்பெயர் குன்றும்; புகழும் குறையும் எனத் தண்டபாணி சுவாமிகள் கருதினார். ஆனால் அது நிறைவேறவில்லை. வடலூராருடன் ஆயிரம் பேரும் எழுந்து வருவர் என்று நினைத்தது மோசம் போயிற்று. வடலூராரைக் கொன்றது போலத் தம்மையும் இறைவன் கொல்வானோ?

இவையே மையக் கருத்துக்கள் செத்தாரை எழுப்பலாம் என்று வடலூரார் கூறியதைக் கேட்டு, சுற்றூர் மக்கள் ஆயிரக் கணக்கில் பிணங்களைக் கொண்டு வந்து வடலூரில் போட்டனர். 'இது ஒரு ஏமாற்று வேலை; ஒரு கொள்ளைக் கூட்டம் பணம் சம்பாதிக்கச் செய்யும் சூழ்ச்சி' என்று வள்ளலாரின் எதிரணியினர் மட்டுமல்ல, வெள்ளையரும் குற்றம் சாட்டினர். வள்ளலார் மனம் ஒடிந்து மக்களை எச்சரித்தும் உள்ளார்.

ஆனால் எல்லாரும் எதிர்பார்த்தது போலச் செத்தார் எழவில்லை. வள்ளலாருக்கும் அந்த நிலை ஏற்பட்டது. அவரும் மீண்டு வரவில்லை. இந்த உண்மையைத் தான் தண்டபாணி சுவாமிகள் பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன. சுவாமிகள் கையாண்டுள்ள கடுமையான சொற்கள்–'அநியாயம் செய்தாய்'– 'கொன்றாய்'– மோசம் செய்தாய் – 'வைய நிந்தையினுள் வடலூரான் படச் செய்தாய்' – 'அழித்தாய்' – என்பன எதிர்பார்ப்பு ஏமாற்றமான உண்மையினைக் காட்டுகின்றன. மறைமலையடிகள் கூற்றுக்கு இவை ஆதாரமாகவும் உள்ளன.

வள்ளலார் இயற்கையாக இறந்தார் என்பது இப்படி உறுதிப்படுகிறது. நேரில் இருந்தவர் கூறிய பாடல்கள் இவை மானிடதேகம் மண்ணாகும் சரக்கு; அது உதிர்வது இயற்கையே. இது முடிந்த முடியன்று. வேறு சான்றாதாரங்கள் கிடைப்பின் இது மாறவும் கூடும்.

திருவையாற்றுப் பதிகமும் முருகன் மும்மணிக் கோவையும்

கோ. சுப்பிரமணியனார்

முன்னுரை

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய சிவபரம்பொருள் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவத்தலங்கள் தமிழகத்தே ஆளப் பரியன. அதனில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர், அருணகிரியார் போன்ற அருளாளப் பெருமக்களாற் பாடப் பெற்ற 276 ஸ்தலங்களில் மிக்க நலப்பாடுடைய தலம் "திருவையாறு" என சான்றோர் பலராலும் போற்றப் பெறுவதுண்டு.

திக்கெலாம் புகழும் திருவையாற்றில் கோயில் கொண் டெழுந்தருளியுள்ள அருள்மிகு அறம் வளர்த்த நாயகியுடனுறை ஐயாற்றெம்பெருமானைப் போற்றிப் புகழாத புலவர் பெருமக்கள் எவரும் இலர். பட்டினத்தார், தாயுமானவர், ஐயடிகள் காடவர்கோன், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜ சுவாமிகள் போன்ற சித்தர் முத்தர் கணத்தாருள் நம் வழிபாட்டிற்கும், போற்றுதலுக்குமுரிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும் ஒருவராவார்.

பதிகம்

பதிகம் என்பது ஆசிரிய விருத்தம், அல்லது கலிவிருத்த வகையால் நான்கடி முதல் எட்டடி வரை வைத்து பத்துப் பாடல்களின் பாடப் பெறுவதாகும். இதனை இருபது பாடல் களில் அமையப் பாடப் பெறுவதும் உண்டு. தேவாரத் திருமுறைகள் முழுதும் பத்துப் பாடல்கள் உடமை கருதியே ப (த்) திகம் எனும் பெயர் பெறுமாற்றை யறிவோம்.

அம்முறையில் ஐயாறமர் பெருமான் மீது இன்றைக்கு 100 ஆண்டுகட்கு முன் சிறந்த கவிவளவராகத் திகழ்ந்த வண்ணச்

சரபம் தண்டபாணி சுவாமிகள் "திருவையாற்றுப் பதிகத்தை"ப் பாடியுள்ளார்கள் என்றால் அது நாம் பெற்ற பெரும் பேறென்றே சொல்ல வேண்டும்.

திருவையாற்றுப் பதிகம்

"அப்பிருந்த செஞ்சடையார் ஐயாற் றடியவர்தாம்
ஒப்பிஎனைத் தங்கள் உடன்சேர்க்கச் – செப்பும்
பதிகம் தரவருவார் பாசாங் குசனும்
விதிகம் தகர்த்தவனு மே". (காப்பு)

கங்கையைச் சடையிலணிந்துள்ள ஐயாற்றடிகள் தாம், மனமொப்பி என்னைத் தம்முடன் சேர்த்துக்கொள்ள விரும்பியே சொல்லும் பதிகப் பாமாலை தர தான் மட்டுமல்ல, பாசம், அங்குசம் இரண்டும் கொண்டு விதியைத் தகர்க்கவல்ல விநாயகப் பெருமானுடன் வருவார்.

முதலடியில் ஐயாற்றடிகள்தாம் என்ற தொடர் ஐயாற்றெம் பெருமானைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமானாருடன், வரும்பொழுது காவிரியாற்றின் வெள்ளம் கரைபுரண்டோடுவது கண்டு அக்கரையிலிருந்தபடியே "பரவும்-பரிசொன்றறியேன் ... ... காவிரிக் கோட்டத்தையாருடைய அடிகளோ" என விளித்த சொற்றொடரே அமைந்தாற் போலுள்ளது ஓர் அருமை.

நூல்

'தங்கநெடுவரைதாங்கித் தருவர்புரம் ... ...'(1)

'குறைபடுபுன் பொருளாளர் மனைவாயிற்
படிதோறும் குறுகி ஏற்று
நிறைபடுமெய் யுணர்விலரில் தடுமாற
என்னைவிடல் நீதி தானோ.
தறைபடுதிண் திறல்புழைக்கைக் கரிஉரித்துப்
போர்த்தாடு தகைஉள் ளானே
சிறைபடுநீர் வயல்சூழும் திருவையா
றதனில்வளர் சிவபி ரானே' (2)

இரண்டாவது பாடலில், "நீர் வயல் சூழ்ந்த திருவையாறதனில் வளர் சிவபிரானே! தன் வாழ்க்கையில் அற்பச

செல்வர்களின் வீட்டு வாயிற்படிகள் தோறும் ஏறி இறங்கி, ''பல்லெல்லாந்திறந்து காட்டி பருவரல்முகத்தில் கூட்டி சொல் லெல்லாம் சொல்லி நாட்டி'' கூனிக் குறுகிக் கூசி மெய்யுணர் வின்றி எனைத்தடுமாறவிடல் நீதிதானோ'' எனப் பாடுவார்.

முருகன் மும்மணிக் கோவை

திருவையாற்றில் ஐயாறப்பர் திருக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தே கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தண்டபாணி மீது இந்நூலைப் பாடியுள்ளார்கள், இடையே ஐயாறப்பர் ஆலயத்துள்ளே அமைந்துள்ள (வில்லேந்திய) வேலவனையும் பாடியுள்ளார்கள்.

மும்மணிக் கோவை என்பது முத்து, பவழம், மரகதம் எனும் மும்மணிகளைக் கொண்டு வரிசையாக கோர்த்து முருகனுக்கு அணிவிக்கும் மணிமாலை போன்று, ஆசிரியப்பாவும், வெண் பாவும், நேரசையும் நிரையசையுங் கொண்டு எழுத்தெண்ணிப் பாடுங் கலித்துறையும் முறைமுறை தொகை முப்பதுபெற அடுக்கி அந்தாதித் தொடையாற் பாடுவது மும்மணிக் கோவை யாம்.

மும்மணிக் கோவையின் இலக்கணம்

''அகவல் வெண்பா வசையெண் கலித்துறை
தொகை முப் பதுபெறச் சொற்றொடர் நிலையிற்
கூறுதல் மும்மணிக் கோவை யாகும்''

என்பது இலக்கண விளக்கம் பொருளதிகாரம் பாட்டியல் – சூ. 55

பிரபந்த வகையில் கோவை என்பதும் ஒன்று. அகப் பொருள்பட ஐந்திணைப் பொருட்களைக் கொண்டு தலைவன், தலைவியரை வைத்துப் பாடப்பெறும் ''கோவை'' இலக்கியம் வேறு. இக்கோவை வரிசை எனும் பொருளில் அமைந்த ஒன்றாகும்.

சுவாமிகள் இளமையிலேயே முருகன் திருவருளைப் பெற்றவர். இளம் வயதிலிருந்தே வடலூர் இராமலிங்க வள்ளல் போன்று முருகன் மீது பாமாலை பாடும் அருள் ஞானம் பெற்றார். சமரசவாதியாகப் பல ஊர், பல கடவுளரைப் போற்றிப்

பாடியிருந்தாலும், முழுக்க முழுக்க அவர் முருகப்பெருமானின் புகழ் பாமாலைகளையே நிறைய பாடியுள்ளார். அம்முறையில் திருவையாறு வந்திருந்த சமயம் ஐயாற்றுத் திருக்கோயிலில் நூற்றுக்கால் மண்டபத்தே கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தண்டபாணியையும் வில்லேந்திய வேலவரையும் மும்மணிக் கோவையாகப் பாடியுள்ளார். இவரது உபாசனா மூர்த்தி தண்டபாணி என்பதனை, இவர் தன் பெயரைத் தண்டபாணி சுவாமிகள் என்றும், அவரது சமாதி பீடத்தில் தண்டபாணி பிரதிட்டையும் கொண்டு நம்மால் நன்கு அறிய முடிகிறது. நூலின் எடுப்பே மிக நன்றாக அமைந்துள்ளது.

அண்டர்புகழ் ஐயாற் றயில்வேற் குமரனுக்கு
வண்டமிழ்ப்பா வால்மும் மணிக்கோவை – தொண்டர்
அளிகூரப் பாடுவதற் கானதுணை கூறில்
களிறா னனத்தான் கழல்.

விநாயகப் பெருமான் திருவருள் துணை நாடி நூலை நேரிசை ஆசிரியப்பாவில் ஆரம்பிக்கின்றார்.

"அருள்வலி யினர்வளர் ஐயாற் நறம்பொற்
பொருள்வள மலிதரு பொற்புடைக் கோயிற்....
தென்முகம் நோக்கித் திகழ்தரு குகனே
என்முகம் வாட ஈனர்தம் மொடுபோய்
நின்பெயர் கருதியும் நின்றிரத் தலுத்தேன்
கன்பெனக் களித்தாண் டடியவ ரொடுசேர்த்
துலவரும் துயர்ஏலாம் ஒரீஇக்
குலவுமெய்ப் புகழ்க் கடல் குளித்திடப் பணியே."

திருவையாற்றுத்திருக்கோயிலின்கண் (நூற்றுக்கால் மண்டபத்தே) தென்முகம் பார்த்து விளங்கும் குகா! – தண்டபாணியே! என் முகம் வாடும்படி அற்பர்களிடம் உன் புகழ் பரப்புதற்காகச் சென்று சென்று அலுத்துவிட்டேன் – நல்லடியாரோடு சேர்ந்து எனது துயரெலாம் போக்கிப் புகழ்கடலிற் குளிக்கப் பணித்திடு வாயாக. மேலும் அடுத்து நான்காவது பாடலில்,

"தண்டமும் கீளும் தனிக்கோ வணமும்
குண்டலக் காதும் குலவுவெண் ணீறும்
கண்டியும் துலங்கக் காட்சிதந் தருளி
எண்டிசை புகழ்சீர் இசைத்திடற் கிரங்காய்
அளப்பரும் தொல்சீர் ஐயாற் றமலன்.

என ஐயாற்றுத் தண்டபாணியின் அருட்கோலத்தை உள்ளது உள்ளபடியே அழகுற படம்பிடித்துக் காட்டுகின்ற அருமையே அருமை.

''சேயமுகம் ஆறுடைய சிற்பரனே ஐயாற்றின்
மேயவர்கள் போற்றிசைக்கும் வேலோனே – நீயலதிங்
காரைக் கருதுகின்றேன் அந்தோநின் மெய்யடியார்
சீரைஎனக் கின்றருளிச் செய். – 20

அத்துடன் ஐயாற்றுத் தண்டபாணி திருக்கோயிலின் எதிரில் பழனி போன்றே மயில் மண்டபம் ஒன்றுண்டு – அதில் அம்மயில் எப்படி இருக்கின்றதோ அப்படியே புகைப்படம் எடுத்துக் காட்டுமாப் போல,

''அணிகிளர் திருவை யாற்றுக் கோவிலிற்
பணிமிசை நடம்பயில் பைம்பொற் கலாபி
எதிர்உறக் கண்டும் இருபதம் வருந்தக்
கதிர் – நெடுங்/தண்டம்/கவின்தர ஊன்றிச்
சிறுநகை பரப்பித் தென்திசை நோக்கி
அறுவகை எழுத்தால் அருள்நெறி விளைக்கும்
குருபரக் குகன்எனக் கூறும்
ஒருபெயர் புனைந்தாங் கொளிர்தரு மன்றே – 25

மும்மணி மாலை என்பதற்குச் சான்றாக ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய முப்பாடல்களினால், அந்தாதித் தொடையில் அமைய முப்பது பாடல்கள் பாடிய பாங்கினைப் பார்த்தோம், சான்றாக மேலும், இன்றும் ஐயாற்றுத் திருக் கோயிலில் யானை இருக்கிறது; அன்றும் இருந்துளது போலும் அது வீதி உலா வரும். அதனைக் கொண்டு பாடுகிறார்.

முடிவுரை

பொதுவாக தெய்வப்புலவராகிய அருள்தரு தண்டபாணி சுவாமிகள், தாம் பாடியுள்ள நூற்பாக்களில் தாம் இவ் வுலகியலில் செந்தமிழ்ப் பாமாலைகளை பிற்காலத்துச் சந்ததியினர் பயிலாது போய்விடுவரோ – நம் பாமாலைகள் எவராலும் பாராது அவமே போய்விடுமோ என்ற ஆதங்கம் – உள்ளக் குமைச்சல் நாளும் வாட்டியுள்ளது. பெருமானின் புகழ்

நூலைப் பரப்பற்குரிய வள்ளல்கள் எவரும் கிடைக்க வில்லையே! இதுவும் உன் கருணை தானோ. பாடச் செய்தவனும் நீதானே! இதனை எவரும் ஏற்க முன்வாராதவர்களை செய்ப வனும் நீதானே! பொருளுக்கு ஏக்கற்று அற்பர்களிடமெல்லாம் சென்று இரக்கச் செய்தாயே. இந்த இழிவு உனக்குத் தானே - இது உனக்கே நன்றாக இருக்கிறதா. இனி, 'இருந்தென்ன போயென்ன' - என உளம்நொந்து தன் வேதனையின் உச்சக் கட்டத்தில் பல நூல்களை அனலுக்கும் புனலுக்கும் இறை யாக்கினார். கருணைக் கடலே நம்மை ஒரு பொருட்டாக கருதி எழுத வைத்துள்ளவன் நீ. என்னை ஏற்றம் பெறச் செய்வதும், ஏமாற்றம் பெற இழிவு பெறச் செய்வதும் உன் நாடகமே எனப் பல இடங்களில் அங்காலாய்க்கிறார் புலவர் பெருமான்.

அறுவகை இலக்கணக் கோட்பாடு

பெ. சுயம்பு

தண்டபாணி சுவாமிகள்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839—1898) திருமுருகன்பால் ஆழமான பக்தி மிக்க கவுமாரர். சந்தப்பாடல்கள் பாடுவதில் சரபம் போன்று தன்னேரிலாது விளங்கியமையால் வண்ணச்சரபம் என்ற சிறப்புப் பெற்றவர். அருணகிரிநாதரின் அவதாரமாகக் கருதப் பெற்றவர். திருமுருகப் பக்தியும் அருணகிரி யார்பால் ஈடுபாடும் முருகதாசர், தண்டபாணி சுவாமிகள், திருப்புகழ்ச் சுவாமிகள் என்ற சிறப்புப் பெயர்களைத் திருநெல்வேலிச் சங்கரலிங்கம் பிள்ளையாகிய இவருக்கு ஈட்டின.

தன்வரலாறு, வாழ்க்கை வரலாறு, முத்தமிழ், சமயத் தத்துவம், சிற்றிலக்கியம், இலக்கணம் என்று பல்வேறு துறை களில் நூறாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றி, அவற்றுள் பலவற்றைத் தீயிலும் நீரிலும் இட்டு அழித்ததாக இவர் கூறுகிறார். எஞ்சிய சுமார் ஐம்பதாயிரம் பாடல்களுள், அறுவகை இலக்கணம் புதிய இலக்கண நெறிகளைத் தமிழில் விவரிக்கிறது.

விளக்க நெறி

அறுவகை இலக்கணம் தமிழ் இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புலமை எனும் அறுவகையாக அணுகுகிறது. முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றுகிற முந்தைய நூல்களின் நெறியை இந்நூல் ஏற்க வில்லை. எனவே இதிலுள்ள சூத்திரங்கள் யாவும் புதியதாக இயற்றப்பட்டுள்ளன.

நவநூலொன் றெழுநூற்றெண் பத்தாறு
சூத்திரத்தால் நவின்றிட் டேனே (பாயிரம் 10)

நூலமைப்புத் திட்டத்தில் அறுவகை இலக்கணம் ஏனைய நூல்களினின்றும் வேறுபடுகிறது. பெரும்பிரிவுகள் ஆறும் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம், புலமையிலக்கணம் என்று சுட்டப்படுகின்றன. அதிகாரம், படலம் போன்ற பெயர்கள் சூட்டப் பெறவில்லை. உட்பிரிவுகள் இயல்பு என்றும் நிலை என்றும் கூறப்படுகின்றன. இயல்பு, நிலை எனும் பெயர்கள் நூல்களின் பகுதிக்குப் புலவர்களால் இடப்பெறும் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். எனினும் இப்பெயர்கள் முந்தைய நூல்களில் காணப்பெறவில்லை.

> நூல்களின் பகுதிகட்கு அதிகாரம் என்றும்
> இயல்புஎன்றும் உருவகம் என்றும் பின்னும்
> இசைந்தவாறும்பெயர் இட்டனர் புலவோர் (525)

தொல்காப்பியம்; நன்னூல், இலக்கண விளக்கம் போன்ற வற்றில் ஒன்பது; ஐந்து எனச் சீராக அதிகாரம் தோறும் உட்பகுதிகள் உள்ளன. ஆனால் இந்நூலில் 3, 4, 11, 7, 5, 4 எனச் சமமின்றிக் காணப்படுகின்றன.

வரைவிலக்கணத்தை விதிகளாக்கிக் கூறுகின்ற முந்தைய நெறிக்கு இந்நூலில் முன்னுரிமை தரப்பெறவில்லை. மாறாக, எடுத்துக்காட்டுகளின் வாயிலாக வரைவிலக்கணத்தை உய்த்துணர வைக்கின்ற புதிய பயிற்சி நெறி பரவலாகப் பின்பற்றப்பட்டுளது.

> வந்தேன் இருந்தேன் என்பவை முதலின
> நன்வினை ஆமெனச் சாற்றுதல் வழக்கே (207)

> நானவும் தய்யவும் தன்னவும் பிறழ்வன
> அனைத்தும் அலிப்பால் ஆம்எனல் முறையே (463)

வரைவிலக்கணம் என்ற நெறியே மாணாக்கரை மயக்கி, இலக்கணத்தில் நாட்டம் குன்றச் செய்திருக்க வேண்டும் என்று கருதி, மொழிப் பயிற்சி நெறியின் முதன்மைக் கூறாகிய எடுத்துக் காட்டி விளக்குதலைத் தண்டபாணி சுவாமிகள் தம் நெறியாக ஏற்றிருக்கலாம். ஆயினும், இந்நூல் தமிழ் மொழியைக் கற்பிக்கிற அமைப்பிலக்கணமாக அமையாது, ஆசிரியரின் புதுமை காட்டுதல் என்ற தன் முனைப்பின் வெளிப்பாடாக பல்வேறு செய்திகளைச்

சுட்டுகின்ற களஞ்சியமாகக் காணப்படுகிறது. இதனால் இந்நூல் சிறந்த மொழிப் பயிற்சி இலக்கணமாகவும் அமையவில்லை.

செய்திகளைத் தெளிவாகப் புலப்படுத்துவதில் இந்நூலாசிரியர் பல முறைகளைக் கையாள்கிறார். எளிய சொற்களாலாகிய பழகுதமிழ் நடை, உவமை, வரலாற்றுக் குறிப்பு, செவிவழிச் செய்தி போல்வன அவற்றுள் குறிக்கத்தக்கன.

விரிவான செய்திகளுக்காகவும் கருத்து விளக்கத்திற்காகவும் சேந்தன், காங்கேயன் ஆகியோர் யாத்த நிகண்டுகளையும் திருக்குறள். திருமுருகாற்றுப்படை, தேவாரம், திவ்வியப் பிரபந்தம், கந்தரந்தாதி, விநாயகர் அகவல் போன்ற நூல்களைப் படிக்குமாறு பரிந்துரைத்தலை இந்நூலில் காணமுடிகிறது.

அறுவகை இலக்கணம் விவரிக்கின்ற இலக்கணக் கோட்பாடுகள் புதியனவார் உள்ளன.

எழுத்திலக்கணம்

எழுத்திலக்கணம் உருவோசை இயல்பு, நிலை இயல்பு, புணர்ச்சி இயல்பு எனும் மூன்று பகுதிகளில் விவரிக்கப்படுகிறது. எழுத்துக்களின் ஒலிப்பு முறையைப் போன்று அவற்றின் வரிவடிவங்களும் விரிவாக எழுதிக் காட்டப்படுகின்றன. மேலும், சொல்லுக்கு உறுப்பாதல் எனும் அளவில் அமையாது, எழுத்துக்களின் வரிவடிவம் எண், அளவுப் பெயர்களின் குறியீடாக அமைதலும் சொற்கள் அல்லது தொடர்கள் சிலவற்றுக்குச் சுருக்க எழுத்தாக அமைதலும் எழுத்தின் இலக்கணம் எனக் கொள்ளப்பட்டு, உருவோசை இயல்பில் விவரிக்கப்படுகின்றன.

எழுத்துக்களின் மாத்திரைப் பட்டியல், உயிர்மெய் ஆக்கம், அவற்றை இனங்களாகத் தொகுத்தல், ஒவ்வோர் எழுத்துக்கும் உரிய தெய்வம் என்பன முறையே ஒலி நிலை, இயங்கு நிலை, இனநிலை, தெய்வநிலை என்னும் பிரிவுகளில் இடம்பெற்றுள்ளன. சுட்டு, வினா, எதிர்மறைப் பொருள் உணர்த்தும் எழுத்துக்களைத் தன்மை நிலை சுட்டுகிறது. இவை யாவும் நிலை இயல்புச் செய்திகளாகும்.

புணர்ச்சி இயல்பு விதியோடு உதாரணங்களையும் சுட்டிக் காட்டுகிறது. சுட்டெழுத்துப் புணர்ச்சி, உடம்படுமெய் போல்

வனவும் குணசந்தி, தீர்க்க சந்தி எனும் வடமொழி விதிகளும் சுருக்கி இங்கு விளக்கப்படுகின்றன. மெய்ம்மயக்க விதிகள் புணர்ச்சிக்கு உரியனவாக இந்நூலில் கொள்ளப்படுகின்றன.

சில செய்திகள்

1. உயிர், ஆய்தம், ஒற்று, உயிர்மெய், அலகு, கூட்டு, குறிப்பு என்று எழுத்துக்கள் ஏழாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. முதல் சார்பு என்ற பகுப்பு இடம் பெறவில்லை (2)

2. அலகு எழுத்துச் சில:

   ண = கீழ் முந்திரி $\left(\frac{1}{102\ 400}\right)$. ள = ஒரு மா $\left(\frac{1}{20}\right)$

   ரு = ஆயிரம் (1000)

3. குறிப்பு எழுத்துச் சில:
   உ = விநாயகச் சுழி. + = விடுதல் (46)

4. குறில், நெடில், நடு என்று மூன்றாக உயிரெழுத்துப் பகுக்கப்படுகிறது. ஐ, ஔ இரண்டும் ஒன்றரை மாத்திரை ஒலிப்பனவாகக் கொள்ளப்பட்டு, குறிலுக்கும் நெடிலுக்கும் நடு எனப்படுகின்றன (7–13, 60)

5. ஆய்தம் இடையினத்தோடு சேர்க்கப்படுகிறது (92)

6. வல்லினம், மெல்லினம், இடையினம் முறையே ஆண்பால், பெண்பால், அலிப்பால் எனக் கூறப்படுகின்றன (94)

7. அ + இ > எ, அ + உ > ஒ (67, 68)

எழுத்தறிவு பெற்றவர்க்கே இலக்கணம் புரிந்து கொள்ள வல்லது இந்நூலாசிரியர் துணிபு.

> உருவும் ஓசையும் உணராற்கு ஒருநூற்
> பயனும் எய்தா ... ... (6)

வரிவடிவத்தையே எழுத்து என இவர் கருதுகிறார். இக்கொள்கை 'எழுதப்படுதலின் எழுத்தே' என்ற முந்தைய கருத்தைத் தழுவியதாகும். எழுத்துக்களை எழுவகைப்படுத்துதல், அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே எழுதுகிற முறையை உதாரணத்துடன்

விவரித்தல், முதல் சார்பு என்ற பகுப்பின்மை சொற்களில் இன்னின்ன எழுத்து முதல், இறுதியில் வரத்தக்கன என்று சுட்டாமை, புணர்ச்சியில் அல்வழி வேற்றுமை என்ற பகுப்பின்றி, மெய்ம்மயக்கங்களை மட்டுமே கூறுதல் போல்வன வரிவடிவமே எழுத்து என்ற கொள்கைக்கு அரணாகின்றன. பிழையின்றி எழுதுதல் எனும் அளவில் புணர்ச்சி விதி அமைந்துளது.

தெய்வ நிலை, ஆண், பெண், அலி என்ற பால் பகுப்பு, வடமொழிச் சந்தி ஆகியன காவியம் எழுதவல்ல புலவர்களுக்குப் பயன்படுமாறு கூறப்படும் செய்திகளாகும். எனவே கற்றுவல்ல புலவர்களுக்குப் பயன்படும் வகையில் எழுத்திலக்கணம் அமைந்துளது எனலாம்.

சொல்லிலக்கணம்

சொல்லிலக்கணம் நான்கு இயல்புகளை உடையது. பொதுவியல்பில் சொல்லின் வரைவிலக்கணம், பேச்சு மொழியில் வழங்குகிற சில மரூஉச் சொற்கள், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் உரிய சொற்களின் இயல்பு ஆகியன கூறப்படுகின்றன.

பிரிவியல்பு சிலவகைப் பெயர்கள், வினைகள், உரிச்சொல்-இடைச்சொல் பற்றிய குறிப்புகளைத் தருகிறது.

சார்பியல்பு சொற்களைச் சார்ந்து வருகின்ற சில இடைச் சொற்களையும் இலக்கியங்களில் இடம்பெறுகின்ற மங்கலச் சொல்லின் அமைப்பு, பாட்டுடைத் தலைவனோடு மங்கலச் சொற்குள்ள பொருத்தம் ஆகியவற்றையும் அசை, சீர், தளை அமைப்பினையும் உதாரணங்களின் வாயிலாகக் கூறுகிறது.

இறுதிப் பகுதி திரிபியல்பு. இதில் மரூஉ மொழி, அன்மொழித் தொகை, ஆகுபெயர், செய்யுளில் இடம்பெறுகிற மூவிடக் குறைச்சொற்கள், தன்மையிலும் படர்க்கையிலும் வழங்குகிற சில விகுதிகள் ஆகியன கூறப்படுகின்றன.

சொல்லிலக்கணத்தில் சில செய்திகள்

1. சொல் எனல் எழுத்துத் தனித்தும் சிற்சில புணர்ந்தும் வருவன (167)

2. இயல், இசை, நாடகச் சொற்கள் முறையே கறுப்பு, சிவப்பு, வெள்ளை நிறத்தன (171). எழுத்துரு அறியாதவரும் அறியவல்லன வெள்ளைச் சொற்கள் (172). வாறவன் (வருகிறவன்), கொண்டாந்து (கொண்டுவந்து) போன்ற பேச்சு வழக்குகள் இசை, நாடகத் தமிழில் வழங்கலாம் (170).

3. ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்ற பகுப்பு ஒருமையில் உளது. ஒன்றன் பாலை அலிப்பால் என இந்நூல் சுட்டுகிறது (182).

4. எவன், எவள், எது, எவர் – சுட்டுச் சொற்கள் (182, 184, 187).

5. அவர், இவர், உவர், எவர் – உயர்திணை ஒருமைப் பன்மைச்சுட்டு (187).

6. அவர்கள் உயர்திணைப் பன்மைச் சுட்டு. இச்சொல் உயர்திணை ஒருமைப் பன்மைச் சுட்டும் ஆகும் (188).

7. உண்டல், உறங்கல் — பொதுவினை (206)
வந்தேன், இருந்தேன் — தன்வினை (207)
சிரித்தாள். ஓடியது — பிறவினை (208)
ஈகை — நல்வினை. ஏற்கை — தீவினை (214)
வளர்ச்சி, அகலம் — அமைதிச் சொல் (217)
இனிப்பு, கோபம் — தன்மைச் சொல் (218)

8. ஏ — விளிச்சொல் (221). சீ — வெறுப்புச் சொல் (225

9. சொற்களில் இடம்பெறுகிற அசைகளின் அடிப்படையிலும் ஐந்து வகைச் சொற்களை நூலாசிரியர் குறிப்பிடுகிறார். தேமாந்தண்பூநலம், தேமாந்தண்ணிழற்சீர் – ஐந்தசைச் சீர்ச்சொல் (245)

சொல்லின் வரைவிலக்கணம் முழுமையாக இல்லை; இதில் பொருள் பற்றிய செய்தி இல்லை. புரிதிறன் அடிப்படையில் இயல், இசை, நாடகச் சொற்களுக்கு நிறம் கூறப்பட்டுளது. பயன்பாட்டு (Function) அடிப்படையிலான பெயர், வினை, இடை, உரி என்ற முந்தைய பகுப்பு இந்நூலில் மேற்கொள்ளப் படவில்லை. மாறாக, உணர்த்தும் பொருளின் அடிப்படையில்

சொற்கள் பகுக்கப்பட்டுள்ளன. தவிர, யாப்பு, பாட்டியல் செய்திகளையும் சொல்லின் இலக்கணமாகத் தொகுத்துக் கூறுகிறது

பொருளிலக்கணம்

பொருளிலக்கணம் அகப்பொருள், புறப்பொருள், அகப் புறப் பொருள் என்று மூன்றாக வகைப்படுத்தப்பட்டுளது. அகப்பொருள் உறுப்பியல்பு, குறிப்பியல்பு, பழமை இயல்பு, துறையியல்பு ஆகிய பிரிவுகளை உடையது. இவற்றில் பெண் களின் உறுப்புக்களின் அமைப்பு, அணிகலன்கள், எழுவகைப் பருவத்தினரின் உடலமைப்பு, துறையின் வரைவிலக்கணம் ஆகியன விவரிக்கப்படுகின்றன.

புறப்பொருள் இலக்கணம் நிலத்தியல்பு, உழியியல்பு, வேற்றுயிரியல்பு, கருவியியல்பு, தொகுப்பியல்பு எனப் பகுத்து விவரிக்கப்படுகிறது. இவை குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்களின் இயல்பு, கருப்பொருட்கள், முனிவரும் அந்தணர் முதலிய ஐவகை இன்த்தவரும் வாழிட இயல்பு, சிம்புள், யாளி, யானை, முயல் போன்ற மனிதரல்லா வேற்றுயிர் சிலவற்றின் இயல்பு, பல்வகைத் தொழிலாளர்க்கான கருவிகள், நிலவுலகமல்லாப் பிற உலகங்கள் பற்றிய குறிப்புக்களைத் தருகின்றன.

அகப்புறப் பொருள் நிலை எனும் இறுதிப் பிரிவு ஐம்பொறிகள், ஐம்புலன்கள், இந்து சமயத்துள்ள அகப்புறச் சமயங்கட்கிடையே பொதுமை எனும் செய்திகளைக் குறிப்பிடு கின்றது.

பொருளிலக்கணச் செய்திகள் சில

1. இன்ப வெள்ளத்து இசைவுறும் ஒவ்வோர் நிகழ்ச்சியும் துறைகள் ஆமெனல் நெறியே (325)
2. கட்டளைக் கலித்துறையிலும் வண்ணத்திலும் அகப் பொருள் துறைகளைப் பாடுதலே பெரும்பான்மை. (329)
3. வள்ளை, புன்னை, தாழை, பனை தழைக்கின்ற நெய்தல் நிலத்தில் வலைஞரும் ஈழவரும் கொட்டில் அமைத்து வாழ்வர். வருணனும் கொற்றியும் அவர்களது தெய்வங்கள். (339)

4. கள், அரக்கு, என்பு, ஊன், கடிநாய், பன்றி முதலியன ஐந்தாம் இனத்தவர் (பஞ்சமர்) சேரியில் காணப்படும். (352)

5. எட்டுக்கால்களும் இரு சிறகுகளும் கொண்ட சிம்புள் சிங்கத்தசையை உண்ணும் (357)

6. தும்பிக்கையுடையனவும் இல்லாதனவுமாகிய இருவகை ஆளிகளும் யானைத் தசையை விரும்பி உண்ணும் (358)

7. பாம்புக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை தலையும் வாலும் மாறி மாறி அமையும். அதன் இறந்த உடலிலிருந்து தேள் முதலிய நச்சு உயிரினங்கள் தோன்றும் (364)

8. குயில் முட்டையைக் காக்கை அடைகாத்துக் குஞ்சு பொறித்து, தன் குஞ்சுகளோடு வளர்க்கும் (367)

9. வீடு பெற முயல்வார்க்குத் தன் உடம்பும் புறமே (387)

முந்தைய இலக்கண நூல்கள் ஒழுகலாறுகளை அகம், புறம் எனப் பகுத்து விளக்குகின்றன. ஆனால் அறுவகை இலக்கணம் அக, புறப்பொருள்களைக் குறிப்பிடுகிறது. மேலும் சில அரிய செவிவழிச் செய்திகளையும் தெரிவிக்கின்றது. இந்நூலில் முதல், கரு, உரி என்ற பகுப்போ, வெட்சி, கரந்தை போன்ற பகுப்போ காணப்படவில்லை.

யாப்பிலக்கணம்

யாப்பிலக்கணத்தில் இயலிசைத் தமிழ் இயல்பு, நாடகத் தமிழ் நிலை, வண்ணவியல்பு, மோனை இயல்பு, எதுகை இயல்பு, நாற்கவி இயல்பு, பனுவல் இயல்பு எனும் பிரிவுகள் உள்ளன. மூவகைத் தமிழுக்கும் உரிய பாடல்களும் ஆசு, சித்திரம், வித்தாரம்,மதுரம் எனும் நால்வகைக் கவிகளுக்கான சான்றுகளும் நூல், பிரபந்தம், காவியம் ஆகிய பனுவல் வகைகளும் இங்கு விவரிக்கப்படுகின்றன.

சில செய்திகள்

1. சந்தங்களுக்குக் குலமும் பாலும் கூறப்படுகின்றன.
   தத்த – அந்தணர், தன்ன – அரசர், தய்ய – வணிகர்
   தன – வேளாளர் (459)

தத்த, தந்த, தாத்த, தாந்த – ஆண்பால் (461)
தன்ன, தய்ய, தன, தான – பெண்பால் (462)
தான, தய்ய, தன்ன – அலிப்பால் (463)

2. இலக்கணம், இலக்கியம், சோதிடம், நீதி, வயித்தியம் சிற்பம் – நூல் (516)
தெய்வம், அரசன், வள்ளல், சுவைஞனைப் போற்றுவது– பிரபந்தம் (517)
மலை முதலியவற்றை வருணித்தல், போர், செங்கோல் சான்றோர் சிறப்பை விவரிப்பன – புராணம், காவியம் (518)

3 எல்லா அடிகளும் சமமான சீர்களை உடையது நேரிசை ஆசிரியப்பா (404). ஈற்றயல் அடியில் ஈரசை (ஒருசீர்) குறைவது நிலைமண்டில ஆசிரியப்பா (405).

யாப்பிலக்கணத்தில் அசை, சீர் போன்ற செய்யுளுறுப்புக் களின் அமைப்போ பல்வகைச் செய்யுட்களின் அமைப்போ தெளிவாக வரையறுத்துக் கூறப்படவில்லை. நேரிசை, நிலை மண்டில ஆசிரியப்பாக்களின் இலக்கணம் முந்தைய நூல்களுக்கு வேறானவை.

அணியிலக்கணம்

உவமையியல்பு, உடைமையியல்பு, கற்பனையியல்பு, நிகழ்ச்சியியல்பு, ஆக்கவியல்பு எனும் ஐந்து பகுதிகளில் அணியிலக்கணம் விவரிக்கப்படுகிறது. தெய்வங்கள், பெண்டிரின் உறுப்புகள், ஆடவரின் தோள், மார்பு ஆகியவற்றுக்கு உவமையாதற்கு உரியன சுட்டப்படுகின்றன. தெய்வங்கள் ஐவகை மாந்தர், பனுவல்கள் ஆகியவற்றுக்கு உடைமையான பொருள்கள் உடைமையியல்பில் இடம்பெற்றுள்ளன. உவமையின் சார்பாகக் கற்பனை அமைதல், சிறுபொழுதுகளிலும் பெரும் பொழுதுகளிலும் ஏற்படும் நிகழ்ச்சிகள், ஐவகை மாந்தர்க்கும் ஆக்கம் தருவனவும் இவ்விலக்கணத்தின் பாற்படும்.

கற்பனை புலவோர் கருத்தின் அளவாம் (613)

உவமை அணியையே அணி என்று இந்நூல் கருதுகிறது. இதன்கண் முந்தைய நூல்களில் உள்ளதைப் போன்று உவமை அல்லது பிற அணிகளின் வரைவிலக்கணம் கூறப்படவில்லை.

புலமையிலக்கணம்

புலமையிலக்கணத்தில் தேற்றவியல்பு, தவறியல்பு, மரபியல்பு, செயல்வகையியல்பு ஆகிய பிரிவுகள் உள்ளன. இதன்கண் புலவன் ஒருவன் தெளிந்த புலமை பெறுதற்கான நெறிகள், அவன் தவிர்க்கவேண்டுவன, சில புலவர்களின் ஆற்றல் பற்றிய செவிவழி மரபுச் செய்திகள், அவன் புலமைப் போட்டியின்போது கடைப் பிடிக்கவேண்டிய நெறிகள் போல்வன இடம் பெற்றுள்ளன.

புலமையிலக்கணம் சில

1. அறியும் தன்மையைப் புலமை ஆம் எனல் (644)
2. தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் உளதெனில் அஃதுணர் அலகையில் தாழ்வெனல் அறமே (672)
3. தமிழ்மொழிக்கு உயர்மொழி தரணியில் உளதெனில் வெகுளியற்று இருப்போன் வெறும்புல வோனே (705)
4. தமிழ்க்கும் தனக்கும் தனது தொழிலுக்கும் தன் இனத்தினர்க்கும் தவறு உறாவண்ணம் முயல்பவன் முதன்மைப் புலவன் (747)
5. ஊமைச் சிறுவன் தேன் போன்ற தமிழ்ப் பாடலைப் பாடினான் (783)

சிறந்த புலவன் ஒருவனுக்கு வேண்டுவன, தகாதன ஆகிய நெறிகளையும் அவனது கவிதையின் ஆற்றலால் விளையும் பெருமைகளையும் புலமையிலக்கணம் எனத் தண்டபாணி சுவாமிகள் வரையறுக்கிறார்.

முடிபுகள் சில

* அறுவகை இலக்கணம் புதிய செய்திகளைப் புதிய நெறிகளில் புலவர்கட்கு விளக்குகிற புதிய நூல்.

* புதிய இலக்கண நூலைக் கவுமாரச் சமயத்தில் சார்பில் தரவேண்டும் என்ற அவா காரணமாக இந்நூல் இயற்றப் பட்டது.

* இந்நூல் வரைவிலக்கணம் கூறுதல் என்ற முந்தைய நெறியினின்றும் விலகி, உதாரணங்களின் வாயிலாக

இலக்கணத்தைப் புலமை பெற விரும்புவோர்க்கு விவரிக்கின்றது.

* எழுத்திலக்கணம் வரிவடிவுக்கு முதன்மையிடம் தந்து அமைந்துளது.

* சொற்கள் பயன்பாட்டு அடிப்படையிலின்றி, உணர்த்தும் பொருள் அடிப்படையில் பகுத்துக் கூறப்படுகின்றன.

* பொருளிலக்கணம் அக, புற ஒழுகலாறுகளின் அடிப்படையில் அமையவில்லை. அக, புறப் பொருள்களைச் சுட்டிச் செல்கிறது.

* இந்நூலின் ஆறாம் இலக்கணம் புலமை. இது முந்தைய மரபு இலக்கணங்களினின்றும் புதிய வொன்றாகும்.

* அறுவகை இலக்கணம் தமிழ் மொழியின் அமைப்பை விவரிக்கின்ற முந்தைய இலக்கண நூல்களைப் போலன்றி, ஒரு கலைக்களஞ்சியமாக அமைக்கப் பெற்றுளது.

துணை நூல்

அறுவகை இலக்கணம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1991

சுவாமிகள் கண்ட படிமக்கலை

மா. செந்தில் செல்வக்குமரன்

இந்தியாவில் உருவ வழிபாடு 5000 ஆண்டுகளுக்கு முன்னரே வழக்கில் வந்துவிட்டது. இதற்குச் சிந்து சமவெளி நாகரிகமே சான்றாகும். சங்க இலக்கியங்கள் தமிழகத்தில் படிமக்கலையில் ஏற்பட்ட வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகின்றன.

உருவ வழிபாட்டின் உச்சகட்டம் தேவார ஆசிரியர்களின் காலம் எனலாம். அவர்கள் சிவனின் பல்வேறு கோலங்களைத் தம் இனிய பாக்களில் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளனர். அவர்கள் பாக்களில் இடம்பெற்ற சிவத்திருக் கோலங்களுக்கு வடிவம் தந்தவர்கள் சோழ மன்னர்கள் எனலாம். தாங்கள் கட்டிய கோயில்களில் பல்வேறு கோட்டங்கள் அமைத்து அவற்றில் சிவத்திருமேனிகளையும் மற்றும் உள்ள தெய்வத் திருமேனிகளையும் கற்றிருமேனிகளாக இடம் பெறச் செய்து உள்ளனர். இவற்றோடு தெய்வ உருவங்களை வீதி உலா வருவதற்கு ஏற்புடைய செப்புத்திருமேனிகளாகவும் செய்து வழங்கியுள்ளனர்.

பாண்டிய நாட்டில் கோட்டங்களில் தெய்வ உரு அமைக்கும் வழக்கம் இல்லை. எனினும் இவர்கள் செப்புத் திருமேனிகளைச் செய்து வழங்கியுள்ளனர். கோபுரத்தில் கோட்டங்களை அமைத்து அவற்றில் பல்வேறு தெய்வ வடிவங்களைக் கல்லில் செய்து இடம் பெறச் செய்துள்ளனர்.

சுவாமிகள் உருவ வழிபாட்டை ஆதரித்த நிலையையும் தெய்வச் சிலைகள் வடிப்பது எங்ஙனம் என்று அவர் கூறும் கருத்துக்களையும் எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்க மாகும்.

சித்தர் காலத்தில் உருவ வழிபாட்டிலிருந்து மாறுபட்டு மனத்தில் இறைவனைக் கொள்ள வேண்டும். மனமே இறைவன்

குடியிருக்கும் கோயில் என்ற கோட்பாடு வளர்கின்றது. இதைத் தான், 'நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்' என்ற வரியும், 'கண்ட கோயில் தெய்வம் என்று கையெடுப் பதில்லை' என்ற வரியும் விளக்கி நிற்கின்றன.

ஆனால் சுவாமிகள் 'மானத்தார் பூசித்தல் இவ்வுலகத்தில் வழக்கங்கள் உண்டு' என்று மனத்தளவில் தெய்வத்தை நினைத்து வணங்கும் வழக்கம் இருந்ததை எடுத்துக் காட்டு கின்றார். ஆனால் இம்மனத் தெய்வத்திற்கு நீராட்டு, நிவேதனம், வழிபாடு என்றவை செய்ய இயலாது. ஆதலால் உருவ வழிபாடு தேவை என்பதை வலியுறுத்திக் கூறுகின்றார். அத்துடன் மனத்தளவில் இறைவனை நினைத்து வழிபடும் முறையில் பல குறைகள் இருப்பதையும் எடுத்துக் கூறுகின்றார்.

விக்கிரக வழிபாடு தேவை என்பதை;

''விக்கிரக நாட்டத்தால் உயர்ந்தபேரும் மிகவுண்டு,...
உக்கிரமாம் சரிதமொடு புராணம் கூறும்
உருவங்கள் யாவர்க்கும் உவகை நல்கும்''

(கௌமார முறைமை கா. 2, பா - 18)

என்று பல்வேறு வடிவங்களில் கடவுளர் உருவங்களைச் செய்து வழிபடும் முறைக்கு ஆதரவாகத் தமது கருத்துக்களைக் கௌமார முறைமை என்ற நூலில் ஆங்காங்கே கூறுகின்றார்.

அத்தோடு மட்டுமல்லாது விக்கிரகங்களை என்னென்ன பொருள்களில் செய்யலாம் என்பதை;

''தங்கத்தால் வெள்ளியினால் செம்பால் கல்லால்
தாருவினால், சாந்தினால் சித்திரத்தால்
அங்கத்தில் குறைவின்றி விரும்பும் தெப்பத்து
அணிவடிவம் சமைத்திறைஞ்சலாகும்'' (பா. 52)

என்ற பாடல் வரிகள் தெரிவிக்கின்றன. இதில் அங்கக் குறை வின்றி செய்தல் வேண்டும் என்பதை சுவாமிகள் கூறுதல் நோக்கத்தக்கது.

உலோகத்தால் செய்த உருவத்திற்கு அபிடேகம் செய்யலாம் என்றும் பிற பொருட்களில் செய்த உருவங்களுக்கு அபிடேகம் செய்தல் கூடாது என்றும் கூறுகின்றார்.

விக்கிரக பூசை செய்யும்போது பூதசுத்தி, பொருட்சுத்தி எனும் இரண்டும் புத்திசுத்தியோடு மிகப் பொருந்த கைகால் ஆட்டலின்றி வழிபடல் வேண்டும் என்கின்றார். இவற்றோடு சில விக்கிரகங்கள் எவ்வாறு அமைப்பது என்பதைக் கூறுமிடத்து சிற்ப ஆகமங்களில் இவருக்கிருந்த ஆழமான அறிவு வெளிப்படுகின்றது.

பிற நூல்கள்; இறை உருவங்களின் பெயர்களை மட்டும் அடுக்கிச் சொல்லும் போது இவர் அவ்வவ்வுருக்களை எவ்வெவ்வாறு செய்ய வேண்டும் என்று தெளிவாகக் கருதுகின்றார்.

தக்ஷ்ணாமூர்த்தி கல்விக் கடவுள். கோயிலின் கருவறைச் சுவரின் தென்புறக் கோட்டத்தில் ஞான மூர்த்தியாக அமர்ந்திருப்பதை யாவரும் அறிவர். இம் மூர்த்தியின் அமைதியினை;

"சீல மறைக் கிழவன் மக்கள்ஒரு நால்வர்க்கும்
சிவஞானச் செல்வமுறச் செய்ய வேண்டி
ஆல நிழற் பாரொரு சற்குரவனாகி
அவிர்சடையும் கண்டிகையும் அணிவெண்ணீறும்
சூலமும் உற்றுடுக்கையும் முத்திரையும் காட்டித்
துணைப் பதத்தில் ஒன்றையொன்று சுமக்கவைகும்"
(பா. 38)

என்று ஆலமர் செல்வன் சனகாதி முனிவர் நால்வர்க்கும் சிவஞானம் – ஓதுகின்றவராக, உடுக்கையும், கண்டிகையும் தாங்கி இருக்கின்ற நிலையில் ஒருகாலின் மீது ஒருகால் போட்டு அமர்ந்திருப்பது போல் வடிக்க வேண்டும் என்று கூறுகின்றார். இது தக்ஷ்ணாமூர்த்தியின் பொது அமைப்பைக் குறிப்பதாகும்.

இதனைத் தவிர யோக தக்ஷ்ணாமூர்த்தி, வீணாதர தக்ஷ்ணாமூர்த்தி, மிருதங்க தக்ஷ்ணாமூர்த்தி எனப் பல்வேறு கோலங்களில் உருவங்கள் வடிவமைக்கப்பட்டு பல கோயில்களில் இடம்பெறச் செய்திருப்பதைக் காண்கின்றோம். இவற்றுள் மிருதங்க தக்ஷ்ணாமூர்த்தியினைக் கழுகு மலையிலும், நால்வருடன் அமர்ந்த தக்ஷ்ணாமூர்த்தியை இராசவல்லிபுரத்திலும் காணலாம். இறைவன் ஞானத்தை மட்டுமல்லாது இசையையும் போதிக்கக் கூடியவன் என்பதை இது தெளிவுபடுத்துகின்றது.

சோமாஸ்கந்தர் உருவம் என்பது இறைவன் தேவியோடும், குகனோடும் அமர்ந்திருக்கும் வடிவமாகும். இவ்வுரு எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை மற்றொரு பாடலில் மிகத் தெளி வாக எடுத்துக் காட்டுகின்றார். அப்பாடலில்;

''மான்மழுவொடு அபயவர தமுஞ்சேர் தோள்கள்
வயங்கு முக்கண் திருக்கனிவாய் வளைதோய் காது
பான்மதியும் புனல் கொன்றைச் சடிலச்சென்னி
... ...
வேல்மதலை உமைவாமத் திருந்தகோலம்'' (பா. 39)

என்று சிவனின் திருக்கோலத்தை மான், மழு ஆகியவற்றை ஏந்தி, வழங்குங் கரத்தையும், காக்கும் கரத்தையும் உடைய வனாகத் தலையில் மதியும், காதுகளில் குழையும் அணிந்து உமையொடும், குகனொடும் வீற்றிருக்கும் கோலத்தில் சோமாஸ் கந்தர் உருவம் அமைய வேண்டும் எனத் தெளிவாகக் கூறுகின்றார்.

நடராசர் உருவ வழிபாடு சோழர் காலத்தில் மிகவும் புகழ் பெற்று விளங்கியது. இத் திருமேனியை 'ஆடல் வல்லான்' என்று கல்வெட்டுகள் தூய தமிழ்ச் சொல்லால் குறிப்பிடுகின்றன. ஆடவல்லான் மீது தீராக் காதல் கொண்ட இராசராசனோ தம் நாட்டில் வழக்கில் இருந்த அளவைக் கருவிகளுக்கெல்லாம் ஆடவல்லான் என்று பெயரிட்டு மகிழ்ந்தான். இம் மூர்த்தியின் உருவ அமைதியினைச் சுவாமிகள்;

''முயலகன்தன் முதுகில்வலத் தாள்வைத்து ஏனை
முண்டகத்தாள் தூக்கிவலப் புறமாய்ச் சாய்த்து
விபனுடுக்கை வலப்புறத்து மேற்கை தாங்க
மேலிடக்கை அனல் ஏந்த ...'' (பா. 41)

என்று முயலகன் மீது வலப்பாதம் ஊன்றி இடப்பாதம் தூக்கி ஆடும் இறைவனின் கோலத்தை எடுத்தியம்புகின்றார். யாமறிந்த வகையில் சுவாமிகள் போன்று இத்துணை தூய தமிழில் எளிமை யாய்ப் படிமக் கலையை எடுத்தியம்பியவர் யாருமிலர் எனலாம்.

மேலும், சிவனின் திருக்கோலங்களில் ஒன்றாகிய பைரவர் திருவுருவினை அமைக்கும் முறையினையும் எடுத்தியம்புகின்றார். அது;

"உடையினொடு பத்தினியுமின்றி ஈசன்
உயர்கரங்கள் உடுக்கையொடுநாகமேந்த
படையினுயர் திரிசூலம் பிரமன் சென்னிப்
பரிகலத்தொடு எடுத்து ஒருநாய்ப்பரியில் ஏற".

(பா. 43)

என்று பிரமகத்தி தோஷம் நீங்க பிரமனின் கபாலத்தையே கையில் ஏந்தி திரிசூலம், உடுக்கை, நாகம் ஆகியவற்றைப் பிற கைகளில் ஏந்தி ஆடையின்றி நாய் தொடர அமைக்கப்படும் திருக்கோலமே பைரவர் அல்லது வைரவன் என்று குறிப்பிடப் படும் திருக்கோலமாகும். சுவாமிகள் ஒருபடி மேற்சென்று இத்திருக்கோலத்திற்கு வடையினொடு தேன் சமைத்துப் படைத்தால் எதிரிகள் திறம்பட சுரம்புகுவர் என்று வழிபாட்டின் பலனையும் எடுத்துக் கூறுகின்றார்.

இதே போன்று வீரபத்திரர், கணபதி, சுவாமிகளின் இஷ்ட தெய்வமான முருகன், சீகண்ட பரமேசுவரர், சக்தியின் பல்வேறு வடிவங்கள் ஆகியவற்றையும் அழகுடன் எடுத்துக் கூறுகின்றார்.

இவற்றுள் துர்க்கை வடிவம் பல்வேறு நிலைகளில் உள்ளது என்பதைக் கூறுவதும் சிறப்பினது.

"கையில் அபைய வரதமுடன் சங்கம் ஆழி
கவின்தந்தால் விண்டுதுர்க்கை
கையோ ரெட்டாய் பயில் வடிவம் தானும்உண்டு" (பா. 53)

என்று விஷ்ணு துர்க்கைக்கும் மற்ற துர்க்கைக்கும் உள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுகின்றார். கஜலட்சுமியின் உருவம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை மிகச் சிறப்பாகக் கூறுகிறார். இதனைத் திருமகள் உபாசனையென்ற தலைப்பில் குறிப்பிடுகின்றார்.

"இரண்டு வேழம் தாங்கிய பொற்கும்ப
நன்னீர்த் தாரை வாய்ந்த
மங்கலச் செத்திருமகள்" (பா. 57)

என்று அமர்ந்திருக்கும் திருமகளுக்கு இருயானைகள் குடநீராட்டுச் செய்யும் உருவ அமைதியினை நம் கண்முன்னே நிறுத்துகின்றார். இப்பாடல் வரிகட்கு ஏற்ப பல கோயில்களில் கஜலட்சுமியின் திருமேனி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கலைமகளாம் வாணியைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

"வாலையுறும் ஆதனமும் நிறமும் தோய்ந்து
வளர்புவனை வயதினளாய் மலர்க்கை நான்காய்,
ஓலையிற் செய்திடுஞ்சுவடி படிகமாலை
ஒண்கலச முத்திரை ஒன்றொளிரக் காட்டி" (பா. 56)

என்று கல்விக் கடவுளின் உருவினைக் கண்முன்னே காட்டுகின்றார். கலைமகளை வீணையின்றிக் குறிப்பிட்டுள்ளார். இதுவே பழ மரபு. இவற்றைத் தவிர வைணவத் திருவுருவங்களையும் சிறப்புடன் கூறுவது குறிப்பிடத்தக்கது. திருமாலின் நின்ற திருக்கோலத்தைக் குறிப்பிடுகின்றபோது;

"சக்கரமும் சங்கும் இருமேற்கைகள் தாங்கத்
தனி அபயவரத மற்றைத் தடக்கை காட்ட". (பா. 60)

என்றும், அனந்தன் எனும் ஆயிரவாய்ப் பாம்பின் மீது அலைமகளும், நிலமகளும் அருகில்வைகி மணந்தழைத்த பெருவகையோடும் தம் கையால் மலரனைய திருவடிகள் வருட என்று அரவணையுள் பள்ளி கொண்டுள்ள கோலத்தையும் அவர் அருகில் அமர்ந்த தேவியர் இருவரின் செயல்பாடுகளையும் எடுத்துக் கூறுகின்றார்.

மேலும் நரசிம்மர், தசாவதாரம் ஆகியவற்றின் உருவ அமைப்பினையும் அழகுறக் குறிப்பிடுகின்றார். (பா. 64) கணபதியின் வடிவத்தை அமர்ந்த கோலம், நின்ற கோலம், ஆடும் கோலம், வல்லபையோடு அமர்ந்த கோலம் என்ற பல்வேறு கோலங்களில் வடிக்கலாம் என்று கூறுகின்றார். (பா. 69)

"ஆனைமுகம் முனைக் கோடொன்று ஒடிந்த கோடொன்று
அங்குசமும் பாசமும் தோய்ந்தவிர் மேற்கைகள்
ஏனையகைகளில் முந்நாள் ஒடித்த கொம்பொடு
இனிய மாங்கனி அதனில் இயைந்த பூட்சை
வாணை நிகர் பெருவயிறு ... ..." (பா. 67)

என்று விநாயகரின் உருவத் தோற்றத்தையும் அவர் கைக்கொண்ட ஆயுதங்களையும் கூறுகின்றார். மோதகத்திற்குப் பதிலாக மாங்கனியை வைப்பது பிற்கால மரபு.

முருகனுக்குப் பல வடிவங்களை எடுத்துக் கூறுகின்றார். வள்ளி தெய்வயானையுடன் கூடிய முருகன், சண்முகன், தண்டபாணி போன்ற வடிவ அமைதிகளை விளக்கமாக எடுத்து வைக்கிறார். (பா. 72)

''இருதலைச் சூலம்குலிசம் பாணம் சாபம்
எழில்வாள் கேடயம் ஆழிமிகல் வெண்சேவல்
பொருவில் அங்குசம் பாசம் அபயம் மேலோர்
போற்றிசைக்கும் வரதமெனப் புகல் ஈறாறு.'' (பா. 73)

ஞான காண்டத்திறுதியில் அறு சமயங்கள் தொன்று தொட்டவை என்றும், கடவுளின் ஆறு கணங்களே ஆறு சமயங்கள் என்று எடுத்துக் கூறுகின்றார். ஞாயிறு, ஈசன், சக்தி, திருமால், கணேசன், செவ்வேள் ஆகியவையே ஆறுகணங்களின் உருவங்கள் என்றும் எடுத்தியம்புகின்றார்.

உருவம் வைத்து வழிபாடு நடத்துபவர்கள் அதன் வடிவமே ஆவார் என்று பல நூல்கள் கருத்தை இறுதியாகக் கூறுகின்றார். உருவ வழிபாடு மூலமாக தியான நிலையை அடைய முடியும் என்றும் அதனைக் கல்லா மாந்தரும் அடைய முடியும் என்று முத்தாய்ப்பாய் முடிக்கின்றார்.

புலமை இலக்கணம்

அர. செயச்சந்திரன்

முன்னுரை

தமிழ்ப் பெரியார் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் நூற்றாண்டு விழாக் காணும் இக்காலத்தில் அவர் இயற்றிய புலமை இலக்கணத்தைத் தமிழ் உலகுக்கு நினைவுப் படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும். இதற்கு ஆதாரமாக அமைவது ப. வெ. நாகராசன் அவர்களால் உரை வகுத்து பதிப்பித்து தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட 'அறுவகை இலக்கணம்' எனும் நூலாகும். அடிக்குறிப்புகளாக நூற்பா எண்கள் ஆங்காங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்மொழி நீண்ட இலக்கண இலக்கிய வரலாறு உடையது. நெடுங்காலத்திற்கு முன்பே தொல்காப்பியர் மூவகைப்பட்ட இலக்கண முறைமைகளை வரையறை செய்து தொல் காப்பியத்தை இயற்றினார். அவை எழுத்து, சொல், பொருள் எனும் இலக்கணங்களாகும். பின்னர் பொருள் இலக்கணம் அகப்பொருள், புறப்பொருள் எனத் தனித்தனி இலக்கண நூல்களாயின. தொல்காப்பிய பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ள செய்யுள் இயல் யாப்பிலக்கணமாய் தனி நூல் ஆனது. உவம இயல், அணி இலக்கணம் ஆனது. ஒருவாறு இந்த வரலாறு நிகழ்ந்து கொண்டிருந்த நிலையில் 'முத்தமிழ் ஐந்திலக்கணம் கொண்ட மொழி' எனப் புலவர்கள் கூறலாயினர்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் பெரியார் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் ஐந்திலக்கண அறிவு பெற்றவர். மேலும் பல தகுதிகளைப் பெற்றால்தான் முழுப்புலமை என்பது கிட்டும். முழுப்புலமை உடையவரே புலவர். அப்படிப்பட்டப் புலவரே நன்னூல் செய்வர் எனக் கருதிப் புலமைக்கு ஓர் இலக்கணம் வகுத்தார். எனினும் அதனை தனி இலக்கண

நூலாக்கினால் முழுப்பயன் தராது எனக் கருதி ஐந்திலக்கணத்திற்குப் பின்னே ஆறாவது இலக்கணமாகிய புலமை இலக்கணத்தை வைத்தார். அதனை ஆவணமாக்கல் பொருட்டு 'அறுவகை இலக்கணம்' எனப் பெயரிட்டார். புலமை இலக்கணம் தமிழுக்கே உரிய சிறப்பான இலக்கணமாகும். தமிழில் இந்த ஒரு நூலே அறுவகை இலக்கணம் கூறுகிறது.

புலமை இலக்கணம் 144 நூற்பாக்களைக் கொண்டது. நான்கு உட்பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு உட்பிரிவிற்கும் இயல்பு எனப் பெயரிட்டுள்ளார். இக்காலத்தில் இயல் என்று குறிப்பிடுவதற்குச் சமமாக இதனைக் கொள்ளலாம், தேற்ற இயல்பு, தவறியல்பு, மரபியல்பு, செயல்வகை இயல்பு என்பவை. இவை முறையே 34, 34, 35, 41 எனும் எண்ணிக்கையில் நூற்பாக்களைப் பெற்றுள்ளன. தமிழில் வேறு எவரும் புலமை இலக்கணம் இயற்றவில்லை. தெளிந்தப் புலமைப்பெற்று தவறுகளை நீக்கி மரபு வழிநின்று பெருமை காத்து செயல்பட்டு நூல் செய்தல் வேண்டும் எனக் கருதி புலமை இலக்கணத்தின் உட்பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இனி நூல் பொருளினை விரிவாகக் காணலாம்.

முதல் இயல் தேற்ற இயல்பு ஆகும். தேற்றம் எனின் தெளிவு, உறுதி எனப் பொருள்படும். ஐந்திலக்கணப் பயிற்சியின் பின்னர் புலமை இலக்கணம் பயில வேண்டும் என்பதையும் பெறுகின்ற புலமை உறுதி உடையதாக இருக்க வேண்டும் என்பதையும் தேற்ற இயல்பு எனும் பெயர் விளக்குகிறது. மயக்கம் நீங்கிய நிலை, குழப்பம் நீங்கிய நிலை எனவும் தெளிவு என்பதற்குப் பொருள் கொள்ளலாம். அறிவில் மயக்கமற்றத் தெளிவே புலமை. அதனை உடையவரே புலவர். எனவே தெளிவு பெறலே புலவனாதலாம் என்கிறார் (4).

தெளிவைப் பெறும் முன்னர் மனத்துள் சிந்தித்தலும் அதன் முன்னர் ஐம்பொறிகளால் செய்திகளைப் பெறுதலும் நிகழும். மயக்கமற்ற நிலை என்பது சிந்தித்தல், எழுதுதல், சொல்லுதல், படித்தல், பிறர் சொல்லக் கேட்டல் ஆகிய அனைத்திற்கும் பொருந்தும். ஒருமுகப்பட்ட மனமே இத்தகைய ஆற்றலைப் பெறும். ஒருமுகப்பட்ட மன ஆற்றல் குறைவதன் மூலம் தெளிவுப்படுத்துவதற்குப் புறக்கருவிகளின் துணை மிகுந்து

செல்லும். எனவே, புற உலகிலிருந்து பெற்ற செய்திகளையும் அகத்தே சிந்தித்து வைத்த முடிவுகளையும் ஒன்றுடன் ஒன்று குழப்பிக்கொள்ளாமல் நினைவுப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் அவசியமானதாகும். இது குறைவதாலும் குழம்புவதாலும் பிறர் கருத்துகளை தம் கருத்தாகவே கூறும் நிலை உருவாகும். இது அறிஞர்களுக்குப் பழியினை உருவாக்கும். அவரது புலமையில் மற்றவருக்கு உள்ள நம்பிக்கையைக் குறைக்கும்.

ஒரு துறையில் புலமை பெற விரும்புவோர் அத்துறையில் தேர்ந்த மூத்த புலமையாளர்களை அணுகி புலமையின் சாரத்தைப் பெற வேண்டும். மூத்தோர் புலமையின் சாரம் என்பது அவர் பெற்ற அனுபவ அறிவின் சுருக்கக் குறியீடுகள் ஆகும். அவற்றுக்குப் பின்னே எண்ணில் அடங்கா செய்திகள் நிறைந்திருக்கும்.

உண்மைப் புலமையர் ஒவ்வொருவரும் ஒருபெரிய நூலகத்தை விட மேலானவர் என்பதை மனதார நம்பி ஏமாற்றுதல் போன்ற தீச்செயல்கள் புரியாமல் நேர்மையான முறையில் மூத்தோர் களிடம் இருந்து புலமையைப் பெறுதல் வேண்டும். செய்திகளைச் சேகரிப்பதை விட தத்துவங்கள், கோட்பாடுகள் புலமையைப் பெறுகின்ற வழிகள், புலமை பெறுவதில் ஏற்பட்ட துன்பங்களை வெற்றி கொண்ட முறைகள் முதலியவற்றைத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

இவை அனைத்தும் புதியதாக புலமை பெறுவோருக்கு பேருதவி புரியும். இன்றைய நிலையில் பெரும்பாலோர் புறக் கருவியாகிய நூல்களை தயாரிப்பதிலேயே கவனம் செலுத்து கின்றனர். இதனால் புலமை என்பது அகத்தில் தங்குவதைவிட புறத்தில் தங்குகிறது. அகப்புலமை அவசியமானதாகும். இப்புலமை இலக்கண ஆசிரியராகிய வண்ணச்சரபம் அவர்கள் அகப்புலமையினையே அதிகமாகப் போற்றுகின்றார். நூலாக்குதல் தவறன்று. எனினும் நூலாக்குதல் ஒன்றே புலமையின் அடையாளம் ஆகிவிடாது எனத் தெளிதல் வேண்டும்.

இருவகைப் புலமை வேண்டும். ஒன்று இலக்கணப் புலமை. மற்றொன்று இலக்கியப் புலமை. முன்னது நெறிமுறையாகும். பின்னது நெறிமுறைப்படி படைக்கப்பட்ட படைப்புகளாகும்.

இவர் இலக்கண இலக்கியம் கற்றவர். ஆதலால் புலமையை இவ்விதமாகப் பகுத்துள்ளார். அறிவியல், கணிதம் முதலிய துறைகளில் இக்கருத்தை பொருத்தி நோக்கினால் சமன்பாடுகள் முதலியவற்றை இலக்கணத்தோடும் விளக்க நூல்களை இலக்கியத்தோடும் ஒப்பிடலாம். இதனால் ஒவ்வொரு துறையிலும் அதன் போக்குகளை வரையறுத்துக் கூறும் விதிமுறை நூல்களும் விதிமுறைகளை எளிதில் விளக்கிக் கொள்ளும் வகையில் அமையும் விளக்க நூல்களும் அமைந்துள்ளன எனும் கருத்தைப் பெறலாம்.

எந்த நூலின் மீதும் சான்றோர்களான நூலாசிரியர் மீதும் வெறுப்புக் கூடாது (9). வெறுப்பு உண்மையைக் காணவிடாது. ஆகையால், நூலைக் கற்கும் போதும் சான்றோர்களிடம் உரையாடும்போதும் வெறுப்புணர்வு, அவரைப் பற்றிய முன் முடிவு முதலியவை மனதில் தோன்றாதிருக்க வேண்டும். ஆராய்ச்சி நெறி முறையிலும் இக்கருத்து வலியுறுத்தப்படுகிறது.

புலமை பெறுவதற்குரிய காலத்தை வீணாக்கும் சோம்பல், தூக்கம் ஆகியனவும் பெற்ற புலமை இழத்தற்குக் காரணமாகும் காமம், அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள இயலாத வறுமை முதலியவை புலமையைத் தடுக்கும் காரணிகளாகும். முறையான ஓய்வு சோம்பல் ஆகாது. பேராசைக்குத் தக்க வாழ்வு அமையா நிலை வறுமை ஆகாது. அளவான துயிலும், காமமும் வளமை சேர்க்கும். இங்குச் சொல்லப் பட்டவை எல்லாம் அளவு மீறிய நிலைகளையே குறிக்கும் (10).

புலமைத் தொழிலினர், அரைகுறைப் புலவர் அழுக்காது முதலியவை கொண்டு கூறும் குறைகளைப் போற்றத் தேவையில்லை (11). மாணவர்களை முன்னேற்ற விரும்புவோரே மெய்யறிவாளர் (12). பிழைகளைத் திருத்தி தருவதோடு மீண்டும் பிழை செய்யா வழிகளைச் சுட்டுவது சான்றோர் கடமை.

பக்தி இலக்கியம் படைத்தல், எளிமை, விரிவு, வழியின்மை முதலியவற்றை நல்கும். மற்றவை சுருக்கம், கடினம், தடுமாற்றம், தோல்வி முதலியவற்றை நல்கும். இது நூலாசிரியர் கருத்து (13). இதனால் எவ்வகையான நூல் இயற்றுதல் எளிதோ, அதனை முதலில் இயற்றுதல் வேண்டும் எனும் கருத்து எக்காலத்திற்கும்

ஏற்றதாய் இருக்கும். இதனை நன்குணர்ந்த இளங்கோ அடிகளே சமயங்கள் சார்ந்த கடவுளர் பெயரில் கடவுள் வாழ்த்துப் பாடவில்லை என்றாலும் இயற்கை ஆற்றல்களாகிய திங்கள், ஞாயிறு, மழை ஆகியவற்றைப் போற்றிக் கடவுள் வாழ்த்தாகக் கூறியமையும் நோக்கத்தக்கது.

ஒரு புலமையாளரின் முதல் படைப்பு சிறியதாகவும் கலைப் பண்பினதாகவும் இருத்தல் அவருக்குச் சிறுமையைக் குறைக்கும். பின்னர் இலக்கணம், விஞ்ஞானம் முதலிய தொழில் நுட்பம் சார்ந்ததாகவும், பெரிய நூலாகவும் அமைதல் அவருக்குப் பெருமை சேர்க்கும். அவரது முன்பயிற்சி அனுபவம் மேற் சொன்னவாறு பயன் தரும் (20, 21).

மீண்டும் திருத்தாவண்ணம் எழுதவும் சொல்லவும் திறன் பெறுதல் வேண்டும் சொல்ல எழுதும் முறையே சிறந்தது (24). அந்தகக்கவி வீரராகவர் தொடங்கி இன்றைய நிலையிலும் அந்தகத் தமிழ் அறிஞர்கள் இம்முறையினையே பின்பற்று கின்றனர். அண்மைக் காலத்தில் வாழ்ந்து மறைந்த அமெரிக்க பார்வையற்ற வரலாற்று அறிஞர் பக்கம் பக்கமாக தாம் கூறியச் செய்திகளை நினைவில் வைத்திருந்தார். இம்முறையில் இவர் பல நூல்களையும் எழுதியுள்ளார்.

உண்மைப்புலவர்கள் பணத்துக்காக புலமையை விற்க மாட்டார்கள் (28). இங்கு பணம் என்பது முறையாக பெறும் ஊதியத்தைக் குறிக்காது. பணம், பதவி முதலியவற்றுக்காக முறையற்ற வகையில் ஆய்வு முடிவுகள் கூறுதல் உண்மைக் கருத்துகளைத் திரித்தல், மாற்றல் முதலியவற்றைக் குறிக்கும்.

இலக்கியச் சுவையறியா மன்னனை இழிந்தவன் என்றும் தமிழ்ச்சுவை அறியாத்தெய்வத்தைப் பேயினும் இழிந்தது என்றும் கூறுகிறார். அரசியல், சமயம் முதலியவற்றின் காரணமாக தமிழைப் புறக்கணித்தல் தவறு எனப் புலமை யாளருக்கு அறிவுறுத்துகிறார். தண்டபாணி சுவாமிகளின் காலத்தில் அன்னியர் ஆட்சி நிலவியமையும் சைவம், சன்மார்க்கம் முதலிய சமயங்கள் தவிர ஏனையவை தமிழுக்கு ஏற்றம் தராமையும் அதற்குப் புலவர்கள் துணை நிற்பதும் கண்டு வருந்தியே இக்கருத்தைக் கூறுகிறார் (29,30).

தவறியல்பு

இவ்வியலில் தவறுகளை நீக்கும் முறைகள் கூறப்படுகின்றன. நாய்போல் தன் இனத்தாரை வெறுக்காமல் காகம்போல் ஆதரித்து வாழ்தல் வேண்டும். கல்விச் (37,38) செருக்கால் இளம்புலவர்களையும் பொதுமக்களையும் துன்புறுத்தும் வகையில் இலக்கியம் படைப்போரை வாதில் வென்றடக்க வேண்டும் எனும் கருத்து இக்காலத்தில் நிலவும் பல்வேறு இயக்கத்தினருக்கு கூறப்பட வேண்டிய ஒன்றாகும். வாதில் வெல்லுதற்குப் பதிலாக புலமையாரை போரில் வெல்லுதல் எனும் முறை பின்பற்றப்படுகிறது. இதனை தவறு என்று ஒவ்வொரு அறிஞரும் நூலாசிரியர் வழிநின்று உணர வேண்டும் (42).

> "காமக் கடலே கதிஎனக் கருதிப்
> போவசர் புலமைப் புண்ணியம் இன்றே" (45)

எனும் நூற்பா உயிர்க்கொல்லி நோய் முதலியவற்றுக்கு அஞ்சிடும் சமுதாயம் கலை வழியே காமம் செல்லுதலை புலமையின் துணையுடன் நீக்க வேண்டும். அவ்வாறே கொல்லல், புலால் சமைத்தல் பற்றியும் நூல் இயற்றல் தவறாகும் (48). இங்கு பஞ்சமா பாதகம் எனப்படும் கள், களவு, பொய், கொலை, காமம் முதலியவற்றை மக்கள் விரும்புமாறு நூல் இயற்றுதல் தவறு என்று ஒப்புக்கொள்ளல் வேண்டும். இக்கால படைப்பிலக்கிய வாதிகளும் திரை, பத்திரிக்கைத் துறையினரும் இக்கருத்தை மனதில் கொள்ளுதல் சமூக கடமையாகும். பணம், வணிகம் முதலியவற்றைக் காரணம் காட்டுதல் தவறு என்று முன்பே சொல்லப்பட்டது. மக்கள் அவற்றை விரும்புவதாகக் கூறுவது பொய் புலமையாளரின் கருத்தாகும்.

காலச்சூழல் என்னும் புலவனது காலத்து இயற்கை, சமுதாய சூழல்களை கருத்தில் கொள்ளாமலும் காரண காரியங் களை ஆராய்ந்து கூறாமலும் நூல் இயற்றுதல் தவறாகும் (51, 52).

அறிஞரும் உலகரும் ஏற்றுக்கொண்டக் கருத்துகளை அறிவற்றவை என ஒதுக்கலாகாது (59, 60). நம் நாட்டு வரலாற்றை எழுதுவோர் கவனிக்க வேண்டிய கருத்து இது.

வெளிநாட்டவர் சொல்வது மட்டுமே உண்மை எனக் கொள்ளுதல், உண்மை, புலமை ஆகாது.

''தமிழ்மொழிக்கு உயர்மொழி தரணியில் உளது எனில் வெகுளியற்று இருப்போன் வெறும்புல வோனே'' (63) எனும் இந்நூற்பா வழியும் 46, 30--ஆம் நூற்பாக்களிலும் தமிழின் பெருமையை உணர்த்துகிறார். தமிழ் புலமை வீட்டின்பம் நல்கும் என 46--ஆம் நூற்பாவில் குறிப்பிடுகிறார். வள்ளுவர் வீட்டின்பத்திற்கு தனிப்பால் அமைக்காமையின் காரணம் இதுவாகவும் இருக்கலாம்.

மரபியல்பு

இறைவனும் அறிவு வடிவானவனே எனும் உண்மையை உணரும் பெரியவர்கள் தம் சிறப்பில் இணையற்றவர் ஆவர் (69). வள்ளுவரும் இறைவனை வாலறிவன் என்றார். எனவே புலவர்கள் அறிவின் வடிவாக இறைவனை எண்ணிப் போற்றும் மரபு வெளிப்படுகிறது. கடவுள் வாழ்த்துப் பாடும் மரபு இதனடிப்படையிலேயே அமைந்து இருக்கலாம். மரபியல்பு என்பது தமிழ்ப் புலவர் வரலாற்றினை எடுத்துக் கூறுகிறது.

சிவபெருமான், உமாதேவி, முருகப் பெருமான், வாணி இலக்குமி, சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள் எனப் புலவர் வரலாற்றைக் கூறித் தலைச் சங்கத்தில் 4900 புலவர்களும் இடைச்சங்கத்தில் 490 புலவர் களும், கடைச்சங்கத்தில் 49 புலவர்களும் ஆக மொத்தம் 5439 சங்கப்புலவர்கள் முந்நாளில் தமிழ் ஆய்ந்தனர் எனச் சங்கப் புலவர்கள் தொகைக் கூறி மரபியல்பை முடித்துள்ளார்.

சிவபெருமான் சித்தர்களின் தலைவன். அவர் வரலாற்று நாயகர். பின்னர் கற்பனைப் புனைவுக்கு உட்படுத்தப்பட்டார். அவரது காலம் கி.மு. 10, 490 எனும் கருத்துகளை இரா. மாணிக்கவாசகம் என்பவர் 'சித்தர்' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். (இரா. மாணிக்கவாசகம், சித்தர், தமிழ் ஆய்வுக் களங்கள், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, ஆகஸ்ட், 1994).

இக்கருத்தின் அடிப்படையில் இந்நூலாசிரியர் கூறும் தெய்வப்புலவர்களை வாழ்ந்த மனிதர்கள் என்றே நிருபிக்கும் காலம் வரலாம். எவ்வாறேனும் நீண்டகாலப் புலவர் மரபைப்

பெற்றது தமிழ்மொழி எனும் கருத்தை ஒவ்வொரு புலமையரும் மனதில் கொண்டு நூல் செய்தல் வேண்டும்.

செயல்வகை இயல்பு

இவ்வியல் தொழில் நிலை, நடு நிலை, எதிர் நிலை, அருள் நிலை எனும் நான்கு உட்பிரிவுகளைக் கொண்டது. புலமை பெற்றவர் மேற்குறித்த நான்கு விதங்களில் செயல்பட வேண்டும் என்பதே இவ்வியலின் நோக்கம் (104) புலமை இலக்கணத்தின் நான்கு இயல்களில் இது ஒன்றே உட்பிரிவுகளைக் கொண்டது.

> ''தமிழ்க்கும், தனக்கும், சார்தரு நெறிக்கும்
> தன்இனத் தினர்க்கும் தவறுஉறா வண்ணம்
> முயல்வோன் புலமை முதன்மைத்து ஆமே'' (105)

புலமையர்க்கு தொழில் நிலையிலும் தமிழ்ப்பற்று வலியுறுத்தப் படுகிறது. அலங்கார கவிநடையைவிட அறிஞர் போற்றும் உரை நடையில் எழுதுதலே சிறந்தது என்று மொழிநடைக்கும் இலக்கணம் கூறுகிறார் (108).

வாதமிடுகின்ற இருபுலவர்களின் சொற்போருக்கு நடுவராக அமைந்த ஒருவன் இருதரப்பு வாதங்களையும் நடுநிலையில் நின்று சீர்தூக்கி வன்மை மென்மைகளை உணர்ந்து நியாயமான தீர்ப்பை வழங்காமல் தன் சொந்த வெறுப்பு விருப்புகளின் காரணமாக ஒருவனுக்குச் சாதகமாகச் சார்ந்து நின்றால் அவன் சூரியனும் சந்திரனும் நிலைபெற்று நிற்கும் நாள்வரையில் மீளா நரகத்து உழல்வான் (118) பல்வகைப்பட்ட மன்றங்களில் நடுவர் பொறுப்பு ஏற்போரும் வகுப்பில் ஆசிரியர்களும் நூல்களுக்குப் பரிசு வழங்குபவரும் மேற்குறித்த கருத்தை நினைவில் கொள்ள வேண்டும்.

மேற்கோள்களை அடுக்கிக் கூறுபவரை விட ஆய்வும் மதிநுட்பமும் கொண்டு சொந்தக் கருத்தைக் கூறுபவரே சிறந்தவர் எனத் தீர்ப்பளித்தல் வேண்டும். ஆதாரங்களுக்காக மட்டுமே குறைவான அளவுக்கு மேற்கோள்கள் மிகக் குறைவாக இடம்பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

நூலாசிரியர் தமது எதிர்கால நம்பிக்கைகளை எதிர்நிலை எனும் பிரிவில்தெரிவித்துள்ளார். மறைந்த தேவாரப் பாடல்களை சிவபெருமானிடம் இறைஞ்சி பெறலாம் எனும் கருத்துகள் எதிர் நிலை எனும் பிரிவில் இடம்பெற்றுள்ளன. அருள்நிலை என்பதில் தோல்வியுற்ற புலவர்களுக்கு வென்ற புலவர்கள் தண்டனை

அளிக்காது அருள் செய்த விதமும் புலவர்களுக்கு இறைவன் அருள் செய்த விதமும் விளக்கப்படுகிறது. வில்லிபுத்தூர் ஆழ்வாரை வாதில் வென்று காதறுக்காமல் விட்ட அருணகிரிநாதரின் அருட்பண்பை வெளிப்படுத்துகிறார் என்பதை முன்னதுக்குச் சான்று காட்டலாம்.

இலங்கையிலிருந்து தில்லைக்கு வந்து அங்குள்ள சைவர்களை வாதில் வென்று திருக்கோயில்களை தமதாக்கிக் கொள்ள கருதிய 21 புத்த பிக்குகளை ஊனமாக்கிய மாணிக்கவாசகரின் வெற்றியும் அதன் பொருட்டு அவர் பெற்ற சிவன் அருளும் பின்னதற்குச் சான்றாகும்.

இவ்வியலின் நோக்கம் இறையருள் இல்லையே பெரும் புலவர்களும் தோல்வி அடைவர் என்பதை நிறுவுவதே.

முடிவுரை

தண்டபாணி சுவாமிகளின் காலத்தில் புலமை இல்லாதவர்கள் படைத்த வெற்றிலக்கியங்கள் மிகுந்திருந்தன. அவ்விலக்கியங்களால் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் இறை நெறிக்கும் பயன் இல்லை எனக் கருதி நல்ல இலக்கியங்களை இயற்றக்கூடிய புலவர்களை உருவாக்கும் பொருட்டு புலமை இலக்கணத்தை வகுத்தார். புலவர்களுக்கு தெய்வ அருளும் மொழி, நூல் புலமையும் ஐம்புல அறிவும் பெற்ற பின்னரே தெளிந்த புலமை ஏற்படும்.

புலவர்கள் நீதிவழி நின்று குற்றமற்ற நூல்களைப் படைக்க வேண்டும். கொலை, புலை, காமம் முதலிய உணர்வுகளைத் தூண்டுகின்ற நூல்களைப் படைப்பது குற்றமாகும். சிவபெருமான், உமை, அம்மை முதலிய தெய்வங்கள் உட்பட புலவர்களாக இருந்து வளர்க்கப்பட்டது தமிழ்மொழி. அத்தகைய மரபின் பெருமையை உணர்ந்து ஆற்றல் மிக்க நூல்களை படைக்க வேண்டும் என்கிறார். புலவர்கள் அருள் உணர்ச்சியுடன் நடுநிலையில் நின்று நிறை, குறைகளை சுட்டிக் காட்டிப் பிற புலவர்களை உருவாக்க வேண்டும். பணத்திற்காகப் புலமையை விற்கக் கூடாது எனும் முடிவுகளை நூலாசிரியர் வழி நின்று பெறலாம். இப்புலமை இலக்கணம் பாடத்திட்டத்தில் வைக்கப் பட வேண்டிய ஒன்றாகும். தனி ஆய்வாகவும் நூலாகவும் விளங்கும் தகுதியும் தேவையும் புலமை இலக்கணத்திற்கு உண்டு. இன்றைய படைப்பிலக்கண வாணர்களுக்கு இப்புலமை இலக்கணத்தை அறிமுகம் செய்வது அவசியமாகும்.

புலமை இலக்கணம் - ஒரு மதிப்பீடு

செ. சௌந்தரராசப் பெருமாள்

தோற்றுவாய்

செந்தமிழ் மொழி பழங்காலத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று இலக்கணங்களைக் கொண்டு விளங்கியது. தொல்காப்பியர் வகுத்த தொன்மை இலக்கண நூலாம் தொல்காப்பியத்தில் எழுத்து இலக்கணமும், சொல் இலக்கணமும் அமைந்து, பின் பொருளதிகாரத்தில் அகம், புறம் என்ற இரு பொருள்களும், செய்யுளியலில் யாப்பு என்ற இலக்கணமும், உவமையியலில் அணி என்ற இலக்கணமும் அமைந்து விளங்குவதைக் காணலாம். இவ்வாறு அமைந்த மூன்று இலக்கணங்கள் காலப்போக்கில் தனித்தனியாக அமைந்து எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து இலக்கணங்களாக விளங்கிய இயல்பைத் தமிழ் மொழியின் பல்வேறு இலக்கண நூல்கள் சிறப்பாகக் காட்டும். கால மாற்றத்தில் மொழிக்குப் பல்வகை வளர்ச்சிகள் அமைதலைத் தவிர்க்க முடியாது இத்தகைய பின்னணியில் தென்பாண்டி நாட்டில் தோன்றிய புலமையாளர் புதிய பார்வையை வகுத்தார்.

தமிழ்ப் பெரியார் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் என்பவர் கடந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிப் பெரும் புகழ் பெற்ற தன்மை இணையற்றது. சங்கரலிங்கம் என்ற இயற்பெயர் கொண்ட இப்புலவர் பெருந்தகை பல்லாயிரம் பாக்களைப் பாடித் தமிழ் மொழிக்கு ஒரு புதிய இலக்கணத்தைப் படைத்து, மகிழ்ந்தார். அந்நூல் 'அறுவகை இலக்கணம்' என்ற பெயரோடு விளங்கி வருகிறது. அவர் மேலே காட்டிய ஐவகை இலக்கணங்களோடு புலமை இலக்கணம் என்ற ஆறாவது இலக்கணத்தை வகுத்து அவை அனைத்தையும் ஒரே நூலில் பாடியுள்ள நிலை போற்றற்குரியது. எந்நிலையிலும் புதிய படைப்புக்களோ, புதிய இணைப்புக்களோ தமிழ் மொழியின்

பெருமைக்குப் புகழ் ஊட்ட முற்பட்டாலும் அவற்றை ஏற்றுக் கொள்வதுதான்அறிவுடைமை, திருவள்ளுவரும் தம் திருக்குறளில்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எனக் கூறியுள்ளமையைக் காண்போம். ஆதலின் இவ் ஆய்வுக் கட்டுரையில் புலமை இலக்கணம் என்பதன் கருத்துச் சுருக்கத்தை விளக்கமாகக் காண்போம்.

புலமை இலக்கணம்

புலமை இலக்கணம், நூற்காப்புச் செய்யுட்கள் முதற்கண் பாடப்பெறப் பின்னர் ஆறு பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. அவை தவறியல்பு, மரபியல்பு, செயல்வகையியல்பு, நடுநிலை, எதிர் நிலை, அருள் நிலை என்பனவாகும்.

நூற்காப்புச் செய்யுளில் தண்டபாணி சுவாமி அவர்கள் பல சிறந்த கருத்துக்களைப் 'புலமை இலக்கணம்' என்ற பெயருக்கு ஏற்ற வகையில் பாடுவது குறிப்பிடத்தக்கது. முதலில் புலமை பெறுவதற்கு அவர் காட்டும் விளக்கங்கள் சிறப்புடையன. ஒரு பொருளின் தன்மையையோ, ஒரு நூலின் பொருளையோ, ஒரு செயலின் சிறப்பையோ நன்கு அறிந்து தெளிவது தான் புலமை எனக் கூறப்பெறும். அறிவு விளக்கமுற வேண்டினால் அறிஞர் பழக்கமுற வேண்டும், இதை அவர் கூறுங்கால் ஒன்றினை "அறியும் தன்மையே புலமை" என்பார். அப்புலமை நால்வகைப் படும். அவை ஒரு பொருளைத் தெளிதல், தவறு கண்டு போக்கல், மரபு வழி போற்றுதல், செயல் வகையில் நிறைவு காணுதல் என்பனவாகும். நம் முன்னோர் கூறியவாறு நூல் பல கற்றல் சிறந்த தன்மை உடையது. புலமையினால் விளங்கிய வரை உலகு ஏற்றுப் பாராட்டும். "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பது நாம் அறிந்த ஒன்று. அகர எழுத்து முதல் அணியீறாக எல்லா நூல்களையும் பாவலர் இடத்தில் கற்றல் நன்றாகும்.

கற்றதன் பயன் வாலறிவன் நற்றாள் தொழுவது என்பது வள்ளுவம். அதையொட்டியே சுவாமிகள் கணபதி, முருகன், கலை மகள், உமையவள் என்னும் கடவுளை வணங்கி நூல் பல கற்றல் நன்று எனக் கூறுவர். ஒரு நூலின் துணையைக் காட்டிலும் தமிழ்க் கவிஞருக்குத் தெய்வத் துணையே நூறுபங்கு அருள்

சுரக்கும். நம் முன்னோர் "வில்லேர் உழவர் பகை கொண்டாலும் சொல்லேர் உழவர் பகை கொள்ள வேண்டா" எனக் கூறுவர். அதைப் போலவே சுவாமிகளும்,

"நூற்பகை கொள்ளினும் நுண்ணிய புலமைச்
சீரியர் தம்பகை சிறிதுமே காதே"

என்பர்.

உண்மைப் புலவோர் காட்டிய வழியில் சென்று, தெய்வத்தை வணங்கிச் சிந்தை மயக்கம் போக்கிப் பாடல் பாடுவது நல முடையது என அவர் கூறுவார். அடுத்து அவர் தமிழ்ப்பாக்களைப் பாடுவதில் உள்ள யாப்பின் நெறி முறைகளைக் கொண்டு கூறும் நயம் போற்றத்தக்கது. விருத்தப்பா என்ற ஒன்றை நன்கு தெளிந்த பின்னரே கட்டளைக் கலித்துறை என்ற பாடலைப் பாட முற்பட வேண்டும். அதுபோலவே ஆசிரியப்பா என்ற பாவகையை அறிந்த பின் தான் கலிப்பா, வெண்பா ஆகிய வற்றைப் பாடுதல் தகுதியுடையது. வெண்பாவையும், அதன் வகைகளையும் நன்றாக அறிவதற்கு முன்னர் வண்ணப்பாக்கள் பாடுதல் வழக்கமன்று. பிரபந்தங்கள் பற்றிய தெளிவான அறிவு பெற்ற பின்னர் காவியம் பாடுவதும், காவிய நிலைகளை நன்கு தெளிந்து தெரிந்த பின்னர் நூல் இனங்கள் இயற்றுவதும் உண்மையான புலமைக்குரிய நிலை ஆகும். நாம் வணங்கும் தெய்வத்தை வணங்கித்தான் ஒரு செயலைச் செய்வது மரபு. அப்பொழுதுதான் காலமழை எனப் புதுக் கவிதைகளை ஒருவன் பாட முடியும்.

சுவாமிகள் தெய்வச் சார்பைத் துணையாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய பின்னர் தமிழ்ச் சுவை அறியாத தெய்வங்கள் உண்டு என்றால் அது உலகில் அறமாகாது எனக் கூறுவது புதிய சிந்தனை ஆகும். பாரதியாரும் "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" எனப் பாடும் கருத்தினை உற்று நோக்குதல் சிறப்பு ஆகும். வாக்குச் சுவையும், அருட்திறனும் புலமைக்கு வழிவகுக்கும் தன்மை உடையவை.

தவறியல்பு

சுவாமிகள் உலகில் அறிவுடையோர்க்கும் சூழ்நிலை காரணமாகவோ, பல்வேறு சிந்தனைகளின் எழுச்சியாலோ சில

சமயங்களில் எதிர்பாரா வகையில் சில தவறுகள் நேர்வது இயல்பு என்பதை உணர்ந்து அதன் இயல்பைத் தனியாக எடுத்துக்காட்டுவார். புலமைத் தன்மை நலம் பயப்பது. ஒரு சிலர் சில நூற் கற்றுத் தம்மைப் பெரும் புலவராக எண்ணிக் கொள்வது அவரது இயல்பு. அதனைக் கண்டு அவர்களைச் சுவாமிகள் சாடுவர். இனி, பொருள் தேராப் புலவன் ஒருவனைச் சிந்தை நோகுமாறு படுத்தும் பாவலர்களை நெற்பதர் எனக் கூறுவர். சீரிய புலவர்களின் சிறந்த சொற்களைத் திருடிப் பலர் கவிதைகள் பாடுவது பெரும் தவறாகும். தம் தோல்வியை ஏற்றுக்கொண்டு தம்மைக் கண்டு வணங்கும் புலவனைச் சினங்கொண்டு அவன் காதினைக் கொய்தல் காரியம் ஆகாது.

தெய்வம் புகழும் சிறப்பும் செந்தமிழ்ப் புலவருக்கு உரிய சிறந்த நிலைகள், அவற்றை உணராப் புலவர்கள் புல்லியரே. கல்லான் ஒருவன் அவைக்கண் சென்று சொல்லாடுதல் தகுதியுடையது அன்று. அதுபோலவே கால வேற்றுமையைக் கருத்தில் கொள்ளாது வாழ்பவனும் புலவனாக மாட்டான். இக்கருத்துதனைச் சுவாமிகள் தம் நூலில்,

''அருமை அறியான் அவையிடைப் புகுந்து
பெருமை பாராட்டலும் ஏனையும் பிழையே''

'கால வேற்றுமை கருதாப் புலவன்
சீலனே யெனினும் சிறுமை யினனே'

எனப் பாடியுள்ளார். காரணம், காரியம் இவற்றைக் காணாத புலமை முழுமையாகாது. வள்ளுவர் ''அஞ்சுவது அஞ்சாமை பேதமை'' என்று குறிப்பிடுவர். இதைக் கருத்தில் கொண்டு அருட்பேராளர்களும் அஞ்சாப் புலமை மருட்சியுடையது என்பர் அடிகளார்.

ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட சமயங்கள் உள்ளன. இறைவன் ஒருவகையிலும் சமயங்கள் பலவாறு அமைதல் நடைமுறை இயல்பு. இனி நூல் வழியாகப் புலமை காண்போர் தாம் தழுவிய சமயத் தலைவர்களை வணங்கிப் போற்றுதல் சிறப்பாகும். உலகு போற்றும் அறிஞர் சொல்லையும், பொருளையும் ஒருவர் மேற்கொள்ளுதல் தவறாகாது தமிழ் மொழிக்கு உயர் மொழி தரணியில் உள்ளது எனக் கூறுதல் புலமைக்கு அழகு அன்று, மகளிர் தீஞ்சுவைச் சொல்லைக்

காட்டிலும் செந்தமிழ் இனிது எனக் கொள்வது பெருமைக்குரிய சிறந்த கருத்தாகும்.

மரபியல்பு

மொழியாக்கத்தில் மரபு என்ற ஒன்று நிலைபேறு உடையது. மரபினைப் பேணாச் செயல் முறைகள் அனைத்தும் வீணாகப் போய்விடும். தமிழ்ச் செய்யுள் உலகில் தெய்வத்துணைகளும், ஈடுபாடுகளும், போற்றுதலும் சிறப்பாகப் போற்றப் பெறு கின்றன. இந்நிலையை அன்றைய மரபு எனக் கொள்வது பொருத்தமுடையது. தருமி என்ற ஓர் ஏழைக்கு அருள் புரிய வேண்டி இறைவன், "கொங்குதேர் வாழ்க்கை ..." எனத் தொடங்கும் பாடல் காட்டும். குறுந்தொகை பாடலைப் பாடிய இறைவனும் புலவனே என்பதை உணர்த்தும் முருகப் பெருமானும், நாமகளும் சிறந்த புலவர்கள் என்பதைத் தமிழ் இலக்கியங்கள்காட்டும். சீர்காழி ஞானசம்பந்தர் பாடிய தமிழுக்கு இறைவன் அருள் புரிந்த தன்மையைத் தேவாரம் பகரும். அதனைச் சுவாமிகள்,

"என்பு பெண்ணாகவும் ஈனச் சமணர்
வன்கழு ஏறவும் மறைக்கத (வு) அடைக்கவும்
காழியூர்ப் புலவன் கழறினன் தமிழே".

என்று பாடியுள்ளார். நாவுக்கரசர் சமணர்களின் கொடுமைக்கு ஆளாகிப் பல்லவ வேந்தனால் துன்புறுத்தப்படும் பொழுது அவர் சிவனை நினைத்து, "மாசில் வீணையும் மாலை மதியனும்" என்னும் பாடலைப் பாடி இறைவனின் அருட் பெருமையை நினைத்துப் போற்றிய மரபு சுவாமிகளால் பாடப் பெறுகிறது.

"நீற்றறை குளிரவும் நெடுங்கை வேழம்
அஞ்சவும் கற்றூண் ஆழியில் மிதப்பவும்
பைந்தமிழ்ப் பாடல் பகர்ந்தா னொருவனே."

பாண்டி நாட்டு மன்னன் பல நாடுகளைக் கொண்டு அவைகளைத் தன்னாட்சி கொண்டு உரிமையோடு வாதவூரரை வேண்ட அவர் பாடல் வழங்கிய தன்மையைத் தமிழ் உலகு போற்றும். திருவள்ளுவரின் திருக்குறள் பொற்றாமரை மலர் மேல் மிதந்து வந்து மதுரையில் தந்த சிறப்புக் காட்சியைச் சுவாமிகள் தம் நூலுள்,

"பொற்றா மரையிற் பொருவரும் பொதுநூல்
வைத்து வென்றளிகூர் வள்ளுவன் புலமை
தமிழுடைப் பலர்க்கும் தாயெனத் தகுமே"

என்று பாடியுள்ளார். இவர்களன்றிக் காரைக்கால் அம்மையாரும், இன்னும் பல புலவர்களும் தங்கள் புலமையினாலும், இறையருளாலும் நாவன்மை கொண்டு பக்திப் பாடல்களைப் பாடிக் குறித்துப் பெருமை ஊட்டிய பல்வகை மரபுகளும் மிகச் சிறப்பாக மரபியலில் போற்றப்படுவதைக் காணலாம்.

செயல்வகை இயல்பு

ஒரு செயல் முற்றுப்பெற இன்றியமையாத அமைப்பு அதனைச் செயல்படுத்தும் இயல்பாகும். இதனை உணர்ந்த சுவாமிகள் தொழில் நிலையை எடுத்துக்காட்டுதல் குறிப்பிட்ட முழுமைச் செயலுக்கு ஆக்கம் தரும். உழைப்பால் உயர்ந்தோர் மிகப் பலர். வள்ளுவர் தம்முடைய திருக்குறளில் வினை செயல்வகை, ஆள்வினை உடைமை, எனக் கூறும் கருத்துக்கள் வையத்துள் ஒரு செயலை முடிக்கும் ஒருவருக்கு வேண்டியவை. சுவாமிகள் இதனைக் குறிப்பிடும் பொழுது தமிழுக்கும் தனக்கும் சார்தரு நிலைக்கும், தன் இனத்தினருக்கும் தவறு நேரா வண்ணம் முயல்பவனே புலமையைப் போற்றும் கருத்து உடையவன் ஆவான் என்பர். கல்லாதார் மகிழ்வுற வேண்டிக் கவித்திறம் காட்டுவதைக் காட்டிலும், வல்லார் மனம் மகிழுமாறு திருவாசகம் பயிலுதல் எண்மடங்கு உயர்ச்சி உடையதாகும். "எண்ணிய எண்ணியாங்கு எய்துப" என வள்ளுவர் கூறியவாறு எண்ணிய கருமத்தை உடனே முடிக்கும் புலமை உடையவன் ஒரு நாட்டு மன்னனுக்கு நிகராவான் என்று உலகு இயம்பும். புலமையினால் ஆண்மையும், புகழ்ச்சியும் கருதிப் பெற முயல்வதே தக்க பயனுடையது எனக் கூறுவார். இதில் சிறப்பாகச் செயல்படாமல் நெஞ்சு அயர்வோன் சூரியன் முன் ஆடுகின்ற பாம்புக் குட்டி போல் ஆவான் என்பர்.

நம் மக்கள் வாழ்க்கையில் கவிஞர்களை அவர்கள் வாழ்க்கைக் காலத்தில் பாராட்ட எவரும் முற்படுவதில்லை. நாடாளும் அரசும் புலவர்கள் இறந்த பின்னரே அவர்களுக்குப் பெருமை ஊட்டும் செயலை மேற்கொள்வர். இதைக் குறிப்பாக உணர்ந்த சுவாமிகள் தம் நூலில் அந்நாள் புலவர்க்கு ஆகிய பெரும் பேறும்,

உயர் புகழும், கனிவுமிகு பாராட்டும் இந்நாள் புலவருக்கு இல்லை என்பதைச் சுட்டும் பொழுது அவருடைய ஆழ் மனத்தின் கருத்து புலப்படுகிறது. இவ்வாறு நல்ல செயலுக்கு ஊக்கம் காட்டுதல் சிறப்பு என்பதனை வலியுறுத்தும் தன்மை வணங்கத் தக்கது.

நடுநிலை

வள்ளுவர் அறத்துப் பாலில் நடுவுநிலைமை என்று ஓர் அதிகாரமே பாடியுள்ளார். சான்றோர் துலாக்கோல் போல் அமைந்து ஒரு பக்கத்தில் வளையாது சமனாக நின்று நீதி காட்டுவதை அவர் ஓர் அறமாக வற்புறுத்துவர். சுவாமிகள்,

''கருதியும் புலவோர் சொல்லே யென்றிட
நடுநிலை யாமென நவில்வார் பெரியோர்''

என்று கூறுவது பொருத்தமுடையது. நன்றிடைத் தீது நேர்வதும், தீதிடை நன்மை நேர்வதும் இயல்பு. ஆதலால் நாம் இரு நிலையிலும் உண்மை உணர்ந்து நடுநிலை பேணி வழிகாட்ட வேண்டும். இன்பமும் தெய்வமும் இடைநிலைப் பொருள் எனப் பாடுவது புலவர்கள் வாய்மொழியாக அமைந்துவிட்டது. வழக்காடுவது உண்மையைக் கூர்ந்தறிவது நடுவு நிலைமைக்குத் தக்க சான்று ஆகும். தம்மோடு மாறுபட்ட புலவர்களுக்குத் தக்கவாறு அறிவுரை காட்டி நிலைப் படுத்துவதைத் தவிர்த்து வஞ்சகம் பேசி மேலும் உட்பகையைப் பெரிதுபடுத்தினால் விளைவது தீங்காகும். கவிப்புலமை யாருக்குமே ஒரே சீராக அமைவது இல்லை. பாடல் திறமை போலவே பிற தொழில் களில் நேரும் திறமையும் ஒரே நிகராக அமைவது இயல்பன்று. எனவே நாம் நலம் குன்றியவர்களை ஊக்கப்படுத்தி அவர் களுக்கும் கைகொடுத்து வாழ்வதுதான் சிறந்த நடுநிலை ஆகும் அன்றைய சூழ்நிலையில் பாடல் பாடுவதில் தோல்வியுற்றோர் பட்ட துன்பத்தைச் சுவாமிகள் காட்டுகின்றார்.

''வெண்பாத் தோல்வியில் விருதிழப்பதுவும்
வண்ணத் தோல்வியில் வார்செவி யிழப்பதும்
பழமை யாமெனல் பல்லோர் வழக்கே''

நடுநிலையில் நாமகள் போலும் கவிஞர்கள் உள்ளச் சிறப்பு கொண்டு அழகு நலன் பேணி வாழ்வதுதான் சிறப்புடையது.

எதிர் நிலை

எந்தச் செயலையும் உள்ளவாறு பாராட்டாமல் எதிர் நிலையில் வைத்துக் கூறுவதும் ஒரு வகை ஆகும். ஒருவன் தனக்கு எதிரே வீற்றுள்ள புலவனின் நற்றமிழ் நடை அவன் இரட்டை ஆசிரியத்தால் விளங்கும் எனக் கூறுவது எதிர் நிலை ஆகும். இறைவனுடைய பெருமையை உள்ளவாறு உணர்ந்து அவன் புகழ் பாடும் புலவர்கள் பிற புலவர்களைத் தாழ்வாக மதிப்பிடுவது பொருத்தமற்றது. தென்மதுரைக் கோவில் குளத்தில் சங்கப் பலகையில் மிதந்து வந்து போற்றப் பெறும் புலவர்களை அறிவுடையோர் ஏற்றுக்கொள்ளல் சிறப்பாகும். நீரிலும் நெருப்பிலும் அழியாத்தன்மை கொண்ட நூற் பெருமையை நினைக்கும் பொழுது அதைப் பாடிய புலவர்களின் சீரிய புலமை நன்கு விளங்கும்.

தாம் கருதிய தெய்வமும் கருமமும் கண்ணெதிரே காணார் புலமையைக் கண்டும் கயவர் அஞ்ச அவர்களை உயர்வாகப் போற்றுதல் சிறப்புடையது ஆகும். ஒன்றை எதிர்க்கும் கருமத்து இயல்பறிந்து அதற்குத் தக்கவாறு வழிமுறையைப் பின்பற்றிப் பேரறிவோடு வாழவைக்கும் புலவர் பெருமக்களை ஒரே வழியாக நாள்தோறும் போற்றுவது சிறந்த கடமையாகும்.

அருள் நிலை

சுவாமிகள் இறையருளை நாள்தோறும் முறையாகப் பரவிய வித்தகர். தம் நூலுள் அருள் நிலை பற்றிக் கூறும் பொழுது அவர் உலகு வாழ வேண்டி அறிவுரை கூறி ஆற்றுப் படுத்தும் புலவர் பெருமக்களைப் போற்றாத மன்னவர்கள் பட்ட துன்பங்களை எடுத்துக் காட்டுவர். இப்பகுதியில் அவர் அருள் பெற வேண்டிப் புலமைக்குரிய நிலையில் நலம் பேணும் மரபுக்கு வழிவகுத்துப் பாடியுள்ளார். மன்னவன் ஆணை மறுத்து ஒரு பாடல் பாடிய புலவன் கழுவில் துடித்து இறந்தான் எனக் கூறியவர் கவிதை ஒன்றால் சூரிய குலத்து மன்னவர் அனைவரும் அன்று மாண்டனர் என்பதையும் குறிப்பிடுகிறார். பிறரைக் கண்டு அவர் அறிவைப் பாராட்டாமல் இனந் தெரியாக் காரணத்தால் சீரழிவது பொருத்தமற்றது. ஒருவர் அறிவினை எடுத்துப் பாராட்டும் பண்பே மாண்புடையது.

மாறாக குறை கூறுவதும் அருள் காட்டாது வஞ்சிப்பதும் முறையற்ற செயல்கள். இந்நிலையில் அவர்

"மன்னரும் வியப்ப மணிமுர சதிர்தரப்
பொன்னெடுஞ் சிவிகை யேறிப் போய்வரு
நாவலடைந்து நாழிநெற் கூலி
கருதி வாடிய காதையொன் றுளதே".

எனப் பாடுவதைக் காண்க. 'கருவிலே திருவுடையார்' என்பது ஒரு பழமொழி. தாய் வயிற்றிலிருந்து தரணியில் பிறந்தவுடன் சிலர் பாடிய தமிழ்ப்பனுவல்கள் உலகில் பெரும் சிறப்புப் பெற்றன. உமையம்மையால் பால் ஊட்டப் பெற்ற ஞான சம்பந்தர் பாடியதும், ஊமையாய்ப் பிறந்த குமரகுருபரர் முருகனைப் பாடியதும் இறையருளால் அடியவர்கள் புலமை உடையவராக விளங்கிய நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும்.

நிறைவுரை

இவ்வாறு தவத்திரு தண்டபாணி சுவாமிகள் கருத்துப் பூசல் வேண்டா என்றும், சமய வாதங்கள் வேண்டா என்றும் இறைவன் ஒருவன் ஒருவனே என்ற கொள்கையை வலியுறுத்திப் பாக்கள் பாடியுள்ளார். திருமால், சிவன், முருகன், அம்பிகை, கணபதி, சூரியன் என எல்லாக் கடவுளர் மீதும் இவர் பாடியுள்ள பாக்கள் சமய சமரச நிலையைக் காட்டுவன. எம்மொழியிலும் தமிழே உயர்ந்தது என்று முருகன் அருள் மொழியைப் பரப்பியவர். அறுவகை இலக்கணத்துள் புலமை இலக்கணத்தைப் பாடி மிகச் சிறப்பான நூல் ஒன்றைப் படைத்த பெருமை இவருக்கு உரியது. அவர் புலமை வழி நின்று உலகு வாழ மனம் ஒன்றிப் பிறரைப் போற்றி வாழும் பெருமைக்கு வழி காண்போமாக!

சுவாமிகளின் கொல்லாமைக் கோட்பாடு

எம். ஞானப்பூங்கோதை

இறைவனை நினைத்து, உருகி வழிபட்டு அன்பு செய்யும் பெருமை பெற்றது மனிதப்பிறவி. உறுதி பயப்பது அவன் செய்யும் அறமேயாகும். அறமாவது தானம், தவம், விரதம், பூசை யெனப் பகுத்துக் கூறப்படுமெனினும் எல்லாவற்றிற்கும் மேலாக கொல்லாமையே சிறந்த அறமாகும். ''அறவினை யாதெனில் கொல்லாமை'' (குறள்; 324) என்கிறார் திருவள்ளுவர்.

உலகில் ஓர் உயிர் மற்றோர் உயிரைத் துன்புறுத்துவதையும், மனிதன் பிற உயிர்களைக் கொன்று ஊன் உணவு உண்பதையும் தண்டபாணி சுவாமிகள் அறவே வெறுத்தது மட்டுமல்லாது அதைக் கண்டு உள்ளம் நடுங்கி வருந்தினர்.

''கொலை முழுதும் இவ்வுலகில் தவிர்ப்பதில் நல்
லார்வம்மிகக் கொண்டுற்றாலும்
தலையாகப் பசுக்கொலையை முதலிலறப்
புரிவதெண்ணித் தவம் செய்திட்ட ...

தண்டபாணி சுவாமிகள் வலியுறுத்தும் கொல்லாமைக் கோட்பாட்டை இக்கட்டுரையில் காண்போம்.

கொல்லாமைக் கோட்பாடு

கொல்லாமைக் கோட்பாடு யாதொரு உயிரையும் கொல்லாமையேயெனினும், புலால் உண்ணாமையையும் இணைத்தே கூறப்படுகிறது. தன் உயிர் நீங்கினும், பிற உயிரைக் கொன்று அவ்வூனை உண்பதை ஒழிக (குறள்: 321) என்கிறார் திருவள்ளுவர். பல்லுயிர்களுக்குப் பகுத்துண்டு, அவ்வுயிர்களை ஊன் கொடுத்துப் பிறர் நலியாமற் பாதுகாத்தலே' அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

''பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை'' (குறள்: 326)

குற்றத்தினின்று நீங்கிய தெளிவுடையார் உயிரின்று நீங்கிய உடம்பை உண்ண மாட்டார். அன்றி புலால் உண்பவர் எவ்வளவு பெரிய ஞானியாக இருந்தாலும் அவர்கள் ஞானிகள் அல்லர் என்பது சுவாமிகளின் முடிவாகும்.

பிற உயிர்கள் பரிணாம வளர்ச்சியின் படி (Evolution Theory) வளர, வாழ உரிமை உண்டு. அதில் குறுக்கிட மனிதராகிய நமக்கு எந்த உரிமையும் இல்லை. We have no rights to interface in the evolution of other species.

கொல்லாமைக் கோட்பாட்டை வலியுறுத்த வேண்டியதன் அவசியம்

பண்டை நாளில் சிறு தெய்வங்கட்கு உயிர்ப்பலி நல்குவது இயற்கையாக இருந்தது. வேதங்களை நோக்கின், அவற்றிற் காணப்படும் இந்திரன் முதலிய தேவரனைவரும் வேள்வி வாயிலாகவும் வழிபாடு வாயிலாகவும் உயிர்களைக் கொன்று உண்ட செய்தி காணப்படுகிறது.

சமய தத்துவ உண்மைகளை உணர்வதற்கு ஆசாரங்களும் சடங்குகளும் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் காலஞ் செல்லச் செல்ல தத்துவ உண்மைகளை நினைவதை விடுத்து, ஆசாரங் களையும் விடுத்து வெறும் சடங்குகளை மட்டும் மக்கள் பிடித்துக் கொண்டனர். பெருந் தெய்வ வழிபாடு குறைந்து, சிறு தெய்வ வழிபாடும், அதனால் உயிர்பலியும், ஆடம்பர வழிபாடும் மட்டுமே நிலைபெற்றன.

நமது உயிர், உடல், உடைமை எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்வித்து பற்றற்ற வாழ்வை மேற் கொள்ள வேண்டும் என்பது அறவோர் வாக்கு.

"அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமையும் எல்லாமும்
குன்றே யனையஎன்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ" (குழைத்தப்பத்து: 6)

என்கிறது திருவாசகம்.

இத்தகைய நன்னோக்கத்தைக் கைவிட்டு, பிற உயிரை பலி கொடுக்க வேண்டும் என்று தவறாகப் புரிந்து கொண்டனர் மக்கள்.

மேலும் ஆங்கிலேயரின் வருகை, நம் நாட்டின் கலாச்சார, பண்பாட்டு சீர்குலைவிற்கு வித்திட்டன அவர்களால் புலால் உணவு மேற்கொள்ளுதலும் மிகுந்தன.

இந்நிலையில் தண்டபாணி சுவாமிகள், இராமலிங்க வள்ளலார் போன்ற ஆன்மீக பெரியோர் கொல்லாமையை வற்புறுத்தவும், புலால் உணவை எதிர்க்கவும் சீர்திருத்தங்கள் செய்ய முற்பட்டனர். காலப்போக்கில் மக்கட்கு மெய்யுணர்வு பெருகப்பெருக உயிர்ப்பலி வழங்கும் கொடுமை ஒழியத் தலைப் பட்டது. எனினும் இத்தகைய கொலைத் தெய்வ வழிபாடு முற்றும் தொலைந்தபாடில்லை.

கொலைப்பலியைத் தடுத்தல்

"கொல்லா விரதம் ஒன்றே கோதற்றது என்றுணராப்
பொல்லார் விழிஎதிர்ப்போய்ப் புண்படாது
ஆண்டருள்வாய் (நவரச மஞ்சரி: 46)

என்று கூறும் சுவாமிகள், வேள்வியின் பெயரால் கொலை புரிவதை மிகவும் எதிர்த்துப் போராடினார்.

"அவி சொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத் துண்ணாமை நன்று" (குறள்: 258)

என்னும் திருவள்ளுவர் வாய்மொழியினை எடுத்துக் கூறி பல இடங்களிலும் அறிவுரை கூறி வந்தார். அவர் வாழ்வில் நடந்த சில சம்பவங்கள் இதனை நமக்கு தெளிவுறுத்துகின்றன.

ஒருமுறை திருவொற்றியூரில், வட்டப்பாறை நாச்சியார் என்ற காளி முன்,

"ஒற்றியூர்க் காளீ உனக்கேனோ உன்விருப்பம்
வெற்றிமழு வோன் விருப்பு வேண்டாவோ-சிற்றுயிரைக்
கொல்வார்க்கும் இன்பங் கொடாதான் அவன்கண்டாய்
நல்வார்த்தை சொன்னேன் இந் நாள்"

என்று பாடி கொலைப்பலியை ஏற்காதிருக்குமாறு வேண்டினார். விழுப்புரத்தை அடுத்துள்ள கோலியனூர் மாரியம்மன் முன்பும் இதேபோல் பாடியருளினார்.

"வேள்வியிற் செய் கொலைத்தொழிலும்
வேண்டாத மெய்யடியார்
தாம் விழையும் தமியேன்
சொல் தமிழணிதற் கிசையாவோ"

(நவமணி மாலை: 76)

என்று கூறும் சுவாமிகள், ஒருமுறை பழனிக்குச் செல்லும் வழியில் ஒட்டன் சத்திரத்தையடுத்த துமிசம்பட்டியில், ஒருவன் தன் மகனின் தீராத வயிற்றுவலிக்காக தீர்ந்ததற்காக அங்குள்ள சந்நாசியப்பனுக்கு ஆடு வெட்டி பலியிடுவதற்கான ஏற்பாட்டை செய்து கொண்டிருந்தான். இதனைக் கண்ட சுவாமிகள், "அடே, மகன் வயிற்றுவலிக்கும் ஆடு பலிக்கும் என்ன சம்பந்தம்? ஆட்டை கொல்லாமல், பழம், பால் வைத்து பொங்கல் படை. என் சொல்லைக் கேள்" என்றார். அவனும் சுவாமிகளின் பேச்சை ஏற்று நடந்தான். ஆனால் உடனே மகனுக்கு மீண்டும் வயிற்று வலி வர அங்குள்ளோர் அனைவரும் கூடி "இது பொல்லாத தெய்வம் பலி கொடுத்தே ஆக வேண்டும்" எனக் கொலைப் பலிக்கு வற்புறுத்த, சுவாமிகள் "சிறுவனின் வயிற்று வலியை நான் தீர்த்து வைப்பேன். கொலை புரியவிடேன்" என்று கூறி, சிறுவனுக்கு பூசை செய்த நீரைத் தெளித்து திருநீற்றைப் பூசி,

"அயிற்றலைவா தென்பழனி யப்பாஇச் சேயின்
வயிற்றுவலி முற்றுமற மாற்றி-வெயிற்புழுப் போன்(று)
ஏழைகள் வாடப் படுத்தும் இப்பேய் உயிர்குடித்துட்(டு)
ஊழை வென்றோர் உண்டெனன் றுணர்த்து"

என்று பாடினார். வயிற்று வலியும் தீர்ந்தது. ஆடும் பிழைத்தது. ஊர்த் தலைவரிடம் "ஆட்டைக் காப்பாற்றி, அது தானே இறந்தபின் மண்ணில் புதைத்திடுக" என்று கூறினார்.

இதுபோன்றே திருவாமாத்தூரில் பெரியாண்டவனுக்கெனச் செய்யப்படவிருந்த பன்றிக் கொலையை நிறுத்தினார்.

பழநி மலையின் நடுவே உள்ள இடும்பன் கோயிலில் பலிபூசை நடைபெறுவதைக் கேள்வியுற்றார். அதற்காக வேறு வழியில் வருமாறு பணித்த பழனி முருகனிடம் "கொலைபூசைக் கூடாது என்று தடை செய்ய முடியாதா?" என வியந்து,

''பாடுமன்பர் போற்றும் பழனிமலைப் பாதியில்நின்று
ஆடும் இடும்பர் அறையக்கேள் – நீடும்
கொலைகண்டு மாமிசம் உட்கொண்டுவக்க வேண்டாம்
நிலைகண்டு மெய்யருளில் நில்''

என்று பாடி உயிர்க் கொலை நிகழும் முறையை நீக்கினார். பழநிமலை அடிவாரத்தில் உள்ள கருப்பண்ணன் கோயில் கொலைபூசை இல்லை என மகிழ்ந்து, கருப்பண்ணன் ஊனுண்ணாத சைவமாய் இருப்பது பற்றி,

''தெய்வப் பழனித் திருமலையின் முன்னிற்கும்
சைவக் கருப்பண்ண சாமியே – பொய்மைக்
கருப்பண்ண சாமியெல்லாம் காட்டாட்டுன் வேண்டா
வெறுப்பண்ண செய்வாய் விரைந்து''

என்று பாடி எல்லா கருப்பண்ண சாமியையும் ஊனை வெறுக்கச் செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

புலால் மறுத்தல்

கொல்பவரையும், கொன்றதைத் தின்பவரையும் வென்று நல் வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே கௌமாரர் கொள்கை என்று,

''கொல்வாரும் கொன்றதைத் தின்பாரும் ஏகை குணம்
பொருந்த
வெல்வான் முயலும் கவுமாரர்ச் சூழ்ந்து, மிகப்புரப்ப
நல் வாழ்க்கைத் தொண்டர் வாழ் பழனி நகர் … …''
(பழனித்திருவாயிரம்: அலங்காரம்: 39)

என்ற பாடல் மூலம் சுவாமிகள் எடுத்துக் கூறுகின்றனர்.

''… … … … பருவமும் எய்தா
நசும்புக் குருளையும் நரர்கொலும் கொடிதும்
சில மிருகங்களின் செங்குலை பிடுங்கிப்
பல் விசை இலைமிற் படைப்பதும் கேட்டுத்
தீயிற் புழுபோற் சிந்தை நோவுந் துயர்
நாயிற் கடையேன் நடுத்தலைக் கேற்றினேன்…''
(பழனித்திருவாயிரம் நவமணிமாலை: 80)

என்று புலால் உண்பவரைக் கண்டுத் தீயிற் பட்ட புழுபோல் சுவாமிகள் துயரம் அடைகின்றனர்.

ஆங்கிலியரைச் சாடுதல்

ஆங்கிலியரின் வருகையாலேயே நம் நாட்டில் புலால் உணவு மிகுந்தது என்று கருதுகின்றனர் சுவாமிகள்.

''இரக்கம் அணுவளவேனுமில்லாமல் இளம்பசுக் கன்று
அரற்ற அரிந்து வெந்து உண்டு குலாவிடும் ஆங்கிலியர்...''
(ஆங்கிலியர் அந்தாதி: 5)

என்று கூறி அவர்களை பாம்பின் வாயிற்பட்ட தேரையாகப் படுத்தி வெல்வதற்கு வரம் தர வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுகின்றார்.

''வெய்ய கொலைத் தொழில் மேற்கொண் டொழுகிடும்
வீணர்களைப்
பையரவின் கனல் வாயத்தேரையாக படுத்துதற்காம்
செய்யவரம் எனக்கிய ஒண்ணாது கொல்..'' (பா. 72)

என்று ஆங்கிலியர் அந்தாதியில் இவர்களைச் சாடுகிறார்.

''நரர் போல் உருப்பெற்றும் நாயுணவே உண்டு
நாட் கழிக்கும்
கரவாளர் தம்குடைக்கீழ் பட்டு ...'' (பா. 72)

தாம் வாடுவதாகக் கலங்குகின்றார். மேலும் அவர்களை,

'' . ... பசுவும் மற்றைய பலஉயிர்க் கூட்டமும்
கயங்குறக் கொடுங் கோல் ஓச்சும் பாதகர்...''
(பழனித்திருவாயிரம்: நவமணிமாலை : 60)

என்று சாடுகிறார்.

கொலையை தடுக்காதவிடத்து முத்தியும் வேண்டாமை

''கோவதைக்கும் பொல்லார் குடிகேடு காண்பதன்முன்
சாவதற்ற முத்திபதம் தந்தாலும் – மேவற்கு
இசையேன் காண் .....''
(பழனித்திருவாயிரம் வெண்பாமாலை : 3)

என்று கோவதை போன்ற தியசெயல்களைச் செய்வாரைத் தண்டிக்க வேண்டும்: எதிர்த்துப் போரிட வேண்டும் என்கிறார். கொலைக் குணமுடையவர்களை, மறச்செயல் புரிந்தாவது, சீவகருணை நன்னெறியை அவர்கள் பின்பற்றும்படிச் செய்ய வேண்டும்: அவர்களை நல்வழிப் படுத்தவேண்டும். அவ்வாறு

செய்யாமல் அதில் நாட்டமின்றி முத்தி பெற முயல்வது இழிவானதாகும் என்பது சுவாமிகளின் கருத்தாகும்.

"மேட முதலாம் மிருகங்கட் கொன்று தின்பார்
ஈடழிக்கினன்றி வலிது ஈந்தாலும் – விடடையேன்"…….
(பழனித்திருவாயிரம் வெண்பாமாலை: 90)

என்கிறார்.

"கொன்று செய்யும் பூசைக் கொடியார் அனைவரையும்
வென்று மகிழ ….. ……….."
(பழனித்திருவாயிரம் வெண்பாமாலை: 91)

வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டு, திருப்பரங் குன்றம், மதுரை, பழனி, தில்லை, திருவண்ணாமலை, விழுப்புரம், சென்னை – கந்தக்கோட்டம், இன்னும் பல இடங்களுக்கும் சென்று கொல்லாமை நெறியைப் பரப்பி மேன்மைகொள் சைவநீதி எங்கும் விளங்கச் செய்தனர் சுவாமிகள்.

சுவாமிகளும் இராமலிங்க வள்ளலாரும்

வாடிய கண்டபோதெல்லாம் வாடிய இராமலிங்க வள்ளலாரும் சுவாமிகளும் சமகாலத்தவர் என்பதோடு கொள்கைகளிலும் ஒருமைபாடு உடையவர்கள் ஆவர். கொல்லாமையை ஒப்புயர்வற்ற கொள்கையாகக் கொண்டு சுத்த சன்மார்க்கத்தை அருளியவர் வள்ளலார்.

"கொலைபுரிபவர் தவிரமற்றை எல்லாரும் நினது
குலத்தாரே நீ எனது குலத்து முதல் மகனே……"
(அருள்மாலை விளக்கம்: 70)

என்றும்

"கொடியவரே கொலை புரிந்து புலைநுகர்வார்…" என்றும்
(அருள்மாலை விளக்கம் : 73)

"கொல்லா நெறியே குருவருள் நெறியெனப்
பல்கால் எனக்குப் பகர்ந்தமெய்ச் சிவமே"
(அருட்பெருஞ்சோதி அகவல். 482)

என்றும் கூறும் வள்ளலார், சுவாமிகளுடன் ஒத்த நட்பும் கருணையும் உள்ளவராய்த் தோழமை பூண்டு விளங்கினார். சுவாமிகளைப் போன்றே வள்ளலாரும் கொலை செய்வோரை

யும், புலால் உண்போரையுங் கண்ட போதெல்லாம் நடுக்கம் எய்தினார்.

இதனை,

"துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்
கண்ணினால் ஐயோ பிறவுயிர் பதைக்கக்
கண்ட காலத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணி
வகைகளும் கண்ட போதெல்லாம்
எண்ணி யென் னுள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தை நின் திருவுள மறியும்"

(திருவருட்பா மணிமாலை: 24)

என்றும்

"புண்புலா லுடம்பின் அசுத்தமும் இதனிற்
புகுந்து நானிருக்கின்ற புணர்ப்பும்
என்பொலா மணியே யெண்ணிநான் யெண்ணி
ஏங்கிய ஏக்கம் நீ யறிவாய்
வன்புலா லுண்ணும் மனிதரைக் கண்டு
மயங்கி யுள்நடுங்கி யாற்றாமல்
என்பெலாங் கருக இளைத்தனன் அந்தோ
இளைப்பையும் ஐயநீ றறிவாய்"

(திருவருட்பா மணிமாலை: 25)

என்றும் அவர் பாடியிருப்பதன் மூலம் நாம் அறியலாம். அக்கால கட்டத்தில் கொலையை எதிர்த்து சீர்திருத்தம் செய்தவர்களில் இவர்கள் இருவரும் குறிப்பிடத் தக்கவராவர்.

முடிவுரை

இன்றைய அறிவியல் உலகத்தில் பழைய அறிவற்ற கண்மூடிப் பழக்கவழக்கங்கள் ஓரளவிற்கு மறைந்து விட்டன என்று கூறலாம். புலாலுண்ணாமை சிறந்தது. சைவ உணவே உயர்ந்தது என்ற உண்மையும் உலகம் எங்கும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. இச்சமயத்தில் அன்பே சிவம் எனக் கருதி எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டு ஒழுகும் இயல்பை மக்களிடையே

வளர்க்கப் பாடுபட்டு இறுதியில் எல்லைதாண்டா விரதமிருந்து தமது அறுபதாம் வயதில் இறைவனடி சேர்ந்த தண்டபாணி சுவாமிகளின் உண்மை நெறியை உலகம் அறியச் செய்ய வேண்டுவது நமது கடமையாகும்.

"கொல்லா நெறிபற்றிக் குவலயத்தில்
எல்லாரும் வாழக் கருதுகின்றேனுக்கு இரங்கு......"

(ஆங்கிலியர் அந்தாதி: 43)

என்று கூறி வேலவன் துணையுடன் பல நூறாயிரம் பாக்கள் பாடி, மக்களுக்கு நல்வழி காட்டிய சுவாமிகளின் திறமை போற்றுதற்குரியது. அவர்தம் நூல்கள் என்றும் பாதுகாத்தற் குரியன. அவர்தம் கொள்கைகளை - கொல்லாமை நெறியை நூல் அளவில் வைத்துவிடாமல் வாழ்க்கையிலும் பின்பற்றிப் பயன் பெறுவோம்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

(குறள்: 259)

தமிழைப் போற்றுதல்

சி. தங்கவேலு

தமிழ் மக்களின் நாகரிக வாழ்க்கைக்கும், அவர்தம் ஒளி விளக்கத்திற்கும் அடிப்படையாக அமைந்தது தமிழ் மொழியே. நினைவு, மொழி, செயல் என்னும் மூன்றினும் 'மொழி' நடுவில் நின்று, ஏனைய இரண்டினையும் மாட்சிமைப்படுத்தி வருகின்றது. அவ்வகையில் மொழி என்பது தமிழ் மொழியையே சிறப்பாகக் குறிக்கும்.

தமிழ் மொழியானது, தமிழ் மக்களின் வாழ்வியல் நெறிகளை எடுத்தியம்பும் சிறப்பு வாய்ந்தது. தமிழ் மொழியில் 'இயற்றமிழ்' என்பது ஏனைய இசை, நாடகத் தமிழ்கள் போலச் செயற்கையுடன் கலவாது, முற்றும் இயற்கை அமைதியே உடையது. ஆதலால் அறிஞர், இயற்றமிழையே பெரிதும் சிறப்பித்துக் கூறுவர். அத்தகு தெய்வ ஒண்டீந்தமிழினை, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அவர்கள் இயற்றிய நூல்களில் எவ்வெவ்வாறு சிறப்பித்துப் போற்றுதல் செய்துள்ளார் என்பது இவ்வாய்வில் இடம் பெறுகின்றது.

இன்றைக்கு ஒருநூற்றறுபது ஆண்டுகட்கு முன் (1839) தென்பாண்டி நாட்டுத் திருநெல்வேலித் தலத்தில், தமிழ்நாடு செய்த தவப்பேற்றினால் தோன்றித், தம் எட்டாம் அகவை முதல் அரிய செந்தமிழ்ப் பாடல் பல்லாயிரம் பாடி, 59 ஆண்டு வரை (1898) உலகில் அருஞ்செயல்கள் ஆற்றிய மகான் தண்டபாணி சுவாமிகள் ஆவார். இவருக்கு முருகப் பெருமான் நிட்டையில் காட்சி நல்கினார்.

அறுவகை இலக்கணம் அருளிச்செய்தல்

தமிழ் மொழிக்குரிய எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் இலக்கணங்கள் ஐந்துடன், புலமைக்குரிய இலக்கணமும் சேர்த்து, சுவாமிகள் "அறுவகையிலக்கணம்"

என்னும் அரிய நூல் ஒன்றனை 786 சூத்திரங்களில் ஓதினர். இந்நூலினை அரங்கேற்ற எண்ணி அணியமாயினர். அதிகாலை, உள்ளூர்ப் புலவர்கள் சிலர் அழுக்காற்றால், அவையில் வரும் வினாக்களுக்குரிய விடையிறுக்கும் வீறுடன் செல்க என்ற செய்தியை இவருக்கு எட்டுமாறு செய்தனர். அதற்குப் பதிலாக ஒரு பாட்டினை எழுதியனுப்பிவிட்டு, அவைக்குச் சென்றார்.

"ஓதுவார் கவிராயர் எனும்பெயரே
மலைவிலக்கென் றுன்னி வாழ்வீர்
வாதுபா டத்துணிந்து வரவேண்டாம்,
வருவீரேல் வண்ணப் பாட்டு
காதுதான் வேண்டுமென்று கடிக்கவரும்
இதுபழமை கண்டீர் எங்கள்
மோதுவேற் குருபரன்றான் முழுதுணர்ந்த
புலவனெனு மொழிபொய் யாதே"

என்பது அத்தனிக் கவியாகும்.

தமிழே உயர்ச்சியென்று சீட்டுப் பெற்றமை

வேதம் வடமொழியில் தோன்றியதென்றனர். தமிழிலும் வேதம் உண்டு. ஆனால் ஆட்டை வதைத்து ஊன் அவிபெய்து உண்ணும்படி தமிழ்வேதம் கூறவில்லை,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று" – என்பது தமிழ்மறை தமிழ்மொழி அக்கரலோபத்தினது என்றவர்க்கு, இவர் ஏகரம், ஒகரம், இன்னும், "ற, ன, ழ" ஆகியனவும் வடமொழியில் இல்லையாதலால் அஃதும் அத்தகைத்தே என்றனர். இப்படி வாதம் சமமாகி இரவு முற்றும் இருந்தது. பின் இரு தரத்தினரும் ஒருமித்துத் திருவுளச்சீட்டுப் போட முடிவு மேற்கொண்டனர். தமிழ், வடமொழி, இரண்டும், காலம், நாடு, குலம், மானம் என்றவாறு ஏழு சீட்டெழுதி, வேலாயுதத்தின் முன்பு இட்டு, சிறு கன்னிகை மூலம் எடுப்பித்தனர். இதில் 'தமிழே உயர்ச்சி' என்ற சீட்டு எடுக்கப்பெற்றது.

அவர்கள், நீங்கள் வணங்கும் தெய்வம் உங்கட்கிசைந்த முடிவைக் கொடுத்தது என்றனர். அது கேட்ட தண்டபாணி சுவாமிகள் நாததத்துவம் கடந்த பரம்பொருள் எனக்குச் சொந்தமானது என்றால், என் கொள்கையே சிறந்தது என்று

கூறியதுடன், அந்தச் சீட்டினைத் தலையில் தரித்துக் கண்ணினும் ஒன்றி மகிழ்ந்து, பின் வாயிலிட்டு மென்று உண்டார். ''தமிழே உயர்ச்சியென்று சீட்டுக் கொடுத்த பெருமாளே'' என முடியும் ஒரு அற்புதத் திருப்புகழ் பாடினார். அதன்பிறகு, ''தமிழலங் காரம்'' என்ற நூலில், நூறு கட்டளைக் கலித்துறைகளால், பல வரலாறுகளைச் சான்று கூறித் தமிழ்மொழியைப் போற்றியுள்ளார்.

''தமிழ்மொழிக் குயர்மொழி தரணியில் உளதெனில்
வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே''

என்று அறுவகையிலக்கணம் - புலமையிலக்கணத்தில் (63) குறிப்பிடுகின்றார்.

இத்தகு தெய்வநலந் திகழும் தமிழினைச் சுவாமிகள் கீழ்க்கண்ட வகையில் தம் நூல்களில் ஆங்காங்கு, சிறப்பித்துப் போற்றுதல் செய்கின்றார். தமிழினுடைய இனிமையைச் சுட்டும் பொழுது - செந்தேன் (புல. 1082); இன்தமிழ் (புல. 1743, 1969); கன்னலின் பாகனைய தமிழ் (புல. 2063); கன்னலம் பாகே என்னக் கவித்தமிழ் (புல. 2063, 2113); முப்பழச்சாறு அன்ன தமிழ் (பழனி. நவ. 18); என்றும், தமிழின் நறுமையைச் சுட்டும் பொழுது நறுந்தமிழ் (புல. 1151, 1449); நறியதமிழ் (புல. 1776); எனவும், தமிழின் முதிர்ந்த நிலையைக் குறிப்பிடும்பொழுது, முதிர்தமிழ் (புல. 704, 1714); முதிர் பழமைச் சங்கத்தமிழ் (பழனி வகுப்பு. 1); முதிர் சொற்பருவ முத்தமிழ் (பழனி. கலம். 5); என்றும் கூறி மகிழ்கிறார்.

மேலும் தமிழின் வண்மையைச் சுட்டும்பொழுது வண்டமிழ் (புல. 710, 858, 2019); என்றும் தமிழின் மும்மையைச் சுட்டுகின்ற பொழுது, முத்தமிழ் (புல. 1203, 1228, 1378, 1520); தெய்வ முத்தமிழ் (புல. 1837); இன்னிசைச் செந்தமிழ் (புல. 1881, 2342); கும்பன் அளித்த முத்தமிழ் (புல. 1908); என்றும், தமிழின் பசுமையை நினைந்து பைந்தமிழ் (புல. 1219, 1735, 1943, 1964); என்றும், தமிழின் செழுமையைச் செப்பிடும் பொழுது, செழுந்தமிழ் (புல. 883, 1043, 1077, 2259, 2494); இலகு செந்தமிழ் (புல. 2494); பழுதிலாத செழுந்தமிழ் (திரு. சந்த. திருப். 39); கோலாகலக் கோமளத் தமிழ் (பழனி பிள்ளை. 71); என்றும் மொழிந்து அகமிக மகிழ்கிறார்.

மேலும், தமிழின் ஒண்மையைக் குறிப்பிடும் பொழுது ஒண்டமிழ் (புல. 711, 1177, 2111); எனவும், தண்மையைக் குறிப்பிடும் பொழுது தண்டமிழ் (புல. 1717, 816, 2111); என்றும், தமிழின் அருமையை கூறும்பொழுது அருமைத் தமிழ் (புல. 39, 941, 979, 1028, 1044); என்றும், பாலொடு தேன் போலும் அருந்தமிழ் (புல. 67); எனவும், தெளிவினைச் சுட்டும் பொழுது தேறுதமிழ் (புல. 2521); என்றும், நாகரிக மிகுதமிழ் (திரு. சந்த திருப் 26) எனவும், தமிழின் அழகுநிறம் பற்றிக் குறிப்பிடும்பொழுது செந்துவர் புரையும் தமிழ் (புல. 1697); வண்ணத்தமிழ் (புல. 1846); (பழனி. வெ மாலை. 37); என்றும், புலவர்களுடன் சேர்த்துத் தமிழினைக் குறிப்பிடும்பொழுது, செந்நாவலோர் புகழ் செழுந்தமிழ் (புல. 2066); என்றும், குறிப்பிட்டு இன்புறுகிறார்.

மேலும் தமிழின் தெய்வத் தன்மையை நினைவு கூர்ந்து திருமலி தமிழ் (புல. 2098) என்றும், தமிழின் அழியாமையை அறையும்பொழுது கன்னிகையனைய செந்தமிழ் (புல. 2101); எனவும், அகத்தியருடன் சேர்த்துச் சுட்டும்பொழுது, கும்பந் தன்னிடை உதித்தோன் தமிழ் (புல. 1723); கும்பன் அளித்த முத்தமிழ் (புல. 1908); எனவும், பாவுடன் சேர்த்துச் சொல்லும் பொழுது கவித்தமிழ் (புல. 1798, 1955) என்றும், நன்னயக் கவிச்சீர் ஓர்ந்த நறுந்தமிழ் (புல. 2343); எனவும், தமிழின் ஒப்பின்மையை நினைந்து ஒருதமிழ் (புல. 2249); என்றும், வழுவின்மையைக் குறிப்பிடும்பொழுது வழுவிலா உயர்தமிழ் (புல. 1987); எனவும்; தேவர்களுடன் சேர்த்துச் சுட்டும் பொழுது இந்திரன் முதலோர் மெச்சிடுதமிழ் (புல. 1937); நாளும் அண்டரும் கொண்டாடும் நறுந்தமிழ் (புல. 2476); எனப் பலவாறு, நூல்கள் தோறும் தண்டமிழைப் போற்றுதல் செய் கின்றார் தண்டபாணி சுவாமிகள்.

தமிழ்மொழி தனித்தியங்கும் வல்லமையுடையது, ஏனைய மொழித்துணை கொண்டு வழங்கவேண்டிய கட்டாயமில்லை என்னும் கருத்தில், தமிழ் மொழியைப் போற்றும் முகத்தான், தம் காலத்திற்கு முற்பட்ட சில வரலாறுகளின் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

நக்கீரரைச் சிறைவீடு செய்ததும் தமிழ்

பூதத்தால் மலை முழையில் அடைக்கப்பெற்று வருந்திய நிலையில் நக்கீரனார் திருமுருகாற்றுப்படையைப் பாடி முருகப் பெருமானால் சிறைவீடு செய்யப்பெற்று உய்ந்தார். அங்ஙனம் உய்வதற்குக் காரணமாக இருந்தது தண்டமிழே எனத் தண்டபாணி சுவாமிகள் அருளிச் செய்கின்றார்.

> "பருப்பதத் தூடொரு பேயையும் செற்றுப் பதைபதைத் தாங்கு
> இருப்பவர் ஆயிரம் பேரையும் காத்து"-

என்றும்

> "... ... ... பாமாலை ஒன்றையும் மேதகுசீர்த்
> திருப்பரங் குன்றில் ஒருதமிழ்ப் பாவலன் செய்தனனே"
> (த. அ. 51)

என்றுங் குறிப்பிடுகின்றார்.

ஊமைதனைப் பாடும்படி செய்த தமிழ்

பிறந்து ஐந்தாண்டுவரை ஊமையாயிருந்த குமரகுருபரரைப் பேசும்படி செய்த மொழி தமிழ்மொழி. அத்தமிழ்மொழி கொண்டு அலைவாய் அரசாம் முருகப்பெருமானைப் பாடிப் பரவிய காரணத்தால்தான், பேசுந்திறத்துடன் ஐந்து வயதிலேயே 'பூமேவு' எனத் தொடங்கும் கவிபாடுகின்ற அருளாற்றலும் குமர குருபரற்கு வாய்த்தது இதனைச் சுவாமிகள்

> "... ... ... செந்திலில் ஓர்
> ஊமைக் குழந்தை அருளாற் பயின்றிட்டது ஒண்தமிழே"
> (த. அ. 64)

எனக் குறிப்பிடுகின்றார்.

வெட்டப்பட்ட தலைகளை ஒட்டும்படி பாடிய தமிழ்த்திறம்

சோழ மன்னவனது அரசவையின் முன், வெட்டப்பட்ட செங்குந்தர் ஆயிரவர் தலைகளைப் பழையபடி ஒட்டும்படி பாடியருளை வெளிப்படுத்திய ஒட்டக்கூத்தர், வாயிலிருந்து வந்தமொழி ஒண்டமிழ்தான் எனச் சுவாமிகள் தெய்வ ஒண்டீந் தமிழின் ஆற்றலை,

"மாமிரு ஞாலத்து மன்னவர் போற்றும் வளவன்மணிக்
கோயில் முகப்பில் தறிபட்டு வீழ்ந்தகைக் கோளர்தலை
ஆயிரம் ஒன்றும் படிபாடி னானும் அரியதமிழ்
வாயினன் அல்லது மற்றோர் கலைபயில் வாணன்அன்றே"
(த. அ. 65)

என்றிவ்வாறு போற்றுகின்றார்.

அம்பிகாபதியை உய்வித்த தமிழ்

கம்பரும் அவர் மகன் அம்பிகாபதியும் சோழமன்னன் அரண்மனையில் அமுதுண்ணும்போது அமராபதியைப் பார்த்து "எட்டடி நோவ" என்ற மகன் பாட்டுக்கிசையக் "கொட்டிக் கிழங்கு" என்று கம்பர் பாடி முடித்தனர். அப்படி இருவரும் ஒட்டிப் பாடியபடி கலைமகள் கிழங்கு விற்பவளாக வந்தாள். இது தமிழின் சிறப்பினைப் போற்றுதலாகும். இதனை,

"கட்டிக் கரும்பொடு செந்தேனும் நாணும் கவித்தமிழால்
ஒட்டிப் புலவர் இருவர்முன் பாடும் ஒருகவித்தாகச்
சிட்டித் தொழிலுடை யான்மனை யாட்டி தெருவில்வந்து
கொட்டிக் கிழங்கெனப் பல்கால் வலைச்சியிற் கூறினளே"
(த. அ. 74)

என்று தம் தமிழலங்காரத்தில் போற்றுகின்றார்.

அபிராமப் பட்டருக்கு அருளிய அருந்தமிழ்

பேரழகியாம் உமையம்மையைத் தம் வழிபடுதெய்வமாகக் கொண்ட அபிராமப் பட்டர், அரசனிடத்தில் காருவா நாளினை, நிறைநிலா நாளாகக் கூறினார். அரசனோ இருள்செறிந்த நாளில் மதியத்தைக் காட்டுமாறு கட்டளையிட்டான். அதற்கு அஞ்சிய அபிராமப் பட்டர் அம்மையை நோக்கி அபிராமி அந்தாதி பாடினார். அப்பொழுது அம்மையானவள் தம் காதணி ஓலையினை எடுத்து விண்ணில் வீசவே, அது பேரொளி வீசும் தண்ணிலவாய்க் காட்சியளித்தது. இவ்வாறு நிறையிருள்வானில் நிறைநிலவாகக் காட்சியளிக்குமாறு செய்தது தமிழே என்பதைச் சுவாமிகள்,

"கடவூர் மயானத்தோர் அந்தணன் புந்திக் கலக்கத்தினால்
அடல்வேந்தன் தன்னெதிர் சொல்லிய வண்ணம்
அமலைதன்காது

இடலாய ஓலையொன் றால்மதி தன்னை இருட்டிரவில்
திடமா உதித்திடக் காத்தலும் செந்தமிழ்ச் சீர்விழைந்தே''
(த.அ.69)

என்று தமிழ் அலங்காரத்தில் போற்றுகின்றார்.

தமிழாகிய தெய்வத்திடம், தவமும் மெய்யருளும், ஆண்மையும் வேண்டல்

சுவாமிகள் உயர்தமிழை முன்னிலைப்படுத்தி,

''கவலை வாரிதி யிடைப்படு தமியனேன் கருத்தில்
தவமும் மெய்யருள் ஆண்மையும் பொருந்திடத் தாராய்''
(த.து.ப.2)

எனப் பிறவிப் பெருங்கடலிடைப் புகுந்து துன்புறுகின்ற தமக்கு அத்துன்பத்தினின்று நீங்குவதற்குத் தவமும், மெய்யருளும், ஆண்மையும் தம்பால் பொருந்தும்படி வேண்டுகின்றார்.

வருந்திடத்தகுமோ என ஒண்தமிழை வேண்டல்

''மெய்ப்புக ழொதமிகப் படரும்ஒண் தமிழே''

எனத் தமிழின் சீர்மையைப் புலப்படுத்தி அத்தமிழ் மொழியின் பால், அன்னையே,

''மாலும் சோகமும் மலியநான் வருந்திடத் தகுமோ''
(த.து.ப.3)

என உளம் உருகிக் கேட்கின்றார்.

தெய்வத் தமிழே இரங்காய் என வேண்டல்

தெய்வத் தமிழே!

''கௌவை வாய்ச்சிறு வனிதையர் மயலிடை ளிப்பேன்
தெவ்வை நேர்மிடிப் பணியறச் செய்திடற்கு இரங்காய்''.
(த.து.ப.5).

எனத்தாம், சிற்றின்பச் சிக்கலினின்றும் உய்திபெறத் தெய்வத் தமிழை வேண்டுகின்றார்.

பந்தமறச் செந்தமிழை வேண்டல்

அந்த நாளில் குன்றம் தடிந்து பூதத்தையும் அழிக்க, முருகப் பெருமான் வேற்படையை ஏவுதற்குக் காரணமாக இருந்த

தமிழே!. ஆணவ மலத்தால் கட்டுண்டு, பிறவிப் பிணிப்பட்டுத் துன்புறுவது முறையோ? நீ இரங்கி அருள் புரிய வேண்டும்.

"அந்த நாள்ஒரு குன்றமும் அலகையும் அழியக்
கந்தன் வேற்படை விடும்படி கவின்தரு தமிழே"

எனவும்,

"எந்த வேளையும் நின்சுவை கருதிடும் யானும்
பந்த வேதனைப் படுவது முறைகொலோ பகராய்"(த து ப.6)

எனவும் கவித்தமிழை – தீதில் தமிழை வேண்டுகிறார்.

தமக்கு என்று ஒரு தனிநெறி வகுத்துக் கொண்டு, முந்தையோரின் நெறிவழாமல், மரபுகாத்த மாண்பினராய்த் தமிழன்னையை அணிசெய்தவர். எனவே இவரைத் "தமிழைத் துறவாத துறவி" என்றும் அறிஞர் போற்றுவர்.

அடிகளாரின் தமிழ் நெஞ்சம்

வே. தட்சிணாமூர்த்தி

ஆழ்ந்து அகன்று நுண்ணிய கருத்துக்களையெல்லாம் அள்ளித் தரவல்லது தமிழ். அழகொழுக சுவையனைத்தையும் வகை வகையாய் வாரி வழங்கவல்லது தமிழ். அத்தகைய அருந்தமிழ் வல்லார் எல்லாரும் நான் வணங்கும் கடவுளர்கள். எனவே அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன் தமிழை தெய்வமாகவே கருதிய அடிகளாரின் தமிழ் நெஞ்சம் என்னை மெய் சிலிக்க வைத்தது தமிழ்ப் புதல்வருக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த தமிழ்த் தாயை அந்நாளில் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் கொண்டவளாய்த் திகழ இதோ உன் தமிழ்ப்புதல்வன் என்பது போல் அவதரித்த வண்ணச்சரபம் தண்டபாணிக் கடவுளின் திருவடித் தாமரைகளை சென்னிமேல் சுமந்து வணங்கி வாழ்த்துகிறேன்.

தமிழை வழிபடு தெய்வமாகக் கொண்டு "தமிழ்த்துதிப் பதிகம்" என்ற ஒரு பதிகத்தை அடிகளார் பாடியுள்ளார்கள். அந்தப் பதிகத்தின் காப்புச் செய்யுள் பின்வருமாறு:

> "சட்சமயத் தேவரையும் சந்ததமுன் னாற்றுதித்தேன்
> எட்சரியென் றேனும் இரங்கிலார் – பட்சம்
> ஒரு சிறிது வைத்தெனக்காம் உண்மைதர வேண்டும்
> இருமைநலம் தோய்ந்த தமி ழே"

இந்தப் பாடலை சற்று நுணுகி ஆய்ந்து பார்த்தோமானால் அடிகளாரின் தமிழ் நெஞ்சம் எத்தகையது என்பது தெளிவாக விளங்கும். பொதுவாக அடியவர்கள் தாங்கள் வழிபடும் தெய்வத்திடம் முறையிடுவதும், வழிபடப் படும் தெய்வங்கள் அடியவர்களிடம் காலம் தாழ்த்துவதும், அதனால் அடியவர்கள் வருந்திப் பாடுவதும் சமய வரலாற்றில் பரந்து காணப்படும் செய்திகளாகும். எடுத்துக்காட்டாக இங்குச் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

"எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக்கண் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே"

என்ற திருவாரூர்ப் பெருமானைப் பார்த்து சுந்தரர் பாடியது. "இடரினும் தளரினும் எனதுறு நோய்" என்ற பாடல் ஞானசம்பந்தர் பாடியது "கூற்றாயினவாறு விலக்ககலிர்" என்ற பாடல் நாவுக்கரசர் பாடியது. "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமையும் எல்லாம்" என்ற பாடல் மணிவாசகப் பெருமான் பாடியது.

இதுபோன்ற பாடல்கள் ஏராளமாக உள்ளன. ஆனால் அந்தப் பாடல்களுக்கும் அடிகளாரின் இந்தப் பாடலுக்கும் ஒரு பெரிய வேற்றுமை உள்ளது அந்தப் பாடலைப் பாடியவர்கள் எந்நிலையில் நின்றாலும், எக்கோலம் கொண்டாலும் தாங்கள் வழிபடும் கடவுளை சிக்கெனப் பிடித்துக் கொள்வார்கள். ஆனால் அடிகளார் அப்படியல்ல தன்வழிபாட்டிற்கு இரங்காத அறுசமயக் கடவுளர்களையும் விட்டுவிட்டு அவர்களுக்கெல்லாம் மேலான பெருந்தெய்வமாகத் தமிழை எண்ணித் துதிக்கின்றார். "இருமை நலம் தோய்ந்த தமிழே!" என்று விளிக்கின்றார். இம்மை வாழ்வுக்குத் தேவையான நலங்கள் அனைத்தையும், மறுமை நலமான வீடுபேற்றுக்குத் தேவையான நலங்கள் அனைத்தையும் தரவல்லது தமிழ் என்று கருதுகின்றார். தனது கருத்தை வலியுறுத்தவும் செய்கின்றார். தெய்வங்களுக்கெல்லாம் தெய்வமாக விளங்குவது தமிழ் என்று கூறும் அடிகளாரின் தமிழ் நெஞ்சத்தை எண்ணி எண்ணி இறும்பூதெய்துகின்றோம். தமிழ்த் தெய்வத்திடம் அவர் வேண்டி நின்றது என்ன என்பதை கருதும் போது மேலும் நாம் அதிர்வடைகின்றோம். "எனக்காம் உண்மைதர வேண்டும்" என்கின்றார் அவருக்கு எந்த உண்மை தேவையானதோ அதை மட்டும் தரவேண்டுகின்றார். தமிழ்த் தாயிடம் மண்டிக் கிடக்கும் உண்மைகள் எண்ணிலடங்காதவை. அவையனைத்தையும் அவர் கேட்கவில்லை. தனக்குத் தேவையான உண்மை எதுவோ அதை மட்டுமே தந்துதவ வேண்டுமென்கின்றார். இவ்வாறு காப்புச் செய்யுளிலேயே அடிகளார் தனது பொய்யடிமையில்லாத தமிழ்ப் பக்தியினை வெளிப்படுத்துகின்றார். அடிகளார் தமது நெஞ்சத்தை தமிழுக்கே இடமாக வைத்திருந்தார் என்று கூறினால் அது மிகையன்று.

அருணகிரிநாதர் கந்தரலங்காரம் இயற்றியது போன்று அடிகளார் பல அலங்கார நூல்களை இயற்றியுள்ளார். அவற்றில் ஒன்று "தமிழ் அலங்காரமாகும்". இனித் தமிழலங்காரம் என்ற நூலில் எவ்வாறெல்லாம் தமிழைப் பரவிப் பாடுகின்றார் என்பதைக் காண்போம். ஏறத்தாழ அறுபது அல்லது எழுபது ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழிலும் வடமொழியிலும் துறை போகிய மிகச் சில புலவர்களைத் தவிர்த்து மற்ற எல்லாருமே அனைத்து இந்திய மொழிகளைப் போலவே தமிழும் வட மொழியிலிருந்துதான் தோன்றியது என்று நம்பினார்கள். இந்தக் கருத்தினை அடிகளார் ஏற்றுக் கொள்ளவில்லை. அதுமட்டுமன்று. அவ்வாறு நம்புகிறவர்களைக் கடுமையாகச் சாடுகின்றார்.

"தமிழ் உணர் பாவலன் போல்வான் ஒருவன் தனதுகலை
அமிழ்தினும் ஏற்ற மென்று ஏமாப்புறாமல் அயற்கலையால்
உமிழ்வதென்று ஒப்பிடில் மற்றோர் மடந்தைக்கு உரிய
கொண்கற்
குமிழ்மலர் நாசியினால் மணர்தாள்நிகர் கோதினனே".

தன் கணவனைத் தவிர்த்து வேறு பெண்ணின் கணவனுடன் தொடர்பு கொள்ளும் ஒரு பெண்ணின் கற்பு எத்துணை நிலை பழுதுடையதோ அதுபோன்று தனது மொழி பிறமொழியி னின்று தோன்றியது என்று கூறும் தமிழ்ப் புலவரின் செயலும் நிலை பழுதுடையதாகும் என்கின்றார். அத்துடன் நில்லாமல் அத்தகையவன் புலவனே அல்ல என்கிறார். மணமுடித்த ஒரு பெண் பிற ஆடவரை வரிப்பாளானால் அவள் ஒரு கற்புடைய பெண் என்று யாரும் கருதமாட்டார்கள். அதுபோன்று பிற மொழியிலிருந்து தமிழ் பிறந்தது என்று கூறும் ஒரு புலவன் தமிழ்ப் புலவனே அல்ல என்று உறுதிபடக் கூறுகின்றார். இதே கருத்தினை நூலின் முதற்பாடலில் வேறுவகையாகக் கூறுகின்றார்:

"செந்தமிழே உயர்வென்று முன்னாள் ஒரு சீட்டு எனக்குத்
தந்தனன் கந்தன் தவளமின் சாட்சி சரதம் கண்டீர்
சந்தனக் குன்றின் முனிக்கோன் மற்றொன்றைச் சரிசொலினும்
முத்தறிவற்றனன் என்றே துணிந்து மொழிகுவன்"

அகத்திய முனிவர் முன்னால் வந்து தமிழுக்கு இணையானது வடமொழி என்று கூறுவாரேயானால் அதை நான் ஏற்றுக்

கொள்ள மாட்டேன் என்கிறார். மூப்பின் தளர்ச்சியினால் அவ்வாறு கூறுகின்றார் என்று துணிந்து கூறுவேன் என்கிறார். அடிகளாரின் தமிழ் நெஞ்சம் வடமொழி தமிழைக் காட்டிலும் உயர்ந்ததன்று என்ற கருத்தோடு நிறைவு பெறவில்லை. வடமொழி தமிழுக்கு நிகரானது என்று கூறுவதையே ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அவ்வாறென்றால் அடிகளாரின் தமிழ் நெஞ்சம் எந்த அளவிற்கு தமிழுக்கு ஏற்றம் கொடுத்துள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த இடத்தில் ஒரு முகாமையான கருத்தினை நாம் நினைவில் இருத்த வேண்டும். அடிகளார் வடமொழிக்குப் பகைவரல்லர். வடமொழியை இழிவுபடுத்த வேண்டும் என்பதும் அவரது நோக்கமல்ல. தமிழின் சிறப்புகளையெல்லாம் பட்டியலிட்டாற் போல் அடுக்கிக் கூறுமுகத்தான் தமிழை உயர்த்திப் பேசுவது ஒன்றே அவரது தலையாய நோக்கமாகும். பகையுணர்வு கொண்டு பிறமொழிகளை இகழ்வதை அவர் சற்றும் ஏற்க வில்லை என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு தமிழ் அலங்காரத்திலேயே உள்ளது.

"கும்பன் குதத்தில் தமிழ் தோன்றிற் றென்னக் குளறுகின்ற
வம்பரும் கொன்றன்றி வாழா மிலேச்சர் தம் வாய் உமிழும்
தம்பலமே ஒக்கும் ஆரிய மென்னும் சழக்கர்களும்
வெம்பகையால் இகழ் சண்டாளர் தாமென்கை
மெய்ம்மொழியே".

பகையுணர்வால் பிறமொழியினை இகழ்ந்துரைப்போரை சண்டாளர் என்றே சாடுகின்றார். எனவே அடிகளார் மொழிப் பகைவர் அல்லர் என்பதையும் தற்காலத்தில் எழும் மொழிச் சண்டைகளுக்குச் சாட்சியமாக அவரை இழுக்கக் கூடாது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவருடைய கருத்துகள் எல்லாம் அவருடைய உள்ளத்தில் உண்மைகளாக நிலைபெற்றவைகளின் வெளிப்பாடே என்றுதான் கொள்ள வேண்டும். அடிகளாரின் தமிழ் நெஞ்சம் தான் கற்றுத் தேர்ந்து தெளிந்த தமிழ் மொழிச் சிறப்புகளையெல்லாம் காய்தல் உவத்தலின்றி வெளிக்கொணர்கின்றது என்று கொள்ள வேண்டும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" – குறள்.

வள்ளுவரின் இந்த வாக்கு அடிகளாரை பெரிதும் கவர்ந்திருக்க வேண்டும். வள்ளுவரின் புலால் உண்ணாமை என்ற இந்த சிறந்த கருத்தினை தமிழின் பெருஞ்சிறப்பாகக் காட்டுகின்றார் அடிகளார்.

''நான்முகன் தக்கன் முதலோர் அனேகர் நவின்றவட
நூன்முழுதும் கொலைவேள்வியைப் போற்றும் நுடங்கரிய
வேன்முனைக் கன்ஔவை வள்ளுவர் ஆதியர்
விண்ட தென்னூல்
ஊன்முழுப் பாவம் எனவே அடிக்கடி ஓதிடுமே''.

பிரமன், தக்கன் போன்ற வடமொழி நூலார் வடமொழி வேதத்தில் விலங்குகளைக் கொன்று செய்யும் வேள்வியைப் பாராட்டிப் பேசுகின்றனர். ஆனால் ஔவை, வள்ளுவர் போன்ற தமிழ் நூலார் கொலை, புலைகளை ஒரு சிறிதும் ஒப்புக் கொள்வதில்லை. மாறாக அவற்றை மிகவும் வெறுத்து ஒதுக்குகின்றனர். இச்செய்திகளை இவர்கள் தமிழில் கூறியதால் தமிழ் உயர்ந்து நிற்கின்றது என்று அடிகளார் எடுத்துக்காட்டுகின்றார். சைவப் பரம்பரையில் தோன்றிய அடிகளார், இயல்பாகவே சைவ உணவை மேற்கொண்டவர் எனவே புலாலுணவை வெறுத்தொதுக்கும் தமிழ் நூல்கள் அவர் நெஞ்சத்தை ஆட்படுத்தியதில் வியப்பில்லை.

இனி புராணக் கதைகளில் வரும் செய்திகளை அடிகளார் எவ்வாறு காண்கின்றார் என்பதை ஓரிரு சான்றுகளைக் கொண்டு பார்ப்போம்.

வியாசர் கூறிய வடமொழி பாரதத்தை பக்கத்திலிருந்த பிள்ளையாரைக் கொண்டு எழுத வைத்த இறைவன் மணிவாசகப் பெருமான் பாடிய திருவாசகத்தை தன் கரத்தினாலேயே எழுதி கனகசபையில் உமையம்மை மகிழுமாறு பாதுகாப்பாக வைத்தனராம் இச்செய்தியைக் கூறும் தமிழலங்காரச் செய்யுளைக் காணுங்கள்.

''வண்மைப் பராசரன் மகன்சொல் ஐந்நாமறை வாசகத்தை
அண்மைப் புதல்வன் கரத்தால் வரைவித்த அண்ணல் அருள்
உண்மைத் திருவாசகப் பாடல் ஒருங்கெழுதிப்
பெண்மைக்கு உவமை தரும் அரங்கூடுறப் பேணினனே''

விநாயகரைக் கொண்டு வியாச பாரதத்தை எழுத வைத்த இறைவன் தம் திருக்கரத்தாலேயே தமிழ்த் திருவாசகத்தை எழுதிப் பேணியதால் வடமொழி பாரதத்தைக் காட்டிலும் தமிழ்த்திருவாசகம் உயர்ந்தது என்பது அடிகளாரின் உள்ளக்கிடக்கை.

அடுத்து திருமறைக்காட்டில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியினை மையமாக வைத்துப் பாடிய பாடலைக் காண்போம்.

''வேதங்கள் யாவும் ஒன்றாக்கூடி யீசன் விரைமலர் பொற்
பாதங்கட் காண பலபூசை செய்து பழுதி வருள்
நீதந்துலங்கப் பொருந்தும் கபாடத்தை நீக்கி அமைத்து
ஏதங்களைந்து உலகெல்லாம் புரந்துற்றது இன்தமிழே''

வடமொழி வேதங்கள் திருக்கதவங்களை மூடிவைத்தன. தமிழ் வேதங்கள் அக்கதவங்களை திறக்கவும் மூடவும் வைத்தன தமிழ் வேதங்களைத் தந்து கபாட நீக்கமும் மூடலும் செய்த வர்கள் ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் ஆவார். கதவுகள் மூடப்பட்டிருந்ததனால் உலகை அஞ்ஞான இருள் கவ்வியிருந்தது. கதவுகள் திறக்கப்பட்டதனால் அருள் விளக்கம் உண்டாகி இருள் விலகியது. எனவே அருள் விளக்கம் தந்த தமிழே சிறந்தது இக்கருத்தினை உய்த்துணருமாறு அடிகளார் கவிதையை யாத்துள்ளார்கள்.

ஒரு சமயம் புகழ்ச்சியினால் செருக்குற்ற வடமொழி தமிழை இகழ்ந்து பகைமை பாராட்டியதாம். வடமொழி நாணுமாறு சிவபெருமானும் திருமாலும் வேதங்களை தங்களுக்குப் பின் புறமும் தமிழை தங்களுக்கு முன்புறமும் ஒலிக்கும்படி செய்தனராம். இந்தக் கருத்தை விளக்கும் பாடல்,

''பல்கலை போற்றும் வடகலை தென்றற் பருப்பதம் முன்
நல்கவரும் தமிழ்ப் பால் இகல் எய்தலின் நல் இதழி
மல்கணிச் செஞ்சடையானும் திரு நெடு மாயவனும்
ஒல்கப் புறத்துய்த்துளார் முன்னர் நின்றது ஒலிக்கவைத்தே

குமரகுருபரர் அருளிய ''பழமறைகள் முறையிடப் பைந் தமிழ்ப்பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே'' என்ற வரிகள் இங்கு நினைவு கூறத் தக்கதாகும்.

இவ்வாறு வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார் ''தமிழ் அலங்காரம்'' என்ற நூல் முழுவதும் தமிழ் மொழியின் பல்வேறு சிறப்புக்களை எடுத்தியம்புகின்றார். இத்தகைய அரிய தமிழ் நெஞ்சங் கொண்டு விளங்கிய அடிகளாரின் பொன்னார் திரு வடிகளை தலைமேற் கொண்டு தமிழின் சிறப்புக்கள் எல்லாம் நிலைபெற்று நீள்வதற்கான பணிகள் அனைத்தையும் செய்ய முனைவோம். அதுவே அந்த மாபெரும் தமிழ் நெஞ்சத்திற்கு நாம் ஆற்றும் தொண்டாகும்.

உள்ளந் தமிழாக ஊனுந் தமிழாக
தெள்ளு தமிழ்த்தேனாம் தீஞ்சுவைப்பா – அள்ளியளி
வண்ணச் சரபத்தார் வாழ்ந்தக்கால் வாழலையே
பண்ணுக் குளரோ பகர்.

வண்ணச்சரபரின் கொல்லாமைக் கோட்பாடு

ப. தனலக்குமி

கௌமார சமயத்திற்கே உரிய பற்பல சாத்திர நூல்களையும் அருளிச் செய்தவர். அறுவகைச் சமயக் கடவுளர் மீதும் பற்பல பாக்களை இயற்றி, சமய சமரச நிலையை வலியுறுத்தி, சமய வாதம் எனும் வேறுபாட்டிற்கு முற்றிலும் அப்பாற்பட்டவராக வாழ்ந்தவர், அறிவுறுத்தியவர். உயிர்க் கொலை, புலால் உணவு எவ்வகையிலும் கூடாதென்ற கொள்கையில் அழுத்தமாக இருந்தவர். அக் கொள்கைகளைத் தமது பல்வேறு நூல்களிலும், தனிப்பாடல்களிலும் பரப்பியவர். பசுக்கொலை புரிந்து அரசு நடத்திய ஆங்கிலேய அரசு நீங்கவும், தமிழரசு வரவும் விரும்பிப் பல கீர்த்தனைகளும், ஆங்கிலேயர் அந்தாதியும் பாடினார். சீவகருணையை மேற்கொண்ட சுவாமிகள் நடுநாட்டுச் சிவத் தலமான திருவாமாத்தூரில் அருட்பேறடையும் வரை மேற்குறித்த கொள்கைகளை ஆழ்ந்து கடைப்பிடித்தவர். கொல்லாமைக் கோட்பாடு அவர்தம் வாழ்நெறி மட்டுமன்று: உலக மாந்தர்க்கு அவர் உரைத்த தலைமையான அறமாகும்.

சுவாமிகள் வாழ்ந்த காலம்

'நல்குரவாதி நவமாம் கொல்லைகள் ஆயிரம் வந்தடைந்து' இருந்த சூழ்நிலையில் மதவெறியை அழித்து, சமயநெறியை வளர்க்கும் மகான்கள் தேவைப்பட்டனர். இராசாராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி, இராமகிருட்டிணர், இராமலிங்க சுவாமிகள் ஆகியோர் சமுதாய – சமய சீர் திருத்தத்தில் பெரும் மாற்றம் காண வேண்டிய மனப்பான்மை கொண்டிருந்தவர்கள். சாதி வேறுபாடுகளை அறவே ஒழித்தல், 'தெய்வம் ஒன்று' எனும் உண்மையை மக்கள் உணரச் செய்தல் இந்து சமயத்தினரிடையே காணப்படும் அனைத்து வேற்றுமை களையும் தொலைத்துச் சமத்துவம் நிலவச் செய்தல் என்பன

அவர்கள் காலத்திய சீர்திருத்தக் கொள்கைகள் ஆகும். தவத்திரு. தண்டபாணி சுவாமிகள் வாழ்ந்த காலமும் அஃதே யொட்டியதே.

கொல்லாமை பற்றி சுவாமிகளின் பாடல்கள்

தவத்திரு. தண்டபாணி சுவாமிகளின் ஆயிரக்கணக்கான பாடல்களில் அருளும், அன்பும் கொல்லாமையும், புலால் உண்ணாமையும் மிகுதியும் வலியுறுத்தப்படும். திருவள்ளுவரின் திருக்குறளுக்கடுத்து குறள் வடிவில் 1300 பாக்களை உள்ளடக்கிய ''மனுநெறித் திருநூலில்'' தெய்வ வணக்கம், குரு வணக்கம், உலக வாழ்த்து, நூன்மாட்சிக் கடுத்து ஐந்தாவது அதிகாரமே 'கொல்லாமை' பற்றியது. ஆறாம் அதிகாரம் 'புலையாடாமை'. 'கொல்லாமை' எனும் அதிகாரத்தில்,

'அறத்திலறம் கொல்லாமை யாம்'

'கொல்லா விரதங் குறியாதார் செய்தவம் எல்லாம்
பயனிலவே'

'வேதங்கொல் வேள்வி விதிக்குமென நம்புமவர்
போதங்கள் அத்தனையும் பொய்'

'தன்னைக் கொலற்கிசையான் தான் ஒன்றைக் கொல்வது
போல்
பின்னைமற் றுண்டோ பிழை'

''எவ்வுயிரும் ஈசற் கிருப்பிடமாம் என்றுணரான்
கௌவுபழ்வாய் நாயிற் கடை''

''ஈசனெதிர் வந்துமற்றோர் இன்னுயிரைக் கொல் எனினும்
ஆசகன்ற சீரியரோப் பார்''

என்பன போன்ற குறள்களில் கொல்லாமை நெறியை அவர் ஆழ்ந்து வலியுறுத்துவதை அறியலாம். கொல்லாமையையும் புலால் உண்ணாமையையும் அவர் வலியுறுத்துவதற்கு அடிப் படையே அனைத்து உயிர்களிடத்தும் அவர் கொண்டிருந்த அளவற்ற அன்பு; சீவகாருண்யம்.

''சீவர் வருத்தமுறச் செய்கின்ற செய்கை முற்றும்
பாவம் என்று சொல்வப் படும்''.

''கொல்வார் முதலாங் கொடியார்க் கிதம்செயலும்
சொல்வார் சொல்பாவத் தொடர்பு''

என்று பாவத் தன்மை எனும் அதிகாரத்தில் குறிப்பிடுவார்.

''எல்லா உணவினத்தும் யாதோர் உயிரினையும்
கொல்வார் உணவே குணம்''

என்று வாய் எனும் அதிகாரத்திலும் கொல்லாமை பற்றியே குறிப்பிடுவார் சுவாமிகள்.

பொதுநூல் - சிறப்பு நூல், திருவெண்பா - விற்பனம் என்னும் நான்கு நூல், அருளாட்சி எனும் நூல் ஆகியவற்றின் எண்ணற்ற பாடல்களில் கொல்லாமைக் கோட்பாட்டை வலியுறுத்துவார் சுவாமிகள். பொது நூலில் கருணைக் கடல் எனும் அதிகாரத்தில் 10 ஆவது பாடல்:

'எல்லா நலமுமிருந்தாலு மின்கருணை
யில்லார் வலிசிறிது மில்லாரே - கொல்லாமை
யொன்றுடையாரியாவு முடையாரெ னவுரைக்கு
நன்றுடையார் தம்மடிமை நாம்'

என்றும், அறம் என்ற 8 ஆவது அதிகாரத்தில் முதற்பாடலில்,

''கொல்லாமை நல்லூண் கொடுப்ப தறிந்தீகை
யெல்லாமிறையுடைமை யென்கைகோட் - சொல்லாமை
யிள்ள லொருவர்க் கியற்றாமை யெள்ளாமை
யன்ன பிறவு மறம்''

என்றும் அறத்தைக் குறிப்பிடுகையில் கொல்லாமையையே முதலில் வரிசைப்படுத்தினார்.

''எல்லாத்தவமு மிறைவணக்கமென்பது போற்
கொல்லாமை யேயறத்தின் கூடு'' ......

என்று 7 ஆவது பாடலில் குறிப்பிடுவார். பொதுநூலில் வீட்டு நெறி, சிறப்பு நூலில் முயற்சியுருவகம், தவத்துருவகம், கல்வி யுருவகம், ஞானத்துருவகம் ஆகிய அதிகாரத் தலைப்புகளில் பல பாடல்களில் கொல்லாமைக் கோட்பாடுகளைத் தவத்திரு. தண்டபாணி சுவாமிகள் விளக்குகிறார். இதனை அருளாட்சி எனும் நூலில்,

'கொல்லாவிரதக் குணமே தவமாகும்
அல்லான் மற்றெல்லாம் அவமாகும்' (32)

'கொல்லுஞ் சமயம்விட்டுக் கொல்லாச் சமயமதிற்
செல்லுமவர்க்கு முத்திச் சீருண்டாம் – நல்லுணவு
கொள்ளுநெறியை விட்டுக் குக்கலுணவுண்ணுநெறி
நள்ளுநருக் கெய்தும் நரகு' (88)

எனக் குறிப்பிடுவதைக் காணலாம்.

புலவர் புராணத்தின் பல தெய்வத் துதி என்ற பாடல்,

''பன்னிரண்டு சமயத்தும் கொலைபுலையிற்
சாராத பான்மை யோராத்
துன்னிவளர் பெரியோர்கள் வழிபடும்எத்
தேவரையும் துதித்தல் செய்வாம்''

என்பது. இது அவர்தம் சமய சமரசம் மற்றும் கொல்லா நெறியைத் தெளிவாகக் காட்டும்.

உயிர்களிடத்து கருணை காட்டும் ஆன்ம நேய உணர்வு பண்டைத் தமிழரிடம் இருந்ததெனினும் புலால் உண்ணும் வழக்கத்தைப் பழங்காலப் புலவருள் திருவள்ளுவர் மட்டுமே வெறுத்துப் பாடுகிறார். சமண, புத்த சமயங்கள் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்ற பின்னர் தான் புலால் உண்ணும் வழக்கிற்குப் பெரும் எதிர்ப்புத் தோன்றியது. முன்னர் யாகத்தில் ஆடுகளைப் பலியிட்டு புலால் உண்ணும் செயல் இருந்தமையை மறுத்தும் வெறுத்தும் திருவள்ளுவர்,

''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று''

எனும் குறளில் குறிப்பிடுகிறார். வள்ளுவருக்குப்பின் வள்ளலாரும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளுமே கொல்லாமையையும் புலால் மறுத்தலையும் உயிர்களிடத்து அன்பு செய்யும் ஆன்ம நேய உணர்வையும் மிகுதியாக வலியுறுத்தியவர்களாவர்.

''துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெலாம் பயந்தேன்;
கண்ணினால் ஐயோ பிறவுயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும் பதைத்தேன்;
மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
வகைகளும் கண்டபோ தெல்லாம்
எண்ணிஎன் உள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் திருவுளம் அறியும்''

என்று உயிர்க்கொலையைக் கண்ட போதெலாம் பதைத்த வள்ளலார் சமண, பௌத்தரையும் விஞ்சுகிறார்.

"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"

எனக் கொல்லா நோன்பை மேற்கொண்ட மக்களையே நல்லோர் என்பார் தாயுமானவர்.

"உயிர்க் கொலையும் புலைப் பசியும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர்அவர் புற இனத்தார்"

என்பார் வள்ளலார். அவர் தெய்வங்கட்கு உயிர்ப்பலி கொடுப்பதையும் வெறுத்தார். தெய்வங்களின் பெயரால் உயிர்களைக் கொல்லும் வழக்கம் சங்க காலந் தொட்டுத் தமிழர்களிடையே இருந்து வந்தது. தமிழகத்தில் வள்ளலார் காலத்தில் சிறு தெய்வங்கள் ஊர்தோறும் கோயில் கொண்டிருந்தன. அத் தெய்வங்களுக்கு மக்கள் ஆடு, கோழிகளைப் பலியிட்டனர். இரக்கமே வடிவான வள்ளலார்,

நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடுபன்றிக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே
புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வ வெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்"

என்று தெய்வங்களைத் திருப்திப்படுத்த அக்கொடிய பழக்கம் தேவையென்று போதித்த மதவாதி இருந்த சூழ்நிலையில் உயிர்ப்பலியை வெறுத்தொதுக்குகிறார். உயிர்கள்பால் இரக்கம் காட்டினாலன்றி மனித குலத்தவரிடையே ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவது இயலாது என வள்ளலாரும் வண்ணச்சரபம் சுவாமிகளும் நம்பினர்.

"ஆதலால் வடலூரராற்கும் அடியேன் தனக்கும் இந்தப் பூதலத்தினர் ஊன் உண்ணாப் புதுமை செய்திடலே மேலாம்" என்று புலவர் புராணத்தில் கண்கண்ட புலவர் சருக்கத்தில் நம் சுவாமிகள் கூறுவார். வள்ளுவர் புலால் மறுத்தல் அதிகாரத்திற்கு கொல்லாமை அதிகாரத்தை அமைத்துள்ளார்.

ஆயின் நம் சுவாமிகள் கொல்லாமையை தமது மனுநெறித் திருநூலில் ஐந்தாவது அதிகாரமாக அனைத்து அறங்களிலும் மேலானதாகக் குறிப்பிடுகிறார்.

''ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று''

''நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சி
கொல்லாமை சூழ்வான் தலை''

''கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்''

''தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்கனம் ஆளும் அருள்''

என்ற வள்ளுவ மொழிகள் கொல்லாமைக் கோட்பாடுகளை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வள்ளலாரும், தவத்திரு. தண்டபாணி சுவாமிகளும் வள்ளுவருக்கடுத்து எங்கனம் பரவச் செய்யக் காரணமாயிருந்தனர் என்பதை விளக்கும்.

தவத்திரு. தண்டபாணி சுவாமிகள் வலியுறுத்திக் கூறிய கொல்லாமைக் கோட்பாடும் புலால் உண்ணா நெறியும் முன் எப்போதும் விடத் தற்காலத்தே பின்பற்றப்பட வேண்டிய சூழல் உள்ளமையால் அவர் கருத்துக்கள் இன்றும் மிகப் பொருத்தமுடையதாக உள்ளன. நூறாண்டுகளுக்குப் பின்னரும் அவர் நெறிகள் குறிப்பாகத் தமிழக நிலைக்கு ஏற்புடைத்தாய் உள்ளன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் பிற சமயத்தவரும் விதைத்த ஆன்ம நேய நெறிகளைப் பேணிக் காக்காது மத மோதல்களாலும், சாதிப் பிணக்குகளாலும் நலிந்து தமிழகம் இருபத்தோராம் நூற்றாண்டை எட்டி நடைபயிலும்போது தலை குனிவுடன் அடியெடுத்து வைக்கிறது.

புத்தமதம் சரியான பார்வை, சரியான சங்கற்பம், சரியான வாழ்முறை ஆகியன பற்றி உரைக்கும்போது கொலை செய்யாமையையும், உயிர்க்கொலைத் தடுப்பையும் முதன்மைப் படுத்துகிறது.

தவத்திரு. தண்டபாணி சுவாமிகள் சமரச ஞானி; பிற சமயத்தவரையும் மதிக்கும் பண்பினர் என்பதை அவரது

புலவர் புராணத்தில் வரும் முத்துவக்கப் புலவர் சருக்கத்தால் அறியலாம். அப் புலவரைப் பாடுங்கால்

"கோலத்தில் ஒரு துலுக்கன், குணத்தில் ஒரு கௌமாரன்,
ஆலத்திற்
கொரு சினமும் அமிழ்தில் இனித்திடும் அன்பும்,
சீலத்தாற் கொடு
வாழ்ந்தான்; செயல் அனந்தம் எனச் சொல்வார்"

என்பார்.

"ஒரு மதத்தோன் மற்றொர் மதத்துறு தேவைப் பணிந்தாலும் அருளடைந்தால், உலக முழுதவன் மொழிக் கஞ்சுவதுண்மை; குருவிகற்பமே மதங்கள்; குறித்தபரம் ஒன்றென்னும் தெருளடையதெளிதன்று; செய்தவம் முற்றிடில் ஆமே" என்பது அவர் சமய நெறிச் சாரம்.

அவர் பரப்பிய கௌமார சமயக் கருத்துக்களையும், கொல்லாமைக் கோட்பாடுகளையும் அடியொற்றியே அவர்தம் தலைமாணாக்கராகத் திகழ்ந்த தவத்திரு இராமானந்த அடிகளார் கோவைச் சிரவணபுரத்தில் 1908இல் திருக் கோயிலையும் மடத்தையும் நிறுவி அருள்செய்து, பல்லாயிரம் மக்களை அந்நெறியில் ஆட்படுத்தினார். தவத்திரு. கந்தசாமி சுவாமிகளும், தவத்திரு சுந்தர சுவாமிகளும் கௌமார மடாலயப் பொறுப்பேற்று கௌமார நெறியைத் தமிழகத்தில் பரப்பி வந்தமை தவத்திரு தண்டபாணி சுவாமிகள் போதித்த சமய நெறிகளின் இன்றியமையாமையைப் புலப்படுத்தும்.

சமயம் என்பது வாழ்க்கை நெறியே. சமுதாயம் வளரும் வண்ணம் சமயப் பிணக்கின்றி ஆன்ம நேயமும், மனித நேயமும் வளரப் பணி செய்யத் தமிழ்ப் பெரியார் தவத்திரு. தண்டபாணி சுவாமிகள் அருளிய நெறிகள் வழிகாட்டுமாக!

புலவர் புராணத்துள் திருஞானசம்பந்தர்

இரா. திருஞானசம்பந்தன்

தோற்றுவாய்

உலக மொழிகளுள் தமிழ்மொழி பக்திப் பெருமொழியாக என்றும் விளங்கி வருகிறது. தொன்மைக் காலந்தொட்டே இறை நலம் மிக்க நிலையினில் ஆன்மீக விளக்கு ஏற்றி வைத்த பாவலர் பலர் கடவுள் வாழ்த்துப் பாடல்களையும் கடவுட் பாடல் களையும், சைவ பக்திநூல்களையும், வைணவப் பாசுரங்களையும், புராண நிகழ்ச்சிகளையும், பிற பக்தி இலக்கிய நூல்களையும் பாடியுள்ளனர். தொல்காப்பியர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலங்களுக்கு உரிய தெய்வங்களாக முறையே சேயோன், மாயோன், வேந்தன், வருணன் ஆகியோர் களைக் குறிப்பிட்டுள்ளார். பாடாண் பகுதியில் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் வழிபாட்டு மரபுகளையும் பாடியுள்ளார்.

முதல் நூல்கள்

தமிழ் மொழியினுள் முதல் நூலை ஆதாரமாகக் கொண்டு வழி நூல்கள் தோன்றுதல் இயல்பு. திருத்தொண்டர் புராணம், திருவிளையாடல், குருபரம்பரை ஆகிய நூல்களில் விரிவாகக் கூறப்பெற்ற திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, திருவாதவூரர், காரைக்கால் அம்மையார், குலசேகராழ்வார், சடகோபர், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், திருப் பாணாழ்வார் ஆகியோர் சரிதங்களை ஒருவகையில் சுருக்கிக் கூறியுள்ள புதுமை நூலே புலவர் புராணம் என்பதாம்.

புலவர் புராணம்

செந்தமிழ் திருநெறியுடைய தமிழ்ப் பாடல்கள் இயற்றிய சான்றோர் வரலாற்றைக் கூறும் ஒரு வரலாற்று இலக்கியமே புலவர் புராணம். தமிழ்க்காதல்மிக்கு, தமிழ் அலங்காரத்தில் உள்ளம் மகிழ்ந்து, தமக்கென்று தனி நெறி வகுத்து முந்தையோர்

காட்டிய நெறிமுறைகளைப் பின்பற்றிப் புலவர் புராணத்தைப் பாடியுள்ளார். புலமை நிறைந்த சிவனடியார்களையும், வைணவ அடியார்களையும், பிற மதத்தவர்களையும் பாடியுள்ள பெருமை இவருக்கு உரியது. முழுதுணர் புலவனாகிய முருகப் பெருமானே புலவர் புராணம் பாடத் தூண்டியதாக இவர் பாடியுள்ளார்.

ஆராய்ச்சி வழியில் முழுமையாக நாட்டம் செலுத்தாமல் செவிவழிச் செய்திகளைக் கொண்டே இந்நூல் இயற்றப்பெற்றது. இவரே பாயிரத்தில் நூற்பெயர், தலம், நிமித்தம், ஆதாரம் ஆகியவற்றைப் பாடியுள்ளார்.

'நூற்பெயர், யாதெனில் உண்மைப் புலவர் புராணம்தாம் நுவலுமிடம் திருநெல்லை நகர்; நுவலும் நிமித்தம் ஏற்பவர்க்கு ஈவார்தம் பெருநலமும், ஈயார் இடும்பையும், செந்தமிழ்ப் புலவார் எழிற்புகழும், விளக்கி நாற்பொருளும் பெற விரும்பல், ஆதாரம் உலகோர் நவில்மொழியும், கலைவாணி நடம்புரியும் நாவும் வேற்பிடித்து மலைதோறும் போய்த்திருவருள் பேராடல் விசைக்கும் முழுதுணர் புலவன் விரைமலாத் தாள்களாமே.

ஆசிரியர் சுவாமிகள் கந்தன் நற்கருணைப் பேற்றால் இப் புராணம் பாடியமை போற்றத்தக்கது.

பெருமை மாண்பு

புலவர் புராணம் என்னும் பெயர் தாங்கிய நூலின் பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் ஆகியவை நீங்கலாக, 'அகத்திய மகா முனிவர் சருக்கம் தொடங்கிக் குலசேகராழ்வார் சருக்கம்' முடிவாக எழுபத்து மூன்று புலவர்களின் புராண வரலாறுகள் கூறப்பெறும். அவர்களில் சீர்காழி ஞானசம்பந்தரின் பெருமை யினையும், கூன்பாண்டியன் நலம் நாடி வாழ்வளித்தமையையும் இங்குக் காண்போம்.

ஞானசம்பந்தர் பிள்ளைமை

திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார்ப் பெருந்தகை திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பாடியுள்ளார். செந்தமிழ் வளர்ச்சிக்கும் பாண்டியர் மரபில் கூன்பாண்டியன் ஆட்சியில் சமணர்களை மிகவும் தழைக்க, அது கண்டு சைவர்கள் மனம் குன்றி இறைவனை வணங்கி அப்புறச் சமயத்தை நசுக்க ஓர் சிசு

வேண்டும் என்று மன்றாடினர். அதன் பயனாகச் சீர்காழியில் கவுணிய குலத்தில் அந்தணச் சிறுவனை ஞானசம்பந்தர் தோன்றினார். மெய்ஞ்ஞானமும், புலமையும் கொண்டு பின் நாளில் விளைந்த அச்சம்பந்தர் கோயில் குளக்கரையில் நின்று அழுத பொழுது இறைவனோடு உமையம்மை தோன்றி முலைப் பால் ஊட்டியதாகச் சுவாமிகள் பாடியுள்ளார். தந்தையார் பிள்ளையின் வாய்க் குறியினால் கோபமுற்று யார் பால் கொடுத்தார் என்று அதட்டிக் கேட்க, வானில் கைகொண்டு சுட்டிக்காட்டிய இவர் 'தோடுடைய செவியன்'என்று தொடங்கும் பதிகம் பாடினார்.

அப்பொழுது தொண்டர்கள் உவகை மிகுதியால் 'காழியர் தவமே' கவுணியர் தனமே! கலைஞானத்து ஆழிய கடலே! அதலிடை அமுதே! அடியார் முன் வாழிய வந்து இம் மண்மிசை வானோர் தனி நாதன். ஏழிசை மொழியோன் தண்திருவருள் பெற்றனை! (91) என்று போற்றியதாகச் சேக்கிழார் பாடி யுள்ளார்.

ஞானசம்பந்தர் பாண்டிய நாடு செல்லல்

பாண்டிய நாட்டுப் பெரும் மன்னன் கூன்பாண்டியன் துயர் துடைக்க வேண்டி ஞானசம்பந்தர் அந்நாடு சென்ற நிலையைக் காணின் இவர் பெருமை புலப்படும். தண்டபாணி சுவாமிகள் தம் புலவர் புராணத்துள் இவர் மேற்கொண்ட செயல்களை மிகச் சுருக்கமாகக் கூறியுள்ளார். சேக்கிழார் போன்று பல பாக்களில் எடுத்துக் கூறாமல் காட்டியிருப்பது நூல் அழகிற்குச் சான்றாகும்.

முத்தமிழ் விரகன், பாலறாவாயன் என்று பாராட்டப்பெறும் ஞானசம்பந்தர் பாண்டி நாடு சென்றமை ஒரு நாட்டு மன்னனின் நலன்பேணி மக்களைக் காப்பாற்றிய பெருஞ்செயலுக்கே.

ஞானசம்பந்தரும், பாண்டிய மன்னனும்

அமணர் நஞ்சு போன்று பாண்டிய மன்னன் வருந்திட, அவன் மனைவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் சிந்தனை செய்து ஞானசம்பந்தரை வேண்டிட இறைவனிடம் முறையிட்டனர். இவரைக் கொண்டு அரசன் முதலியோரைச்

சிவபக்தி பேணுமாறு ஆவன செய்யச் சிந்தனை செய்து முறை யிட்ட நிலை பாடப் பெறுகிறது.

செந்தமிழ்தேர் மதுரையில் நல்லருள் சுரக்கும் சுந்தரேசுவரன் அருளினால் மங்கையார்க்கரசியாரும், குலச்சிறையாரும் ஞான சம்பந்தரை தங்கள் மாளிகைக்கு வரவேற்க ஒருப்பட்டன. வேயுறு தோளி பங்கன்.........' என்று தொடங்கும் பதிகம் பாடப்பெற்று ஈசன் மெய்யருளோடு நலம் பல தொடங்கின.

இவர் வருகை நிகழ்வதால் ஐவகை நிலங்கள் ஒருங்கே அமைய நாடு வணங்க மன்னுயிர் ஆக்கமே மேலோங்கிய நிலையில் சுவாமிகள் நிறைவு காண்பது சிறப்பே, சைவர் ஆக்கமும், சமணர் ஒழுக்சுமும், வழுதியின் கவலை நீக்கமும், மங்கையர்க்கரசியாரின் களிப்புப் பெருக்கமும், குலச்சிறையாற் புகழ்ப் பெருக்கமும் மிகச் சிறப்பாகப் பாடப்பெற்றன.

சமணர் ஆணவத்தால் நிலை தடுமாறி அறம் பிழைத்து அடியவர் தங்கிய மடத்தில் தீயை வைக்க ஞானசம்பந்தர் ஆணையினால் பாண்டியனுக்கு அது தீரா வெப்பு நோயை ஊட்டிற்று. மாமயில் பீலிகையினைக் கொண்டு பலர் முயன்றும் பாண்டியனுக்குச் சூடு தணியாமல் நெஞ்சு அயராத் துயரமே பெருகிற்று. இரவெல்லாம் வாடி, விடியல் தோன்றியதும் ஞானசம்பந்தருக்கு அழைப்பு வந்தது. சிவனருள் பெறும் குழந்தை மாளிகை போந்து, அரசியாரை நோக்கித் தாம் மதுரை நாயகன் வாஞ்சையாங் குறை போக்குவதாகக் கூறினார்.

மன்னன் ஞானசம்பந்தரிடம் தன் கொடிய சுரம் தவிர்க்க வேண்டிட இவர் சிவன் தன் சேவடி கருதி, வெண்ணீறைச் செங்கையிற் கொண்டு ஒரு பதிகம் பாடி மன்னன் உடலிற் பூசச் சூடு தணிந்து குளிர்ந்தது.

''மந்திரமாவது நீறு ...... என்னும் பதிகமே குறை போக்கிய மாமருந்தாம்''

சமணர் பாதியுடம்பிற்குப் பல மந்திரங்கள் செய்தும் சூடு தணியவில்லை. உடனே மன்னன் மறுபாதியும் இவரைச்சார்ந்ததே என்று கூறினான். சமணர் இவரை நோக்கிக் கையிலுள்ள திருநீறு அன்றி மற்றொன்றால் குறை போக்குக என்று கூற,

ஞானசம்பந்தர் கோயிலுள்ள திருநீறு கொணர ஏவி, அது கொண்டு உடலில் பூசச் சுரம் போய்விட்டது. மேலும் மன்னன் மெய்யில் ஒன்றியிருந்த கூனும் நீங்கியது.

சேக்கிழார் போற்றிய பான்மை

பாண்டிய நாட்டு நிலையும், மன்னவன் சமணசமயப் போக்கும் மாறிச் சைவ நெறிதவழ வழி காண்பதே ஞானசம்பந்தர் கடமை யென்று சேக்கிழார் குறிப்பிடுவார்.

'சென்ற காலத்தில் பழிதிலாத் திறமும், இனி, எதிர்காலத்தின் சிறப்பும், இன்று எழுந்து அருளப்பெற்ற பேறிதனால் என்றைக்கும் திருவருள் உடையேம்! நன்றியில் நெறியில் வருந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்' என்பதுவே குலச்சிறையார் ஆர்வச் சிறப்பு.

மங்கையர்க்கரசியாரும், அமைச்சரும் ஒன்றி நின்று தம் பேரவாவை வெளிப்படுத்தும் பின் சமணர்க் காழ்ப்பு மேலிட்டு திருமடத்தில் தீ மூட்டினர். சைவர் வாழ்மடத்துச் சமணர்கள் மூட்டிய தீயானது பையவே சென்று பாண்டியற்கு ஆகியது.

மன்னவன் வெப்பு நோயின் கடுமை தாங்காது யானுள்ள பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கம் சேர்வன்; விரகு உண்டேல் அழையும் என்றனன். அந்நிலையில் சேக்கிழாரின் ஞான சம்பந்தரைப் பற்றிய பாடல் ஒன்று இவர் பெருமையை மாண்புறக் காட்டும்.

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழு பிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள் (728)

இதுவே ஞானசம்பந்தருக்கு நாம் சூடும் புகழ்மாலையெனில் மிகையன்று.

பின்னர் சமணர் மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போக ஞானசம்பந்தர் நற்றுணையே பெரிதாகப் போற்றப் பெற்றது.

'திருவளர் நீறு கொண்டு திருக்கையாலும் தடவத் தென்னன்
பொருவரு வெப்பு நீங்கிப் பொய்கையிற் குளிர்ந்து'

என்பார் சேக்கிழார்.

சுவாமிகள் சம்பந்தரைப் போற்றும் நெறி

சமணர்கள் ஞானசம்பந்தர் புகழ் கண்டு தாங்காமல் கழுமரச் சபதம் கூறித் தீமூட்டினர். இருவர் ஏடுகளையும் நெருப்பினில் இடும்போது சம்பந்தர் ஏடு மட்டும் எரிந்திடாது எழுந்தது. அருகன் ஏடு எரிந்து பாழாகியது. பின் வையை நீரினில் இடும் போது சைவர் ஏடு நீரை எதிர்த்துச் சென்றது. ஏனைய ஏடு திரைக்கடல் சேர்ந்தது. நெடுமாறன் (பாண்டியன்) அவை கண்டு சமனர் உறவு அறவே முறிந்தான்.

முடிவுரை

தண்டபாணி சுவாமிகள் இவ்வண்ணம் திருஞானசம்பந்தர் புகழ் பாடித் தமிழுலகில் நீங்காப் புகழ்ப்பேறு நிலவும் சைவ சமயத்தில் எழுச்சிக்கும், மலர்ச்சிக்கும் மணிமகுடம் சூட்டிப் புலவர் புராணத்தில் போற்றிப் பாடிய மாட்சியும், உயர்ச்சியும் நம் தமிழ் உள்ளங்களுக்கு நல் விருந்தாம்.

ஆங்கிலியர் அந்தாதியில் கொல்லாமைக் கோட்பாடு

கா. நாகராசு

முன்னுரை

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சென்ற நூற்றாண்டில் தோன்றிய தவச்செல்வமிக்க தமிழ்க்கவிஞர். கொல்லாமை, புலால் உண்ணாமை என்ற அறங்களை தம் வாழ்நாள் முழுவதும் கடைபிடித்து ஒழுகியதோடு பிறரையும் அவ்வறங்களைக் கடைபிடிக்கச் செய்துள்ளார். சுவாமிகளுடைய நூல்களில் எல்லாம் இவ்வறக்கருத்துக்கள் வலியுறுத்தப் பட்டுள்ளன. ஆங்கிலேயர் ஆட்சியில் நடைபெற்ற கொடுமை களும் கொலைகளும் சுவாமிகளுடைய மனத்தைப் பெரிதும் துன்புறுத்தின. குறிப்பாக, இந்து சமயத்தில் தெய்வமாகப் போற்றப்பட்ட பசுக்களை கொன்றுதின்னும் ஆங்கிலேயரின் செயல் இவரால் சகித்துக்கொள்ள முடியாததாக இருந்தது. எனவே, ஆங்கில ஆட்சி அகன்று ஒழியவேண்டும் என்ற தமது ஆவலை, வேண்டுதலை மையமாக வைத்து "ஆங்கிலியர் அந்தாதி' என்ற ஒரு நூலைப் பாடித் தமிழுலகுக்கு அளித்தார். இந்நூலில் ஆங்கில ஆட்சியை அகற்றும் வலிமையுள்ள ஒருவனைப்படைத்து தருமாறு இறைவனிடம் வேண்டுகிறார். இந்நூலில் மக்களுக்கு நேரடியாக அறிவுறுத்தும் போக்கு அதிகமில்லை. அதற்குப் பதிலாகத் தமது கோரிக்கைகளை எல்லாம் இறைவனிடம் வைத்து அவற்றை நிறைவேற்றித் தரும்படி வேண்டும் போக்கே அமைந் துள்ளது. துறவிகள் அரசியலில் ஈடுபடும் வழக்கம் இல்லாத அக் காலத்தில் சுவாமிகள் தன்னந்தனியாக, அஞ்சாமல் ஈடுபட்டுத் தமது எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நூற்றியிரண்டு பாடல்களைக் கொண்ட இந்நூலின் அடித்தளக் கருத்தாக விளங்குவது கொல்லாமைக் கோட்பாடேயாகும். அதிலும் பசுக்கொலையை வன்மையாகக் கண்டிக்கும் பாடல்களே இதில் நிறைந்துள்ளன கொல்லாமை, குறிப்பாக பசுக்கொலை

சங்ககாலம் முதலே கண்டிக்கப்பட்ட ஒன்று. இதைப் பழைய நூல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

தொல்காப்பியத்தில் பசுக்காப்புக் கோட்பாடு

சங்க இலக்கியத்துக்கும் முற்பட்ட பழமையுடைய இலக்கண நூல் தொல்காப்பியம் இதன்கண் அமைந்துள்ள பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது, புறத்திணையியல் என்னும் ஓர் இயல். இது அக்கால போர் மரபுகளை எடுத்துரைப்பது. இதில் வெட்சித்திணைப் பற்றி விளக்கமளிக்கும் நூற்பாவான

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக்களவி
னாதந் தோம்பன் மேவற்றாகும்" (நூற்பா எண். 57)

எனபதற்கு நச்சினார்க்கினியர் விளக்கம் அளிக்கும்போது "களவு நிகழ்கின்ற குறிஞ்சிப் பொருளாகிய கந்தருவமணம் வேத விதியானே இல்லறமாயினாற் போல இருபெருவேந்தர் பொருவது கருதியங்கால் ஒருவர் ஒருவர் நாட்டுவாழும் அந்தணரும் ஆவும் முதலியன தீங்கு செய்யத்தகாத சாதிகளை ஆண்டு நின்றும் அகற்றல் வேண்டிப் போதருகவெனப் புகறலும் அங்ஙனம் போதருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவினாற்றாமே கொண்டு வந்து பாதுகாத்தலுந் தீதெனல்படாது அறமேயாம் என்றற்கு ஆதந்தோம்பவென்றார்."

மேலும், வெட்சித்துறைகளில் ஒன்றான "நோயின்று உய்ததல்" என்பதும், பசுக்களைக் காக்கும் சிறப்பைப் பாட எழுந்த ஒன்று என்பது குறிக்கத்தக்கது. இதற்கு இளம்பூரணர், அவ்வாறு கொண்ட நிரையை, வருந்தாமல் உய்த்தல்" என்று உரை கூறுகிறார். நச்சினார்க்கினியாரும் இதற்கு, "நிரைகொண்டோர் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசன் மாற்றத்தாங் கொண்ட நிரையினை இன்புறுத்திக் கொண்டு போதலும் மீட்போரும் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசன் மாற்றத்தாம் மீட்ட நிரையினை இன்புறுத்திக்கொண்டு போதலும் என விளக்கமளிக்கிறார்.

தொல்காப்பியப் புறத்திணையியலின் அடிப்படையில் தோன்றியது புறப்பொருள் வெண்பாமாலை. இந்நூலின் வெட்சிப் படலத்தில், வெட்சித்துறைகளுள் ஒன்றாகக் கூறப்பட்டுள்ள

"சுரத்துய்த்தல்" (நூற்பா எண்.1) என்பதை விளக்கும் கொளுவான,

"அருஞ்சுரத்தும் அகன் கானத்தும்
வருந்தாமல் நிரையுந்தன்று"

என்பதும் பசுக்காத்தலின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின்றது "கடத்தற்கரிய வழியிடத்தும் அகன்ற காட்டின் கண்ணும் வெட்சியார் தாம் கைப்பற்றிய ஆத்திரளைத் துன்புறாதபடி செலுத்தியது. ஆக்களைப் பாதுகாத்தலே வெட்சித்திணையின் நோக்கமாதலின், அவற்றைக் கைப்பற்றி கொணரும் போதும் மேயவிட்டும் நீருட்டியும் இளைப்பாற்றியும் கொணர்வர் என்பது தோன்ற வருந்தாமல் நிரையுய்த்தன்று என்றார். ஆசிரியர் தொல்காப்பியனாரும் ஆக்கள் வருந்தாமல் கொணர்தலே அறம் என்பது தோன்ற நோயின்றுய்த்தல் எனக் குறியீடு செய்தார்" என்று இதற்குப் பொருள் கூறப்பட்டுள்ளது எனவே, வெட்சித்திணையின் நோக்கம் போர்க்காலத்தில் பசுக்கூட்டங்களைப் பாதுகாத்தலே என்பது நன்கு விளங்குகிறது. போர்க்காலத்திலேயே பசுக்களைப் பாதுகாத்த இனம் மற்ற காலங்களில் இன்னும் சிறப்பாகவே அவற்றைப் பாதுகாத்து வந்திருக்கும் என்பது திண்ணம்.

சங்க இலக்கியத்தில் பசுக்காப்புக் கோட்பாடு

சங்க இலக்கியத்தில் ஒன்றான புறநானூறும் பசுக்களை துன்புறுத்துவதும் கொலை செய்வதும் பெரும் பாவம் என்பதை,

"ஆன்முலை அறுத்த அறனில்லோர்" (பாடல் எண்: 34)
"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" (பாடல் எண்: 9)

எனத் தொடங்கும் பாடல்களின் மூலம் எடுத்துரைக்கின்றது.

திருக்குறள் வலியுறுத்தும் கொல்லாமை அறம்

திருவள்ளுவர் நோக்கில் கொல்லாமைக் கோட்பாடு விரிந்து பரந்து காணப்படுகின்றது. சங்க இலக்கியங்கள் போல பசுக்காப்பு என்ற ஒன்றின் அடிப்படையில் மட்டும் திருக்குறள் கொல்லாமையை வலியுறுத்தவில்லை. எந்த ஒரு உயிரையும் கொல்வதும், கொன்றபின் அதைத் தின்பதும் கூடாது என்பது வள்ளுவரின் அழுத்தமானகொள்கை. எனவேதான் கொல்லாமை,

புலால் மறுத்தல் என்ற இரண்டு அதிகாரங்களைப் படைத்துத் தந்துள்ளார். வேள்வியில் கூட உயிர்க்கொலை கூடாது என்பதை,

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று" (குறள் எண்: 259)

என்ற குறட்பா மூலமாகவும், தன்னுயிர் போனாலும் பிறவுயிரைக் கொல்லக்கூடாது என்பதைத்

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை" (குறல் எண்:327)

என்ற குறட்பா மூலமாகவும் வலியுறுத்துகின்றார். இதேபோன்று பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அமைந்துள்ள நீதிநூல்களிலும், சமணக் காப்பியங்களிலும் கொல்லாமை அறம் மிகுதியும் வலியுறுத்தப் பெறுகின்றன.

திருமுறைகளில் பசுக்காப்புக் கோட்பாடு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில்,

"கொன்று செய்த கொடுமை"
(திருக்கழுக்குன்றப் பதிகம் பாடல் எண்: 1)

"பசுக்களே கொன்றுதின்று பாவிகள் பாவமொன்று அறியார்"
(திருமுருகன் பூண்டிப் பதிகம் பாடல் எண்: 3)

என்றெல்லாம் கொல்லாமைக் கோட்பாடு வலியுறுத்தப்பெறு கிறது. திருமந்திரம் இக்கோட்பாட்டை மிக உறுதியாக எடுத்துரைக்கின்றது. (பாடல் எண்கள்: 197 முதல் 200 வரை) பெரியபுராணத்தில், சண்டேசுரநாயனார் புராணத்தில் பசுக்களின் பெருமை விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பசுவினத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற அறக்கருத்து அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (பாடல் எண்கள் 1229 முதல் 1233 வரை)

தாயுமானவரும் சாந்தலிங்கரும் போற்றிய கொல்லாவிரதம்

திருமுறைகளைப் போலவே, பிற்காலத்தில் தோன்றிய தாயுமானவர் பாடல்களும் கொல்லாமை அறத்தைத் தலையான அறமாக போற்றுகின்றன. பிற்காலத்துச் சான்றோரான பேரூர் சாந்தலிங்க அடிகளார் கொல்லாமை அறத்தை வலியுறுத்து வதற்காகத் தனி ஒரு நூலையே படைத்துள்ளார். அது கொலை மறுத்தல் என்னும் பெயரில் விளங்குகிறது. இவருக்குப் பின்னர்,

தண்டபாணி சுவாமிகள் இத்தகைய அமைப்பில் சில நூல் களைப் பாடியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை, தில்லைத் திருவாயிரத்தின் கண்ணுள்ள ''பசுவினம் வாழ்க்கைப்பத்து'' திருவரங்கத்திருவாயிர நூலினுள் உள்ள ''பசுக்காப்பு மாலை'' தனிநூலான ''ஆங்கிலியர் அந்தாதி'' போன்றன.

தமிழர் தொன்று தொட்டுப் போற்றி வந்த கொல்லாமைக் கோட்பாடு சுவாமிகள் அருளுள்ளத்தை அதிகமாக ஈர்த்துள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களில் பசுவினம் பாராட்டிச் சீராட்டிப் போற்றப்பட்டதை உணர்ந்த அவர் தம் காலத்தில் அப்பசுவினம் படும்பாட்டைப் பார்த்து மனம் பதைத்துப் பாடிய நூலே ஆங்கிலியர் அந்தாதி ஆகும்.

நூல் அமைப்பு

முதல் பாடலின் அந்தமே (முடிவு) இரண்டாவது பாடலின் ஆதியாக (தொடக்கம்) விளங்க இப்படியே நூறு பாடல்களும் அமையப் பாடுவது அந்தாதியாகும். யார் மீது அந்தாதி பாடப்படுகிறதோ அவர் பெயரே அந்நூலுக்கும் அமையும். அந்த வகையில் ஆங்கிலேயரின் சிறுமைகளை இந்நூல் அந்தாதி முறையில் எடுத்துரைப்பதால் ''ஆங்கிலியர் அந்தாதி'' எனப் பெயர் பெற்றது. மற்ற அந்தாதிகளைப் போல் அல்லாமல் பாடப்பெறுபவரின் உயர்வுகளுக்குப் பதிலாக இழிவுகளே இதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள பாடல்கள் அறுசமயக் கடவுளரையும் பொதுக்கடவுளையும் தவசிலர்களையும் நோக்கி வேண்டுகின்ற பாங்கில் அமைந்துள்ளன.

நூல் நுவலும் பொருள்

இந்நூல் பொதுவாகக் கொல்லாமையை வலியுறுத்தினாலும் சிறப்பாகப் பசுக் கொலையைக் கண்டிக்கும் போக்கிலேயே அமைந்துள்ளது. இதைச் சுவாமிகளே காப்புச் செய்யுளில்,

''அந்தாதி ஒன்று பசுவதைத்து ஊன் உண்ணும் ஆங்கிலியர்
வெந்தானையோடு கனற்பூனையாக''

என்ற அடிகளின் மூலம் எடுத்துரைக்கின்றார், இப்பாடலில் எல்லாத் தெய்வங்களையும் குறிப்பிட்டுப் போற்றுவது சுவாமி களின் சமரச மனப்பான்மையைக் காட்டுகின்றது. சுவாமிகள்,

எல்லாத் தெய்வங்களும் ஒரே பரம்பொருளின் பல்வேறு வடிவங்களே என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை உடையவர். அதற்கேற்பவே இந்நூலினும் பல்வேறு கடவுளரிடம் தமது வேண்டுதல்களை மிக உருக்கமான முறையில் வைக்கிறார். ஆங்கில ஆட்சி ஒழிய வேண்டும் என்பதற்குச் சுவாமிகள் மூலக்காரணமாகப் பசுக்கொலையையே குறிப்பிட்டாலும் வேறு சில காரணங்களையும் நூலில் ஆங்காங்கே எடுத்துரைக்கின்றார்.

அவை, ஆங்கிலேயரின் கொடுங்கோன்மை, ஆணவம், அநீதி, மனம் போனபோக்கில் சட்டங்கள் இயற்றுதல், கடுமையான வரிவிதிப்பு, புவியாசை முதலியவையும் செந்தமிழ்ப்பயிற்சி மறைந்து ஆங்கிலமொழி மோகம் ஏற்பட்டது, செந்தமிழ்ப் புலவர்களின் வாட்டம் போன்றனவுமாம். இந்நூலில் இறுதியில் அமைந்துள்ள கீர்த்தனைப் பாடலொன்றும் ஆங்கில ஆட்சியின் கொடுமைகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

பசுக்கொலையை கண்டிக்கும் முறைகள்

தண்டபாணி சுவாமிகள், பசுக்கொலையைக் கண்டித்து அதைத் தடுக்கும்படி பல்வேறு கடவுளரிடமும் பல்வேறு முறைகளில் முறையிடுகின்றார். மனம் வருந்திவேண்டுதல், சினத்துடன் வேண்டுதல், இயலாமையினால் அயர்ந்து வருந்துதல் என அவற்றை மூன்றாகப் பிரித்துக் காணலாம்.

மனம் வருந்தி வேண்டும் முறை

இந்நூலில் அமைந்துள்ள பாடல்களில் கொல்லாமையை நேரிடையாகக் கண்டிக்கும் பாடல்கள் முப்பத்தேழு. அவற்றில் மனம் வருந்தி முறையிடும் வகையில் அமைந்துள்ள பாடல்கள் பதினெட்டு. நூலின் வாழ்த்துப்பாடலும், பயன் குறித்த பாடலும் கூட இவ்வமைப்பிலேயே அமைந்துள்ளன.

இப்பாடல்களில் பல வகையான அமைப்பில் சுவாமிகளுடைய முறையீடுகள் அமைந்துள்ளன. 2-ம் பாடலில் கலைமகளிடம் "நாமகளே உன் கழுத்திலுள்ள மங்கலநாண் அறியச் சொல்லு கின்றேன், நீ எனது கவிமாலையில் ஒன்றி நின்று, நாளும் பசு முதலியவற்றைக் கொன்று தின்னும் ஆங்கிலியர் அடியோடு அழியச்செய்யத்தருணம் இதுவேயாம்", என்று உரைக்கின்றார்.

23-ம் பாடலில் இறைவன் தமது பாடலுக்கு இரங்காமல் பல வகையான ஊனையுண்ணும் ஆங்கிலேயருக்கு செல்வம் அளிக்கின்றான் என வருந்துகின்றார். 26-ம் பாடலில் முறையீடு பொதுவாக அமைந்துள்ளது. இதில் "மாடுண்ணும் கொடியவர் களுக்கு யமன் என ஒரு சற்குணநாதன் வராவிட்டால் துறவி களுக்கு தூய மாதவப்பலனான ஞானம் கிட்டாது" என்கிறார். 36ஆம் பாடல் பொதுக்கடவுளிடம் முறையிடும் வண்ணம் அமைந்துள்ளது.

41ஆம் பாடலில் திருமகளிடம் கொலைத்தியரைப் பார்க்காமல் தமிழ்ப் புலவர்களைப் பார்க்கும்படி வேண்டுகிறார். 44ஆம் பாடலில் சிவபெருமானிடம் கொலைஞர்களைப் பாம்பின் வாய்த்தேரையாகப் படுத்துதற்கு வரம் அளிக்கக் கூடாதா? என வினவுகின்றார். 46ஆம் பாடலில் அம்பிகையிடம் உயிர் களைக் கொன்றுண்ணும் கொடியவர்களை, வெல்லும் ஆற்ற லுடைய ஒரு வீரன் உண்டாகும்படி திருவுளம் பற்றுவாய் என்று வேண்டுகிறார். 52ஆம் பாடலில் முருகனிடம் வெள்ளையர் அழிந்து ஆவினம் வாழத் தகாது கொல்? என்று கேட்கின்றார். 63ஆம் பாடலில், முன்பு அவுணரை அழிக்கச் சிவபெருமான் முருகனைப் படைத்தான் அதுபோல இப்பொழுது பசுவதை செய்யும் பாதகரை அழிக்க ஒரு மகனை அருளாமல் உள்ளானே! என்று ஏங்குகிறார்.

66ஆம் பாடலில் பொதுதெய்வத்திடம் கன்றுகளையும் பசுக்களையும் வதைத்து உண்ணும் பொல்லாதவருக்கு அஞ்சிக் கலங்குவனோ என முறையிடுகின்றார். 70-ம் பாடலிலே பசுவினம் மகிழும்படி பாதகர்கள் அழிய அருளவேண்டும் என இறைவனிடம் வேண்டுகிறார். 83ஆம் பாடலில் முத்தி வேண்டித் தவமிருக்கும் முனிவர்களிடம் பசுக்கொலை செய்வோர் மனத்தை சிறந்தவுபாசனை மூலமாக மாற்ற வேண்டும் என வேண்டுகிறார். 84ஆம் பாடலில் வேண்டியவற்றைத் தரும் இறைவன் உளன்; அவனை வணங்குமின்: என்று மறைகூறுவதால் என்மனமும் பசுக்கொலை புரிவோர் குலம் வேரோடு அழிய வேண்டுமென்று அவனிடம் வேண்டுகிறது எனத் தனது ஆசையை வெளியீடு கின்றார். 88ஆம் பாடலில் வேள்வியிலும் உயிர்க்கொலை செய்யக்கூடாது என்னும் எனது கருத்தைச் சிவபெருமான் ஏற்றுக்கொள்ளமாட்டாரா? என்று கேட்கிறார். 97ஆம்

பாடலில் இரத்தம் குடித்து நிணம் தின்னும் மூடர் ஆட்சி அகல, நான்மறைவழியில் ஆட்சி நடத்தும், நல்லோர் பால் மேவுவாயாக! என்று இறைவனிடம் விண்ணப்பிக்கிறார். 98ஆம் பாடலில் திருமகளிடம், மக்களாய்ப் பிறந்தும் கொடிய விலங்குகளைப் போல நிணம் தின்னும் கொடியவருக்கு அருள் புரியவேண்டாம் என முறையிடுகின்றார்.

சினத்துடன் வேண்டுதல்

பசுக்கொலையின் கொடுமையை தாங்கிக்கொள்ளாத சுவாமிகள், ஒன்பது பாடல்களில், சினத்துடன் தமது வேண்டுதல் களைத் தெய்வங்களிடம் தெரிவிக்கின்றார்.

5ஆம் பாடலில், இரக்கமில்லாமல் இளம்பசுக்கன்றுகளைத் துடிக்கத் துடிக்க அரிந்து உண்டு மகிழும் ஆங்கிலியர் தலைகளை அறுத்தெறியும் வல்லமையுடைய ஒரு வீரனை இன்னும் படைக்காத பிரமன் கைகளைச் சிவபெருமான் இன்று துண்டித் தால் நல்லது என்று கூறுகின்றார். 10ஆம் பாடலில் திருமகள் ஆன்நிணம் உண்பவர்க்கு அருள்புரிகின்றாளே! அவளைத் திருத்த ஒரு மாதவன் இவ்வுலகில் பிறக்கவில்லையே! என்று வருந்துகிறார். 17ஆம் பாடலில் பலவகையான ஆயுதங்களை ஏந்தியுள்ள தேவர்கள் எல்லோரும் பசுக்கொலை செய்வோருக்கு அஞ்சி மயங்கினர் போலும்! என்று நான் அஞ்சி இருக்கின்ற பாவத்தை என்னவென்று சொல்வேன்? என்று கேட்கிறார். 18ஆம் பாடலில் என் மனத்துள்ள தெய்வம், முத்தியைவிட மேலானது ஊன் உண்ணும் ஆங்கிலியருக்கு இன்னல் விளை விப்பதே! என்று கூறுகின்றது என எடுத்துரைக்கின்றார். 25ஆம் பாடலில் கன்று, பன்றி முதலியவற்றை உண்ணும் ஈனர் உதிரம் கடல் புதுவது என்றோ? என்று தளர்வடைவார் தவமே ஏற்றமுடையது என்று குறிப்பிடுகின்றார். 31ஆம் பாடலில் கன்று முதலியவற்றையுண்ணும் ஆங்கிலியர் ஆண்மை அழிய வேண்டுமென விரும்பாதார் மாதவம் செய்து வென்றாலும் இழிந்தவரே என்பதை எடுத்துரைக்கின்றார். 42ஆம் பாடலில் சூரியனிடம், பசுக்களைக் கொன்று தின்பாரைக் கண்டும் கருணை சிறிதுமின்றிக் களிக்கின்றாயோ? எனச் சினந்து கேட்கிறார். 48ஆம் பாடலில் திருமால், பசுக்களைக் கொன்று தின்னும் கொடியவரைத் தாக்காமல் அரவப்பாயலில் துயில்வது பாவ மல்லவா? என்று இடித்துரைக்கின்றார். 93ஆம் பாடலில் பொதுத் தெய்வத்திடம், நல்லோர் வருந்தவா? கொடியவர் களிடம் உலகைக் கொடுத்துள்ளாய்? எனக் கேட்கிறார்.

இயலாமையினால் அயர்ந்து வருந்துதல்

பசுக்கொலையைக் கண்டு செய்வதறியாது அயர்ந்து வருந்தும் சுவாமிகள், தன்னிலைமையைப் பத்துப் பாடல்களில் எடுத்துரைக்கின்றார். இவ்வாறு வருந்திப் பாடுவதற்கு, இனியாவது இறைவனருள் கிட்டாதா? என்ற ஒருவகை ஏக்கம்தான் காரணம் எனலாம். எனவே இதையும் ஒருவகை வேண்டுதலாகவே கொள்ளலாம்.

ஆங்கிலேயரை வெல்ல வல்லானைப் படைக்காத நான்முகனுக்கு நல்லறிவு என்று உண்டாகும்? என்று கலைமகளிடம் 1ஆம் பாடலில் அலுத்துக் கொள்கிறார். 12ஆம் பாடலில் பசுவதைத்துண்பவர் நீதியைக்கண்டு தெய்வங்கள் வாளாவிருக்கும் புதுமை என்னவோ? என்றும் அப்பாவிகளை அழிக்கத்தக்க ஒரு பிள்ளையை உதவாத பெண்களின் கொடுமையை என்னே! என்றும் வருந்துகின்றார். 16ஆம் பாடலில் பசு வதைப்பவர் மேல் சினந்து நான் பாடிய பாடல்கள் பயன் தரவில்லையே என்று கலைமகளிடம் புலம்புகிறார். 19ஆம் பாடலும் ஏறக்குறைய இதே அமைப்பில் உள்ளது. 22ஆம் பாடலில் பசுக்கொலை செய்யும் கொடியவர் வாழும் இக்காலத்தில், பிறந்து உழலும் நான் உய்வதெவ்வண்ணம் என்று வினவுகிறார். 32ஆம் பாடலில் திருமகள் தமக்கு இரக்கம் காட்டவில்லையே என்று வேதனைப்படுகின்றார். 43ஆம் பாடலில் சூரியனிடம் தனக்கு இரங்காமல் இருப்பதும் கொலைகாரர்களின் அநீதி கண்டு பொறுத்திருப்பதும் அறமா? என்று கேட்கிறார். 50ஆம் பாடலில் தமது இயலாமையை எடுத்துரைக்கின்றார். அதில், “எம்மதமேனும் கொன்று உண்ணாததாகில் எனக்கினிதே” என்று உரைக்கின்றார். 77ஆம் பாடலில், பசுக்கொலை புரிபவரை அழிக்கத்தக்க ஒருவனைப் படைக்காத தேவர்களின் நிலையை எண்ணித் தவச்சிலர்கள் நெஞ்சம் துடிப்பதை உணர்த்துகின்றார். 87ஆம் பாடலில் ஆடு முதலியவற்றைத் தின்பவர் இறுமாந்து திரிவதையும் தான் வசவுகள் பலபெற்றுத் துயர் எய்துவதையும் எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறு, தண்டபாணி சுவாமிகள் தமது அருளுள்ளம் காரணமாகப் பல்வேறு முறைகளில், உயிர்க் கொலையைக் குறிப்பாகப் பசுக்கொலையை வன்மையாகக் கண்டிக்கிறார். கொல்லாமையோடு தொடர்புடைய, புலால் மறுத்தலையும் ஆங்காங்கே எடுத்துரைத்து மக்களுக்கு அருள்வழியைக் காட்டி, அதில் செல்லும்படி ஆற்றுப்படுத்துகிறார்.

புலவர் புராணத்தில் சுந்தரமூர்த்தி சருக்கம்

பா. நீலாவதி

திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம், திருத்தொண்டர் புராணச்சாரம் என்பன சைவ அடியார்களது பெருமையை விளக்கி நிற்கும் நூல்களாகும். அவற்றுள் சேக்கிழார் பெருமான், திருத் தொண்டர் புராணம் எழுதுவதற்கு முதல் நூலாய் விளங்கியது திருத்தொண்டத் தொகையாகும். சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவரான சுந்தரர், தோழமை மார்க்கத்தைப் பின்பற்றியவர். பெரிய புராணத்துக்குக் காப்பியத் தலைவர். கயிலாயத்தில் சிவபெருமானது அழகே உருவாய் வெளிப்பட்டுத் தோன்றியவர் என்பர். திருப்பாற் கடலில் இருந்து எழுந்த ஆலகால விடத்தைச் சிறிதளவாகத் திரட்டி, வந்து சிவபெருமானிடம் தந்தமையால் 'ஆலால சுந்தரர்' என்னும் பெயர் பெற்றனர் என்பர்.

பெரிய புராணம் திருமலைச் சருக்கத்தில் துவங்கி, வெள்ளானைச் சருக்கத்தில் முடிவடைகிறது. சேக்கிழார் பெருமான், சுந்தரர் வாழ்வினை மையமாக வைத்தே பெரிய புராணத்தைப் பாடியருளியுள்ளார். திருக்கயிலாயத்தின் சிறப்பு, சிவனாரது அணுக்கத் தொண்டனாய் ஆலால சுந்தரர் திருக் கயிலாயத்தில் இருந்தமை, இறைவன் சுந்தரரை 'மண்மேல் விளையாடுக' எனப் பணித்தமை, சுந்தரராக திருவாரூரில் பிறந்தமை, இறைவனால் தக்க தருணத்தில் தடுத்தாட் கொள்ளப்பட்டமை, ஏயர்கோன்கலிக்காமரைத் தனது அன்பினால் வென்றமை, கழறிற்றறிவார் நாயனாருடன் கொண்ட நட்பு, சேரமான் பெருமாளுடன் திருக்கயிலையிலே முக்தி பெறல் ஆகிய செய்திகள் சுந்தரரைப் பற்றி பெரிய புராணம் வழியாக அறியலாகும் செய்திகளாகும். இச்செய்தி களை தவத்திரு. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய புலவர் புராணத்துள் சுந்தரமூர்த்தி சருக்கத்தில் எவ்விதம் சொல்லப்பட்டுள்ளது எனக் காண்டல் இக்கட்டுரையின் நோக்க மாகும்.

சிவபெருமானுடன் நட்பின் இலக்கணமாகத் திகழ்ந்த தம்பிரான் தோழரது வரலாற்றை, சுந்தரமூர்த்தி சருக்கம் என்ற பெயரிட்டு, சுவாமிகள் படைத்துள்ளார். 22 பாடல்களில் சுந்தரர் வரலாற்றினை மிகச் சுருக்கமாக எழுதியுள்ளார். சுந்தரது வாழ்வில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் முக்கிய நிகழ்ச்சிகள் இப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. சுந்தரரது வரலாற்றினை அறிய பெரிய புராணம் கிடைக்கவில்லையாயின், கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் எழுதிய திருத் தொண்டர் புராணப் பயன் என்னும் திருத்தொண்டர் புராண சாரத்தைப் படித்தாலே போதும் என்பர். உமாபதி சிவாச்சாரி யார் எழுதிய மேற்கண்ட நூலில் சுந்தரர் வரலாறு 16 வரிகளில் மிகச் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

அப்பாடல் வருமாறு:

1) தண் கயிலையது நீங்கி, நாவலூர் வாழ்
சைவனார், சடையனார் தனயனாராய்
மண்புகழ் வருட்டுறையா னோலை காட்டி,
மணம்விலக்க வன்தொண்டர் யதிகை சேர்ந்து,
நண்பினுடன் அருள்புரிய ஆரூர் மேவி,
நலங்கிளரும் பாவை தோணயந்து வைகித்,
திண் குலவும் விறன் மிண்டர் திறல்கண்டேத்துத்
திருத் தொண்டத் தொகை யருளாற் செப்பினாரே.

2) செப்பலருங் குண்டையூர் நெல்லழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல் செழும் பொன்னாச் செய்து,
தப்பின் முது குன்றந்தரும் பொருளாற்றிட்டுத்
தடத் தெடுத்துச் சங்கிலி தோள் சார்ந்து, நாத
னொப்பிறவித் தூதுவர், தாறூடு கிறி,
யுறுமுதலை சிறுமதலை யுமிழநல்கி,
மெய்ப் பெரிய களிறேறி, யருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவினாரே''

என்ற இந்தப் பாடல்களின் ஒவ்வொரு வரியையும் விரித்து, ஒரு பாடலாக, தவத்திரு. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் புலவர் புராணத்துள் சுந்தரமூர்த்தி சருக்கமாகத் தந்துள்ளார்,

சருக்கத்தின் பெயர்

சுந்தரரது வரலாற்றைக் கூறும் பகுதியை, ஏனையோரது வரலாற்றைக் கூறும் பகுதியைப் போன்றே சருக்கம் என்றே பெயரிட்டுள்ளார். சுந்தரர் என்ற பெயரை சுந்தரமூர்த்தி என்று குறிப்பிட்டுள்ளார். நாயனார் என்ற சொல்லை இணைக்க வில்லை சுந்தரமூர்த்தி சருக்கம் என்று பெயரிட்டமை, சுந்தரர் மீது சுவாமிகள் கொண்ட ஆழமான ஈடுபாட்டினால் அமைத்தது எனக் கொள்ளலாம். ஞானத்துடன் சம்பந்தம் உடையவராகக் கருதப்படுகின்ற திருஞான சம்பந்தரினும் சிறந்தவராக, சுந்தரரை புலவர் புராணத்துள் நமக்கு, சுவாமிகள் அறிமுகம் செய்துள்ளார். எனவே, தான் மிக விரும்பும் நாயனாரான சுந்தரரை, சுந்தரமூர்த்தி என அழைத்தமை ஆசை பற்றி அமைத்த சொல்லாட்சி எனக் கொள்ளல் தவறன்று.

பாடல் அமைப்பு

சுந்தரரது வரலாறு கதை போல் சொல்லப்பட்டுள்ளது. கயிலை மலையில், சிவபெருமான் தனது சாயலைக் கண்ணாடியில் பார்த்து, நேரிலே வருமாறு அழைத்தாராம். அதன் பயனாக அழகிய உருவுடன் இறைவனின் வடிவான சுந்தரர் தோன்றினாராம். இதைப் போன்றே, உமையவளும் தனது இரு கண் ஒளியினால் கமலினி, அநிந்திதை இருவரையும் தோற்று வித்தாளாம்.

சுவாமிகள் திருக்கயிலாயத்தில் இம்மூவரும் தோற்றிய முறையை புதுமையாகச் சொல்லிச் செல்கிறார்.

"கயிலை மலைக்கட் சிவபெருமான் ஓர் கண்ணாடி
வயின் நிலவும் சாயலை நேரே வருகென்றான்
அயி லுறழ் கண்மா துமைஅதிரண்டால் அது சொன்னாள்
பயில வலார் மூவரும் அவர் கோலப்படி வந்தார்"

என்பது முதல் பாடலாக அமைந்துள்ளது.

அடுத்து, அப்பெண்கள் இருவர்மீதும் சுந்தரர் மையல் கொண்டமை, மண்ணிலே பிறந்து இன்பம் துய்த்து மீண்டும் கயிலையை அடைக எனப் பணித்தமை, சுந்தரர் தன்னை இறைவன்ஆட்கொள்ள வேண்டும்எனப்பணிந்தமை, ஆகியசெய்தி

கள் அனைத்தும் இரண்டே பாடல்களில் இடம் பெற்றுள்ளன. சுவாமிகள், பெரிய புராணத்துள், தடுத்தாட் கொண்ட புராணச் செய்திகளாக இடம் பெற்றுள்ள பாடற் கருத்துக்களை, மூன்றே பாடல்களில் சுருங்கச் சொல்லிச் செல்கிறார்.

திருவாரூரில் பரவையாரைக் கண்டு மணத்தல், குண்டையூரில் நெல் பெறல் ஆகியன அடுத்த இருபாடற் செய்திகளாகும். தொடர்ந்து சுந்தரர் செய்த அரிய நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் துரைகிறார். ஆயினும் அனைத்து அரிய நிகழ்ச்சிகளிலும் அரியது, முதலை வாய் பிள்ளையை மீட்டது தான் என, ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

"ஏதம் இன்றிய அற்புதங்கள் எத்தனை தான்
எவரெவர் எடுத்திசைத்தாலும்
சீதநீர்க் குளத்து, முதலை யுண்டழித்த
சேயை மீட்டளித்ததுக் கொப்பென்று
ஓத மற்றொன்றும் உளதென வருமோ?
உணர்வின் சிறந்த உத்தமரே"

என்பது அப்பாடல். எனவே சுந்தரரது அனைத்து அரிய நிகழ்ச்சி களிலும் தலையாயது முதலை வாய்ப் பிள்ளையைப் பெற்றமை தான் என்பது சுவாமிகளது கருத்தாகும்.

ஞானசம்பந்தருடன் ஒப்பு

சீர்காழி புகழ் ஞானசம்பந்தர், வெள்ளெலும்பை; பெண் ஆக்கிய செயல் அருமை உடையது தான் எனினும், சுந்தரர் ஏதும் அற்ற (எலும்புகூட இல்லாத நிலையில்) வெறுங் குளத்திலே முதலையின் வாயிலிருந்து பிள்ளையை வரவழைத்தது, சற்று உயர்வுடையது என்கிறார்.

பாடல்

"அன்று சிகாழிக்கவுணிய மதலை
அழலினில் வெந்த வெள்ளென்பைத்
துன்று பூண் முலைப்பெண் ஆக்கிடப் பதிகம்
சொல்லிய தருமையே எனினும்
ஒன்றும் ஆதரவில் வெறுங் குளத்திடைபோய்,
உதகமும் முதலையும் மகவும்
தன்றுதித் தமிழால் தம்பிரான் தோழன்
தருதல் சற்றுயர் வெனத்தகுமே"

காமவேளின் அம்புகளுக்குப் பலியாகாத, ஞானப் பிள்ளை, ஞானத்துடன் சம்பந்தம் உடையது. அத்தகு குழந்தை வீடுபேறு அடைந்தது வியப்பானது அன்றி, இருமங்கையரை மணந்து, செய்த சத்தியம் தவறியதால் கண்ணிழந்து, மீண்டும் பெற்று, அப்பெண்டிர்க்காக இறைவனையே தூதாக அனுப்பியது வியப்பா? என்ற வினா எழுப்பி, விடையாக சுந்தரர் செயலே வியப்பளிப்பது என்கிறார்.

''காமவேள் கணையின் கதுமை சற்றேனும்
துதுவுறாக் கவுணி மதலை
யாமவன் அருட்பே றடைந்தது வியப்போ?
அணங்கனார் இருவர் தோள்அணைந்து
நேமமும் தவறி, அதன் பொருட்டிரண்டு
நேத்திரங்களும் இழந்தடைந்தோன்
சோமசேகரனை அவர்கள்பால் இதச்சொல்
சொலும்படி விடல் பெருவியப்பே''

இப்பாடல்கள் வழியாக அரிய செயலிலும், வியப்பான செயலிலும் சுந்தரர், ஞானசம்பந்தரரையும் விஞ்சி நிற்கிறார் என்பது சுவாமிகள் சொல்ல வந்த கருத்தாகும்.

இறுதிப் பாடலில், சுந்தரரை அழகனான முருகப் பெருமானுடன் ஒப்பிட்டுச் சொல்கிறார்.

எளிய நடை

இச்சருக்கப் பாடல்கள் பாமரரும் அறிந்து கொள்ளும் எளிய நடையைப் பெற்றுள்ளது. இனிய பழகு தமிழ் நடை கதை சொல்லும் தெம்பாங்கில் அமைந்துள்ளது

''அன்று தொட்டுள்ள சிவதலம் தொறும்போய்
அருந்தமிழ்ப் பதிகம் மிக்கறைந்து
நன்னூர் வியக்கப் பெரிது. சஞ்சரித்து
நாள்சில கழிந்த பின்ஒருநாள்''

என்பது போன்ற கதை, மொழி, நடை, இச்சருக்கம் முழுவதும் பயின்று வருகிறது.

''கந்தனே அனைய சுந்தரன்'' அமைத்த ஒப்புமை என்று புதிதாக இவர் அமைத்த ஒப்புமை முருகனை ஒத்த அழகு, முருகனை ஒத்த அறிவு, முருகனை ஒத்த இல்லற மாண்பு பெற்ற

சுந்தரர் என விரித்துப் பொருள் கொள்ளும் வகையில் அமைக்கப் பட்ட சொல்லாட்சி ஆகும்.

கற்பனை

சுவாமிகள், திருக்கயிலாயத்தில் சிவபெருமான் சாயலாக சுந்தரர் தோன்றியமையை மற்ற புலவர் பாடாத அளவிற்குக் கற்பனை கலந்து பாடியுள்ளார். கயிலை மலையிலே, ஆடியின் எதிர்நின்ற சிவபெருமான், தன்சாயலை நேரில் வருமாறு அழைத்தார். வேல் போன்ற கண்களைப் பெற்ற உமை, தன் கண்களின் ஒளியிலிருந்து கமலினி, அநிந்திதை இருவரையும் அவ்வாறே வரவழைத்தாள் என்பது கற்பனையின் உயர் நிலையைக் காட்டுவதாகும்.

சுந்தரது திருமணத்தை நேரிற் கண்டவர் போல்,

''அம்மதலைக் கிரெண் வயதாயிற் றந்நாளின்
மைம்மலி சூந்தர் பெண்மயில் ஒன்றை வதுவைக்காகச்
செம்மணவறை மீதொக்க இருத்தித் தீமுன்னர்
மெய்ம்மறை சொல்லும் விதிவழி கிரியை ரிறைத்தாரே''

என்கிறார். இதில் திருமண நிகழ்ச்சிகள் படிப்போரது கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப் படுகின்றன.

இச்சருக்கத்திலிருந்து தண்டபாணி சுவாமிகள், இனிய, எளிய, பாமரரும் அறியும் நடையைக் கையாண்டுள்ளார் எனத் தெரிய வருகிறது. பெரிய புராணத்துள் பல செய்யுள் களாக பாடப்பட்ட சுந்தரர் வரலாறு மிகச் சுருங்கிய வடிவில் 22 பாடல்களுக்குள் சொல்லப்பட்டுள்ளமை அறிய முடிகிறது. இம்முறைக்கு உமாபதி சிவாச்சாரியாரது திருத்தொண்டர் புராண சாரம் முன்னோடியாக இருக்கலாம் என துணியப் பட்டுள்ளது. சுந்தரரது அரிய செயல்களிலெல்லாம். முதலை வாய்ப் பிள்ளையைக் கொணர்ந்தமை தான் சிறந்தது என்பது தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. பிள்ளைப் பருவத்திலேயே ஞானத்துடன் சம்பந்தம் பெற்ற ஞானசம்பந்தப் பெருமானை விட சுந்தரர் அரிய செயல்களையும், வியப்பான செயல்களையும் செய்தவர் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. கந்தனுடன் ஒப்பிடப்பட்ட சுந்தரரது அழகிய தோற்றம், சருக்கத்தின் பெயர், அமைப்பு ஆகியன சுவாமிகள் கந்தன் மீதும் சுந்தரர் மீதும் கொண்ட பற்றினைச் சுட்டுவனவாக அமைந்துள்ளன.

சுவாமிகளின் வண்ணம்

இல. பழநிச்சாமி

வண்ணப் பாடல்கள் பற்றித் தொல்காப்பியர் வண்ணங்கள் இருபது என்றும், யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர் வண்ணங்கள் நூறு என்றும் கூறியுள்ளார்கள். இவர்கள் கூறிய வண்ணங்கள் சந்த வண்ணங்களின் இயல்புடையன அல்லவாம். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அவதரித்தருளிய திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளும், குருகூர்ச் சடகோபர் என்ற நம்மாழ்வாரும் சந்தக்கவிகள் பாடியுள்ளார்கள். அவை ஞானசம்பந்தர் பிடிய தன் உருஉமை கொளமிகு கரியது என்றும் நம்மாழ்வார் உயர்வற உயர்நலம் உடையவன்யவனவன் என்றும் அருளிச் செய்தனவாம். இன்னும் பல சந்தக்கவிகளை ஞானசம்பந்தப் பெருமாள் அருளிச் செய்துள்ளார். வண்ணத்து இயல்பு என்ற இந்த இலக்கண நூலில்,

"சிலவகைச் சந்தப் புணர்ப்பு ஓர்துள்ளலே – என்றும்
பலவகைத் துள்ளல் புணர்ப்பு ஓர் குழிப்பே – என்றும்

"குழிப்பொரு மூன்று கூடிய பின்னர்
தொங்கல் தாழிசைத் துள்ளல் ஒன்று இசைக்கில்
கலை ஒன்றாமெனக் கழறுவர் புலவோர்" என்றும்

"எண்கலைப் புணர்ப்பு ஓர் வண்ணப்பாவே"

என்றும் அருளிச் செய்துள்ளார்.

வண்ணம் என்றாலும் சந்தம் என்றாலும் ஒரு பொருள் தருவன. அருணகிரிநாத சுவாமிகளுக்கு முற்பட்டோர்கள் கூறிய வண்ணம் என்ற சொல் சந்தம் என்ற பொருள் தராமல் வெவ்வேறு பொருள் தருவனவாம். அருணகிரிநாதர் காலத்தவ ரான வில்லிபுத்தூராழ்வார் காப்பியத்தில் சந்தக் கவிகளை அமைத்துப் பாடிய மகாகவியாவார்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்கூறிய வண்ணப் பாடலின் சிறப்பாவன

திருப்புகழில் உள்ளது போல நான்கு அடிகள் எதுகையுடன் இருப்பது. இந்த நான்கு அடிகளே எட்டுக்கலைகள் ஆகும். ஒவ்வொரு கலையும் உரிய மோனையுடன் வருவதாம்.

வண்ணப் பாடலில் முதல் மூன்று கலைகளிலும் பாட்டுடைத் தலைவன் சிறப்பும், நான்காவது கலையில் தலச் சிறப்பும் சொல்லி ஏனைய நான்கு கலைகளிலும் அகத்துறையைப் பாட வேண்டும். முதலில் உள்ள நான்கு கலைகள் ஆண்கலை எனவும் பின்னவை பெண்கலை என்றும் பெயர் பெறும்.

வண்ணத்தியல்பு நூற்பா:

''முந்திய பகுப்பின் கலையோர் மூன்றில்
தலைவன் தன்புகழ் மூன்றில் கூறி, மற்று
ஒன்றில் அன்னவன் வரை நாட்டு அணி சொற்று,
ஏனைக்கலை நால் இடத்தில் பல்வகைத்
துறைகளில் ஒன்றைத் துகள்அறக் கூறல்
வண்ணப் பாவின் வழக்கெனத் தகுமே'' என்பதாம்.

வண்ணச்சரபர் திருவுருமாமலை முருகன்மீது பாடிய அவயவம் எழுதல் அரிது எனல் என்னும் வண்ணம்.

அவயவம் எழுதல் அரிது என்பது இந்தக் கட்டுரையின் தலைப்பு.

அவயவம் எழுதல் அரிதெனல், தலைவியின் மீது காதல் உற்ற தலைமகன் ஒருவன் பாங்கி முன் அணுகி மடல் ஊர்வேன் என்று தன் கருத்தைக் கூறி இரப்ப, ''அவள் உன் மீது அன்புடையவளே. வெளியில் அப்படி அன்பற்றவள் போல் இருப்பாள். அதை நீ அறியாமல் அவளது உருவம் எழுதவும் மடலேறவும் முயல்வது தவறு. அதனால் தீமை விளையும் அவளை அணுகி அவள் அன்பைப் பெறுக. இனிமையாக வாழலாம்'' என்று தோழி அறிவுறுத்துவதாம்.

மடல் ஊர்தல் என்பது ஆடவர்க்கு உரியது.
பெண்டிர்க்கு உரியது அன்று.

"கடல் அன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்கது இல்'' - திருக்குறள்.

ஒரு தலைவியின் மீது காதல் கொண்ட தலைவன் தலைவியின் பாற் சென்று மடல் ஊர்ந்தாயினும் உன்னை மணப்பேன் என்று கூறுவதாம்.

மடல் ஊர்தலின் நெறிமுறை - தலைவன் தலைவியின் உருவத்தை ஒரு கிழியில் வரைந்து கையில் எடுத்துக் கொண்டு பனையின் கறுக்கு மட்டைகளால் குதிரை போன்று செய்து அந்த மடற்குதிரை ஏறி ஊர்வலம் வருவதாம். ஊரார்கள் அது கண்டு அந்தப் பெண்ணை அந்தத் தலைவனுக்குத் திருமணம் செய்து வைப்பதாம். இது சொல் அளவே அன்றிச் செயல் அளவில் இல்லை என்பர். இஃது மடல் ஊர்ந்தாயினும் உன்னைத் திருமணம் செய்வேன் என்ற உறுதிப்பாடாம்.

குழிப்பு

தனனா தனனா தனனத் தனனதத்த
தனனா தனனா தனனத் தனனதத்த

தனனத் தனன தத்த - தனனத் தனன தத்த
தனனத் தனன தத்த தனதத்த தான

(தொங்கல்) தனன தனா தனத்த தத்த தய்யனா.

1-வது கலை:

குரு தேசிகனார் சிவ சுப்பிர மணிக்கு
விலை நாம் எனவே தமிழிற் கவி தொடுக்கும்

அருமைப் புலவர் சித்த மலரில் தினம் நடிக்கும்
இருபொற் கழல் படைத்த பெருமைக் குமாரர்

கருணாகரவேள் பொதியைக் கிரியில் உற்ற
குறுமா முனிபால் அருள் மெய்ப்பொருளை ஒப்பில்

அருணைக் கிளியினுக்கும் உதவிப்புகழ் பொறுத்த
கருணைக் கடல் படைக்கை பெறுசுத்த வீரர்.

குலசேகரனார் சகுணக் கடவுளர்க்குள்
உயர்சீர் உடையார் தனி நிட்கள விருப்பம்

அருளில் தரும் ஒருத்தர் முதன்மைக் கடவுள் செட்டி
மனையிற்குளும் உதித்த புனிதக் குணாலர்
அயில் அதனால் அமர்க்களத்தை வெல்லுவார்.

பொழிப்புரை: குருநாதனான சிவசுப்பிரமணிய சுவாமிக்கு நாம் விலையானோம் என்று தமிழ்ப்பாடல் தொடுக்கின்ற அருமைமிக்க புலவர்கள் இருதயமலரில் தினமும் நடம் செயும் பெருமைமிக்க குமாரக் கடவுள். கருணைக்கு இருப்பிடமானவர் பொதியாசலத்தில் உள்ள குறுமுனிவருக்கு உபதேசித்து அருளிய உண்மைப் பொருளை ஒப்பில்லாத தமது மலர்க்கரத்தில் வீற்றிருக்கும் கிளி வடிவமான அருணகிரிநாதருக்கு உபதேசம் செய்து திருப்புகழ் என்னும் சந்தப்பனுவலைப் பெற்றுக் கொண்டவர் கருணைக் கடலாக உள்ளவர் வெற்றிமிக்க ஆயுதங்களைப் பெற்ற கரதலங்களைக் கொண்ட சுத்த வீரர், தேவர் குலசேகரர், உருவவடிவ மூர்த்திகளுக்குள் உயர்ந்த சிறப்புப் பெற்றவர். ஒப்பற்ற அருவ வடிவ விருப்பத்தை தனது அருளினால் அடியவர்கட்கு உதவும் ஒருவராக உள்ளவர். மதுரை மாநகரில் ஒரு செட்டி வீட்டிலும் அவதரித்த களங்கமற்ற குணத்தை உடையவர். வேலாயுதத்தினால் போர்க்களத்தை வெல்லக் கூடியவர்.

2-வது கலை

கொலை வேர் அறவே கருதித் தவம் இயற்றும்
அவர்பால் அணிமா மயிலில் திகழ் சிறுக்கர்

புலமைத் திறல் மிகுத்த ஒரு பத்தன் வசம் அற்று
வெருளச் செய் அலகைக்கு ஓர் எமன் ஒத்த பாலர்

அருணாபுரி ஆலயவட்ட மதிலுக்குள்
மனையாள் தனை ஓர் தவசிக்கு உதவு பத்த

வதுகைப் பொருள் முடித்த சிகரிக்கு வடபக்கம்
ஒரு சொற்பகரும் நித்தர் உலகச் சகாயர்

குளிர் தாமரை ஆகிய தொட்டில் அதனுக்குள்
ஒருசேய் என வாவியில் உற்ற முருகப்பர்

தருணத்தில் எமது இச்சை வழி நிற்கும் உயர்சித்தர்
பொருகுக் குடமுழக்கம் மலிவுற்ற தோளர்

அடியவர் வாய்மையைக் கருத்தில் உள்ளுவார்.

பொழிப்புரை: கொலைத் தொழில் அடியோடு நீங்கும்படி எண்ணித் தவம் செய்யும் அடியவரிடத்தில் மயில்வாகனத்தில் வந்து காட்சியளிப்பவரும், புலமைமிக்க நக்கீரர் தன் வசம் அற்று மயங்கும்படி செய்த கற்கிமுகி என்னும் பேய் அழிய அப்பேய் முன்பு எமன் போன்று வந்த பாலசுப்ரமணியரும் அருணாசல ஆலய வட்டத்தில் தன் மனையாளை ஒரு தவசிக்குத் தந்த வல்லாள மகாராசனின் கைப்பொருள் கொண்டு கட்டி முடித்த கோபுரத்தின் வடதிசையில் ஒப்பற்ற ஒரு வாக்கியத்தை எனக்கு (தண்டபாணி சுவாமிகளுக்கு) அருளிச் செய்த நித்தியரும், உலகத்தின் சகாயரும், கங்கையாற்றின் சரவண தடாகத்தில் தாமரை மலராகிய தொட்டிலில் குழந்தை வடிவாகக் காட்சி யளித்த முருகக்கடவுளும், தக்க தருணத்தில் எனது மன விருப்பத்தின்படி நின்றருள்புரியும் ஒரு சித்தரும், சேவற் கொடியின் தொனி முழக்கம் நிறைந்த புயங்களை உடையவரும் ஆகிய கந்தவேள் அடியவர்களின் வாய்மை மொழியைக் கருத்தில் எண்ணிச் சிந்திப்பவராவர்.

3-வது கலை

திருநீறு அணியா தவரைக் கருவிமிக்க
மதுராபுரி ஊர் வழுதிக்கு அருள் கொடுத்த
    கலை உற்றவனை மெச்சும் அவருக்கு இனியர்சட்டி
    விரதத்தினர் கருத்து முடியச் செய் தேவர்
துணிவே வடிவாகிய சத்தியமதுற்ற
கவுமாரரை ஓர் கொதுகிற் கருதுநர்க்கு
    நிலைகெட்டறிவு கெட்டு வழி கெட்டழகு கெட்டு
    விழி கெட்டு அலையும் நட்டம் உறவிட்ட வேடர்
திரை ஆ ழியில்வாழ் அவுணக்கரு அறுத்த
பெருமாள் நெடுமால் விழிபெற்ற மகளிர்க்கு ஓர்
    உரிமைக் கணவர் பற்பல் கனவிற்பல் வடிவத்தொடு
    ஒளிர்சத்தி பெறும் இட்டர் மலை உச்சியாளர்
செயிர் அறுசீர் தொடுத்து மெத்த நல்குவார்.

பொழிப்புரை: திருநீறு அணியாத சமணரை அழித்து மதுரை மாநகர்ப் பாண்டிய மன்னனுக்கு வெப்பும் கூனும் தவிர்த் தருளிய ஞானசம்பந்தரைப் போற்றுகின்ற அடியார்க்கு இன்பம்

அருள்பவரும், கந்தசஸ்டி விரதம் புரிபவர்கள் எண்ணம் நிறைவு பெறச் செய்பவரும், வைராக்ய சித்தத்தை உடைய கவுமாரரை ஓர் கொசுகுபோல் கருதுபவர்களுக்கு நிலைகெட்டு, அறிவு கெட்டு, நல்வழியும் கெட்டு, அழகும் கெட்டு, கண் பார்வையும் கெட்டு அலையும்படி செய்கின்றவரும், அலைகடலில் வாழ்ந்த அவுணர்களை அழித்த திருமாலின் விழியில் தோன்றிய வள்ளி, தெய்வநாயகி இருவருக்கும் உரிமையான கணவரும் பல கனவில் என்னிடத்தில் வேற்படையுடன் காட்சி கொடுத்தவரும் மலையின் உச்சியில் வீற்றிருப்பவருமாகிய முருகப் பெருமான் தனது அடியார்களுக்கு குற்றமற்ற சிறப்பினை மிகவும் அருள்பவர்.

4-வது கலை

நலச் சிறப்பு

சினைமா முகில்சேர் பொழிலில் தினைவிளைக்குள்
மயில் போல் வருவார் மயல் முற்றி அவர் செப்பும்
　　மொழியிற் பரிதவித்து விழியிற் சுழல்வதுற்று
　　வலியத் தொழுது இரக்கும் விடர் சுற்று சாரல்
வளமே விடமால் இமயக் கிரியும் வெட்கும்
　　வடமே ருவைநேர் சொல நிற்கும் எழில் பெற்று
　　முனிவர்க்கும் அமரர்க்கும் உரகர்க்கும் மனிதர்க்கும்
இவர் ஒக்கும் எவருக்கும் உயிர் ஒத்து நீடு
செயலோடு ஒருமா நதிமத்தியில் எனக்கும்
ஒருநாள் ஒரு பேரறிவுற்றிட உணர்த்தி
　　மலயக்கிரியினுக்கு மகள் பெற்ற மகவொத்து
　　முதிர் சொற்பனுவல்கட்கு மிக இச்சையான
திருஉருமா மலைக்கு அடுத்த நெல்லையாய்.

பொழிப்புரை: கருவுற்ற மேகங்கள் தங்கும் சோலைகள் சூழ்ந்த தினைப்புனத்தில் மயில் போன்று வருகின்ற மடந்தையர் மீது மையல் மிகுந்து அவர்கள் சொல்லும் இனிய மொழிகளால் மனம் பரிதவித்து கண்கள் காம மயக்கினால் சுழன்று அப்பெண் கள் பால் சென்று வலியத் தொழுது அவர்கள் தரும் இன்பத்தை யாசிக்கின்ற காமுகர்கள் சுற்றும் சாரலை உடையதும் வளம் மிகுதலால் இமயமலையும் நாணும்படியான

வடமேருவினைப் போன்ற அழகு பெற்றுள்ளதும், முனிவர்க்கும், தேவர்க்கும், நாகர்க்கும், மனிதர்க்கும் இன்னும் மற்றவர்களுக்கும் உயிர் போன்று உள்ளதும் திருஉருமாமலை. இங்குள்ள நீண்ட தாம்பிரவர்னி ஆற்றின் மத்தியில் எனக்கும் ஒரு பேரறிவு உற்றிட உபதேசம் உணர்த்தியவரும் மலயாசல மகளான உமா தேவியாரின் குமாரருமான முருகப்பெருமான் போன்று இன்பு முதிர்ந்த தமிழ்ச் சொற் கவிமாலைக்கு விருப்பமானவரே. இந்தத் திருவுரு மாமலைக்கு அடுத்த நெல்லையம்பதியில் உள்ளவரே!

பெண்கலை

5-வது கலை

புரு கூதனை மாயவனைக் குகனை ஒப்பில்
மலர் மாரனை நேர் வடிவுற்ற உனை அப்பெண்
மனதில் தினம் நினைப்பள் வெளியிற் கபடம் வைத்து
மயல் அற்றவர்கள் ஒக்கும் மொழி செப்புவாள் மெய்

அதை நீ அறியாது உலகிற் பலரு மெச்சும்
மடல் ஏறிட நாடினை அப்படி வருத்த
முயல்வுற்று முனையுற்ற பனைமட்டைகள் அறுக்க
வரும் அத்தனையுள் ஒற்றை விதிதப்பில் நீதி

புரிவோன் வடிவாள் கொடு வெட்டும் உடல் முற்றும்
மதநீர் வருமோ இதனிற் துணிவு பெற்றும்
அவள் பொற்பு எழுத நத்தி எனை ஒப்பு என இசைத்தது
உனை ஒத்தவர்கள் பற்றும் இயல்பிற் கொவாது

பயிலரும் நூல் மிகப் படித்த செல்வனே.

பொழிப்புரை: படிப்பதற்கு அரிதான பல நூல்களை மிகவும் கற்றுணர்ந்த செல்வனே!

இந்திரனையும், திருமாலையும், முருகனையும், மன்மதனையும் போன்ற அழகுமிக்க உன்னை அந்தப் பெண் தன் மனத்தில் தினமும் நினைப்பாள். வெளியில் வஞ்சகத்துடன் மையல் இல்லாதவர்கள் போன்று பேசுவாள். இது உண்மை. அதனை நீ உணராமல், அவளைச் சேர வேண்டும் என்று கருதி உலகில் பலரும் மெச்சும்படியான மடல் ஏறி ஊர்ந்திட முயற்சி கொண்டுள்ளாய். அப்படி வருத்தமான செயலில் நீ முயன்றால்

கூர்மையான பனைமட்டைகள் உன் உடலை அறுத்துத் துன்பம் செய்யும். பனை மட்டைகளால் செய்த மடற்குதிரை யூர்ந்து நீ வரும்போது ஒரு நெறி தவறினாலும், நீதி புரிவோன் தனது வாள் கொண்டு உன்னை வெட்டுவான். வெட்டுப்பட்ட அறுபட்ட காயங்களில் மதநீர் வருமோ? இந்தச் செயலில் நீ துணிவு கொண்டு அந்த மடந்தையின் – அழகினை எழுத விரும்பி மனம் ஒப்பிச் சொல்லியது எவ்வாறு முடியும் உன்னைப் போன்றவர்கட்கு இது ஒவ்வாதது.

(மடல் ஊர்தல் என்பது தலைவியின் உருவத்தை ஒரு கிழியில் எழுதி தலைவன் அதைக் கையில் பிடித்துக்கொண்டு, பனைமரத்தின் கருக்குபட்டைகளாற் செய்த குதிரைமீது ஏறி நகரை வலம் வருதலாம். இது சொல்லால் நடைபெறுவதன்றிச் செயலால் நிகழ்வது அரிதாம்).

கிழி – புதிய திரைச்சீலை. அல்லது புதிய துணி

6-வது கலை

புதுமா மலர் சூடியமைக் குழல் வனப்பு
வரைவாய் அரனார் கவியிற் புகழும் ஒப்பில்
மணம் எப்படி அமைப்பை இசை எப்படி இசைப்பை
நுதல் ஒத்து எழுதி வைக்கில் அது வெட்டுமோ சொல்
விழிவேல் வரைவாய் அவைகட்கு உளசிமிட்டு
நயம் ஆதிய சீர் உறவைப்பது இலை மெய்ச்சொல்
குழை இட்ட செவி சற்றும் அசைவற்று எழுதிவைப்பை
அலர் துத்தி மலர் ஒத்த பணி இட்ட நாசி
பொறியால் வரைவாய் மணம் எப்படி முகக்கும்
இதழ்வாய் வரைவாய் நகை எப்படி நகைக்கும்
உரை எப்படி உரைக்கும் அமுதெப்படி அளிக்கும்
வரைவுற்ற கவுள் முத்தம் இட ஒப்புவாய் கொல்.
படமொடு தூரியத்தும் இச்சை கொள்வதேன்.

பொழிப்புரை: புதுமலர் சூடிய கூந்தலின் வனப்பை எழுதுவாய். ஆனால் சிவபிரான் தன் கவிதையாற் புகழும் வாசனையை எப்படி அமைக்க முடியும். நெற்றியை எழுதுவாய் நெற்றியின் அசைவான வெட்டினை எப்படி எழுத முடியும்.

வேல் போன்ற கண்களை எழுதுவாய். அவைகளுக்கு உரிய சிமிட்டு முதலானவற்றை பொருந்த வைக்க முடியுமா? இது உண்மையான சொல். தோடு அணிந்த செவியினை வரைவாய். அதன் அசைவினை எவ்வாறு எழுதி வைப்பாய். துத்திப் பூப்போன்ற மூக்குத்தி அணிந்த நாசியை எழுதுவாய். அது மணத்தை முகருமா? செவ்விதழ் வாயினை எழுதுவாய். அவை எப்படி நகைக்கும் எப்படிப் பேசும். எப்படி இதழ் அமுது அளிக்கும். இரு கன்னங்களையும் எழுதுவாய். அதில் முத்தமிட இசைவாயோ? அவள் வடிவை எழுதுகின்ற திரைச்சீலையினும் எழுதுகோலினும் நீ இச்சை கொள்வது ஏன்? இது விந்தையாக உள்ளது

7-வது கலை

விருகா சுரனால் அவளைப் பொடியவிட்ட
நெடியோன் வளைநேர் களம் அப்படி அமைக்கில்
உயர்புட்குரல்கள் எட்டுள் ஒரு சத்தமும் விளைப்பது
இலை பொற் கிரிகள் ஒத்த முலை முற்றும் நாடி
அறியாய் எவண் நீ எழுதத் தகும் மணத்த
தொயிலார் சிறுதோள் அது தொட்டு விரல்மட்டும்
நினைவில் திகழுமட்டும் எழுதிக் கொளினும் இச்சை
முடியத் தழுவி நித்தம் மகிழச் செயாது
விடநாகமும் வாழையும் ஒக்கும் அவை முற்சொல்
சில நீ ஒருவாறு அறிதற்கும் இடமற்று
மறைவுற்றிட உடுத்த கலை சுற்றிடும் அவற்றை
மனதிற்கருதல் பற்றி எழுதற்கொணாது
மயில் அனையா ளைத்துதித்து வெளவினால்.

பொழிப்புரை: விருகாசூரன் என்ற அசுரனைச் சங்கரித்த திருமாலின் பாஞ்ச சன்னியம் என்ற சங்கு போன்ற கழுத்தை அவ்வாறு நீ அமைத்து எழுதினால் கல்வியில் தோன்றும் எட்டு வகையான புட்குரல்களில் ஒருதொனியும் கூட அது விளை விப்பது இல்லை. பொன்மலை போன்ற தனங்களை எழுதுதற்கு அதன் இயல்பை நீ முழுதும் அறியாய் எப்படி எழுதத்தகும். சந்தனக் கலவை அணிந்த சிறு தோள் முதல் விரல்கள் வரைக்கும் உன் நினைவில் தெரிந்தமட்டும் நீ எழுதிக் கொண்

டாலும் அது விருப்பம் தீரத் தழுவி உன்னை மகிழும்படி செய்யாது. விடத்தைக் கொண்ட நாகபடமும் வாழையும் போன்ற அல்குல் தொடை முதலான சில அவயவங்கள் நீ ஒருவாறு அறிதற்கும் இடமில்லாமல் மறைவுற்றிட உடுத்த பட்டாடை சுற்றி இருக்கும் அவற்றை மனத்தினால் கருதல் அல்லாமல் ஓவியத்தில் எழுத முடியாது. எனவே அவள் வடிவத்தை நீ எழுதுவதை விட்டுவிட்டு மயில் போன்ற அந்தப் பெண்ணை நீ வணங்கி அவள் உள்ளத்தைக் கவர்ந்தால்.

8-வது கலை

பிளிர்தாள் தலைமேல் உறவைத்திடல் கிடைக்கும்
இகழ்வார் அடல்வேள் என மெச்சு புகழ் கிட்டும்
மதனப் பயல் விடுத்த கணைபட்டு வடுவுற்ற
மெலிவற்றிடும் அளப்பில் சுக சித்தம் ஆகும்
இதுதான் முறையாம் இதைவிட்டுன் உயிர் அற்பம்
என நாடுதல் வீண் அதைவிட்டு விடு முற்சொல்
விதியிற் செயினும் மக்கள் இனரிற் சிலர் அவட்குள்
இவனைப் புணரும் நட்பது இலைவித்தை ஆடி
வெளிறு ஆகிய நீர் தெருவில் சிதறவிட்டு
நெறி ஓர்பவனாம் அரசற்கும் மயல் இட்டு
மலரிற் திருவை ஒத்த மகளைக் கொடு நடக்கை
கொடிதிற் கொடிது எனச் சொல்லுவர் செப்புமாறு
மருவிடுவாய் களிப்பு அனைத்தும் எய்துமே.

பொழிப்புரை; பிரகாசிக்கின்ற அவள் பாதத்தை உன் தலை மேல் வைத்திடல் கிடைக்கும். உன்னை இகழ்பவர்கள் வெற்றி மிக்க முருகன் என மெச்சும் புகழ் ஏற்படும். மன்மதப்பயல் ஏவிய கணைபட்டுத் துன்பம் உற்ற மெலிவு நீங்கிடும் அளக்க வொண்ணாத தெளிந்த சித்தம் உண்டாகும். இதுதான் நீ செய்யும் முறையாகும். இதனைவிட்டு உன் உயிர் அற்பம் என எண்ணி மடல் ஏறுதல் வீணானதாகும். அந்த மடலேறுதலை நீக்கிவிடு முன்னோர் சொன்ன விதிப்படி நீ செய்தாலும் மக்கள் இனத்திற் சிலபேர் அவளுக்கு இவனைச் சேரும் நட்பு இல்லை என்றும், மடல் ஊர்தலாகிய வித்தையை நீ செய்து, மதநீர் தெருவில் சிதறி இதன் நெறியை உணரும் அரசனுக்கும்

மயக்கத்தை உண்டாக்கி திருமகள் போன்ற மடந்தையைக் லகப்பிடித்து நீ நடப்பது கொடிதினும் கொடிது என்றும் சொல்லுவார்கள். அவள் தோழியாகிய நான் சொன்னபடி நீ அவளை வணங்கி அன்புடன் சேர்வாய் அதனால் உனக்கு எல்லா மகிழ்ச்சியும் உண்டாகும்.

தொங்கல் தாழிசை

இந்த வண்ணப் பாடலில் உள்ள ஒவ்வொரு கலையின் இறுதியில் உள்ள தொங்கல்கள் தாழிசைப் பாடலாக அமைகிறது.

அயில் அதனால் அமர்க்களத்தை வெல்லுவார்
அடியவர் வாய்மையைக் கருத்தில் உள்ளுவார்
செயிர் அறுசீர் தொடுத்த மெத்த நல்குவார்
திருவுருமா மலைக்கு அடுத்த நெல்லையாய்
பயிலரும் நூல் மிகப் படித்த செல்வனே
படமொடு தூரியத்தும் இச்சை கொள்வதேன்
மயில் அணையாள் தனைத் துதித்து வெளவினால்
மருவிடுவாய் களிப்பு அனைத்தும் எய்துமே.

மடலூர்தல் பற்றிய செய்தியைத்
திருச் சிற்றம்பலக் கோவையாரில்

காய்கினவேல் அன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து வீசின போது உள்ள மீன் இழந்தார்வியன் தென்புலியூர் ஈசன சாந்தும் எருக்கும் அணிந்து ஓர்கிழி பிடித்துப் பாய்சின மாவென ஏறுவர் சிறூர்ப் பனைமடலே என்று கூறுகிறது.

இந்தப் பெண் வேல் போன்ற கண்ணின் வலையை வீசிய போது உள்ளம் என்ற மீனை அந்த வலையில் இழந்தவர்கள் அது திரும்பப் பெறுவதற்கு தென்புலியூர்ச் சிவபெருமான் பூசுகின்ற வெண்ணீறும் புனைகின்ற எருக்க மலர் மாலையும் அணிந்து இந்த மடந்தையின் வடிவினை ஓர் துணியில் எழுதி அதனைக் கையில் பிடித்துக் கொண்டு பனைமடலால் செய்யப் பெற்ற குதிரையை ஊர்ந்து இந்தச் சிற்றூரை வலம் வருவர் என்று கூறுவது கருதத்தக்கது.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் கூறிய இந்த வண்ணப்பாடல் படித்தால் உரைநடை போன்று அடை மொழியில்லாமல் அமைந்துள்ளது வியப்புக்கு உரியது.

புலவர் புராணத்துள் பெண்சமுதாயப் படைப்பு நிலை

மு. பழனியப்பன்

உலக அளவில் தற்போது பெண்ணியம் வளர்ந்துவரும் மிகப்பெருந் துறையாக உள்ளது. பெண்ணியத்தின் விரிந்து பரந்த கூறுகளுள் இலக்கியத்தை ஆராயும் கூறு வளர்ந்து, இப்போது பெண்ணிய இலக்கியத் திறனாய்வு என்ற புதுவகைத் திறனாய்வாக விளங்கி வருகின்றது.

தண்டபாணி சுவாமிகளின் பலவகை இலக்கியக் கொடைகளுள் புலவர் புராணம் மட்டும் பெண்ணிய வாசிப்பிற்கு எடுத்துக் கொள்ளப் படுகின்றது. அதன் சில சிறப்புகள் கருதியே புலவர் புராணம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

புலவர் புராணம் 1994-ல் பதிப்பு செய்யப் பெற்று, தற்போது எல்லார்க்கும் கிடைக்கும் நிலையில் இருப்பது; ஆண்களுக்கு இணையான புலமை பெண்களுக்கும் உண்டு என்ற நோக்கில் பெண்புலவர்களுக்கு இடம் தந்திருப்பது; ஆண்புலவர்களின் வாழ்வில் இடம்பெற்ற பெண்டிற்கு ஏற்ற இடம் அளித்திருப்பது; மக்களின் வாய்மொழி வழி கிடைத்த வரலாறுகளைப் பதிவு செய்திருப்பது என இவ்வாறான பெருமைகளைக் கருதியே புலவர் புராணம் ஆய்விற்குக் கொள்ளப்பட்டது.

புலவர் சரிதத்தில் பெண் புலவர்கள்

தண்டபாணி சுவாமிகள் இயற்றிய 73 புலவர்களின் சரிதம் அடங்கிய புலவர் புராணத்துள், ஔவையார், காரைக்காலம்மையார் என்ற இருபெரும் பெண்பாற் புலவர்களும் இடம் பெற்றுள்ளனர். இவர்களுக்கெனத் தனித்தனிச் சருக்கங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவர்கள் தவிரப் புலவர்கள் அல்லாத நிலையில் ஔவையார்பால் அருள்பெற்ற பெண்கள், வள்ளுவரின் மனைவி வாசுகி, சீனிவாசப் புலவரின் மனைவி, சுந்தரரின்

மனைவியர்களான பரவையார், சங்கிலியார், ஆண்டாள், திருநாவுக்கரசரின் தமக்கை, அருணகிரியாரின் சகோதரி எனப் பல பெண் பாத்திரங்கள் புலவர் புராணத்துள் இடம் பெற்றுள்ளன. இவர்களின் படைப்பு நிலை ஆராயப் படுகின்ற போது தண்டபாணி சுவாமிகள் பெண்களைப் படைத்திருக்கும் படைப்பு நோக்கத்தை அறிந்து கொள்ள முடியும்.

ஔவையார்

ஔவையார் சருக்கத்துள் இரு ஔவையர் வருகின்றனர். முதல் ஔவையார், ஆதிபகவன் இருவருக்கும் பிறந்த மூத்தமகள் ஆவாள். இவள் மணம் வெறுத்து,

''ஏயும் முன்னவனைப் போற்றி, இளமையிற்றானே மூப்புத்
தோயுருப் பெற்றாள் என்னச்சொல்வது துணிவா மன்றே''
(446)

என்றவாறு மூப்பு உருவம் பெற்றாள். கடையெழு வள்ளல் களுள் காரி, பாரி எனும் இருவரும் இவளைப் பொன் பொருள் தந்து காத்தனர். இறுதியாக இவள் சுந்தரர், சேரமான் இருவரும் கயிலாயம் அடைவதற்குமுன், தும்பிக்கையனின் அருளால் கயிலாயம் அடைந்தாள் எனச் சருக்கம் இவளின் வாழ்வை முடிக்கின்றது. இச்சருக்கம் வழியாகச் சங்ககாலம் முதலாக, பக்திகாலம் வரை இவள் வாழ்ந்தவளாகத் தெரி கின்றாள்.

இச்சருக்கத்துள் ஔவையாரின் தெய்வச் செயல்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இத்தெய்வச் செயல்களும் தம் நலன் கருதி ஔவை செய்தன அல்ல; பிறர் நலனுக்காகச் செய்தனவாகும்.

மழையில் ஒருமுறை ஔவை நனைந்தபோது சிற்றாடை தந்துதவிய கன்னிப் பெண் ஒருத்திக்கு, மூவேந்தர் உதவியுடன் மணம் புரிந்து வைத்தாள் ஔவை. மணவிழாவில் சிறியதொரு பனையைப் பெரும் பனையாக்கிக் காய்கள் காய்க்கச் செய்தாள்.

அடுத்து, தம்மில் முரண்பாடு கொண்ட அண்ணன் தம்பி இருவருடைய குடும்பத்தில் ஒரு அருட்செயலை நிகழ்த்துகிறாள். ஒரு சச்சரவின் காரணமாக சகோதரர் இருவருக்குச் சொந்த மான பலாமரத்தை அண்ணன் வெட்டிவிடுகின்றான். இதனால்

பல பிள்ளைகளைக் கொண்ட தம்பி பசியால் துயர்உற, உயிர் எதற்கும் துன்பம் தர துன்பப்படும் விதியால் அண்ணனும் துயர்உற, அவ்வழி வந்த ஔவை இவர்களின் துயர் களைய, பலா துளிர்த்து மரமாகி, பழங்கள், காய்கள், பிஞ்சுகள் தர அருட்பாடல் ஒன்றைப் பாடுகின்றாள்.

இதனை அடுத்துச் செல்வம் இன்றித் துயர்உறும் பெண்ணைச் சந்திக்கின்றாள். அப்பெண் ஔவையைத் தெய்வ மாக வழிபட, ஔவை அவளுக்கு ஒரு விரதம் கற்பிக்கின்றாள். அது 'ஔவை விரதம்' எனப்படுகின்றது. ஆடவர் சம்பந்தம் இன்றி, பொய்ம்மொழி, வஞ்சனை நீக்கி, செவ்வாயன்று, பிள்ளையாரை வணங்க, செல்வம் பெறுவாய் என விரதம் பற்றிக் கூறுகின்றாள் ஔவை. தண்டபாணி சுவாமிகள் பின்னாளில் இது "செவ்வாய்ப் பிள்ளையார் நோன்பு" என வந்தது எனக் கூறுகின்றார். இவ்வாறு அப்பெண்ணும் விரதம் இருந்து செல்வம் பெறுகின்றாள்.

இவ்வாறு சில அருட்செயல்களை ஔவை செய்து கயிலாயம் அடைகின்றாள். இம்மூன்று செயல்களையும் பெண்ணிய வாசிப்பாகக் காணுகையில் "பெண்ணுக்குத் திருமணம் வேண்டும்; குடும்பம் சச்சரவின்றி வாழ்தல் வேண்டும்; பெண்கள் குடும்பத்தில் செல்வம் பெறுவதற்கு என விரதம் இருக்கவேண்டும்" என்ற கருத்துகளே அடிநோக்கமாக உள்ளன என்பதை அறிய முடிகின்றது.

மேலும் பனை, பலா மரங்களை வளரச்செய்தல் என்பது ஔவையின் தாய்மைக் குணத்தின் மாற்றான அம்சங்கள் என்பதை உணரமுடிகின்றது. "ஔவை விரதம்" என்பது பெண் களுக்கான விரதம் எனத் தனித்தன்மை கொண்டு அமைந்தாலும், அது ஆடவரின் வளம், குடும்பத்தின் செல்வம் குறித்தே அமைவதால், ஆண் விரும்பும் குணங்கள் கொண்ட வளாகப் பெண் அமைய வேண்டும் என்பதைச் சொல்வதாகவே விரதமும் அமைந்து உள்ளது எனலாம்.

ஔவையார்

இரண்டாம் ஔவையார் முதலாமவர்பால் அருள்பெற்று, அவரைப் போலவே அருட்பாடல்களை இயற்றித் தமிழகத்தை வலம் வந்தவளாகக் காட்டப் படுகின்றாள்.

''வாணிய குலமகள் கடல்வளவன் நாட்டினில் ஓர்
ஆணி முத்தெனப் பிறந்தவள் பாலியத் தௌவை
தாணினைந்து முத்தமிழ்ச்சுவை முதற்பயன் பெற்று
மாணிலாங்கிழத் தனம்வரும் வரை மறைந்திருந்தாள்''

(507)

என்று அவளின் வரலாற்றில் கிழஉருவம் பெற்றமையைத் தண்டபாணி சுவாமிகள் உரைக்கின்றார். இவ் ஔவையார் ஒட்டக்கூத்தர், புகழேந்தி, கம்பர் முதலானோருடன் கவிவாதம் புரிந்து வென்றவள் என்பது சிறப்பான ஒன்றாகும். அதுவும் ஔவையார் கம்பருடன் நடத்திய வாதம் சுவை மிக்கதாகும்.

சிலம்பி என்ற பெண் மகள் உலகில் புகழ் பெறுவது எப்படி என எண்ணியபோது பலரும், செந்தமிழ்ப் புலவர் கவி கொள்வார் புகழ் பெறுவார் எனக் கூற, சிலம்பியும் கம்பர்பால் சென்று தம்மைப் பாடச் சொன்னாள். கம்பரோ ஓராயிரம் பொன் தந்தால் உனைப் பாடுவேன் எனக் கூற, இவளும் தம் சொத்தெல்லாம் திரட்டி, பாதி அளவு பொன் கொண்டு வந்தாள். கம்பரும் பாதிப் பொன் பெற்றுப் பாதிப்பாடலையே பாடினார். மீதிப் பாடல் பெற, பொன் சேர்க்கும் வேளையில் சிலம்பியின் வீட்டிற்கு ஔவை வந்து பசிக்குக் கூழ் தர வேண்டினாள்.

சிலம்பியும் வந்தவள் ஔவை என உணர்ந்து, கம்பர் பாடிய பாதிப் பாடலை அவளிடம் நீட்டி, முடித்தால் கூழ் தருவதாகக் கூறினாள்.

'பெண்ணே கேள்! அம்பொற் சிலம்பி
பூந்துணைத்தாள் கொண்ட பொற்சிலம்பே சிலம்பு''

என்று பாடலை முடித்துக் கம்பரிடம் காட்டிவர ஔவை கூற, சிலம்பியும் கொண்டுபோய்க் கம்பரிடம் காட்டினாள். கம்பர் இப்பாடலைக் கண்டு 'இம்மதுரமிகு பாடலைச் செய்தவர் யாரென' வினவ – பொன் தந்தும் எனைப் பாட உன் பாடலில் கூழ் தந்ததற்காக மும்முறை ஏத்திப் பாடியவள் ஔவை என்றுரைத்தாள். இதனால் ஔவைக்கும், கம்பருக்கும் போட்டி ஏற்பட அப்போட்டியில் ஔவை வென்றதாகச் சரிதம் நீள்கின்றது.

பிறகு சோழ வளநாடு சென்ற ஔவை ஆங்கொரு தாயின் இன்னலைத் தீர்க்கின்றாள். அத்தாய் கைக்குழந்தை ஒன்று வைத்திருந்தாள். அக்குழந்தை அவளிடம் பவனிவரும் அரசன் அணிந்துள்ள பட்டுத்துண்டு வேண்டும் எனச் சொல்லி அழுதது. குழந்தையின் ஆவலைத் தீர்க்க முடியாமலும், அரசனிடம் கேட்க முடியாமலும் அந்தத் தாய் அழுதாள். இவளின் துயர் தீர்க்க ஔவை அரசனிடம் தன் அருட்பா ஒன்றின் வழியால் பட்டுத்துண்டைப் பெற்றுக் குழந்தைக்குத் தந்து மகிழ்வித்தாள்.

அடுத்து, தன் கணவன்பால் அன்புகொளாது, பிறன் ஒருவன்பால் அன்பு கொண்டொழுகிய பெண்ணை இழிவுபடுத்தி, புத்தி புகட்டினாள் ஔவை. அதன் பிறகு ஔவை 'ஐவேல் அயாதி' என்ற ஆட்டுப்பால் தந்து ஔவை பசி தீர்த்த ஆட்டிடையனைக் குறித்துக் கோவை ஒன்று பாடினாள். இவ்வாறு பல அருட்செயல்கள் புரிந்து தம் வாழ்வை நடத்தினார் இரண்டாவது ஔவை என முடிக்கின்றார் தண்டபாணி சுவாமிகள்.

இவ் ஔவையாரின் சரிதத்தில், புகழை விரும்பும் பெண், தாய்மை கொண்டு ஏங்கும் பெண், பிறன் ஒருவனை விரும்பிய பெண் எனப் பெண்களின் விருப்பம் தெளிவுபட எடுத்துரைக்கப் படுகின்றது இவர்களுக்கு ஏற்ப ஔவை நடந்து கொண்டமையை அறிகின்றபோது சில முடிவுகளுக்கு வர முடிகின்றது. பெண்கள் ஆசை மிக்கவர்கள் ஆனாலும் அவர்களின் ஆசைகளை அவர்களே முடித்துக்கொள்ளும் திறம் அவர்களிடம் இல்லை. பிறரைச் சார்ந்தே தம் ஆவலை முடிக்க வேண்டியவர்களாகப் பெண்கள் படைக்கப் பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. மேலும் இப்பகுதியில் வரும் ஔவை எனும் பாத்திரம் தம் உணர்வு களைத் துறந்துவிட்டுப் பிறர் உணர்வுகளுக்கே முக்கியத்துவம் தருவதாகப் படைக்கப் பட்டுள்ளது.

இவ்விரு ஔவையாரையும் காணுகின்றபோது முதுமை உருவம் பெற்றதற்கான காரணம் என்ன என்பது தெளிவுபட உரைக்கப் படவில்லை. மேலும் இவர்கள் புலவர்கள் என உயர்த்தப்பட்டபோதிலும், ஆண்களின் நெருக்கம் பெறாமையால், அவர்களின் இளமை உணர்வுகள் பயன்படாமல் போகட்டும் எனக் கருதியே, முதுமை உருவம் பெற்றவர்களாக அவர்கள்

படைக்கப் பட்டிருப்பார்களோ? புலமை பெற்றவர் என்ற சிறப்புப் பெற்றிருப்பினும் ஆண்கள் தொடர்பு பெறாதது அவர்களின் குறையாகக் கருதப்பட்டிருக்கலாமோ? என்ற எண்ணங்கள் வாசிப்பின்போது எழுகின்றன.

காரைக்காலம்மை

சிவனருள் பெற்று ஆண் அடியவர்களுக்கு இணையாகப் பெண் நாயன்மாராக விளங்கிய காரைக்காலம்மையாரையும் தண்டபாணி சுவாமிகள் புலவர் புராணத்துள் உயர்த்திப் பாடியுள்ளார். சேக்கிழார் வரைந்தபடியே இவரின் வரலாறு உரைக்கப் பட்டிருப்பினும், ஓரிடத்தில் தண்டபாணி சுவாமிகள் மாறுபடுகின்றார்.

"வந்தவர்க் கமுதோடொரு மாங்கனி
தந்தவேளை அறம் தவறாதிட்டாள்
முந்தஉண்டு முனிவரவர் போயபின்
பைந்தகைத் தண் பரிகலமானதைத்" (571)

"தெருவில் இட்டனள் செட்டி கண்ணுற்று
ஒருவன் வேறுளனோ எனும் ஐயமுற்று
அருவெறுப்புடன் அன்னம் உண்பன் அது
புருடரில் பலபேர் கொள்ளும் புன்மையே" (572)

என்ற பாடல் வரிகள் மாறுபாடுள்ள இடத்தினை விளக்குவன வாகும். சேக்கிழார் மாம்பழச் சுவையின் வேறுபாடு கருதி அம்மையாரின் கணவன் சந்தேகமுற்றதாக உரைக்கத் தண்டபாணி சுவாமிகள் தெருவில் கிடந்த எச்சிலைக் கண்டு சந்தேகமுற்றதாகப் பாடுகின்றார். அவ்வாறாயின் மாம்பழம் தெருவில் உண்ட சக்கையாகக் கிடக்கிறது என்றால் காரைக் காலம்மையே அதை உண்டிருக்கக் கூடாதா? உண்டபின் வெளியில் எறிந்திருக்கக் கூடாதா? ஆண்கள் / கணவன் உண்ணும் முன் பெண்கள் / மனைவி உண்பது மரபில்லை என்பது சமாதான மாக உரைக்கப்பட்டாலும், பெண்களுக்கான இரண்டாமிடம் தான் வழிவழி மரபாக உள்ளது என்பதை ஏற்றாக வேண்டி யுள்ளது.

மேலும் காரைக்காலம்மையின் கணவன் "வேறொருவன் உளனோ" என்ற நினைப்பால் வந்த ஐயம், பெண்ணைச்

சந்தேகித்து அதன்வழி தம் அதிகாரத்தினைக் காட்டும் ஆண் சமுதாயத்தின் குரலாக அங்கு வெளிப்பட்டுள்ளது எனலாம்.

பிறகு அம்மை பேயுருவம் எடுக்க விழைந்தபோது,

'நின் பொருட்
டிவ்வுடல் இக்கோலம்
துன்ற வைத்திருந்தனன், இனி தகாதெனச்
சொல்லி அன்னவன் காண
அன்றருட்கனி இரண்டளித்தவர்திரு
அருளை நாடினள் அங்கே
... ... பேய்உரு கொடுத்தனர்'' (585)

என்று கணவனுக்காக வாழும் பெண்ணினத்தின் பிரதிநிதியாகக் காரைக்காலம்மையார் படைக்கப் பட்டிருக்கிறார். அவன் இவரை வணங்கியபோது அதை ஏற்காது பேயுருக்கொள்ளும் நிலை, இங்கு எண்ணத் தக்கதாகும். ''ஆண்களுக்கென வாழ்தல் வேண்டும், இல்லாயின் உடம்பே தேவையில்லை'' என்ற அம்மையாரின் முடிவு இன்னும் சில கேள்விகளை எழுப்புகின்றது.

கணவன் மட்டும் இன்னொரு மணம் புரிந்து கொள்ளும் போது அம்மையார் மட்டும் பேயுருக் கொண்டது ஏன்? பெண்கள் மீண்டும் மணம் கொள்வது இயல்பாதல் இல்லை என்றால் ஏன் தன் உருவை அழித்துக் கொள்ள வேண்டும்? உண்மையிலேயே அவரே வேண்டிப் பேயுருவம் பெற்றாரா? அல்லது அவ்வாறு கற்பிக்கப்பட்டு, இலக்கியம் ஆக்கப்பட்டதா? என்ற கேள்விகள் வாசிப்பின்போது எழுகின்றன.

இவ்வாறாகத் தண்டபாணி சுவாமிகள் படைத்த மூன்று பெண்களும் தம் உணர்வுகளைச் சிறிதும் வெளிப்படுத்தாமல் தம்மைக் கிழவியாக அல்லது பேயாக மாற்றிக் கொண்டது இங்கு சிந்திக்கத் தக்கதாகும். இம்மூன்று புலவர்களும் ஆண்களை வெறுத்து அகன்றபோது, அவர்கள் கிழவி உருவினராக பேய் உருவினராகக் காட்டப்பட்டதன் நோக்கம் என்ன? இவர்களின் உண்மையான உணர்வுகள் ஏன் சாகடிக்கப்பட்டன? என்ற இக்கேள்விகளின் அடிப்படையில் ஒரு முடிவிற்கு வரமுடிகின்றது. ஆண்கள் விரும்பும் பண்புகளையே பெண்கள்

பெறவேண்டும். அவ்வாறு அவர்கள் பெறாது நின்றபோது அவர்களை உருமாற்றம் செய்து தள்ளிவைக்கும் படைப்பு நிலை இங்கு இடம் பெற்றிருப்பது தெற்றென விளங்குகின்றது.

வாசுகி

கணவனோடு ஒட்டிவாழும் பெண்ணிற்குத் தரப்படும் உயர்வுக்கான அடையாளமாக வாசுகி காட்டப்பட்டுள்ளாள். தேவலோகத் தேவர்கள் ஒரு சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுச் சிவனின் கட்டளையால் மயிலை வள்ளுவனிடம் வருகின்றனர். அப்போது வள்ளுவரும் அவரின் மனைவி வாசுகியும் வாழும் இல்வாழ்வின் சிறப்பு தண்டபாணி சுவாமி களால் பாடப் பெற்றுள்ளது.

காளமேகப் புலவரின் காதலி

காளமேகப் புலவர் ஸ்ரீரங்கத்தில் வாழும் வைணவர் ஆவார். இவர் ஆனைக்காவில் சிவத்தொண்டு புரியும் கணிகை ஒருத்தி யிடம் காதல் கொண்டார். அவள் யான் பாவை நோன்பின் போது "சிவனடியார் அலாரைக் கூடேன்" என வேண்டி நோற்றேன். ஆகவே உமைக் கூடேன் எனக் கூறிக் காளமேகப் புலவரை மறுத்தாள். இதனால் காளமேகப் புலவர் உடனே, சிவனடியாராய் மாறி அவளைக் கூட விழைகின்றார். இவ்வரலாற்றுள் பாவை நோன்பின் அடிப்படை வேண்டுதல் ஆணைக்கூடுதல் வேண்டும் என்பதாக உள்ளதைக் காண முடிகிறது. எனவே நோன்புகள் எதுவாயினும் அவை ஆண்களின் நலனுக்காகவே நோற்கப் பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது.

சீனிவாசப் புலவரின் மனைவி

சீனிவாச சருக்கத்தில் சீனிவாசப் புலவர் தம்மிடம் கல்வி கற்க வந்த முஸ்லீம் பெண்ணையே திருமணம் செய்து கொள்கிறார். இதனால் சீனிவாசப் புலவரின் அந்தணச் சுற்றத்தாரும், பெண்ணின் முஸ்லீம் சுற்றத்தாரும் இவரை வெறுத்து ஒதுக்குகின்றனர். சீனிவாசப் புலவரின் சிறப்பு வெளிப் படுவதற்காக நெல்லை காந்திமதி அம்மன், நெல்லைப் பகுதியில் பஞ்சம் வர அருள் செய்தாள். மன்னனும் மக்களும் இரங்கி அழ, சீனிவாசர் நெல்லைக் கோயிலில் சென்று அருட்பா பாட மழை

வெள்ளம் பெருகியதாம். இங்கும் ஆணின் சிறப்பு உணர்த்தப்பட பெண் தெய்வம் இரங்கி வந்திருக்கின்றது.

அருணகிரியாரின் சகோதரி

அருணகிரியார் தொடக்க காலத்தில் பல இன்பம் விழைந்த வராக இருந்துள்ளார். அவரின் இன்ப விழைவிற்கான பொருளைத் தினமும் அவரின் சகோதரி தந்துதவுகிறாள். ஒருமுறை பொருள் கிடைக்காது போக, சகோதரி ''நானும் கணிகையர் குலத்தவளே, எம்மைச் சேர்ந்து இன்பம் கண்டுகொள்'' என்று கூறுகிறாள். இதனால் இவர் உடல் வெறுத்துத் தற்கொலை புரிந்து கொள்ள, கோபுரம் ஏறி விழ முருகன் காப்பாற்றித் தமிழ்ப்பணி ஆற்றக் கூறுகின்றான். இவ்வரலாற்றில் அருணகிரி என்பவர் பெண் இன்பம் விழைந்தபோது வெறும் மனிதராக இருந்தார். அவ்வின்பத்தைத் துறந்து வந்தபோது புலவராக மாற்றம் பெறுகிறார். இதன் வழியாக, பெண் இன்பம் ஆணுக்கு முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது என்பது கூறாமல் கூறப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

முடிவுரை

இவ்வாறு தண்டபாணி சுவாமிகள் பெண்களை ஆண்களின் உயர்ச்சிக்கான பின்புலமாகப் படைத்துள்ளார். இவரின் பெண் சமுதாயப் படைப்பு நோக்கம் எதுவென எண்ணும்போது சில கருத்துக்களை முன்வைக்கலாம்.

ஆண் விரும்பும் பெண் தன்மைகளான, தாய்மை, அன்பு, சகோதரபாசம், காதல்; விருந்தளித்தல், கணவனுக்கு வேண்டியன செய்தல், நோன்பு நோற்றல் என்ற இல்லற மாண்புகளை, அழகு' மென்மை, சுகமளித்தல் போன்ற பண்புகளைப் பெற்றவளாகப் பெண் விளங்கவேண்டும் அவ்வாறு விளங்கும் பெண், தேவதை யாக, தேவர் வந்து வணங்கும் இயல்பினளாகப் போற்றப்படுவாள் என்பது விளங்குகிறது. ஆகவே பையர்ஸ்டோன் கூறிய மூன்று நோக்கங்களுள் இரண்டாவதான ஆண்களால் விரும்பப்படும் குணங்கள் கொண்டவர்களாகப் பெண்கள் படைக்கப்படுதல் என்ற நோக்கு அடிப்படையிலேயே பெண்கள் தண்டபாணி சுவாமிகளால் படைக்கப்பட்டுள்ளார்கள்.

அறுவகை இலக்கணத்தில் உவமையியலும் மரபு ஆசிரியர்களும்

இ. பார்வதி

தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணத்தில் காணப்படும் உவமை பற்றிய கருத்துக்களைத் தொல்காப்பியம், தண்டியலங்காரம் முதலான மரபு நூற்களில் கூறப்பட்டுள்ள உவமைகளோடு உள்ளடக்கி இக்கட்டுரை ஆராய்கிறது.

தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணம்

அறுமுகப் பெருமானின் திருவருளால் சுவாமிகள் இயற்றிய புத்திலக்கணம் ஆறு பெரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பகுதியையும் ஒரு நூல் போலக் காப்புடன் தொடங்கி யுள்ளார். புதிய இலக்கண மரபுகளைத் தெரிவிக்கச் சுவாமிநாத தேசிகர் 'இலக்கணக் கொத்து' அமைத்தது போல இந்த அறுவகை இலக்கணம்; புதுமரபுகளைப் போற்றியுரைக்கும் ஒரு புது நூலாகும்.

தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணத்தில் உவமயியல்

ஐந்தாவதாகிய அணியிலக்கணம் சுவாமிகளின் புதுநோக்கின் படி அமைக்கப்பெற்ற புதுமரபுகளை விளக்குகின்றது. உவமை, உடைமை, கற்பனை, நிகழ்ச்சி, ஆக்கம் என்னும் ஐவகைப் பாகு பாட்டில் இவ்விலக்கணம் அமைந்துள்ளது. இதில் முதலாவதாக அமைந்துள்ள உவமையியலில் தெய்வம், மக்கள் ஆகியோருக்கு முன்னையோர் சுட்டிவரும் பொருள்கள் தொகுத்துத் தரப் பட்டுள்ளன. மகளிர் உறுப்புவமைவுகளைக் கேசாதிபாதமாக அமைத்துத் தந்துள்ளார். மரபுவழி உவமையேயன்றிப் பொருந்தக் கூறும் புத்துவமைகளையும் சுவாமிகள்,

"பொருந்தக் கூறிய புத்துவமைச் சொல்
தழுவும்கா வலரும் தமராம் எமக்கே" (அணி-42)

என்ற சூத்திரத்தால் குறிப்பிடுகிறார்.

உவமை

ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதல் உவமை எனப்படும். கவிதைக்கு அழகு செய்வன, அதன்கண் அமையும் அணிகள். அணிகளில் தலையாயது உவமையணி. கேட்போர்க்கு இன்பத்தைத் தருதல் மட்டுமன்று, தெரியாத ஒன்றைத் தெளிவிக்கவும் இது பயன்படும். இவ்வுவமையாற் புலனாகும் பயன்கள் இரண்டு 1. புலன் அல்லாதன புலன் ஆதல்; 2. அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தல். 'சிறந்த உவமை பொருளின் தன்மையை விளக்குவதோடு அதனைச் சிறப்பிக்கவும் வேண்டும்' என்பர் ஜான்சன்.

தண்டபாணி சுவாமிகளும் பிற இலக்கண ஆசிரியர்களும்

தொல்காப்பியரும், தண்டியாசிரியரும் உவமைகளுக்குரிய இலக்கணம் கூறியுள்ளனர். ஆனால் தண்டபாணி சுவாமிகள் இலக்கண உரைகாரர்களின் உரைக்கு இலக்கணம் வகுத்துள்ளார். எவற்றிற்கு எவை உவமையாகக் கூறினால் சிறப்பாக இருக்கும் என்பதைப் பட்டியலிட்டு வரிசையாகக் கூறுகிறார்.

தண்டபாணி சுவாமிகளின் உவமையியல் தொல்காப்பியர், தண்டியாசிரியர் கூறும் இலக்கணக் கருத்தைப் பலயிடங்களில் தழுவியமையக் காணலாம். தொல்காப்பியர்,

"வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம்'' (தொல்-272)

என்ற சூத்திரத்தில் உவமம் வினை, பயன், மெய், உரு என்னும் நான்கு நிலைகளில் தோன்றும் என்பதைச் சுட்டியுள்ளார்.

தண்டியாசிரியர் பண்பு, தொழில், பயன் ஆகியவற்றின் அடிப்படையில் உவமை தோன்றும் என்கிறார். பண்பு என்பதைத் தொல்காப்பியர் மெய் என்றும், தொழிலை வினை என்றும் பொருள் கொள்கிறார்.

வினையுவமம்

தண்டபாணி சுவாமிகளின் உவமையியலில் அமைந்துள்ள வினையுவமத்தைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம்.

"வசிட்டனை அகத்திய மாமுனி யாதியர்
தம்மைத் தவத்தோர்க் கிணை சொலில் தகுமே'' (11)

"இராகவன் தருமன் முதலினர் தம்மை
நீதிமன் னவர்க்கு நிகர்சொலல் இயல்பே (13)

"வீமன் வெற்றிவில் விசயன்ஆ தியரை
வீரருக் குவமை விளம்பிடல் இனிதே" [14]

வசிட்ட, அகத்திய முனிகளைத் தவத்தோர்க்கும் இராமன், தருமன் ஆகியவரை நீதிமன்னவர்க்கும், வீமன், அர்ச்சுனன் முதலியோரை வீரருக்கும் ஒப்புமைப்படுத்தும் போக்கினைக் காணுகிறோம்.

பயன் உவமை

பயன் நிலையிலும் உவமை கூறும் மரபு உள்ளது. அதனடிப்படையில் சுவாமிகளின் பாகுபாடும் அமைக்கப்பட்டு உள்ளது. வணிகர்களுக்குக் குபேரனையும், வள்ளலுக்குக் கர்ணனையும், பெண்ணின் சொல்லுக்கு பண், கிள்ளை, பால், அமிழ்து, குயில், தேன் போன்றவற்றையும் ஒப்புமைப்படுத்தும் போக்கினைக் காணுகிறோம்.

"பண்ணும் கிள்ளையும் பாலும் அமிழ்தும்
குயிலும் தேனும் கோதைசொற் கிணையே" [27

மேலும், இதே போன்ற பயனுவமைகளைத் தருகிறார். தண்டபாணி சுவாமிகள்,

"மேகமும் நதிகளும் விண்ணூர்த் தருவும்
சிந்தா மணியும் தேனுவும் தெய்வமும்
தினந் தொறும் கொடுப்போன் செங்கைக் கிணையே" [35]

மெய்யுவமை

தண்டபாணி சுவாமிகள், தொல்காப்பியரின் மூன்றாவது வகையான 'மெய்' அடிப்படையில் தோன்றும் உவமைகளை நூற்பா வடிவில் கையாண்டுள்ளார். புருவத்திற்கு வில்லையும், முகத்திற்குத் தாமரையும், கண்ணிற்கு கயல்மீன் போன்ற வற்றையும் கூறியுள்ளார். மேலும், இவர் மரபு ஆசிரியர்கள் கையாளாத புதுப்புது உவமைகளையும் கையாண்டுள்ளார்.

"பெண்கொடி நாசியின் பேரெழிற் கிணையெனச்
சண்பக மலரையும் சாற்றுநர் சிலரே" [23]

"சிறுமாங் கனியுடன் ஆடிக் காம்பும்
நங்கையர் நாடிக் கிணைச் சொல னலமே" [28]

"காகமூக் கென்னக் கவின்தரு புருவமும்
போர்விடைக் கண்ணும் புருடர்க் குரியவே" [21]

இவை போன்று உரையாசிரியர்கள் கையாளாத பல உவமைகளைப் பிற்காலத்து வந்த தண்டபாணி சுவாமிகள் கையாண்டிருப்பதைக் காணலாம்.

உருவுவமை

தண்டபாணிகளின் உருவுவமையைத் தொல்காப்பியரின் வழிநின்று கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம். செம்பொற் குன்றம், செக்கரும் கனல், மாணிக்கம் ஆகியவற்றை முருகன், சிவன், கணபதி ஆகியவரின் பார்வைக்கு உவமையாகக் கூறுகிறார். பொன்னிறத்தை பிரமன், பூமகள், தெய்வயானை ஆகியவரின் நிறத்திற்கு உவமையாகக் கூறுகிறார். மேலும் பல உருவுவமைகளைத் தண்டபாணி சுவாமிகள் கையாண்டு உள்ளதைக் காணலாம்.

"கொவ்வையில் வீழியிற் குலவுசெங் கனிகளும்
பவளமும் இதழ்கிணை பகர்ந்தவர் பாவலர்" [25]

"அரன் குகன் திருமால் என்னும் மூவர்
வெளிறலும் கணபதி கருநிற மேவலும்
மாதளம் பூவென மலைமகள் சிவத்தலும்
உண்டெனச் சிற்சிலர் உரைத்தனர் உணர்ந்தே" [7]

இவ்வாறு மேலும் பல உருவுவமைகள் பயின்றுவரக் காணலாம்.

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை" (தொல்-2-274)

என்னும் தொல்காப்பிய விதிக்குட்பட்டே தண்டபாணி சுவாமிகள் உவமைகள் கூறினாலும், சிற்சில இடங்களில் மாறுபடுவதைக் காணலாம். புருவத்திற்கு வில்லையும், முகத்திற்குத் தாமரையையும், கண்ணிற்குக் கயல்மீனையும், நகைக்கு முல்லை அரும்பையும் மரபு இலக்கணக்காரர்கள் போன்றே இவரும் உவமையாகக் கையாண்டுள்ளதைக் காணலாம்.

மரபு ஆசிரியர்கள் இழிவுப் பொருட்களை உவமை கூறுதல் தவறு என்பர். ஆனால் தண்டபாணி சுவாமிகள் ஆண்களின்

புருவத்திற்குக் காகத்தின் மூக்கையும், மூக்கிற்கு ஒந்தையும் உவமையாகக் கையாண்டிருப்பதைக் காண்கிறோம்.

தொல்காப்பியர் வினை, பயன், மெய், உரு என்பன பற்றி உவமை கூறுங்கால் சிறப்பு, நலன், காதல், வலி இவை நான்கின் இடனாக உவமை பிறக்கும் என்கிறார்.

"சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற் பண்பு நிலைக்கள மென்ப" (தொல்-275)

"உம்பரூர்க் குரவன் நான்முகன் யாதியர்
அந்தணர் புகழ்ச்சிக் கணிகல மாவாரே" (12)

இது அந்தணருடைய சிறப்பினாற் பெற்ற உவமமாகலின் சிறப்பு நிலைக்களனாகப் பிறந்தது.

"வேலொடு மின்னலை ஆழியோ டரவியை
சங்கொடு மதியைச் சாற்றுத லியல்பே" (9)

நலந் தோன்றக் கூறினமையின் இதன் நிலைக்களம் நலனாகியது.

"செந்தா மரையென் றடிகளைச் செப்பலும்
கால்உகிர் மதியெனக் கழறலும் தெய்வத்
தன்மைக் குரித்தெனத் தழுவுநர் சிலரே" (40)

காதல் (நிறம்) காரணமாக உவமை பிறந்தது. ஆதலால் இதன் நிலைக்களன் காதல்.

"மலையென எழுவன வழங்கும் தோள்களும்
பாய லாமெனப் படர்தரு மார்பமும்
காளையர்க் குரித்தென நவின்றனர் புலவர்" (33)

ஒருவன் வலி காரணமாக உவமம் பிறந்தமையின் அதற்கு நிலைக்களம் வலிமையாயிற்று.

"உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" (தொல்-279)

உவமானமும் பொருளும் ஒத்தல் வேண்டும் என்னும் தொல்காப்பியக் கருத்திற்கேற்பத் தண்டபாணி சுவாமிகள் நூற்பா அமைத்துள்ளதைக் காணலாம்.

"கொவ்வையில் விழியிற் குலவுசெங்கனிகளும்
பவளமும் இதழ்கிணை பகர்ந்தனர் பாவலர்" (25)

இதுபோன்று பல உவமானமும் பொருளும் ஒத்தனவற்றை ஆசிரியர் கையாண்டுள்ளதைக் காணலாம்.

"பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும்" (தொல்-281)

பொருளினை உவமமாக்கி, உவமையை உவமிக்கப்படும் பொருளாக்கி மயங்கக் கூறினாலும் அது உவமை என்றே கொள்ளப்படும் என்கிறார் தொல்காப்பியர். ஆனால் தண்டியாசிரியர் இதனை உருவகத்துள் அடக்குகிறார். தண்டபாணி சுவாமிகள் தொல்காப்பியர் வழிநின்றே உவமயியலில் அடக்குகிறார்.

"பெண்கொடி நாசியின் பேரெழிற் கிணையெனச்
சண்பக மலரையும் சாற்றுநர் சிலரே" (23)

இரட்டைக்கிளவி என்பது அடையும் அடையடுத்த பொருளுமென இரண்டாகச் சொல்லப்படுகிறது.

"இரட்டைக்கிளவி யிரட்டை வழித்தே" (தொல்-293)

"ஒந்திபோலும் ஒள்வளை மூக்கென்று" (41)

"அட்டமிச் சந்திரன் அகத்தி பூஇணை" (41)

போன்றவற்றைத் தண்டபாணி சுவாமிகள் தொல்காப்பியரின் கருத்தடிப்படையில் அமைத்துள்ளார்.

உவமையொடு உவமிக்கப்படும் பொருள் பிறிதொன்றைத் தராது மரபு ஆசிரியர் கையாண்டுள்ள உவமையாயின் எளிதில் உணர்ந்து கொள்வர் என்பர் தொல்காப்பியர்,

"பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபிற் கூறுங் காலைத்
துணிவோடு வருஉந் துணிவினோர் கொளினே"
(தொல்-294)

"விற்பொரு புருவமும் விதுவொடு கமலமும்
அன்னமா முகமும் அவன் அவள் பொதுவே"

மேலும், 'இதழுக்குக் கொவ்வைக்கனி' போன்ற மரபு ஆசிரியர் கையாண்டுள்ள உவமைகளைத் தண்டபாணி சுவாமிகள் கூறியுள்ளார்.

தண்டபாணி சுவாமிகள் தண்டியாசிரியர் கையாண்ட தொகையுவமத்தையும் பயன்படுத்தியுள்ளார்.

''யாழெனு முன்கையும் கௌிறொடு பயற்றங்
காய்பொரு விரல்களும் காந்தள் மலர்நிகர்
அங்கையும் கிளிமூக் கன்னகூர் உகிரும்
நங்கையர்க் குரித்தென நவின்றனர் நாவலர்'' (34)

இவை போன்ற பல தொகையுவமங்களைத் தண்டபாணி சுவாமிகள் இயற்றியுள்ளார்.

பிற்காலத்து எழுந்த அறுவகை இலக்கணத்தில் தண்டபாணி சுவாமிகள் எளிமையான உவமைகளை மரபு ஆசிரியர்களின் கருத்துக்கு உட்பட்டும், புதிய முறைப்படியும் அமைத்திருக்கிறார்.

அரசாட்சி

டி. பாலசுப்ரமண்யன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவதரித்த வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து முக்தி பெற்ற அருளாளர் ஆவார். அவர் வாழ்ந்த காலம் நமது நாடு அரசியலிலும், ஏனைய நிலைகளிலும், அடிமைப் பட்டிருந்தது. மக்களாட்சி முறை இல்லை. மக்கள் அறிந்த தெல்லாம் மன்னர் ஆட்சி முறையே. அந்நிலையில் வேற்று இன, மொழி, சமயத்தவர்களால் ஈவிரக்கமற்றதொரு கொடுமை யான ஆட்சி நடைபெற்றிருந்தது, என்பது வரலாறு சொல்லும் செய்தியாகும். அந்நிலையில் சாதுக்களான சான்றோர்கள், அருள் பெற்ற மகான்கள், தன்னலமற்ற புனிதமான புண்ணியச் சீலர்கள் எல்லோரும் புராண, இதிகாச, வரலாற்று, வாழ்வியல், செய்திகளை மேற்கோளாகக் காட்டி, அறத்தின் தன்மையையும், நீதியின் நெறிமுறைகளையும், இம்மை, மறுமைப் பயன்களை யும், நிலைபேறுடைய நிலைகளையும் சுட்டிக் காட்டி அரசாட்சி எவ்வாறு இருக்க வேண்டும், அரசன் எவ்வாறு இருக்கவேண்டும், அமைச்சன் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற இலக்கணங்களை ஆக்கித் தந்துள்ளனர்.

அந்த வகையில் அரசன் செய்யக் கூடியது, செய்யக்கூடாதது, என்பனவற்றைப் பட்டியலிட்டு ஐம்பது நேரிசை வெண்பாக்களில் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் "அரசாட்சி" என்ற தொரு நூலினை ஆக்கித் தந்தருளியுள்ளார்கள்.

மக்களாட்சி முறையிலும், 'மந்திரியாட்சி"யே நடைபெறுவ தால் அரசாட்சி என்ற சொல் அதற்கும் பொருந்தும். சமுதாயம் என்ற அமைப்பில் அரசாட்சி என்ற ஒன்று கட்டாயம் இருக்கும். எனவே அவ்வாட்சி எப்படி இருக்க வேண்டும் என்ற அறங்கூறும் செய்திகள் எக்காலத்திற்கும், எந்நாட்டிற்கும், எந்தவொரு தலைவனுக்கும், (அரசன் / அமைச்சன்) பொருந்தும். ஆட்சி என்று வருகின்றபொழுது நாட்டின் குடிமக்கள், அனைவரையும்

சமமாக நடத்த வேண்டியதுதான் அரசனின் அறமாகும். ஒரு தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பதனையும், எப்படி அவன் இருக்கக் கூடாது என்பதனையும் புராண இதிகாச வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் அருளாளர்கள் உரைத்த அறநூல்களை மேற்கோள்காட்டி சுவாமிகள் விளக்கு கின்றார்.

முதலில் அரசாட்சி செய்பவன் தனக்கு மேற்பட்ட சக்தி ஒன்று இருப்பதை உணர்பவனாகவும், அதன் திறத்தில் நம்பிக்கையுள்ளவனாகவும், இருத்தல் வேண்டும். அப்படிப் பட்டவனிடத்தில்தான் அற உணர்வும், இறை நம்பிக்கையும் இருக்கும். இறை நம்பிக்கை உள்ளவன்தான் அறத்திற்கு அஞ்சி செயலாற்றுவான். அப்படிப்பட்ட அறவுணர்வு பெற வேண்டுமாயின் அடிப்படையில் அவன் உலகவியல், இயற்கையின் செயலாற்றல், நிலையாமை, இன்ப துன்பத்திற்கான காரணம், பாவ புண்ணியம், ஜீவகாருண்யம், அன்பு இவற்றை அறிந்த வனாக இருக்க வேண்டும். இரக்க உணர்வு என்பது மிகவும் மென்மையானது அது எல்லோருக்கும் உண்டு. அது எல்லோரிட மும் காட்டப்பட வேண்டியது. ஆனால் அது எல்லோரிடமும் எல்லோராலும் காட்டப்படுவதில்லை சுயநலமில்லாதவர்களால் தான் முழு அன்பினை அடுத்தவர்களிடம் காட்டவியலும். அதே நேரத்தில் பயிர்காக்கக் களை எடுத்தல்போல் தீயவர் களைத் தண்டித்து மன்னன் மக்களைக் காக்க வேண்டும். அவ்வகையில் தன்னலமற்ற அரசனால்தான், பொதுநல நல்லாட்சியைத் தரவியலும் என்பது அடிப்படைக் கருத்தாகும். பொது நல செயலாக்கத்திற்குத் தக்க அளவில் மட்டுமே, அவன் தன்னைப் பராமரித்துக் கொள்ள வேண்டும். அம்மட்டே, பொதுவாக தன் நாடு தன் மக்கள் நலந்திகழ வேண்டும் என்ற அடிப்படை எண்ணம் மட்டுமே ஒருவனின் ஆட்சியைச் செம்மை படுத்திவிடும். இந்நிலையில் ஆளுகின்றவன் கட்டாயம் அறிந்து கொள்ளத்தக்க சில செய்திகளை வலியுறுத்தி சுவாமிகள் கூறுகின்றார்கள். சுவாமிகள் சொல்வதை உள்ளத்தால் ஏற்று எவன் ஒருவன் அதனைப் பின்பற்றுகின்றானோ, அவன் செய்யும் அரசாட்சி மனசாட்சி அரசாக அமையும். மாசற்ற ஆட்சியாக மலரும் மக்கள் விரும்பிப் போற்றும் அரசாக அது திகழும்; அயல் அரசர்கள் அஞ்சத்தக்க அரசாக அது தோன்றும்;

மதிப்பும், மரியாதையும் மிகும்; உற்பத்தியும், வணிகமும் பெருகும்; குற்றங்கள் குறையும் / மறையும்... நோய்கள் குறையும். அமைதியும், சுபிட்சமும் பெருகும். கலையும், இலக்கியங்களும் பெருகும். மொத்தத்தில் அவ்வரசு ஒரு பூலோக சுவர்க்கமாக மாறும். அந்நியர்கள் இந்நாட்டை ஆளுகின்ற பொழுது அவர்கள் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு, சமுதாயப் பிரிவினை உண்டுபண்ணி சமுதாய ஒற்றுமையைக் குலைத்தனர். இதனால் அவர்கள் மிகவும் வசதியாக ஆள முடிந்தது. இதை நிலைநிறுத்தும்பொருட்டு அவர்கள் சாதிக் கொரு நீதி, குலத்திற்கு ஒரு தண்டனை என்ற அநீதியினைக் கையாண்டனர். இதற்கு அவர்கள் வந்தேறிகளின் சூழ்ச்சியான சாத்திரங்களைக் காட்டி மக்களை அச்சுறுத்தி ஏமாற்றினர். இந்நிலையில் சமுதாயத்தில் சமயச் சடங்குகளில் தமிழ் மரபிற்கு ஒவ்வாத சடங்குகளும், சகிக்க முடியாத கொலை, பலி வேள்விகளும், ஆபாசமும், அருவருப்பும் நிறைந்த காட்டு மிராண்டித்தனமான செயற்பாடுகளும் வலிந்து புகுத்தப் பட்டன. இதற்கு அரசியல், சமூக, வல்லாண்மையும், ஆதிக்கவம் பர்களின் சூழ்ச்சித் திறனுள்ள ஏமாற்று வேலையும் பக்கபலமாக இருந்தன. இதனால் கலாச்சார சீரழிவு மட்டுமல்ல, சமுதாய இழிவும், அழிவும், தோன்றின. அநீதி தலைவிரித்தாடியது. ஆன்றோர்களும், சான்றோர்களும் புறக்கணிக்கப்பட்டனர்; அல்லதுசெயலிழக்க வைக்கப்பட்டனர். இந்நிலையில் அரசனையும் அவன் செய்யும் அரசாட்சியும் கயவர்களின் கைப்பாவையாகி விட்ட நிலையில் அறம் உரைத்து, அநீதி களைய வேண்டிய கட்டாயத்தில் அருளாளர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அரசாட்சி என்கின்ற தலைப்பிலே நீதி சொல்லும் ஐம்பது நேரிசை வெண்பாக்களை இயற்றியருளினார்.

அரசன் யாரை மதிக்க வேண்டும், யாரை மதிக்கக் கூடாது, என்பதனை 12 வது வெண்பாவில் சிறப்பாகக் கூறுகின்றார்.

"பூற்கொய்தற் (கு) அஞ்சும் புனிதமறையோரும் சொற்க இச்சை
மீமாஞ்சன் சொல்லால் கொண்டு அற்களந்தோன் பாகமென்றும்,
ஊனைப்பகிர்கின்ற பார்ப்பாரும் ஏகன் எனக்கொள்ளான்இறை."

புல்லின் அழிவைக்கூட தாங்கவொண்ணா மனங்கொண்ட கருணை உள்ள புண்ணியச் சீலர்களான அந்தணர்களையும் (அந்தணர் என்போர் அறவோர். மற்றெவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டொழுகலான்'' என்றக் குறள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது). மீமாஞ்ச சமயத்தினர் சொல்லை நம்பி சுவர்க்கம் கிடைக்கும் என்று கொலை, புலை வேள்வி செய்து, நீலகண்டன் (ருத்ரன்) பாகம் இதுவென்றும், திருமால் பாகம் அது என்றும், கூறி ஊனைப் பங்கிட்டுக் கொள்ளும் பார்ப்பனர் களையும் சமமாகக் கருதான் மன்னன் என்கின்றார். மேலும் 15 ஆம் வெண்பாவில் சன்மார்க்க நெறியை விட்டு, உயிர்களைப் பலியிட்டு, வேள்வி செய்தால் சுவர்க்கம் கிட்டும், சுவர்க்கத் தலைவனான இந்திரப் பதவி கிட்டும். நரபலியிட்டால் அது கிடைக்கும், இது கிடைக்கும் என்றெல்லாம் எழுதி வைத்துள்ள போலி சாத்திர நூல் வழிசென்று கொலை வேள்வி செய்த முற்கால மன்னர்கள் எல்லாம் 'பரிதிகண்ட பனிபோல்' அழிந்தது மட்டுமல்ல, பாரினில் அழியாத பெரும்பரியைச் சுமந்தார்கள். இதன் மூலம் பிற சமயத்தாக்கம் வன்மையாகக் கண்டிக்கப் படுவதுடன் மன்னன் சன்மார்க்க நெறியினையே பின்பற்றல் வேண்டும் என்பதை சுவாமிகள் தெளிவுபடுத்துகின்றார்.

''சுத்தம் இன்றி வேள்விகளால் சொர்க்கம் உறலாம் என்(று)
இத்தரையில் ஆரு முதல் ஏழைமையால் – எய்த்த மனிதர்வரை
வெந்து தின்ற மன்னர் எல்லோன் கண்ட பனி எனப் போய்
ஏற்றார் பழி''.

நூறு அசுவமேதயாகம் செயின் இந்திரனாகலாம், நரமேதம் செயின் அது கிட்டும் என்பதும், மனு நூல் தரும் செய்தி. தமது 14 வது வெண்பாவில் ஒரே குற்றத்தை மேற்குலத்தானும், கீழ்க் குலத்தானும் செய்யின், மேற்குலத்தானுக்கு மிகக் குறைந்த தண்டனையும், கீழ்க் குலத்தானுக்குக் கடுந்தண்டனை விதிக்க வேண்டும் என எழுதி வைத்துள்ள வஞ்சக சாத்திரங்களைத் தனது ஆட்சியின் நீதி நூலாகக் கொண்டு அரசாட்சி செய்த அரசர்கள் எல்லாம் தங்களின் குலத்தோடு அழிந்துபோன உண்மையை நல்ல பெரியோர்கள் நாள்தோறும் சொல்லிச் சிரிப்பார்கள். எனவே, அரசன் அத்தகைய இழிந்த ஒரவாரமான (அ)நீதி நூல்களைப் புறக்கணித்து சம நீதியினைக் கைக்கொள்ள வேண்டும் என்கின்றார் சுவாமிகள்.

குற்றத்தை விட்டுக் குலத்தகவில் தண்டனைகள் பெற்ற பல நூலைத் துணை கொண்ட – கொற்றவர்கள் எல்லாரும்

தங்கள் இனத்தோ(டு) அழிந்த உண்மை நல்லான் அறிந்து நகும். வள்ளுவர் சொல் திருக்குறளை மறுவற நன்கு உணர்ந்தவர்கள் உள்ளுவரோ ஒரு சாதிக்கொரு நீதி.,? என்ற பாடல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. குறளினைக்கொண்டு கோலோச்சினால் குடி உயரும் கோலும் உயரும் என்பது பெறப்படும்.

புராண இதிகாச உதாரணச் செய்திகள்

சுவாமிகள் புராண இதிகாச வரலாற்றுச் சான்றுகளை உதாரணமாகக் காட்டி அரசனும் அரசாட்சியும் எவ்வாறு செயல் பட வேண்டும் என்று விளக்கியருள்கின்றார். சுவாமிகள் அருளிச் செய்த அரசாட்சி நூலில் உள்ள 50 வெண்பாக்களில் 16 வெண் பாக்களில் புராண இதிகாசச் செய்திகளைச் சொல்லியருளு கின்றார்.

நான்காவது வெண்பாவில் அரசனானவன் தன் வாழ்வின் நிலையாமையை உணர்ந்து நீதியாக அரசாட்சி செய்யவேண்டும் என்கிறார். நாடாளும் மன்னன், பரசுராமன் தன்னுடைய பரசுவால் கொல்லப்பட்ட. மன்னர்களையும், குலாலர் குலத்துதித்த சாலிவாகனனால் இறந்த விக்கிரமாதித்தனையும் நினைத்துப் பார்க்கவேண்டும் என்கிறார் சுவாமிகள்.

அரசாட்சி செய்யும் மன்னன் நீதி வழங்குவதில் கடவுளின் துணையை நாட வேண்டும். அவனே சிறந்த அரசன் ஆவான். இதற்கு திருவிளையாடற் புராணத்தில் வரும் (செட்டியார் வீட்டில் நடந்த திருவிளையாடல்) ஒரு பாடலைக் காட்டு கின்றார் (பாடல் எண் 7).

இராமன் போன்ற தெய்வ மன்னர்கள் கூட வசிஷ்டர் முதலான முனிபுங்கவர்களின் ஆலோசனைப்படி அரசாட்சி புரிந்தனர். எனவே அரசனானவன் பெரியோர் துணைகொண்டு ஆட்சிபுரிய வேண்டும்; மாறாக கொடுங்கோல் ஆட்சியைக் கண்டு பூமாதேவி அஞ்சி அலறுவாள் என்கிறார்.

ஆதலால், ஆலாலவிடமுண்டு இறவா இறைவனின் தொண்டர்களான திருவேடத்தாரையும், புலவர்களையும், வீர மறவர்களையும் தனக்கு வேண்டியவர்களாகத் தன்னருகில் வைத்துக் கொள்ளாத அரசன் புகழின்றி உலகோரால் மறக்கப் படுவான். சிவபெருமானின் அடியவர்களின் ஆலோசனை

நல்லாட்சிக்கு உதவும் என்கிறார் சுவாமிகள். அந்த 10-வது வெண்பாவில் 'ஆலம் உண்டான் அருள் வேடத் தொண்டர் களை' என்றவர்களின் மூலம் சிவன் ஆலம் உண்ட புராணச் செய்தி குறிப்பிடப்படுகிறது.

ஆதிசேடன் தாங்கும் பூமியை ஆள்பவன் அனைத்து ஆற்றல் களையும் பெற்றிருந்தாலும், கடவுள் பக்தியினால் கிடைக்கும் தெய்வக் கருணையும் இருக்க வேண்டும். இந்த 25-வது வெண்பாவில் ஆதிசேஷன் தாங்கும் உலகு என்ற புராணச் செய்தி தெரிவிக்கப்படுகிறது. 24-வது வெண்பாவில் சூரபன்மனின் புகழும், அவன் ஆணவத்தினால் அழிந்த வரலாறும் சொல்லப் படுகிறது. ஆணவமின்றி நீதியால் ஆள்பவன் தான் தனக்குதானே சமானமான மன்னன் என்கிறார் சுவாமிகள். இவ்வெண்பாவில் கந்தபுராணச் செய்தி இடம் பெறுகிறது. ஆணவமலத்தினால் ஏற்படும் அழிவினை கூறுமுகத்தான் சைவ சித்தாந்தக் கருத்து இங்கு பேசப்படுகிறது.

25-ம் பாடலில் ததீசி முனிவரின் சொல்லைக் கேளாமல் சிவனை நிந்தனை செய்து யாகம் செய்த தக்கனின் தலையை வெட்டி ஆட்டுத் தலையை ஒட்ட வைத்து யாகத்தினை அழித்த வீரபத்திர சுவாமியின் திறன் பேசப்படுகிறது. பெரியோர்களை யும், கடவுளையும் நிந்தனை செய்தல் மன்னனுக்கு ஆகாது என்பது பெறப்படும். 26-வது பாடலில் பிறன்மனை விரும்பிய இராவணன் அழிந்த செய்தி சொல்லப்படுகிறது. அரசன் மறன் இல் விழையாதவனாக இருத்தல் வேண்டும். இல்லை எனில் பெருமை இழந்து அழிவான் என்பது பெறப்படும். 27-ம் வெண் பாவில் தானே கடவுள் என்று ஆணவத்துடன் சொல்லி கடவுளை இகழ்ந்த இரண்யன் நரசிம்மரால் அழிக்கப்பட்ட வரலாறும், கடவுளை நம்பிய பிரகலாதனைக் காத்த வரலாறும் குறிப்பிடப் படுகிறது. அரசன் தெய்வ பக்தியுடன் வாழ வேண்டும் என்பது நியதி.

அலறித்துடிக்க வைத்து துரௌபதியின் துகிலை உரித்த கௌரவர் சபையைப் போன்ற இணையிலா சபை ஒன்று உலகில் எங்கும் இல்லை என்ற மகாபாரத இதிகாச வரலாறு பேசப்படு கிறது. பெண்ணை அவமதிக்கும் அரசு அழியும் என்ற செய்தி இந்த 28-வது வெண்பாவில் பெறப்படும்.

பசுவின் கன்றை அறியாமற்கொன்ற தனது ஒரே மைந்தனைத் தேர்க்காலில் இட்டுக்கொன்று நீதி காத்த மனு நீதிச் சோழனின் திறன் இங்கு பேசப்படுகிறது. இப் பெரிய புராணச் செய்தியால் மன்னனென்பவன் எவ்வளவு உயர்ந்த நீதிமானாக இருக்கவேண்டும் என்பதனைச் சுவாமிகள் சுட்டியருளுகின்றார் தம் 29-ம் வெண்பாவில்.

42-வது வெண்பாவில் திருவாதவூரர் ஆகிய நல்லமைச்சரால் அரிமர்த்தன் பாண்டியன், பரம்பொருளையே பிரம்பால் அடிக்கும் வாய்ப்பினைப் பெற்று, அதனால் சிவன் உயிர்களுக்குயி ராய் உள்ளான் என்பதனை அறியும் வாய்ப்பு பெற்றான். இந்த திருவிளையாடற் புராணச் செய்தியால் மன்னன் என்பவன் சிறந்த பக்தியுள்ள அமைச்சனைக் கொண்டு ஆட்சி செய்து சிறப்படைய வேண்டும் என்பதனை சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

துர்புத்தி அமைச்சர்களால் கெட்டழிந்த இராவணன், துரியோதனன் முடிவுகள் இங்கு பேசப்படுகின்றன. இவ்விரு இதிகாசச் செய்திகள் மூலம் சுவாமிகள் அரசு இலக்கணங்களை வகுத்தருளுகின்றார். (வெண்பா. 43)

46-வது பாடலில் விபீடணின் குணம் (இராமனிடம் தஞ்சம் புகுந்தது) இங்கு இகழப்படுகிறது. செஞ்சோற்றுக் கடனுக்காக விசுவாசத்தோடு உயிரை ஈந்த சிங்கமுகன், கும்பகர்ணன், விகர்ணன் போன்றவர்கள் விபீடணனைவிட எவ்வளவோ உயர்ந்தவர்கள் என்கிறார் சுவாமிகள். விபீடணனை இராமன் ஏற்றுக்கொண்டதே சரி இல்லை என்ற குறிப்பினைச் சுட்டு கிறார் சுவாமிகள். இக்குறிப்பு 47-ஆம் பாடலில் பெறப் படுகிறது.

மன்னன் ஒருவனை முன் வஞ்சிக்க மாயாவி
தன் அரசிற்கு ஆமாறு சாற்றிடினும் பின் அவனைப்
பார் அறிலக் கொல்லல் பழி அன்(று) இது, பழ(து) இல்
கூர் அறிவுஆர் வேந்தன் குணம்.

மேலும் 48-வது பாடலில் சுவாமிகள் விபீடணன் இராம னிடம் செல்லாமல் கானகம் சென்று தவ வாழ்க்கை மேற் கொண்டிருந்து, உலகம் முழுவதும் ஆளும் வரம் இறைவனிடம் கேட்டிருந்திருப்பானேயானால் கண்டிப்பாகக் கிட்டி இருக்கும். இலங்கையை மட்டும் ஆள இராமனை அண்டியது; பின்னர்

இலங்கையை ஆண்டது இவைகள் எல்லாம் நீதியான செயல்கள் அல்ல என்கிறார் சுவாமிகள்.

இவ்வாறாக பதினாறு வெண்பாக்களில் சுவாமிகள் புராண இதிகாச வரலாற்றினைச் சொல்லி அருளுகின்றார். அரசாட்சி சிறக்க வேண்டி.

"அரசாட்சியும்" திருக்குறளும்

தண்டபாணி சுவாமிகள் தம்முடைய 35-வது வெண்பாவில் "வேந்தன் சினம் செய்யில் வேறு துணை இல்லை என ஆய்ந்து உரைத்தான் ஔவை அதுவன்றி வாய்ந்த உலகு எல்லாமும் கோன் நோக்கும் என்(று) உரைத்தார் வள்ளுவனார் வல்லார் அறிவார் வகை என்றதன் மூலம் ஔவை பிராட்டியார், தெய்வ புலவர் திருவள்ளுவர் ஆகியோரின் கருத்துக்களை அவர்தம் சொற்களைக் கொண்டே அவர்தம் பெயரோடு எடுத்தாண்டு உள்ளார். இதன் மூலம் வள்ளுவரின் கருத்துக்களையே சுவாமி களும் கையாண்டுள்ளார் என்பது இனிதே பெறப்படும் வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி என்ற குறளினை சுவாமிகள் கையாண்டருளி யுள்ளார் மேற்கண்ட பாடலில்.

போரிலே தன்னால் தோற்கடிக்கப்பட்ட, இறந்துபோகச் செய்த இருவகை அரசர்களின் மனைவிமார்கள் தங்கள் கணவர் இறந்தால் உயிரை விடுவர் விடாமல் வாழ நினைத்திருப்பார்களே யானால் அவர்கள் தன் அரண்மனைக்குக் கொண்டு வந்து தனது பத்தினியர்க்கு பணிவிடை செய்யும் தொழிலைக் கொடுத்து பாதுகாப்பது அரசர்களில் நல்லோர்க்கு மகிழ்ச்சியளிக்கும். வெண்பா பதினெட்டில் இச்செய்தியை, "தன்தோள் குறிப்பார் பணிபுரிதல் கண்(டு) உவக்கை வேந்தன் கனி" என்கிறார். மேலும் தகுதி வாய்ந்த சிறந்த அரசன் தன்னை விரும்பாத மங்கையை மணம் புரிந்துகொள்ள சம்மதியான்" இதனை தன்தோள் குருதித் தளராத தையல்நல்லார் மென்தோள்ப் புணர்ச்சி விரும்பானே" (பாடல் 19) என்கிறார் சுவாமிகள்.

மேலும் சிறைப்பட்ட எதிரியின் மனைவி மக்களை அவர் களுடனே வாழ அனுமதிப்பவனே தேவருலகிலும் போற்றத் தக்க அரசனாவான் என்கிறார் சுவாமிகள் (பாடல்–2) இதன் மூலம், "பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு

அறனன்றோ ஆன்ற ஒழுக்கு'' என்னும் குறள்மொழி கருத்தினை சுவாமிகள் வலியுறுத்துகின்றார். தனி மனித ஒழுக்கமும், பெண்ணை இழிவு செய்யாமையே சிறந்த ஆண்மை எனவும், எதிரியாயினும் அவன் மனைவியை அவனுடனே வாழச் செய்யும் பெருங்கருணைக் குணமும் உள்ளவனே சிறந்த மன்னனாவான் என்று சுவாமிகள் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பல இடங்களில் தெய்வப்புலவராம் திருவள்ளுவரின் கருத்துக்கள் விரவிக் கிடக்கின்றன சுவாமிகளின் அரசாட்சியில்.

''அரசாட்சியில்'' சைவ சித்தாந்தம்

''அரசாட்சி யாநிறைந்த வானவனைப் போற்றி''

என்று காப்பு வெண்பாவில் துவங்கும்பொழுது எங்கும் நிறைந்த பரம்பொருளைப் போற்றுகின்றார் சுவாமிகள்.

''இறைக்கஞ்சி அங்கை குவிப்போன் அரசு'' என்ற வரிகள் மூலம் இறையுணர்வும், அவர்க்கு அஞ்சி செயல்படுத்துதலும் அறிவுறுத்தப்படுகின்றன.

''எண்ணறிய பல்பிறப்பில் பன்றியினும் தாழ்வாய்ப்படும்'' என்ற வரிகள் மூலம் பல்வேறு பிறப்புக்களையும, 8400000 யோனிபேதங்களையும் நினைவுபடுத்துகின்றார் சுவாமிகள். இச்செய்திகள் எல்லாம் சைவ சித்தாந்தக் கருத்துக்களேயாம்.

சுவாமிகள் நரகம், சுவர்க்கம் என்ற சொற்களை நிறையவே கையாள்கின்றார். யாதனா சரீரம் பெற்று நரகத்தில் இடப்படுதலும், பூதாமர உடல்பெற்று சுவர்க்க இன்பங்களைப் பெற்று சுகித்தலும் ஆகிய சைவசித்தாந்தக் கருத்துக்களை ஆங்காங்கே சுவாமிகள் வலியுறுத்திச் சொல்கின்றார்.

முடிவுரை

தவத்திரு. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிச்செய்த நீதிநூலான அரசாட்சி எக்காலத்திற்கும், எந்நாட்டிற்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது. இந்நூலில், சுவாமிகள் அன்புடைமை, அருளுடைமை, உயிரிரக்கம், மன்னுயிர் ஓம்புதல், இறை உணர்வு, அறவுணர்வு, நீதிநெறி பிறழாமை, தனி மனித ஒழுக்கம் இவையனைத்தும் பெற்றவனாலேயே ஒரு நாட்டிற்கு நல்லாட்சியினைத் தரவியலும் என்று சான்றுகளுடன் உரைக்கின்றார். மக்களாட்சித் தத்துவத்திற்குக்கூட சுவாமிகளின் கருத்துக்கள் சாலவும் பொருந்துவனவாக உள்ளன.

திருவாதவூரரும் தில்லைக் கூத்தரும்

மீ. பாலமுருகன்

திருவாதவூரில் திருவவதாரம் செய்தவர் மாணிக்கவாசகர். "மாணிக்கவாசகர்" என்பது இறைவன் இவர்க்கிட்ட பெயராகும். இவர்தம் இயற்பெயர் இன்னதென்று அறியக் கூடவில்லையாதலால் இவர் அவதரித்த திருத்தலத்துடன் சார்த்தித் 'திருவாதவூரர்' என்றே அழைக்கப் பெற்றார். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும் திருவாதவூரர் என்றே இவரைக் குறிப்பிடுகின்றார்.

தண்டபாணி சுவாமிகள் இயற்றிய புலவர் புராணத்தில் மூன்றாவதாக இடம்பெறும், திருவாதவூரரின் வரலாற்றிலே காணலாகும் செய்திகளின் துணைக்கொண்டு, இவ்வாய்வு நிகழ்த்தப் பெறுகின்றது.

திருவாதவூரர் வரலாறாகப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணத்தில், வாதவூரடிகளுக்கு உபதேசம் செய்த படலம்; நரி பரியாக்கிய படலம்; பரி நரியாக்கி வைகையை வரவழைத்த படலம்; மண் சுமந்த படலம் என்ற படலங்கள் காணப்படுகின்றன.

திருவாசகத்திலும் திருவாதவூரரின் வரலாற்றுக் குறிப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அகச் சான்றுகளாகக் காணக் கிடக்கின்றன. இவற்றின் அடிப்படையில் தான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும் திருவாதவூரரின் வரலாற்றினை 73 பாடல்களில் பாடியுள்ளார்.

சித்தர் நெறியில்

திருவாதவூரரைச் சுவாமிகள் முதன்முதலில்
"சிட்டர் போற்றும் திருவாசகத் தோன்"

(பு. பு. பா. எண். 116)

என்றே அறிமுகம் செய்கிறார். தகரம் எதுகை நோக்கி, டகரமாக சித்தர் போற்றும் என்ற சொற்றொடர் சிட்டர் போற்றும் என்றாகியுள்ளது.

சித்துக்கள் செய்பவர்கள் சித்தர்கள். சிவபெருமானுக்குச் சித்தர் என்ற பெயரும் உண்டு. 'அட்டமா சித்திகளை அருளிய படலம்' என்பது 64 திருவிளையாடல்களுள் ஒன்று.

திருவாதவூரரின் வரலாற்றில் காணப்பெறும் சித்தாடல்கள் திருவாதவூரருக்காக தில்லைக் கூத்தன் செய்த சித்தாடல்கள் என்றும் திருவாதவூரரே இறை அருள் ஆணை கொண்டு நிகழ்த்திய சித்தாடல்கள் என்றும் இருவகைப்படுத்தலாம், அதாவது ஆட்கொள்தலும் ஆட்படுதலும் என்ற வகையின் கீழ் இச்சித்தாடல்களை வகைப்படுத்தலாம்.

இறைவன்

ஆட்கொள்தல்	ஆட்படுதல்
1) நரியைப் பரியாக்குதல்	1) அரசனையே அடியாராக்குதல்
2) பரியை நரியாக்குதல்	2) பௌத்தரை ஊமையாக்குதல்
3) வைகையில் வெள்ளம் வரவழைத்தல்	3) ஊமைப் பெண்ணை பேச வைத்தல்
4) வந்திக்காகக் கூலியாளாக வருதல்	4) ஈசனே வாசகத்தை எழுதுதல்
5) பிரம்படியை அனைவர் மீதும் பட வைத்தல்	

மேலே உள்ள வரைபடம் காட்டிய சித்துக்களின் வரிசையினை தண்டபாணி சுவாமிகளின் பாடல் கொண்டு ஆய்வோம்.

1. நரியைப் பரியாக்குதல்

இளமைப் பருவத்தை அடைந்த திருவாதவூரரைப் பாண்டிய மன்னன் தன் அமைச்சருள் ஒருவராக்கிக் கொண்டதுடன் 'பிரமராயன்' என்ற பட்டமும் அளித்தான். வசிட்ட முனிவரால் இராமரின் திருவோலக்கம் பொலிவடைந்தது போல் பாண்டியனின் அவையும் மாணிக்கவாசகரால் பொலிவுடன் விளங்கியது.

மந்திரி பதவி வந்துற்ற போதும் எந்த நேரமும் சிவனையே எண்ணும் சிந்தையராக வாழ்ந்தவர் மாணிக்கவாசகர். இத்தகைய சிறப்புடைய அமைச்சரைப் பேணாமல் திருப்பெருந் துறைக்குச் சென்று குதிரைகள் வாங்கி வருமாறு பணித்தான்.

"அத்தகைய அமைச்சன் தன்னை அளிமுரல் வேப்பந்தாரான்
புத்தநாட் டிவுளிகொள்ளப் போதி என்றனும் பினானால்
எத்தனை நலன்உற்றாலும் இராசனைச் சாரும்ஈனம்
வித்தகர்க் காகாதென்ன வெறுப்பதே முறையாம் அம்மா"

(பு. பு. பா. எண். 175)

என்று இச்செயலைத் தண்டபாணி சுவாமிகள் மனம் வெதும்பிப் பாடுகின்றார்.

பொதிபொதியாகப் பொன்னினை ஏற்றிக் கொண்டு பரிவாரங்கள் புடைசூழக் கீழ்த்திசை நோக்கிச் சென்றார் மணிவாசகர். அங்கே ஒரு சோலையில், செம்பொன் போன்று மலரைச் சொரியும் குருந்த மரத்தினடியில் அந்தணக் குருவாக மாணாக்கர் புடைசூழ வீற்றிருந்தார் தில்லைக் கூத்தர்.

குருவைக் கண்டவுடனே மணிவாசகர் தாம் கொண்டு வந்த பொற்காசுகள், குதிரை வேட்கை, அரச ஆணை ஆகியவற்றில் சிறிதும் நினைவின்றி குருவின் அடிதொழுது நின்றார். இவ்வாறு நிற்கும் மாணிக்கவாசகரை நோக்கி,

"யாவன்நீ ஈண்டேன் வந்தாய்? என்னைநீ இறைஞ்சல்
ஏன்? நின்
ஆவல்யா தென்ன?"

(பு. பு. பா. எண். 178)

வினவினார் இறைவன். அதற்கு மாணிக்கவாசகர்

...... அந்தணச் சிறுவன் யான்; ஓர்
"காவலன் ஆணையால் இக்கான்வழி வந்தேன்; நின்னைத்
தேவதேவனென நம்பித் தெண்டவிட்டு இறைஞ்சி நின்றேன்"

இவ்வாறு தண்டபாணி சுவாமிகள் பாடியதற்கு,

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னை ஆட்கொண்ட போதே
கொண்டிலையோ?"

(திரு. பா. எண். 502)

என்ற திருவாசகமே அகச்சான்றாக விளங்குகிறது.

மாணிக்கவாசகரைத் தில்லைக் கூத்தன் அடியவராக ஏற்றுக் கொண்டவுடன் குருஉருவை மறைத்துக் கொண்டான். தில்லைக் கூத்தன் மேல் கொண்ட வரம்பு மீறிய கருணையால் அரச கருவூலப் பொருள்கள் அனைத்தும் திருப்பெருந்துறை கற்றளி யாக மாறியது.

இந்த வேளையில் அரசனின் தூதன் வந்து குதிரை வாங்க வந்ததனை நினைவூட்டினான். "ஆவணி மூலத்தன்று பரிகள் நின்பால் எய்திடும்'' என்று மன்னர்க்கு மறு ஓலை அனுப்பினார் மாணிக்கவாசகர். ஆனால் மன்னனோ நடந்ததை அறிந்து மாணிக்கவாசகரைத் தனிச் சிறையிலிட்டுத் தாழிட்டான். குறித்தப்படியே ஆவணி மூல நாளில் குதிரைகள் வந்தன. இதனைத் தண்டபாணி சுவாமிகள்,

"குறித்தஆ வணிமூலத் திருநாளில்
குலநரிகளைப் பரியாக்கி
மறித்தடங் கரத்தார் சேவகராகி வானவர்
தமைத் துணையாகக் கொண்டு
எறித்தபொன் மதில்சூழ் மதுரையின்
கீழ்பால் எய்திய ஆரவாரத்தால்
வெறித்தகை தவிர்த்தாங் குவகைமேற்
கொண்டல் வியன்நகர் ஆறும்வேல்வேந்தன்

(பு.பு.பா. எண். 195)

என்று பாடியுள்ளார். இஃது இறைவன் மாணிக்கவாசகர்க்காகச் செய்த முதல் சித்தாடலாகும்.

2. பரி நரியாகுதல்

மாயப் பரிகளைக் கண்ட மன்னன் அவை மாயம் என்றுணராமல் மகிழ்ந்து மாணிக்கவாசகரைச் சிறையிலிருந்து விடுவித்தான்; ஆனால் அன்றிரவே அம்மாயப் பரிகளனைத்தும் மீண்டும் நரிகளாயின.

"அரண்மனைக் குதிரைத் திரளினைக் கொலை
செய்தகன்றன''

(பு.பு.பா.எண். 202)

மறுநாள் விடிந்ததும் இரவில் நிகழ்ந்ததனை அறிந்த மன்னர் "இச்சாலம் எங்கு கற்றனையோ'' என்று வினவியதுடன்

மாணிக்கவாசரை வைகையாற்றுப் பொடி மணலில் நிறுத்தித் தண்டனை கொடுத்தான்.

3. வையையில் வெள்ளம் வருதல்

வைகையாற்று மணலில் பட்டப்பகலில் நிறுத்தித் தலையில் கல்லேற்றிப் புண்படப் புரிந்தபொழுது

"தெய்வமே துணைஎன் றுணர்ந்தொரு மூர்த்தித்
தியானமும் செபமும் நன்கியற்றி
உய்வது குறிக்கும் உறுதிபெற் றுள்ளீர்"

(பு.பு.பா. எண் 204)

என்று தண்டபாணி சுவாமிகள், மாணிக்கவாசகர் அந்த நேரத்தில் நிட்டை நிலையில் இருந்ததாகக் குறிக்கின்றார். இறைவனால் தம் அடியவர் படும் அல்லலைக் கண்டு பொறுக்க முடியவில்லை. அதனால் பொங்கி வந்தது வையையில் பெரு வெள்ளம்.

"நெற்றியில் கல்லும் நெடுவிரற் கிட்டி
நெருக்கமும் அமைத்து நீனிலத்தின்
பற்றிலான் றன்னை ஒறுப்பது நினைத்தார்
பரண்அரு பொற்புனல் வெள்ளம்
உற்றிரு கரையும் பிறழ்ந்தது" (பு.பு.பா. எண். 205)

என்று இதனைத் தண்டபாணி சுவாமிகள் குறிக்கின்றார்.

4. கூலியாளாக வருதல்

வையையில் வந்த திடீர் வெள்ளம் கரைகளை உடைத்து மதுரை மாநகருக்குள் புகுந்தது. வீட்டுக்கொருவர் வந்து கரையடைத்து நாட்டுத் தொண்டு செய்யுமாறு அரசன் ஆணையிட்டான். அரசனின் ஆணையை நிறைவேற்ற இயலாமல் தவித்தாள் பிட்டு வாணிச்சி. அவள் தன் குறைத்தீர்க்க வேண்டி சொக்கனிடம் முறையிட்டாள். அதனால்,

"நெடியமால் அறியாப் பகுத்தவன் தானே
நேரில் ஓர் ஆளென நிலவிப்
பொடியதாம் பிட்டு முழுதுமாம் கூலி
புகன்னவன் இசைத்த பின்போனான்"

(பு. பு. பா. எண். 207)

என்று தண்டபாணி சுவாமிகள் இச்சித்தாடலைப் பாடுகின்றார்.

5 அனைவர் மீதும் அடிவிழச் செய்தல்

வந்திக்குக் கூலியாளாக வந்த இறைவன் கூலிமிகக் கொண்டு உறங்கினனேயன்றிக் குற்றேவல் ஏதும் செய்திலன். இச்செய்தியை ஏவலர் மன்னனிடம் சொல்ல, சினத்துடன் வந்த மன்னன், வந்தியின் கூலியாளாக வந்த இறைவனை அடித்தனன்.

அவ்வடி அடித்தோன் முதற்பலர் மீதும்
அவ்வயின் தாக்கிய தன்றி
எவ்வசி லத்தில் யாவர்தம் மீதும்
ஏய்ந்தது; தேவராதியர்தாம்
தெவ்வறக் களையும் கணைவிழைந் தான்கைச்
சிலையடி பட்டவன் றன்னை
இவ்வமையத்தில் யாவனோ அடித்தான்
எனத்தெளிந் தின்பம்எய் தினரே"
(பு. பு. பா. எண். 209)

அத்தகை கடவுள் யாவனோ அவனே
அகண்டபூ ரணப்பரப் பிரமம் (பு. பு. பா. எண். 210)

என்று தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளார். இவையனைத்தும் திருவாதவூரருக்காகத் தில்லைக் கூத்தன் செய்த சித்தாடலாகும். இனி, திருவாதவூரரே இறை அருள் கொண்டு சித்தாடல்கள் செய்ததனை ஆய்வோம்.

அரசனையே அடியாராக்குதல்

"ஐந்தும் அடக்குஅடக்கு என்பார் அறிவிலார்
ஐந்தும் அடக்கும் அமரரும் இங்கில்லை
ஐந்தும் அடக்கில் அசேதனாம் ஆமென்றிட்டு
ஐந்தும் அடக்கா அறிவறிந் தேனே"

என்பார் திருமூலர். பொறிவழி போய் புன்னெறி இயற்றிய பாண்டியனைப் புண்ணிய நெறியாம் சிவநெறிக்குத் திருப்பியவர் மாணிக்கவாசகர். தான் அடித்த அடி தன் மீதும் தன்னைச் சார்ந்தவர் மீதும் பட்டவுடன்தான் பட்டுத் தெரிந்தான் பாண்டியன். தம்மைத் தண்டித்த பாண்டியனின் பிழை பொறுத்துத் தவநெறியில் அவனைத் தலைநிற்க வைத்தார் மாணிக்கவாசகர். இதனை,

''மற்றைய அரசர் போல்மக பதியூர்
வாயிற்புகுந் தவுணரால் வருந்தாய்
பொற்றைவில் சிவனூள் புகுவை''

(பு. பு. பா. எண் 214)

என்று அருள் செய்ததாகப் பாடுகின்றார்.

பௌத்தரை வெல்தல்

தம் அரசனைத் தவநெறியிற் செலுத்திய பின்னர் திருப்பெருந்துறையினை விட்டு நீங்கி தில்லை அடைகிறார். மாணிக்கவாசகர் என்ற பெயர் பெற்றது இத்தலத்தில் தான் என நம் சுவாமிகள் தமது 216 வது பாடலில் குறிக்கின்றார்.

மாணிக்கவாசகர் பௌத்தருடன் வாது செய்யச் சென்ற போது அதனின் இறைவனின் அழைப்பாகவே ஏற்றுச் சென்றார். பௌத்தருடன் வாதம் செய்து வென்றதுடன் அவர்கள் 27 பேரையும் ஊமையராக்கினார் என நம் சுவாமிகள் தமது 219 பாடலில் குறிக்கின்றார்.

ஊமையைப் பேச வைத்தல்

மாணிக்கவாசகர்க்கும் பௌத்தருக்கும் இடையே நிகழ்ந்த சொற்போரினை நேரிற் காணத் தேரில் வந்த மன்னன், தன் மகளின் ஊமைத்தன்மையை நீக்குமாறு மாணிக்கவாசகரிடம் வேண்டினார்.

மாணிக்கவாசகரும் அதற்கிசைந்து அவருடன் சென்று குருவின் திருவடியினைத் தியானம் செய்து ஊமைப் பெண்ணுக்கு நீறிட்டார். அவ்வூமை மங்கையிடமே பல நுட்பமான வினாக்களைத் தொடுத்தார். உடனே அம்மங்கை ஊமை நீங்கி அவ்வினாக்களுக்குப் பதில் கூறினாள். இதற்கு மாணிக்கவாசகரின் 'திருச்சாழல் பதிகம்' சான்றாகும். இச்செயலினைத் தண்டபாணி சுவாமிகள் தமது புலவர் புராணத்தில் 221, 222, 223 ஆகிய பாடல்களில் குறிக்கின்றார்.

ஈசனையே எழுத வைத்தல்

தம் வாசகம் அனைத்தையும் தில்லைக் கூத்தனின் திருக்கரத்தாலேயே எழுத வைக்கும் அளவிற்குத் தமது ஆன்ம படிநிலையை உயர்த்திக் கொண்டார். இதனை,

''ஒருக்கால்கேட் டங்ஙனமே ஊசியினால் பொறித்தல் வியந்து
இருக்கால் முக்கால் பார்த்தும் யாதொன்றும் பிழைகாணார்
திருக்கால் ஒன்றெடுத்த பிரான் செயல் இதெனத்
தெளிந்தில்லார்
உருக்கார் ஓர்தமிழ்க் கவிதை ஒருங்குரைத்து முடித்தாரே''
(பு. பு. பா. எண். 229)

என தண்டபாணி சுவாமிகள் குறிக்கின்றார்.

இனிக் இக்கட்டுரையின் தலைப்பைச் சற்றுச் சிந்திப்போம். 'திருவாதவூரரும் தில்லைக் கூத்தரும்' என எண்ணும்மையில் வைத்த காரணம் என்னவெனில் மலக்கூட்டம் நீங்கப் பெற்ற ஆன்மாவானது முக்தி நிலையில் இறையோடு இரண்டறக் கலக்காமல் அவனின் திருவடி நீழலில் தங்கி இளைப்பாறும் என்பதைக் காட்டுதற்கேயாம். எனவே தான் மேற்கண்ட சித்தாடல்களை இருவகையாகப் பகுக்க நேர்ந்தது என்பதனைத் தண்டபாணி சுவாமிகளின் பாடல்கள் மூலம் அறியலாம்.

பொது நூல்

எம். பானுமதி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து (1839—1898) ஏராளமான தமிழ்ப் பனுவல்களை இயற்றிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பொது நூல், சிறப்பு நூல், திருவெண்பா, விற்பனம், வருக்கக் குறள், மனுநெறித் திருநூல், அருளாட்சி என 7 நீதி நூல்களை இயற்றியுள்ளார். இவற்றில் முதல் நான்கு நூல்களும் ஒன்றாகத் தொகுக்கப் பெற்று நான்கு நூல் என வழங்கப்படுகிறது. இந்த நான்கு நூலில் முதலாவதாகிய பொது நூலை அறிமுகப்படுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

வாழ்வில் கொள்ளத்தக்கன இவை, தள்ளத்தக்கன இவை என விதிப்பனவே நீதி நூல்களாகும். சங்கப் பழைய நூல் களாகிய எட்டுத்தொகை பத்துப்பாட்டுப் பனுவல்களில் நீதிக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளவே தவிரத் தனியாக நீதியை மட்டும் கூறும் நூல் ஒன்றுகூட இல்லை. அடுத்த பதினெண் கீழ்க்கணக்கில் பதினொரு நூல்கள் நீதியையே நுவல்பொருளாக உடையன. அன்று தொட்டு இன்றைய வாழும் புலவர்களால் இயற்றப்பெறும் பல்வேறு ஆத்திசூடிகள் வரை தமிழில் ஏராளமான நீதி நூல்கள் தோன்றியுள்ளன. இந்நூல்களைக் கால முறைப்படி அடைவு செய்து ஆராய்ந்தால் தமிழ்நாட்டில் காலந்தோறும்மாறி வந்த சமுதாயச் சிந்தனைகளை அறிய இயலும்.

நீதிகள், இருவகைப்படும் ஒன்று காலத்தாலோ, தேசத் தாலோ மாறுபடாத அடிப்படை அறங்கள். மற்றொன்று இடம், பொருள், ஏவல்களுக்கேற்ப மாறும் இயல்புடையன. அடிப்படை அறங்களிலே நூல்களுக்குள் மாறுபாடு இருக்காது; சிற்சில வேறுபாடு இருக்கலாம். ஆனால் மாறும் இயல்புடைய அறங் களிலே நூலுக்கு நூல் முரண்படும். எடுத்துக்காட்டாக ஔவையார், ''மீதூண் விரும்பேல்'' (ஆத்தி 91) என்றால்,

பாரதியாரோ, ''ஊண்மிக விரும்பு'' (பு. ஆத்தி. 6) என்பார். இவை கால வேறுபாட்டால் நிகழ்வன.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்நாட்டில் சமயத்திற்கே முதன்மையையும் தலைமையையும் தந்த ஒருவரின் அறக் கருத்துக்களைக் காண்பதன்வழி அக்கால சிந்தனைப் போக்கை அறியலாம்.

பொது நூல் என்றும் இப்பனுவல் 102 நேரிசை வெண்பாக் களால் இயன்றது. முதலில் காப்பும் இறுதியில் நூற்பயனுமாக இரு வெண்பாக்கள் நீங்க நூல் 100 செய்யுள்களால் நடைபெறு கிறது. பகுதிக்குப் பப்பத்து பாடல்களாக பத்துப் பிரிவுகளை உடையது. இதை முறையே கடவுள் வாழ்த்து, கருணைக்கடல், நீதிநெறி, சத்தியம், சித்து, ஞானம், அறம், பொருள், இன்பம், வீட்டுநெறி என பெயரிடப்பட்டுள்ளன. இந்த நான்கு நூல் அருளாட்சி என்னும் மற்றொரு நூலோடு சேர்த்து 1877 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. 120 ஆண்டு களுக்கு முன் அச்சு வாகனம் ஏறிய இந்நூற்றொகுதி இன்று காண்டற்கும் மிக அரியதாக உள்ளது.

கடவுள் வாழ்த்தைத் தண்டபாணி சுவாமிகள் திருவள்ளுவர் நெறியை பின்பற்றிச் ''சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருள் ஆம்;'' (கல்லாடம் 14) என்கிறார். இந்த அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள,

''ஓர்சமயத் தேவுஆய் ஒருவன்ஆம் எம்பெருமான்
பேர் சமைத்தது அன்றி பிறரும்ஆம்; – சீர் சமைத்து
பேசி இகழ்வதற்கோ பேசும் மொழி கற்பித்தான்?
ஆசி பகர்ந்து உள்ளஎன்றே ஆம்'' (10)

என்னும் வெண்பா இன்றைய சூழ்நிலையில் மிக ஆழமாகச் சிந்தித்தற்கு உரியதாகும்.

இரண்டாவதாகிய கருணைக்கடல் என்னும் அதிகாரம் இறைவன் கருணைக் கடலாக விளங்குகிறான் விளக்குவதோடு, ''புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை அகத்துறுப் பெல்லாம் பண்பிலவர்க்கு'' (குறள் 79) என்பதனால் பின்பற்றி,

"எல்லா நலமும் இருந்தாலும் இன்கருணை
இல்லார் வழி சிறிதும் இல்லாரே – கொல்லாமை
ஒன்றுடையார் யாவும் உடையார் எனவுரைக்கும்
நன்னுடையார் தம் அடிமை நாம்" (20)

என மக்களுக்குச் சிவகாருண்யம் இன்றியமையாதது என வலியுறுத்துகிறது. நீதிநெறி என்னும் அடுத்த பகுதியில் உயிர்களுக்கு உலகில் இன்ப துன்பங்கள் ஏற்படுகின்ற காரணத்தை முற்றிலும் நம்மால் உணரமுடியாவிடினும் இறைவனின் திருவருள் துணைகொண்டு நன்மையடையலாம் என்கிறார். நாட்டிற்கு நல்ல அரசாட்சி அமைவது கூடக் கடவுள் சித்தமே என்பது தண்டபாணி சுவாமிகள் கருத்து.

"நற்கோ உதவி நலம்தீது காட்டுமவன்
றன்கோபம் இன்ன தகைத்துஎன்று – சிற்கோலம்
கண்டோர் அறிவதன்றி காசினியில் காண்பவர் ஆர்
விண்டோய் நெறிகாட்டும் மெய்" (27)

என்பது வண்ணச்சரபர் வாய்மொழி.

சத்தியம் என்னும் சொல் எந்நாளும் அழியாத ஒன்று என்னும் பொருளையும் வாய்மை என்னும் பொருளையும் தரும். இப்பெயரில் அமைந்துள்ள நான்காவது அதிகாரத்தில் இந்த இருவகைப் பொருளும் சிந்திக்கப்பட்டுள்ளன. தத்துவவாதிகள் முதல் பொருளே மிக உயர்வானது என கூறிய போதிலும் மெய்மை என்பதும் தள்ளாமல் கொள்ளத்தக்கது என்பதை,

"யாவருக்கும் கோஆம் இறைஒருவன் அன்றிமற்றோர்
சாவர்எனக் கூறுகின்ற சத்தியம் போல் – ஈவதுஅற்ற
மன்னருக்கு தீங்கு வரும் எனலும் சத்தியமே
சின்னதல்ல மெய்சத் தியம்" (31)

எனக் காட்டுகிறார். சத்தியத்தைக் காந்தியடிகள் போலவே தண்டபாணி சுவாமிகளும் மிக வலியுறுத்திக் கூறுவதை,

"சத்தியத்துக்கு அஞ்சும் தவத்தில் சிறந்தோருக்கே
நித்தியன்பால் பேசும் நினைவுஉண்டாம்; நத்தியவாறு
எல்லாம் கிடைக்கும்; எளிமைப் படவிளையும்;
பொல்லா வினையனைத்தும் போம்" (37)

என்பதால் அறிய முடிகிறது.

பொது நூலின் ஐந்தாவது அதிகாரம் சிந்து என்பதாகும். செயற்கரும் செயல்களை மிக எளிதில் செய்யவல்ல சித்தர்கள் இக்காலத்திலும் ஆங்காங்கு உலகினர்தம் கண்ணுக்குத் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப் படுகிறோம். மக்கள் தாங்கொணாத்துயர்களால் வாடிக்கொண்டிருக்கும்போது அவற்றை நீக்கும் ஆற்றல் பெற்றவர்கள் ஆவன செய்யாமல் வீணே மறைந்து திரிதல் தவறு என்பது தண்டபாணி சுவாமிகளின் கொள்கை. இதனைக் கருத்தில் கொண்டே இந்நூலில்

''உலகிற்கு உதவும்வழி உள்ளார் உதவாது
இலகும் உடலோடு இருந்தால் – அலகையினும்
தீயர்என தேர்ந்துதினம் செப்பும் திறல் அளித்த
நாயகன்சித் தொன்றே நலம்'' (42)

என சற்றுக் கடுமையாகவே கூறுகிறார்.

அடுத்ததாகிய ஞானம் என்னும் அதிகாரத்தில் ஓர் உயிருக்கு இறைவன்மாட்டு அன்பு மிகுந்து கனிந்தபிறகு உலகியல் இன்பங்களின் மேல் உவர்ப்பு தோன்றி, அந்த ஆசையற்ற நிலையும் முதிர்ந்தால்தான் செயற்கரிய செயலை செய்விக்கும் மெய்யறிவு பிறக்கும் என்கிறார். எனவே ஞானத்திற்கு பக்தி ஒன்றுதான் தவறாத வழி என தெளிவாகக் காட்டுகிறார்.

''பத்திமுற்றி வைராகப் பண்புஆம் அதுமுதிர்ந்தால்
சித்திதரு ஞானத் தெளிவுண்டாம் – முத்தி
வடிவாம் பொதுக்கடவுள் வண்மையே கூறும்
அடியாருக் கெய்தும் அது'' (51)

''தன்ஊன் பெக்கற்குத் தான்பெரிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்'' (குறள் 251)

என்னும் தமிழ்மறையை அப்படியே அடியொற்றி,

''தன்உடலாம் வீங்கத் தசை அருந்தும் தன்மையர்பால்
மன்னும்மெஞ் ஞானம் மருவாதே – என் உயிர்க்குச்
சேதம் வரினும்ஒன்றைச் செற்றுஅருந்தேன் என்றுஉரைக்கும்
மாதவர்பால் தானே வரும்'' (55)

என உறுதியாகக் கூறுகிறார். ஞானத்தின் நிறைவை,

''தேகம்அன்று நான்என்னச் செப்பும் தெளிவும்எம்கோன்
ஏகன்அன்றி வேறுஇல்லை என்னும் அன்பும் – போகம்
வெறுக்கும் திறல்உணர்வும் மெய்யும்உள்ள ஞானம்
பொறுக்கும் நிறைவாம் புகழ்'' (60)

என அடையாளம் காட்டுகிறார்.

''அறவினை யாதுஎனில் கொல்லாமை'' என்றும், ''ஒன்றாக நல்லது கொல்லாமை'' என்னும் ''சான்றோர்க்குக் கொன்றுஆகும் ஆக்கம் கடை'' என்றும் (குறள் 321, 323, 328) வலியுறுத்துவதே பொதுநூலின் ஏழாவது பகுதியாகிய அறம் என்னும் அதிகாரம் ஆகும். முதல் வெண்பா

''கொல்லாமை, நல்லூண், கொடுப்பது அறிந்துஈகை,
எல்லாம் இறையுடைமை என்கை, கோள் – சொல்லாமை,
இன்னல் ஒருவர்க்கு இயற்றாமை, எள்ளாமை
அன்ன பிறவும் ஆம்'' (61)

எனக் கொல்லாமையை முதன்மையானதாகவும், தலைமையான தாகவும் உடைய அறங்களை அறிமுகப்படுத்துகிறது. என்றாலும் இந்த அதிகாரம் கொல்லாமையையே பேரறமாக வலியுறுத்து வதைக் காணலாம்.

''கொல்லாமை இன்றிக் குறிக்கும் தருமங்கள்
எல்லாம் புரிந்திடினும் எய்தாதே'' (65)

''எல்லாத் தவமும் இறைவணக்கம் என்பதுபோல்
கொல்லாமை யேஅறத்தின் கூடுஎன்று – சொல்லாத
நூலோன் எவன்எனினும் நுண்ணியன்அன்று என்றுநல்ல
மேலோர்தம் வாய்உரைக்கு மே'' (67)

''மற்றோர் உடல்அருந்தும் மானிடர்க்கு மானமில்லை;
கற்றோர் உறவுஇல்லை; கல்வி இல்லை; – பெற்றோரைப்
போற்றல் வினவும் புகழ்இல்லை; புண்ணியத்தின்
ஏற்றம்இல்லை; வீடும் இலை'' (68)

''எல்லாம் உடையான் இரக்கம்இலான் ஆனாலும்
கொல்லாமை ஒன்றைக் குறித்தொழுக – வல்லாரை
நான்இகழேன்; என்அளவும் நல்லறம்அது; அன்றிஅதன்
மேல்நிலைஉண்டு என்றுசொல்லேன் மெய்'' (70)

என்பன வண்ணச்சரபரின் வாய்மொழிகள்.

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. வறுமையுற்றவர்க்கு, "பிறந்த குலம்மாயும்; பேராண்மை மாயும்; சிறந்த தம் கல்வியும் மாயும்; (நாலடி 275) என்பது உண்மை.

"வடுஇலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்;
நடுவணது எய்தாதான் எய்தும் உலைப்பெய்து
அடுவது போலும் துயர்" (நாலடி 114)

"முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்"
(கோவையார் 332)

என்பன முந்தையோர் கண்ட முறை.

தண்டபாணி சுவாமிகளும் பொதுநூலின் எட்டாவது ஆகிய பொருள் என்னும் அதிகாரத்தில் இதை வழிமொழிபவராக,

"வேந்தன்கைக் கோற்கும் விறல்வீரர் வெம்போர்க்கும்
சாந்தம்மிகுந்து ஓங்கும் தவத்தினுக்கும் – ஏந்துமுலை
மாதர்நல்லார் இன்ப வளமைக்கும் மற்றுஎவைக்கும்
போதநலம் காட்டும் பொருள்" (71)

எனவும்,

"கற்றோர் துறந்தோர்போல் காண நடிப்போரும்
சற்றேனும் பொன்னைத் தணவாரேல் – மற்றுஆர்
வெறுக்கவல்லார்? ஏனையரில் வேண்டுநரும் உண்டே
பொறுக்கும் புகழ்ச்சிப் பொருட்டு" (78)

எனவும் கூறுகிறார்.

அடுத்தாகிய இன்பம் என்னும் அதிகாரம் அகப்பொருள் போல ஆக்கப்பட்டுள்ளது. இறையருளைப் பெற ஏங்கும் உயிரை அகப்பொருள் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் உருவகிக்கும் இந்திய இலக்கிய மரபு இங்கு கைக்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் இடம்பெற்றுள்ள முதல் ஐந்து வெண்பாக்கள் தலைவி கூற்றாகும். தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவாற்றாது தோழிபாற் புலம்பியதாக அமைந்தவை இவை. இலக்கண

நூலார் இத்தகைய பாடல்களை பெண்பாற் கைக்கிளை, கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் என்பர்.

"அன்றே எனைத்தனதுஎன்று ஆண்டுகொண்ட என்கணவன்
என்றே எனை அணைவான்? என்தோழி; – குன்றேஎன்று
ஓங்கும் முலைத்துயரும், ஊர்அலரும், தாய்மொழியும்
தாங்குதற்கு நானோ தரம்" (81)

அடுத்த மூன்று கவிகள் தலைவன் வேண்டல் என்னும் துறையில் அமைந்தன ஆகும்.

"உன்னைக் கருதி உடல்மெலிந்தேன்; உன்னைநம்பும்
என்னைச் சிறிதும் இகழாதே; – தன்னை
அறியாத பக்குவமும் அல்லவே! ஆசைச்
செறிவால் வருந்துகின்றேன் தீர்" (87)

ஒன்பதாவது வெண்பா கவிக்கூற்றாகக் காதல் இன்பம் சொல்லித் தெளிவிக்க முடியாதது என்கிறது.

இந்த அதிகாரத்தின் ஈற்றுச் செய்யுளில் உலக இன்பங்களை விரும்பித் துய்க்க வல்லார்க்குப் பலவிதமான துன்பங்களும் நீங்குமேனும் இறையருள் பெறுதலே பேரின்பம் என்கிறார்.

"இன்பம் பலவும்வலிது எய்தும்நலம் தேர்ந்தோர்க்குத்
துன்பம் அனைத்தும் தொலையுமே – அன்பர்
இருள்நலியச் செய்துஉவக்கும் எம்பிரான் ஈயும்
அருள்நலமே பேரி ன்பம் ஆம்" (90)

இப்பனுவலில் இறுதி அதிகாரம் வீட்டுநெறி என்று பெயரிடப்பட்டுள்ளது. "வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின் துறவறமாகிய காரணவகையால் கூறப்படுவதல்லது இலக்கண வகையான் கூறப்படாமையின்" என்றும் பரிமேலழகரைப் பின்பற்றி(குறள்.அறம். உரைப்பாயிரம்) வீடு என்னாமல் வீட்டுநெறி எனப்பட்டது. முந்தைய அதிகாரத் தில் சிற்றின்பமே மொழிகளால் விளக்க இயலாதது என்றவர், பேரின்பமும் அத்தகையதே எனப் பெயராலேயே உணர்த்து கிறார்.

"தெய்வம்நன்றே என்றும் தெளிவரக் கற்றுணர்ந்து,
செய்வ தறிந்து, செயம்நாடி, – பெய்வளையார்
மாய வலைகடந்து மாதவத்தைப் பற்றிநிற்கும்
நேயமேவீட்டு நெறி" (91)

"நன்னூல் விதிஉணர்ந்து, நன்றுஇயற்றி, ஞானம்இல்லாப்
புன்னூல் விருப்பம் முற்றும் போக்குவரத்து, - பன்னூலும்
தெய்வமே தஞ்சம்எனச் செப்பும்எனத் தேர்ந்துஅடங்கி
உய்வதே நல்ல உணர்வு" (92)

"கொல்லாமை ஒன்றே குறிஎன்று அதைக்குறித்து
நில்லார் உறவுஅனைத்தும் நீக்கிஅப்பால் - எல்லாம்
உடையான் ஒருவன்எனும் உண்மைகண்டு வாழ்வோர்க்கு
அடையாளம் ஈவான் அவன்" (94)

என்பன இவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ள செய்திகளாம்.

இதுகாறும் நோக்கியவற்றால் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அவர்களால் இயற்றப்பெற்ற பொதுநூல் என்னும் பனுவல் ஆன்மீகக் கண்ணோட்டத்தை முதன்மையாகக் கொண்டதோர் நீதி நூல் என்பதும், குறிப்பிட்ட எந்தச் சமயத்தையும் சாராமல் பொதுவான கருத்துக்களைக் கூறுவது என்பதும் இதிலுள்ள பல கருத்துக்கள் நம் நாட்டிற்கு இன்றைய சூழ்நிலையில் மிக இன்றியமையாது வேண்டப்படுவன என்பதும் தெரிய வருகின்றன.

இவ்வளவு அரிய நூல் தமிழ் ஆர்வலர்களுக்குக் கிடைக்காமல் இருப்பது பெருங்குறை. இறைவன் திருவருளால் நான்கு நூல் முழுவதும் தெளிவான விரிவுரையுடன் நல்ல பதிப்பாக வெளி வந்தால் தமிழ் உலகிற்குப் புதுவரவாகும்.

செந்தினாயகச் சதகம்

அ. பாஸ்கர பால் பாண்டியன்

முன்னுரை

அறுபடை வீடுகளுள் ஒன்றான திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் திருமுருகனின் பெருமையினைப் பாடும் சதக இலக்கியம் செந்தினாயகச்சதகம். இதனைக் காப்புச் செய்யுளில் நூலாசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், "தந்தி யம்பரன் நயனச் சேய்மகிழ் செந்தி னாயகச் சதகம்" என்கிறார். செந்தினாயகம் என்ற பெயர் முருகனைக் குறிக்கிறது. செந்தில் என்று அழைக்கப்படும் திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் நாயகனாகிய முருகன் என்று பொருள்படும். பக்திக்கு வித்திட்டு நல்வாழ்வுக்கு வழிகாட்டும் நூல் இது.

நூலின் அமைப்பு

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தான் பாடிய 'திருச் செந்திற் பிரபந்தம்' என்னும் நூலில் இச்சதக நூலைச் சேர்த்துள்ளார். நூற்பொருளை நுவலும் நூறு பாடல்கள், காப்புச் செய்யுள் ஒன்று, நூற்பயன் கூறும் செய்யுள் ஒன்று ஆகமொத்தம் நூற்றிரண்டு பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்கள் எழுசீர் விருத்தத்தால் ஆனவை.

பாடல்கள் புதுமையான முறையில் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலிலும் முதலிரு அடிகளில் புலவரின் வேண்டுதல் இடம்பெறுகிறது. மூன்றாம் அடியில் முருகனது சிறப்புக்கள் கூறப்படுகின்றன. நான்காம் அடியில் சிவன் அல்லது சக்தியின் பெருமை கூறப்பட்டு இவர்களது 'மைந்தனே செந்தினாயகனே' என்று நிறைவு செய்யப்படுகிறது. முதல் பாடலில் சிவன் மைந்தனே என்றால் அடுத்த பாடலில் சக்தி மைந்தனே என்று கூறப்படுகிறது. நான்காம் அடி இவ்வாறு மாறிமாறி வருகிறது. ஒன்றிரண்டு பாடல்கள் தவிரப் பெரும்பான்மையான பாடல்களில் இம்முறையே பின்பற்றப்பட்டுள்ளன. மண்டல

ச்தகங்கள், நீதிச் சதகங்கள், துதிச் சதகங்கள், கடவுட்ச தகங்கள் என்று சதக நூல்களை நான்கு வகைப்படுத்தலாம் என்பர். முருகனைப் பற்றிய துதிப் பாடல்களே இந்நூலில் இடம் பெற்றுள்ளதால் இதனைச் துதிச்சதகம் எனலாம். சிவன், சக்தி, முருகன், திருமால், வள்ளி, தெய்வயானை ஆகியோர் பற்றிய செய்திகளும் முருகனது அருளும் பெரிதும் பேசப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களிலும் புராணங்களிலும் பெரிதும் தோய்ந்தவர் நூலாசிரியர் தண்டபாணி சுவாமிகள் என்பது நூலால் தெரிய வருகிறது.

திருமுருகன் சிறப்புக்கள்

மக்கள், மன்னர், புலவர், கடவுள் ஆகியோர்க்கு அருள் வழங்கியவன் முருகன். அவனது அருட்செயல்களும் அவனது அழகிய தோற்றப் பொலிவும் நூலில் விளக்கப்பட்டுள்ளன.

மன்னர்க்கு அருள்

மதுரை மன்னன் உக்கிர பாண்டியனது மகள் குதிரை முகம் கொண்டவள். திருச்செந்தூர் வந்து முருகனை வழிபட்டாள். குதிரைமுகம் நீங்கியது. அழகான தாமரை மலர்போன்ற முகத்தைப் பெற்றாள்.

"கழைமலி பழன மதுரைமா நகர்க்கோன்
கன்னிதன் கற்கிமா முகம்போய்
உழைவிழிக் கமல மலர்நிகர் வதனம்
உறச்செயும் உண்மை பொய்த்திடுமோ"

(பா. 72:1-2)

என்று இச்செய்தியைக் குறிப்பிடுகிறார் தண்டபாணி சுவாமிகள்.

"கோடகத்தின் முகமொளித்துக் குறுமுயலின் மறுவொழித்த
நீடுமுவா மதிபோல நிறைவு பெறுமுகம்"

என்று இதனைத் திருச்செந்தூர்த் தலபுராணம் கூறுகிறது. உக்கிர பாண்டியன் காலத்தில் கடல் ஊருக்குள் புகுந்தது. பாண்டிய நாட்டை அழிக்கவந்த கடலைத் தனது வேல்விட்டு வற்றச் செய்தான் முருகப்பெருமான் என்னும் செய்தியும் நூலில் இடம் பெற்றுள்ளது.

மக்களுக்கு அருள்

திருச்செந்தூரில் கோபுரத் திருப்பணி நடந்து கொண்டு இருந்தது. திருப்பணி செய்த பெரியார் கூலியாட்களுக்குத் திருநீறு மட்டுமே கொடுத்தார். முருகன் அருளால் கூலியாட்கள் செய்த வேலைக்கு ஏற்பத் திருநீறு பணமாக மாறியது. மீனவப் பெண் ஒருத்திக்குப் பழநியில் அருள்செய்த வரலாறும் நூலில் கூறப் பெற்றுள்ளது. பழநி வைகாபுரிக்குளக்கரையில் மீன் குவியலாகக் குவிக்கப்பட்டிருந்தது. முருகன் மாறுவேடத்தில் வந்து ஒருகூடை மீனை அள்ளிக்கொண்டு ஓடினார். காவலாளி விரட்டிச் சென்று அடித்தான். கூடையைக் கொடுத்துவிட்டார் முருகன். ஒவ்வொரு அடிக்கும் அவனுக்குப் பொற்கங்கணம் கிடைக்கச் செய்தார். இவ்வரலாறு,

''கங்கணம் புனையப் புரிந்தநின் கருணைக்
கடலினைக் கருதிலேன் கொல்லோ'' (73:2)

என்று கூறப் பெற்றுள்ளது.

புலவர்க்கு அருள்

குதிரைத் தலையினை உடைய கற்கிமுகி என்னும் பூதம் நக்கீரரைப் பிடித்துச் சிறை வைத்துவிட்டது. நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாட முருகன் அருளால் சிறையில் இருந்த நக்கீரரும் பிறரும் உயிர் பிழைத்தனர்.

''ஈனமார் குதிரைத் தலைகொளும் அலகைக்கு
இளைத்திடைந் திறைஞ்சிய புலவன்
மானவேற் படையால் உய்ந்தனன் எனஇம்
மகிதலம் பகர்வது வம்போ'' (57 : 1-2)

என்று இச்செய்தி நூலில் இடம் பெற்றுள்ளது.

ஆறுமுகப்புலவர் என்பவர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். திருச்செந்தூர் முருகன் முன்னால் நின்று பாடினார். மற்ற புலவர்கள் நீர் தாழ்த்தப்பட்டவர் முருகன் பின்னால் சென்று பாடும் என்றனர். புலவரும் அவ்வாறே முருகன் பின்னால் சென்று பாடினார். முருகனும் அவர் பாடல் கேட்டுப் பின்னால் திரும்பிக் கொண்டான் என்று நூல் குறிப்பிடுகிறது

''உனைமிக விரும்பித் துதிக்குமோர் புலவன்
உறுகணுற்று ஊரவர் தம்மாற்
பினவைரத் திரும்பிப்பார்த்து அவன் புகழைப்
பெருக்கிய பெற்யெங்கு ஒளித்தாய்'' (69:1-2)

தமிழ்ப் பெரும்புலவராகிய அகத்தியர்க்கு முருகன் அருளிய செய்தி சில இடங்களில் குறிக்கப் பெற்றுள்ளன.

''செந்தமிழ்க் குறுமா முனிக்கருள் புலமைச்
சிவகுரு நாதனாம் சிறுவா'' (16:3)

''பொதியமா முனிவர்க் கருளிய கரத்தாய்'' (49:3)

''நறுந்தமிழ்க் குறுமுனிக்கினியாய்'' (3:3)

முருகப்பெருமான் தமிழ்மீதும் தமிழ்ப் புலவர்கள் மீதும் பெரிதும் அன்பு கொண்டவர் என்பது தெரிய வருகிறது. ''கழகமோர் மூன்றும் அறிந்த மெய்ப்புலவா'' என்றும் ''சபையொரு மூன்றினும் தழைத்தாய்'' என்றும் முருகன் முதல்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களிலும் இருந்து தமிழ் வளர்த்த செய்தி நூலில் கூறப் பெற்றுள்ளது. முருகன் தமிழ்ச் சங்கங்களில் உறுப்பினராக இருந்தார் என்று இறையனார் அகப்பொருள் உரை கூறுவது எண்ணத்தக்கது.

தமிழறிவு கைவரப் பெற்ற தமிழ்க்கடவுள் முருகன். புலமையை முழுதுமாக உணர்ந்தவர். கலைத்துறைகள் அத்தனையும் கற்றுத் தேர்ந்தவர். திருமகள் வேண்டிக்கொள்ளக் கலை முழுவதையும் கற்றுத்தேர்ந்து வியன்புகழ் படைத்தவர்.

''முழுதுணர் புலமைக் குருபர முருகா'' (33:3)

''கலைக்குழு முழுதும் உணர்ந்தமெய்ப் புலவா'' (6:3)

''வெண்டிரு இறைஞ்சக் கலைமுழு துணர்ந்து
வியன்புகழ் பொறுத்தவித் தகனே'' (55:3)

தீயவர்க்கும் அருள்

தீயவர்களைக்கூட ஆட்கொண்டவன் முருகன். தன்னைத் திட்டுவார்க்குக்கூட அருள் கொடுக்கும் வள்ளல் அவன்.

''தீதுகொண் டவருந் திருவருள் கொள்ளச்
செயத்தகு சிவகுரு பரனே'' (52:1)

"திட்டுவார் தமக்குந் திருவருள் வழங்கும்
தெய்வமாஞ் சிவகுரு பரனே" (59:3)

என முருகப்பெருமானது தலைசிறந்த இப்பண்பினைப் பாடுகிறார் தண்டபாணி சுவாமிகள். கொடுமைக்காரனான சூரனைக்கூட மயிலாகவும் சேவலாகவும் மாற்றி ஆட்கொண்ட அருள் உள்ளத்தைக் கந்தபுராணம் காட்டுகிறது. தீயவரே யானாலும் குமரவேள் திருமுன் உற்றால் தூயவர் ஆகி மேல்கதி அடைவார்கள் என்பது கச்சியப்பரது கருத்து.

திட்டுவார்க்கும் அருள்காட்டுபவன் முருகன் என்பதைக் கந்தர் அலங்காரம்

"மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன்" என்கிறது.

கடவுளர்க்கு அருள்

பிரமன் ஆணவம் கொண்டு முருகனை மதிக்காமல் சென்றான். இதையறிந்த முருகன் பிரமனைச் சிறையில் அடைத்தான். பின்னர் சிவபெருமான் வேண்டிக் கொள்ளப் பிரமனைச் சிறையில் இருந்து விடுதலை செய்து பிரணவ மந்திரத்தை அவனுக்கு உபதேசித்தார். இச்செய்தி,

"போதனைப் புடைத்துச் சிறையிலிட் டளவில்
புவனமும் புதுக்கிய புனிதா" (42:3)

என்று கூறப் பெற்றுள்ளது. அமரர் படைக்குத் தலைமையேற்றுச் சூரன் முதலிய அரக்கர்களை அழித்து வானவர்கட்கு அருளை வாரி வழங்கியவர் முருகன். "அமரர் சேனையின் அதிபா" என்று முருகனைத் தண்டபாணி சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

சூரன், தாருகன், சிங்கமுகன், கிரவுஞ்சன் ஆகிய அரக்கர்களை அழித்த முருகனது வீரம் நூலில் பல இடங்களில் பேசப்படுகிறது.

"தானவக் குலத்துச் சூர்முதற் கொடியோர்
தமையெலாம் தகித்த வேல்தலைவா" (19:3)

"கூனிய தவளமருப் பின்வெங் களிற்றைக்
குன்றொடு தடிந்த வேற்குகனே" (71:3)

"தீயையு முறுக்குந் திறற்கரி முகனைச்
சிங்கனைச் சூரனைச் செற்றாய்" (98: 1–2)

"கோலிய கடலுங் குன்றமும் மரவும்
குலைவுறக் குறித்துவேல் விடுத்தாய்" (29:3)

முருகனும் விநாயகரும்

"பேழையிற் றிகழும் வயிறுடைக் களிற்றின்
பின்பிறந் துயர்ந்த பீடுடையாய்" (56:3)

"தரவுசெவிக் களிற்று மாமுகற் கிளைய தம்பிரான்" (72:3)

என்று முருகன் விநாயகப் பெருமானின் பின்பிறந்தவர் என்பது குறிப்பிடப் பெற்றுள்ளது. நாரதர் கொண்டு வந்த பழத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விநாயகரிடம் கோபம் கொண்டு உலகம் முழுவதும் வலம் வந்தவர் முருகன் என்னும் செய்தியும் நூலில் இடம் பெற்றுள்ளது.

"களபமா முகத்துக் கடவுளோ டிகலிக்
கடலுடைப் புவிவலம் வந்தாய்" (28:3)

"மயிலிவர்ந்த துலகை வளைத்தொரு நொடியில்
மாங்கனி நிமித்தமுன் வந்தாய்" (20:3)

முருகனும் தெய்வயானையும் வள்ளியும்

திலகமணிந்த, வாள் போன்ற நெற்றியை உடைய வள்ளி, தெய்வயானை இருவர்க்கும் கணவன் முருகன்.

"திலகவா ணுதலார் இருவர் பாங்கமர
சிகிமிசை எங்கணும் திரிவாய்" (31:3)

வளையல் அணிந்த தெய்வயானையின் கணவன் முருகன். தெய்வயானை குஞ்சரி என்று குறிப்பிடப்படுகிறாள்.

"கோல்வளைக் கரத்துக் குஞ்சரி பாகா" (51:3)

"குஞ்சரிக் கினிய கணவனே" (30:3)

வள்ளி பற்றிப் பல பாடல்கள் பாடுகின்றன. தேனும் தினை மாவும் முருகனுக்கு வள்ளி கொடுத்தது, வள்ளிக்காக முருகன் தினைப்புனம் முழுவதும் சுற்றியது, போன்ற செய்திகள் கூறப் பெற்றுள்ளன.

"கிஞ்சுகப் பதத்துக் குறமகள் பாகா" (48:3)

"காதளவோடும் கரியகட் குறத்தி கணவனே" (47:3)

"கானவர் வளர்த்த கருங்குயி லனைய
கன்னிகை வசந்தன் நீ என்பார்" (19:1)

என்று முருகனின் மனைவி வள்ளியாகிய குறமகள் என்பது கூறப்படுகிறது. குறத்தி வள்ளிக்காகத் தினைப்புனம் முழுவதும் முருகன் திரிந்த செய்தி

"தெள்ளமிழ் துறழ்சொற் குறக்கொடி மருவும்
தினைப்புன முழுவதினுந் திரிந்தாய்" (4:3)

என்று பாடப்பெற்றுள்ளது.

கிளி போன்ற மொழிபேசும் குறத்தியாகிய வள்ளி, காந்தள் போன்ற தனது கரங்களால் தேனையும் தினைமாவையும் பிசைந்து முருகனுக்குக் கொடுக்க அதை இனிதாக உண்டான் இந்த அன்புக்காட்சி அழகாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

"கோமளக் குறத்தி கரத்தினாற் பிசைந்து
கொடுத்தமா வருந்திய குழகா" (35:3)

"காந்தளின் மலர்நேர் கரத்தினாற் குறத்தி
கள்ளுடன் பிசைந்தமா அயின்றாய்" (68:3)

"கிழங்குதேன் தினைமா உணக்கொடுத் துருக்கும்
கிளிமொழிக் குறமகள் கேள்வா" (49:4)

முருகனது தோற்றப்பொலிவு

வேற்படை, சேவற்கொடி, மயில் வாகனம் ஆகியவற்றை உடையவர் முருகன். "வேற்படையுடைக் குகனே" என்றும் "சுடர்வேல் விகிர்தனே" என்றும் வேற்படை உடையவன் முருகன் என்பது கூறப்படுகிறது. "குக்குடப் புட்கொடி கொண்டாய்" என்றும் "கூவிய பறவைக்கையனே" என்றும் சேவற்கொடி உடையவன் முருகன் என்பது கூறப்படுகிறது. "மயிலிவர் பரனே" என்றும் "மயிற்பரி உவந்த வானவனே" என்றும் மயிலை வாகனமாக உடையவன் முருகன் என்பது கூறப்படுகிறது.

"பன்னிரு கரத்தொரு பரனே" "பன்னிரண்டு தோட் செல்வா" என்றெல்லாம் பன்னிரண்டு கரங்கள் உடையவன்

முருகன் என்பது குறிப்பிடப்படுகிறது. "வயங்செழில் மலிந்த சண்முகனே" என்று ஆறுமுகம் படைத்தவன் என்பது குறிப்பிடப் பெற்றுள்ளது.

கடம்பமலர், நீலோற்பலமலர், வெட்சி, குரவு முதலிய மலர்களைச் சூடிக்கொண்டிருப்பவன் முருகன்.

"தேன்தொடைக் கடம்பும் புனலியும் குரவும்
செச்சையும் திகழ்ந்ததின் புயனே" (17:4)

"சீதளக் கடம்பும் செச்சையும் குரவும்
செறிந்தவர் திருவடிக் குமரா" (54:3)

செக்கச்சிவந்த செக்கர் வானம் போலவும், நெருப்பைப் போலவும், பவளம் போலவும் சிவந்த அழகான மேனியை உடையவன் அவன்.

"மாலையும் கனலும் பவளமும் கலந்த
வடிவுடைக் குருபரக் குகனே" (38:3)

சூரியர்களைப் போன்று மிகவும் ஒளிவீசும் தோள்வளை களை அணிந்தவர் முருகன் என்பது.

"எல்லினம் குடியுற் றிருந்தலே போலும்
சரிரண் டங்கதம் இசைத்தாய்" (39:3)

என்னும் வரிகளில் கூறப் பெற்றுள்ளது.

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பார்கள். "சேயோன் மேய மைவரை உலகமும்" என்கிறது தொல்காப்பியம். இதனை வலியுறுத்துமாறு பல இடங்களில் தண்டபாணி சுவாமிகள் முருகனையும் மலையையும் இணைத்துப் பாடியுள்ளார்.

"கல்லகம் தோறும்கமழ்தரு கமலக்
கழலுடைக் கந்தனே" (87:3)

"சிலம்பினந் தொறும்நடம் புரிவாய்" (32:3)

"நகத்திரள்தோறும் நடம்புரி பதத்தாய்" (44:4)

"சிலம்பினஞ் சிலம்பச் சிலம்புதோறாடிய சிறுவா" (77:3)

திருமுருகனும் திருஞானசம்பந்தரும்

திருஞானசம்பந்தரை முருகன் அவதாரம் என்று கருதுவார்கள். திருஞானசம்பந்தர் செயல்களை முருகன் செயல்

களாகவே தண்டபாணி சுவாமிகள் பாடியிருப்பது எண்ணத் தக்கது. சமணர்களை வாதில் வென்றார் திருஞானசம்பந்தர். அவர் வைகையிலிட்ட ஏடு நீரை எதிர்த்து நீந்தி வைகைக் கரையில் ஏறியது. இச்செயல் "வாதிடும் சமணர் குலமறக் களைவான் வையையே டெதிர்செல விடுத்தாய்" (14:3) என்று முருகன் செயலாகவே குறிக்கப்பட்டுள்ளது.

வேண்டுதல்

தண்டபாணி சுவாமிகள் முருகப்பெருமானிடம் சில வேண்டுதல்களைத் தெரிவிக்கிறார். உலகத்தையே வலம்வரும் மன்னராக இருந்தாலும் முருகா உன்னை அவர்கள் நம்பா விட்டால் அவர்கள் எனக்குக் கொசு போன்றவர்கள் என்கிறார். இது அவரது பக்தி உறுதிப்பாட்டை இயம்புகிறது. ஆன்மீகச் செல்வர்கள், அறிவுடைய புலவர்கள் சபையில் நான் போற்றப் படவேண்டும். நான்கு சைவக்குரவர் போன்று நல்லகுரு எனக்குக் கிடைக்கவேண்டும். அகத்தியர்க்கு அருள்காட்டிய உனது தாமரைப் பாதங்களை எனது தலையில் வைக்க வேண்டும் என்று தனது விருப்பங்களைத் தெரிவிக்கிறார்.

அருணகிரியார் அவதாரம்

அருணகிரியாரின் அவதாரம் என்று தண்டபாணி சுவாமி களைக் கருதுவர். தண்டபாணி சுவாமிகளின் கனவில் தோன்றி நீர் அருணகிரியின் அவதாரம் என்று முருகப்பெருமானே கூறினாராம். இப்படியொரு பாடல் நூலில் அமைந்துள்ளமை இதை உறுதிப்படுத்துகிறது.

"கள்ளையும் பழித்துக் கனிதமிழ் மதுரக்
கவித்திருப் புகழ்மிகக் கழறும்
இள்ளையென் றெனைப்பல் கனவில்நீ வலிதிற்
இளத்தியும் கெடுத்தனை யந்தோ" (2:1-2)

நிறைவு

செந்தினாயகச் சதகம் புராணக் குறிப்புக்கள் நிறைந்த பெட்டகம் எனலாம். கடவுளர்களின் அருட்செயல்கள் நிறைந்த கருவூலம் எனலாம். இந்நூல் தண்டபாணி சுவாமிகளின் பேரறிவைப் புலப்படுத்தவல்ல சான்றாகத் திகழ்கிறது.

அறுவகை இலக்கணங்கூறும் சமஸ்கிருதச் சந்தி

ந. புவனேஸ்வரி

இலக்கணம் பலவகை உட்கூறுகளை உடையது. அவற்றுள் புணர்ச்சி முதன்மையாய் வைத்து எண்ணத் தக்கதாகும் இப் புணர்ச்சி சந்தி என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப் பெறுகிறது. புணர்ச்சி சொல்லமைவில் ஏற்படும் ஒழுங்குகளை வரையறை செய்கிறது. இரு சொற்களுக்கு இடையே அல்லது சொல்லுறுப்பு களுக்கு இடையே ஏற்படும் இணைப்பே புணர்ச்சி என்ற பெயரால் குறிப்பிடப் பெறுகிறது. இது மொழிக்கு மொழி மாறுபடும் எனினும் தொல்காப்பியர் காலந்தொட்டுச் சமஸ்கிருத சொற்பிரயோகங்கள் தமிழில் வழங்கி வருவதால் ஒரு சில இடங்களில் சமஸ்கிருத சந்திகளை அறிதலும், தமிழ் இலக்கணத்தில் ஒரு சிறு கூறாக விளங்குகிறது.

தொடர்ந்து ஏற்பட்ட சமஸ்கிருதப் பயிற்சியாலும், இடையில் ஏற்பட்ட சமஸ்கிருத உயர்ச்சியாலும் தமிழில் பல சமஸ்கிருதச் சொற்கள் கலந்தன. இத்தகைய கலப்பினை திரு. சு. இராசாராம் அவர்கள், 'இடைக்காலத்தில் பொதுவான இந்திய மரபுக் கூறுகளுள் ஒன்றாக சமஸ்கிருத மொழி இருந்தது. அரசியல், சமூகம், பண்பாடு, இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றில் இந்தியப் பொதுமை நிறுவப்பட்ட காலகட்டத்தில் உயர்தனி மொழியாக உயர்ந்தது, இந்திய மொழிகளுள் தமிழ் மட்டுமே இருப்பினும் இப்போராட்ட காலத்தில் சமஸ்கிருத மொழியின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் காலம் விதித்தாகும்' என்று கூறுகிறார். இத்தகைய சமஸ்கிருத மொழி ஆதிக்கத்தால் தமிழ்ப்புலவர்கட்கு மயக்கம் ஏற்பட்டது. பல சமஸ்கிருதச் சொற்களைத் தமிழென்றும், தமிழ்ச் சொற்களை சமஸ்கிருதச் சொற்களென்றும் மயங்கினர். இத்தகையதொரு கால கட்டத்தில் 'அறுவகை இலக்கணம்' தோன்றியது. இவ் விலக்கணத்தின் ஆசிரியர் தண்டபாணி சுவாமிகள், தம் நூலின்

எழுத்திலக்கணப் புணரியல்பில் ஏழு நூற்பாக்களில் வடமொழி மரபில் அமையும் சொற்புணர்ச்சிகளை விளக்குகிறார். இவை யாவும் புறச்சந்திகளாகவே (External Sandhi) அமைந்துள்ளன. தண்டபாணி சுவாமிகள் கூறும் புணர்ச்சியை (1) தீர்க்க ஸந்தி (2) குண ஸந்தி (3) இயல்பு என சமஸ்கிருத மரபின்படி அமைத்துக் கொள்ளலாம்.

தீர்க்க சந்தி

தமிழில் உயிர் ஈறாய் நிற்க, வருமொழி முதலில் அதே உயிர் அல்லது அதன் நெட்டுயிர் அமையுமானால் உடம்படு மெய் தோன்ற வேண்டும். சமஸ்கிருத மொழியில் இவை நெட்டுயிராய் நீட்டி ஒலிக்கப்படும். இத்தகைய ஒலிப்பு முறை கொண்ட சந்தி தீர்க்க சந்தியாகும். இதனை சமஸ்கிருதத்தில் அக சவர்ண தீர்க. (akah Savarne dirgah) என்ற சூத்திரத்தின் மூலம் அறியலாம். இதனை சுவாமிகள்,

> அகரஆ காரம் அவ்வுயிர் மெய்களில்
> புணர்கால் இம்முறை யாகியும் பொலிதரும்
> நாகணை தராதரம் சிவாக்கினை எனல்போல்
> அன்றியும் பகர்வார் அவை நலமிலவே (158)

என்ற நூற்பாவில் கூறுகிறார். இந்நூற்பாவின் மூலம் உடம்படு மெய்யின்றி தீர்க்க சந்தியிலும் சொற்கள் புணரும். இச்சந்தியில் கூற வேண்டியதை உடம்படு மெய்யில் கூறுதல் கூடாது என விளக்குகிறார்.

தர + ஆதரம் → தராதரம்

இந்நூற்பாவில் குறிப்பிடும் நாகணை என்ற சொல் வடமொழி தமிழ் என்ற இரு சொற்கூட்டமாகும். எனவே அச்சொல்லை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமுற விளங்கவில்லை. இதற்கடுத்து முனீந்திரன் என்ற சொல்லையும் தீர்க்க சந்திக்கு உட்படுவதாக விளக்குகிறார். நிலைமொழி ஈற்று வேறுபாடு காரணமாக வேற்று நூற்பாவில் உரைத்தார். ஆனால் இதனைச் சமஸ்கிருதத்தில் pratyāhāra ak என்ற சுருக்க குறியீட்டால் தொகுத்து உரைப்பர்.

குணசந்தி

இரு வேறு வகைப்பட்ட உயிர் எழுத்துக்கள் கூடுதலால் 'குணசந்தி' என்று பெயர் பெற்றது. சமஸ்கிருதத்தில் குணசந்தி

யில் அகரம் மொழியீற்றிலமைய இகர, ஈகாரங்களை வருமொழி முதலில் ஏகாரமும், உகர, ஊகாரம் வரின் ஓகாரமும் தோன்றும். இதனைச் சமஸ்கிருதத்தில் அதேங்குணஹ (adēngunah) ஆத்குணஹ (ādgunah) என்ற சூத்திரத்தின் மூலமும் அறியலாம். சுவாமிகள் இக்குணசந்தியினை

'அகரஉயிர் மெய்யொடு இகர உகரம்
புணர்கால் அதன்ஏ ஓஆம் உதாரணம்
நரேந்திரன் பயோதரம் எனுமிரு பாற்றே' (159)

என விளக்குகிறார்.

நர + இந்திரன் → நரேந்திரன்.

இயல்பு

இரு சொற்கள் புணர்ச்சியில் எந்தவித மாறுபாடுகளுமின்றி இயல்பாய் அமையும் புணர்ச்சி இங்கு குறிப்பிடப் பெறுகிறது. இத்தகைய இயல்பினைச் சமஸ்கிருதத்தில் 'ப்ரக்ருதிபாவம்' (prakṛtibhāva) என்று குறிப்பர். ஆனால் சுவாமிகள் தமிழில் வழங்கப்பெறும் வடமொழிச் சொற்களை மாறுபடச் சொற் பிரிப்பு செய்ததால் ககரம் இடைத்தோன்றும் என்று குறிப்பிடு கிறார் (157, 161) வடமொழியில் ஹா, ஹோ ஆகிய ஒலிக் குறிப்புச் சொற்கள் இரட்டிக்கும் நிலையில் ஹாஹா என்றும் ஹோஹோவென்றும் அமைவன. தமிழ் மரபிற்கேற்ப இவை ஆகா என்றும் ஓகோ என்றும் ஒலிப்பன. சுவாமிகள் ஆ+ஆ→ஆகா என்றும் ஓ+ஓ→ஓகோ என்றும் புணர்ந்தன எனக் கருதுகிறார். இதேபோன்று முரகரி, அரகர என்பனவற்றைத் தமிழ்ச் சொல்லெனக் கொண்டு முர+அரி→முரகரி, அர+அர→அரகர என்று அகரம் ககரமாகும் என்கிறார். வடமொழி இயல்புப் புணர்ச்சியில் அமைவனவற்றை தமிழ்ப்படி சொற்பிரிப்பு செய்வதால் இத்தகைய மாறுபாடு நேர்ந்துள்ளது. மேற்கூறிய வகையேயன்றி ஒரு சில இடங்களில் வடமொழிச் சொற்கட்கும் யகர, வகரங்கள் தோன்றுமென்றும் (162) அருணை+புரி என்பன அருணாபுரி என ஆகுமென்றும் 165) குறிக்கிறார்.

முடிவுரை

பல சொற்கள் தற்பவமாயும், தற்சமமாயும் வடமொழி யினின்று தமிழில் இடம்பெற்றன. அவை தமிழில் பயன் படுத்தும் முறை பற்றி தமிழ் இலக்கணங்களான வீரசோழியம், பிரயோக விவேகம் ஆகியன குறிப்பிடுகின்றன. இவை ஒரு சார் சமஸ்கிருத இலக்கண மரபைச் சார்ந்திருந்தாலும் தமிழ் இலக்கண மரபில் வடமொழித் தாக்கத்தை உணர வாய்ப்பாகவும் அமைகின்றன. அத்தகைய மரபு நிலையில் வடமொழிக்குரிய தீர்க்க ஸந்தி, குண ஸந்தி ஆகியன அறுவகை இலக்கணத்தில் தமிழுக்குரியனவாய் கொள்ளப் பெற்றுள்ளன. சில சொற்கள் வடமொழிச் சொற்கள் என இனங்கண்டு பகுத்துணராதபடி தமிழ் வழக்கில் கலந்தமையால் சுவாமிகள் அவற்றைத் தமிழைச் சார்ந்த வேறு மரபு எனக் கருதிப் புதிய புணர்ச்சி வகையாகக் கொள்ள நேர்ந்தது. மேற்காணும் முடிபுகள் 19-ம் நூற்றாண்டின் மொழி நிலையை, மொழி வழக்காற்றைத் தெளிவுறக் காட்டுவதாய் அமைகின்றன.

புலவர் புராணத்தில் வீரசைவ சந்தான ஆசிரியர்

சு. மதியழகனார்

முன்னுரை

'புலவர் புராணம்' வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் அருளப் பெற்ற ஒப்புயர்வற்ற நூலாகும். இதன்கண் சங்கப் புலவர்கள், இடைக்காலப் புலவர்கள், பிற்காலப் புலவர்கள், எழுபத்திருவர் வரலாறு கூறப்படுகிறது. மூவாயிரத்திற்கும் மேற்பட்ட செய்யுட்களை உடையது. இஃது ஒருவாறு திருத்தொண்டர் புராணத்தில் தனி அடியார் அறுபத்து மூவர், தொகையடியார் ஒன்பதின்மர் ஆக எழுபத்திருவர் வரலாற்றை மூவாயிரத்திற்கும் மேற்பட்ட செய்யுட்களால் கூறப்படுதலை ஒத்திருக்கக் காணலாம்.

புலவர்கள் வரிசையில் அருளாளர்களையும், ஆச்சார்யார்களையும், சித்தர்களையும், யோகிகளையும், ஞானிகளையும், அடியார்களையுமாக ஆன்றோர்களையும் சான்றோர்களையும் இந்நூலுள் அடக்கிக் கூறியுள்ளமை கருதத்தக்கது. சைவ வைணவப் பாகுபாடில்லாமல் அவர்களைப் போற்றும் திறன் பாராட்டுதற்குரியது.

புலவர் புராணம், பொதுப்பாயிரம்-பொதுமைக் கடவுள், வழிபடு கடவுள், அபிமானக் கடவுள் வாழ்த்துப் பாக்களாகப் பல தெய்வத் துதிப்பாடல்களைக் கொண்டும், சிறப்புப் பாயிரம்-அவையடக்கம், நூற்பொருள், நூற்பிரயோகம், பெயரும் தலமும் நிமித்தமும், ஆதாரமும், ஓம்படைக்கிளவி, புலமை மரபு உரைக்கும் பாடலைக் கொண்டும் அமைந்துள்ளது. நூலாசிரியர் தம் பிறப்பிடமாகிய பாண்டி நாட்டு அமைந்த பொதிய மலை வளம் கூறுவான் பொதியாசலப் படலம் தொடங்கி இயல்கின்றார்.

வீரசைவம்

சைவம்-சிவ சம்பந்தமுடையது. 'சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்' என்பது அப்பர் திருவாக்கு. சிவலிங்கப் பெருமான் ஒருவரே பரம்பொருள். அவரை வழிபடு கின்ற அடியார் திருக்கூட்டச் சிறப்பு நுவலும் பெரியபுராணம் அவ்வடியார்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றது.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி,
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

'ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் எம்மால் விளம்பும் தகையதோ?'

இச்செய்யுட்களில் பயின்றுள்ள 'விறல், வீரம்' என்னும் சொற்கள், வைராக்கியம், 'உள்ள உறுதி' என்னும் பொருள் படுவனவாகும். பக்தி வைராக்கியம், ஞான வைராக்கியம் எனவும் வழங்கப்படும். பக்தியாவது, 'ஞானம் கனிந்த நலம்' ஆகும். இஃது வீரசைவர்களால் 'ஐந்தாம் பேறு' என்று வழங்கப்படும். இம்மையிலேயே முக்தி எய்துதல் வேண்டும் என்பதே வீரசைவர்களது இலட்சியமாகும். பேரூர் சாந்தலிங்க அடிகளார் அருளிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் என்னும் நூல்களில் 'வைராக்கியம்' என்னும் சொல் இப் பொருளில் ஆளப் பெற்றுள்ளமையைக் காண்க. அன்றியும் சைவாகமங்களுள் "வீராகமம்" என்ற ஒன்றும் உள்ளமையாலும் அறியப்படும். புலவர் புராணத்தும் 1436-ம் செய்யுள்

"அச்சைவன் அன்று முதல் அடல்வீராக மியாகி
மெய்ச்சைவச் சித்தாந்தர் வியந்திறைஞ்சும் வீறெய்தி".

என்று உரைப்பதும் ஈண்டு கருதப்படும்.

வீரசைவம் தமிழகத்திருந்தே கன்னடதேயம் முதலாகப் பரவி, ஒருகாலத்து உலகெங்கனும் விளங்கியிருந்தது என்பது அகழ்வாய்வுகளால் அறியக் கிடக்கின்றது. உலகத்துச் சமயங்களி லெல்லாம் மேலோங்கிய நிலையில் இருந்த வீரசைவம் இன்று

அருகியிருப்பது வருந்தத்தக்கது. எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளால் பண்டுபோல் வீரசைவம் எங்கணும் சிறந்து ஆன் மாக்கள் அனைத்தும் உய்யும் நாள் அணித்து என நம்புவோமாக.

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் உமாபதி சிவத்தின் வழி வந்தவரும், திருவாவடுதுறை ஆதீன ஸ்தாப கருமான நமச்சிவாய மூர்த்திகளின் இளைய சன்னிதானமாக அக்காலத்துத் திகழ்ந்தவர் சிவப்பிரகாச தேசிகர் ஆவார். அவரே பிற்காலத் தமிழகத்து வீரசைவ குரு முதல்வராகத் திகழும் பேறு பெற்றவராவார்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழகத்து வீரசைவம் உலகெங்கணும், பரவியிருந்தது என்பதனை முன்னரே கண்டோம். அஷ்டபந்தனத்தால் முழுதும் பந்திக்கப் பெற்ற ஆன்ம மூர்த்தமான இஷ்டலிங்கங்கள் (வீரசைவர்கள் உடலில் தரித்துக் கொள்வதற்குரிய சிவலிங்கங்கள்) உலகின் பல்வேறு இடங்களிலும் அகழ்வாய்வுகளின்போது ஏராளமாகக் கிடைத்து உள்ளது. இந்தியாவிலும் ஹரப்பா, மொகஞ்சதாரோ அகழ் வாய்வுகளிலும் இவ்வகைச் சிவலிங்கங்களே பெரிதும் காணப்படு கின்றன. இதனால் சிந்துவெளி நாகரிக காலத்திலும் வீரசைவ நெறியே பின்பற்றப்பட்டுள்ளமை தெரிகிறது என்பர். சர். ஜான் மார்சல் லெமூரியா கண்டத்து (குமரிக்கண்டம்) தொல் பழங் காலத்துக் குடிமக்களின் சமய நெறியாக வீரசைவமே இருந்து இருக்கிறது, என்பர் ஆராய்ச்சியாளர் ந. சி. கந்தையாப் பிள்ளை (ஆதாரம் – சிவன்) உலகத்துச் சமயங்களில் எல்லாம் மூத்ததும் சிறந்ததும் சைவ சித்தாந்தமே என்பர் மேலை நாட்டுத் தமிழ் அறிஞர் டாக்டர் ஜி. யு. போப்.

‘சுத்த சைவம் முற்றியதால் துடியாய வீரசைவத்
தெத்தனையோ பேர் புகுந்திட் டீடேறினாரென்பர்’
— (1434)

‘மானமலி வீரசைவ மார்க்கமே வலிதாம் என்
றீனமறக் கழுத்தினில் இலிங்கமதை அணிந்தானே’
— (1433)

‘அச்சைவன் அன்றுமுதல் அடல் வீரா கமியாகி,
மெய்ச்சைவ சித்தாந்தர் வியந்திறைஞ்சும் விறெய்தி’
— (1436)

'கைத்தலத்தும் மார்பகத்தும் கவின் தந்து கதிசேர்க்கும்
அத்தன் எனும் இட்டலிங்கத் தபிடேகமாலை முதல்'
— (1440)

'ஏகத்தவர்க்காகும் வேதாந்த சூடாமணியும் ஓர்மையில்
காகத்தின் இனமென்ன வாழ்வார் தம்வீராகமத்
துண்மையும்' — (1467)

'வேள்விப் பெரும்பகையான வீரசைவ சித்தாந்தக்
கேள்விட்டிடாத குருவாம் அவன் நூலில்' — (1483)

என வரும் புலவர் புராணச் செய்யுளடிகளாலும் இவ்வுண்மை விளங்கும்.

'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே,
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே'.

என்பர் மணிவாசக அடிகள், அவரது திருவாக்கிற்கு இணங்க ஆதியில் சிவலிங்கப்பெருமானது ஐந்து முகங்களினின்றும் தோன்றிய ஐம்பெருங்குரவர்களான, இரேவண சித்தர், மருள சித்தர், பண்டித சித்தர், ஏகோராம சித்தர், விசுவ சித்தர் (அல்லது அல்லமப் பிரபு தேவராகக் கொள்வர்), பாரதத்தின் பாளேமுன்னூரு உஜ்ஜயினி, கேதாரம், ஸ்ரீசைலம், காசி என்னும் பல்வேறு தலங்களில் திருமடங்கள் நிறுவி வீரசைவத்தினை வளர்த்து வந்தனர். இடைக்காலத்து, கன்னட தேயத்தின் தலைமையமைச்சராயிருந்த பெம்மான் பசவேசர் கல்யாண புரியில் 'சிவானுபவ மண்டபம்' நிறுவி உலக நாடுகள் எங்கணும் இருந்து வீரசைவ அறிஞர்கள் பலரையும் கூட்டி ஐந்து மாநாடுகள் நடாத்தி, (1) சாதிப்பாகுபாடுகளற்ற சமத்துவ சமுதாயத்தையும், (2) பெண்கள் சமத்துவத்தையும் நடைமுறைப் படுத்தி, அனைவர்க்கும் இலிங்கதாரணம் செய்வித்து, வீரசைவ சங்கம் அமைத்து, வீரசைவத்தை ஓர் இயக்கமாகவே பரவச் செய்தார்.

கற்புடைய மகளிர்க்குத் தாலி இன்றியமையாது போல, சதி பதி தர்மத்தைப் பேணும் வீரசைவர்க்கு இஷ்ட லிங்கதாரணம் இன்றியமையாதது. தாய் கருவுற்றிருக்குங் காலத்து ஏழாம் திங்களில், பிறக்க இருக்கும் குழந்தைக்காக 'கர்ப்பலிங்கதாரணம்' (இதுவே பின்னாளில் வளைகாப்பு, சீமந்தம் என்னும் சடங்கா யிற்று). குழந்தை பிறந்த பதினோராம் நாளில் 'இஷ்டலிங்க

தாரணம்' (இதுவே பின்னாளில் புண்ணியாசவனம், பெயர் சூட்டுதல் சடங்காயிற்று) கற்பன கற்று, பொருளீட்டுதற்கான தொழிலில் ஈடுபட்டு, இஷ்டலிங்க தீட்சைப் பெற்றே திருமணம் செய்து கொள்ளுதல், நலந்தீங்குகளில் (இழவுக் காலத்து, விழவுக் காலத்து) ஐவகைத் திட்டுகளின்றிக் குருபூசை, இலிங்க பூசை சங்கம பூசைகளை நிகழ்த்துதல், அஷ்டாவரணம், பஞ்சாசாரம், சடுத்தலம் ஆகியவற்றை ஒவ்வொருவரும் மேற்கொண்டு இம்மையே இலிங்காங்க சமரஸ்ய நிலையை மானிடராகப் பிறந்த யாவரும் அடைய வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஓர் நடைமுறை இயக்கமாகத் திகழ்வதே வீரசைவம்.

இடைக்காலத்தில் சைவ சமய ஆசாரியர் நால்வரும் சைவ மறுமலர்ச்சிக்காக அரும்பாடுபட்டனர். பின்னர் வந்த சந்தான ஆசிரியர் நால்வரும் சித்தாந்த சைவத்தை நிறுவினர். அவர்களுள் உமாபதி சிவம் வழிவந்த நமச்சிவாய மூர்த்திகளின் தலை மாணாக்கராகிய தவத்திரு. சிவப்பிரகாச தேசிகர் திருவண்ணா மலை திருத்துறையூர் வீரசைவ ஆதீனத்தை நிறுவிய பெருமைக் குரியவர் ஆவார்.

புலவர் புராணத்தில் வீரசைவ சந்தானாசிரியர்

புலவர் புராணத்தில் வீரசைவ சந்தான ஆசிரியர்களாகக் கொள்ளப்படும் சிவப்பிரகாசர், சாந்தலிங்கர், குமாரதேவர், சிதம்பர அடிகள் ஆகியோர் நால்வரது வரலாறும் வரிசை எண். 32 முதல் 35 வரை உள்ள சிவப்பிரகாசர் சருக்கம், சாந்தலிங்க சாமி சருக்கம், குமாரதேவர் சருக்கம், சிதம்பரசாமி சருக்கம் ஆகிய நான்கு சருக்கங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ள தால் அவற்றை ஈண்டு விரித்துக்கூற வேண்டிய அவசியமில்லை. எனினும் வீரசைவ குருமரபு ஆதீனங்களில் கூறப்படுகின்றவாறு புலவர் புராணத்தின் வழிநின்று ஈண்டு சற்றே சுருக்க விளக்க மாகக் காண்போம்.

துறைமங்கலம் சிவப்பிரகாசரும் அவரது குலகுருவாகிய திருத்துறையூர் சிவப்பிரகாசரும்

முதலில் புலவர் புராணத்தில் இடம் பெறாத – அதே நேரத்தில் புலவர் புராணத்தில் இடம் பெற்றுள்ள சிவப்பிரகாசரின் மூல குருவாகிய - ஆதிசிவப்பிரகாச தேசிகரைப் பற்றிச் சிறிது காண்போம்.

இன்றைக்குச் சற்று ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னர் (கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) சோழ வள நாட்டுக் கும்பகோணத்து சைவவேளாண் செட்டி மரபில் தோன்றிய சிவப்பிரகாசர் திருவாவடுதுறை நமச்சிவாய மூர்த்திகளிடத்துத் தலைமாணாக்கராக இருந்து ஆதீனப் பரிபாலனத்தை மேற்கொண்டு ஒழுகி வரும் நாளில் நடுநாட்டை ஆண்ட ஓர் வடுகன் சிதம்பரம் கோயிலில் நடராசப் பெருமானுக்கு நித்தியப் பூசைகளையும் சிறப்புகளையும் நிறுத்திவிட்டமையால், தில்லைவாழ் அந்தணர் திருவாவடுதுறை ஆதீனத்தில் வந்து முறையிடவே, ஆதீனப் பரிபாலனத்திருந்த சிவப்பிரகாச சுவாமிகள் தம் குருவாகிய நமச்சிவாய மூர்த்திகளின் ஆணையை ஏற்று, குறுநிலத் தலைவரைக் கண்டு பேசியும் பயன் இல்லாது போகவே, அந்நாளில் இராயவேலூரில் அரசு வீற்றிருந்த விருபாட்சிராயரை சந்திக்கச் சென்றார். அங்கு முதலில் இலிங்கண பத்தர் என்னும் அமைச்சரைக் காண வேண்டியிருந்தது. அவ்வமைச்சர் வீரசைவராய் இருந்தமையால் இலிங்க தாரணம் இல்லாதவரை நேரிற் கண்டு உரையாடாவிரதம் பூண்டிருந்தமையறிந்து சிவப்பிரகாசர் செய்வகை யாதென சிந்தித்த வேளையில், தம் உடையவரையே உடலில் அணிந்து கொள்ளுமாறு அசரீரி எழவே, அவ்வாறே இலிங்கத்தை உடலில் அணிந்து கொண்டு அமைச்சரை சந்தித்தார். தில்லைக் கோயிலில் அம்பலவாணருக்கு ஆறு காலப் பூசைகளும் முறையாக நடை பெறலாயிற்று. அதனால் மனம் மகிழ்ந்த சிவப்பிரகாசர் வீர சைவ மரபை பின்பற்றி வந்த வேளையில் தில்லையிலிருந்த குருநமச்சிவாயரின் தொடர்பும், அவர் வாயிலாய் திருவண்ணா மலையில் இருந்த அவர்தம் குருநாதர் குகை நமச்சிவாயரது தொடர்பும் சிவப்பிரகாச தேசிகருக்குக் கிட்டியது. சுவாமிகள் விசயநகரப் பேரரசின் ஆளுநரால் திருவண்ணாமலையில் பெரிய திருமடமும் வேண்டும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு அங்கேயே தங்கி வீரசைவ நெறியைப் பரப்பி வந்தார். அது 'திருவண்ணாமலை வீரசைவ ஆதீனம்' எனத் தனியே சிறப் படையலாயிற்று.

அக்காலத்தில் காஞ்சிபுரத்து குமாரசாமிப் பண்டாரம் என்பவர் திருவண்ணாமலைக்கு வந்து இவரிடம் வீரசைவ தீட்சை பெற்று, இலிங்கதாரணமும் செய்து கொண்டார். புலவர்

புராணத்து சிவப்பிரகாசர் சருக்கம், இங்கிருந்து தான் வரலாறு தொடங்குகிறது. குமாரசுவாமி தம்முடைய குமாரர்களுள் மூத்தவர்க்கு சிவப்பிரகாசர் எனப் பெயரிட்டார். அவரே பின்னர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என சிறப் புடையவராய், மயிலம் பொம்மபுர வீரசைவ ஆதீனத்து சிவஞ் ஞான பாலைய சுவாமிகளின் சீடராய் விளங்கினார். வெங்கனூர் அண்ணாமலை ரெட்டியாரால் ஆதரிக்கப்பெற்று துறவு பூண்டார். பிரபுலிங்க லீலை நால்வர் நான்மணிமாலை சித்தாந்த சிகாமணி முதலான 32 வீரசைவ நூல்களை இயற்றி கற்பனைக் களஞ்சியம் எனத் திகழ்ந்து சிறிது காலத்திலேயே புதுவைக்கு அண்மையிலுள்ள நல்லாற்றூரில் சிவப்பேறு பெற்றார்.

குறிப்பு

(துறையூர் திருச்சி மாவட்டத்திலுள்ளது. வெங்கனூர், துறைமங்கலம் ஆகியன பெரம்பலூருக்கு அண்மையிலுள்ள ஊர்களாகும்.)

திருத்துறையூர் சிவப்பிரகாசர் திருவாவடுதுறை ஆதீனத் திற்கு அவ்வாதீனத்து மாணாக்கர்களுள் ஒருவரை பட்டத் திருக்கச் செய்து, ஆதீனத்தோடும் தொடர்பு கொண்டு கண் காணித்து வந்தார். பின்னர் திருத்துறையூரில் குறுநிலத் தலைவ ராயிருந்த இலிங்கி ரெட்டியார் இவரிடம் தீட்சை பெற்று தம் மூரிலேயே ஒரு பெரிய திருமடம் அமைத்துக் கொடுத்து அதில் தங்கியிருந்து மக்களிடையே சிவநெறியைப் பரப்பும்படி வேண்டிக்கொண்டார். சுவாமிகளும் அதற்கு இசைந்தார். இவருடைய சீடர்களுள் சிவன்பாக்கம் ஞானக்கூத்தர் இவருக்கு அணுக்கத் தொண்டராக இருந்து வந்தார். அத்துவித வெண்பா முதலான 16 வீரசைவ நூல்களை இயற்றியருளினார். இவரது வாழ்வில் இறையருளால் பல அற்புதங்கள் நிகழ்ந்தன.

சாந்தலிங்க சுவாமிகள்

சுவாமிகளின் தலைமாணாக்கராகத் திகழ்ந்த சாந்தலிங்கர் துறைமங்கலம் சிவப்பிரகாசரின் இளவல்களான வேலையர், கருணைப் பிரகாசர் ஆகியோருக்குப் பின் உதித்த சிவப்பிரகாசரின் தங்கை ஞானாம்பிகையை மணந்து, மயிலம் பொம்மபுரம்

சிவஞான பாலைய சுவாமிகளுடன் தாம் கொண்டிருந்த தொடர்பால் தம் மைத்துனர் சிவப்பிரகாசரையும் ஈடுபாடு கொள்ளச் செய்தவராவார். சாந்தலிங்க அடிகளாரே கோயம்புத்தூர் அருகிலுள்ள திருப்பேரூர் ஆதீனத்தை நிறுவிய வருமாவார். வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், கொலை மறுத்தல், அவிரோத உந்தியார் என்னும் நான்கு வீரசைவ நூல் களை, ஜீவகாருண்யம், ஈஸ்வர பக்தி, பரமஞானம் என்னும் சாதனக்கிரமாக இயற்றியருளினார்.

திருப்பேரூர் சாந்தலிங்க அடிகளாரது குருநாதர் திருத்துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாவடுதுறை ஆதீனம், திருவண்ணா மலை, திருத்துறையூர் ஆதீனங்களை முறைப்படுத்தி சைவமும், வீரசைவமும் இருகண்களும் ஒப்பநோக்குமாறு விளங்கச் செய்து தான் குடந்தைக்கு அண்மையிலுள்ள திருப்பட்டீசுவரத்து முழையூரில், ஜீவசமாதி ஆனார். இந்த இடம் தற்பொழுது 'வள்ளலார் கோயில்' என்று வழங்கப்படுகிறது.

குமாரதேவ சுவாமிகள்

அஃது அவ்வாறிருக்க, திருப்பேரூர் வீரசைவ ஆதீனத்தை நிறுவி ஞானாம்பிகையாரோடு சாந்தலிங்க சுவாமிகள் மேலைச் சிதம்பரம் என்னும் திருப்பேரூர் தலத்தில் வீற்றிருந்து வீரசைவம் தழைக்க வாழ்ந்து வந்த காலத்து, கன்னட தேயத்து அரசரான ஸ்ரீ குமாரதேவர் க்ஷேத்ராடணமாகத் திருப்பேரூர் வந்திருந்த காலை, சுவாமிகளைச் சந்தித்து, பல சோதனைகளுக்குப் பின்னர் அவரால் தீட்சை செய்விக்கப் பெற்று திருமுதுகுன்று அடைந்தார். பெரிய நாயகி அம்மையால் திருமுலைப்பால் அமுது செய்விக்கப் பெற்றார். வழியில் இவர் பொருட்டு சிவபிரானால் தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பட்டது, திருவாரூரில் தேரோடச் செய்தது, ஜடாமுனிக்கு அருளியது முதலான பல அற்புதங்கள் திருவருளால் நிகழ்ந்தன. ஸ்ரீ குமாரதேவ சுவாமிகள் மகாராஜா துறவு, சுத்த சாதகம், சகஜநிட்டை முதலான 16 வீரசைவ நூல்களை இயற்றியருளினார். திருப்போரூர் சிதம்பர சுவாமி களைச் சிடராகப் பெற்றார்.

குறிப்பு

மதுரை சிதம்பரம் பிள்ளை என்ற வித்துவான், சுவாமி களிடம் உபதேசம் பெற்று திருப்போரூர் சிதம்பர

சுவாமிகளானார். பின்வந்த திருமுதுகுன்றம் சிதம்பர ரெட்டி என்பார் குமாரதேவர்க்கு அணுக்கத் தொண்டராய் இருந்தவர். திருமுதுகுன்ற ஆதீனத்தின் பெரிய திருமட திருப்பணிகளைச் செய்தவர். இவர் அவரின் வேறானவர் என்பது கருதத்தக்கது.

சிதம்பர சுவாமிகள்

சிதம்பர சுவாமிகள் குமாரதேவர் உளப்பாங்கின்படி திருப்போரூர் சன்னிதானம் விளங்க நேர்த்தனர். சுவாமிகள் திருப்போரூர் முருகன் கோயில் திருப்பணி செய்தருளினார். முருகன் திருவருளால் இவர்தம் வாழ்வில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. திருப்போரூர் முருகப் பெருமான் மீது அளவில்லா காதல் கொண்டு திருப்போரூர் சன்னதி முறை முதலான பல நூல்களை இயற்றியருளினார். தமது ஆசிரியராகிய ஸ்ரீ குமாரதேவரைப் பரவி, நெஞ்சுவிடு தூது, ஸ்ரீ குமார தேவர் பதிகம் முதலிய எட்டு நூல்களை அருளிச் செய் துள்ளார். அவை 'வீரசைவ அட்டப் பிரபந்தங்கள்' என்று போற்றப்படும்.

இராமலிங்க அடிகளும், வீரசைவ சித்தாந்தமும்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தம் கண்கண்ட புலவர் சருக்கத்தில், வடலூர் வள்ளல் பெருந்தகை இராமலிங்க அடிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இராமலிங்கர் பிற்காலத் தமிழகத்தின் வீரசைவ சந்தான ஆசிரியர்களாகிய சிவப்பிரகாசர், சாந்தலிங்கர், குமாரதேவர், சிதம்பர அடிகள் என்னும் இந்நால்வர் பெருமக்களின் அருள் நூல்களில் தோய்ந்திருந்ததன் விளைவே பின்னர் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், உருவாகக் காரணமாயிற்று எனலாம். வள்ளல் பெருமான், முருகன், சிவம், நடராசர், அருட்பெருஞ்சோதி ஆண்டவர் என்று போற்றியுள்ளமை, முறையே, சிதம்பர அடிகள் திருப்போரூர் முருகனிடம் கொண்ட ஈடுபாடு, இவ்வாதீனத்து சிவலிங்கதாரண முறை, ஆண்ட மூர்த்தமாகிய நடராசப் பெருமான், குமார தேவர் அருட்பெருஞ்சோதியில் கலந்தமை ஆகியவற்றின் தாக்கமே ஆகும். அன்றியும் வள்ளல் பெருமானது சன்மார்க்க நெறிகளாகிய (1) ஜீவகாருண்ய ஒழுக்கம், சாந்தலிங்க சுவாமி களின் கொலை மறுத்தலை அடிப்படையாகக் கொண்டது, (2) சத்விசாரம், சிவப்பிரகாச தேசிகரின் அத்துவித வெண்பாவை ஆதாரமாகக் கொண்டது. வள்ளல் பெருமான் 'சமாதிப் பழக்கம்

பழக்கமல்ல; சகஜப் பழக்கமே பழக்கம்' என்று குறிப்பிட்டுள்ளது ஸ்ரீ குமாரதேவரின் சகஜ நிட்டையையே குறிக்கும். மேலுமவர், ''சாதனங்கள் ஒன்றும் வேண்டாம் 'சுத்தசாதகம் ஒன்றே சாதனம்' ஆகும்'' என்று தமது உரையில் அடிக்கடி குறிப்பிட்டு வந்திருக்கிறார். வள்ளலார் திருவருட்பா குடும்ப கோசத்தில் தாம் சிதம்பர முனிவரால் ஆட்கொள்ளப் பெற்றமை பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். திருமுதுகுன்றம் பெரிய மடத்தில் தங்கி பழமலை நாதரைப் பாடியுள்ளார். ஸ்ரீகுமாரதேவரை முருகப் பெருமானது திருவவதாரமாகவே கருதுவர். அவ்வாறே திருஞானசம்பந்தப் பெருமானையும் போற்றுகின்றனர். இருவரும் இறைவனது திருவருட் சக்தியினிடமிருந்து ஞானப்பாலை அருந்தியவர்கள். திருஞானசம்பந்தர் தமது தேவாரப் பதிகத்தில்,

'கருகு குழல் மடவார் கடிகுறிஞ்சியது பாடி
முருகன் னதுபெருமை பகர்முதுகுன் றடைவோமே'
(தேவாரம் 1-12-10)

என்று பாடுகின்றார். திருமுதுகுன்றத்துக்கும், முருகப் பெருமானுக்கும், திருஞானசம்பந்தருக்கும், குமாரதேவர்க்கும் உள்ள தொடர்புகளை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

வீரசைவத்தில் சங்கமமானவர்களே 'சங்கமர்' என அழைக்கப் படுகின்றனர். அத்தகைய வீரசைவ சங்கம் 'ஞானம் ஒன்றே பரமுக்திக்கு வழி' எனக் கொண்டது. ஞானபாதமே சன்மார்க்க மாகும். வள்ளலாரும் சன்மார்க்க சங்கம் என்றே அழைத்தார். ஜீவகாருண்யம், ஆன்மநேய ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தும். பரோபகாரமாக வள்ளலார் சத்திய தருமச்சாலையை நிறுவினார் அவரால் திருக்குறள் 'சத்திய வேதம்' என வழங்கப்பட்டது.

முடிவுரை

ஞானவெட்டியான் என்ற சித்தர் கற்ப நூலில் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் வீரசைவர் என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. சென்னை திருமயிலையிலுள்ள திருவள்ளுவர் கோயில் இவ்வாதீனத்தினரது அருளாட்சிக்குட்பட்டதேயாகும். அக்கோயில் திருவுருவில் வாசுகி அம்மையாரும் இஷ்டலிங்க மணிந்தவராகக் காணப்படுவதும் கருதத்தக்கது. அகத்தியர், திருமூலர் போன்ற சித்தர்களும் வீரசைவ நெறியைப் போற்றிய வர்களே. வீரசைவ பஞ்சாச்சாரியர்களும் சித்தர் என்றே அழைக்கப்படுகின்றனர்.

தமிழலங்காரத்திறன்

சி. மனோகரன்

இலக்கியம் படைத்துத் தமிழன்னைக்கு அரணும் உரனும் செய்தோர் பலர். அரண், உரன் இவற்றோடு அணியாம் அலங்காரமும் செய்தோர் சிலர். அவருள் தலையாயவர் தமிழலங்காரம் செய்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆவார். சுவாமிகளின் தமிழலங்காரம் பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது.

அலங்காரம்

உலா, கலம்பகம் போன்று சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. மாறனலங்காரம், தண்டியலங்காரம் என்ற அணி இலக்கண நூல்களின் வேறுபட்டது. அலங்காரம் என்ற வடசொற்குத் தமிழில் அணி, அழகு, சிறப்பு எனப் பொருள் கொள்ளலாம். இவ்வகையில் கந்தனது சிறப்பு என்ற பொருளில், கந்தரலங்காரம் முதல் நூலாக அருணகிரியாரால் இயற்றப்பட்டது. பின்வந்த சில அலங்கார நூல்களைத் தொடர்ந்து சுவாமிகளும் சில அலங்கார நூல்களைச் செய்தார். அவற்றுள் ஒன்று. தமிழலங்காரம். தமிழலங்காரம் தமிழது சிறப்பைக் கூறுகிறது.

நூல் வரலாறு

சுவாமிகள் "தன்னுடையாற்றல் உணராரிடையானும் தான் தற் புகழ்தலும் தகும் புலவோர்க்கே" என்ற பவனந்தியின் சுற்றிற்கிணங்க தமிழலங்காரம் செய்துள்ளார். தமிழகத்திலே பிறந்து வாழ்ந்துவரும் வடமொழி கற்றோர் சிலர் வடமொழியை உயர்த்தி, தமிழ் மொழியைத் தாழ்த்திப் பேசி வந்ததாலும் வாதிட்டதாலும் தமிழின் சிறப்பைத் தமிழர்களுக்குக் காட்ட, தமிழலங்காரம் செய்துள்ளார். தமிழர்களே தமிழைத் தாழ்த்து வதைச் சுவாமிகள் 2, 97 ஆகிய எண்ணுள்ள பாடல்களில் குறிப்பிட்டு வருந்தியுள்ளார்.

சுவாமிகள், குருபர தத்துவம் என்ற தமது நூலில், தமிழ் அலங்காரம் தோன்றிய வரலாற்றை விவரித்துள்ளார். வேலூரில்

சிலநாள் தங்கியிருந்தபோது ஒரு அந்தணனும் ஒரு வேளாளனும் தன்னிடம் வந்து வடமொழியே உயர்ந்ததென வாதிட்டு வாது மறுநாளும் முடியாததால் முருகனிடம் திருவுளச்சீட்டு எழுதிப் போட்டு அதில் 'தமிழே உயர்ச்சி' என்ற சீட்டு வர, மகிழ்ந்த சுவாமிகள் தமிழே உயர்ச்சி என்ற ஈற்றில் ஒரு திருப்புகழ்ப் பாட்டும், பின் தமிழலங்காரமும் பாடியதாகக் குறிப்பிட்டுள்ளார். (குருபாத தத்துவம், புதுவைச்சருக்கம், பா. எ. 38 – 44) வாதத்தில் இடம் பெற்றதாகக் குறிப்பிடும் சில செய்திகள் தமிழலங்காரப் பாடல்களிலும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. (1, 14, 19).

நூலமைப்பு

நூல், நூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்களைக் கொண்டது. நூல் முழுதும் ஒவ்வொரு பாடலும் ஒரே விகற்பத்தாலான எதுகை கொண்டிருக்கிறது. நூலின் தொடக் கத்தில் விநாயகர் காப்பும் இறுதியில் நூலின் மாட்சியும் கூறும் இரு கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

நூலில் தமிழின் சிறப்பு பேசப்பட்டுள்ளது. சுவாமிகள் தமிழின் சிறப்பைக் கூற சில உத்திகளைக் கையாண்டுள்ளார். சிலர் வடமொழியை உயர்த்தி, தமிழ் மொழியைத் தாழ்த்தியதால் எழுந்த நூல் ஆதலால் தர்க்கரீதியில் வடமொழியிலிருந்து உயர்த்திக் கூறுதல், மொழியியல் நோக்கில் உயர்வு கூறுதல், கடவுளரோடு தொடர்புபடுத்தி உயர்வு கூறுதல், தமிழால் பாடிய புலவர்களின் அற்புதங்களை எடுத்துக்காட்டி உயர்வு கூறுதல், வடமொழியாளர் தமிழையும், தமிழரையும் சிறப் பித்ததைக் கூறி உயர்வு கூறல் என்ற நிலைகளில் தமிழின் சிறப்பை எடுத்துக்காட்டியுள்ளார்.

தர்க்கம்

சுவாமிகள் இடம், வலம்; வடக்கு, தெற்கு என்ற சொல் லாட்சிகளைக் கொண்டு தர்க்க ரீதியில் தமிழின் சிறப்பை எடுத்துக் கூறியுள்ளார்.

இறைவன் கரங்களில் வலக்கரம் உயர்ந்தும், இடக்கரம் தாழ்ந்தும் காணப்படும். வலக்கரம் தெற்கில் உள்ளது.

இடக்கரம் வடக்கில் உள்ளது. எனவே தெற்கு உயர்ந்தது. தென்மொழியாம் தமிழ் உயர்ந்தது (2).

கலைமகளின் வலக்கொங்கை தமிழ். இடக்கொங்கை வடமொழி. உடலியல் ரீதியில் ஒவ்வொருவரின் உடலும் வலப்பக்கத்தைக் காட்டிலும் இடப்பக்கம் சிறிதாகக் காணப்படும் (5).

வைணவத்தில் வடகலை, தென்கலை என்ற இரு பிரிவுண்டு. வடகலை கருமத்திற்கு முதன்மை அளிப்பது, தென்கலை பக்திக்கு முதன்மை அளிப்பது. கருமத்தினும் பக்தியே சிறந்தது. எனவே தென்கலையே சிறந்தது, தெற்கே சிறந்தது, தென் மொழியே சிறந்தது (3).

வடக்கிலிருந்து வருவது வாடை, தெற்கிலிருந்து வருவது தென்றல். வாடை வருத்தம் தரும், தென்றல் இனிமை தரும். எனவே தென்றல் வரும் தெற்கே சிறந்தது. தெற்கில் வழங்கும் தமிழே சிறந்தது (10).

தெலுங்கு பேசும் மக்கள் ஆரியத்தை எல்லா மொழிக்கும் தாய் என்று கூறுவர். மொழிக்கு, தாய் என்றொருத்தி இருந்தால் தந்தை என்றொருவன் உண்டு. அத்தந்தை தமிழ் மொழியேயாகும் (21) என பலவாறாகத் தமிழின் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார்.

மொழியியல்

சுவாமிகள், மொழியியல் அடிப்படையில் சில செய்திகளைக் கூறித் தமிழின் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளார். தமிழில் க, ச முதலிய எழுத்துக்களுக்கு வருக்க எழுத்துக்கள் இல்லை. எனினும் மொழி புணர்நிலையில் சார்ந்துள்ள எழுத்துக்களின் அடிப்படையிலோ உச்சரித்து வரும் மரபின் அடிப்படையிலோ மாற்றி ஒலிக்கும் நிலை தமிழில் உண்டு. தமிழில் வருக்க எழுத்துக்கள் இல்லாததால் தமிழ் 'அக்கர லோப மொழி' என்று கூறுபவரிடம் ஆரியத்திலும் எகர ஒகரக்குறில் இல்லாமையைச் சுட்டிக் காட்டியுள்ளார் (19). புகல் என்ற தமிழ்ச் சொல் இந்துஸ்தானியில் போல் என்று திரிந்து வழங்குகிறது (22), இந்தியாவில் உள்ள பல மொழிகள் ஆரியமும் தமிழும்

கலந்தே உருவாகியுள்ளன (22) என்பன போன்ற செய்திகள் தற்கால மொழியியல் நோக்கில் சுவாமிகளின் சிந்தனை களாகும்.

கடவுளர்

சுவாமிகள் கடவுளர் தமிழுக்குக் கொடுத்த முதன்மையை எடுத்துக்காட்டி தமிழின் சிறப்பு கூறும் பகுதிகள் பலவாகும் இறைவன் உலாவின் முன்னே ஓதப்படுவது தமிழ், பின்னே ஓதப்படுவது ஆரியம் (42), சிவனும் திருமாலும் தமிழின் பின் சென்றனர் (8, 9). சிவன் வியாசரின் பாரதத்தைத் தன் மகன் விநாயகரைக் கொண்டு எழுதுவித்தான். மாணிக்கவாசகரின் திருவாசகத்தைத் தானே எழுதி உமையிடம் கொடுத்து கனக சபையில் பாதுகாக்கச் செய்தான் (17). சிவன் சுந்தரருக்கும் சேக்கிழாருக்கும் முதலடி எடுத்துக்கொடுத்தார் (47). கலை மகளே பொற்றாமரைக்குளத்தில் பலகையாக இருந்து தமிழைத் தாங்கினாள் (46). பிரமனும் கலைமகளும் ஆதிபகவனாக வந்து பெற்ற ஏழு குழந்தைகளும் கற்ற மொழி தமிழ் (48). விநாயகர், அகவல் பாடிய ஔவையாரைக் கயிலாயத்தில் சேர்த்தார் (50). பொய்யாமொழிப்புலவர், பகழிக்கூத்தர் ஆகியோரிடம் முருகன் பாடல் கேட்டுப்பெற்றான் (58) என்பன போன்ற பல நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தமிழின் சிறப்பு கூறும் இவையும் தர்க்க ரீதியிலேயே அமைந்துள்ளன.

தமிழுக்குச் சிறப்புக் கூறவந்த கடவுளரின் இயல்புகளைச் சுவாமிகள் சித்திரித்துள்ளார். நித்தன், அத்தன் (58) ஆதி (56) எவ்வுருவுள்ளும் கலந்திருப்பவன் (16, 34) உயிர்களின் அஞ்ஞான இருளைக் கெடுப்பவன் (19), ஆணவம், ஆதி, மலம் மூன்றையும் தீர்ப்பவன் (32), வேதங்களால் பூசிக்கப்பட்டவன் (15), இரப்பவன், ஈமத்து ஆடுபவன் (14), கருத்தகண்டன் (56), வெண்பிறைச் சென்னியன் (5), என்பொடு சென்னி பூண்டவன் (15) எனச் சிவனின் இயல்புகள் பேசப்பட்டுள்ளன. மேலும் அட்ட வீரட்டச்செயல்கள் (11, 63), அடியார்க்கு உதவும் திருவிளையாடற்புராணச் செய்திகள் (14, 15, 16, 31, 32, 52) தில்லைச் செய்திகள் (33) உதவிய வேறு செய்திகள் (15, 47) இடம் பெற்று, தமிழுக்கு உயர்வு கூறுகின்றன.

உமை அடியார்க்கு உதவுதல் (34, 35, 39) திருமால் அடியார்க்கு உதவுதல் (9) கலைமகள் அடியார்க்கு உதவுதல் (74, 76), முருகன் அடியார்க்கு உதவுதல் (67, 70, 87, 90) ஆகிய நிகழ்ச்சிகளும் தமிழுக்குப் பெருமை சேர்க்கின்றன.

கடவுளர் அருள்பெற்றோர்

கடவுளரின் அருள்பெற்றோர் வாயிலிருந்து வந்த மொழி தமிழே என்று கூறும் நிலையில் சுவாமிகள் தமிழின் சிறப்பை எடுத்தோதியுள்ளார். முனிக்கோன் உருவாக்கிய மொழி (1), உமையின் ஞானப்பால் அருந்திய ஞானசம்பந்தரிடமிருந்து பிறந்தது தமிழ் (19) திருச்செந்தில் முருகனால் பேசும் ஆற்றல் பெற்ற குமரகுருபரர் வாயில் தோன்றியது தமிழ் (64) என்பன போன்ற பகுதிகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

தமிழின் பெருமையைக் காட்ட, அகத்தியர் (1, 6, 7, 8, 9, 12, 15, 96) வள்ளுவர் (4) ஔவையார் (4, 44, 45, 46), நக்கீரர் (51), கல்லாடர் (52), ஒட்டக்கூத்தர் (65), புகழேந்திப்புலவர் (66), திருஞானசம்பந்தர் (15, 19, 20, 24-28) திருநாவுக்கரசர் (28-30), சுந்தரர் (11-13, 49), மாணிக்கவாசகர் (14-18), சேக்கிழார் (47), நம்மாழ்வார் (36), பெரியாழ்வார் (40, 41), ஆண்டாள் (38), திருப்பாணாழ்வார் (39), திருமங்கையாழ்வார் (40, 41), கம்பர் (72-75), அம்பிகாபதி (76), கச்சியப்ப சிவாச்சாரியார் (70), பட்டினத்தார் (53-54), பத்ரகிரியார் (55), சேந்தனார் (56), கணிவண்ணன், இடைக்காடர் (9), அபிராமிப் பட்டர் (69), காளமேகப்புலவர் (80), இரட்டைப்புலவர் (78, 79), பகழிக்கூத்தர் (87), வசைகவி ஆண்டான் (82-85), அருணகிரி நாதர் (59), பொய்யாமொழிப்புலவர் (57), முத்துத்தாண்டவர் (18, 86), குமரதேவர் (63), குகை நமச்சிவாயர் (60), குரு நமச்சிவாயர் (61), சிவப்பிரகாச சுவாமிகள் (62), திருச்சிற்றம்பல அடிகள் (68), சிதம்பர சுவாமிகள் (67), திருக்கோவிலூர் ஆறுமுக சுவாமிகள் (71), சீனிவாசப்புலவர் (81, 95), வீர பாண்டியப்புலவர் (88-90), கந்தசாமிப்புலவர் (91-93), ஆறுமுகப் புலவர் (94), சிங்களத்துப்புலவர் (77), குமரகுருபரர் (64), என நாற்பத்தாறு புலவர்களைப் பற்றிய செய்திகளைச் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

புலவர்கள் பற்றிய செய்திகள் யாவும் அவர்கள் தமிழ் பாடி அற்புதங்கள் நிகழ்த்தியதாகவோ, கடவுளரிடம் அருள்பெற்ற தாகவோ, இன்னல் நீங்கப்பெற்றதாகவோ அமைந்து தமிழுக்குப் பெருமை சேர்க்கின்றன.

வடமொழியாளர் கூற்று

தமிழையும் தமிழரையும் சிறப்பித்து வடமொழியாளர் கூறும் கூற்றை முன்னிறுத்தி தமிழின் சிறப்பைச் சுவாமிகள் வெளிப்படுத்தியுள்ளார். தென்பாகமே வலம் என்று வட மொழிச் சீர் உணர்ந்தோர் கூறியிருக்கின்றனர் (2), விந்தமலையை அடக்கிய அகத்தியரை வேதவியாசர் புகழ்ந்து உள்ளார் (8), சிவபிரானின் திருமணத்தின் போது புவியை அகத்தியர் சமன் செய்ததை எல்லா வடநூல்களும் கூறு கின்றன (6), ஆதிசங்கரர் திருஞானசம்பந்தரைத் 'திராவிட சிசு' என்று தனது சௌந்தர்யலகரியில் குறிப்பிட்டுள்ளார் (20) என்ற செய்திகளைச் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

மொழிப் பெருமை பேச வந்த தமிழலங்காரத்தில் வேறுசில குறிப்பிடத்தக்க செய்திகளும் உள்ளன. அவற்றுள் சிலவற்றை இனிக் காணலாம்.

வடமொழிக் கலப்பு

சுவாமிகள் தாம் இயற்றிய திருப்புகழ் பாட்டொன்றில் "வடமொழி கலந்திடாத தமிழென விளங்குபாடல்" என்றும் வண்ணத்தியல்பு என்ற சந்த இலக்கணத்தில் "வண்ணத்தளவில் வடமொழி மருஉச் சொல் புல்லினும் மதுரப்பொலிவு குன்றலும்" என்றும் வடமொழிக் கலப்புப் பற்றி குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றுக்கள் வடமொழி இல்லாமல் தமிழ் தனித்தியங்கக் கூடியது என்பதைச் சுட்டுதற்கும் சந்தப்பாடலில் வடமொழிக் கலந்தால் சந்தம் கெடும் என்பதைச் சுட்டுதற்கும் எழுந்தவை ஆகும். வடமொழிமீது காழ்ப்பு கொண்டல்ல. காழ்ப்பால் உயர்வு தாழ்வு கூறுவோரைச் சுவாமிகள் வம்பர், சண்டாளர், சழக்கர் என்றே சாடியுள்ளார். (23).

சுவாமிகள் தமக்கு வடமொழிமீது காழ்ப்பில்லை என்பதைக் காட்டும் வகையில் பல வடசொற்களைக் கையாண்டுள்ளார்.

நூலின் பெயரே அலங்காரம் என வடமொழியில் அமைந்து உள்ளது. மக்களின் அன்றாட பேச்சுவழக்கில் இரண்டறக் கலந்த வடசொற்களும் கவிஞர்தம் கவிதைகளில் இடம்பெறும் வடசொற்களும் இடம் பெற்றுள்ளன.

சாட்சி (1), கருமம் (3), பத்தி (3), அநேகர் (4), வயித்தியம் (10), வாசகம் (11), கதி (18), ஆந்திரம் (21), கோரம் (26), குதர்க்கம் (31), ஆணவம் (32), அம்பலம் (33), தைலம் (34), சபை (34), நேசம் (35), விதம் (39), தயை (49), நிந்தை (53), லிங்கம் (54), வாதனை (55), அதிசயம் (55), ஈசன் (61), நயம், துட்டன், குணம் (62), உதிரம் (71), கபடம் (73), விக்கிரம் (77), வாது (78), தெய்வம் (8), சத்தியம் (84), கீர்த்தனை (86), கீர்த்தி (86), சந்நிதானம் (89), மந்த்ரம் (89), புவனம் (94), சங்கடம் (95), சக்தி (100), ஞானம் (68), சாடை (21), ஈஸ்வரன் (15) இவை அன்றாட பேச்சு வழக்கில் உள்ளவையாகும்.

தவளம், சரதம் (1), ஆதி (4), மாதவர் (6), விந்தம், விபுதர் (7), மதுரம் (19), மெய்ப்போதம் (20), மிலேச்சர் (95), தம்பலம் (23), சித்தி, முத்தி (27), அம்புயம் (29), அனந்தம் (36), மலம் (32), ஜடவாயு (36), பருப்பதம் (42), கோளம் (44), பதுமம் (45), பரம் (47), பிரான் (8), வாணன் (65), ஏகாசம், களாசம் (67), பதம் (68), பாரதி (72), இபமாமுகம் (79), சிங்காதனம் (81), கிரி (82), இவை பெரும்பாலும் இலக்கியங் களில் மட்டும் இடம்பெறும் வடசொற்களாகும்.

மந்த்ரம், வந்தனம் (12), சோகாந்தகாரம் (19), அதிகோரச் சரணார் (26), பத்தி, சித்தி, முத்தி (27), மாதா, வேதா (36), தண்டம் (40), கோளம் (44), விற்பனன் (47), தந்தம் (50), அத்தன், நித்தன் (58), தாகாசம் (67), காரன் (92) இவை எதுகைக்காகப் பயன்படுத்தப்பட்ட வடசொற்கள்.

பேச்சுவழக்குச் சொற்கள்

சுவாமிகளின் பாடலில் ஆரேனும் (39), பையன் (82), இளப்பம் (84), மெச்சிய, நச்சிய (93), கோது (97), நத்தி (99) என்பன போன்ற பேச்சு வழக்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவை எதுகை நோக்கியே வந்துள்ளன. மல்கோகை (11), போன்ற மருஉச் சொற்களும் பாருலகு (71),

கொள்ளிக்கனல் (82) போன்ற இரட்டைச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.

உவமைகள்

இலக்கியத்திற்கு எழில் சேர்ப்பது கற்பனை. கற்பனைக்கு இதயமாக இருப்பது உவமை. இவ்வுவமை, பொருளுக்கு அழகு சேர்ப்பது. இது அணி உவமை கவிஞன் தான் சொல்லக் கருதியதை எளிதில் விளக்க, இணையான ஒன்றை ஒப்பிட்டுக் காட்டுவான். இது கருத்து விளக்க உவமை. இவ்விரு வகையிலும் சுவாமிகள் உவமைகளை அமைத்துள்ளார்.

திருவொத்த மங்கையர் (91), உளப்பதும் (45), வேல் முனைக்கண் (4), கனியிதழ்வாய் (38), செம்பவளக் கனிவாய் (61), முள்எயிறு (72), கன்னிற் சிறந்த மொழி (34), மழலையம் கிள்ளையனையார் (52), மந்திரக்கொள்கை (11), பந்தையொப் பாம் முலை (85), பந்தில் திரண்ட முலை (87) என்பன போன்று வரும் உவமைகள் அணி உவமைகள் ஆகும். இவை தமிழ் அலங்காரத்தில் இடம்பெறும் பெண்ணலங்காரமாகத் திகழ் கின்றன.

இறைவன் எள்ளில் தைலம் என நிறைந்தான் (34), ஆமைக்குள் உறுப்பென்ன பொறிகள் அடங்க நின்று (64), தூண்டா விளக்கில் வருந்தும்பிபோல் பலர் துஞ்சினர் (84), ஆலையின் பாகன்ன செந்தமிழ்ப்பாட்டு (57), அல்லையொப்பாம் மிடற்று ஆதி (56), ஆளியொப்பாம் ஒரு துட்டன் (62), மடந்தைக்கு உரிய கொண்கற்கு குமிழ் மலர் நாசியானால் மணந்தான் நிகர் கோதினனே (97), புற்சுவை உண்டறியாப் பசுப்போலும் புரையினனே (98) என்பன போன்ற கருத்துவிளக்க உவமைகள் குறிப்பிடத்தக்கன.

பாடலில் புலவர்கள்

தமிழின் சிறப்பை எடுத்துக்காட்ட ஏறத்தாழ 46 புலவர்கள் நூலில் இடம்பெற்றுள்ளமை முன்னர் குறிப்பிடப்பட்டது. அவர்களில் திருவள்ளுவர், ஔவையார் (4), கணிவண்ணன் (9), மங்கை மன்னன் (40), முத்துவயிரவன் (86) என்ற புலவர்களின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. சில புலவர்கள் பாவைதன் கேள்வன் (12), வழுதி அமைச்சர் (14), கவுணியன்

(20), காழிப்பனவர் பிரான் (27), கொற்றங்குடியார் (3) என்ற தொடர்களால் குறிக்கப்பட்டுள்ளனர். ஏனைய புலவர்கள் பெயர் குறிப்பிடப்படாமலேயே பாடல்களில் இடம்பெற்று உள்ளனர். பாடலில் இடம்பெற்றுள்ள நிகழ்ச்சிகளைக் கொண்டு புலவர்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

சுவாமிகள் ஏதேனும் ஒருவகையில் ஒப்புமையுடைய புலவர்களை ஒரே பாடலில் பாடியுள்ளார். வள்ளுவரும் ஔவையும்–கொல்லாமைப்பாடல் (4), மாணிக்கவாசகரும் முத்துத்தாண்டவரும் – முத்திபெற்றது (18), சுந்தரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் ஔவையும் – கயிலைப்பயணம் (49, 50), கம்பரும் அம்பிகாபதியும் – இட்டஅடிநோவ (74), பகழிக்கூத்தரும் பொய்யாமொழிப்புலவரும் – முருகன் பாடல் கேட்டது (58), சேக்கிழாரும் சுந்தரரும் – இறைவன் முதலடி எடுத்துக் கொடுத்தது (47), கணிவண்ணனும் இடைக்காடரும் – இறைவனைக் கோயிலிலிருந்து வெளியே வரச்செய்தது (9) என்ற நிலையில் இரு புலவர்கள் ஒரு பாடலில் இடம்பெற்று உள்ளனர். இவருள் பொய்யாமொழிப்புலவர், சேக்கிழார், கணிவண்ணன், இடைக்காடர் ஆகியோர் இப்பாடல்களில் மட்டும் இடம் பெற்றுள்ளனர்.

ஒரு புலவரைப்பற்றி பல பாட்டுகள் வரும்போது இடையீடான பாடல்களைச் சுவாமிகள் அமைத்துள்ளார். 19 வது பாடலில் தொடங்கி 28-வது பாடல் வரை உள்ள பத்துப்பாடல்களில் ஏழுபாடல்களில் மட்டும் ஞானசம்பந்தரைப் பாடியுள்ளார். இடையில் 21, 22, 23-வது பாடல்களில் வேறு செய்திகளைக் கூறியுள்ளார். இந்நிலை மாணிக்கவாசகர், ஔவையார் குறித்து வரும் பாடல்களிலும் காணப்படுகிறது.

முடிவுரை

தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வடமொழியை உயர்த்திக்கூறும் வம்பர்களுக்குத் தமிழின் பெருமையை உணர்த்த எழுந்த நூல் தமிழலங்காரம். இது பல உத்திகளில் தமிழ் பெருமையை உணர்த்தியுள்ளது. பிறமொழிமீது காழ்ப்பு கொள்ளவில்லை. புலவர்கள் வரலாற்றைக் கூறுகையில் குட்டி புலவர் புராணமாகத் திகழ்கிறது. சுவாமிகளின் படைப்பில் குறிப்பிடத்தக்கதாகத் தமிழலங்காரம் விளங்குகிறது.

அடிகளாரின் தமிழுணர்வு

ம. மனோன்மணி

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 19 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருளாளர். திருப்புகழ்ச் சந்தம் அமைந்த பாடல்களை இவர் மிகுதியாகப் பாடியதால் 'திருப்புகழ்'ச் சுவாமிகள் என்றும், வண்ணம் பல சிறப்பாகப் பாடியதால் 'வண்ணச்சரபம்' என்றும் போற்றப் பெற்றவர். மாலை, அந்தாதி, பிள்ளைக்கவி, அலங்காரம், வகுப்பு, பஞ்சகம், சதகம் முதலிய இலக்கிய வகைகளில் நூல்கள் பல இயற்றியுள்ளார். அறுவகை இலக்கணம் வண்ணத்தியல்பு என இலக்கண நூல்களும் படைத்துள்ளார். அடிகளார். இறைப்பற்று, நாட்டுப் பற்று முதலானவற்றில் ஆர்வங் கொண்டவர். சந்தத்திற்குப் புது இலக்கணம் வகுத்த சுவாமிகள் ஆயிரக்கணக்கான சந்தப் பாடல்களை இயற்றியுள்ளார். இவர் படைத்த தமிழலங்காரத்தின் வழி சுவாமிகளின் தமிழ்ப் பற்றை, உணர்வைக் காணும் முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

காலச்சூழல்

அடிகளார் வாழ்ந்த காலச்சூழல் ஆங்கிலேயர் ஆட்சி அரங்கேறிய காலம். மக்களிடையே சாதி வேற்றுமைகள், சமய வேற்றுமைகள், மொழி வேற்றுமைகள் அதிகம் இருந்த காலம். இம்மூன்று சூழல்களையும் புரிந்த அடிகளார் இவற்றில் கவனம் செலுத்தினார். இவற்றிற்காகத் தம் படைப்புகளையும் படைத்துக் கொண்டார். திருக்கோயில்களில் தமிழ்மொழி அருச்சனை செய்வதை வலியுறுத்தினார். பல தமிழ் இலக்கண நூல்கள் இவர் காலத்தில் தோன்றின. 'தமிழ் அலங்காரம்' எனும் நூல் அடிகளாரின் படைப்பிலக்கியப் பாங்கைப் புலப்படுத்துகின்றது.

தமிழ் அலங்காரம்

இந்நூல் தமிழ் மொழியின் ஏற்றச் சிறப்பையும், தமிழ் மொழியைப் படைத்த புலவர்கள், அருளாளர்கள், மன்னர்,

சான்றோர் அனைவரையும் போற்றிப் புகழும் வகையில் அடிகளாரால் படைக்கப்பட்டுள்ளது. ''கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து, பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்'' என்று திருவிளையாடற்புராணம் தமிழின் சிறப்பைப் போற்றுகிறது. இதனால் தமிழின் பெருமை நன்கு விளங்கும். 'அலங்காரம்' என்பது ஒரு பொருளைப் பற்றி விவரித்து விளக்கம் பெறப் பாடுவதாகும். அருணகிரிநாதர் பாடிய 'கந்தரலங் காரம்' அனைவரும் போற்றிச் சிறப்பிப்பது. அந்த வரிசையில் சுவாமிகள் வாள் அலங்காரம், வேல் அலங்காரம், மயில் அலங் காரம், ஆறெழுத்து அலங்காரம் ஆகியவற்றையும் இயற்றி யுள்ளார். அலங்காரம் பாடுவதை இவர் சந்தம் போன்றே விரும்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. சுவாமிகள் தமிழலங்காரம் பாடிய நிகழ்ச்சியைக் 'குருபரதத்துவம்' விளக்கமாகக் குறிப்பிடு கிறது.

நூல்நுவல் பொருள்

தமிழைச் சிறப்பித்தோர் பெறும் பேறுகளைக் குறிப்பிட்டும், அன்னோரின் பேராற்றலைக் குறிப்பிட்டும் சுவாமிகள் பாடி யுள்ளார் 'செந்தமிழே உயர்வு' என்பது இந்நூல் நுவல் பொருளாகும். இறைவன் திருவருளே தமிழாகவும், தமிழே தெய்வத் திருவருளாகவும் இந்நூல் நுவல்கிறது.

நூல் அமைப்பு

விநாயகர் வணக்கக் காப்புச் செய்யுளுடன் நூல் தொடங்கு கிறது. கட்டளைக் கலித்துறை காப்பில் அமைந்த நூறு பாடல்கள் இடம் பெறுகின்றன. முன்னோர் மொழி பொருளைப் போற்றும் வகையில் பாடல் அமைப்புகள் இடம் பெறுகின்றன. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என அருளாளர்களைப் போற்றும் வகையில் பாடல்கள் அமைந் துள்ளன. தம்மிற் பெரியோரைப் போற்றும் பண்பு அடிகளாரிடம் மிக்கிருந்தது. இச்சிறப்பைத் தமிழலங்காரம் விரிவாக விளக்குகிறது.

தமிழ்ப் பெருமையை உலகுக்கு உணர்த்தல்

சுவாமிகள் தமிழினுடைய பெருமைக்குக் காரணமான நிகழ்ச்சிகளைப் பலவாறு பாடியுள்ளார். முருகப்பெருமான்

புலவர்களிடம் சென்று யாசித்துத் தமிழ் கேட்ட நிகழ்ச்சியை நினைவுறுத்துகின்றார், அதனைக்

"கீரனைப் பொய்யா மொழியைப் பகழிக்கூத்
தனைக் குருகைக் கிழவன் தன்னை
தேரணந்தம் புலவர்களை நீயிரந்து
தமிழ் கேட்ட நீர்மை யாவும்"

எனத் தமிழின் பெருமைக்குச் சான்றாக்கினார்.

தமிழ் உணர்ச்சி ஊட்டுதல்

"மதுரத் தமிழை இகழ்தீயோர் மணிநா அறுத்துக் கனலிலிட" விரும்பும் அடிகளின் தமிழுணர்ச்சி, மக்களையும் தமிழின்பால் ஈடுபாடு கொள்ள வைத்தது. தமிழை வெறுப்பவரைத் தாமும் வெறுத்தார். அத்தகு வெறுப்பினைக் கடுமையாகவும், வண்மை யாகவும் வெளியிட்டார்.

தமிழின் ஏற்றத்திற்காகவும் அடிகளார் பெரிதும் உழைத்தார். தமிழ்ப் பாடல்களை நாவினால் நவிலாமல் இருப்பவர் தாழ்வுற்றவர் ஆவார் என்றார். தமிழைப் படிக்காமல் தாழ்ந்து கிடப்போர் உயர்ந்து வர வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுகின்றார்.

"பாலும் அமுதும் பழமும் நிகர் முத்தமிழால்
நாலு கனியும் நவிலாமல் காலும்
தலையும் அறியாதுழலும் தாழ்வுதீர் அண்ணா
மலையின் சிகரிமன்ன வா"

என்னும் வெண்பாவால் தமிழ் மக்கள் தமிழை மறந்தால் தாழ்வுற்றவர் ஆவர் என்னும் கருத்தில் குறிப்பிடுகின்றார்.

தமிழுக்குத் தலைமையிடம்

அனைத்துப் பொருள்களிலும் தமிழே தலைமை ஏற்கிறது என்பன அடிகளார் ஆங்காங்கே அழகுற எடுத்துக் காட்டுகிறார். தமிழ்க்கடலாக வாழ்ந்த அடிகளார் அவர்கள் உலக இன்பங்கள் அனைத்திலும் செந்தமிழின் இன்பமே சிறந்தது எனக் காட்டியுள்ளார்.

தமிழுக்குப் பின் சென்ற கடவுளர்

தமிழின் சிறப்பையும், பெருமையையும் அறிந்த சிவபெரு மானும், திருமாலும் தமிழின் பின் சென்ற நிகழ்ச்சியை

அலங்காரத்தில காட்டியுள்ளார். தென்னிசையின் சிறப்பை விளக்குவது மட்டுமன்றிச் சமமாக அதனை வைப்பதற்கும் தமிழ் துணை நின்றது என்று போற்றுகிறார்.

அடிகளாரும் அருளாளர்களும்

மனிதர்களை நெறிப்படுத்துவதற்காக அடிகளார் தம் வாழ் நாள் முழுவதும் உழைத்தார். மேலான அறத்தின் வழியே நடக்க அனைவர்க்கும் அழைப்பு விடுத்தார். எல்லா உயிர்களும் இன்பமாக வாழப் பெரிதும் விரும்பினார். அவற்றை இத்தமிழ் அலங்காரம் பரவலாக விளக்கியுள்ளது. அவ்வகையில் அருளாளர் களின் பணிகளை வியந்து தமிழோடு இணைத்துப் பெருமை படுத்துகிறார்.

திருஞானசம்பந்தரைச் சிறப்பித்தல்

அடிகளார் சம்பந்தரைத் தம் சற்குருவாக எண்ணியவர். "எங்கள் சற்குருவாம் தமிழ் விரகனைப் போல்" என்று ஞானசம்பந்தரைப் போற்றி மகிழ்கிறார். திருஞானசம்பந்தரின் வாழ்க்கையில் நடந்த அற்புத நிகழ்ச்சிகளைச் சுவாமிகள் தமிழின் பெருமை என்றும், தமிழுக்குக் கிடைத்த பேறு என்றும் போற்றிப் புகழ்ந்துள்ளார். திருஞானசம்பந்தருக்குத் தமிழுக் காகக் கிடைத்த வெகுமதிகளாகப் பொற்றாளம் பெற்ற நிகழ்ச்சி, முத்துப்பந்தர் கிடைத்த செய்தி, ஆகியவற்றைச் சிறப்பிக்கிறார்.

திருஞானசம்பந்தர் வரலாற்றில் நடந்த இன்றியமையா நிகழ்வு ஆன அனல், புனல் வாதங்கள், சமணசமயம் அழிந்த நிலை இவை தமிழுக்குக் கிடைத்த பெருமைகளாக அடிகளார் நினைவு கூறுகிறார். அதே நிகழ்ச்சியைச் சுட்டும்போது மங்கையர்க்கரசியின் கணவனாம் கூன்பாண்டியனை 'நின்றசீர் நெடுமாறன்' ஆக்கிய பெருமைபடத்தக்க நிகழ்ச்சியையும் போற்றியுள்ளார். அடிகளாரின் பிறபடைப்புக்களில் சம்பந்தர் கையாண்ட யாப்பு வகைகளைத் தாமும் பயன்படுத்தியுள்ளார். (சந்தச்சுவை, மாலைமாற்று, ஏகபாதம், முதலியன குறிப்பிடத் தக்கவை) திருஞானசம்பந்தர் வாழ்வியல் நிகழ்ச்சிகளில் அரிய பெரிய செயல்கள் அனைத்தையும் தமிழலங்காரத்தில் பாடி யுள்ளது சிந்திக்கத்தக்கது. திருமணத்தில் முக்தி வழங்கியது தமிழாகவும், கதவு திறக்கச் செய்ததும், பின் அடைக்கச்

செய்ததும் தமிழாகவும் பாராட்டிப் படைத்துள்ளார். இறைவனின் திருவருள் அனைத்தும் தமிழாகவே மலர்ந்த மலர்ச்சியைப் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசரும் அடிகளாரும்

திருநாவுக்கரசர் தேவாரத்தில் அடிகளார் ஆழமாகத் தோய்ந் திருத்தலை தமிழ் அலங்காரம் காட்டுகிறது. திருமறைக்காட்டில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் கதவு திறந்து அடைக்கப் பாடிய செயல்களை வியந்து போற்றியுள்ளார். திருநாவுக் கரசருக்குச் சமணர்கள் தந்த கொடுமைகளிலிருந்து அவரை மீட்கச் செய்தது தமிழே என்று சிறப்பித்துள்ளார்.

''கடல்நீரில் கல் மிதக்கும்படி செய்து களிறு உறுக்கும்
அடல்யாவும் குன்ற அடக்கு, வெந்நீற்றை அம்புயப்பூந்
தடமாகக் காட்டி, அரவால் இறந்த தனையனையும்
உடலோடு எழச் செய்த தன்றோ ஒருவன் சொல்
ஒண்தமிழே''

என்று பாடுகிறார். இங்கு மற்றொரு நிகழ்ச்சியும் நினைக்கத் தக்க ஒன்றாம். சேக்கிழார் பெருமான் கூறும் அப்பூதியடிகளின் வரலாற்றில் அவர் மைந்தனாம் மூத்த திருநாவுக்கரசு அரவம் தீண்டி இறக்க, அம்மைந்தனை 'ஒன்றுகொலாம்' என்று பதிகம் பாடி மீட்டுத் தந்தார் திருநாவுக்கரசர். அந்நிகழ்ச்சியை அடிகளார் அவர்கள் தம்படைப்புத் திறனில் நினைவு கூறுகிறார். அருளாளர் பாடல்களிலும் திருமுறை இலக்கியங்களிலும் அவர் தோய்ந்த முறையை இச்செய்திகள் விளக்குகின்றன.

அடிகளாரும் சுந்தரரும்

மூவர் முதலிகளுள் மூன்றாமவரான சுந்தரரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவரின் தேவாரப் பாக்கள் அடிகளாரை வெகுவாக ஈர்த்துள்ளன. சுந்தரர்க்காக இறைவன் தூது சென்ற நிகழ்ச்சியும் அவிநாசியில் முதலைவாய் மதலையை எழுப்பிய நிகழ்ச்சியும் கயிலைக்கு வெள்ளையானை மீது சென்ற நிகழ்ச்சியும், தமிழ் அலங்காரத்தில் சிறப்பிடம் பெறுகின்றன.

மாணிக்கவாசகரும் அடிகளாரும்

மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்கள் அடிகளாரைப் பெரிதும் ஈர்த்துள்ளன. வாதவூரர் கையாண்ட பாடல் அமைப்பு

முறைகளையே தாமும் பின்பற்றியுள்ளார். (பத்துப் பத்தாகப் பாடும் முறை) ''முத்தமிழ் அமைச்சன்'' என்று சிறப்பித்துள்ளார். குருந்த மர நிழலில் அமர்ந்து மாணிக்கவாசகருக்கு திருப்பெருந் துறையுள் காட்சி அளித்த சிறப்பைப் போற்றுகிறார். நரியைப் பரியாக்கிய செய்தியையும் போற்றியுள்ளார். திருவாசகத் தமிழை இறைவன் போற்றி அவருக்கு முக்தி வழங்குதல் முதலான நிகழ்ச்சிகளைச் சிறப்பிக்கிறார்.

ஆழ்வார்களைப் போற்றும் அடிகள்

சைவ அருளாளர்களைப் போன்றே ஆழ்வார்களின் பாடல் களும் அடிகளாரை மிகுதியும் ஈர்த்துள்ளன ''ஆண்டாள் எடுத்து மொழிந்த தமிழ் அருட்கவி செந்தமிழ்'' என்று பெருமைப்படுத்துகிறார். திருமங்கையாழ்வாரையும் போற்று கிறார்.

அடிகளார் போற்றும் அருந்தமிழ்ப் பெரியோர்

அகத்திய மாமுனிவர், நக்கீரர், ஔவையார், சேரமான் பெருமாள் நாயனார், வத்திப்பாட்டி, திருவெண்காடர், பத்திர கிரியார், சேந்தனார், பொய்யாமொழியார், அருணகிரிநாதர், பகழிக்கூத்தர், குகை நமசிவாயர், குருநமசிவாயர், சிவப் பிரகாச சுவாமிகள், குமரதேவர், குமரகுருபரர், ஒட்டக்கூத்தர், திருப்பொரூர் சிதம்பர சுவாமிகள், திருச்சிற்றம்பலநாடிகள், அபிராம பட்டர், கச்சியப்ப சிவாச்சாரியார், திருக்கோவிலூர், ஆறுமுகசுவாமிகள், கம்பர், இரட்டைப்புலவர், காளமேகப்புலவர், வசைகவியாண்டான், முத்துவயிரப்புலவர், வீரபாண்டியபுலவர், கந்தசாமிபுலவர், சிநிவாசப் புலவர் என அவ்வப் புலவர்களின் படைப்புத்திறனையும், அவர்களது படைப்புக்களையும், வாழ்வு நிகழ்ச்சிகளையும் போற்றி அத்தகு பெருமையுடையது தமிழே என்று பாராட்டியுள்ளார்.

தனித்தமிழ்ப்பற்று

வடமொழிக் கலப்பை அருணகிரிநாதர் மிகுதியாகக் கையாண்ட போதும் அடிகளார் தனித்தமிழில் நாட்டம் செலுத்தித் தனித்தமிழ்ச் சொற்களையும் தமிழாக்கிய வட மொழிச் சொற்களையும் தம் பாடல்களில் கையாண்டுள்ளார்.

அதே சமயத்தில் வடமொழிச் சொற்களின் எண்ணிக்கையையும் ஆதிக்கத்தையும் அவர் காலத்தில் ஓரளவு குறைக்க முயன்று உள்ளார்.

அருணகிரியார் கந்தனது பெருமைகள் அனைத்தையும் வியந்து விளக்க நூறு பாடல்களால் 'கந்தரலங்காரம்' பாடியது கண்டு அடிகளார் தமிழின் பெருமைகளை எடுத்துக்காட்டி நூறு பாடல்கள் புனைந்து 'தமிழ் அலங்காரம்' எனும் நூல் செய்தமை அவர்தம் தமிழ்ப் பற்றுக்குச் சான்றாகும்.

வடமொழியிலும் தமிழே உயர்வுடையது என்னும் கருத்தை நிலை நாட்டியபோது அடிகளார் பாடிய தமிழலங்கார நூலில், "தமிழ்மொழி தனித்தியங்கும் வல்லமையுடையது. ஏனைய மொழித்துணை கொண்டு வழங்க வேண்டிய கட்டாயமில்லை. தேவையானால் வடசொல்லையும் சமத்துவ முறையில் கொள்ளலாம் என்பதைச் 'சோகாந்த காரம்' என்ற 19 - ஆம் பாட்டில் கூறி ஈற்றில் ஏகாரக் குறில் இல்லாக் கலை என்பதால் அறியலாம்'' என்பர். இறை வழிபாட்டிலும் தமிழ்மொழி மூலம் வழிபடுவதை வலியுறுத்தியுள்ளார்.

"மதுரத் தமிழ் பழிப்போர் மணிநா அறுத்துக் கனலில் இடத் தடிக்கும்'' அடிகளார் தெய்வத்தைப் பெரிதும் போற்றிய போதிலும் அத்தெய்வம் தமிழ்ச்சுவை அறியாத் தெய்வமாக இருந்தால் அதனை அவ்வகையில் தாழ்ந்தது என்று கூறி இகழ் கின்றார். தெய்வத்தினும் மேலாகத் தமிழைப் போற்றும் உணர் வினையும், தமிழால் இறைவனை வழிபட முடியும் என்னும் கருத்தினையும் அடிகளார் தமிழலங்காரத்தின் வழி தெளிவு படுத்துகிறார்.

அடிகளார் பாடல்கள் பல்வேறு அழகுகளில் அமைந்திருப் பினும் மக்கள் பேசுகின்ற பேச்சு வழக்கினைப் போற்றியிருப்பது இவர் மக்கள்மேல் வைத்த பேரன்பினைக் காட்டுகிறது. தவத்திரு. தண்டபாணி அடிகளார் சொல்லையும், தொடரையும் தமக்கே உரிய தனித்தன்மையோடு கையாண்டுள்ளார். சொற்பெருக்கும், மொழிப்புலமையும், கற்பனை வளமும், ஆழமாக எண்ணப் பாங்கும் அவரது பாடல்களில் தெளிவாகத் தெரிகின்றன.

தமிழலங்காரப் பாடல்களில் தமக்கு முன் படைத்த படைப் பாசிரியர்களின் புலமை நயத்தைத் தமிழுக்குக் கிடைத்த உயர் பேறாக மதித்துள்ளார். அத்தனை அருளாளர்களின் படைப்புக் களையும் ஆழமாகப் புரிந்து, பதிந்து, பாடுபொருளிலும், வடிவத்திலும், இசையிலும், யாப்பிலும், தோய்ந்திருக்கிறார் என்பதைத் தமிழலங்காரம் கற்பவர்கள் உணரலாம்.

எண்ணங்களை வெளிப்படுத்தும் உணர்வுகளுக்கேற்பவும், இடத்திற்குப் பொருந்தவும் பொலிவூட்டக்கூடிய சொற்களைத் தெரிந்து பயன்படுத்தும் சொல்லாட்சித்திறம் அடிகளாரிடம் அமைந்துள்ளது. தமிழலங்காரத்தின் இறுதிபாட்டில் இதனைப் பெருமைபடப் பாடுகிறார். அருட்பெரும் புலமை அருந்தமிழுக்கு அழகு என்ற வகையில்

"எண்வகைச் சந்தமும் பாடும் திறமும் இகல்வரை
விண்வயிற் செல்ல விடுக்கின்ற சத்தியும் மெய்யருளும்
கண்வரு காட்சியும், நோயும் பெருமைக் கவிஞர் வென்று
தன்வளிச் சாரல் பொதியை முன் ஈன்ற தமிழ்க்கழகே"

என்று பாடியுள்ளமை நோக்க அடிகளாரின் முடிந்த முடிவு தமிழைச் சந்தத்தால், பாட்டுத்திறத்தால், மெய்யருளால் கவிஞர் அலங்கரிக்க வேண்டும் என்ற பெருவிருப்பு புலப்படுகிறது. இவ்வாறு அடிகளாரின் எண்ணங்கள் இந்நூலில் வெளிப் படுகின்றன.

சுவாமிகள் கண்ட மணிவாசகர் - சில விவாதங்கள்

அ. மாதவி

இறைவன் மீது தாம் கொண்ட பற்றைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடியவர்களுள் மாணிக்கவாசகர் முதன்மை யானவர். இதன் காரணமாகவே அவர் பாடலைப் படிப்போர் பிறரும் அவரைப் போலவே உருகுவதையும், 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்ற பயில்மொழி தோன்றியுள்ளமையையும் இங்குக் குறிப்பிட வேண்டும். 'சிவபுராணம்' முதலாக 'அச்சோபதிகம்' ஈறாக 51 பதிகங்களில் இறைவனிடம் தான் கொண்ட அன்பை இதைவிடக் கூறமுடியாது எனும் அளவிற்குக் கற்பனை செய்து பாடி யுள்ளமை ஈண்டு கருதத்தக்கதாகும். இத்தகைய செயல்களின் மூலமாகவும் இறைவன் இவர்பொருட்டு நிகழ்த்திய திருவிளை யாடல்கள் மூலமாகவும் இவரது வரலாறு பல்வேறு வகைகளில் பலவிதக் கற்பனைக் கதைகளுடன் வழங்கப்பட்டு வருகிறது. இவரது வரலாற்றைக் குறிப்பதற்கென்றே பலவேறு புராணங் களும் தோற்றம் பெற்று உள்ளன. அவ்வகையில் சென்ற நூற்றாண்டில் (19) வாழ்ந்து மறைந்தவராகிய தமிழ்ப்புலவர் களுள் தலையாயவராகிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமி களும் தாம் இயற்றிய புலவர் புராணத்துள் 'மணிவாசகர்' வரலாற்றைக் குறித்துச் சென்றுள்ளார்.

மணிவாசகரின் வரலாற்றைப் பற்றியோ அவரது காலத்தைப் பற்றியோ ஆராய்வது இங்கு நோக்கமல்ல. மாறாகச் சுவாமி களின் பார்வையில் மணிவாசகர் எவ்வாறு தென்பட்டுள்ளார், பிறருக்கும் இவர் சுட்டியுள்ள மணிவாசகர் வாழ்க்கை நிகழ்ச்சி களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன என்று காண்பதையே இவ்வெழுத்துரை நோக்கமாகவும் முதன்மையான பாடுபொருளாகவும் கொண்டு அமைகின்றது.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும் புலவர் புராணமும்

சுவாமிகள் திருநெல்வேலியில் தோன்றி முருகன் திருவருளால் இளமையிலேயே கவிபாடும் ஆற்றலுடையவரானார். தமிழிடத்து ஆழ்ந்த பற்றுடையவராய்ச் 'செந்தமிழே உயர்வென்று சீட்டு எலக்குத் தந்தனன் கந்தன்' என்று உளம் மகிழ்ந்தவராய்க் காணப்படுகின்றார். சந்தப் பாடல்கள் இவரால் எழுச்சியுற்றன. 'அறுவகை இலக்கணம்' 'சந்தவண்ணப் பாடல்களுக்கு இலக்கணமாக 'வண்ணத்தியல்பு' போன்றவை இவரின் இலக்கண நூல்கள்.

எண்ணுதற்கினிய வண்ணத் தமிழ் மலர்களால் தமிழ்த் தெய்வத்தைப் போற்றிய சுவாமிகள் தில்லை ஆயிரம், பழனி ஆயிரம், அரங்கத்து ஆயிரம் என இவர் ஆயிரம் ஆயிரமாய்ப் பாடிய பாடல்களில் இன்று கிடைப்பவை 50,000 பாடல்கள் மட்டுமே.

அவ்வகையில் இவர் பாடிய 'புலவர் புராணம்' பல தமிழ்ப் பெரியார்களின் வரலாறுகளைச் சுட்டிச் செல்கின்றது. பெரும் புகழ் பெற்று விளங்கிய புலவர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் மறைந்துவிட்டனவே என்று ஆற்றாமையோடு தம் காலத்துத் தாம் செவிவழிச் செய்திகளாகக் கேட்டவற்றைப் பதிவு செய்து வைத்துவிட வேண்டும் என்ற விருப்பத்தின் வெளிப்பாடே இப்புலவர் புராணமாகும். ஆய்வு நெறியில் செல்லாது செவிவழிச் செய்திகளாகக் கொண்டே இந்நூல் புனையப்பட்டுள்ளது என்பதற்கு 'ஆதாரம் உலகோர் நவில் மொழியும்' (25) என்ற பாடல் வரியின் மூலம் புலப்படுகின்றது.

நூலாகத் தொகுக்கப்பட்டுள்ள இப்புலவர் புராணத்துள் பல ஆன்மிக ஞானிகளின் வாழ்க்கை வரலாறுகள் விருத்தப் பாடல்களாக அமைந்துள்ளன. இவ்வாறு அமைந்துள்ள இத்தொகுப்புநூல் ஆன்மிகத் தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்துள்ள கொடையெனில் மிகையாகாது. இதுவரை மூன்று பதிப்புகளாக இந்நூல் வெளிவந்துள்ளது. மூன்றாம் பதிப்பு 1994 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. நூலினுள் அகத்திய முனிவர் சருக்கம் முதலாகக் 'கண்கண்ட புலவர் சருக்கம்' ஈறாக, (குலசேகர ஆழ்வார் சருக்கம் சுவாமிகளின் மகன் இயற்றியது) 72 புலவர்

பெருமக்களைப் பற்றி 3005 பாடல்களைக் கொண்டதாய் 588 பக்கங்களைக் கொண்டதாக இப்பதிப்பு அமைந்துள்ளது.

சுவாமிகள் கண்ட மணிவாசகர்

சைவத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் மட்டுமல்லாது பிற மதத்தினரும் வியந்துபோற்றும் பக்திமையும் கவித்திறமும் வாய்க்கப் பெற்றவர் மணிவாசகர். இவரது வரலாறு பல பாவலர்களாலும் பக்தியாளர்களாலும் வியந்து போற்றுதற் குரியதாக அமைந்துள்ளது. இவரது பாடல்கள் வள்ளலார் போன்றோரை, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய பெருந்தகைமையாளர்களை உருவாக்கியுள்ளன. இவ்வளவில் அமையாது கிறித்துவ மதத்தலைவராகிய ஜி. யு. போப் அவர்கள் மணிவாசகர் வரலாறு, பாடல்கள் முதலியவற்றைக் கற்று மாணிக்கவாசகரின் வரலாற்றைக் குறித்து ஆய்வுக் கட்டுரை எழுதும் அளவிற்குச் சிறப்புடையவராக இருக்கின்றார்.

இத்தகு சிறப்புகளைக் கொண்டுள்ள மணிவாசகர் சுவாமி களின் 'புலவர் புராணத்துள்' இடம்பிடித்தது வியப்பொன்று மில்லை. சுவாமிகள் மணிவாசகர் மீது அளவற்ற ஈடுபாடும் பற்றும் கொண்டு இருந்தார் என்பதற்கு அவரது பாடல்கள் சான்றாகின்றன. இவ்வெழுத்துரை சுவாமிகள் பார்வையில் மணிவாசகர் எங்ஙனம் காட்சியளிக்கின்றார் என்பதைக் காண்ப தாக இருந்தாலும் பிறர் சுட்டிய அல்லது மாணிக்கரின் குறிப்பு களாகத் திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் காணப்படும் வரலாற்றிலிருந்து சுவாமிகள் சிற்சில இடங்களில் மாறுபடு கின்றார். இத்தகைய மாறுபாடுகளைச் சுட்டிக்காட்டவே இவ்வெழுத்துரைக்குச் 'சுவாமிகள் கண்ட மணிவாசகர் – சில விவாதங்கள்' என்ற தலைப்பு அமைக்கப்பட்டது.

மணிவாசகரின் கதை பல புராணங்களில் பேசப்பட்டாலும் அவரவரும் தத்தம் விருப்பிற்கேற்பவே அவரைப் படைத்தளித்து உள்ளனர். இதுவரையில் மணிவாசகர் பற்றி வந்துள்ள புராணங் களில் 'புலவர் புராணம்' மேற்கூறிய புராணங்கள் அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டு படைக்கப் பட்டதாகவே தோற்றமளிக் கின்றது. இதனை 'மணிவாசகர் சருக்கம்' முழுமையும் காணலாம்.

மணிவாசகர் வாழ்வின் நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்றாகக் காணும்போது இவ்வுண்மை தெற்றெனப் புலனாகும்.

மணிவாசகரின் முற்பிறப்பு

மணிவாசகர் முற்பிறவியில் சிவகணங்களுள் ஒருவராக இருந்து அதன்பின் இறைவன் கட்டளைப்படிப் புவியில் தோன்றினார் என்பது ஆய்வாளர் பலர் முடிபாகும். ஆனால் இக்கருத்துக்கு மாற்றாகச் சுவாமிகள் மணிவாசகர் முற்பிறப் பினைச் சுட்டுகின்றார்.

"வானோர் புகழ்சீர் உத்தர கோச மங்கை நகர்தன்னில்
மானோர் கையில் கொள்ளாச் சிவன்நேர் வடிவத் தொருகுரவன்
மீனோ டுறழ்கண் ணினர்மால் அறவே வென்றபல் சீடரொடும்
தானோர் துணையா உற்றனன்; நெடுநாள் தவம்முற் றியபின்னர் (புலவர் புராணம், 3)

அத்தலைவன், 'முத்திக் கிடைபோகுவன் இனி' என்று கூறவும் அங்கிருந்த சீடர் அனைவரும் பத்தித்துறையால் கெஞ்சி யாம் செல்லுதற்குரிய வழி என்ன என்று வினவவும் அதற்கு அவன் இத்திக்கினில் இக்குளத்தினில் ஒளி ஒன்று எய்திடும் அதில் ஏகினால் 'சித்தித்திடும் மெய்க்கதி' எனச் சொல்லி மறைந்தான் அவ்வாறே சின்னாள் கழித்துப் பொய்கையில் தீப்பிழம்பு. தோன்றிற்று அனைவரும் சென்று அதில் மூழ்கினர். ஆனால் பாதுகைகளை ஏந்தும் தொண்டன் ஒருவன் மட்டும் 'பயம்மிக்கு அணுகிலன்', அப்போதே அச்சோதியும் மறைந்தது. நொந்து மனம் புண்பட்டு, உடல் போயபின் சாருபப் பதம் அடைந்தனன். அடைந்தும் இறைவனைக் கொன்றை மலர் களைப் பாதத்தில் அனுதினமும் வைத்து கண்களில் நீர் சோர வணங்கினான். இது சுவாமிகள் கூறும் மணிவாசகரின் முற்பிறப்புக் கதை. ஆனால் இந்நிகழ்ச்சி பிற புராணங்களில் மணிவாசகர் பிறந்து அமைச்சராய்ப் பொறுப்பேற்று குதிரை வாங்கப் போய்க் குருவைக் கண்டு இறுதியில் இறைவனைக்கு வாக இறுதியில் இறைவனைக் குருவாக உத்தரகோசமங்கைக்கு மீண்டும் சென்று வணங்குவதாகக் கூறுகின்றன. ஆனால் திரு உத்தரகோசமங்கைப் புராணத்தில் இச்செய்தியே வேறு வடிவில் ஆனால் முற்பிறப்புக் கதையாகக் குறிப்பிடப் படுகின்றது.

மேலும் அமைச்சன் என்ற நிலையிலிருந்து மணிவாசகர் மீண்ட பின்னர் திருப்பெருந்துறை சென்று அதன்பின் பிற தலங்களுக்குச் சென்றதாகச் சுவாமிகளின் புராணம் கூறுகின்றது. ஆனால் பிற புராணங்கள் மணிவாசகர் முதலில் திருஉத்தரகோச மங்கை சென்றதாகவே கூறுகின்றன.

முதலில் குதிரை வாங்குதற்பொருட்டுத் திருப்பெருந்துறை சென்ற மணிவாசகர் அமைச்ச பதவியிலிருந்து நீங்கிய பின்பு இரண்டாம் முறையும் திருப்பெருந்துறைக்குச் சென்றார் என் பதற்குத் திருவாசகத்தில் சான்று உள்ளது.

''இறைவன் வாதவூரடிகளைத் 'தில்லைக்கு வருக' எனப் பணித்து மறைந்த நிலையில் உடனிருந்த அடியார்கள் அப்பெருமானது பிரிவிற்காற்றாது தீப்பாய்ந்த அன்பின் திறத்தையும் தமது தனிமையையும்,

'நாயினேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங்கொழித்தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்த வந்திலாதார் எரியிற் பாயவும்'

என வரும் தொடர்களில் அடிகள் தெளிவாக விளக்கியுள்ளார்.

இங்கெடுத்துக் காட்டியுள்ள குறிப்பின்வழி, குருவாக வந்த இறைவனும் உடன் வந்த அடியார்களும் மறைந்த நிலையில் அடிகளாற் பாடப்பெற்ற பகுதி திருச்சதகம் என்பது நன்கு தெளியப்படும்.

மேலும், ''திருவாதவூரடிகள் பெருந்துறையீசன் பணித் தருளிய வண்ணம் திருவுத்தரகோசமங்கையை யடைந்து நீத்தல் விண்ணப்பம் பாடி முன்பு திருப்பெருந்துறையிற் கண்ட குருவடி வினை அங்கேயும் கண்டு மகிழ்ந்தனரென்பது,

'தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கைத்
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்

பங்குலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான்'

என வரும் அடிகள் வாய்மொழியால் இனிது விளங்கும்

மேலும் நரியைப் பரியாக மாற்றி இறைவன் குதிரைச் சேவகனாகக் கொண்டு வந்து ஒப்படைத்தது. பரி–நரியாக மாறியது பிட்டு வாணிச்சியின் கதை போன்ற நிகழ்ச்சிகளையும் மணிவாசகர் ஒன்றன்பின் ஒன்றாகச் சுட்டிச் செல்கின்றது. இவற்றின் வழியே பிற புராணங்கள் சுட்டுவதைவிடவும் பொய்கையில் தீதோன்றி மற்றைய சீடர்கள் மறைந்த நிகழ்ச்சி முற்பிறப்பு நிகழ்ச்சியல்லவென்றும் மணிவாசகராக இருந்த காலத்து நிகழ்ந்த நிகழ்வுகள் என்பதும் மேற்சுட்டிய திருவாசகத் தொடர்கள் குறிப்பிடுகின்றன. சுவாமிகள் குறித்தவாறு முற்பிறப்பு நிகழ்ச்சியாக இந்நிகழ்ச்சி அமையவில்லை என்பது இதன்வழிப் புலனாகின்றது.

ஆமாத்தியர் எனும் அந்தணர் குலத்தில் தோன்றல்

மணிவாசகர் ஆமாத்தியர், அந்தணர்களில் மிக்கோனாகிய அவன் மைந்தன் வேண்டித் தவம் நனி செய்ய, கந்தன் தாதையின் அருளால் மணிவாசகர் வந்து பிறந்தார் என்கின்றார். இங்கு எந்த இடத்திலும் பெற்றோரின் பெயரையோ மணிவாசகரின் இயற்பெயரையோ சுவாமிகள் குறிக்கவேயில்லை. வளர்ந்து வாலிபப் பருவம் எய்திய பின்னரே அன்னவரைப் 'பிரமராயர்' எனச் சிலரும், 'வாதவூரன்' என்று பலரும் உரைத்தனர் என்கின்றார். இவரது மாட்சி தேசம் முழுதும் வழங்குவதைக் கேட்டுத் தென்னவன் இவரைத் தன்னுடைய அமைச்சராக விருப்பத்துடன் கொண்டார் எனவும் குறிக்கின்றார் சுவாமிகள். இக்காட்சி இராகவன் சபையில் வசிட்டர் வாழ்ந்தாற்போல் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

குருந்தைப் பாங்கர் வேதியக் குருவாய் ஈசன்

மணிவாசகர் பார்வையில் குருந்தை மரநிழலில் இறைவன் குருவாய் எழுந்தருளியிருந்த தன்மையைப் பலரும் பலவாறு புனைந்துரைத்துள்ளனர். சுவாமிகளோ, ''மின்னுறழ் சடிலக் காட்டோர் வேதியக் குருவாய் ஈசன், பற்பல்மெய் யடியார் சூழப் பரிந்துவீற் றிருப்பக் கண்டான்'' என்று குறிப்பிடுகின்றார்.

எந்த இடத்திலும் சீடர்களின் எண்ணிக்கைக் குறிக்கப் பெற வில்லை.

இத்தகைய குருவினைக் கண்டவுடனே, பொற்பணம், புரவி வேட்கை, புரவலன் ஆணை, ஆதி அற்பமும் மதியாதவனாகி இறைவனை இறைஞ்சி நின்றான். அவ்வாறு மணிவாசகர் இறைஞ்சுதலைக் கண்ட குரு, யாவன் நீ? ஈண்டேன் வந்தாய்? என்னை நீ இறைஞ்சல் ஏன்? நின் ஆவல் யாது என்று அடுக்கடுக் காய் வினவுதலையும் அதற்கு இறைவனாகிய குருவின்முன் மணிவாசகர் பதிலுரைத்தலுமென யாரும் படைத்துக்காட்டா ஒரு நிகழ்ச்சியைச் சுவாமிகள் மிக அழகாகப் படைத்தளிக் கின்றார்.

மேலும், 'நின்னை, நின் உடலை, நின்பால் நிகழ்பல பொருளோடு ஈந்தால், பின்னைநின் விருப்பம் முற்றுப் பெறும்படி புரிவேன்' என்று குருவே அனைத்தையும் கேட்ட தாகவும் படைத்துள்ளார். இந்நிகழ்ச்சிகள் பிற புராணங்களில் காணக் கிடைக்காதவையாகும். 'எற்குமுன் பனிமாய்ந்தாற் போல' உலகப் பற்றுகள் அனைத்தும் மணிவாசகரைவிட்டு நீங்கின என்று குறிப்பிடுகின்றார். அக்கணமே குரு தன் சீடர் களுடன் மறைந்துவிட்டார் என்கின்றார்.

பிற புராணங்களில் மணிவாசகர் அரசனிடம் திரும்பவும் சென்று மீளவும் வரும்வரையில் குரு அங்கேயே காத்திருந்ததாகக் கூறப்படப் புலவர் புராணத்தில் ஆசிரியர் உடனடியாகவே குரு மறைந்ததைச் சுட்டிச் செல்கின்றார். அதன்பின் தானாகவே தான் கொண்டு சென்ற பொருள்களைக் கொண்டு கோயில் திருப்பணி செய்வித்துக் களிப்புடன் உறைந்ததாகக் குறிப்பிடப் படுகின்றது.

பரிகள் நின்பால் எய்திடும்

குதிரை வாங்கக் கொண்டு சென்ற பொருளனைத்தையும் திருப்பெருந்துறை கோயில் திருப்பணிக்குச் செலவிட்டுவிட, அதைக் கண்ட மற்றையோர் மன்னனிடம் முறையிட, மன்னவனும் குதிரைகள் தம்மோடு வராவிடில் ஒறுக்கும் என்று ஓலையிட, முன்னம் மந்திரியாய்ப் பின்பு முனிவனாம் மூர்த்தியாகிய மணிவாசகர் 'சற்குருபரன்' சொல் நம்பி மதுரைக்

கேகி 'சினமுதற்செய்யேல்' இன்னநாளில் பரிகள் நின்பால் எய்திடும் என்று கூறினார். இங்கு இன்னநாள் என்று மட்டுமே குறிக்கப்படுகிறதே அல்லாமல் வேறு குறிப்புகள் எதுவும் இல்லை. ஆனால்,

'குறித்தஆ வணிமூ லத்திரு நாளில்
குலநரி களைப் பரியாக்கி' (பாடல் 31)

என்று குறித்துள்ளார் ஆசிரியர். முதலில் நாள் எதுவும் சுட்டிக் குறிப்பிடப்படவில்லை என்றபோதும் 'குறித்த ஆவணி மூலத்திருநாள்' என்று பின்னர்க் குறிக்கப்படுவதும் இங்குச் சுட்டத்தக்கது.

முறை பிறழ்ந்தனம் என்றுளம்மிக நாணி

நரிகள் அனைத்தையும் பரிகளாக மாற்றிக்கொண்டு மறித்தடங்கரத்தார் ஆகிய சிவன் 'பரிமேலழகராய்' வருவதைக் கண்டு மன்னனும் மற்றையோரும் தரையில் வாழும் பரிகள் அல்ல இவை வானம் தனில் உளவே என வியந்து பாராட்டவும், குதிரைச் சேவகனைக் கண்ட மன்னன் நிலை கூறப்படு கின்றது.

"பிறைமறைத் தொருபொற் கலைபுனை தலையாற்
பிரமையால் கைகுவித் ததற்பின்
'முறைபிறழ்ந் தனம்' என் றுளம்மிக நாணி,
முகமலர் குவியநின் றனனே" (பாடல். 32)

பிறநூல்களில் மன்னன் வணங்க நினைத்துத் தன்னிலை உணர்ந்து இருக்கையில் அமர்ந்துவிட்டதாகக் கூறப்பட இங்கு மன்னவன் வணங்கி அதன்பின் தன்னிலை உணர்ந்தமை சுட்டப்படுகின்றது. இதில் இறைவனுக்குச் சிறப்பளித்துப் பெருமைபடுத்திய திறம் சுவாமிகளையே சாரும். பிற புராணங் களில் 'தாம் கொடுத்தனுப்பிய பொன் ஒரு குதிரைக்கும் விலையாகாது' என்று மன்னவனே நினைப்பது போன்றிருக் கின்றது. ஆனால், இப்புராணத்தில்,

'நின் அமைச்சன்
பொன்றரற் பொருட்பில் ஈங்கிவை கொணர்ந்தேம்;
போதுமட் டீகுதும் கோடி;
உன்தனக் குவைமுற் றொருபரி விலைக்கும்
ஒவ்வுறா; நீயும்நன் குணர்வாய்' (பாடல் 34)

என்று குதிரைச் சேவகனாக வந்த இறைவனே கூறுவதாகப் படைத்துள்ள திறமும் கருதத்தக்கது.

பிட்டுவாணிச்சியின் கூலியாள்

மணிவாசகரை வைகைச் சுடுமணலில் நிறுத்தி மன்னவன் சேவகர்கள் வருத்த, அதைக் கண்டு பொறாதவனாய் ஈசன் வைகையில் வெள்ளம் கரைபுரண்டோடச் செய்ய, வீட்டிற்கு ஒருவர் கரை அடைக்க வேண்டும் என்று காவலன் ஆணையிட்டான். இதனால் பிட்டுவிற்றுண்ணும் இயல்புடன் திரை நரைக் கூனுடல் ஒருத்தி இறைவனிடம் தனக்கோர் கூலியாள் வேண்டும் என்று இறைஞ்ச இறைவனே கூலியாளாய் வந்தான்.

இவ்வாறு வந்த இறைவன் தன் பங்கை ஒழுங்காக அடைக்காத காரணத்தினால் சேவகர் மன்னவனுக்குரைத்தனர். மன்னவனும் நேரில் வந்து சினம் மிக்கவனாய்க் கூலியாளினை அடித்தான். இச்செய்தி பிற நூல்களில் அரசனின் சேவகர்கள் அடித்ததாகக் கூறப்படுகின்றது. இந்நூலில் சுவாமிகள் மன்னனே நேரில் வந்து அடித்ததாகக் கூறுகின்றார். இந்நிகழ்வு கவி கூற்றாக மட்டுமல்லாது மன்னவன் கூற்றாகவும் அமைந்துள்ளது.

'அப்பரன் தன்னை அடித்தவெம் பாவம்
அகலுமா றறிகிலேன்' (பாடல். 48)

என்ற அடிகள் இச்செய்தியினை உணர்த்தும்.

அரசனுக்கு அறிவுரை

மணிவாசகரைப் பல வழிகளிலும் தண்டித்து இறுதியில் உண்மையினை உணர்ந்த அரசன் தன் தவறுகளுக்காக மிகவருந்தி, 'நீ செய்யும் தவநிலை யதன்மாண் பறிகிலேன் இழைத்த தவறெலாம் பொறுத்தி' என்றிரந்து (பாடல். 47) நீ எந்தச் செயலைச் செய்யச் சொன்னாலும் செய்கிறேன் என்று வணங்கி நின்றான். உன்னை நான் சினவேன். நீ முன்னர் செய்த தவமே முதலும் முடிவும் இல்லாதவனாகிய இறைவன் நின்முன் தோற்றம் பெற்றுள்ளான். வேறு கடவுளரை வணங்காது சிவனையே தலைவனாகக் கொண்டு வழிபடு. அரசப் பதவியை உனக்குச் சூட்டித் தவத்தினை மேற்கொள்வாயாக என்று மணிவாசகர் கூறுகின்றார்.

இதன்பின் பல தலங்களுக்கும் சென்று வழிபட்ட மணிவாசகர் தில்லையில் சென்று தங்கினார். இறைவன் ஆணைப்படிப் புத்தரை வாதில் வென்று ஊமைப் பெண்ணைப் பேசச் செய்து சைவத்தின் – சிவனின் மேன்மையைச் சிறப்பை உலகிற்கு உணர்த்தினார். மணிவாசகரே இலங்கை சென்றதாகப் பிற நூல்களில் குறிப்புகள் காணப்பட சுவாமிகளின் நூலில் இத்தகு குறிப்புகள் எதுவும் காணப்பெறவில்லை.

கைதனில் வெள்ளேட்டுக் கனமும் எழுத்தாணியும்

நான் பாடிய கவி அனைத்தையும் ஒரு நூலில் வரைந்து தர வித்தகன் ஒருவன் வேண்டும் என மணிவாசகர் விழைவுற்றார். இதைக் கண்ட இறைவன் கையில் வெள்ளேட்டுக் கனமும் எழுத் தாணியும் கொண்டவனாய் மணிவாசகர் முன்வந்து நின்றான்.

'என்பாடல் உள்ளனநன் கெழுதவல்லாயோ?'

எனலும்,

'அன்பார ஒருக்காற்கேட் டங்ஙனமே வரைகிற்பேன்'

(பாடல், 64)

என்று கூறவும்,

'ஒருக்கால்கேட் டங்ஙனமே ஊசியினால் பொறித்தல் வியந்து'
இருக்கால்முக் கால்பார்த்தும் யாதொன்றும் பிழைகாணார்'

(பாடல், 65)

வந்துள்ளவன் இறைவனே என்றுணராது நின்ற மணிவாசகரின் தன்மையைச் சுவாமிகள் அழகாகப் படம்பிடிக்கின்றார்.

'கைத்துரிதம் கண்டும்இவர் கண்ணுதல்என் றுணராராய்
அத்துவித சித்தாந்தத் தவரும்மருண் டனரானால்
பித்துடையா ரனையடிறர் பிரானெதிர்வந் துற்றாலும்
சித்துமிகச் செய்தாலும் திருடன்என்கை முறைதானே'

என்பன இவ்வடிகள். (பாடல், 67)

இதன்பின் அவையிடை அச்சுவடியைக் கண்ட அனைவரும் அதிசயித்து இதன் பொருள் யாது என்று மணிவாசகரை வினவ அதற்கு அவர் 'இன்னதுதான் இதன் பயன்' என்றியம்பிய சொல்லுடன் இறைவன் பொன்அவையில் புகுந்தார். போன வரை அதன்பின் காணவில்லை. என்னவித முத்தியினும் இது மேலானது என்று மற்றையோர் வியந்து போற்றினர் என்றும்

கூறி இத்தகைய புலவரும் சிவனின் கையால் எழுதச் செய்யும் வாய்ப்புப் பெற்றவரும் வேறெவரும் இல்லை என்று அவரைச் சுவாமிகளே வியந்து போற்றுகின்றதனைக் காணமுடிகின்றது.

இவ்வாறு சுவாமிகள் கண்ட மணிவாசகரைக் காண அவரது பாடல்கள் துணைபுரிகின்றன.

முடிவுரை

மேற்குறிப்பட்டவற்றிலிருந்து தொகுக்கப்பட்டவை இங்கு முடிவுரைகளாகக் கொடுக்கப்படுகின்றன.

1. மணிவாசகரின் வரலாறு பல புலவர்களாலும் பக்தி மான்களாலும் படைக்கப்பட்டுள்ளமை போன்று சுவாமிகளும் அவரது வரலாற்றைப் படைத்துள்ளமை.

2. இதுவரை வந்துள்ள மணிவாசகரின் வரலாற்றுச் செய்திகளை-நிகழ்வுகளை உள்வாங்கிக் கொண்டு படைத்தளித்த தன்மை.

3. சீடர் அனைவரும் சுடரில் மூழ்கி மாய, மணிவாசகர் மட்டும் தனித்திருந்த செய்தி மற்றைய புராணங்களில் இப்பிறப்பில் நிகழ்ந்ததாகக் கூறப்படச் சுவாமிகளோ இதனை முற்பிறப்பு நிகழ்வாகச் சுட்டியுள்ளமை.

4. ஆமாத்தியர் குடியில் அந்தணர் மகனாய்த் தோன்றி அரசன் தென்னவனின் அமைச்சனாய்ப் பொறுப்பேற்றமை. 'பிரமராயர்' 'வாதவூரர்' என்று பல பெயரில் அழைக்கப் பட்டமை.

5. திருப்பெருந்துறை இறைவனிடம் இறைஞ்சி நின்றமை குரு அவருக்கு வேண்டிய வரமளித்து மறைந்தமை.

6. 'ஆவணி மூலம்' என்று எக்குறிப்பும் முதலில் சுட்டப் பெறாது இருக்கின்ற தன்மை. நரிகளைப் பரிகளாக மாற்றிப் 'பரிமேலழகராய்' இறைவன் வந்தபோது அரசன் வணங்கிய முறைமை.

7. பிட்டுவாணிச்சியின் கூலியாளாய் வந்து மன்னவன் கையால் பிரம்படி பட்டமை. ஏடும் எழுத்தாணியும் கொண்டு மணிவாசகரின் கவிதைச் சரங்களை ஏட்டில் தொடுத்தமை. அதன் வழித் தன்னுடைய ஒளிமிகு சோதியில் கலக்கச் செய்தமை என இவற்றைக் கருதலாம்.

இவ்வாறு சுவாமிகள் மணிவாசகர் இறைவன் மீது கொண்ட ஈடுபாட்டைக் கூறுவதன் வாயிலாகத் தன் மணிவாசக ஈடுபாட்டை உணர்த்துகின்றார் எனலாம்.

அருணகிரிநாதர் புராணம்

அழ. முத்துப்பழனியப்பன்

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்ததோர் இடத்தைப் பெறுபவர். படைப்பாளி என்ற முறையில் ஆயிரக் கணக்கான பாடல்களை அருளியவர்; அறுவகை இலக்கண நூல் இயம்பியவர்; சந்தப்பா இதுதான் என்று வரையறுத்தவர் இப்படிப் பல பெருமைகளை உடையவர். 'கௌமாரம்' என்ற நெறி வளர்வதற்கு அவரே காரணர்; கௌமார மடாலயங்கள் தோன்றிச் செழிக்க அருள் பாலித்தவர். தமிழே உயர்ச்சி எனத் தரணிக்கு எல்லாம் அறைகூவியவர். ஊர்ஊராய் நடந்து நடந்து தமிழ்ப்பா பாடியவர்; பலி பெறும் சிறுதெய்வ வழிபாட்டு நெறியை எதிர்க்கச் செய்தவர்; சைவ நெறியைப் பரப்பிய தண்மையாளர்; ஆங்கில ஆட்சியைத் தமது பாடல்களில் எதிர்த்துப் பாடிய முதலாம் விடுதலைக் கவிஞன் – இப்படிப் பல்வேறு துறைகளிலும் தன் முத்திரையைப் பதித்துத் துறை தோறும் சிறந்து நிற்கும் தூய நற்றமிழ்த் துறவி தண்டபாணி சுவாமிகள் என்றால் அதில் மிகை ஏதும் இல்லை.

சுவாமிகள் சித்தி அடைந்து, நூறாண்டுகள் ஆகியும், அவர் தம் நூல்களிற் பல இன்னும் அச்சு வாகனம் ஏறாது இருப்பது தமிழர்தம் தவக் குறைவேயாம். அவரது நூல்களில் ஒன்று 'அருணகிரிநாதர் புராணம்'. இது கழக வெளியீடாக வெளி வந்துள்ளது. அதைப் பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரை.

தண்டபாணி சுவாமிகள் வேறுபல புராணங்களையும் சரிதங் களையும் பாடியுள்ளார். அவர் காலத்தில் அவர் பெற்ற அல்லது அவருக்குக் கிடைத்த செய்திகளைக் கொண்டு அவற்றைப் பாடி யுள்ளார். இன்றைய சூழலில், அவரது சரிதைகளிற் சில வரலாற்று ஆய்வுக்கு ஒப்ப முடிந்ததாக இல்லை. எனினும் அதை அவருடைய குறையாகக் கருதக் கூடாது. யாரும் அதுவரை செல்லத் தயங்கிய பல துறைகளில் அவர் முதன்

முதலில் நீண்ட காலத்திற்குப்பின் நுழைந்துள்ளார். ஆகவே வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அவர் கூறும் செய்திகள் குறை யுடையதாக இருக்கலாம்; ஆனால் அவருடைய கவிதைகள் கருத்தாழம் மிக்கவை; விழுமியவை; இழும் எனச் செல்லும் இயல்புடையவை; படிப்போரும், பயில்வோரும் மீண்டும் மீண்டும் தொடத் தூண்டும் இயல்புடையவை. இந்த நோக்கில்தான் அவருடைய அருணகிரிநாதர் புராணத்தையும் பார்க்க வேண்டும்.

அருணகிரிநாதர் புராணம் 439 பாடல்கள் கொண்டவை. பெரும்பாலும் விருத்தம். அதன்பின் அருணகிரிநாத அடிகள் கிளி வடிவுடன் கந்தமாதனம் சென்று முருகன் திருமுன் பாடியதாக உள்ள ஞான அநுபூதி என்ற தலைப்பில் 12 பாடல்களைப் பிற்சேர்க்கையாகப் பெற்றுப் பதிப்பு நிறைவடைகிறது. நூல் பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் நீங்கலாக, 1. பூருவ புண்ணியச் சருக்கம், 2. திரு. அவதாரச் சருக்கம், 3. மாயை விளையாட்டுச் சருக்கம், 4. அருட்பேற்றுச் சருக்கம், 5. வில்லிப் புத்தூர் ஆழ்வார் கலகச் சருக்கம், 6. சம்பந்தாண்டான் பகைமைச் சருக்கம், 7. பாரிசாதச் சருக்கம், 8. கிளி வாழ்க்கைச் சருக்கம், 9. கோபுரத்துச் சருக்கம் என்று ஒன்பது சருக்கங் களைக் கொண்டதாக மிளிர்கின்றது.

பூருவ புண்ணியச் சருக்கம்

பூருவ புண்ணியச் சருக்கத்தில் அருணகிரியாரின் முற்பிறவி பேசப்படுகிறது. அவர், தமிழ்மணம் கமழ்தென்றல் வீசும் பொதியையில் வாழ்ந்த தமிழ்த்தென்றல் அகத்தியர் மாறு வேடம் இட்டுத் திரிந்தபோது, அவரை உணர்ந்து அவர் அருகில் வாழ்ந்த நாயாக விளங்கினார். அகத்தியர் அந்த நாயின் வேண்டுகோளுக்கு இணங்க, அதை இந்திரன் ஆக்கினார். இவர் இந்திரன் ஆனதும், முன்னர் இருந்த இந்திரனைச் சிறை செய்தார். (நூறு அசுவமேத யாகம் செய்தால் இந்திர பதவி கிடைக்கும். இந்திரப் பதவி பெறுவோர், பதவியில் உள்ள இந்திரனைச் சிறை செய்வர். இவர் யாகம் செய்யாமல் அகத்தியர் அருளால் இந்திரன் ஆனார். இவர் சிறை செய்த இந்திரனுக்கு முன்னரும், ஓர் இந்திரன் சிறையில் இருந்தான்) இவர் காலத்துக்குப் பின் இன்னொரு இந்திரன் இவரைச் சிறை

செய்தான். இவ்வாறு ஐந்து இந்திரர் சிறைப்பட்டனர். இவர்கள் மறுபிறவியில் பாண்டவர் ஆனினர். இவர் மூன்றாம் இந்திரன் ஆனதால் மறுபிறவியில் அருச்சுனன் ஆகப் பிறந்தார்; அவருக்கு அடுத்த பிறவியில் கண்ணப்பர் ஆனார். அவருக்குப்பின் நக்கீரர் ஆனார். அடுத்த பிறவியில் பொய்ய மொழிப் புலவர் எனும் புலவராகத் தோன்றினார். இவரே மீண்டும் அருணகிரிநாதராக அவதரித்தார். (அடிகள் தாம் அருணகிரிநாதரின் அம்சம் என்றும் கூறிக் கொள்வார். அந்தச் சரிதத்தை யான் பாட மாட்டேன் என்றும் பின்னர் யாராவது பாடுங்கள் என்று குறிப்பாற் கூறுவர் – கோபுரத்துச் சருக்கம் பாடல் 51)

இவற்றின் வரலாற்று நிலையைப் பற்றி நாம் ஆராய முடியாது. ஆனால் அடிகள், அகத்தியர் பெருமையையும், அவரது அருளால் வந்த நாயின் பெருமையையும், இந்திரன் பெருமையையும், நக்கீரர் பெருமையையும், பொய்யாமொழிப் புலவர் பெருமையையும் ஒருங்கு இணைக்கிறார். இவர்கள் தமிழால் பெருமை பெற்றவர்கள் என்று சுட்டுகிறார். பொய்யா மொழிப் புலவர் சரிதையைச் சிறப்புடன் பாடுகின்றார். 'முதிர் தமிழ்க் கவிதைப் பொய்யாமொழி' என்று சிறப்பிக்கின்றார். அவர் பாடிய தஞ்சைவாணன் கோவையைப்பற்றிப் பாடுகிறார். கோழியைப் பாடும் வாயால் குஞ்சினைப் பாட மாட்டேன் என்ற விரதம் கொண்டிருந்த அவரை முருகன், தன்னைப் பாட வைத்த பெருமையைப் பல பாடல்களில் விவரிக் கின்றார்.

அருணகிரியார் புராணம்

அருணகிரியார் அவதரித்ததைத் தனிச் சருக்கத்திற் பாடு கிறார். பட்டினத்தாரின் குழந்தை அருணகிரியார் கணிகை வயிற்றில் தோன்றினார் என்று கூறுகிறார். வரலாற்று இயல்பின்படி இது ஒப்ப முடிந்ததாக இது இல்லை. என்றாலும் பட்டினத்தார் எனும் பெயரில் வேறு யோகி எவரேனும் இடைக்காலத்தில் வாழ்ந்திருக்கக் கூடுமோ என்பது ஐயத்திற்கு உரிய ஒரு பிரச்சனை ஆகும்.

அருணகிரியார் அவதார நாளைக் குறிப்பிடும்போது அவர், "ஒரு புரட்டாசி மாதம், செவ்வாய்க் கிழமையில், உத்தர

நட்சத்திரத்தில் தனுசு இலக்கனத்தில் தோன்றினார்; இந்த முருகன் எனக்குக் கூறினான்'' என்கிறார்.

''ஆறதாம் திங்கள் மூன்றதாம் கிழமை
அரியநாள் பன்னிரண் டாகும்
ஊறணு கரிதாம் இலக்கினம் ஒன்பா
னாம்அவன் உதித்தபோ தென்கை
கோறல்உண் டுவப்பார் குலமறக் களைந்து
குலவும்வேற் குருபரன் தனக்கும்
நீறணி தகையால் தவம்முதிர்ந் தவர்போல்
நிலவும்என் றனக்கும்நிச் சயமே''

(அவதாரச் சருக்கம் பாடல் 44)

அருணகிரியார் இறைவன் திருவடியை அடைந்த காலமும் ''இதே மாதம் (புரட்டாசி); இதே நாள் (பன்னிரண்டு); இதே இலக்கினம் ஆனால் கிழமை மட்டும் திங்கட் கிழமை என்று முருகன் கூறியதாகக் கூறுகிறார்.

''என்றவேள் கிழமை மட்டும்
இரண்டதாம் எனவும் சொன்னான்'

(கிளி வாழ்க்கைச் சருக்கம் பாடல் 22)

மாயை விளையாட்டுச் சருக்கம்

மாயை விளையாட்டுச் சருக்கத்தில் அருணகிரியின் வளர்ப்பு முறைகளை விரிவாகப் பாடுகிறார் அடிகள். இவருக்கு ஒரு தமக்கை இருந்தார். அவர்தான் இவரைத் திருத்திப் பணி கொள்ள முயல்கிறார். அன்னையார் மறைகிறார். முருகப்பிரானே கனவில் வந்து இவன் என் மகன் என உரைக்கின்றான். அருணகிரியார் சிற்றின்பத்தில் மிதமிஞ்சி ஈடுபடுகிறார். பெரு நோய் பீடிக்கிறது. எனினும் இவர் ஆர்வமும் ஆசையும் தீர்ந்த பாடில்லை. தமக்கையார் ஒரு நாள் கூறினார்:

'யானும் ஒரு கணிகையன்றி வேறிலன்நீ
விரும்பும் நலம் என்பால் துய்ப்பாய்;
ஏன் உனக்கு அத்தனை தூரம் செலும் வருத்தம்
சினக் குறிப்பு என்று எண்ணேல் ...' (பா. 26)

அது இவரைச் சுடுகின்றது. கோபுரத்தின் மீதேறிக் குதித்தார். முருகன் முழு வெண்ணீறும், கொற்றந் தண்டும், நல்லாடைக் கோவணமும் திகழத் தோன்றி ஆதரித்தான்; உபதேசித்தான்.

''யாம் உனக்குச் சொல்லல் கவுதார சடாக்கரம்
அதனை இயம்பச் சோம்பேல்;
பாமுழுதும் இயற்றும் நலம் பாலிக்கும்;
உலகமுற்றும் பரவச் செய்யும்;
நீமுனைநாள் இருந்தவிதம் தனை உணர்த்தும்;
சிலநாளில் நெடுவேற் செவ்வேள்
தாமுறுவற் கனிவாயார் தம்மோடு
மயில்மீதிற் துலங்கச் செய்யும்'' (பா. 29)

என்று கூறி உபதேசித்தான்.

அருணகிரியார் திருப்புகழ் ஓதினார். தமக்கையை அன்னை எனக் கூறி ஆறுதல் செய்தார். தலந்தோறும் சென்று பாடியருளினார். இவற்றை அருட்பேற்றுச் சருக்கத்தில் சிறப்பாகப் பாடி அருள்கின்றார். அடிகள் மக்கட் குலத்திற் பிறந்தும் தனித் தெய்வ வடிவாகினான் என்கிறார். அவர் இருந்த கோபுரம் 'சந்தாகரச் செந்தமிழ்ப் பாடல் பல கோடி தழைவுற்றது; பொந்தாகும் மாவிற் குறை கூவும் அருணாபுரிக் கோபுரம்' என்று பாராட்டுகிறார். 'அந்த இடை மருதில் ஆனந்தத்தேன் இருந்த பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ' என்ற மணிவாசகமும், 'பொந்தில் ஆந்தைகள் பாடடறா' என்ற சுந்தரர் தேவாரமும் நினைவுக்கு வருகின்றன. 'கவுமாரர் பலர் வந்துதம் பூட்டன் செய்தான் என்று குடிகொள்ளும் அருணாபுரிக் கோபுரம்' என்கிறார். இங்கு பூட்டன் என்றது வல்லாள மன்னனையாம். கவுமாரர்க்குத் தந்தை முருகன், சிவபிரான் பாட்டன்; சிவபிரானை மகவாகப் பெற்றவன் வல்லாளன்; ஆகவே அவன் பூட்டன் என்பதாம் எங்கும் 'யாரும் முற்றினிது கேட்க இசைத் தமிழ் படிக்க லுற்றான்' என்றும் 'தமிழின் மட்டுரைத்து மீண்டான்' என்றும், 'செந்தமிழ் இதனால் யான் சொல் திருப்புகழ் முழுதும் பாடம் வந்தவர் அடியேன் பெற்ற வாழ்வுற வேண்டும்'.... என்றும் அருணகிரியார் வேண்டியதாகப் பாடுகிறார். அடுத்த சருக்கமான 'வில்லிபுத்தூராழ்வார் கலகச் சருக்கத்தில்' வில்லிபுத்தூராரை வென்ற விதத்தை 41 பாடல்களில் பாடுகின்றார் அடிகள்.

சம்பந்தாண்டான் எனும் தேவி உபாசகனுடன் ஏற்பட்ட பகைமையை அடுத்த சருக்கத்தில் கூறுகிறார். கம்பத்தில் மயிலையும், மயில் மீது முருகனையும் மன்னன் பிரபுடதேவ ராயன் காணுமாறு செய்த வரலாற்றை விரிவாகக் கூறுகிறார்.

கம்பத்தில் முருகன் வரத் தாழ்த்தமையால், 'கூறிய போது எதிர் வரும் நீ இன்று எனக்கு வருத்தம் மிகக் கொடுத்தாய்' என்று அருணகிரி முருகனிடம் கூறியதாகக் கூறுகிறார் அடிகள்.

அடுத்த சருக்கத்தில், அருணகிரியார் கிளியாக மாறிய கதையைக் கூறுகிறார். சம்பந்தாண்டானுடன் ஏற்பட்ட பிணக்கில், சம்பந்தாண்டான் பாரிசாத மலர் கொணருமாறு கூற, அதை ஏற்று, அருணகிரியார் தனது தூல உடலைக் கோபுரத்தில் விட்டுக் கிளியாகி, இந்திரலோகம் செல்கிறார். இது தெரிந்த சம்பந்தாண்டான் இவரது தூல உடம்பைத் தீக்கு இரையாக்கி விடுகின்றான். கிளி உருவு கொண்ட அருணகிரியார் பாரிசாத மலர் கொண்டு வருகிறார். தூல உடல் அழிந்தது கண்டு அவர் வருத்தப்படவில்லை. கிளியாகவே இருப்பது குறித்து மகிழ்கிறார். முதற் காரணம் கிளியினங்கள் ஊன் உணவு கொள்ளாதவை என்பதாகும். சம்பந்தாண்டான், தேவி வழிபாட்டில் வாம முறையைக் கைக்கொண்டு மதுவும் இறைச்சியும் படைத்துச் செய்தான். இறுதியில் மடிந்தான்.... 'புலைத்தசையிடும் பூசை பண்ணிடும் பலர் இவ்வணம் மடிவது, பாரினில் வழக்காமால்' என்று சம்பந்தாண்டான் முடிவைக் கூறுகிறார் அடிகள்.

அவர் கிளியாக வாழ்ந்ததைக் 'கிளி வாழ்க்கைச் சருக்கத்தில்' கூறுகிறார். இறுதியில் கிளி ஞான அநுபூதி பாடுகிறது. திருமுருகன் அக்கிளியைத் தனது வலத்தோளில் வைத்துக்கொண்டான் என்று நிறைவு செய்கிறார். '... செஞ்சொல் பன்னிரு செவிக் கோன் கேட்டு வாடிடேல் வா வா என்று வரவழைத்து ஒருவன் சேவல் நீடிய புயத்தின் நேரா நிகழ் வலத் தோளில் வைத்தான் ஆடினர் புலவர்; கையால் அணிமலர் மழையும் பெய்தார்.' (கிளி வாழ்க்கைச் சருக்கம், 21) திருப்புகழைக் கிளி பாடியது; உலகம் போற்றும் திருப்புகழையும் பெற்றது என்கிறார்.

தான், அருணகிரியின் அம்சம் என்பதையும், இவர் கதையைக் கூற, 'எப்புலவனுக்கு அம்மேன்மை இசையுமோ அறிகின்றிலேன்; முப்புரம் எரித்தார் ஈன்ற முருகவேள் அறியும்' என்கிறார்.

இறுதியாகக் 'கோபுரத்துச் சருக்கம்' என்ற பெயரில், வல்லாள மகராசன் சிறப்பையும், இறைவனை அவன் மகனாகப் பெற்ற பெருமையையும், அவன் கட்டிய சிறப்புப் பெற்ற கோபுரத்துப் பெருமையையும் பாடுகிறார். அதனால்

அண்ணாமலை ஈசன் இன்றும் ஆண்டுதோறும் நீத்தார்கடன் செய்விப்பதையும் குறிக்கிறார். அழகிய சந்தப்பாக்கள் இச் சருக்கத்தில் உள. இந்த இடத்தில் வல்லாள மகராசன் வரலாற்றைச் சிறிது பார்க்க வேண்டும்.

தமிழகத்தில் சோழருக்குப்பின், இடைக்காலப் பாண்டியர் தலைதூக்கினர். அப்போது ஒய்சளர்களின் ஆளுமை தமிழகத்தில் வந்தது. திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். மதுரைப் பாண்டியர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டது. அதனால் ஒருவன் வடக்கே போய்த் துருக்கியரிடம் சொன்னான். மாலிக்காபூர் படையெடுப்பு நிகழ்ந்தது. மதுரை யும், துருக்கியர் வசம் ஆனது. இவர்களுக்கு மதுரைச் சுல்தான்கள் என்று பெயர். இவர்களை விரட்டியடிக்க ஒய்சள மன்னன் வீரவல்லாளன் முயற்சி செய்தார். அப்போதே அவருக்கு முதிர்ந்த பருவம். எனினும் இந்த நாட்டையும், சமயத்தையும் காக்கப் போர் தொடுத்தார். சுல்தான்களின் ஒரு பகுதிப்படை, சமயபுரம் என்று இன்று அழைக்கப்படும் கண்ணனூர்க் கொப்பத்தில் இருந்தது. வல்லாளர் முற்றுகையிட்டார். வெற்றி கிட்டும் வேளையில் அவர் தோல்வியுற்றார். சுல்தான்கள் அவரை உயிரோடு தோலை உரித்துக் கொன்றனர்; அவரது தலையை மதுரைக் கோட்டையின் வெளிப்புறத்தில் தொங்க விட்டனர். அதன்பின் சுமார் ஐம்பது ஆண்டுகள் தமிழகம் தன் பண்பை இழந்து நின்றது. அரங்கநாதர் ஓடிப் போனார்; தில்லைக்கூத்தனும் திருவாரூருக்குச் சென்று விட்டார். திருக் கோளக்குடிக் கல்வெட்டு கூறுவது போல, 'காலம் துலக்காணியம்' ஆகிவிட்டது. இதில் இருந்து விஜயநகரப் படைத்தலைவர் குமார கம்பண்ணர் தமிழகத்தை 50 ஆண்டுகளுக்குப் பின் காத்தது தனிக் கதை.

ஆனால் இந்து மதத்தைக் காக்கத் தன் இன்னுயிரை மிகவும் கொடூரமான முறையில் தந்தவர் வீரவல்லாளன். காலம் கி.பி. 1342. இவர் திருவண்ணாமலையில் ஆட்சி செய்தார். ஆகவே, இந்த மன்னருக்கு ஈமச்சடங்கையும் ஆண்டுதோறும் நீத்தார் சடங்கையும், திருவண்ணாமலை ஈசரையே நேரிற் சென்று நடத்த வைத்து இந்த மன்னருக்கு மரியாதை செய்தார்கள். இன்றும், அண்ணாமலையார் இந்த மன்னனுக்குத் திவசம் கொடுக்கிறார். இந்த நிலையைப் புராணக் கதையில் சற்று மாற்றி அண்ணா

மலையார் ஓர் அருளாளராக வந்ததாகவும், அவர் அன்றைய தினம் ஒரு பெண் கேட்டதாகவும், பதியிலார் எவரும் கிடைக் காததால், வல்லாளர் தம் மனைவியையே அனுப்பியதாகவும், அங்கு இறைவன் சிறு குழந்தையாக அரசி கையில் தவழ்ந்த தாகவும் கதை வருகிறது. உண்மையில் அரசர் செய்த மாபெரும் தியாகத்துக்காகத்தான் இத்தகைய மரியாதையை அன்றைய மக்கள் வழங்கியிருக்க வேண்டும் என்பதில் தவறில்லை.

இந்த மன்னன் கட்டியது தான் கிளிக் கோபுரம். இந்தக் கோபுரத்துப் பெருமையையும் வல்லாள மகராசன் பெருமையை யும் கதையையும் மிக விரிவாகப் பாடுகிறார் வண்ணச்சரபர்.

''பார்வாழி வானுலகும் பிலமும் வாழி
பருப்பதங்கள் வாழி அவைபலவும் கொள்வான்
பேர்வாழி மாதவத்துப் பெரியோர் வாழி
பிறங்குதமிழ்ப் புலமைநலம் பெற்றோர் வாழி
ஊர்வாழி அருணைநெடும் சிகரி வாழி
உயர்அருண கிரிநாதன் உரைக்கும் பாடற்
சீர்வாழி கௌமார சமயம் வாழி
திருநீறும் கண்டிகையும் தினமும் வாழி''

என்ற வாழ்த்தோடு இதை நிறைவு செய்கின்றார்.

அன்றியும், இறுதி வெண்பாவில், 'இந்தக் காவியத்தைச் செவ்வேள் சத்தியமாய்ச் சரியென்றார் – புத்தியுள்ளீர் ஐயமுற வேண்டா' என்கிறார்.

நூலின் அமைப்பும், பாடல் முறையும் இனிமை பயப்பன வாக உள்ளன. பட்டினத்தார் குமாரர் அருணகிரி என்கிற ஒரு கருத்து மட்டும் வரலாற்று இயைபுக்கு ஏற்றதாக இல்லை எனினும், ஏனைய கதைகள் இன்றும் வழங்கி வருவதை ஒத்தே உள்ளன.

செய்யுள் அருமை கருதியும், இனிமை கருதியும் அவசியம் படித்தும், பயின்றும் நினைவிற் கொள்ள வேண்டிய தமிழ்நூல் இது என்பதில் ஐயமில்லை.

பழனிப் பிள்ளைத்தமிழ்

பொன். முத்தையன்

ஆசிரியர் வரலாறு

கலியுக வரதனாம் கந்தவேள் மீது பழனிப் பிள்ளைத்தமிழ் பாடியவர் மகான், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆவார்கள். சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் சங்கரலிங்கம் என்பதாம். திருநெல்வேலியில், சைவவேளாளர் மரபில் செந்தில் நாயகம் பிள்ளைக்கும், முத்தம்மைக்கும் கி.பி. 1839ஆம் ஆண்டு திருமகனாகத் தோன்றினார். சுவாமிகள் கருவிலேயே திருவாய்க்கப் பெற்றவராக விளங்கியமையால், இளமையிலேயே கந்தமந்திரத்தினை நன்கு உருவேற்றிப் பயனடைந்தார். தாய் பிறந்த சுரண்டையூரில் கல்வி பயின்றார். சுரண்டையூர் கோமளாம்பிகை கோவிலில் குடிகொண்டுள்ள அம்மை பூமிகாத் தாள் மீது ஒரு வெண்பா இயற்றினார். அன்று முதல் பாடும் பணி அவருக்கு இயல்பானது.

சுவாமிகள் தம் பதின்மூன்று வயதிலேயே பல வண்ணப் பாக்களைப் பாடினார். கந்தனைக் காண வேண்டும் என்ற அவா மிகுந்தது. நெல்லை மாவட்டத்துத் திருமலை என்ற மலைமீது ஒரு தடவை ஏறி, உயிர்விடக் கருதி, வீழ்ந்தார். ஆனால், கந்தன் அவரைக் காப்பாற்றினான். கனவில் ஒரு நாள் இவர் புண்ணுக்கு வள்ளியம்மை திருநீறு தந்தான். இவ்வாறு சுவாமிகளை முருகன், பல தடவை காத்தார்.

உலக வாழ்வின் கொடுமைகள் சுவாமிகளைப் பலவாறு துன்புறுத்தின. பகையும், பொறாமையும், தீமையும் மலர்ந்த இந்த உலக வாழ்வினைக் கண்டு மனம் வெதும்பினார். நொந்தார். இவை நீங்குமாறு கந்தனைப் பாடி வேண்டினார். கையில் தண்டம், முழுநீற்றுத் திருமேனி, கீழ்க்கோவணம், இடையில் சிறு காவியாடை கொண்டார். இக்கோலம் கண்ட அனைவரும் இவரை தண்டபாணி சுவாமிகள் என வணங்கினர்.

முருகதாச சுவாமிகள் என முன்னின்று பலர் வணங்கினர். சந்தப்பாக்கள் பல பாடியமையால் இவரைப் பலர் திருப்புகழ்ச் சுவாமிகள் என்றனர். எவரும் பாட இயலாத பல வண்ணப் பாக்களை இவர் எளிதில் பாடியமையால் 'வண்ணச்சரபம்' என அழைத்தனர்.

தமிழ் இலக்கிய வகையில் அமைந்த மிக அதிகமான பாடல் களைப் பாடி, ஓலைச்சுவடிகளில் தம் கைப்பட எழுதி வைத்த ஒரே புலவர் இவர். நால்வரைப் போன்று தலங்கள் தோறும் சென்று பாடும் இயல்பினைக் கொண்ட இவர் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவிகளைப் புனைவதில் வல்லவர். இலக்கியம், இலக்கணம் எனப் பல வகைகளில் இவர் இயற்றிய இலட்சத்திற்கும் மேற்பட்ட பாடல்களுள் அனலிலும் புனலிலும் மறைந்தவை போக இப்பொழுது சுமார் 50,000 பாடல்கள் ஓலைச்சுவடிகளிலேயே கோவை சிரவை ஆதினத்தில் பாதுகாப் பாக உள்ளன. இவை அனைத்தையும் நுண்படச் சுருளில் பதிவு செய்து, தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித் துறையினரும் பாதுகாத்து வருகின்றனர்.

சமயவாதங்கள் என்னும் வேறுபாட்டிற்கு முற்றிலும் அப் பாற்பட்டவர் இவர். இறைவன் ஒருவனே என்ற கொள்கையை அழுத்தமாக வலியுறுத்தி, பல்வேறு உருவங்களிலும் பெயர் களுடனும் அந்த ஓர் இறைவனை வழிபடுவதில் சமயப்பூசல் எழுதல் கூடாது என்பதை அறிவுறுத்தியவர். திருமால், சிவன், முருகன், அம்பிகை, கணபதி, சூரியன் என எல்லாக் கடவுளர் மீதும் இவர் பாடியுள்ள பாடல்கள் சமய சமரச நிலையை வலியுறுத்தக் காணலாம்.

எம்மொழியிலும் தமிழே உயர்ந்தது என்ற முருகன் அருள் மொழியை வேலூரில் பலர் முன் நிறுவிய பெருந்தகையாளர் இவர். அதன் விளைவாக இவர் இயற்றிய தமிழலங்காரம் நூலும், மூவாயிரம் பாடல்களைக் கொண்ட தமிழ்ப் புலவர் புராண நூலும், அறுவகையிலக்கணமும், வண்ணத்தியல்பும் பிறவும் தமிழ் மொழியின் மேன்மையினைப் பறைசாற்று வனவாம்.

குருபரதத்துவம் என்ற பெயரில் தன்வரலாற்று நூலை முதலில் இயற்றிய தனிச்சிறப்பும் இவருக்குண்டு. பல இசைத்

தமிழ்ப் பாடல்களும் முசுகுந்த நாடகமும் இயற்றிய இவர் ஒரு முத்தமிழ் வித்தகராகவும் திகழ்கின்றார்.

சாத்திரம், தோத்திரம், காவியம், மொழிபெயர்ப்பு, மருத்துவம், அரசாட்சி, தத்துவம் எனப் பல துறைகளிலும் பற் பல நூல்களை இவர் இயற்றியளித்துள்ளார்.

வடலூர் இராமலிங்க வள்ளலார், வளவனூர் சண்முக சுவாமிகள், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முனிவர் அட்டாவதானம் கல்யாணசுந்தர யதீந்திரர், மாம்பழக் கவிச்சிங்க நாவலர் போன்ற பல பெரியார்களோடு தொடர்பு மிகக் கொண்டவர் இவர்.

இளமையிலேயே தவப்பொலிவினைப் பெற்ற இவர் நூலாசிரியர், உரையாசிரியர், வரலாற்றாசிரியர், பதிப்பாசிரியர் எனப் பல நிலைகளிலும் சிறப்புற்றவராவார். உயிர்க்கொலை, புலால் உணவு எவ்வகையிலும் கூடாது என்ற தீவிரக் கொள்கையை உடையவரான இவர் இதற்காகவே அன்றைய அந்நிய ஆட்சியாளராக விளங்கிய ஆங்கிலேயரைப் பல நிலை களில் எதிர்த்துப் பாடியுள்ளார். ஆங்கிலியர் அந்தாதி போன்றவை இத்தகையனவாம். இந்திய விடுதலைப் பொன் விழா ஆண்டில் தவத்திரு. சுவாமிகளின் நூற்றாண்டு விழா அமைவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

சுவாமிகளின் படைப்புகளில் கந்தக் கோட்டப் பிள்ளைத் தமிழ், பழனிப் பிள்ளைத்தமிழ், சித்தர் அந்தாதி, புதுவைப் பிரபந்தம், திருவரங்கத் திருவாயிரம், புலவர் புராணம், திருவாமாத்தூர்த் தலபுராணம், முதலானவை குறிப்பிடத் தக்கவை. நெல்லையிலும், பழனியிலும், திருவாமாத்தூரிலும், இவருக்குத் திருமடங்கள் உள்ளன. தம் வாழ்நாள் முழுமையும் தமிழுக்கும், சமயப் பொதுமைக்கும் தொண்டாற்றிய தண்டபாணி சுவாமிகள் நடுநாட்டு சிவத்தலமான திருவாமாத் தூரில் இறையருளாணையின் வண்ணம் எல்லை தாண்டா விரதத்துடன் தங்கித் தவம் புரிந்து 5—7—1898-ல் அருட்சமாதி கொண்டார். தமிழும் சைவமும் உள்ளவரை தண்டபாணி சுவாமிகளின் புகழ் நிலைத்திருக்கும்.

பிள்ளைத்தமிழ் இலக்கணமும் அமைப்பும்

தமிழில் உள்ள 96 வகையான பிரபந்தங்களில் ஒன்று பிள்ளைத்தமிழ். பிள்ளைப்பாட்டு என்றும் இது வழங்கப்படும். கவிஞன் ஒருவன் தான் விரும்பும். கடவுளையோ வள்ளலையோ அல்லது வீரனையோ சிறு குழந்தையாகக் கருதி, அவர்கள் பெருமைகளைச் சிறப்பாகப் பாடுவது பிள்ளைத்தமிழ் ஆகும். தொல்காப்பிய இலக்கணம் ''குழவி மருங்கினும்'' என்ற நூற்பாவில் இதற்கு அடிப்படை அமைத்துள்ளது.

தொடக்கத்தில் மன்னர்களையும், பின்னர் கடவுளரையும் பற்றி மிகுதியாகப் பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் இலக்கியம், அண்மைக் காலத்தில் அரசியல் தலைவர்களைப் பற்றியும் பாடப் பட்டுள்ளது. குமரகுருபரரின் மீனாட்சிஅம்மை பிள்ளைத்தமிழ் மிகச் சிறந்த பிள்ளைத்தமிழ் நூலாகும். பிள்ளைத்தமிழில் ஆண்பால், பெண்பால் பாகுபாடு உண்டு. அதற்கு ஏற்ப சில பருவங்கள் மாறி வருகின்றன. பொதுவாக காப்பு முதல் அம்புலி வரை ஏழு பருவங்கள் உண்டு. சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பருவங்கள் ஆண்பால் பிள்ளைத்தமிழுக்கும் அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பருவங்கள் பெண்பால் பிள்ளைத் தமிழுக்கும் உரியன என்பர்.

மீனாட்சிஅம்மை பிள்ளைத்தமிழ், மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ், திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ், மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், வயலூர் முருகன் பிள்ளைத்தமிழ், எம்.ஜி.ஆர். பிள்ளைத்தமிழ் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன.

பழனிப் பிள்ளைத்தமிழ் அமைப்பும் அழகும்

இந்த நூல், காப்புப் பருவம் முதலாக சிறுதேர்ப் பருவம் ஈறாகப் பத்துப் பருவங்களையும் நூறு பாடல்களையும் கொண்டது. காப்புப் பருவத்தில் திருமால், விநாயகர், சிவன், அம்பிகை, திருமகள், கலைவாணி, நவகோள்கள், நல்ல தெய்வங்கள், மெய்யடியார், பொதுத்தெய்வம் இவர்களை நூலாசிரியர் பாராட்டுகிறார். கல்வியும், செல்வமுமே அம்மையின் இரு திருவடிகள், கந்தன் ஏந்திய வேல் ஞானவேல்,

புலை வழிபாடு ஒழிய வேண்டும் என்பன போன்ற சிறந்த கருத்துக்கள் பல இப்பருவத்தில் இடம்பெறுகின்றன.

செங்கீரைப் பருவம்

இப்பருவத்தில் முருகனின் தோற்றம், செம்மை நடைத் தலைமைப்பண்பு, வேலின் மறக்கருணை அகத்தியர் முதலானோர்க்கு அருளிய திறம், கந்தன் திருவடிகள் விளங்கும் இடங்கள், செங்கீரையாடலின் பயன், இம்மை மறுமைச் செல்வங்கள் தர வேண்டும் என்ற வேண்டுகோள் போல்வன இடம் பெறுகின்றன.

தாலப் பருவம்

இப்பருவப் பாடல்களில் கடம்பனின் பல பெருமைகள், குறிஞ்சியில் நடித்து, மகளிர் மனம் கவர்ந்து, அறிஞரைப் பாராட்டி, அவுணரை வென்று தந்தைக்கு உபதேசம் தந்த முருகா! தீமையை அழித்து எம்மை ஆண்டு கொள். ஞான வேலா! குறத்தி மணவாளா! பரம குருவே! மெய்யடியார் வேண்டும் பரனே! உன் திருவடியே சரண்! சேவற் கொடி உடைய நாதக் கடவுளே! தமிழ்ப் புலவரை ஆதரிக்கும் தலைவா! வில் வீரனே! மயிலேறும் கோமானே! தாலே! தாலேலோ! எனப் பாடுகிறார் புலவர்.

சப்பாணிப் பருவம்

முருகா! நீ சப்பாணிக் கொட்டினால் வினை மாயும்! வேலும் மயிலும் எனச் சொன்னால் என்றும் இன்பமே. தமிழ் வளரும் வளமிகு பழனிக்குமரனே! சப்பாணிக் கொட்டுக! என்கிறார். மேலும், முருகனின் ஊர்திகளாகிய ஆட்டுக் கிடாயின் வீரமும் நாத தத்துவமாகிய மயிலின் அழகும், ஆற்றலும் சொல்லப் படுகின்றன.

முத்தப் பருவம்

சிவனும், உமையும், அருணகிரியும் பிறரும் மகிழும் வண்ணம் அன்று முத்தம் தந்தவனே! இன்று எனக்கொரு முத்தம் தா. கனவில் தந்த முத்தம் போதாது, கந்தனே! நனவில் வந்து எனக்கு முத்தம் நல்க வேண்டும். மரணம் வந்தபோதெல்லாம் என்னைக் காத்தவனே! பழனி முதலாளியே! புலால்

மறுத்தோர்க்கு எளிதில் வருவோனே! தந்தைக்கு உபதேசம் தந்தவனே! தேவர் குறை முடித்தவனே! தெய்வயானை மணாளா! முத்தம் தருக! மூவாசை அழிந்தால் அன்றி இங்கே வாழ்வில்லை. எனவே, என் மூவாசை தீரும் வண்ணம் முருகா! நீ முத்தம் தர வேண்டும். இவ்வாறு புலவர் வேண்டுகிறார்.

வருகைப் பருவம்

இப்பருவத்தில் தளர் நடைப் போடும் சிவபாலனின் நடையழகைப் புலவர் பலவாறு பாராட்டுகிறார். பன்னாள் என் கனவில் வந்தவனே! பழனி முருகனே! நனவில் வரவேண்டும்! அகத்தியர் போல் என்னையும் உலகம் பாராட்ட வேண்டும். மதவாதம் ஒழிய வேண்டும். ஞானிகள் மேம்பட வேண்டும். தேவரும் யாவரும் சூழ வரும் காங்கேயா! கந்தா! கடம்பா! என்று பலரும் துதிப்பாட, மயில் மீது வரும் குமரா! நின் திருவோலக்கத்தினை நான் காண நீ இவண் வரவேண்டும். அறிவினை அறிபவர் தம்முள் அறிவாக உள்ளவனே! அருணகிரிப் பாமாலை அணிந்தவனே! வேல் வீரா! மால் மருகா! ஞான சம்பந்தனே! வருக! வருக! என முருகன் வரவினைப் பலவாறு பாடுகின்றார்.

அம்புலிப் பருவம்

சாம, பேத, தான, தண்டம் என நான்கு வழிகளில் நிலவை அழைத்து முருகனுடன் விளையாடச் சொல்லும் செய்திகள் இப்பருவத்தில் சிறப்பாகப் இடம் பெறுகின்றன. மக்களுக்கு மகிழ்ச்சி தருதலாலும், மலையில் தோன்றுவதாலும், தூய ஒளி உடைமையாலும் நிலவே நீ கந்தனை ஒத்துள்ளாய்! நீ எளியவன்! ஆனால் இவன் வலியவன்! பாம்பு என்றால் நீ நடுங்குவாய்! இவன் மயில் முன்னே பாம்பு நில்லாது. இந்திரனுக்கு நீ பணிமகன். இவன் இந்திரனையே வென்றவன். அலைவதே உன் இயல்பு. ஆனால் இவன் சலனமற்றவன். பலர் காத்திருக்க, இவன் உன்னையே அழைத்தான். உன் பிறவி கடைத்தேரும்! பகை அழியும்! எனவே நிலவே விளையாட வந்துவிடு. அழகுத் தமிழில் உன்னை இவன் அழைப்பது உனக்குக் கசக்குமோ?! இவன் சூரனைக் கொன்றவன். குருநாதன்! இவன் சொல்லி நீ வராவிட்டால் உனக்கு அது வம்புதான். வமபை விலைக்கு

வாங்காதே! கந்தனுடன் விளையாட வந்துவிடு. இவ்வாறு சுவைப்படப் பாடுகின்றார்.

சிற்றில் பருவம்

இப்பருவத்தில் முருகப் பெருமானின் தோற்றச் சிறப்பும், அவன் உள்ள இடங்களும், திருவடிப் பெருமையும் புலவர் இயல்பும் சொல்லப்படுகின்றன. அகத்தியர், நக்கீரர் முதலானோர்க்கு முருகன் அருள் தந்ததும் தந்தைக்கு மந்திரம் சொன்னதும் புலால் உண்போரை அழிப்பதும், பழனி நகர் வளமும், செம்மேனி வண்ணமும், குருவாக விளங்கும் மேன்மை யும், சொல்லப்படுகின்றன.

சிறுபறைப் பருவம்

முருகனே! சித்தியும் முத்தியும் தவத்தால் வரும். செந் தமிழ்க் கவிநயம் உணரார் செவிடரே! மற்றவர் மனம் நோகு மாறு செய்வோர் கீழோர் என்று பறை முழக்கு. அறம், பொருள், இன்பம், வீடு சொன்ன அவ்வையின் சொற்படி அழகிய குமரா; சிறுபறை முழக்குக! பிரம்மச்சாரி, இல்லறத்தார், வானப்பிரத்தர், சீவன் முத்தர், இன்னின்னார் என்று சொல்லிச் சிறுபறை முழக்குக. புலைச் சமயங்கள் அழியவும், இரக்கமிலாத பாவியர் மனம் வருந்தவும், தீமைகள் தேயவும், அறம் வளரவும் குமரா! நீ சிறுபறை முழக்குக! கந்தனே! சிவமகனே! அன்பிலார் பகைவனே! மலைகிழவோனே! தமிழ் முருகா! சிறுபறை முழக்குக! இவ்வாறு இப்பருவத்தில் புலவர் பாடுகிறார்.

சிறுதேர்ப் பருவம்

இந்திரன் தேர், பூமித்தேர், பிரமன் தேர், திருமால் தேர், சூரியன் தேர் முதலான பல தேர்களைக் காட்டிலும் கந்தன் தேர் சிறந்தது என்கிறார். தமிழ் வளர, கௌமாரம் தழைக்க, சேவல் கொடி வெல்ல, புலைச் சமயம் வீழ, முருகா நீ தேர் உருட்டுக! வீதியெங்கும் வெண்சங்கு ஒலிக்கும். பழனி நாதனே! நோயின்றி மக்கள் நலம் பெற, ஞானிகள் சிறக்க, நீ சிறு தேர் உருட்டுக! காமன் கட்டழகும், திருமாலும் பாராட்டும் வீரமும், வாணி மதிக்கும் கலையும், சிவனார் வழிபடும் தன்மையும் கொண்ட தலைவா! சிறு தேர் உருட்டுக! மனக் குகை மன்னா! கடம்பனி

காவலனே! செவ்வேளே! இருமாதர் கணவ! மறைகள் தேடும் மன்னவனே! மாவீரனே! மலைதோறும் உள்ளவனே! நீ சிறு தேர் உருட்டுக! இவ்வாறு இந்நூலின் பத்துப் பருவங்களும் பாங்குற அமைந்துள்ளன.

இலக்கிய அழகுகள்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் பழனிப் பிள்ளைத் தமிழ் சிறந்த கருத்துக் கருவூலம். இலக்கியச் சுவை நிறைந்த பெட்டகம்! சொல்லழகும் பொருளழகும் அமைந்த நன்னூல். சில சான்றுகளைக் காண்போம். பழனிக் குமரனை குமரன், குகன், குருபரன், வேலவன், முருகன், சரவணன், வயலூர் முருகன் என்று பலவாறு அழைப்பதே இனிமையானது. மேலும் ''மயிற்பரி அழகன். 'எமக்கொரு தாயெனத் தோற்று செய், 'மறைகோடி புகழ்ந்த தம்பிரான்' நுற்கண்மணி என்றெல்லாம் நயம்பட போற்றுகிறார்.

சொல்லழகும் பொருளழகும் இந்நூல் முழுமையிலும் பரவியுள்ளன. பானை சோற்றுக்குப் பருக்கைச் சோறு பதம் என்பதுபோல் ஒரு சில சான்றுகளைக் காண்போம். 'ஆனைமுகன் தம்பியாகி, மதிசூடிய சிவனார்தம் திருக்கண்களில் தோன்றி, வானோர் துயர் தீர்த்து, தன் பேருருவம் கரந்து என் சிறு மனம் நாடும் வண்ணம் தேசிகக் கோலம் கொண்டு பழனி மலையில் வீற்றிருக்கும் கந்தனே! என்று காப்புப் பருவத்தின் முதற் பாடலே சொல்லழகுக்கு ஓர் சுரங்கமாக விளங்குகிறது.

கந்தன், தாய் வயிறு காணாத தருமத் திருமேனியன். அவுணரை வென்றவன். இணையற்ற கோலம் உடையவன். எனினும், இப்பெருமைகளை அவன் மறைத்துக் கொண்டு, அடியானாகிய என் மனம் எளிதில் உணரும் வண்ணம் பழனியில் வந்துள்ளான் என்று புலவர் பாடுவது இறைவனின் கருணைச் சிறப்பினை விளக்கும்.

ஐந்தாம் பாடலில் முருகனை 'உவமானம் இன்றிய சன்முக வரதனை' என்று பாராட்டுகிறார். இது மிக நுட்பமானது. குகப் பெருமான் ஆறுமுகமும் பன்னிரு கரங்களும் பதினெட்டுக் கண்களும் கொண்டவன், ஆறு திசை, ஆறு அங்கம், ஆறு தத்துவங்கள், ஆறு ஆதாரங்கள், ஆறு எழுத்துக்கள், - முதலான இடங்களில் இருந்து ஆன்மாக்களுக்கு அருளுபவன். அவனை உள்ளவாறு உணர்வது அல்லாமல் உவமை சொல்லி உணர்த்த

முடியாது என்பதனையே மேல்வந்த அடியினில் புலவர் பாடுகிறார். இதுமட்டுமா? அமுதம் அன்ன துதி பாடும் அடியார் திருவடிகளைத் தலை மீது தாங்குவோம். சிவனே சண்முகன்! தீமை தீர்ந்து கனிந்த நலம் காத்த பின்னரே உயர் ஞானம் கை கூடும்.! மெய்யடியார் தம் அடியார் மனத்தில் எல்லாம் கந்தன் மேவுவான். குண்டலினியை அடக்குவது தாரக மயில் என்பது போல் பாம்பின் மீது காலுன்றி நடிக்கும் மயிலுடையான் என்பது போன்ற பொருள் அமைதி சான்ற தொடர்களை தண்டபாணி சுவாமிகள் தருகின்றார்.

சிறப்பான செய்திகள்

பழனிப் பிள்ளைத்தமிழ் பன்னரும் கலைகூடம் போன்றது. சிந்தையைக் கவரும் செய்திகளைக் கொண்டது. அவை ஒவ்வொன்றும் அழகுதான். தமிழின் மேன்மை, புலால் மறுப்பு, சிறுதெய்வ வழிபாட்டின் இழிவு, தன் அனுபவம், திருவடிப் பெருமை, பழனியின் மாண்பு, மக்கள் இயல்பு முதலான பல்வேறு செய்திகளைத் தண்டபாணி சுவாமிகள் இந்நூலின்கண் சிறப் பாகத் தந்துள்ளார். சிலவற்றைக் காண்போம்.

என்றும் உளதாம் தென் தமிழை இப்புலவர் பெருமான் பாராட்டுகிறார். முருகன் தமிழ்க் கடவுள். அகத்தியருக்கு முருகனே தமிழ் தந்தான். குகன் தமிழைக் காதலித்தவன். தமிழ் அறிஞர்களை விரும்பித் தேடி வருபவன் என்கிறார். பழனி மாநகரைப் பாராட்டும் பொழுது 'தமிழ் வளம் பெரிதுவளர் பழனியங்கிரி' என்கிறார். 'செந்தமிழ்க் கவிச்சுவை நுகர்ந்திடார் செவிடரே யாவார்! என்கிறார். தமிழின் பெருமைக்கு இதனினும் சான்றாக அமைவது இந்நூலின் நூறாவது பாடல். மழையைப்போல் தமிழைக் கொட்டுகின்ற புலவர்களை முருகன் தேடிச் சென்று உதவுவான். தமிழ்ப் புலவர் உள்ளத்தில் துன்பம் வராதவண்ணம் அவர்களைத் தொடருவான் என்கிறார் புலவர். பாவலரைப் பின் தொடர்ந்த பச்சைப் பசும் கொண்டல் என்று திருமாலைக் குமரகுருபரர் பாராட்டியது இங்கே வைத்து எண்ணத்தக்கது.

புலால் மறுத்தானை எல்லா உயிர்களும் கைகூப்பித்தொழும் என்று பாராட்டுவார் திருவள்ளுவர். புலால் மறுத்தலையும் புலைத் தெய்வ வழிபாட்டுப் மறுப்பினையும் தண்டபாணி சுவாமிகள் தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தவர்.

தன் அனுபவம்

எந்த ஒரு படைப்பாளியும், தன் படைப்பின்கண் தன் அனுபவச் செய்திகளைச் சொல்லுவது இயல்பு. சுவாமிகளும் இதற்கு உட்பட்டவரே. கந்தனைக் கனவில் கண்டது, தான் தற்கொலைக்கு முயன்றது, கேணி வெட்டியது, மரணத்தில் கந்தன் காப்பாற்றியது, ஏடுகளைக் கிழித்து எறிந்தது முதலான பல, தன் அனுபவங்களையும் பாடுகிறார் சுவாமிகள். புலியால் வந்த இடர் நீக்கியும் மலையில் உருண்டபோது காப்பாற்றியும், சென்னை புதுவை, பழனி முதலான தலங்களில் அருள் தந்தும் முருகன் செய்த உதவிகளைப் பல இடங்களில் பாடுகிறார்.

பழனி நகர் மாண்பு

பொதினி எனப்படும் பழனி மாநகரின் பெருமைகளை இந்நூல் பலவாறு பாராட்டுகிறது. தெய்வத் திருநகர். தமிழ்ச் சங்கம் சோலைவளம் மிக்கது. மாளிகைகள், சத்திரங்கள் நிறைந்தது. வீரர்களின் ஒலியும் வெண்சங்கொலியும், பாட்டொலியும், பறவைகளின் ஒலியும் இடையறாது கேட்கும் திருநகர் என்று பாராட்டுகிறார்.

முருகன் அருள் பெற்றோர்

முருகன் அடியார்கள் பலரைப் பற்றிய செய்திகள் இந்நூலில் வருகின்றன. முருகன் அடியார்களுக்கு முருகன் அருள் தந்ததைப் புலவர் பாடுகின்றார். அகத்தியருக்குத் தமிழ் தந்தான். நாரதரை மன்னித்தான். முசுகுந்த மன்னருக்குக் காட்சி தந்தான். பகீரதனுக்கு அருள் தந்தான். நக்கீரரைச் சிறை வீடு செய்தான். சிதம்பர சுவாமிகளுக்குச் சேவை செய்தான். சிவஞான பாலைய சுவாமிகளுக்குக் காட்சி தந்தான். அருணகிரிப் புலவருக்கு அருள் தந்தான். அவர் மரணம் எய்த முயன்ற போது காப்பாற்றிக் கிளியாக்கித் தன் தோள் மீது ஏற்றுக் கொண்டான் என்கிறார்.

முடிவுரை

பழனிப் பிள்ளைத்தமிழ் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடத் தக்க ஒரு நூல். சிறந்த சிந்தனையாளரும், கந்தன்அருள் பெற்றவருமாகிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் புலமையில் தோன்றிய நன்னூல். இகவாழ்வுக்கும், பரவாழ் விற்கும் வேண்டிய பல செய்திகள், புலவரின் அனுபவ உணர்வு களுடன் இந்நூலில் அமைந்துள்ளன. சுவைகள் பல அமைய, கருத்தைக் கவரும் நடையில் அமைந்துள்ள இந்நூல் தமிழ் நெஞ்சங்களை என்றும் கவரும்.

தண்டபாணி சுவாமிகளின் காலமும் கருத்தும்

தெ. முருகசாமி

தென்னையில் உள்ள மட்டை தான் பழுத்து விழுங்கால் தான் இருந்ததற்கான அடையாளத்தைப் பதித்துச் செல்லுதல் போல மனிதனும் தான் வாழ்ந்ததற்கான அடையாளத்தை ஏதோ ஒரு வகையில் உணர்த்திக் காட்டக் கடமைப்பட்டவனாவான். மானுட வாழ்வின் இந்த அடிப்படைத் தத்துவத்தில் வாழ்க்கையைப் பதிவு செய்த பலருள் தண்டபாணி சுவாமிகளும் ஒருவராவார். ஞானபூமியாகிய தென்தமிழ்நாட்டில் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய சுவாமிகள் பல்லாயிரக் கணக்கான பாடல்களைப் பாடியிருந்தாலும் காலத்தை ஒட்டிப்பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டு சுவாமிகளின் எண்ணப்போக்கை நெருடிப் பார்ப்பதே இக்கட்டுரையின் கருதுகோளாகும்.

முருகனது அருளைப் பெற்ற சுவாமிகள் சிறந்த நூலாசிரியர், உரையாசிரியர், வரலாற்றாசிரியர் எனப் பல நிலைகளில் சிறப்பிற் குரியராவார். இவர்தம் சமகாலத்திலும் குறிப்பிடத்தகுந்த சிலர் வாழ்ந்தனர். வடலூர் இராமலிங்க அடிகள், பாம்பன் சுவாமிகள், ஆறுமுக நாவலர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, கவிகுஞ்சர பாரதியார் போன்றோர் சுவாமி களோடு தொடர்பு கொண்டிருந்ததைச் சுவாமிகள் பாடிய புலவர் புராணத்தின் ஒரு பகுதியான கண்கண்ட புலவர் சருக்கத்தில் காணலாம். சமகாலத்துப் புலவர்களான இவர்களும் கேட்போர் பிரமிக்கும்படியாகக் கவிதை பாடியவர்களே ஆவர். தாம் பெற்ற அருள் அனுபூதியின் சிறப்பைப் பாம்பன் சுவாமிகளின் பாடல் களில் காணலாம். ஏற்றத் தாழ்வற்ற சமரசத்தை வடலூர் வள்ளலிடமும் தீண்டாமை போன்ற சீர்திருத்த கருத்தைக் கவிகுஞ்சர பாரதியாரிடமும் காணலாம். சமய ஒழுகலாற்றின் நெறிமுறையை எளிதாக எடுத்துக்காட்டினார் ஆறுமுக நாவலர். தற்காலக் கம்பன் எனப்பட்ட மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்

பிள்ளையிடம் கற்பனை ஊற்றோடு கூறவல்ல தலபுராண மாண்பை உணரலாம். இப்படியாகப் பலரும் பாடிய கருத் தெல்லாம் ''உள்ளது சிறத்தல்'' என்ற அடிப்படையில் வழிவழி யாக உள்ளதையே புதியபான்மையில் கூறினார்கள். இந்த வகையாக, உள்ளது சிறத்தலாகத் தண்டபாணி சுவாமிகளும் ஆயிரக்கணக்கான பாடல்கள் பாடியிருந்தாலும் காலத்தின் பரிமாணத்தைச் சுட்டிக் காட்டவல்ல தனித்தன்மை மிக்க பாடல்கள் சிலவற்றால் சுவாமிகள் தாரகை நடுவில் தண்ணில வாகத் தோன்றுகிறார்கள்.

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் சுவாமிகளின் பாடல்களில் காணும் புதுமைகளாகும். மொழி மக்களின் விழிபோன்றது. விழியில்லையேல் பார்வையில்லை. அதுபோல மொழியில்லையேல் வாழ்வில்லை. ஊமையராய்த் திரிந்த மாந்த இனம் நாநலம் என்னும் நலனுடைமையைப் பெற்றபோதுதான் உயர்ந்தது. இல்லையேல் விலங்கொடு விலங்காகவே இருந்திருக்கும். எனவே மொழி வழிபட்ட சிந்தனை மாந்த இனத்தை உயர்த்தியது. இம்மொழி வழிபட்ட சிந்தனை ஆற்றொழுக்கான வாழ்வை உருவாக்கியது. ஆனால் வாழ்வின் முன்னேற்றம் என்பது சிந்தனையின் விழிப்புணர்வால் எதிர் நீச்சலிட்ட உணர்வுடன் உருவாவது. இந்த அடிப்படையில் மொழிவழிச் சிந்தனை விழிப்படையாத காலத்தில் மொழியைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டிய சுவாமிகளின் சில பாடல்கள் மொழிப்பற்றின் அடையாளத்தைச் சுட்டிக் காட்டுகின்றன.

தமிழ் உயர்ந்த மொழி எனப் பலரைப் போலவே சுவாமிகள் பல இடங்களில் பாடியுள்ளார்கள்.

> கற்றூ ணிடத்தொரு கடவுட் காட்டலும்
> அரண்மனை அடிசில் ஆக்கச் செய்ததும்
> கணபதி கரத்தாற் கயிலை மீதுறச்
> சேர்த்ததும் ஆதிய செஞ்சொற் றிரளே

என அறுவகை இலக்கண நூலில் சுவாமிகள் தமிழின் தெய்வீகத்தைச் சுட்டுகிறார். இது தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை உண்ட பாலனை அழைத்தலும் எனப் புகழ்ந்த பரஞ்சோதி முனிவரின் பாடலொடு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

தமிழ்ச்சுவை யறியாத் தெய்வம் உளதெனில்
அஃதுணரல் அலகையில் தாழ்வெனல் அறமே

என்ற அறுவகை இலக்கணக் குறிப்பும் தமிழின் தெய்வீகத்தை எதிர்மறை முகத்தால் உணர்த்திக் காட்டிய ஒட்பம் எனலாம்.

தமிழ்மொழிக் குயர்மொழி தரணியி லுளதெனில்
வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே

என்ற அறுவகை இலக்கண நூற்குறிப்பு தமிழ் உயர்மொழி என்ற உண்மையை உணர்த்துகிறது. இக்குறிப்பில் மொழி பற்றிய புகழ்ச்சியைப் பிறரைப்போல் சுவாமிகள் கூறியிருப்பதோடு வேறோர் உண்மையும் நுட்பமாகப் பளிச்சிடுகிறது. தமிழ் மொழியைவிட உயர்ந்த மொழி ஒன்று உண்டு எனப் பிறர் கூறக் கேட்கும் புலவர் ஒருவர் இருப்பாராயின் அவர் உண்மைப் புலவர் அல்லர், வெறும் புலவரே என்ற சுவாமிகளின் வார்த்தையில் மொழி பற்றிய விழிப்புணர்வு அரும்புவதைக் காணலாம். இம் மொழி விழிப்புணர்வையும் என் தாய்மொழி பழிந்தோனைத் தாய் தடுத்தாலும் விடேன் என்ற பாவேந்தரின் உணர்வோடு பொருத்திப் பார்க்கலாம். ஆக மேற்கண்டவாறாகக் கூறியன எல்லாம் தமிழின் ஏற்றம் பற்றிப் பிறரைப் போலவே சுவாமிகள் கூறினார் என்பதையே உறுதிப்படுத்தும். இப்படிக் கூறியதில் புதுமை இல்லையாயினும் சுவாமிகள் பாடிய ‘ஆங்கிலியர் அந்தாதி’ என்ற நூலில் கூறியுள்ள சில கருத்துக்கள் மொழிப் பற்றுக்கு ஆதாரமாக அமைந்துள்ளன என்பதைச் சான்றுடன் காண்போமாக!

கன்னிநன் நாட்டில் பிறந்தாரும்
    ஈனக் கலைபயில
இன்னிசைச் செந்தமிழ்ப் பாவாணர்
    வாடுறும் இக்கொடுமை
துன்னிடக் கண்டும் விழித்தெழுந்
    தானிலை தொல்பொதியைத்
தன்னிடை கோடி முனிவோருள்
    வைகும் தவத்தரசே! (39)

இப்பாடலில் தமிழ் கற்றவர்கள் வாடுகிறார்கள் என்ற குறிப்பு கூறப்பட்டுள்ளது. கன்னிநாடாம் தமிழ்நாட்டில் பிறந்தவர்கள் பலரும் தமிழ் பயில்வதை மறந்து ஆங்கிலம் பயிலகத் தொடங்கி யதால் தமிழ் பயின்றவர்கள் வாடும் நிலை ஏற்பட்டது. இவ்

வாட்டத்தைப் போக்க தமிழ்மாமுனிவராகிய அகத்தியர் விழித்தெழுந்து வரவில்லையே என்று ஏங்குகிறார் சுவாமிகள். மேலும் ''ஆன்றதமிழ் விற்பனர் தங்களைப் பார்இனி'' (41) என்று மற்றொரு பாடலில் திருமாலிடம் வேண்டுகிறார். ஆக தமிழ் கற்றோர் அடைந்த இக்கொடுமை ஆங்கில மொழி வளர்ச்சியால் ஏற்பட்டது எனத் தெரிகிறது. மக்களை அடிமைப் படுத்திய ஆட்சியைவிட மொழியின் ஆட்சியே பெரும்பாதிப்பைத் தந்துள்ளது. அதிகார வரம்பு உடையது ஆட்சி. அதை அகற்றி விட முடியும். ஆனால் உணர்வு வழிப்பட்டது மொழி. அது உயிரோடு கலக்கவல்ல உணர்வுடையது. உயிர்ப்புடைய இவ்வுணர்வை எளிதில் மாற்றிட முடியாது. அந்நியர் ஆட்சி நீங்கி ஐம்பதாவது சுதந்திரப் பொன்விழா காணும் இந்நாளில் ஆங்கில மொழிவழியான உணர்வுகள் நீங்கவில்லை. மாறாக ஆங்கில மொழியின் மோகம் மேலோங்கி வளர்வதை வீதிதோறும் உள்ள பாலர் பள்ளிகளின் தோற்றத்தால் கணிக்கலாம்.

உலகில் ஆங்கிலமொழி பேசாத நாடுகள் இல்லையா? ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதற்கும் அம்மொழிவழிச் சிந்தனையை வளர்த்துக் கொள்வதற்கும் பெரிய வேற்றுமைகள் உள்ளன. எல்லோரும் எம்மொழியையும் பயின்று விற்பன்ன ராகலாம். ஆனால் காலூன்றி நிற்க வேண்டிய இடம் தாய் மொழியிடத்தில்தான் என்பதை மறக்கலாமோ? இந்த ஆங்கில மொழியின் மோகந்தான் தாய்மொழிக் கல்வியை மழுங்கடித் துள்ளது என்பது முற்றிலும் உண்மை ஆகும். ஆங்கில ஆதிபத்திய ஆட்சிமுறை மாறினாலும் உணர்வில் ஊறிவிட்ட அம்மொழி வழிச்சிந்தனையால் முழுசுதந்திரம் தமிழர்களுக்குக் கிட்டவில்லை என்று துணிந்து கூறலாம். தாய்மொழிவழி விழிப்புடைய அரசுகள் அமைந்தாலும் தாய்மொழிக் கல்வி எட்டாக்கனியாகவே உள்ளது. மொழிவழியாகப் பிரிந்துள்ள தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மாநிலங்களின் வழி நோக்கினாலும் தமிழின் வளர்ச்சி ஏனைய மாநில மொழி வளர்ச்சியினும் குறைவாகவே காணப்படுகிறது. ஆங்கில மொழி வழி அடிமை மோகத்தால் தாய்மொழிப் பற்றில்லா மலட்டுத் தன்மை ஆங்கில ஆட்சியில் வேரூன்றிவிட்டதே இதற்குக் காரண மாகும். இவ்வாறான அவலத்தை எண்ணியே ''செந்தமிழ்ப் பாவாணர் வாடுறும் கொடுமை'' என்று ஏங்கிப் பாடிய வகையில் சுவாமிகள் மொழிப்பற்றைத் தூண்டினார் எனலாம்.

தாய்மொழிப் பற்றைப் போலத் தாய் நாட்டுப்பற்றும் ஒவ்வொருவர்க்கும் இருக்க வேண்டிய ஒன்றாகும். தாய் நாட்டை விரும்புவதற்கும் பற்றுவைப்பதற்கும் வேற்றுமை உண்டு. சுதந்திரம் பெற்ற நாட்டில் நாட்டு முன்னேற்றங் கருதிய செயல்பாடுகளில் ஈடுபடுவது நாட்டை விரும்புவதாகக் கருதப் படும். ஆனால் மற்றொருவரால் தன் நாடு அடிமைப்படுத்த முனையும்போதோ அடிமையாக இருக்கும்போதோ அந்த இழிவைப் போக்க முயற்சிக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுவது நாட்டுப்பற்றாகக் கருதப்படும்.

சுவாமிகள் காலத்தில் நாடு அந்நியர் ஆட்சிக்கு உட் பட்டிருந்தது. அருளாளராக மட்டும் விளங்கிய பலரைப் போல் அல்லாமல் சுவாமிகள் நாட்டு மக்களின் வாழ்க்கையிலிருந்து தம்மை முற்றிலுமாக அந்நியப்படுத்திக் கொள்ளாத காரணத் தால் அரசியல் உணர்வு மேலிட ஆங்கிலேயர் மீது ஆவேசமாக ஓர் இலக்கியத்தையே பாடினார் என்றால் சுவாமிகள் நாட்டுப் பற்றை என்னென்பது?

சங்ககாலம் முதலாக சுவாமிகள் காலம் வரை நாட்டுப்பற்று என்ற கொள்கையை உணர்த்திய பாடலாக ஒன்றையும் கூற இயலாது. மண்ணாசை என்ற அடிப்படையில்தான் முடியுடை வேந்தர்கள் மாறிமாறிப் போரிட்டுக் கொண்டார்கள். சேர, சோழ, பாண்டிய மண்டலங்களில் தமிழ்மொழி ஒன்றே இருந்த தால் மொழி ஆதிக்கத்திற்கு இடம் இல்லாமல் போயிற்று. மேலும் ஒருவர் ஒருவரை வென்றாலும் தம் ஆட்சியின் அதிகாரத்தை நிலைநாட்ட விரும்பாமல் கப்பம் பெறுதலாகிய ஒன்றையே பெரிதாகக் கருதியதால் தம் நாடு இன்னொருவருக்கு அடிமை என்ற உணர்வு மேலிடவில்லை. எனவே நாட்டுப்பற்று என்பதற்கு அக்காலத்தில் இடம் இல்லாமல் போனது. வேற்று மொழியினர் அல்லாத பல்லவர்கள் தமிழ்நாடு முழுதும் ஆளவில்லை. வட தமிழ்நாட்டில் ஆட்சி செய்தபோது அவ்வாட்சியை நாட்டுப் பற்று அடிப்படையில் அல்லாமல் சமயப் பாதுகாப்பு என்ற அடிப்படையில் நீக்க அருளாளர்கள் முனைந்தனர். பின்னாளி லும் வேற்று மொழியினராக வந்த முகம்மதியர்களும் நாயக்கர் களும் தமிழகத்தின் ஒருசில பகுதிகளையே ஆண்டனர். ஆனால் வேற்றுமொழியினராக, நாட்டவர்களாக வந்த டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோர் ஆட்சியை

ஆங்காங்கே பிடித்தாலும் ஆங்கிலேயரின் அரசியல் உணர்வு மேலோங்கியதால் நாட்டின் பெரும்பகுதி அவர்களுக்கு அடிமை யானது. அரசியல் அதிகார வக்கரிப்பு அதிகமானது. அதனால் இறுக்கங்களும் அழுக்கங்களும் மக்களை வதைத்தன. மனப் புழுக்கத்தில் புழுங்கிய மக்கள் வீறிட்டெழுந்தனர். நாமிருக்கும் நாடு நமதென்பதறிவோம் என்று பிற்காலத்தில் பாடிய பாரதியாரின் நாட்டுப்பற்று மிக்கவரிகள் தோன்ற, தண்டபாணி சுவாமிகள் பாடிய ஆங்கிலியர் அந்தாதி ஒரு வழிகாட்டியாக இருந்தது எனலாம். ஆளவந்த வேற்றவர்கள் சமயப் பற்றுடையவர்கள், அச்சமய உணர்வால் நாடு அடிமையாகாமல் மொழி உணர்வால் நாடு அடிமைப்பட்டுவிட்டதால் நாட்டுப் பற்று என்ற கொள்கை தமிழ் இலக்கியப் போக்கில் 19ஆம் நூற்றாண்டில் அரும்பத் தொடங்கிற்று எனலாம்.

வெள்ளையரைக் "குணுங்கர்" என்ற சிறு சொல்லால் பல இடங்களில் இழித்துரைக்கும் சுவாமிகள் அவரது ஆட்சியை அகற்ற பல தெய்வங்களை வேண்டுகிறார். மக்களை நாட்டுப் பற்றுடையவர்களாகத் தூண்டும் பாடல்களைச் சுவாமிகள் பாடவில்லையானாலும் மக்களின் ஒட்டுமொத்த குரலைத் தம் பாடல்கள் வாயிலாக வெளிப்படுத்தினார் என்றே துணிந்து கூறலாம்.

ஆங்கிலேயரை அழிக்கவல்ல ஒருவரைப் பிரமன் படைக்க மாட்டானா (1) என்றும் ஆங்கிலேயரை அழிக்கும் வல்லமை தெய்வத்திற்கில்லையோ (68) என்றும் சுவாமிகள் வெறுத்துக் கூறுவதோடு தெய்வமே நீ ஆங்கிலேயரை அழிக்காவிட்டால் உன்னை இந்த உலகம் நம்பாது (69) எனத் துணிந்து பாடிய திறன் போற்றுதற்குரியதாகும்.

மெய்பொரு ளாம்உனைச் சற்றும்நம்
　　பாதிந்த மேதினியின்
பொய்ப்பொருள் சேர்க்கும் புலைக்கொடுந்
　　தீயர் புறம்பரவா
தெய்ப்பொடு தாழப் பொருவானைக்
　　காணுநல்லின் பம்நல்காய்!
கைப்பொருள் போன்றடி யார்தமைக்
　　காக்கும் கவின்தெய்வமே!

"அருளாட்சி நூல்'' என ஒன்றைப் பாடிய சுவாமிகள் அரசியல் தொடர்பாக "அரசாட்சி நூல்'' என்ற ஒன்றும் பாடிய தாக அச்சில் வெளிவரா சுவாமிகளின் நூற்பட்டியலில் காணப் படுகின்றன. எனவே கடவுளை மட்டும் பாடுவதான உணர்வை மக்களின் நடப்பு வாழ்வியலை ஒட்டி.யதாக மடைமாற்றம் செய்து பாடியதால் சுவாமிகளின் பாடல்கள் நாடும் மொழியும் இரு கண்களைப் போன்றன என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தின எனலாம்.

காலத்தை ஒட்டிய கருத்தை வெளிப்படுத்துவதே இலக்கியம் என்பதற்கேற்ப சுவாமிகள் ஆங்கிலியர் அந்தாதி பாடியுள்ளதி லிருந்து கவிஞர்களோ? எழுத்தாளர்களோ தம்மை நாட்டு மக்களினின்றும் அந்நியப்படுத்திக் கொள்ளாத வகையில் நாட்டு நடப்புகளைத் துணிந்து எழுத்தாக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை தரவு படுத்திக் கூறுகிறது என்பதாம்.

புலவர் புராணம்

து. லலிதா

அடிக்கும் முன்னோர் விதிக்கும் இன்சொற்
சுவைக்கும் ஒருகுறைவுவராது அமைத்தோர் பாட்டு
முடிக்கு முன்னே தாய்கொடுத்த சேனை
யெலாம் வாங்குதையோ முதிரக் கல்வி
படிக்கு முன்னே தொடுத்த டுத்துக்
கேட்போர்கள் பிரமிக்கும் படிக்கும் ஒவ்வோர்
நொடிக்கு முன்னர் இனியகவி முருக
தாசனைப்போல் வல்லார் யாரோ!

என்று தன்காலப் புலவரான அழகிய சொக்கநாத பிள்ளையால் பாராட்டப் பெற்றவர் தண்டபாணி சுவாமிகள்.

புலவர்களின் வரலாற்றை தான் அறிந்த அளவே காட்டி இருப்பதாகவும் அதில் மிகையேதும் இல்லையெனவும் பல பாடல்களில் கூறிக்கொண்டே வருகிறார். தான் அறிந்த உண்மைகளை அப்படியே கூறுவதாகச் சுட்டுகிறார்.

புலவர் புராணம் இயற்றுதல்

தலங்கள் பல சென்று 'பன்னிருகைமாலை' முதலிய பிரபந்தங்கள் இயற்றி மீண்டும் திருநெல்வேலியில் இருக்கும் நாளில் 'புலவர் புராணம்' என்ற இக்காவியம் பாடி முடிக்க எண்ணியதை,

சூரியனும் சந்திரனும் விழிக ளாகிச்
சொல்லும் மற்றைக் கடவுளர் பல்உறுப்புமாகிக்
காரியமும் காரணமும் தானே யாகிக்
கருதுவார் உளந்தொறும் போய்க் கலந்துநிற்கும்
சீரியசற் குருபரனே! எனைஆட் கொண்ட
செல்வமே யாவும்வல்ல தெய்வமே! முன்
கூரியமுத் தமிழ்மொழிந்தோர் சரிதம் சற்றும்
குளறாமல் பகரவரம் கொடுத்தாள் வாயே!

(புல. புரா. 14)

என்னும் பாடல் குறிப்பிடுகின்றது.

நூலின் பெயர், தலம், நிமித்தம், ஆதாரம் பற்றிக் கூறும் ஆசிரியர்,

நூற்பெயர் யாதெனில் உண்மைப் புலவர் புராணமதாம்
நுவலுமிடம் திருநெல்லை நகர்நுவலும் நிமித்தம்
ஏற்பவருக் கீவார்தம் பெருநலமும் ஈயார் இடும்பையும்
செந்தமிழ்ப் புலவோர் எழிற்புகழும் விளக்கி
நாற்பொருளும் பெறவிரும்பல்; ஆதாரம் உலகோர்
நவில்மொழியும் கலைவாணி நடம்புரியும் நாவும்
வேற்பிடித்து மலைதொறும் போய்த் திருவருட் பேராடல்
விளைக்கும் முழுதுணர் புலவன் விரைமலர்த்
தாள்களுமே (புல. புரா. 25)

என்று புலப்படுத்தியிருப்பதைக் காண்கிறோம்.

பாயிரம் பாடி முடித்தவுடன் கந்தக் கடவுள் காலம் தாழ்த்திப் பாடலாமென்று கட்டளையிட, அதைச் சிரமேற் கொண்டு ஒவ்வொரு தலமாகச் சென்று பாடல்கள் பாடித் தொண்டை நாட்டு திருவாமாத்தூரை அடைந்து அங்கு எழுந்தருளியுள்ள இறைவனைப் பாடுகிறார்.

திருவாமாத்தூரில் முருகப் பெருமான் 'முன்பு நீ பாடத் தொடங்கிய புலவர் புராணத்தை இப்போது பாடுவாய்' என்று கட்டளையிட அவரும் அதைப் பாடி முடித்தார். இச்செய்தி,

நெல்லையினில் துவக்கும்இது நெடுநாள்என்
மனக்கருவில் நின்று, துன்றும்
எல்லையில்பா மாலையினம் பிறந்ததற்பின்
மாதைநக ரிடத்திந் நாளில்
குல்லைமலர்க் குகன்கடவ நடைதரும் (83)

என்னும் பொதியாசலப் படலத்துப் பாடலால் பெறப்படுகிறது.

சேக்கிழார் எழுதிய பெரிய புராணம் சைவ சமயச் சான்றோர்களின் வரலாற்றைத் தொகுத்து விரித்துக் கூறுகிறது. புலவர் புராணம் இலக்கியச் சுவை குன்றாமல் சைவ, வைணவ, இசுலாமியப் புலவர்களின் வரலாற்றைச் சுருக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. பெரியபுராணத்தில் 'சருக்கம்' என்றும் கம்பராமாயணத்தில் 'படலம்' என்றும் அமைந்திருத்தல் போன்று

இப்புலவர் புராணத்துள்ளும் சருக்கம், படலம் என்று காணப்படுவது 'முன்னோர் மொழியைப் பொன்போற் போற்றுதல்' என்னும் முறையைப் பின்பற்றியுள்ளமையைப் புலப்படுத்தும்.

வருபொருளுரைத்தல்

ஒவ்வொரு சருக்கத்தின் முடிவிலும் தான் இதுவரை கூறியது என்ன? இனிக் கூறப் போவது என்ன? என்பதைச் சுட்டிக் காட்டும் தன்மையால் நூலியற்றும்போது இவர் கையாளும் உத்தியைக் காண முடிகிறது.

'அம்மை' என்றரன் அழைக்கும்மாண் படைந்ததோர்
அரிவைதன் சரிதத்தில்
செம்மை யாவினாவியஅள வினில்சொலித்
தீர்த்தனன்; இனித்தீரா
மெய்ம்மை ஞானம் எய்திய சிவவாக்கியர்
வியன்சரித் திரம்தன்னில்
இம்மையோர் பலர்சொல் விடக்கேட்ட மட்டு
இசைத்திட நினைத்தேனே (585)

என்னும் பாடலைச் சான்றாகக் கொள்ளலாம், கூற வரும் பொருளுக்கு ஏற்ப

மன்னுபேரருட் சீர்எய்தி வாழ்ந்த வள்ளுவர் உற்பத்தி
முன்னுதித் துயர்ந்த ஔவை முதுசரித்திரத்தில் தோற்றும்

என்பது போன்று முன்பின் தொடர்புபடுத்திக் காட்டும் தன்மையையும் இவரிடம் காண முடிகிறது. இத்தன்மை ஏனைய புலவர்களும் கையாண்ட ஒன்றே என்பதை இலக்கியம் வாயிலாக நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. சான்றாக, மெய்ப்பொருள் நாயனார் புராணத்தைக் கூறி முடித்த சேக்கிழார் அதற்குப் பின்னர் வருவது விறன்மிண்டர் புராணம் என்பதை உணர்த்து முகத்தான் மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் இறுதியில் கூறுவதாகிய

இன்னுயிர் செருக்கக் கண்டும் எம்பிரான் அன்பர் என்றே
நன்னெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில்
என்னுரை செய்தே னாக இகல்விறன் மிண்டர் பொற்றாள்
சென்னிவைத் தவர்முன் செய்த திருத்தொண்டு
செப்பலுற்றேன்

என்னும் கூற்றும் இங்கு இணைத்து எண்ணத் தக்கது.

நூலின் நோக்கம்

நூலின் நோக்கம் எதுவோ அதுவே வரலாற்றில் சிறப்பிடம் பெற வேண்டும் என்பது நூலாசிரியரின் கொள்கை. அதனாலேயே புலவர்களின் வரலாற்றில் அவர்களுடைய அருளிச் செயல்களுக்கும் அவர்களுடைய நூல்களின் சிறப்புக்களுக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளார் திருவாதவூரார் சருக்கத்தில் அவர் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராய் இருத்தல், அரசன் பரி வாங்கி வர அனுப்புதல், பரி வாங்கச் சென்றவர் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் முனிவரிடம் உபதேசம் பெற்று உலகியல் மறத்தல், சிவபிரான் அவர் பொருட்டு நரியைப் பரியாக்குதல், பிட்டுக்கு மண் சுமத்தல், விட்டுணு சித்தர் சருக்கத்தில் விட்டுணு சித்தர் சிறு குழந்தையைக் கண்டெடுத்தல் ஆண்டாள் என்று பெயரிட்டு வளர்த்தல், ஆண்டாள் ஈசனுக்குப் போடும் பூமாலையைத் தொடுத்து தான் போட்டுப் பார்த்துக் கொடுத்தனுப்பல் மற்றும் திருநாவுக்கரசர் சருக்கம், திருஞான சம்பந்தர் சருக்கம் போன்ற அனைத்துச் சருக்கத்திலும் அவர்கள் வரலாற்றையும், அருளிச் செயல்களையும் விறுவிறுப்புடன் கூறிச் செல்லும் பாங்கினைக் காண முடிகிறது.

ஒரே பெயரில் பல புலவர்கள் இருத்தலால் தமிழ் இலக்கிய வரலாற்றில் குழப்பம் தோன்றுவதனைச் சுவாமிகளே தெளிவு படுத்தலை

முன்னௌவை கலிவருட மூன்றாவ தாயிரத்தாள்
பின்னௌவை நாலாவ தாயிரத்தில் பிறந்திட்டாள்
அன்னவள் தன் திருவடியில் அடுத்தவள் போய்க் கலந்ததனால்
இன்னவரைப் பிரியாமல் ஏகமென்றார் பலர்தாமே (564)

என்பது போன்ற பகுதிகள் சுட்டுகின்றன.

முன்னோர் மொழிக்கு முதன்மை

புலவர்கள் யார் எவ்வாறு பாடினார்களோ, அத்தகைய அவர்களது பாடல்களையே சுட்டிக் காட்டி அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக – அதே சமயத்தில் தெளிவாகக் காட்டியுள்ள புலமைத் தன்மையைக் கண்டு வியக்காதிருக்க முடியாது.

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்
தென்னாடு செய்யதமிழ் உடைத்து சீர்த்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து

என்று ஔவையார் பாடியுள்ள பாடலில் இடம் பெறும் சொற்களை அமைத்தே ஔவையார் சருக்கத்தில்

வேழமுள்ளது கேரளம் மிக்கசோ றுளது
சோழநாடு செந்தமிழது பாண்டியன் தொன்னாடு
ஆழநெஞ்சினரது தொண்டை மண்டலம் எனும்பாட்டு
ஈழர்உய்ந்த ஊர்மதில்புறத்து எழுதினள் இவளே

என்று ஔவையார் வரலாற்றைக் கூறும்போது எழுதியிருப்பதும்

வையம் துகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யும் தவம் உடை யார்க்குள வாகிய சின்னங்களே

(அபி.அந். 52)

என்று அபிராமப் பட்டர் பாடியுள்ள பாடலைக் கொண்டே அபிராமப் பட்டர் சருக்கத்தில்

'வையமும் துரகமும் மதத்த வேழமும்
செய்யமா மகுடமா நிலவும் திங்கள்சூ
டையன்மா மனையவள் அடிகட் கன்புமுன்
செய்யவல் லவர்கொள்கின் னங்கள்' என்பதே (2054)

என்று அவரது வரலாற்றைக் கூறும்போது எழுதியிருப்பதும் சான்றாகக் கொள்ளலாம். புலவர்களின் கூற்றுக்கு மதிப்பு அளிக்குமுகத்தான் பிறர் சொற்களை அவர்தம் நெறியிலேயே இங்கு புலப்படுத்தியுள்ளார்.

ஒருவனே தேவன்

எச்சமயத்தவராயினும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் ஒன்றுதான் என்பதையும் சத்தாகி, சித்தாகி, ஆனந்த மயமாகி நிற்பவன் அவன் என்பதையும் விளக்கி நிற்கும் பாடல்கள் ஆசிரியரின் இறையுணர்வையும் மத நல்லிணக்கத்தையும் புலப்படுத்துகின்றன.

யாவும் வல்லவன்; எம்மதத் தினர்க்கும்
இறைவன் எங்கணும் என்றும்வாழ் ஒருமெய்த்
தேவுளான் அவன்தன்மை யார்-அறிவார்?
சிலரை வாழ்வித்துச் சிலரைக் கெடுப்பான் (324)

சத்தேசித் தாகிஅதே ஆனந்த
மயமாகும் தகைதே றான்பால்
புத்தேளிர்க் கிதம்புரிந்து புலைத்தகுவர்
குடிகெடுக்கும் புனித மூர்த்தி (1884)

என்னும் பாடல்கள் சான்றாக உள்ளன.

அகத்தே கறுத்துப் புறத்தே பக்திமான் போல் நடிப்பதில் பயனில்லை. ஆண்டவனுடைய அருளைப் பெறும் அளவுக்கு உண்மையான அன்பு இருத்தல் அவசியம் என்பதையும் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதையும்

பக்தி வைராக்கியம் ஞானம் கல்விமுத
லாய நலம்படைத் திட்டாலும்
சித்தி ஒன்றும் பெற்றிலனேல் செயம்அடையான் (2426)

எங்குபோகினும் தெய்வ சகாயம் ஒன்றின்றேல்
அங்குநாடிய பயன்எய்தா (2498)

என்றாற்போல் பல்வேறிடங்களில் வலியுறுத்துகிறார்.

அன்பர்களின் மனத்தைக் கோயிலாகக் கொண்டிருப்பவன் இறைவனாதலால் உலகில் வாழும் ஒவ்வொருவரும் அவரவர் மனச்சாட்சிக்குப் பயப்பட வேண்டும். 'மனச்சாட்சியே அனைத் திற்கும் மேலானது' என்பதை வலியுறுத்த வந்தவர்,

பத்தியும் சித்தியும் பழுதில் முத்தியும்
உத்தியின் அளவினில் உயர்வும் தாழ்வுமாம்
சித்தியே, உலகினர் தெரிதற் பாலது
சத்தியமா மனச்சாட்சி மேலரோ (2519)

என்று பாடியுள்ளார்.

வழக்குச் சொற்கள்

ஒரு குறிப்பிட்ட வழக்குச் சொல் மக்களின் பேச்சில் பெறும் ஆற்றலை விட, பாட்டினுள் அமைக்கப்படும்போது பெறும்

ஆற்றல் மிகுதியாகும். இந்நூலாசிரியரும் பொதுமக்கள் வாழ்வில் இடம்பெறும் அன்றாட நடைமுறைச் சொற்களுக்கும் கவிதையில் இடம் தந்து இறவாத் தன்மையை ஏற்படுத்துகிறார். பொக்கணம், முடைதல், வெள்ளேடு, விடலை, அபவாதம், புழுங்கல், கொப்பு, மொத்தினான், வதந்தி, தீக்கண், துரிதம், அசனி, பரியம், தறி, மறி, வாகு, மாப்பு, பதர், பைய, முறி, அயதி, உசிதம், மிளாறு, சும்மாடு, பூடணம், தூர்த்தன், குடலை, யாணம், விதரணம், மடைப்பள்ளி, பிளவை, சப்பரம் போன்ற சொற்களைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

பிற்காலப் புலவர்களுள் சிறப்பிடம் பெற்றுத் திகழும் தண்டபாணி சுவாமிகளின் புலவர் புராணம் புலவர்கள் வரலாற்றைக் கோவைப்படுத்தித் தருவதோடன்றி கவிதை நயம் செழுமிய பாடல்களைத் தன்னகத்துக் கொண்டு மிளிர்கிறது. கவிதைகள் ஆசிரியருடைய நாட்டுப்பற்று, மொழிப்பற்று, ஆகியவற்றைக் காட்டுவனவாகவும் வருபொருளுரைத்தல், நூலின் நோக்கம், முன்னோர் மொழி பொருள், பழமொழி, வழக்குச் சொற்கள், இறைக் கொள்கை ஆகியவற்றை எடுத்தியம்புவனவாகவும் அமைந்துள்ளதை இதன்வழி அறியலாம்.

தமிழைப் போற்றுதல்

பொ. பா. லோகாபிராமன்

தண்டபாணி சுவாமிகள் பல்வேறு வழிகளில் தமிழ்ப்பணி செய்துள்ளார். அவற்றைப் பின்வருமாறு கூறலாம், 1. தமிழில் பக்திப்பாடல்கள் பல இயற்றியது, 2. தமிழுக்கு இலக்கணங்கள் எழுதியது, 3. வழிபாட்டு தத்துவ நூல்களை தமிழில் எழுதியது, 4. தன் இறை அனுபவங்களைத் தமிழில் எழுதியது, 5. தமிழ் மொழியின் சிறப்பையும் வலிமையையும் தனி நூலாலும், தன் பல்வேறு நூல்களில் வரும் குறிப்பாலும் வலியுறுத்தியது. இவற்றில் ஐந்தாவதாக வரும் செயல்பாடுகளே இக்கட்டுரையின் கருப்பொருளாக அமைகின்றன. தண்டபாணி சுவாமிகள் தமிழின் வலிமையையும் சிறப்பையும் தம் எவ்வெந்நூல்களில் வலியுறுத்தி உள்ளார் என்பது காணத்தக்கது. அவை பின் வருவனவாகும்.

1. தன் பல்வேறு நூல்களிலும் ஆங்காங்கே தமிழின் வலிமையையும் சிறப்பையும் வலியுறுத்தியது.

முத்தமிழ்ப் பாமாலை: இந்நூற்பெயர் முத்தமிழைப் பாமாலையால் பாடியது என்ற பொருளுடையது அல்ல. மாறாக இயற்றமிழ் (ஆசிரியப்பா) இசைத்தமிழ் (விருத்தப்பா) நாடகத் தமிழ் (கீர்த்தனை) ஆகிய மூன்று யாப்பாலும் தமிழ்ச் சுவை நலத்தையும் தான் பெற்ற இறையருள் இன்பத்தையும் எடுத்துக் கூறியுள்ளார் என இப்புத்தகத்தின் நன்றியுரையில் து. தியாகராசன் கூறியுள்ளார். ஆயினும் சுவாமிகளின் இறையருள் இன்பமே நூல் முழுக்கக் கூறப் பெறுகிறது. இடையிடையே சில இடங்களில் மட்டுமே தமிழ்ச் சுவை நலம் கூறப்பெறுகிறது.

இந்நூலின் முதல் பாட்டில் திருக்குறள் சுவடி மதுரையில் சங்கப்பலகையில் இருந்தபோது அசரீரி ஒலித்ததால் அதன் பொருள் ஆறு சமயத்தில் விரவியுள்ளது எனத் தாமறிந்து

அடியவர் பாததூளியைச் சூடியதாகவும் திருக்குறளின் சிறப்பு கூறுகிறார்.

மேலும் கீர்த்தனையில் திருச்செந்தூர்க் கடலிலும் தாமிர பரணியாற்றிலும் தீயிலும் தமிழ்ச் சுவடிகள் எறியப்பட்டதைக் கொடுமை என்று குறிப்பிடுகிறார்.

விருத்தப்பாவில் சம்பந்தரால் எலும்பு பெண்ணானது, சுந்தரரால் முதலை உண்ட பிள்ளை மீண்டது, திருமழிசை ஆழ்வார் தமிழின் பின் திருமால் சென்றது, காளமேகம் மண்மாரி பெய்வித்து திருமலைராயன் பட்டினத்தை அழித்தது போன்ற பலவற்றைக் குறிப்பிடுகிறார்.

மற்றோர் பாடலிலும் ஞானசம்பந்தர், நம்மாழ்வார், மணிவாசகர், அருணகிரிநாதர், ஔவையார் ஆகிய தமிழ்ப் புலவர்களின் செயல்களையும் சிறப்பித்துள்ளார்.

அறுவகை இலக்கணம்: இதில் ஆறாவதாகிய புலமை இலக்கணத்தில் ''தவறியல்பு'' கூறும்போது, ''தமிழ் மொழிக்கு உயர் மொழி தரணியில் உளதெனில், வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே'' எனச் சொல்லியுள்ளார்.

குருபர தத்துவநூல்: இது சுவாமிகளின் இறையனுபவங் களைக் கூறும் நூல். இதில் தமக்கும் வடமொழி வல்ல வேதியர், வேளாளர் ஆகிய இருவருக்கும் தமிழ் உயர்வா? வடமொழி உயர்வா? என்பது பற்றி நடந்த விவாதத்தை விவரித்துள்ளார். அவ்விவாதம் முடியாது நீண்டதால் முருகப்பெருமான் முன் திருவுளச் சீட்டு போட்டு எடுத்துப் பார்க்க, அதில் 'தமிழே உயர்ச்சி' என்ற சீட்டு வந்ததால் தமிழே உயர்ச்சி என்று சீட்டுக் கொடுத்த பெருமாளே என திருப்புகழ்ப் பாட்டு ஓதினார். பின்னரே தமிழின் சிறப்பையும் வலிமையையும் முழுக்க வலியுறுத்தும் 'தமிழ் அலங்காரம்' என்னும் நூலை இயற்றினார்.

2. தமிழுக்காகத் தனியே பாடிய நூல்கள்

புலவர் புராணம்: புலவர்களின் பழமையான கதையைச் சொல்லும் நூல். இங்கு, புலவர் என்பது மெய்யறிவுடை யோரையே குறிக்கும். இதில் புராணம் மூலமாக மட்டும் அறியப் படுகின்ற அகத்தியர் முதல் வரலாற்று மாந்தர்களாகிய (கி. பி. 6

முதல் கி. பி. 19-ம் நூற்றாண்டு வரை விளங்கிய) பல்வேறு புலவர்களின் வரலாறுகள் கூறப்படுகின்றன. 'மெய்யறிவுடையோர்' என்ற வரையறையால் சங்கப் புலவர் விலக்கப்பட்டனர் போலும்.

தமிழ் அலங்காரம்: கந்தனின் சிறப்பியல்புகளைக் கூறி பாமாலையால் அலங்காரம் செய்தது கந்தர் அலங்காரம் ஆதல் போல் தமிழ் மொழியின் பெருமைகளைக் கூறி தமிழ் அன்னைக்கு அலங்காரம் செய்வது தமிழ் அலங்காரம் ஆகும் எனத் தி. மு. சங்கரலிங்கம் பதிப்புப்பாயிரத்தில் கூறுவது ஏற்கத்தக்கதே. புலவர் புராணம் என்பதும் தமிழ்ப் பற்றிய தனிநூலேயாயினும் அதில் தமிழைப் பாடிய புலவர்களின் வாழ்க்கையே பிரதானமாக விளக்கப்பட்டது. ஆனால் இந்நூலில் அப்புலவர்கள் பாடிய தமிழும் அதன் சிறப்பியல்களுமே பிரதானமாக விளக்கப்பட்டன. அதனாலேயே இக்கட்டுரை இந்நூல் ஒன்றையே முழுமையாக ஆய்வுக்குட்படுத்துகிறது.

நூல் தோன்றிய வரலாறு

1864 அளவில் சுவாமிகள் இராயவேலூரில் அமுதலிங்க சுவாமி மடத்தில் தங்கியிருந்தபோது வடமொழி வல்ல வேதியர் ஒருவரும், வேளாளர் ஒருவரும், ஆகிய இருவரும் இவரிடம் வடமொழியே உயர்வு என்று வாதிட்டனர். சுவாமிகளும்

"தமிழ்மொழிக்கு உயர்மொழி தரணியில் உளதெனில்...
வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே"

எனத் தாம் அருளியதற்கேற்ப தமிழின் மேல் தனக்குள்ள உரிமையால் அவர்களுடன் வாதிடத் தொடங்கினார். ஆனால் இரவில் தொடங்கிய வாதம் முடியாது பகலிலும் நீண்டதால் இருதரப்பாரும் ஒத்து முருகன் முன் திருவுளச் சீட்டுப் போட்டு உண்மை அறிய முயன்றனர். 1. தமிழே உயர்ச்சி 2. வடமொழியே உயர்ச்சி 3. இரண்டும் உயர்ச்சி 4. காலத்திற்கேற்ப உயர்ச்சி 5. குலத்திற்கேற்ப உயர்ச்சி 6. நாட்டுக்கேற்ப உயர்ச்சி 7. பெருமைக்கேற்ப உயர்ச்சி என்ற விதமாக ஏழு சீட்டு எழுதி சுவாமிகள் பூசைக்குரிய வேலன் முன் இட்டனர். ஒரு பெண் வந்து சீட்டு எடுத்துக் கொடுத்தாள். அது 'தமிழே உயர்ச்சி' என்ற சீட்டாகும். அதன் பின் பாடப்பட்டதே இந்நூல்.

தமிழா வடமொழியா எது உயர்வு என்ற வாதத்தின் விளைவாகத் தோன்றியதாதலால் இந்நூலின் அமைப்பு அதற் கேற்பவே அமைந்துள்ளது. பின்வருமாறு தமிழின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

1. தமிழ் வடமொழியை விட உயர்வானது

வடமொழியில் வல்ல வேதியரும், வேளாளரும், வட மொழியே உயர்வு என்று வாதிட்டதால் சுவாமிகள் தமிழ் அதை விட உயர்வு என வாதிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பொதிய மலையில் உள்ள அகத்தியர் ஒருவேளை, தமிழுக்கு ஒப்பாக வேறு ஒரு மொழியைச் சொல்ல முற்படுவாராயின் அவர் வயதாகிவிட்டதால் அறிவு கலங்கி விட்டார், என்றே நான் துணித்து கூறுவேன், என்பதால் சுவாமிகளின் வெகுளி வெளிப்படக் காணலாம்.

ஒப்பாக வேறுமொழியில்லை என்பதால் தமிழைவிட வட மொழி தாழ்ந்ததே என்பதை தென் மொழி தமிழ் வலம் எனவும், வடமொழி இடம் எனவும் வழங்குதலால் வலக்கரத்தினும் இடக் கரம் தாழ்வு என விளக்குகிறார். மேலும் வடமொழியை விட தமிழ் உயர்வு என்பதற்குப் பின்வரும் பல காரணங்கள் கூறுகிறார்.

வைணவ முறையான தென்கலை போற்றும் பக்தியும் தமிழுமே உயர்வானவை. வடமொழி வேதம் கொலை வேள்வியை சிறப்பிக்க, தமிழ் வேதம் கொலை, புலை தகாது என்பதால் தமிழே உயர்வு. சிவனது திருமணம் தடையின்றி நடக்கச் செய்தது தமிழ்ப் புலவர் அகத்தியரே அன்றி வட மொழி புலவர் பாணினி அல்ல. தன்மையுடன் இனிய தமிழையும் கொண்ட தென்றல் உடலுக்கு நலம் தரும். கடினமான வட மொழி விரவிய வாடைக்காற்று உடற் அயர்ச்சி தரும். இதை மருத்துவ நூல் வல்லாரே கூறுவர். வியாச பாரதத்தை அண்மையில் இருந்த விநாயகரை மேரு மலையில் எழுதப் பணித்தார் சிவபெருமான். ஆனால் மணிவாசகரின் தமிழ்த் திருவாசகத்தை தன் கைகளால் எழுதினார். உமைத் தர ஞானப் பால் உண்ட சம்பந்தர் தேவாரம் பாடியது தமிழிலேயே அன்றி

எகர ஒகர குறில் இல்லாத வடமொழியில் அல்ல. வேதியரும் வேளாளரும் வடமொழி க, ச, ட, த, ப ஆகியவற்றில் வர்க்க எழுத்துக்கள் கொண்டது, எனப் பெருமைக் கொண்டதற்கு சுவாமிகள் கொடுத்த பதிலடியிது. பல மொழிகளாலும் புகழப் பட்ட வடமொழி முன் ஒரு கால், தமிழின் மீது பொறாமை கொண்டதால் சிவபெருமான் திருமாலும் வடமொழி நாணும் படி, வேதத்தைத் தமக்கு பின்னும் தென் மொழியான தமிழை தமக்கு முன்னும் ஒலிக்கும்படியாக செய்தனர் என எடுத்துக் கூறுகிறார்.

2. வடமொழியுடன் சமமானது

மேலே அவர் கூறிய கருத்துக்கள் அனைத்தும் தமிழைச் சிறப்பிக்க வந்ததே அன்றி வடமொழியை இழிவுபடுத்த அல்ல என்பதை உணர்த்துவதற்காக தமிழ்ப்பற்றுக் காரணமாக வடமொழியை இழிவுபடுத்துவோரும் வடமொழிப்பற்றுக் காரணமாக தமிழை இழிவுபடுத்துவோரும் சண்டாளர் என்கிறார். எனவே இவர் வடமொழி தமிழ் இரண்டும் சமமான பெருமை உடையலவை என்ற கருத்தினர், என்பது விளங்குகிறது.

3. தமிழின் தனித்தன்மை கூறுதல்

மேலும் பலப் பாடல்களில் தமிழின் தனிச்சிறப்பை விதந்தோதுகிறார். அவற்றைப் பின்வருமாறு வகுத்துக் கூறலாம்.

1. சமயம் தொடர்பானவை

சைவம் தொடர்பானவை: இதில் சிவன் புலவனாக வந்து பாடியது, புலவர்களுக்கு உதவியது, புலவர்கள் பாட அடியெடுத்துக் கொடுத்தது, தமிழால் தன்னை பாடிய புலவர்கள் வாழ்வில் அற்புதங்களை நிகழ்த்தியது ஆகியன கூறப்படுகின்றன.

வைணவம் தொடர்பானவை: ஆழ்வார்கள் பாடலின் இனிமையும் அதனால் திருமால் அவர்களை தடுத்தாட் கொண்டதும் கூறப்பட்டுள்ளன.

சாக்தம் தொடர்பானவை: அம்பிகை தமிழ் பாட்டு எழுதியது, தமிழ் புலவனுக்கு குற்றேவல் புரிந்தது, அபிராம பட்டருக்காக அற்புதம் நிகழ்த்தியது ஆகியன கூறப்பட்டுள்ளன.

கௌமாரம் தொடர்பானவை: சுவாமிகள் கௌமாரச் சமயம் பரப்புவதே வாழ்வாக கொண்டவர். ஆதலால் அது தொடர் பாகவும் பல தமிழ்ச் சிறப்புகள் கூறுகின்றார். இது வரை தமிழ்ச் செய்யுள் படைப்பவர்களாக தெய்வங்கள் கூறப்பட, முருகனோ இலக்கியத் திறனாய்வில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. கந்தபுராண அரங்கேற்றத்தின்போது 'திகடச்சக்கரம்' என்பதன் புணர்ச்சி விதியை வீரசோழியத்திலிருந்து எடுத்துக் கூறிய நிகழ்ச்சி கூறப்படுகிறது. இறையனார் களவியல் நக்கீரர் உரையைச் சிறந்தது என முருகன் நிரூபித்தது சுவாமிகள் பாடவில்லையாயினும் நம் நினைவுக்கு வருகிறது. மேலும் பல்வேறு புலவர்களுக்காக முருகன் அற்புதங்களை நிகழ்த்தியதும் கூறப்படுகிறது.

காணாபத்யம் தொடர்பானவை: ஔவையார் சேரமான், சுந்தரர் இருவருக்கும் முன்பு கயிலையை அடைய உதவியது இரட்டையர்களுக்கு பொருள் உதவியது ஆகிய செயல்களை கணபதி அவர்கள் தம்மைத் தமிழால் பாடியதாலேயே நிகழ்த்தினார் என்பது கூறப்பட்டுள்ளது.

கலைமகள் தொடர்பானவை: கலைமகள் தானே மதுரையில் சங்கப் பலகையாகி திருக்குறளைத் தாங்கியதால் தான் அது நிலைத்தது என்பதும் கம்பருக்கு கலைமகள் பல சமயங்களில் உதவி புரிந்ததும் கூறப்பட்டுள்ளன.

சமயத் தொடர்பு அற்றவை

தமிழ் ஆக்கவும் அழிக்கவும் வல்லது என புலவர்கள் பாட்டால் உணர்த்துதல்

1. ஔவையார் துண்டு பனையையும் கூழைப் பலாவையும் தழைக்க வைத்தது.
2. சோழனால் வெட்டுண்ட ஆயிரம் செங்குந்தர் தலைகளை ஒட்டக்கூத்தர் தன் பாட்டால் ஒட்ட வைத்தது.
3. சோழன் தன்னைக் கொல்ல ஏவிய புலியை 'வெங்கண் சிவந்து' என்ற பாடலால் கம்பர் சாகவைத்தது அவரே சோழ மரபை 'சொல்லம்பு வில்லம்பு' என்ற பாட்டால் அழித்தது.

4. இரட்டையர்கள் தம் பாடலால் பம்பா ஆற்றின் போக்கையே மாற்றியது.

5. காளமேகப் புலவர் திருமலைராயன் பட்டினத்தை தம் பாடலால் மண்மாரி பெய்வித்தழித்தது.

6. வசைகவியாண்டான் தன் தமிழ் பாட்டால் பலரை மாய்த்தது.

7. சீனிவாசப் புலவர் தமிழ் பாடி மழைப் பெய்வித்தது.

8. இத்தனைக்கும் முத்தாய்ப்பாக தமிழ் தன்னைப் பாடுவோரை தேவரை மிஞ்சிய தேவராக்க வல்லது எனப் பாராட்டுகிறார்.

2. புலவர்கள் இயல்பு பற்றிக் கூறியது

மேற்கூறிய பல சிறப்புகள் கொண்ட தமிழைக் கற்ற புலவன் அதனால் பெருமையடையாது அது வேறு மொழியில் இருந்து வந்தது என ஒப்புக் கொள்வானானால், அவன் வேறு ஒரு பெண்ணின் கணவனை முகந்து மகிழும் பெண்ணோடு ஒத்தவன், என்றதன் மூலம் தமிழ் கற்றோருக்கு இருக்க வேண்டிய பற்றையும் பெருமிதத்தையும் குறித்தார்.

தவறு செய்வோர் அறம் பாடி அழித்துவிடுவானோ என்று அஞ்சும் படியாக பாடும் பலித சித்தி இல்லாத புலவன் வீணாவான் என்பதன் மூலம் தமிழ்ப் புலவர்கள் என்றைக்கும் நியாயத்தின் பக்கம் நின்று அநியாயக்காரரை அழிக்க வேண்டும் என அஞ்சாமையை போதித்தார்.

மேற்கூறிய உண்மைத் தமிழ்ப் பற்றும் அறம் பாடும் திறனும் வாய்த்தாலும் எதிர்த்த பகைவரை ஒடுக்கும் அருளாற்றலும் தெய்வக் காட்சியும் புலவர்கள் பெற வேண்டிய தகுதிகளாகும். அத்தகையோர் பெரும் வெற்றி பொதிகை மலை ஈன்ற தமிழுக்கு அழகாகும் என தமிழின் அழகை கூறி முடித்தார்.

திருப்புகழ்ப் பண்ணவரும் திருப்புகழ் சுவாமிகளும்

சு. லோகாம்பாள்

தென்னிந்தியாவில் குறுநில தலைவர்கள் ஆட்சிபுரிந்த 15-ஆம் நூற்றாண்டிலும், ஐரோப்பியர்களின் ஆட்சிக் காலமான 19-ஆம் நூற்றாண்டிலும் மற்றுமொரு சமய மறுமலர்ச்சிக் காலத்தைப் பார்க்க முடிகிறது. வேற்று நாட்டு சமயங்களின் நுழைவு இக் காலங்களில் வன்மையாக தாக்கினவாயினும், சிலர் ஞானியர் களாக தம்மைச் செம்மைப்படுத்திக்கொண்டு சமயத்தின் நிலை பேற்றிற்கு உழைத்திருக்கின்றனர் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். அத்தச் சிலருள், இருவர் மட்டும் பல நிலைகளில் ஒப்புமையுடையவர்களாகக் காட்சியளிக்கின்றனர். அவர்களே அருணகிரி சுவாமிகளும், தண்டபாணி சுவாமிகளும் ஆவர்.

அருணகிரி சுவாமிகளின் காலம் பெரும்பாலனோர் கருத்துப்படி கி.பி. 1447-க்கு முற்பட்டதாகும். தண்டபாணி சுவாமிகளின் காலம் கி.பி. 28.11.1839 முதல் 5.7.1898 வரை ஆகும். ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளின் இடைவெளி காணப்படுவது காலத்தினால் மட்டுமேயாகும். இவ்விருவர்கள் செய்த தமிழ்த் தொண்டு, தமிழ் இலக்கியத் தொண்டு, தமிழ்ச் சமயத் தொண்டு என்று விரிவடைந்து, வியப்பூட்டுவதாகிய ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது என்பது உண்மையாகும்.

இலக்கியங்கள், மக்கள் வாழ்வியல் விமர்சனங்களாகும். இலக்கியங்களின் ஆழங்களைப் புரிந்து கொண்டால், அவ்விலக் கியங்கள் முகிழ்ந்த காலங்களின் வரலாறுகளையும் ஓரளவு அறிந்து கொள்ளமுடியும்.

தென்னகச் சமயங்களுக்கு வடநாட்டுச் சமயங்களின் ஆதிக்கம் வலுவான சூழலில் சமயக்குரவர்கள் முயன்றதைப்

போலவே, தமிழ்ச் சமயத்திற்கு இசுலாமிய கிறிஸ்துவ ஆதிக்கம் வலுவடைந்ததைத் தடுத்து நிறுத்த முயன்றவர்களாகவே அருணகிரியாரும், தண்டபாணி சுவாமிகளும் புகழ் பெறு கின்றனர் என்பது துணிபாகும். எனவே, இவ்விருவரையும் ஒப்பிட்டுக் காண்பது தேவையாகிறது.

அருணகிரி சுவாமிகளும் தண்டபாணி சுவாமிகளும் தோன்றிய புறச்சூழல்கள் இவ்வாறிருக்க அவர்களுடைய தனிப் பட்ட வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சியும் இன்றியமையாத தாகும். எக் காலமாயினும், புலவர்களுடைய படைப்புக்களில் இருந்தே அவர்களுடைய வாழ்க்கையும் ஓரளவு அறிய முடியும் என்பதற்கேற்ப இவ்விருவர்களையும் அவர்கள் தந்த புலமைப் படைப்புக்களை ஆராய்ந்து காணவேண்டிய அவசியமாகும்.

அருணகிரியாருடைய வாழ்க்கையின் முதல் பகுதியில் அவர் சிற்றின்ப வேட்கையால் நலங்குன்றியவர் என்பது மறுக்கப் படாத உண்மையாகும். பொதுமகளிர் தொடர்பினால், தீராத பிணியுற்று, வறுமையும் அடைந்து, தற்கொலை புரிந்து கொள்ளுமளவிற்கு ஏளனமடைந்தார் என்பதை, "மனையவள் நகைக்க ஊரின் அனைவரும் நகைக்க லோக, மகளிரும் நகைக்க தாதை தமரோடும் மனமது சலிப்ப, நாயன் உளமது சலிப்ப யாரும், வசைமொழி பிதற்றி நாளும் - அடியேனை அனைவரும் இழிப்ப'' என்று, தாம் தற்கொலை புரிந்து கொள்ளத் துணிந்த தற்கான காரணத்தைத் தெளிவாகவே கூறியுள்ளார். பெருந் தன்மையுடைவர்கள், தம் வாழ்வில் இகழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி களையும் கூறுவதற்குத் தயங்க மாட்டாரன்றோ! தவறுதல் இயல்பு. தவறிலிருந்து முயன்று தெளிவடைவது தானே உயர்வு! இதற்கு அருணகிரியார் சான்றாகவுள்ளார்.

நெல்லை தந்த புலவர், தமது சிறுபிள்ளைப் பருவத்திலேயே வேல் வழிபாட்டில் மனம் ஊன்றியவரெனக் காண்பதால், அவர் வாழ்வில் மேற்கூறிய பலவீனம் நுழைவதற்கு வழியில்லை என்று கூறத் தோன்றும். ஆயினும், அவருடைய வாழ்வில் துறவில் ஈடு பட்டிருக்கும் நாளில் சுந்தரம் என்ற திருப்பெயர் கொண்ட பெண்பால் மனம் ஈடுபாடுற்றுத்தான் அவளைத் துணையெனப் பற்றினார்.

இல்லறத்தை அறிந்து கொள்வதற்கு அவர் ஏற்றுக்கொண்ட ஞானத் திருமணமாகக் கொள்வதற்கு ''மழுக் காத்தார் பெறும் செவ்வேள் வலியை எவர்கடப்பாரே'' புதுவைச் சருக்கம் (57) என்ற பாடல் சான்றாகின்றது. ஆயினும், அப்பெருமானுடைய வாழ்விலும் பெண்ணாசை என்ற மறு இல்லாமல் இல்லை என்பதை அவர் வாய் தந்த அமுதத் துளிகளே சான்று பகர்கின்றன.

''பூவாளி கொண்டு தென்றல் மீதேறி முன் பெதிர்ந்து,
போரோடும் வஞ்சகன்றன் முடி போலே
பூணாவிலங்கு கொங்கை மானருடன் புணர்ந்துபோகாத
செம்புண் வங்கு குளிர் நேராம்,
நோவாயிரஞ் சுமந்து பாயோட முந்தி நொந்து
நூறாயுளுந் தொலைந்து மடியாதே''
(வேலூர்க் குகவேள் திருப்புகழ் பதிகம் 1)

என்பது, பிறருக்குக் கூறிய அறிவுரையாக மட்டும் கொள்வதற் கில்லை, ஏனெனில், அவரே

''முத்தமே போல்வதான பற்கொன் மானார்கள்
மோக முற்று நாள்தோறு மேனி தளர் தீயேன்
(வேலூர்க் குகவேள் திருப்புகழ் பதிகம் 2)

என்கின்றாரே ''நாணாத வேசியர் மாமோக லீலையில் நாய் போல் உலாவி உள் மெலியாதே...ஞானாநுபூதியை அருள்வாயே'' வேலூர்ப் பதிகங்கள் (9) என்று தன்னைக் காப்பாற்றும்படி முருகனைப் பணிகின்றார்.

''படர் சுணங்குறு முலைப் பாவைமார் விழிக்
கடலிடைப் படுமனம் கரை என் றேறுமோ?
(வேலூர் அமுதச் சித்தர் பதிகம் 2)

என்று ஏங்குகிறார். ஆகவே, அருணைப் புலவரும், நெல்லைப் புலவரும், சிற்றின்ப வேட்கை மிகுதி கொண்டவர்களாயிருந்து இழுக்கற்று, மனம் நொந்து தற்கொலையை நாடி, முறையே அண்ணாமலைக் கோபுரத்திலும், திருமலை உச்சியிலும் பதம் வைத்தனர் என்பதுதான் உண்மை!

நல்லவர்களை விடவும், ஒருசில பலவீனங்களில் உழன்றவர் களுக்கும் இறையருள் விரைவில் கிட்டும் என்பது சான்றாகும்.

பருவ வேட்கையால் தளர்ந்த இவ்விருவரையும், தடுத்தாட் கொள்ளும் பொறுப்பு அவர்கள் நம்பியுள்ள கடவுளர்க்கேச் சாரும். ஆகையால்தான், இருவருக்கும் முருகப்பெருமான் அருள் புரிந்தான் என்று பார்க்க முடிகிறது.

இருவருக்குமே முருகன் குருவடிவில்தான் காட்சி தந்து ஆட்கொண்டான். குருவாக வந்தவர், முருகனிடம் பக்திபூண்ட மானிடனாகக் கூட இருக்கலாம்! தண்டபாணி சுவாமிகள் இதனை,

''வந்தான் குரவன் மனிதனே ஆயினும் என்
சித்தாய் அனைத்து மவன் செல்வமே எந்தாயென்று
ஏந்திக் கருதில் இவனாகத் தோன்றும் ஒன்று
சாத்திரங்கள் கூறல் இதேதான்'' என்பார்.

''குருவாய் வருவாய்'' என்று அருணகிரியாரும் (கந்தரனுபூதி) ''குருவெனவந் தவர் பலரும் குகன் என நன்குணர்வேனை அருவெனச் சொற்றிடுவார் மிக்கவ மதியாதருள் செய்வாய்''. (திருப்பூர் முருகப்பெருமான் பதிகம் என்று விண்ணப்பிக் கின்றார் நெல்லைப் புலவர். ஆயினும் அவர் நம்பிக்கை அவரே முருகன் என்பதாகும். அல்லலுற்று, உலகோரால் ஒதுக்கப் பட்ட ஒருவருக்குக் கருணைக்கரம் கிடைத்தால் அதன்பின் அவர்களுடைய ஆற்றல்கள் உலகமே வியக்குமளவிற்கு உயரும் என்பது உண்மை, உண்மை! இந்நிலையில் தாம் இருவரும் உயர்ந்துள்ளார்கள்.

''திங்கள் அனையமுகச் சேயிழையார் மால் பெருக்கிப்
பங்கமுறும் என்னையும் நின் பத்தரொடு கூட்டுவையே
(திருப்பூர் பெருமாள் பதிகம் 5)

என்று இறைஞ்சுகிறார்.

''சொல்லால் உருக்கும் மடவார்தம் இன்பச் சுகம் விழைந்த
பொல்லா மனத்தனென் றென்னை என்னேல்''
(எழுபா எழுபது 23)

என்று மன்றாடுகிறார்.

''கண்ணம்பால் எய்து, கருத்தை கவர் மடவார் எண்ணம் பெரிது நினைத்தேங்கும் வினையென்றொழிப்பாய்,
(எழுபா எழுபது 59)

என்று இறைஞ்சுகின்றார்.

"மாதர் ஆசை வலைப்படும் நாயினேன்"

(கணபதி மாலை, எழுகூற்றிருக்கை 2)

என்று தன்னையே வெறுத்துக் கொள்கிறார்.

இருவருமே முருகனருள் பெற்று, கவிபாடும் புலமை பெற்றார்கள். எனினும் இசையின் திறமை இருவரிடமும் பிறப்பால் இருந்திருக்க வேண்டும். சமயக் குரவர்களைப் போல் சமயத்தையும் இசையையும் இணைத்தனராயினும், பின்னவர் இருவரும் தமிழ்த் தெய்வத்திற்கு முதன்மை அளித்தனர் என்பது தமிழ் மீது கொண்ட பற்றினைப் புலப்படுத்துகின்றது. அறுவகைச் சமயக் கடவுளரைப் பாடினாலும், குருவாகக் காட்சி தந்த குமரனுக்கே முதன்மை அளித்துப் பாடுகிறார்கள். சமயக் குரவர்களைப்போல, இவ்விருவரும் தலயாத்திரை மேற்கொண்டு இறைவனைப் பாடினார்கள் என்பதும் கருத்திற்கொள்ள வேண்டியதாகும். எனவே, தமிழ்த்தெய்வமான முருகனுக்கு, தமிழ்த்திணை தெய்வ சமயத்தின் மறுமலர்ச்சியாக இதனைக் காணவேண்டியுள்ளது.

முருகனைப் பரவிய அருணகிரியார் வஞ்சகரின் சூழ்ச்சியால், ஆசைதீரப் பாட முடியாமற் போனார். உடல் தகிக்கப்பட்டு, கிளி வடிவத்தில் பாடித்திரிந்தார். கந்தர் அநுபூதியை விண்டுரைத்தார். அப்பிறவியில் அவர் ஆணை தீராததால் தானோ என்னவோ, விட்ட குறையை முழுமையாக்க மீட்டும் ஒரு பிறவியெடுத்து நெல்லைப் பாவலனாக ஏற்றம் பெற்றார் என்பதற்கு நெல்லைப் புலவரின் வாய்மொழியே சான்றாகின்றன.

"அருணகிரிநாதனைக் குறித்து முருகோன் என் அறிவு
சான்றா, எத்தனையோ தரம் ஒரு சொல் இசைத்துள்ளான்
அதைப் பல பாட்டிடத்தில் சற்றும், சித்தம் ஒல்கா துரைத்தும்
உள்ளேன் இன்று வரை சந்தேகம் தீரவில்லை"

(அருணகிரிநாதர் சருக்கம், புலவர் புராணம் 75)

என்ற சுவாமிகளின் சொல் இதனை வலியுறுத்துகிறது. "முற்பிறப்பில் நீ அருணகிரிநாதன்" என்று முருகன் சொன்னதே அந்த ஒரு சொல் ஆகுமாம். முற்பிறப்பில் மட்டுமல்ல, இப்பிறப்பிலும் பணி முற்றுப் பெறாதது போல் நெல்லைப்புலவர்,

"... ......செந்தமிழ்ச் சந்தக் கிளி புலவன், கலித் துணை
கொண்டிகத்தில் பல்லோர்,
நன்னலம் உற்றமை முழுதும் நவின்று முடிப்பதற்
கறியேன்" (அருணகிரிநாதர் சருக்கம், புலவர் புராணம் 82)

என்று மாழ்கிறார்.

அருணகிரியார் மீது தண்டபாணி சுவாமிகளுக்கு நெருங்கிய பற்று உள்ளதைப் பாடல்கள் உணர்த்துகின்றன.

"அண்ணாமலையில் ஒரு தமிழ்ப் பாவலன் அன்று குகன்
விண்ணோடுந் தோகை மயின் மேற்கற்றூணில் விளங்கச்
செய்து பேரின்பம் எய்தினானே" (தமிழலங்காரம் 59)

என்று முன்னவர் பெற்ற பேற்றினைப் பெருவியப்போடு எண்ணிப் பார்க்கிறார். அருணகிரியாருடைய தமிழ்ப் புலமை தண்டபாணி சுவாமிகளைத் திகைக்க வைத்து

"அண்டர்களும் பெரிதேத்தும் அருணகிரி முதலானோர்
வண்டமிழ்ப் பாட்டொலி போலும் மழை
பொழியப்புரிவாயே" (மழைப் பதிகம் 1)

என்று பாட வைத்தது.

"அடலருணையிற் கிளியுடம் பிடையிருந்த வாறு
அறை தருமொழித் தொகை அனந்தமும்
வெறும் பொயோ" (எழுபா எழுபது 6)

என்னும்போது, கிளியுருவில் அருணகிரியார் இருந்தபோது அவ்வுடலில் முருகனே இருந்து பாடினார் என்பது போல் சுவாமிகள் வியக்கின்றார். அதாவது அருணகிரியார் முருகனோடு இரண்டறக் கலந்து விட்டார் என்பது தான் பொருள்! எனவே, வாழ்க்கையில் அருணகிரிநாதரைப் போல் அல்லலுற்ற சுவாமிகள், அப்பெருமகனாரைப் போல் தாமும் இறையருளுக்கு முயன்று பெற விழைந்த அவருடைய அவாதான், அருணகிரியாரே "நெல்லைப் புலவர் என்று முருகனே ஒரு சொல் உரைத்ததாக எண்ணி மகிழ்ந்தார் என்பதே பொருத்தமாகவுள்ளது. இதனை தேடிய நாயேனுள் வந்து நீ கிளிதானேயெனுஞ் சொல் சீரிய வாயால் முன் சொல் குமரேசா" என்று பாடுகிறது. வேலூர்க் குகவேள் திருப்புகழ்ப் பதிகம் (7) "திருப்புகழில்" மனம் மயங்கி தம்மை "திருப்புகழ் புலவன்" வரலாற்றுச்சருக்கம் (36) நெல்லைத் திருப்புகழோடு திருவாமாத்தூர் துதிப்பாமாலை (11) என்று

எல்லாம் பூரிப்படைகிறார். அருணகிரியார் சுமார் 200 தலங்களுக்குச் சென்று பாடல்கள் புனைந்ததாகக் கூறுவர். சுவாமிகளும் ''எண்ணரும் பல தலந்தோறும் போய்ப் போய் இனிய பாடல் மிக்கிசைத் திசைத் திளைத்தேன்'' திருவாமாத்தூர் முத்தாம்பிகையம்மன் பதிகம் (6) என்று இயம்புகிறார். "ஆயிரம் தரம் எனைக் கிளியெனச் சொனேன் ஆன கந்தன்'' குமார தெரிகனச் சருக்கம் (47) என்று தன்னிறையு கொள்கிறார் சுவாமிகள். தன் வரலாறு எழுதி வைத்தத் தமிழ்ப்புலவர் என்ற பெருமையுடைய சுவாமிகள் தன் வரலாற்றில்,

> ''யான் முற் பிறப்பில் எவனோ நன்கு இயம்ப வேண்டும்
> எனக் கேட்டேன், அருணகிரிதான் முற்றிலும் நம்பு
> எனச் சொன்னான்'' (முற்பிறப்பு உணர்த்திய சருக்கம் 7)

என்று வெளிப்படையாகவே கூறுகிறார். முருகனே ''மலையடியிற் கவிபாடொருவன் வந்துள்ளான் நம் தம் அருணகிரியவன்......' முற்பிறப்பு உணர்த்திய சருக்கம் (22) என்று இனங் காட்டியதாகக் கூறுகிறார். ''சந்தக் கிளியே யான்'' என்னும் சரதம் அறியும்'' என்கிறார். புதுவைச் சருக்கம் (36) எனவே, தமக்கு முன் வாழ்ந்த அருணகிரியாருக்கும், தமக்கும் வாழ்க்கையில் ஒற்றுமை இருப்பதை உணர்ந்து, இணையருளைப் பெற்ற அருணைப்புலவர் போல் தாமும் பெறவேண்டும் என்ற அவருடைய அவாதான், அவரை முருகன் அருணகிரியாராகச் சொன்னவை என்று உய்த்துணரலாம்.

அருணைப் புலவரைத் தற்கொலையிலிருந்து தடுத்தாண்டு "முத்தைத் தரு'' அடியெடுத்துத் தமிழ் பாட வைத்தார் சுவாமிகளுக்கும் இதுபோன்ற பெரும்பேறுக்காக முயன்றார் திருமலையிலிருந்து உருண்ட தம்மை ஆட்கொண்டு, பாடச் செய்தார் என்பதாக "என் ஒரு கனாவில் வந்து உரையெனத் தூண்டினான்'' என்று குருபர தத்துவத்தில் கூறுகிறார். ஆதலால் முன்னவரும் பின்னவரும் ஒரு நிலையில் வாழ்வை வெறுத்து இறக்கத் துணிந்தபோது, திசைத் திருப்பமாக கவிபாடும் புலமை பெற்றார்கள் என்பதே உண்மையாகும். இது, ஞானியர் வாழ்வில் நிகழும் அதிசயம் என்பதில் ஐயமில்லை, அறிவும் உணர்ச்சியும் சமமாக இணையும் நிலையில் ஏற்படுகின்ற விநோத மாற்றம் என்று இதனைக் கூறலாம். அறிவையும், உணர்வையும்

இறைச் சிந்தனையில் செலுத்தும் போது உலக மகாப் படைப்புக்கள் உருவாவது இயல்புதானே!

இவர்களுடைய மாற்றம், சமயத்திற்கு மட்டுமல்ல தமிழ் இலக்கியத்திற்கே மலரைச்சூட்டியது என்று பார்க்கிறோம். இசைத் தமிழில் ''சந்தம், வண்ணம்'' என்ற செய்யுள் உறுப்பு களுக்கு உருவங்கொடுத்தவர்களாகச் சிறப்புறுகின்றனர். சந்தப் பாக்களைப் புகுத்தியவர் திருஞானசம்பந்தராயினும், இரண்டு சந்தங்களையும் இணைக்கும் தனிச் சொல்லான ''தொங்கல்'' என்னும் புதுமையைக் கையாண்டவர் அருணைப்புலவர் ஆவார். ''சந்தம்'' என்பது பாடலுக்குரிய கட்டுக்கோப்பு ஆகும் என்று இசை வல்லுநர்கள் கூறுவர். சூடாமணி நிகண்டில், ''மருவிட வண்ணஞ் சந்தம் வடிவின் பேர் சொன்ன மாமே என்கிறார் மண்டல புருடோத்தமன் (சூடாமணி நிகண்டு, எதிராஜ் முதலியார், 1897). ''மகிழ்ந்து பாடுவது வண்ணம்'' என்பார் சம்பந்தர். எனவே, சந்தமும், வண்ணமும் இசையின் கூறுகளாகும். பாட்டுக்களிலுள்ள ஓசை விகற்பமே வண்ணம் ஆகும். சந்தமும் வண்ணமும் இசைத் தமிழுக்குப் பெரும் புதையலாகும். ஆகவே, இருவருமே, இசையையும் தமிழையும் சமயத்தோடு இணைத்த சான்றோர்களாவர் என்ற பெருமைக் குரியவராகின்றனர்.

யாப்பில் நேர் – நிரையைப் போல பாடல்களில் தனதந்த - தத்த அசைகளைப் புகுத்தி, தாள ஓசைகளாகச் செய்த பெருமையும் இவர்களுக்குண்டு, பாட்டின் ஓசைகளின் கால அளவைக் குறிக்கும் பொழுதே தாளமாகும். இசைக்கு சரிகமபதநி போல, தாளத்திற்கு தி,தி, தொம், நம், ட, ளாங், தின் என்ற ஏழு சொற்கள் ஆதாரம் ஆகின்றன என்பர். அருணகிரியாரின் பாடல் களில் இந்த அமைப்பும் உள்ளது. ஆகவே, இசைக்கேற்ப நடனமாடுதற்கான ஓர் அமைப்பு இயல்பாகவே பெற்றிருக்கிறது. என்று பார்க்க முடிகிறது. அருணைப் புலவருக்கு, இசை–நடன நுணுக்கங்கள் தெரிந்திருக்கிறது. தண்டபாணி சுவாமிகளும், வண்ணப் பாடலின் இலக்கணத்தை ''சிலவகைச் சந்தப்புணர்ப் போர் துள்ளலே, பல வகைத் துள்ளற் புணர்ப்போர் குழிப்பே, குழிப்பொரு மூன்று கூடிய பின்னர்த் தொங்கற் றாழிசைத் துள்ளலொன்றி சைக்கிற், கலையொன்றாமெனக் கழறுவர் புலவோர், எண்கலைப் புணர்ப்போர் வண்ணப்பாவே'' என்கிறார்.

"துள்ளல் எனப்பட்டதே தொங்கல்" என்பர் இசை வல்லுநர் சந்தங்களுக்கு அருணகிரியார் இலக்கியம் படைத்தார், சுவாமிகளோ இலக்கணமே வரைந்து விட்டார். இதனால்தான், "வண்ணச்சரபம்'' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். எனவே, இருவருமே இசையில் இறைவனை நிறுத்தி தமிழ் இசை, தமிழ்ச் சமயம், தமிழ் இலக்கியம் என்ற தமிழ்ப் புலமைக்குத் தொண்டாற்றியவர்களென்ற ஒப்புமைக்கும் உரியவராகின்றனர்.

சமயக் கொள்கையிலும் இருவரும் ஒன்றுபடுகின்றனர். அறுவகை சமயங்களின் இறைவர்களைப் பாடினும் அவர்களை முருகனோடு தொடர்பு படுத்தியே காண்பது அருணகிரியாரின் போக்காகும். தண்டபாணி சுவாமிகளும் அறுவகை மூர்த்தங் களையும் பரவிப் பாடுபவராகவே உள்ளார். ஆயினும், இவருடைய பாடல்களிலும் தமிழ்ச் சேயோனே முதன்மை பெறுகிறான் என்பது உண்மையாகும்.

சமயக் குரவர்கள் முக்கணானை ஆடல் வல்லானாகக் கண்டு மயங்கினார்கள். முருகனை ஆடலரசனாக்கக் கண்ட புதுமையையும் இவ்விருவரும் புகுத்தியுள்ளனர். முருகப் பெருமான் அருணைப்புலவர் முன் ஆடியதாக "இசைத்தாடும் சந்த பேதம் ஒலித்திடும் தண்டை சூழும் இணைப் பதப் புண்டரீகம் (திருப்புகழ் 15) என்பார். "கருணையடி யரோ டருணையில் ஒரு விசை சுருதி புடை தர வருமிரு பரிபுர கமல மலரடி'' என்று உருகுகிறார். இதற்கெனவே பாடல்களில் கலகல கணகண என்று, சிலம் பொலிக்குப் பாடி'' தண்டையணி கிண்கிணி என்று வருணிக்கின்றார். திருமலை முருகனை தண்டபாணி சுவாமிகள், "உன் திருத் தண்டைக் காலினை நினைக்கும் அறிவிலாச் சிறியேன் களிப்பிறப் புரியும் நாள் உளதோ'' திருமலை முருகப்பெருமான் பதிகம் (1,) என்று ஏங்குகிறார். எனவே, தமிழ்ச் சேயோனையும், ஆடல் வல்லானைப் போல் நடன மூர்த்தியாகக் கண்ட ஒரு புதுமையை யும் இவ்விருவர் சமய நெறியில் பார்க்க முடிகிறது!

அருணகிரியார் திருஞானசம்பந்தரையும், பட்டினத்தடி களையும் தமக்கு முன்னோடியாக ஏற்றுக்கொண்டுள்ளார். தண்டபாணி சுவாமிகளும் திருஞானசம்பந்தரையும், பட்டினத்தடி களையும் அருணகிரியாரையும் தமக்கு நெறியாளர்களாக

ஏற்றுக் கொண்டுள்ளார். ''மலையினத்தரசு ஈன்ற பாவை தன் வள்ள மாமுலைப் பாலினால், நிலைபெறுந் தமிழ் பாடினானை நினைந்து நெட்டுயிர்பாகினேன்'' திருமலை முருகப் பெருமான் பதிகம் (8) என்று ஞானசம்பந்தரை வியப்போடு பார்க்கிறார். ''தமிழ் வித்தகன்'' என்று பட்டினத்தடிகளை வியக்கின்றார். தமிழலங்காரம் (54), தம்முடைய முற்பிறப்பே அருணகிரியாராவார் என்று கருதிக் கொள்வதால், தமக்கு வாய்த்த மனைவியே தாம் அருணகிரியாக வாழ்ந்திருந்தபோது தம்மை விரும்பிய பெண்ணாவாள் என்பது போல் முருகனே தெரிவித்ததாக ''முன் வருணைத் தலத்து உன் மேல் மோகம் உற்றாள் எனும் சரதம் என்னகத்திற் சொன்னான். புதுவைச் சருக்கம் (59), அதனால் அவளை ''ஓர் அக்கமே மங்கலாம் வீறுபெறப் புனைந்து ஏற்றேன்'' புதுவைச் சருக்கம் (60), என்று சுவாமிகள் புகழ்கிறார்.

இருவருடைய வாழ்விலும் தமிழ்த் தெய்வம் முருகப் பெருமானே கவிபாட அருள் புரிந்ததாக அவர்களே பாடியுள்ளனர்.

''சயிலம் எறிந்த கை வேற்கொடு மயில்மிசை வந்தெனை யாட்கொளல், சகமறியும்படி காட்டிய குருநாதா'' (திருப்புகழ்) என்று அருணகிரியாரும், விளையாடி வருகின்ற நாளில் என்னை, வலியவந்தாட்கொண்டு தமிழ்க் கவி கொழிக்கும் நலம் உதவி'' என்று தண்டபாணி சுவாமிகளும் விண்டுரைத்துள்ளனர். இவ்வாறு இருவரும் பல நிலைகளில் ஒன்றுபட்டு, வியப்பூட்டு கின்ற வாழ்க்கைச் சித்திரங்களாகக் காட்சியளிக்கின்றனர் என்பது முடிவாகும்.

புலவர் புராணம் வரைந்தவர், தன் வரலாறு எழுதிய புலவர், ''யான்வாழி, தமிழ்வாழி, இந்நூல் வாழி, என்று சுய வாழ்த்து முறையைக் கடைப்பிடித்தது புதுமையாகவுள்ளது! முற்பிறவித் தொடர்பு இவ்வாறு, நான்கு நூற்றாண்டு இடை வெளியிலும் அமையலாம் என்பது உணர்தற்கு உரியதன்றோ!

''கீதையில் பகவான் ''சம்ப வாமீ யுகே யுகே'' என்றார். எப்போதெல்லாம் மானிட தர்மங்கள் உருக்குலைகின்றனவோ அப்போதெல்லாம் அவதார புருடர்களும் தோன்றி காத்து உள்ளனர். அதுபோல், தென்னகத்தில் எப்போதெல்லாம் தமிழ்த் தெய்வ நம்பிக்கைகளுக்கு ஊறு ஏற்படுகின்றதோ அப்போதெல்லாம் இத்தகு பெரியோர்களும் தோன்றியுள்ளனர் என்பதற்கு விளக்கம் கண்டோம். நன்னெறிகள் எப்போதும் காக்கப்படும்!

சுவாமிகள் கண்ட சேக்கிழார்

மு. வசந்தமல்லிகா

முன்னுரை

தண்டபாணி சுவாமிகள் புலவர் புராணம் என்ற நூலில் அவர் காலத்திற்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த புலவர்கள் மட்டுமல்லாது, சமகாலத்தில் வாழ்ந்த புலவர்களின் வரலாறு களைப் பாடியுள்ளார். இவர் சமயப் பொதுநோக்கு உடையவர். இந்நூலில் சைவ வைணவப் புலவர்களின் வரலாறுகளோடு, முகமதியப் புலவர் வரலாற்றினையும் எழுதியுள்ளார். இவர் புலவர்களின் வரலாறுகளை, அவர்தம் வரலாற்று உண்மை களையும் செவிவழிச் செய்திகளையும் ஆதாரமாகக் கொண்டு பாடல்கள் இயற்றியுள்ளார். இதற்காக சுவாமிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொண்டார்.

சுவாமிகள் தாம் பாடிய புலவர்களை இருவகையாகப் பிரித்துள்ளார். தெய்வத் திருவருள் பெற்ற புலவர்களை 'பொய்ப்புணர்புறாத் தெய்வப்புலவர்' என்றும், பிற புலவர்களை 'அறிவுத்தன்மைப் புலவர்' என்றும் குறிப்பிடுகிறார்.

தெய்வத்திருவருள் பெற்ற சேக்கிழாரின் வரலாற்றை, வரலாற்று உண்மையினையும், செவிவழிகேட்ட செய்தியினையும் அடிப்படையாகக் கொண்டு இருபத்து மூன்று பாடல்கள் பாடியுள்ளார்.

பாடல்களின் கருத்துச் சுருக்கம்

சோழமன்னன் அநபாயன் தமிழகத்தை ஆண்டபொழுது பிற மன்னர்களான சேர, பாண்டிய, தொண்டை மண்டல அரசர்களைத் தன் நாட்டில் நடைபெறும் விழாவிற்கு விருந்தினர்களாக அழைக்கிறான். இம் மன்னர்களை நன்கு உபசரித்து நான்கு மன்னர்களும் ஒருங்கே அமர்ந்து மகிழும் சமயத்தில் அங்கு ஒரு புலவன் வருகின்றான். அப்புலவன்

"வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழநாடு சோறுடைத்து – பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோருடைத்து"

என்ற ஔவையார் பாடலைப் பாடுகிறார். இப்பாடலைக் கேட்ட முடியுடை மூவேந்தரும் வெகுண்டு இக்கருத்தை மெய்ப்பிக்க வேண்டும் என்றனர். தொண்டை வேந்தனும் இவ்வேண்டுகோளை ஏற்றார். மலை, கடல், ஞாலம் என்ற மூன்றினும் பெரியவை எவை? என்ற ஐயம் தமிழக மன்னர் நால்வருக்கும் எழுந்துள்ளது. அதைத் தமிழக மக்கள் யாரேனும் தீர்க்க வேண்டும் என்று ஒற்றர்கள் மூலம் தெரிவிக்கின்றனர்.

தொண்டை நாட்டைச் சேர்ந்த குன்றத்தூரில் வேளாளர் மரபில் தோன்றிய சேக்கிழார், தமிழக வேந்தர்களின் ஐயத்தைத் தீர்க்கும் வகையில் 'நிலை, பயன், காலம்' எனத் தொடங்கும் மூன்று குறட்பாக்களை ஓர் ஏட்டில் எழுதி அரசர்க்கு அனுப்பினார். குறட்பாக்களின் கருத்துணர்ந்த மன்னர் நால்வரும் மனம் மகிழ்ந்தனர். ஔவையார் பாடலின் கருத்தும் உண்மையாயிற்று எனத் தேறினர்.

சேக்கிழாரின் புலமையையும், அறிவுத் தெளிவினையும் உணர்ந்த அநபாயன் அவரைத் தன் அமைச்சராக்கிக் கொண்டான். அவர் சோணாட்டில் அமைச்சுப் பணிபுரிந்து வாழ்ந்த பொழுது, சோழ மன்னன் சமண சமயக் குரவர்களால் ஈர்க்கப்பட்டு, சமண சமயக்காப்பியமான சீவகசிந்தாமணியை நாள்தோறும் கற்று வந்தான். சிந்தாமணி கற்போருக்கு காம உணர்வினை மிகுவிக்கும் பண்பு கொண்டது. எனவே மன்னனும் அதை விரும்பிக் கற்றான்.

மன்னனின் இந்நிலையை மாற்ற எண்ணிய சேக்கிழார் இம்மை, மறுமை இரண்டினுக்கும் பயன்தரும் உத்தம மாதவர் வரலாறுகளை நான் தொகுத்துக்கூற எண்ணியுள்ளேன். அவ்வடியார்களின் வரலாறுகளைத் தொகுத்துரைக்க இவ்வமைச்சுப் பணியிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று வேண்டினார். சோழனும், அவர் வேண்டுகோளை ஏற்றான். சேக்கிழார் அரசனிடமிருந்து விடைபெற்று தில்லையம்பலம்

சென்று சிவனடியார்களின் வரலாறுகளைப் பாடுவதில் மனம் ஒன்றினார். அம்பலத்தானும் அருள் உள்ளம் கொண்டு சேக்கிழாருக்கு 'உலகெலாம்' என்ற சொல் எடுத்துக் கொடுக்க, அச்சொல்லை முதற்சொல்லாகக் கொண்டு பெரியபுராணம் எழுதத் தொடங்கினார். 63 தனியடியார்கள், 9 தொகையடியார்கள் வரலாற்றினை எழுதி முடித்தார். இப்புராணத்தை தில்லையம்பலத்தில் சேக்கிழார் சோழன் அநபாயனும் சான்றோரும் கூடியிருந்த அவையில் அரங்கேற்றம் செய்தார். இவ்வரலாற்றையே தண்டபாணி சுவாமிகள் தம் பாடல்களில் எழுதியுள்ளார்.

கற்பனை

சுவாமிகள் கற்பனை வளம் நிரம்பப் பெற்றவர் என்பதை அவரது பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. வன்றொண்டருக்காக சிவபெருமானே தூதாக நடந்து சென்ற காட்சியைக் கற்பனை வளத்தோடு எழுதியுள்ளார்.

சிவபெருமான் சுந்தரருக்காக அந்தணர் உருவெடுத்து பரவையாரை நாடித் தெருவில் நடந்து சென்ற பொழுது சிவபெருமான் தலையில் இருந்த கங்கை நீர் கீழே சிந்தியது என்று தன் கற்பனையைக் கலந்து எழுதியுள்ளார். அவ்வரிகள் வருமாறு:

'சுந்தரன் இன்புறற்கு ஈசனார்
தூநகைப் பரவைதன் வாயிலுக்
கந்தணன் வேடம்நீத் தேகும் அவ்
அவசரத் தில்தலைக் கங்கை நீர்
சிந்தல்உ ரைக்கும் அவ் வேளையில்
சேக்கிழார் தன்செவி கேட்பநீ
எந்தஇ டத்திருந் துல்துகண்
டாய் என்னும் ஓர் ஒலிஎழுந் திட்டதே'

இவ்வரிகளில் கங்கை நீர் கீழே சிந்தியதைச் சேக்கிழார் கண்டது போலவும், எவ்விடத்திலிருந்து சேக்கிழார் கண்டார் என்று சிவபெருமான் கேட்டது போலவும் சுவாமிகள் கற்பனையாக எழுதியுள்ளார்.

சேக்கிழார் வரலாற்றை உமாபதி சிவாச்சாரியார் எழுதியுள்ள திருத்தொண்டர் புராண வரலாறு எனும் நூலிலிருந்து அறிய முடிகிறது. இக்கருத்தை பெரியபுராணத்திற்கு

ஒப்பற்ற விரிவான உரையெழுதிய சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

"அருண்மொழித் தேவர் என்னும் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தின் ஆசிரியராவார். அவர் சரிதத்தைப் பற்றி அறிவதற்கு உமாபதி சிவாச்சாரியார் செய்தருளிய திருத் தொண்டர் புராண வரலாறு மிக உதவி புரிகின்றது" என்று தமது 'சேக்கிழார்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். சைவ சித்தாந்த கழகம் வெளியீடாக விளங்கும் 'பெரியபுராணச் சொற்பொழிவுகள்' என்ற நூலும் இக்கருத்தை உறுதி செய்கிறது.

சிவாச்சாரியார் கூற்றுப்படி, தொண்டை நாட்டு வேந்தனுக்குத் தான், நிலம், காலம், வானம் இவற்றில் பெரியவை எவை? என்ற ஐயம் ஏற்பட்டது என்றும், சேக்கிழாரின் தந்தை அரசவைப் பணியாளனாக இருந்தவர். தன் மகனிடம் இது பற்றிக் கூற, சேக்கிழார் அவ்வினாவிற்கு விடையாக விளங்கும் திருக்குறள் மூன்றினை ஏட்டில் எழுதியனுப்பினார் எனத் தெரிய வருகிறது. ஆனால் தண்டபாணி சுவாமிகள்,

தமிழக மன்னர் நால்வரும் சோணாட்டில் ஒருங்கு இருந்த பொழுது ஒரு புலவன் 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று முடியும் பாடலைக் கேட்டு, முடியுடை மூவேந்தர் வெகுண்டு, இக்கருத்தைத் தக்க உபாயம் கொண்டு மெய்ப்பிக்க வேண்டும் என்று வேண்ட, தொண்டை நாட்டைச் சார்ந்த குன்றத்தூரில் வாழ்ந்த சேக்கிழார் மன்னர்களின் ஐயத்தைப் போக்கினார், என்று தம் கற்பனையை ஏற்றிப் பாடியுள்ளார்.

தம் வாழ்நாள் முழுவதும் போரும் பூசலுமாக வாழும் தமிழக மன்னர்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று எண்ணும் அவரது உயரிய கருத்தினையும் இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

இலக்கியப்புலமை

சேக்கிழாரைப் பற்றிச் சுவாமிகள் எழுதியுள்ள இருபத்து மூன்று பாடல்களில் அவரது இலக்கியப் புலமை நன்கு வெளிப் படுகிறது. நான்கு பிரிவாக ஆட்சி செய்யப்பட்ட தமிழகத்தின் பெருமைகளை புலவர் கூற்றாகக் காட்டப்பட்டுள்ள ஔவையின் பாடல் மூலமாகக் குறிப்பிட்டுள்ளார். சுவாமிகள் தொல்

இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை உடையவர் என்பது இதன் மூலம் வெளிப்படுகிறது. மலை, கடல், ஞாலம் என மூன்றனுள் வலியன யாவை என்ற வினாவிற்கு விடையாக விளங்கும்,

''நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது
காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.
பயன்தூக்கார் செய்த வுதவி தூக்கின்
நன்மை கடலிற் பெரிது''

என்ற குறட்பாக்களின் கருத்தினை ஏற்றிப் பாடியிருப்பதால் உலகப் பொதுமறையில் சுவாமிகள் தேர்ந்தவர் என்பதை அறியமுடிகிறது.

பெரியபுராணத்தில் சுவாமிகள் ஆழ்ந்த பக்தியும், புலமையும் உடையவர். சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைப் பாட முனைந்த சுவாமிகள் சேக்கிழார் பெரியபுராண இயற்றக் காரணமாக இருந்த சமணசமயத்தின் இடையீட்டினை கூன்பாண்டியன் வரலாறு கொண்டு வலியுறுத்தியுள்ளார்.

''பண்டுதென் மதுரையில் உற்றகூன்
பாண்டியன் இக்கொடும் பாவிகள்
விண்டுள நூல்வழி சென்றதால்
வேதனை உற்றன ஆயிரம்''

என்ற இவ்வடிகளில் சமண சமயக்குரவர்களால் கூன்பாண்டியன் அடைந்த சூலை நோயை நினைவு கூர்கிறார். இக் கருத்துக் களால் சுவாமிகளின் இலக்கியப் புலமையை அறிந்து கொள்ள முடிகிறது.

சமுதாயச் சூழல்

சேக்கிழார் பெரியபுராணம் பாடிய காலச் சூழலில் தமிழகம் இருந்த நிலையை சுவாமிகள் இப்பாடல்களில் எடுத்துக்காட்டி யுள்ளார். பெரியபுராணம் தோன்றுவதற்குக் காரணமாக விளங்கியது. அக்காலத்தில் நிலவிய சமயச் சூழலாகும். சேக் கிழார் வாழ்ந்த காலத்தில் தமிழகம் முழுவதிலும் சமண சமயம் ஓங்கியிருந்தது. சமணசமயக்குருமார்கள் தம் சமயத்தை நிலை நாட்ட மன்னர்களைத் தம் வசப்படுத்தி வாழ்ந்தனர். மன்னர் களும் அவர்தம் கொள்கைகளை ஏற்று வாழலாயினர்.

'மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள்' என்ற வாக்கிற்கேற்ப தமிழக மக்களும் அச்சமயத்தைக் கடைப்பிடித்து ஒழுகலாயினர். சோழன் அநபாயனும் சமணசமய குரவர்களின் வசப்பட்டு நாள்தோறும் சமணசமயக் காப்பியமான சீவகசிந்தாமணியைப் படித்து வந்தான். மணநூலாக விளங்கும் சீவகசிந்தாமணி இன்ப உணர்வை மிகுவிக்கும். மன்னன் இந்நூலை விரும்பிக் கற்றான். இதனை உணர்ந்தே சேக்கிழார் மன்னனிடம்,

"இவரை நீ விழைதல் ஒழித்திடுக" எனவே சித்தம்
சித்தம் உருந்துரை செய்து
உத்தம மாதவர் சரிதம் யான்
உரை உணர்த்துக."

என்று கூறி சிவனடியார்களின் வரலாற்றினைத் தொகுத்து பெரியபுராணம் இயற்ற முனைந்தார்.

மதுரை மன்னன் கூன்பாண்டியனை ஞானசம்பந்தர் சைவனாக்கியதனை,

'பண்டுதன் மதுரையில் உற்றகூன்
பாண்டியன் இக்கொடும் பாவிகள்
விண்டுள நூல்வழி சென்றதால்
வேதனை உற்றன ஆயிரம் உண்டு'.

என சேக்கிழாரே அநபாயரிடம் கூறியதாக சுவாமிகள் பாடல்கள் இயற்றியுள்ளார். எனவே சேக்கிழார் காலத்தில் தமிழகத்தில் இருந்த சமயச்சூழலை உணர்த்தவே ஞானசம்பந்தர் வரலாற்றை இணைத்துள்ளார். இவ்வாறு சுவாமிகள் அக்கால சமயச் சூழலை விரித்து எழுதியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

முடிவுரை

தண்டபாணி சுவாமிகள், சேக்கிழாரைப் பற்றிப் பாடிய பாடல்களில் கருத்துச் சுருக்கத்தையும், சுவாமிகளின் கற்பனைத் திறனையும், அவரது பிற இலக்கியப் புலமையையும், சொல்லாட்சித் திறனையும், சேக்கிழார் காலச் சமயச் சூழலையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

சுவாமிகளின் சந்த நயங்கள்

இரா. வசந்தமாலை

முன்னுரை

"சந்தமாச் சொன்ன செந்தமிழ்" (தேவாரம்: 2:144:11)

"பல்லவத்தின் சந்தம் மடிய" (யாப். காரிகை)

என்றவாறு சந்தம் குறித்த குறிப்பினைப் பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் எடுத்தியம்பியுள்ளன. சந்தங்களின் இசை நுட்பம் உணர்ந்தே தமிழிசைப் பாடல்களிலும் இவை குடி புகுந்தன. சந்தப்பாக்களின் அமைப்பு குறித்து நோக்குங்கால் திருப்புகழுக்கு அடுத்த நிலையில் மிகுதியாக அமைவது வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளின் இசைப்பாடல்களே எனலாம். குறிப்பாகப் 'பழனித் திருவாயிரம்' எனும் நூலின்கண் இடம் பெற்றுள்ள சந்தப்பாடல்கள் குறித்து எடுத்தியம்புதலே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சந்தம் – சொல்விளக்கம்

"சந்தம் என்பது தமிழ்ச்சொல்; சந்திக்கும் தன்மை எனப் பொருள்படுவது; சந்தங்களின் ஓசை அலைபோல மீண்டும் மீண்டும் சந்திப்பதனால் இதற்குச் 'சந்தம்' என்று பெயர். சந்திப்பது சந்து. சந்து + அம் = சந்தம் என்று தமிழிசைக் கலைக்களஞ்சியம் 'சந்தம்' என்பதற்கு விளக்கம் தருகின்றது.

சந்தம் என்பதற்குச் சொல்வகராதி 'அழகு', 'கவியின் வண்ணம்' என்று இருபொருள் வகுக்கின்றது. சந்தம் என்பது 'ச்சந்தஸ்' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபாகவும் கூறப் படுகின்றது. "சந்தம் என்னும் சொல்லை வட சொல் என்று உரையாசிரியர் கூறுகிறார். திருக்கோவையாருக்கு உரை விளக்கம் தரும்போது 'பிரதிச்சந்த' என்னும் வடசொல்லின் திரிபாகப் 'படிச்சந்தம்' என்னும் சொல் காட்டப்படுகின்றது.

"வண்ணம் தாமே நாலைந்தென்ப" (தொல். செய். 212)
என்று கூறும் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், 'வேறு சந்த வேற்றுமை செய்யா', 'வண்ணமாவது சந்தம்' என்றும், பேராசிரியர் விளக்கத்தில் 'வண்ணம் என்பது சந்த வேறுபாடு' என்றவாறும் உரை வகுத்துள்ளார்.

பழனித் திருவாயிரம் - அமைப்பும் சந்தமும்

தொல்காப்பியர் 'வண்ணம்' குறித்துச் செய்யுளியலில் குறிப்பிட்டுள்ளார். செய்யுள் உறுப்புகளில் ஒன்றான வண்ணம், ஓசையை அடியொற்றி வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம் உருவாதல் போல எழுத்தளவை அடியொற்றிச் 'சந்தங்கள்' எழுந்துள்ளன. இசைத்தமிழில் ஆளத்தி செய்யுமிடத்து தென்னா, தெனா, தென்னா தெனா என்று கூறப்படும் சொற்களின் திரிபுகளாகத் தன, தானா, தந்த, தந்தா போன்ற சொற்கள் அதாவது சந்தங்கள் தோன்றியிருக்கலாம். இவ்விடத்து,

"தென்னா தெனாவென்று பாடுவரேல் ஆளத்தி"
(பஞ்சமரபு 45)

எனும் பாடலையும் நினைவுகூர்தல் தகும். பழனித் திருவாயிரம், பழனி மலையில் எழுந்தருளியுள்ள தண்டபாணி கடவுள்மீது பாடப்பெற்ற ஆயிரம் பாடல்களையுடைய இறை நூலாகும். இந்நூலின்கண் பதினாறு தலைப்புகளின் கீழ் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. இதில் ஒருசில பா அமைப்புகளே சந்தங்களைப் பெற்றிலங்குகின்றன. இது குறித்த பட்டியல் ஒன்றினைக் கீழ்க்கண்டவாறு வகுக்கலாம்.

எண்	பா அமைப்பு	பாடல் எண்ணிக்கை	சந்தப் பாடல்கள்
1.	பதிற்றுப்பத்தந்தாதி	100	10
2.	நவமணிமாலை	81	7
3.	சித்திமாலை	64	64
4.	நடுஒலியலந்தாதி	30	30
5.	வகுப்பு	3	3
6.	வண்ணம்	1	1
7.	பிள்ளைத்தமிழ்	100	34
8.	கலம்பகம்	100	8
			157

எனவே, மேற்கண்ட முறையிலிருந்து 157 பாடல்கள் சந்தப் பாடல்களாக அமைந்திருப்பதை அறியவியலும்.

சந்த வகைகள்

வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளாரின் பழனித் திருவாயிரத்தில் பயின்று வரும் சந்தங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் முதற் சந்தவகைப் பாடல், தொடர் சந்த வகைப் பாடல், கலப்புச் சந்தவகைப் பாடல், அசைச் சந்த வகைப் பாடல். தண்டபாணி சுவாமிகளின் அனைத்துப் படைப்பு களையும் வைத்து ஆய்வு செய்ததில் "முதற்சந்தவகைப் பாடல் 24 எனவும்,தொடர் சந்தவகைப் பாடல் 138 எனவும், கலப்புச் சந்தவகைப்பாடல் 1361 என்றும் அசைச் சந்தவகைப் பாடல்கள் 24, 174 எனவும் வகுக்கலாம். ஒட்டு மொத்தமாக நோக்குங்கால் இவர்தம் சந்தப் பாக்களின் எண்ணிக்கை 25, 697 என்று கண்டறிந்துள்ளனர்." (கோ.மோகனரங்கன், தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு, ப. 388)

சந்தங்கள் பொதுவாக தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான, தன்ன, தய்ய என எட்டு வகைப்படும். இவற்றின் ஒலி நீட்டிப்பதால் எழும் சந்தங்களை தத்தா, தாத்தா, தந்தா' தாந்தா, தனா, தானா, தன்னா, தய்யா என்று பாகுபடுத்துவர். இக்குறிப்பினை,

"தத்தவும் தாத்தவும் தந்தவும் தாந்தவும்
தனவும், தானவும் தன்னவும் தய்யவும்
தத்தா என்பதின் நீடலும் அடங்கும்
எண்வகைச் சந்தம் என்பார் பெரியோர்"
(வண்ணத்தி யாப்பு, பா. 4)

என்ற நூற்பாவின் வழி அடிகளார் தெளிவுறுத்துகின்றார்.

1. முதற் சந்தவகைப் பாடல்

பழனித் திருவாயிரத்தில் ஐந்து பாடல்கள் முதற் சந்த வகைப் பாடலாக அமைந்துள்ளமையை கோ. மோகனரங்கன் அவர்கள் எடுத்துரைத்துள்ளார். தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான, தன்ன, தய்ய முதலான எண்வகைச் சந்தங்களை முதற் சந்தம் என்பர். சான்றாக, 'கீர்த்தி வேண்டல்' எனும் பாடல் ஒன்று 'தந்த' எனும் முதற்சந்த வகையைக் கொண்டுள்ளது.

தந்த என்பது குறில், மெல்லொற்று, வல்லின உயிர்மெய்க்குறில் ஆகிய மூன்று எழுத்துக்களைச் சேர்த்த சொல்லாய் அமையும்.

"அங்கை மென்றுணர் நித்தமும் - இடுதலாலே
அன்பு மிஞ்சி அருட்செயல் - மருவிடாதே"
(பழனித் திருவாயிரம், 47)

என்பதில் முதல் சந்தம் அங்கை, அன்பு என்பதாய் அமைந்தமை அறிய முடிகிறது. இதற்குரிய சந்தம் 'தந்த தந்தன தத்தன - தனை தானா' என்று அடிகளார் வகுத்துள்ளார்.

2. தொடர் சந்தவகைப் பாடல்

திருவாயிரத்தில் தொடர் சந்தவகைப் பாடல்களின் எண்ணிக்கை 25 என்பர். "16 முழுச்சந்தங்களின் ஈற்றில் ன-னா என்னும் உயிர் மெய்கள் தனித்து வந்தும், இவற்றோடு த்-ம் என்னும் ஒற்றுக்கள் சேர்ந்து வந்தும், தனித்து வந்தும் அரைச் சந்தம் ஆகும். முழுச் சந்தங்களோடு அரைச் சந்தங்கள் சேர்ந்த பிறகு அவை ஒன்றரைச் சந்தமாகக் கணக்கிடப்பெறும். இவை தொடர் சந்தங்களாகும்" (தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு, ப. 144)

அதாவது, தத்த (ன-னா) (த்-ம்)
தாத்த (ன-னா) (த்-ம்)
தந்த (ன-னா) (த்-ம்)

என்றவாறு அமையும். சான்றாக, 'தன னத் தத்தன-தாத்தானா' எனும் தொடர் சந்தத்துடன் அடியார் அமைத்த பாடல்

"களையத் தக்கன விழைதுர்ப் புத்திசெய்
கருமக் கொத்தற - நீற்றேனோ
கதறப் பற்பல உயிர்கட் செற்றிடு
கடினச் சித்தரை - வாட்டேனோ"
(பழனித் திருவாயிரம், நடுஒலியல் அந்தாதி, 27)

என்பதாகும்.

3. கலப்புச் சந்தவகைப் பாடல்

தொடர் சந்தமும், முழுமைச் சந்தமும் கலந்து வருவதனால் இதனைக் கலப்புச் சந்தவகை எனலாம். முன்பு கூறியது போல 'தனன' எனும் தொடர் சந்தமும் 'தான' எனும் முழுச்சந்தமும்

சேர்ந்துவர அமைத்தல் கலப்புச் சந்தமாகும். இவ்வகைச் சந்தங்கள்,

(1) இருவகைக் கலப்புச் சந்தம் (தனன + தன)

(2) மூவகைக் கலப்புச் சந்தம் (தனன + தந்த + தானன)

(3) நால்வகைக் கலப்புச் சந்தம் (தன்ன + தாத்த + தந்த + தான)

(4) ஐவகைக் கலப்புச் சந்தம் (தய்ய + தாத்த + தன்ன + தாந்த + தன)

எனும் நான்கு வகைப்படும். இதில் இருவகைக் கலப்புச் சந்தத்திற்குச் சான்று பகரலாம். தனன எனும் தொடர் சந்தமும், தன என்னும் முழுச்சந்தமும் சேர்ந்து அமைந்துவர கலப்புச் சந்தம் ஒன்றை அடிகளார் படைத்துள்ளார். 'தனன தன தானதத்த – தத்தானா' எனும் சந்த அமைப்பில்

"பருவதம் அனேகமுற்ற – பொற்போ டேழ்
பரவையுடை தோய் புவித்த – லத்தே வாழ்
சருவமத வாதருக்கும் – நட்பாம் ஓர்
சமரசவி னோதசித்தி – மைத் தாராய்"

(பழனித். சித்திமாலை, 16)

எனும் பாடல் அமைவதைக் காணலாம். மேற்சுட்டிய மற்ற மூன்று வகைகளுக்கும் திருவாயிரத்தில் சான்றுகள் கிட்டுகின்றன.

4. அசைச் சந்த வகைகள்

பழனித் திருவாயிரத்தில் வெண்பா, கட்டளைக் கலித்துறை, கலித்தாழிசை, கொச்சகக் கலிப்பா, அறுசீர் விருத்தம், ஆசிரியப்பா, வெண்டளைக் கலிப்பா, சந்த விருத்தம், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, குறுந்தாழிசை போன்ற அமைப்பின்கீழ் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.

'சித்திமாலை' எனும் பகுதிக்குச்' சந்தக்கவிகள்' என்றே பெயர் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் ஒரு சந்த அமைப்புக் கொண்டது. அறுபத்து நான்கு பாடல்களும் அறுபத்து நான்கு சந்த வகைகளால் உருவாக்கப்பட்டமையே குறிப்பிடத் தக்கது.

முன்னோர் சந்தங்களைக் கையாளுதல்

சங்க காலந்தொட்டே சந்தப்பாடல்கள் வழக்கில் இருந்து உள்ளமைக்கு இலக்கியங்கள் சான்றுகளாகத் திகழ்கின்றன. கலிப்பாவில் அடங்கிய முருகியல் வகை சந்தங்களின் துள்ளலோசையை விளக்கி நிற்கின்றன. சிலம்பில் பயின்று வரும் 'பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட' எனும் பாடலை அடியொற்றி 'நம்பொருணம் மக்களென்று நச்சியிச்சை செய்து நீர்' எனும் தேவாரப்பா பிற்காலத்தில் எழுந்தது எனலாம். இவை சந்த ஒலி கொண்டு பாடப்பட்டனவே தவிர 'சந்தம்' என்றொரு அமைப்பு வகுக்கப் பெறவில்லை. எனவேதான், காரைக்காலம்மையார், நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்றோரின் ஓசைவழி நின்று பிற்காலத்தில் சந்தப்பாக்கள் எழுந்துள்ளன.

(i) அருணகிரிநாதர்

தண்டபாணி அடிகளாரின் சந்தப் பாடல்களுக்கு அருணகிரி நாதரின் பாடல்கள் வழிவகுத்துள்ளன.

1. சொல்நிலை

அருணகிரிநாதரின் சொல்நிலையில் கவரப்பட்ட அடிகளார் சோதனை முயற்சியாகச் சில பாடல்களை இயற்றியுள்ளார். அருணகிரியாரின்,

> "குமர குருபர முருக சரவண
> குகசண் முககரி-பிறகான
> குழக சிவசுத சிவய நமவென
> குரவ னருள் குரு-மணியேயென்" (திருப்புகழ். 226)

எனும் பாடலை அடியொற்றி,

> "தனனதன தனனதன தனனதன தனனதன
> தனனதன தனனதன-தனதனா"

எனும் சந்த அமைப்புடன்

> "குமர குருபர முருக சரவணசண் முகவரத
> குறைவில் அறு பவ சரத-வருகவே"
> (பழனித். பிள்ளைத்தமிழ்)

என்று பாடியுள்ளார்.

2. வண்ணநிலை

அருணகிரிநாதர் குறுஞ்சீர் வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், சித்திரவண்ணம், குறில், நெடில் வண்ணம், மெல்லிசை வண்ணம், வல்லிசை வண்ணம், இயைபு வண்ணம் போன்ற வண்ணங்களின் அடிப்படையில் சந்தப்பாக்களை இயற்றியுள்ளார். இவர்தம் இவ்வண்ண அமைப்பினைப் பின்பற்றியே அடிகளாரும் பாடியுள்ளார் என்பதற்குச் சான்றாக, திருவாயிரப் பாடல் ஒன்றையே சுட்டலாம்.

வல்லிசை வண்ணம் என்பது வல்லெழுத்து மிக்கு வரும் வண்ணமாகும். அருணகிரியார் 'தத்தத்தன தத்தத் தனதன' எனும் சந்த அமைப்பில் பாடிய 'முத்தைத் தரு பத்தித்திருநகை' எனும் பாடலை அடியொற்றி,

"கத்திக் கத்திப் பலகொடியோர் மனை
முற்றத் துற்றுப் பொருள் நசையால்மிகு
கட்டப்பட்டுத் தளர்வுறு தீவினை-மல்காதே"
(பழனித். நடுஒலியல் அந்தாதி, 22)

என்று வல்லிசை வண்ணமாகப் பாடியுள்ளார்.

3 தொங்கல் அமைப்பு

'தொங்கல்' என்பது இசைப்பாடலுக்கு விரைவு நடையை உண்டாக்கி இசையின்பம் பயக்கின்றது. இதைப் பெரும்பாலும் மூன்றாம் காலநடையில் (முருகியல் நடையில்) பாடுவதையே மரபாகக் கொண்டுள்ளனர். அருணகிரிநாதருக்குத் திருஞான சம்பந்தரே இவ்வகைப் பாடலுக்கு வழிகாட்டியுள்ளார். இதனடிப்படையில், 1. தனதானா (பெருமானே திருப். 20) 2. தனதனதானா (வருபெருமாளே. திருப். 154) 3. தனனதானா (குமரவேளே திருப். 868) 4. தானா (வேளே. திருப். 278) என்றவாறு அருணகிரியார் பாடிய சந்தமுடைய தொங்கலை அடியொற்றி 'நடுஒலியலந்தாதி'யில்' கையாண்டுள்ளார். 'மல்காதே' 'நையாதே', 'ஒல்லாமே', 'செல்லாமே', 'பொய்யாமே' முதலான தொங்கல் சொற்களை உருவாக்கியுள்ளார். மேற்சுட்டிய அனைத்துச் சொற்களும் 'தய்யானா' எனும் சந்த அமைப்புடனும், 'எண்ணிலேன்', 'நண்ணிலேன்', 'பன்னிலேன்', 'பின்னிலேன்' முதலான தொங்கல் அமைப்புகள் 'தன்னனா'

எனும் சந்த அமைப்புடனும் அடிகளாரால் புகுத்தப் பெற்றுள்ளன.

சமகாலத்தவரும் பிற்காலத்தவரும்

வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளாரின் காலத்தை ஒட்டிய புலவர்களுள் குறிப்பிடத்தக்கவர் இராமலிங்க அடிகளாரும் ஒருவர். இவரது காலம் கி. பி. 1823–1874 ஆகும். புலவர் புராணத்தில் வடலூர் வள்ளலைத் தமக்கு வலத்தோள் போன்றவர் என்று அடிகளார் புகழ்ந்துள்ளார். பல சந்தப் பாடல்களுள் 'சித்திரவண்ணம்' எனும் அமைப்பின் கீழ் இருவரும் பாடல்களைப் புனைந்துள்ளனர். யார் முதலில் இவ்வமைப்பைக் கொணர்ந்தனர் என்று ஆராய்வதிலும் இருவருக்குமிடையே உள்ள சந்தப்புலமையை நோக்குதலே சிறப்புடையது.

வள்ளலாரின் சித்திரவண்ணம்

'நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருவது' என்பது தொல்காப்பியரின் கருத்து. இதன் அடிப்படையில் நெடில் எழுத்தும், குறில் எழுத்துமாக இணைந்து வரும் சந்தப்பாடலே சித்திரவண்ணம் என்று குறிப்பிடப்படுகின்றது.

அடிகளார்,

''ஆவி வீடது சேர்தேபெரிதாம்
எனா மிக எண்ணிலேன்
ஆறு மாமுகம் ஆதியாய
அனேக கோலமும் நண்ணிலேன்''

என்ற பாடலில் நெடிலும் குறிலுமாய் அமைத்து சித்திரவண்ணம் உண்டாக்கியது போல வள்ளலாரின் பாடல் ஒன்றும்,

''ஆயவாய நேயஞாய மாயஞாய வாதியே
தூயவாய காயதேய தோயமேய சோதியே''

என்று தெளிவானதொரு சித்திரவண்ணத்திற்குச் சான்றாகத் திகழ்கின்றது. பாடலின் முதல் சீர் மட்டுமே சித்திர வண்ணத்திற்குப் பொருந்தி வருதலால் அடிகளாரே முதலில் இவ்வகைப் பாடல் இயற்ற முனைந்தமை புலனாகிறது.

தண்டபாணி அடிகளாருக்குப் பின் பல்வேறு புலவர்கள் இவர் தம் பா அமைப்பையும், சந்த அமைப்பையும் பின்பற்றி

நிறைய பாக்களைப் புனைந்துள்ளனர். சான்றாக பாம்பன் அடிகளார் 'பல்சந்தப் பரிமளம்' எனும் பெயரில் யாப்பிலக்கண நூல் ஒன்றைப் படைத்தார். இந்நூல் சந்த இலக்கணங்களை வகுத்துரைக்கும் தண்டபாணி அடிகளாரின் 'வண்ணத்தியல்பை' ஒத்ததாகும். மகாகவியின் வல்லெழுத்து மிக்கு வரும் கவிகளில் பல, அடிகளாரின் வல்லிசை வண்ணப் பாக்களை ஒத்து விளங்கு கின்றன. மேலும் 'திருமலைக்குமாரசாமி திருப்புகழை' வெளி யிட்ட சங்கரபாண்டியனாரின் சந்தங்கள் தண்டபாணியாரின் சந்த அமைப்பைப் பின்பற்றி எழுந்தவையே.

முடிவுரை

இதுவரை கூறியவற்றிலிருந்து, பழனித் திருவாயிரத்தில் 157 சந்தப்பாக்கள் இடம் பெற்றுள்ளமை, நான்கு வகையான சந்தப் பாக்கள் இடம் பெற்றதுடன், ஒட்டுமொத்தப் படைப்பின்வழி 25,697 சந்தங்களைக் கையாண்டமை, பழனித் திருவாயிரத்தில் இடம் பெறும் சந்தங்களுக்குரிய இலக்கணங்களை 'வண்ணத் தியல்பில்' விவரித்துள்ளமை, சித்திமாலையில் முப்பது பாடலுக்கும் முப்பது வகையான சந்தம் அமைத்ததினால் இப்பாடல்கள் 'சந்தக்கவிகள்' என்று சிறப்படைந்தமை, சொற் றொடர், வண்ணம், தொங்கல் இவற்றின்வழி அருணகிரி நாதரைப் பின்பற்றி அடிகளார் பாடல் புனைந்தமை, அடிகளாரின் சித்திரவண்ணத்தை அடியொற்றி வள்ளலார் சித்திரவண்ணம் படைத்தமை, தய்யானா எனும் புதிய தொங்கல் முறையுடன், ஒரே அடியில் எட்டுச்சந்தங்கள் வர பாடல் இயற்றியமையும், 'தொங்கல்தாழிசை'யின் வாயிலாகத் 'தொங்கல்' தொகுத்துத் தரப்பட்டமையும் கட்டுரையின் வாயிலாகப் புலனாகின்றன.

அருணகிரியார் திருப்புகழும் சந்தமாலிகைத் திருப்புகழும்

மு. வள்ளியம்மை

முன்னுரை

முருகப் பெருமானது திருவருளைப் பெற்ற பெரியோர் பலருள் குறிப்பிடத்தக்கவர்கள் அருணகிரியாரும், அவர் வழிவந்த தண்டபாணி சுவாமிகளும் ஆவர். ஆறுமுகப் பெருமானின் அருட்கவியாக 19ஆம் நூற்றாண்டில் தோன்றி வாழ்ந்தவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இவர் சமரச சமய நோக்கு உடையவரானாலும் முருகனே பரம்பொருள் என்ற அருணகிரியாரின் கௌமார மதக் கொள்கைக்கு முதலிடம் கொடுப்பவர். அருணகிரியாரைத் தன் மானசிகக் குருவாகக் கொண்டது போல அவரைப் போலவே 'திருப்புகழ்' பாடியிருக்கின்றார் இவர்தம்பாடல்கள் அருணகிரியாரின் கருத்துக்களோடு, அவர்தம் இயல்போடு, சந்த நயத்தோடு, முருகன் திருவருளோடு, அருணகிரியாரின் வாழ்க்கைக் குறிப்புக்களோடு அமைந்துள்ளன.

திருச்செந்தூர்

படைவீடுகள் ஆறில் முதன்மையானது திருச்செந்தில், செந்தூர் முருகன் ஊமையாய் இருந்த குமரகுருபரனைக் கவியாக்கி உலகுக்குத் தந்த வள்ளல், சூரனை வென்ற வீரவேலுக்குரியவன். முருகப் பெருமான் படைகளோடு வந்து தங்கிய இடம் இதுதான். அத்தகு பதியில் அதிகம் ஈடுபாடு உடையவர் தண்டபாணி சுவாமிகள். எனவே அவர் செந்தில் ஆண்டவன் மீதே சந்தமாலிகைத் திருப்புகழ் பாடினார். அருணகிரியாரும் தம் திருப்புகழில் செந்தூர் திருப்புகழ் பாடினார். எனவே அருணகிரியாரின் செந்தூர் திருப்புகழும், சுவாமிகளின் சந்தமாலிகைத் திருப்புகழும் இங்கு ஒப்பிட்டு நோக்கப்படுகின்றன.

அருணகிரியார்

நினைக்கவே முத்தி தரும் தலமாம் திருவண்ணாமலையில் 15 ஆம் நூற்றாண்டில் பிறந்தவர் அருட்கவி அருணகிரியார். இளமையிலேயே பல நூல்களைப் பயின்று தமிழ்ப்புலமை பெற்றவர். கவி புனைவதில் வல்லவர். செல்வர்களைப் பாடிப் பெற்ற பொருள் அனைத்தையும் பொதுமகளிர்பால் தந்து இளமையில் காமுகராக வாழ்ந்தார் என்று கூறுவர். இந்தச் செய்திக்கு அவர் தம் பாடல்களில் அகச் சான்றுகள் நிறையவே உள்ளன.

தண்டபாணி சுவாமிகள்

1839-ல் திருநெல்வேலியில் பிறந்தவர். தம் ஆறாம் வயதில் தாய் தந்தையரை இழந்து சீதாராம நாயக்கரால் ஆட்கொள்ளப் பெற்று அன்றுமுதல் வேலை வழிபடுவதையே வேலையாகக் கொண்டார். இவரது இயற்பெயர் சங்கரலிங்கம். இவர் பல தலங்களைத் தரிசித்து இறையருள் அனுபவம் பெற்றார். பல புலவர்களோடு வாதிட்டு வெற்றி பெற்றார். அருணகிரியாரைப் போலவே முருகனே தனிப்பரம்பொருள் என்ற கௌமார மதத்தைப் பின்பற்றியவர். செந்தூர் முருகனைப் பாடிப் பரவும் தண்டபாணி சுவாமிகள் 'சந்தமாலிகைத் திருப்புகழ்' என்று அவர்மீது ஒரு பிரபந்தமே பாடியுள்ளார். இவர் அருணகிரி யாரைப் போலவே சந்தப்பா பாடுவதில் வல்லவர்.

அருணகிரியாருக்கு நேரில் வந்து இறைவன் அடியெடுத்துக் கொடுத்ததைப் போல, இறைவன் இவர் கனவில் தோன்றி இவரைப் பாடச் சொன்னதாகத் தன் பாடல்களின் பல இடங் களில் குறிப்பிடுகின்றார்.

> ''பண்டு வந்து எனக்கா ஒருவாசகம்
> விண்ட துண்டதைத் தேறிலன்'' (61)

> ''ஆரோ ஒருவன் அடுத்தடுத் தென்றன் கனவில்
> பாரோ ரொப்பானை பகர்ந்தானே – நீரோவம்
> சங்கையறக் கொண்ட செந்திற் சண்முகனே தண்புனத்து
> மங்கை பங்கா நீயல்லவா'' (வெண்பா அந்தாதி, 37)

அருணகிரியாரைப் போலவே தன் வாழ்க்கைக் குறிப்புக் களைப் பாடலில் பொதிந்து வைத்துள்ளார். சந்தமாலிகைத்

திருப்புகழின் 96-ஆம் பாடலை தத்துவம் என்ற குறிப்பில் மிகப் பெரிய சந்தப் பாடலாகப் பாடியுள்ளார். தனது தந்தை மகப்பேறின்றி வருந்தியதும், தமது வழிபாட்டிற்குரிய காந்திமதி திருக்கல்யாணத் திருவிழாவில் அருள்வாக்குப் பெற்ற காரணத் தால், தான் மகவாகப் பிறந்ததுமான கருத்தைக் குறிப்பாக உணர்த்துகிறார்.

இருவருடைய வாழ்க்கையை நோக்கும்போது இறையருள் நிலையில் ஒரே தன்மை உடையவராக இருந்துள்ளமை புலனா கின்றது. அருணகிரியாரின் மறுபிறவிதான் தண்டபாணி சுவாமிகள் என்று அவர் வாழ்க்கை வரலாறு காட்டுகின்றது. திருப்புகழ், சந்தக்கவியை அடியொற்றிப் பாடினாலும், வழி நூலாகக் கொண்டாலும் மாற்றங்கள் இருப்பது இயல்பு. இங்கு வேறுபாடுகள் மிகக் குறைவாகவே உள்ளன. வாழ்வின் நிகழ்ச்சி களும் இறையனுபவமும் கூட ஒரே நிலையில் உள்ளன.

வினைப்பயனின் தொடர்ச்சியாகவே இவரும் தம் பாடல்களில் பொதுமகளிர் இயல்பினைப் பாடுகிறார். தம் வாழ்க்கையில் இவர் அப்படியொரு சூழலுக்கு ஆட்பட்டிருக்க வில்லை. ஆனாலும் தன் ஒவ்வொரு பாடலிலும் அதைப்பற்றியே பாடுவது ஏதோ அனுபவித்திருப்பாரோ என்று எண்ணவைக் கிறது. நல்வினையோ, தீவினையோ அப்பழக்கம் உடையவனின் இயல்பு, குறித்த நாளில், குறித்த நேரத்தில் தோன்றுவதுமன்று, மாறுவதுமன்று. அது பிறவித் தொடர்புடையது. பல நாட்கள், பல பிறவிகள் முயற்சி செய்தே அப்பழக்கத்தை மாற்ற முடியும். பல நாட்கள், பல பிறவிகள் முயற்சி தோன்றித் திட்பமுறு மேயானால் அப்பிறவிப் பழக்கத்தினை – ஊழ்வினையை வெல்ல முடியும் என்பார் வள்ளுவப் பெருந்தகை.

எனவேதான் தண்டபாணி சுவாமிகளாய்ப் பிறப்பெடுத்த நிலையில் பொதுமகளிர் தொடர்பு இல்லாவிட்டாலும் உணர்ந்தது போல் பாடுவது, சென்ற பிறவியின் தொடர்பாக இருக்கும் என எண்ணத் தோன்றுகிறது.

அருணகிரிநாதர் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையை அறிந்தவர். வண்ணச்சரபம் சுவாமிகள் தம் முற்பிறவியை அறிந்தவர். அருணகிரியாரைப் போலவே சந்தப்பாக்களால் திருப்புகழ் பாடினாலும், 'திருப்புகழ்' என்று மட்டும்

பெயரிடாமல், 'சந்தமாலிகைத் திருப்புகழ்'தி எனப் பெயரிட்டு வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

சந்தமாலிகை

சந்தமாலிகை என்பது சந்தப்பாக்களால் ஆன மாலை என்று பொருள் தரும். அருணகிரியாரின் திருப்புகழோடு ஒப்ப 'பெருமாளே' என்று ஈற்றிலமைக்க மனந்துணியாது 'குகவேளே' என்று முதலில் பாடினார். முருகப் பெருமான் இவரை முற்பிறப்பில் அருணகிரிநாதராயிருந்தார் என்ற விவரத்தைப் பற்றிக் கூறி 'பெருமாளே' என்றழைக்கும்படி ஆணையிட்டதாகக் கூறுவர். திருச்செந்தூர் பதினாறில் 'கௌமார விஜயம்' என்ற நூலில் 'செவிகொடுவினவல்' என்ற பகுதியின் முதற் பாடலில் அருணகிரிநாதன் பாடிய திருப்புகழின் உயர்வையும், தான் அப்பெயரில் பாடும் சந்தப்பாடலின் நிலையையும் பல உவமைகளைத் தொகுத்துக் கூறித் தன் பணிவையும், அதன் பண்பையும் பாராட்டிக் கூறுகிறார். ஆதலின் தற்பெருமை இவரிடம் இல்லை என்பதும், திருவருள் முன்னிலையாக எக்கவிகளையும் பாடுவதான இவர் மனநிலையையும் காண முடிகின்றது.

"மயிலெதிரில் வான் கோழியும்
விருப்புட னடித்திடலில் விதுவினெதிரிற் குலவும்
வெண் சங்க மணியில், அருணை
மேவிய கிளிப்புலவன் ஓதிய திருப்புகழின்
வியனெண்ணி வெட்குறாமல்
திருப்புகழெனச் சிறிய னேனும் பிதற்றலைச்
செவிகொண்டு வினவி யருளே
செம்பொன்மதில் சூழ் திருச்செந்தி லெந்தாய்உனது
செவி கொண்டு வினவி யருளே"

என்ற பாடலில் இவர் தம் அவையடக்கமும், அறிவுத்திறமும், ஆற்றலும், முன்னோரை மதிக்கும் பண்பும், திருவருள் துணை வேண்டும் என்ற மனமும் வெளிப்படுகின்றது. அருணகிரியாரின் திருப்புகழை முன்மாதிரியாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது. எனவே பாடுபொருளும், நடையும், சந்தமும், உத்தியும் ஒன்றே போல் உள்ள தன்மையும் புலப்படுகிறது.

அருணகிரியார் நடையை ஒட்டி பொது மாதர்கள் இயல்பு, உலகப்போக்கு, செல்வர் இயல்பு, உலோபர் பண்புகள் ஆகியவற்றையும் கூறுகின்றார். இருவரும் சமுதாயக் கருத்துக்கள் பலவற்றையும் கலந்து பாடல் புனைந்துள்ளனர். திருமாலைப் பற்றிய செய்திகள் இருவர் பாடலிலும் இடம் பெற்றுள்ளன.

பா அமைப்பு

இருவரின் பாடல்களின் அமைப்பையும் நோக்கும்போது பெரும்பாலான பாடல்களின் முதற்பகுதியில் ஈகையின் சிறப்பு, பொதுமகளிர் இயல்பு, அவர்களால் பெற்ற துன்பம், ஈயாமை யால் வரும் துன்பம், உலகப்போக்கு போன்ற சமுதாயக் கருத்துக்களும் நடுப்பகுதியில் இந்தத் துன்பங்களிலிருந்து விடுபட அருள்வாயே என்ற வேண்டுதலும், பிற்பகுதியில் முருகனின் புகழ், சிறப்பு, வீரம், பெருமை, புராணக் கதைகள் என்பன போன்ற செய்திகளும் அடங்கியுள்ளன. இந்நிலையில் இருவரின் திருப்புகழ்ப் பாடல்களும் மூன்று படிநிலைகளை அடையனவாக உள்ளன. முதல் படிநிலையில் உலக வாழ்வின் துன்பங்களையும், இரண்டாம் படிநிலையில் அவற்றிலிருந்து விடுபடவேண்டும் என்ற எண்ணத்தையும், அது தன் முயற்சியால் முடியாது என்பதையும், மூன்றாம் படிநிலையில் அதை நீக்கும் ஆற்றலும், அருளும் உடையவன் முருகனே என்ற முருக உணர்வும் சுட்டப் படுகின்றன. முருகன் காத்தற் கடவுள். இகபரசுகங்களைத் தரவல்லவன். எனவே அவனைப் பற்றிக்கொள்வதே உயிர் வாழ்வின் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்பது இருவரின் திண்ணமான கருத்து. அருணகிரியாரின் திருப்புகழில் உள்ள அளவிற்கு ஒலிக்குறிப்புச் சொற்கள் சுவாமிகள் திருப்புகழில் இடம் பெறவில்லை. உணர்ச்சி வயப்பட்டு மிக வேகமான சந்தத்தில் தன் அனுபவத்தை உணர்ந்து அழுது கரைந்தது அருணகிரியாரின் பாடல். தன் துன்ப உணர்வில் சொற்களே தடுமாறி ஓசையாய்த் தாளமிடுவது போல் அமைந்துள்ளன அந்த ஒலிக்குறிப்புச் சொற்கள். சுவாமிகள் அருணகிரியாரின் அனுபவத்தில் அனுபவம் கண்டவர். எனவே அதைப் பற்றிக் கொண்டு இறைவன் மீது கொண்ட பக்தி உணர்வில் மட்டுமே பாடியது ஆதலின் ஒலிக் குறிப்புச் சொற்களுக்கு அதிக இடம் இல்லை, எனக் கருத இடமுண்டு.

பொது மகளிர்

திருச்செந்தூர் பற்றிப் பாடிய பாடல்களில் அருணகிரிநாதர் பொது மகளிர் பற்றிய செய்திக்கும், உயிர் போகும் நிலையில் அருள் வேண்டும் நிலைக்கும் அதிக இடம் கொடுத்துள்ளார். ஈகை பற்றிய செய்திகளோ, பிற செய்திகளோ குறைவாகவே இடம் பெற்றுள்ளன. ஆனால் சுவாமிகளின் திருப்புகழில், அருணகிரியாரின் பிற திருப்புகழ்ச் செய்திகளும், பொது மகளிர் பற்றிக் கூறும் செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

அருணகிரிநாதரின் பாடல்களில் பொது மகளிர் பற்றிய செய்திகள் சொந்த அனுபவமாக வெளிப்படுகின்றன. 'பொது மகளிரை நாடாமல் இருக்க எனக்கு அருள்வாயே', 'என்றன் தலையில் சந்தப் பதம் வைத்து அருள்வாயே! என்று இந்நிலையில் தன்னைக் குறித்தே புலம்புகிறார். பொது மகளிர் உறவைத் தன் அறிவால் அடக்க எண்ணியும் உணர்வால் அடக்க இயலாமல் தவிப்பது போல் இவர் பாடல் குறிப்புகள் உணர்த்துகின்றன. எனவே தான் அந்த உணர்வை அடக்க இறைவனை வேண்டுகிறார். தவறு செய்தவன் தன் தவற்றை உணர்ந்து திருந்த முற்படும்போது அதை விடுவதற்கு வேறொன்றைப் பற்றிக் கொள்வது இயல்பு. தன் பொது மகளிர் மோகத்தை விடுவதற்கு இறைவனை நேசித்துப் பற்றிக் கொள்கிறார் அருணகிரியார். வேண்டாதபோது விரும்பியதை இழிவாகப் பேசுவது மனித இயல்பு. பற்றிக் கொள்ளப்படுவது உயர்ந்த தாகத் தோன்றும். இன்றேல் உள்ளம் உயர்ந்ததைப் பற்றிக் கொள்ளும். இந்த நிலையிலேயே பொது மகளிர் உறவை இழிவாகப் பேசி, முருகனின் பெருமைகளை எடுத்துக் கூறுகிறார். அவர் பொது மகளிரைப் பற்றியே பேசுகிறார், பெண்களைப் பற்றியல்ல என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

சுவாமிகளின் பாடல்களில் சொந்த அனுபவமாக இது இல்லையாதலால், பொது அறமாகவே இவ்வுறவு சுட்டப்படுகிறது. பொதுமகளிர்பால் ஈடுபாடு கொண்டு உழன்று வருந்தக் கூடாது என்றும், அப்படிப்பட்டவர்களுடன் நான் நட்பு பாராட்டி விடக்கூடாது என்றும், அதற்கு அருள்வேண்டும் என்றும் வேண்டுகிறார்.

"கார் குழலில் வண்டு கிண்டுகின்ற
பூவையர் வசம் புகுந்து உழன்று
காமனை வணங்கி நெஞ்சயர்ந்த - பண்பினாலே

காசுபரம் என்ற வண்டர் தங்கும்
வாசலில் நடந்து உன் அன்பர் தங்கள்
காதையை மறந்து வம்பிலிங்க - முந்தலாமோ
(சந்தமாலிகை 64)

மலரடி தஞ்சமெனுஞ் சொல் பகர்ந்த வாவொடு
பரவி வணங்கி நெருங்கினும் வம்பில் ஊடல்செய்
மகளிர் தருஞ்சுகம் நன்றென நம்புவா ரோடு
- இணங்கிடாதே" (சந்தமாலிகை 65)

சமுதாயக் கருத்துக்கள் இவர் பாடல்களில் அதிகமாக இடம் பெற்றுள்ளன. மன்மதனை வென்று வாழ்வார்தம் குன்றைப் போல் உயர்ந்த குணத்தில் ஒரு சிறிதும் பெற்றேன் இல்லை; தமிழில் சிறந்த புலவர்களோடு குலாவேன்; கிழட்டு நாயொன்று சந்தை கூடும் இடத்திற்கு வந்ததைப் போன்று துயர் வந்து ஊர் தோறும் அலைப்பதால் மனம் நொந்து போனேன் என்று இயல்பான வேதனையை உவமையுடன் அழகாக உரைக்கின்றார்.

ஈகை

ஈகை இருவராலும் போற்றப்படுகின்றது. எதிர்மறை வாயிலாகத் தம்முடைய கருத்தை அருணகிரியார் பல பாடல்களில் கூறுகின்றார். கொடாதவர் பெறுகின்ற துன்பத்தைச் சொல்லும் வாயிலாகக் கொடுப்பவர் பெறும் இன்பத்தைக் கூறுகிறார். ஈயாதவர் எவ்வளவுதான் உருகிச் சிவபூசை செய்தாலும் பயனில்லை என்பார் அருணகிரியார். ஈயாதவர்க்கு முருகன் எட்டாதவன் என்பார் சுவாமிகள்.

"ஈதலென் கைக்கு ஓர்பகையான வன்கைப்பூரியர்
யாவருங் கிட்டா நிலை-நின்றுளானே" (47)

என்பது அப்பாடல்.

சுவாமிகள் பாடலில் அருணகிரியார் பற்றிய செய்திகள்

முதற்பாடலிலேயே அருணகிரியாரைப் 'பைங்கிளி' என்று குறிப்பிடுகின்றார்.

"அருணையூரில் வந்துற் றருந் தமிழ்
கொடு பல்வாறு சந்தச் செழுங்கவி
அறைகுணாலன் என்றெற் பகர்ந்ததும்" (50)

"அருணை நகர்ப்பெரும் புலவோனுக்கும் அன்று மொழிந்ததாம்"

"... ... . வந்துமேனாள்
கோபுரந் தனில் ஏறி வீழ்கவி
வாணன் அன்று உயுமாறு அவாவொடு
கூறுமொன்றையே னோடும் ஒத இசைந்திடாயோ" (19)

"அருணை நகர்க்குள் வந்தொரு புலவனிசைத் திருந்துதி
அனைய கவித்திறஞ் சிறிதும் தாராயோ"

"வண்புகழ் கெடா அருணையிற் குலாவி
நின்ற முதுகோபுர முகப்பைநாடி
வந்த அடியேனுடன் இசைந்த வாறும்"

என்று பல இடங்களில் அருணகிரியாரைப் பற்றியும், இறைவன் அவர்க்கு அருளிய திறம் பற்றியும் பாடுகிறார்.

முடிவுரை

அருணகிரியார் வெயிலுக்குச் சென்றலைந்து நிழலை வேண்டித் தவம் கிடந்து பெற்றவர். ஆனால் சுவாமிகள் நிழலின் குளிர்ச்சியில் இருந்தபடியே வெயிலை உணர்ந்தவர். முருகு என்ற சொல், இம்மை, மறுமை, அம்மைப் பேரின்பத்தையும் ஒரே இடத்தில் பெற இருவரின் திருப்புகழே வழிகாட்டியாக அமைந்துள்ளன. முருகனின் திருவருளை ஆன்மலாபம் அடையச் செய்யும் செல்வமாகவே இருவரும் கருதினர். உடல் நோய் வராமல் தடுக்க ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயரிய கொள்கை இன்று சமுதாயத்தில் வலியுறுத்தப்படுகின்றது. அருணகிரியாரும் சுவாமிகளும் பொதுமகளிர்பால் செல்லாதவர்க்கு உயிர் நோயாகிய பிறவிநோயும் வராது என அன்றே கூறிச் சென்றுள்ளனர்.

திருவள்ளுவரும் தண்டபாணிகளும் கூறும் அரசாட்சி

சை. வஹிதா கெளசியா

முன்னுரை

கௌமார மடாலயத்தின் ஆதிகுரு மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆவார்கள். அவர் அருளிய நூல்கள் எண்ணிலடங்கா. அவற்றுள் ஒன்று அரசாட்சி என்னும் நூல் ஆகும். உலகப் பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களை உடையது. இதனை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். திருவள்ளுவர் கூறும் அரசாட்சியையும், சுவாமிகள் கூறும் அரசாட்சியையும் ஒப்பு நோக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அரசாட்சி

சுவாமிகளின் அரசாட்சி என்னும் நூலில் 50 வெண்பாக்கள் உள்ளன. இவற்றில் அரசனின் பண்புகள், கீழான அரசன், செங்கோல், கொடுங்கோல், நல் அமைச்சன், நல் சேனாதிபதி, தீய சேனாதிபதி ஆகியன கூறப்பட்டுள்ளன.

திருக்குறளில் பொருட்பாலில் அரசனைப் பற்றியும், அவனது அங்கங்கள் பற்றியும், செங்கோல், கொடுங்கோல், அமைச்சு ஆகியவற்றைப் பற்றியும் 69 அதிகாரங்கள் வழி விளக்குகின்றார்.

அரசனின் பண்புகள்

அரசனது பண்புகளாக பல கருத்துக்களைச் சுவாமிகளும், வள்ளுவரும் கூறுகின்றனர். சுவாமிகள் நல்ல அரசன் என்பவன் எப்படி இருக்க வேண்டும் என்பதை,

> ஆழி வளையும் உல[கு] அத்தனையும் தன்குடைக்கீழ்
> வாழ்இயற்கை எண்ணி மகிழாமல்-விழிஇதழ்
> மங்கை, கொன்கள் ஆன்மை மதித்தாங்[கு] இறைக்கஞ்சி
> அங்கை குவிப்பேன் அரசு.

என்னும் பாடலின் மூலம், அரசன் என்பவன் இந்த உலகம் முழுவதும் தன்கீழ் உள்ளது என்று இறுமாப்பு அடையக் கூடாது. மேலும் மனைவி கணவனுக்கு அடங்கி இருப்பதுபோல் அரசன் இறைவனுக்கு அடங்கி இருக்க வேண்டும். இத்தகையப் பண்புகளைக் கொண்டவனே நல்ல அரசன் ஆவான். மேலும் தன்னுடைய ஆட்சியின் கீழ் உள்ள மக்கள் தனது சேவகர்களைக் கண்டு பயந்து நடப்பது போல், கடவுளின் அருளினைப் பெற்ற பெரியோர்களுக்கும், கடவுளின் அருளினைப் பெறு வதற்காக தனது சுகபோகங்களைத் துறந்து தவம் செய்யும் துறவிகளுக்கும், பயந்து பக்தி செய்யும் அரசனே நல்ல அரசன் என்பதை,

> தன்சே வகர்க்குத் தரணிஅஞ்சு மா[று] இறைவன்
> இன்சேவை பெற்றார்க்கும், எய்துவான்—மின்சேர்க்கை
> ஆதியும் நீத்திட்[டு] அருந்தவம்செய் வார்க்கும்அஞ்சி
> நீதிமற வான், முதன்மன் னே.

என்னும் பாடலின் மூலம் விளக்குகின்றார்.

அரசன் என்பவன், இவ்வுலகம் இறைவனால் உண்டாக்கப் பட்டு, உலகிற்கு தன்னைக் காவலனாக இறைவன் நியமித்து உள்ளான் என்றும், தவறு செய்தால் இறைவன் தன்னை பதவியில் இருந்து நீக்கிவிட்டு வேறு அரசனை நியமித்து விடுவான் என்பதை அறிந்தவனாக இருக்கவேண்டும். ஒரு அரசனுக்கு வேறு பண்புகள் இல்லாவிட்டாலும் இது ஒன்று மட்டும் இருந்தால் அவன் நல்ல அரசன் ஆவான் என்று கூறுகின்றார்.

பெரியாரைத் துணைக்கோடல்

வள்ளுவர், இடித்துச் சொல்லி திருத்துகின்ற பெரியோர் இல்லாத பாதுகாப்பற்ற மன்னன், தன்னைக் கெடுப்பவர் யாரும் இல்லாமல் தானாகவே கெடுவான் என்பதை

> இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பார் இலானும் கெடும் (448)

என்னும் குறள்வழி கூறுகின்றார்.

இதனையே சுவாமிகளும், இராமன் போன்ற தெய்வ மன்னர்களும், வசிஷ்டர் முதலான முனிவர்களின் ஆலோசனைப்

படியே செங்கோல் ஆட்சியினை மேற்கொண்டு வந்தனர். இதனை அறிந்து மன்னன் பெரியோரின் துணை கொண்டு அரசுபுரிய வேண்டும். அவ்வாறு ஆட்சி புரியாதவர் கொடுங்கோல் அரசன் ஆவான். இவனது ஆட்சியைக் கண்டு பூமிதேவி பயப்படுவாள் என்று கூறுகின்றார்.

காட்சிக்கு எளியன்

அரசனது பண்புகளுள் முக்கியமானது தன்னைக் காண வருவார்க்குக் காட்சிக்குத் தான் எளியவனாய், கடுஞ்சொல் இல்லாதவனாய், விளங்கினால், அவனது நாட்டை உலகமே உயர்வாகப் போற்றும், இதனை வள்ளுவர்,

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். (386)

என்கின்றார். இதனைச் சுவாமிகள்,

எத்தகவோர் தற்காண்டற்(கு) எண்ணிவந்தார் ஆயிடினும்
அத்தருணம் காட்சி அருள்வானே — இத்தறைக்கு ஓர்
மன்ஆனேம் என்ன மகிழா(து)இவ் வாழ்க்கையினால்
என்ஆம்கொல் என்று இடைவோ னே.

என்னும் பாடலின் மூலம், மன்னன் தன்னுடைய குடிமக்கள், குற்றம் குறைகளை முறையீடு செய்வதற்கு ஏற்ற வகையில் எந்த நேரமும் காட்சிக்கு எளியவனாய் இருக்க வேண்டும் என்று விளக்குகின்றார்.

நீதி வழங்குதலில் நேர்மை

அரசன் நீதி செலுத்துவதில் நேர்மையுள்ளவனாகவும், தன்னிடம் வரும் வழக்குகளை நன்கு ஆராய்ந்து நீதி தவறாமல் தீர்ப்பு வழங்க வேண்டும். நீதி வழங்குதலில் நேர்மையுடன் திகழ்வது அரசனது முக்கிய பண்பு ஆகும்.

அரசன் என்பவன் நடுநிலைமை தவறாமல், யாரிடத்தும் இரக்கம் காட்டாமல், குற்றத்தின் கடுமையை ஆராய்ந்து, அதற்குத் தக்கவாறு தண்டனை வழங்குவது அரசனுக்கு முறையாகும், என்று,

ஓர்ந்துகண் ணோடா, திறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. (541)

என்னும் குறளின் மூலம் விளக்குகின்றார் தெய்வப் புலவர். சுவாமிகள் அரசன் வாழ்க்கை நிலையாமையை எண்ணி நீதி தவறாமல் நடக்க வேண்டும். அரசன் தன்னிடம் வரும் வழக்கு களை ஆராய்ந்து, அந்த வழக்கில் உள்ள பொய், மெய்களைக் கண்டறிந்து நீதி வழுவாமல் வழக்குகளை முடித்து வைக்க வேண்டும். அவ்வாறு இல்லாத அரசன் பன்றியை விடவும் கீழானவன் என்பதை,

> மேதினியோர் சொல்மொழியில் மெய்அறிந்து பொய்அகற்றி
> நீதி முறையில் நிறு(வ)அறியான் — ஏதில்அர(சு)
> இன்றிமுழு(து) ஆண்டுறினும் எண்ணறிய பல்பிறப்பில்
> பன்றியினும் தாழ்வாய்ப் படும்.

என்னும் பாடல் மூலம் விளக்குகின்றார். மற்றுமொரு பாடலில், "ஒரே குற்றத்தை மேற்குலத்தானும், கீழ்க்குலத்தானும் செய்தார்கள் என்றால், மேற்குலத்தானுக்குக் குறைவான தண்டனையும், கீழ்க்குலத்தானுக்கு அதிக தண்டனையும் விதிக்க வேண்டும் என்று கூறும் வஞ்சக சாஸ்திரங்களைத் தனது ஆட்சி நூலாகக் கொண்டு ஆண்ட அரசர் குலம் முழுதும் அழிந்து போனதை நல்ல பெரியோர்கள் கூறுவர் என்று கூறுகின்றார். அதாவது அரசன் நடுநிலைமைத் தவறி நீதி வழங்கினால் அழிந்து போவான் என்று கூறுகின்றார்.

பிறனில் விழையாமை

பிறன் மனைவியை விரும்புகின்றவன், எக்காலத்தும் மறையாத பழியை அடைவான் என்பதை வள்ளுவர்,

> எளிதென இல்லிறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
> விளியாது நிற்கும் பழி. (145)

என்னும் குறள் வழி விளக்குகின்றார். சுவாமிகள் பிறனில் விழையாமையை அரசன் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். இராவணன், சீதாபிராட்டியாரை விரும்பி யதால் தனது பெருமையை இழந்து அழிந்தான். இதனை மனதில் கொண்டு அரசர்கள் பிறன் இல் விழையாத பெருந் தகையாய் வாழ வேண்டும் என்பதை,

> ஐஇரண்டு சென்னி அரக்கன் அகிலத்[து]ஓர்
> மைஇயைந்த கூந்தல் மடநல்லாள் – மெய்யில்இச்சை

கொண்டதனால் தன்பெருமை குன்றிஅழிந் தான்எனும்சொல்
கண்[டு] அறிகை மன்னர் கடன்.

என்னும் பாடல் மூலம் விளக்குகின்றார்.

அரசனது அங்கங்கள்

அரசனது அங்கங்களைக் கூறும் இடத்து வள்ளுவர்,

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு (381)

என்கின்றார். சுவாமிகள், அரசன் என்பவன் இறைத்தொண்டர் களையும், புலவர்களையும், வீரம் பொருந்திய மறவர்களையும் தன்னிடம் வைத்துக் கொள்ளாத அரசன் தன் வாழ்நாளுக்குப் பின்பு எந்த புகழும் இல்லாமல் உலகோரால் மறக்கப்படுவான் என்பதை,

ஆலாலம் உண்டான் அருள்வேடத் தொண்டர்களைக்
கோலா கலத்தமிழ்ப்பாக் கூறுநரை — தோலாத
வீரத் தொழிலோரை, வேண்டாத வேந்தர்பெறும்
பேர்அற்றுப் போம், உலகிற் பின்.

என்னும் பாடல் மூலம் விளக்குகின்றார்.

செங்கோன்மை

மன்னன் செங்கோன்மையுடன் ஆட்சி செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் அவனது நாட்டிலே வளம் பல பெருகும். வள்ளுவர், அரசனுக்குரிய இயல்போடு செங்கோல் செலுத்தும் மன்னவனின் நாட்டிலே, பருவமழையும், விளைபொருள்களும் ஒருங்கே மலிந்திருக்கும் என்பதை,

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு [545]

குறள் வழி விளக்குகின்றார். இதனையே, சுவாமிகள் உலகில் உண்மை அதிகரித்து பிரகாசித்து, சப்தமேகங்களும், பருவம் அறிந்து அளவாகப் பெய்தல் செங்கோல் ஆட்சி அரசனால் உண்டாகும் என்கின்றார்.

கொடுங்கோன்மை

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின் [558]

என்னும் குறள் வழி வள்ளுவர், கொடுங்கோல் ஆட்சி செய்யும் அரசனது நாட்டில் மக்கள் பெருந்துன்பத்தை அடைவார்கள். முறைப்படி ஆட்சி செய்யாத மன்னவனின் கொடுங்கோலின் கீழ் வாழ்ந்திருந்தால், மக்களுக்கு ஏழ்மையைக் காட்டிலும் செல்வம் உடைமையே துன்பம் தரும் என்கின்றார். இதனைப் போன்றே சுவாமிகளும், பொய்யர்களும், ஏமாற்றுப் பேர்வழிகளும், மற்றவர்களுக்குச் செய்யும் கொடுமைகளைக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிக்கும் அறிவு, ஆற்றல் எல்லாம் தெய்வத் திருவருளால், கைவரப் பெறாத அரசனது ஆட்சியில், குடிமக்கள் படும்பாடு எண்ணிப் பார்த்தால், நரலோகத்தையே, சொர்க்கம் எனச் சொல்லும் அளவுக்குக் குடிமக்கள் பெருந்துன்பத்தை அடைவார்கள் என்பதை

பொய்உரைப்பார் ஒல்கப் புரிந்த விதம்புகல்வான்
மெய்உணர்த்தும் தெய்வஅருள் மேவாதான் – செய்யும்
அர[சு]உரிமை யின்பயனை ஆராய்ந்[து] அறியில்
நரகம்முற்றும் சொர்க்கம்என்ன லாம்.

என்னும் பாடல் மூலம் தெளிவுபடுத்துகின்றார்.

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் [559]

என்னும் குறள் வழி, ஆட்சிமுறை கோணி மன்னவன் ஆட்சி செய்தால், பருவ மழையானது தவறிப்போக, மேகமும் வேண்டுங்காலத்து மழை பொழியாது ஒதுங்கிப் போகும் என்று கூறுகின்றார். இதனையே, சுவாமிகள் பொய், ஏமாற்றுக்கள் அதிகரித்து, காலா காலத்தில் மழை பொழியாமல், பயிர் செய்வோர் இட்ட பயிர்கள் எல்லாம் வறண்டு போதல், கொடுங்கோல் ஆட்சி செய்யும் அரசனால் உண்டாகும் என்பதை,

மெய்யே பெருகி விளங்கற்கும், மேதினியில்
பொய்யே மிகவும் பொலிதற்கும் – மை, ஏழும்
சீர்அறிந்து பெய்தற்கும், செய்தபயிர் தீய்கற்கும்
காரணம், செங்கோல், வெங்கோல், காண்.

என்ற பாடல் மூலம் விளக்குகின்றார். மேலும் மன்னன் நாட்டை முறையோடு காத்து வராவிட்டால், அந்நாட்டிலே பசுக்களும் பால்வளம் குன்றும், அறுதொழிலோரும் மறைநூல்களை மறப்பார்கள் என்பதை,

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின் [560]

என்கின்றார், சுவாமிகள்,

மன்னன் கொடுங்கோல் வழிநின்றால் மாறில்அருள்
முன்னவன்தன் நீதி முறையும்பொய்த்[து] – இன்னல்
உலகில் மலிவாய் உணர்வுடையார்க்[கு] எல்லாம்
அலகின் றிய, மெலி[வு] உண் டாம்.

என்னும் பாடல்வழி அரசன் கொடுங்கோல் ஆட்சி உடையவன். ஆனால், ஈஸ்வரனால் அருளப்பெற்ற வேதநீதி பொய்த்து அவனது ஆட்சியின் கீழுள்ள குடிமக்களுக்கும், அறிவுச் சிறந்த பெரியோர்களுக்கும், துன்பம் அதிகரித்து, மனோவியா கூலங்கள் உண்டாகும் என்கின்றார். கொடுங்கோல் ஆட்சி எத்தகையது என்பதை தெய்வப் புலவர்,

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை [570]

என்னும் குறள் வழி விளக்குகின்றார்.

கீழான அரசன்

வேற்றரசனைப் பணிந்து வாழும் நாணமில்லாத அரசன்; தேவர்களின் உலகு வரை, தன்னுடைய புகழ் செல்லும்படி செய்யாத அரசன்; மாதர்களுடன் ஆடுவதையே தனது வாழ்நாள் முழுவதும் செய்யும் அரசன் என்னும் மூன்று செயல்களையும் கொண்டவன் கீழான அரசன் ஆவான் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

வீரம்

அரசன் என்பவன் வீரம் பொருந்தியவனாக இருக்க வேண்டும். கூற்றமே சினம் கொண்டு தன் மேல் எதிர்த்து வந்தாலும் அதனோடு எதிர்த்துப் போரிட்டு வெல்லும் ஆற்றல் உடையதே சிறந்த படை என்பதை

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்று வதுவே படை [765]

என்னும் குறள்வழி கூறுகின்றார் வள்ளுவர். சுவாமிகள், அரசனானவன் போரிடும்போது தான் தோற்றால் தனது

அரசு எதிரிகள் வசப்படும். ஆனால் போரில் இறந்தால் வீர சொர்க்கம் கிடைக்கும் என்பதை மனதில் எண்ணி, மிகுந்த வீராவேசத்தோடு போர்செய்யும் போது அவன் கையில் உள்ள வாளே சிறந்த வாள் என்றும் அவனது கையில் உள்ள வேலே அனைத்து வேல்களிலும் சிறந்தது என்றும் கூறுவார்.

அமைச்சன்

அரசபாரம் என்னும் வண்டிக்கு, அரசனும் அமைச்சனும் இரண்டு இணைமாடுகள் ஆவர். இடித்துக் கூறும் தன்மையால் அரசனது நீதியையும், நேர்மையையும் காக்கும் அமைச்சு ஆனது அரசனது ஆறு அங்கங்களில் ஒன்று ஆகும்.

நல்ல அமைச்சர்களைக் கொண்டிருக்கும் மன்னன் மாட்சி யுடன் அரசாள்வான். மன்னனுக்கு எந்த வகையான துன்பமும் வராது. ஆனால் துன்மந்திரிகள் அரசனது அருகில் இருந்தாலோ, பகைவர்கள் பலரைவிட அவர்களே கொடிய பகைவர்கள் ஆவர். அரசனுக்கு எதிராக போரிடும் எழுபது கோடி பகைவர்களால் ஏற்படும் தீமைகளைக் காட்டிலும், துன்மந்திரிகளால் அரசனுக்கு பெருங்கேடு விளையும். இதனைத் தெய்வப்புலவர்,

பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும் (639)

என்கின்றார்.

சத்தியத்துக்கு அஞ்சும் தனிஅமைச்சன் அல்லான்சொல்
உத்தி வழிசெங்கோல் ஓச்சினால் - முத்திவழி
தூர்வதன்றிப் பாருலகும் துன்பக் கடல்ப்பெருக்கால்
ஆர்வதன்வாய்ப் பட்டதற்குஒப் பாம்.

என்னும் பாடல் வழி, சத்தியத்திற்கு அஞ்சாத, துர்ப்புத்தி உடைய மந்திரியின் யோசனைப்படி அரசன் ஆட்சி செய்தால், அவனுக்கு மறுமையில் நற்கதி அடையும்வழி அடைபட்டு போவதோடல்லாமல் அவனது குடிமக்களும் கடல் போன்ற துன்பத்தை அடைந்து தன்னை உண்ணும் பெரிய பிராணியின், வாயிற் சிக்கிய சிறிய பிராணிபோல் ஆவார்கள் என்று கூறுகின்றார் சுவாமிகள்.

நல் சேனாதிபதி, தீய சேனாதிபதியரின் தன்மைகள்

சேனாதிபதியைப் பற்றி சுவாமிகள் கூறும் இடத்து, நல்சேனாதிபதியானவன் தனது தலையானது, போர்க்களத்தில் விழாமுன், தனது அரசனின் பகைவனாகிய வேற்றரசனுக்குப் பயந்து அவனோடு சமாதான மொழி பேசுவதைச் சகிக்காத, வீரம் உடைய சேனாதிபதியே, யாவராலும் புகழ்ந்து பேசும் தன்மை உடையவன் ஆவான் என்றும், தீய சேனாதிபதியைப் பற்றிக் கூறும்பொழுது பகை அரசன் லஞ்சமாகக் கொடுக்கும் பொருள் மீது உள்ள ஆசையினால் தன் அரசனுக்கு துரோகம் செய்ய நினைத்தான் என்றால் ஒற்றர்கள் மூலம் அச்சேனாதிபதியின் தீய எண்ணத்தை அரசன் அறிந்து கொண்டால், அவன் கொல்லப்படுவான். பின்பு பாவிகள் சென்று சேர்கின்ற நரகத்திலும் துன்பம் அடைவான் என்று கூறுகின்றார் சுவாமிகள்.

தொகுப்புரை

அரசனது பண்புகளைக் கூறும் இடத்து சுவாமிகள் நல்ல அரசன் என்பவன் கடவுளுக்கு அடங்கி இருக்க வேண்டும் என்கின்றார். பெரியோரின் துணைகோடல் என்னும் பண்பினைப் பற்றி திருவள்ளுவரைப் பின்பற்றி சுவாமிகள் கூறுகின்றார். அரசன், நீதி தவறாமல், பிறனில் விழையாமல் மேலும் காட்சிக்கு எளியவனாய் இருக்க வேண்டும் என்று திருவள்ளுவரைப் பின்பற்றிச் சுவாமிகள் கூறுகின்றார். அரசனது அங்கங்களை கூறும்இடத்து படை, குடி, விளைபொருள், அமைச்சர், அரண், நண்பர் என்னும் ஆறு உறுப்புக்களையும் சிறப்பாகப் பெற்றவன் அரசருள் சிங்க ஏறு போன்றவன் என்கின்றார் வள்ளுவர். சுவாமிகள் புலவர், மறவர், இறைத் தொண்டர்களை மட்டும் குறிப்பிடுகின்றார். செங்கோன்மை, கொடுங்கோன்மையினைப் பற்றிக் கூறும்இடத்து சுவாமிகளின் கருத்துக்கள் குறளுக்கு ஒத்து காணப்படுகின்றன.

சுவாமிகள் நல்சேனாதிபதி, தீய சேனாதிபதியின் தன்மைகளை வரையறுத்துக் காட்டுகின்றார்.

சுவாமிகள் அரசாட்சியினைப் பற்றிக் கூறும் கருத்துக்கள் திருக்குறளின் கருத்துக்களை ஒட்டி, பல வரலாற்று அரசர்களின், புராணக் கதைகளினை ஒட்டியும் கூறியுள்ளார்.

குவிபா ஒருபது

கா. வாசுதேவன்

குவிபா ஒருபது

தமிழ் நெடுங்கணக்கில் இடம் பெற்றுள்ள 247 எழுத்துக் களில் இதழ் (உதடுகள்) குவிதல், ஒட்டுதல் ஆகிய முயற்சிகளால் உண்டாகின்ற 119 எழுத்துக்களை மட்டும் கொண்டு பத்துப் பாடல்களாக அமைந்த சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகக் குவிபா ஒருபது என்ற நூல் குறிப்பிடப் பெற்றுள்ளது.

இதழ் குவியும் எழுத்துக்கள்

உயிரெழுத்துக்களில் உ, ஊ, ஒ, ஔ முதலான ஐந்து எழுத் துக்களும், மெய்யெழுத்துக்களில் ப, ம, வ ஆகிய மூன்று எழுத்துக் களும் உதடுகள் குவிவதால் ஏற்படுகின்ற எழுத்துக்களாகக் கொள்ளலாம். அவ்வகையில் 8, 13, 104 எழுத்துக்களே உதடுகள் குவிதலால் ஏற்படுகின்ற எழுத்துக்களாகத் தெரிய வருகின்றன. ஆனால் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் 119 எழுத்துக்கள் என்று குறிப்பிட்டிருப்பது ஆய்வுக்குரியதாகும்.

இதழ் குவியாப் பாடல்கள்

குவிபா ஒருபது என்ற சிற்றிலக்கிய வகைக்கு மாறாக இதழ்கள் குவியாத எழுத்துக்களைக் கொண்டு இடம் பெற்றுள்ள இலக்கியம் நிரோட்டக யகம அந்தாதி என்று குறிப்பிடப்படு கிறது. அவ்வகை இலக்கியங்களுள் சிறப்பிடம் பெற்றனவாகச் சிவப்பிரகாச சுவாமிகளின் திருச்செந்தில் நிரோட்டக யகம அந்தாதியும், சு. வேலுச்சாமிப்பிள்ளையின் திருத்தில்லை நிரோட்டக யகம அந்தாதியும், சவுந்தரபாண்டியனின் குன்று தோராடும் நிரோட்டக யகம அந்தாதியும் குறிப்பிடத் தக்கனவாகும்.

பத்துப்பாடல் இலக்கியங்கள்

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் பத்துப் பாடல்களைக் கொண்டவையாக முல்லைப்பத்து, நயனப்பத்து, ஒருபா ஒருபது,

பதிகம் போன்றன குறிப்பிடத்தக்கவையாகும். பதிகம் என்ற சிற்றிலக்கிய வகை பத்துப்பாடல்கள் உடையன எனக் குறிப்பிடப்படினும், திருஞானசம்பந்தருடைய தேவாரப் பதிகங்கள் பதினோரு பாடல்களையும், தண்டபாணி சுவாமிகளின் பதிகங்கள் அனைத்தும் பன்னிரு பாடல்களை உடையனவாகவும் அமையப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமிகளின் குவிபா ஒருபது

தண்டபாணி சுவாமிகள் இயற்றிய குவிபா ஒருபது, செம்மங்குடி மேல்நிலைப்பள்ளி நிறுவுனர் அமரர் எஸ். எஸ். நடேசய்யரின் நினைவாக 1989-ஆம் ஆண்டு உரையுடன் வெளியிடப் பெற்றுள்ளது. ஆழமான படிப்பறிவுடன் இறையுணர்வையும் மாணவர்கள் பெற்று வாழ்வின் சிறப்புக்களை அடைய இந்நூலின் கருத்து பெரிதும் உதவும் தன்மையது என்பது விழா மலர் ஆசிரியர்களின் குறிப்பாகும்.

நூலின் அமைப்பு: தண்டபாணி சுவாமிகளின் குவிபா ஒருபது எனும் இந்நூல் காப்புச் செய்யுள் ஒன்று, நூற்பயன் செய்யுள் ஒன்று ஆகியவற்றுடன் முருகனைப் பற்றிய பத்துப் பாடல்களை உடையதாய், பன்னிரண்டு பாடல்களுடன் அமைந்துள்ளது.

காப்புச் செய்யுள்: இந்நூலில் முதற்கண் அமைந்துள்ள காப்புச் செய்யுள் முருகக் கடவுளின் மூத்தோனான விநாயகக் கடவுளின் சிறப்பினைக் கூறுவதாகவும், நூலின் அமைப்பை எடுத்துச் சொல்வதாகவும் அமைந்துள்ளது. முதற்கண் இந் நூலின் அமைப்பினைக் குறிக்கும் வகையில்,

''ஒருபது குவிபா ஓதுவ'' எனும் தொடரால் இதழ் குவியப் பாடுகின்ற பத்துப் பாடல்களை உடைய இந்நூலைப் பாடுவதற்கு என்று குறித்துள்ளதன் வாயிலாக இந்நூலின் பாடல்கள் பத்து என்பதும், அவை இதழ் குவியப் பாடுகின்ற இயல்பினை உடையது என்பதும் பெறப்படுகின்ற செய்திகளாகும். விநாயகக் கடவுளின் வடிவமாக ''கோடு மருவு வேர் உவாவும்'' எனும் தொடரால் ஒற்றைக் கொம்பினையுடைய யானை வடிவினராக பெரிய கடவுள் என்று சுட்டுகின்றார். மேலும் விநாயகக் கடவுளின் வீரச் செயலாக ''மாவடும் வேலும்'' எனும் தொடரால் தேவர்களைத் துன்புறுத்திய கயமுகாசுரனைக்

கொன்று வதம் செய்த ஆயுதத்தினை உடையவர் என்ற செய்தியையும் தருகின்றார்.

இரட்டுற மொழிதல் பாங்கு: கடவுள் வாழ்த்துப் பாடலில் விநாயகரைப் பற்றி இடம் பெற்றுள்ள தொடர் இவ்விலக்கியத்தின் பாட்டுடைத் தலைவனான முருகக் கடவுளையும் குறிப்பதாக அமைந்திருக்கும் இரட்டுற மொழிதல் பாங்கு தண்டபாணி சுவாமிகளின் இலக்கியப் புலமையை வெளிப்படுத்துகின்றது. குன்றின் மேல் உறையும் குமரக் கடவுள் மாமரமாய் நின்ற சூரனை வென்ற வேலினைக் கையில் ஏந்தியவர் எனும் பொருளை உணர்த்துவதாய்,

> ''................. கோடு
> மருவுபேர் உவாவும் மாவடும் வேலுமே''

என்ற தொடர் அமைந்துள்ளது. இவ்வாறாக இக்காப்புச் செய்யுள் சிவபெருமான், மைந்தர்களான விநாயகர் மற்றும் முருகன் வடிவங்களையும் வீரச் சிறப்பினையும் ஒருங்கே சொல்லிட விளக்கியிருத்தல் சுவாமிகளின் கவித்திறனையும், இரட்டுற மொழிதல் எனும் இலக்கிய உத்தியையும் வெளிப் படுத்திக் காட்டுகின்றது.

நூற்பயன்: சிறப்பான முறையில் இதழ் குவிய அமைக்கப் பெற்றுள்ள பத்துப்பாடல்கள் அமைந்த இக் குவிபா ஒருபது நூலினை மனம் உருகக் கற்பவர்கள் அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிரார்த்தி, வசித்துவம், பரகாயம், ஈசத்துவம் முதலான எண்வகை சித்திகளை இப்பிறவியில் பெற்றுப் பெரும்பயன் அடைவதோடு மறு பிறப்பின்றி முக்தியான வீடுபேற்றினைப் பெற்றுய்வர் என்று நூற்பயன் கூறவந்த சுவாமிகள்,

> ''கூறும் அருமை குவிபா ஒருபது
> பேறும் வீடும் பெருகுவ வாமே''

என விளக்குகின்றார்.

குவிபா ஒருபது – மதிப்பீடு

முருகனின் தோற்றம்: முருகனின் தோற்றப் பொலிவினைப் பல பாடல்களில் சித்திரித்துக் காட்டியுள்ள தண்டபாணி சுவாமிகள் திரட்சி மிகுந்த புயத்தினை உடையவராகத் திகழ் கின்ற பாங்கினை ''குவவு ஆம் வாகு'' எனும் தொடராலும்,

முருகனின் இளமைத் தோற்றத்தினை, ''உவாவா'' எனும் தொடராலும், முருகன் உருவமாயும், அருவமாயும் அன்பர்கள் விரும்பும் வண்ணம் வடிவு கொள்வதனை ''உனுமாறு உறுவாய் உருவோ அருவோ'' எனும் தொடராலும் குறிப்பிட்டுள்ளார். மேலும் முருகனின் அறுமுகங்களைப் பற்றியோ, பன்னிரு கரங் களைப் பற்றியோ சுவாமிகள் குவிபா ஒருபதில் குறிப்பிடாமை சுட்டத்தக்கது.

குரு வடிவம்: இறைவன் குரு வடிவமாகத் தண்டபாணி சுவாமிகளுக்கு அருள் செய்த பாங்கினை ''வருகோ முருகோ'' எனும் தொடரால் பவனி வரும் முருகக் கடவுளே எனக் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.

பிரணவ வடிவம்: முருகக் கடவுளும், முருகக் கடவுளின் வாகனமான மயிலும் பிரணவ வடிவின என்பதனைத் தம் பாடல்களில் விரிவாகக் குறிப்பிட்டுள்ள சுவாமிகள் பிரணவத்தில் பொருந்தியுள்ள அகார, உகார, மகாரங்களின் பொருளைக் குருவாக இருந்து தமக்கு உபதேசித்து அருள வேண்டும் என்று வேண்டுபவராக,

''ஓம் ஊடு ஒருவாது உறும் அ ஊ மா வே ஓது'' எனும் தொடரை அமைத்துள்ளார். இறைவன் முருகன் பிரணவத்தின் பொருளாய் ஆனவர் என்ற கருத்தினை,

''ஓம் ஆ'' எனும் தொடரால் சுட்டிக் காட்டியுள்ளார். மயிலின் தோற்றம் பிரணவத்தின் போல விளங்கும் மாண்பினை,

''தூவல் உறு ஓம் மாவாம்'' எனும் தொடரால் குறிப்பிட்டு தோகையைப் பெற்று விளங்குகின்ற மயில் பிரணவ எழுத்தைப் போல் உள்ளது என்கிறார்.

வள்ளியை வேட்ட குமரன்: முருகனுடைய தேவியர் இருவருள் வள்ளியை முருகன் விரும்பிச் சென்று அணைந்த பாங்கினை, மலையின்கண் உள்ள வேட்டுவ குலத்தில் பிறந்த திருமகள் போன்ற சிறப்பினையுடைய வள்ளி கவண் கற்களால் பறவைகளை ஓட்டுகின்ற தினைப்புனத்தின்கண் சென்று அவள் விரும்பி அளித்த தினைமாவினையே உணவாகக் கொண்ட ஒப்பற்ற திருவுடையவர் எனும் சிறப்பினை,

"கோவேடுவ மா குருகு ஓவு அவன்
ஓமாவோ உனுமா மறுகு ஓர் உருவா"

எனும் தொடரால் சுட்டிச் சிறப்பித்துள்ளார்.

முருகனின் ஊர்தி: முருகக் கடவுளின் ஊர்திகளாக முருகன் புகழ்பாடும் புராண நூல்கள் மயில், யானை, ஆட்டுக்கிடாய் முதலியவற்றை குறிப்பிட்டுள்ளன. முருகன் மயில் வாகனத்தை உடைமையின் 'மயூராடர்' எனவும், யானை வாகனத்தைக் கொண்டுள்ளமையின் 'கஜாரூடர் எனவும், ஆட்டுக்கிடாய் வாகனத்தைக் கொண்டிருப்பதால் 'அஜாரூடர்' எனவும் அன்பர்களால் போற்றப் பெற்றுள்ளார்.

தண்டபாணி சுவாமிகளும் இந்நூலின்கண் முருகனின் மயில் வாகனத்தைக் குறிப்பிடும் பொழுது,

"ஓ உருவ புதுமா உருவே" என்று குறிப்பிட்டு பிரணவ வடிவாய் உள்ள வாகனத்தையுடைய தெய்வமே எனவும்,

"மாவாம் அதுமீ வரு கோ" எனும் தொடரால் மயில் வாகனத்தின் மீது பவனி வருகிற குருவே எனவும் சுட்டுகிறார்.

குதிரை வாகனம்: "மாவாம் அது மீ" எனும் தொடரால் குதிரை எனப் பொருள்படும் மா எனும் சொல் பயிலப்பெற்று முருகனின் வாகனமாக குதிரையும் சுவாமிகளால் குறிப்பிடப் படுவதைக் காணலாம். இக்கருத்திற்கேற்ப முருகனின் அறுபடை வீடுகளில் திருவிழா நாட்களில் முருகனுக்கு குதிரை வாகனம் அமைக்கப் பெறுவதைக் காணலாம்.

ஆட்டுக்கிடாய் வாகனம்: முருகனின் ஊர்தியாக ஆட்டுக் கிடாய் வாகனம் அமைந்துள்ள செய்தியை "ஒரு ஏறும் ஐ" எனும் தொடரால் ஆட்டு வாகனத்தில் ஏறி பவனி வரும் கடவுளே என்று முருகப் பெருமானைப் பரவியிருத்தலைக் காணலாம்.

முருகனின் கொடி: முருகனுக்குரிய கொடியாக சேவல் கொடியும், மயில் கொடியும் முருக இலக்கியங்களில் மொழியப் பெற்றுள்ளன. அவற்றுள் முருகன் சேவல் கொடியினை உடையவன் என்பதைச் சுவாமிகள்,

"கூவா வரும் மா குருகும்" எனும் தொடரால் கூவிக் கொண்டு வருகின்ற பெரிய சேவற்கொடியை உடையவன் எனப் போற்றிப் பாடுகின்றார்.

முருகனின் ஆயுதங்கள்: பன்னிரு கரத்தோனாய் பேசப்படும் முருகக் கடவுள் தம் கரங்களில் ஏந்திய கருவிகளாக புராணக் கதைகளும், சிற்ப நூல்களும் ஆயுதங்கள் பலவற்றைக் குறிப் பிட்டுள்ளன. ஆயினும் முருகன் தன் கரங்களில் கொண்டுள்ள போர்க் கருவிகளுள் தலையாததாக வேலாயுதம் மட்டுமே சுவாமிகளால் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

"வேலும்" "ஓவா வேலோடு" "ஒப்பா ஒருவேல் உறு" என வரும் தொடர்களால் உணரலாம்.

மகளிர் மாயை அகற்றுதல்: முருகப்பெருமானுடைய மந்திரங் களை உபதேசிக்கப் பெற்ற அடியார்கள் அழகிய வளையல்கள் ஒலி செய்கின்ற மங்கையர்களைப் பற்ற நினைக்கும் மன மயக்கங்கள் ஒழியப்பெறும் எனும் கருத்தினை,

"ஓது மா குருகு ஒலும் கொறும் மால் உகும்" எனும் தொடரால் குறிப்பிடும் சுவாமிகள், வாலாயுதமோ என்று ஐயுறும் வண்ணம் மை தீட்டப் பெற்ற பாயும் தன்மையுடைய மாதர் விழிகள் தேன் பொருந்திய மலர்க்கணைகளை உடைய மன்மதனுடன் கூடி மானிடர்க்குப் பல வகையான துன்பங்கள் அதிகம் படும்படியாக செய்வதான தீமை தரும் மையல் நோமை நீங்கச் செய்வதும் அவை பொருந்தச் செய்வதும் முருகன் தன்மையினால் ஆகும் எனும் கருத்தினை,

"வாளோ எனும் மைவா கோ மது வீ
வேளோடு பல் நோ மிகுமா சுடும்
கோள் ஒவுவையோ குவ ஏவுவையோ"

எனும் தொடர்களால் மாதர் மயக்கம் நீக்கும் மயில் வாகனனின் பேரருள் திறத்தினைச் சுவாமிகள் புலப்படுத்தியுள்ளார்.

அருட்சிறப்பு: பார்வதி தேவியின் குமாரரான முருகக் கடவுளின் அருள் இருப்பின் சேவல் கொடியையும், வேலாயுதத் தையும் தமிழ்ப் பாடல்களால் துதிக்கத்தக்க பிறப்பினைக் கொடுத்தருளும் என்பதனை,

"கூவா வரும் மா குருகும் வேலும்
பாவால் றுவலும் பவம் ஈகுவையோ"

என்று சுட்டுகின்றார். பாவத் தொடர்புடைய இப்பிறவி நோய் நீங்குமாறும், கோபமும் அசத்திய உணர்வும் உயிர்களை விட்டுப் போகுமாறும் ஞானக் கண்ணைத் தந்தருள்வது முருகன் திருவருள் எனவும் அன்பினால் உருகாத அடியவர்கள் ஈடேறும் வகையில் மயில் வாகனத்தில் வந்தருளும் பாங்கினர் எனவும், அன்பர்கள் விரும்பியவாறு தோன்றும் பண்புடையவர் எனவும், தீயவர்களுக்கு அச்சம் தரும் இடியேறு போன்ற வீரம் உடையவர் எனவும், அன்பர்கள் விழையும் சிறப்புக்களை இப்பிறவியிலேயே அருளும் சிறப்பினை உடையவர் எனவும் முருகனுடைய அருட் சிறப்புகள் சுவாமிகளால் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்றன.

தொகுப்புரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் அறுவகைச் சமயக் கடவுளர் களைப் பற்றி ஆயிரக்கணக்கானப் பாடல்களைப் பாடி தமக்கென்று ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ள தண்டபாணி சுவாமிகள் தாம் இயற்றிய குவிபா ஒருபது எனும் ஒப்பற்ற சிற்றிலக்கியத்தில் இதழ் குவியும் 119 எழுத்துக்களை மட்டுமே கொண்டு முருகனைப் பாட்டுடைத் தலைவனாக்கிப் பாடியுள்ள பாடல்கள் கற்கும் தோறும் இனிமை பயந்து களிப்பினை நல்குவதோடு முருகப் பெருமானுடைய அருள்மிகு தோற்றத்தினை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துவனவாகவும், முருகனின் தேவியாகிய வள்ளியின் காதலை நமக்கு உணர்த்துவன வாகவும், முருகனின் ஊர்தியையும் கொடியையும் சுட்டிக் காட்டுவனவாகவும், முருகனின் ஆறெழுத்து மந்திரத்தின் சிறப்பை உணர்த்துவதாகவும், முருகனின் பேரருள் தன்மை யினை நமக்கு உபதேசிப்பதாகவும் திகழ்ந்து பக்தி பேரிலக்கிய மாய் பொலிந்து நலம் பயப்பதை மேற்சுட்டிய செய்திகளால் அறிய முடிகின்றது.

அரிஏகபாதத்து அந்தாதியில் வைணவச் சிந்தனைகள்

சு. வேங்கடராமன்

முன்னுரை

தண்டபாணி சுவாமிகள் அறுவகைச் சமயக் கடவுளரையும் தனித்தனியே முதன்மைப்படுத்திப் பாடினார். தமிழ்நாட்டுச் சமய வரலாற்றில் பழமரபிலே ஐவகை நிலத்தெய்வம் பாடிய சங்க இலக்கிய மரபிலேயே, சிவன் தனியாகவும், ஏனைய முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை பாடப் பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாகச் சுந்தரர் தேவாரத்தில்,

'அறிவினால் மிக்க அறுவகைச் சமயம்
அவ்வ வர்க்கங்கே ஆரருள் புரிந்து' (திருப்புன்கூர் பதிகம்)

என்று அறுவகைச் சமயத்தைப் பதிவு செய்துள்ளார். பின்வந்த ஆதிசங்கரர் இந்த அடிப்படையில்தான் அறுவகைச் சமயங்களை (ஷண்மத) மீட்டுருவாக்கம் செய்தார். இந்த அடிப்படையில் தண்டபாணி சுவாமிகளும் அறுவகை நெறியைத் தம் காலத் தேவைக்கேற்ப வியந்து போற்றுகிறார். அந்த வகையில், திருமாலைப் பரம்பொருளாகக் கொண்டு அவர் ஏராளமான நூல்களைப் படைத்துள்ளார். அவைகளுள் ஒன்றான 'அரி ஏகபாதத்து அந்தாதி' என்னும் நூலில் காணப்படும் வைணவ சமயச் சிந்தனைகளை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கம்.

தம்முடைய அறுவகை நெறிக்கேற்ப திருமாலை அவர் போற்றிப் பாடுகின்றார். அப்பாடல்களில், அவர் முழுமையான வைணவராகவே வெளிப்படுகிறார். வைணவத்தின் முதல் தாயான நம்மாழ்வாரை அவர் மிகுதியும் கொண்டாடுகிறார். பக்தர்களில் முதன்மையானவர் (பிரபந்த ஜன கூடஸ்தர்) என்பதாலும், திராவிடவேதம் தந்தவர் என்பதாலும் தம்முடைய நெல்லைப் பகுதி சார்ந்தவர் என்பதாலும் அவர் சடகோபனைக்

கொண்டாடுகிறார். 'சடகோபர் சதகத்து அந்தாதி' என்ற தனி நூலையும் படைத்துள்ளார். அத்துடன் புலவர் புராணம் நூலில் சடகோபர் சருக்கம் என்று இரண்டாம் சருக்கத்திற்கு, நம்மாழ்வார் வரலாற்றை வைத்து ஏற்றம் தந்துள்ளார். அரிஏக பாதத்து அந்தாதி முப்பது பாடல்களாலான சிறுநூல். ஏகபாதத்து அந்தாதி என்பது, அந்தாதி முறையில், ஒரே அடி (ஏகபாதம்) மீண்டும் மீண்டும் நான்கு அடிகளாக, வெவ்வேறு பொருள் தருவதாகப் பாடப்படுவதாகும். நான்கு அடிகளை ஒரே அடியாக - ஏகபாதமாக – அமையுமாறு பாடப்படுவது ஏகபாதத்து அந்தாதி. தமிழ் இலக்கிய மரபில் பல்வகையான யாப்பு, இலக்கியவகை, இசைநுட்பம், தாளவேறுபாடு, சந்த நுட்பம் அமையப் பாடிய திருஞானசம்பந்தர் திருப்பிரமபுரம் பதிகத்தில் ஏகபாதம் பாடியுள்ளார். ஆனால் ஒரு பதிகத்தில் (12 பாடல்கள்) மட்டுமே ஏகபாதம் அமைந்துள்ளது. (பிரமபுரத்துறை பெம்மா னெம்மான்) தண்டபாணி சுவாமிகள் அந்தாதி முறையில் முப்பது பாடல்களில், திருமாலைப் பரம் பொருளாகக் கொண்டு இந்த இலக்கிய வகையை விரித்துரைத் துள்ளார். அடிதோறும் வெவ்வேறு பொருள் வருமாறு அமைத்துப் பாடியுள்ள அவருடைய புலமை வியக்கத் தக்கது. 'சடகோபன் தந்த தமிழுரை சத்தியச் செல்வம்' (பாடல் 29) என்று அவர் குறிப்பிடுவது, சடகோபனின் திருவாய்மொழி உள்ளிட்ட ஈரத்தமிழ், முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

திருக்கோயில்களில் 'ஏகபாத மூர்த்தி' என்று இறைத்திருமேனி ஒன்று உண்டு உலக முடிவு காலத்தில் எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிக் கொண்டு இறைவன் ஏகபாதனாக-ஒற்றைத் திருவடியுடன் – நிற்கிறான் என்பது இதன் பொருளாகும். அந்த முறையிலும் தன்னிலும் மேலாய ஒன்று இல்லாத பரம் பொருளான நாராயணன், ஏகபாதனாக விளங்குவதை எடுத்துரைக்கும். இலக்கிய வகையாக ஏகபாதத்து அந்தாதி உள்ளது. அந்த முறையில் சுவாமிகள் தாம் பாடிய அரி ஏகபாதத்து அந்தாதி நூலிற்குத் தாமே பதப்பொருள், கருத்து, ஞாயம், இலக்கணம்ஸ்ரீ என அனைத்து வகை உரை விளக்கங்களையும் செய்துள்ளார். காப்பு, நூற்பயன் பாடல்கள் இரண்டு தவிர நூல் முப்பது பாடல்களால் ஆனது. நூற்பயனும் காப்பும் கூட ஏகபாதமாகவே அமைந்துள்ளன.

திருமாலை முழுமுதற்கடவுளாகக் கொண்டது வைணவ சமயம். பரம்பொருளின் தன்மை (ஈசுவரன்), உயிரின் தன்மை (சித்), பரம்பொருளை அடையவிடாமல் உயிரைத் தடுக்கும் தடை (அசித்) ஆகிய மூன்றைப் பற்றியும் எடுத்துரைப்பதோடு, இறைவனை அடைவதற்கு ஏற்ற நெறியான பிரபத்தி (சரணாகதி) என்னும் வழியையும் எடுத்துரைத்தலே வைணவ சமய தத்துவம். அந்தத் தத்துவத்தை, ஆழ்வார்கள் நமக்குத் தந்துள்ளனர். நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் இத்தத்துவச் சிந்தனைகள் யாவும் அடிநாதமாக ஒலிக்கின்ற பாங்கினைப் பட்டர்,

'மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித் – தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழினிசை வேதத்தியல்'

என்று பாராட்டுகிறார். இப்பாடலில் இறைவனின் உயர் நிலையும், உயிரின் தன்மையும், இறைவனைச் சேர ஒட்டாது உயிரைத் தடுக்கும் வினையின் இயல்பும், இறைவனைச் சென்றடையும் நெறியும் சுட்டப்பட்டு உள்ளன. திருமாலே அடையவேண்டிய இலக்காகவும், அதனை அடையும் நெறியாகவும் இருக்கிறான். கலகம் செய்யும் பிறவற்றிலிருந்து உயிரைக் காத்து அருள் செய்பவனாகவும் அவனே உள்ளான். ('கலகச் சமயமெல்லாம் அஞ்சுமாறு அருள்காட்சி நல்கு'-பாடல் 21 என்று சுவாமிகள் இதையே பாடுகிறார்). இந்த அடிப்படையில் இக்கட்டுரையில் இறைவனின் பரத்துவநிலை. உயிரின் இயல்பு, பக்தி, திருவடிப்பேறு, அருள்வேண்டல், குருவின் சிறப்பு, இறைவனை அடையவிடாது தடுக்கும். கலியின் இயல்பு என்பவற்றை அரிஏகபாதத்து அந்தாதி நூலின் வழியே காண்போம்.

இறைநிலை

திருமால் எல்லாவற்றிலும் உள்ளுறைபவனாகவும் (அந்தர்யாமி) எல்லாவற்றிலும் பரந்திருப்பவனாகவும் (சர்வ வியாபி), எல்லாவற்றையும் கடந்து இருப்பவனாகவும் உள்ளான். இதனை, 'உலகனந் தங்களு முண்டானை யன்றி யொருவரின்றே' (பாடல் 1) என்று முதல் பாடலில் ஈசுவரனின் வியாபக ஸ்வரூபம் சுட்டப்படுகிறது. உலகை உண்டு, உமிழ்ந்த ஒருவன் என்ற

குறிப்பும் உள்ளது. உலகம் யாவும் நாராயணனின் படைப்பு என்று அடுத்த பாடலில், 'நாராயணன் பதத்து ஒண்சுவடே' என்று கூறுகிறார். நாராயணன், திரிவிக்கிரமனாக ஓங்கி நின்று உலகு அனைத்தையும் அளந்த நிலை சுட்டப்படுகிறது. பதத்தின் சுவடுகளாக மூவுலகங்களும் உள்ளன என்ற நுட்பம் உணரத் தக்கது. அதுமட்டுமின்றி, இறைவனின் திருவடிச் சிறப்பும் இப்பாடலில் சுட்டப்படுகிறது.

ஈசன் எல்லாமாக வெளிப்படுவான் என்பதை, 'மன்னவர் ஆதியரா வருவான் அடல் மாதவனே' (பாடல் 11) என்பதில் அரசர்கள் உள்ளிட்ட பல வடிவங்களில் திருமால் காட்சி கொடுக்கின்றான் என்று சுவாமிகள் சுட்டுகிறார். மாதவன் என்பதில், திருமகள் கேள்வன் என்ற, இறைவி – இறைவன் சேர்த்திக் கோலம் சுட்டப்படுகிறது. நாம் காணுகின்ற, மன்னவர்கள் உள்ளிட்ட எல்லாக் கோலங்களும் நாராயண ஸ்வரூபம் என்னும் காட்சித்தெளிவு மிக உயர்ந்த பக்தி உடையவர்களுக்கே கிடைக்கும். இது நம்மாழ்வாரின், 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' (திருவாய். 4.4.8) என்னும் திருவாய் மொழியை நினைவூட்டும். எல்லாமாக ஈசன் பரந்து வியாபித்து உள்ளான்; எல்லாம் அவனுடைய தோற்ற வேறுபாடுகளே; நாம் அனைவரும் வாசுதேவ குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்னும் உயர் ஞானத்தை இது காட்டுகிறது.

அனைத்துயிர்களிலும் பரவி உள்ளேயும் புறம்பேயும் இருக்கும் நாராயணன், தனியொருவனாக, அழியாத நித்திய வஸ்துவாக, தத்துவ வடிவினனாக இருக்கிறான் என்றும் சுவாமிகள் பாடுகிறார். 'தனியாய தத்துவன் தாமோ தரன் என்றல் சத்தியமே' (பாடல் 28) என்னும் அடி இதனை வலியுறுத்தும். தன்னிலும் மேலான ஒன்று இல்லாத பரம் பொருள் என்பது தனியாய என்ற சொல்லிலும் தத்துவன் என்பது அதனைத் தன் இயல்பாக உடையவன் (சுபாவன்) என்றும் பொருள்படும். அடையப்படும் உயர் தத்துவமாக உள்ளவன் அவனே எனவும் பொருள்படும். அத்தகைய ஒப்பற்ற பரம்பொருள் நம்பொருட்டு தாமோதரனாக, வயிற்றில் கயிற்றால் கட்டப்பட்ட தழும்பை உடையவனாக (தாமம்-கயிறு, உதரம்-வயிறு) வந்து அவதரித்து, உயிர்களுக்கு அருள்செய்தான்

என்கிறார். அது அவனுடைய எல்லையற்ற, காரணமின்றி வரும் (நிர்ஹேதுக கிருபை) கருணையாகும். அவனுடைய தலைமைப் பண்பின் (ஸ்வாமித்துவம்) வெளிப்பாடு. அவனுடைய எளிவந்த தன்மையும் (ஸௌலப்யம்; ஸௌசீல்யம்) நீர்மையும் காரணமாக அவன் அவதாரம் (தாமோதரன்) எடுக்கிறான்.

'தன்னின், மேலொரு பொருளும் இல்லா, மெய்ப்பொருள், வில்லும் தாங்கிக், கால்தரை தோய நின்று, கண்புலனுக்கு உற்ற தம்மா' என்னும் கம்பனின் பாடல் அடிகள் தண்டபாணி சுவாமிகள் வாக்கில் 'தனியாய தத்துவன் தாமோதரன் என்ற சத்தியமே' என வருகிறது. சத்தியமே, என்பது மெய்யானது, நிலையான மெய்ப்பொருள் எனப் பொருள்படும். அவனிட்ட வழக்கு வேதங்களாக அவன் விரிந்துள்ளான். ஆயின் சத்தியன்; நித்தியன் என்று பொருள் தோன்ற தனியாய என்கிறார். அனைத்தும் அவன் வயிற்றில் ஒடுங்க தனிஒருவனாக இருப்பான் - ஏகபாதத்து மூர்த்தியாக அவன் நிற்பான் எனவும் பொருள்படும்.

இறைவனின் திருவடிச் சிறப்பு சுட்டப்படுகிறது. நாராயணன் பதம், தாள் என்றெல்லாம் வருகின்றது. திருவடியைப் பற்றிக் கொள்வது தான் உயிர்கள் செய்ய வேண்டிய செயல். இதனை, 'தஞ்சம் கருதில் அராஏறி ஆடிய தாள் மலரே' (பாடல் 9) இதில், காளிங்கன் மீது ஏறி ஆடிய திருவடி மலர்கள் உயிருக்குத் துணை என்கிறார். இறைவனின் அவதார மேன்மைகள், அவனுடைய எல்லையற்ற கருணையால் வந்தவை. ஒரு காரணமும் இன்றி அவனுடைய கருணை உயிர்களின் மீது படுகிறது. ('இலங்காதிபன் செற்ற தனி மன்னன்' பாடல் 10) எனவும், 'கனகனை ஆளரியாய் அட்ட மால்' (பாடல் 13) எனவும், மாதர சாகி அமுதளித்தானை' (பாடல் 12), 'கன்று அனந்தம் புரப்பான் ஆயரில் வளர் காரணனே' (பாடல் 16) எனவும் இறைவன் எடுத்த அவதார மேன்மை சுட்டப்படுகின்றது. இறைவன் உடையவனாக இருந்து, தன்னுடைய உடைமைப் பொருளாகிய உயிர்களைக் காக் கிறான். காப்பது அவனுடைய செயல். இந்தக் காத்தல் தொழிலுக்கும், அறத்திற்கும், தன்னுடைய அடியார்களுக்கும் எப்பொழுதெல்லாம் துன்பம் வருகிறதோ, உடனே ரட்சகனான அவன் ஓடிவருகிறான். இதுதான் அவதார நோக்கம். இதனை

'தருவச் சிசுவை இரட்சித்தையே' (பாடல் 24) என்னும் பாடலால் அறியலாம். அரக்கர் வீட்டில் தோன்றிய சிசுவான பிரகலாதனைக் காக்க, அவன் நரசிங்க வடிவம் எடுத்தான். நாராயணனின் அர்ச்சையையும் புகழ்ந்து பாடுகிறார். திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைத்திருமேனி அர்ச்சையாகும். அவதாரம், முன் எப்பொழுதோ நடந்ததாக அறியப்படுவது. ஆனால் நாம் நினைத்தமாத்திரத்தில் சென்று சேவித்து மகிழும் படியாக இருப்பது அர்ச்சையாகும். 'வட மலையா தென்ன ரங்கா' (பாடல் 3) என்றும், 'கல், இன, கு' (பாடல் 19) என்று முறையே திருவேங்கடமலை (கல்), சோலை மலை (இனமான நிலம்) நீர்மலை (கு) என்றும் அர்ச்சையின் சிறப்பைச் சுவாமிகள் பாடுகிறார். நாராயணன் வாசம் செய்யும் இந்தத் திருத்தலங் களில் சென்று வாழ உயிர் விரும்புவது தலவாசம் ஆகும்.

இறைவனின் கருணை எல்லையற்றதாக, 'காரணம் ஏதுமின்றி வருவதாகச்' சுட்டப்படுகிறது. 'கணத்தில் அன்று ஈந்தகைச் சீட்டு' (பாடல் 18) என்று வருமிடத்தில், சுவாமி களின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சி சுட்டப்படுகிறது இறைவனின் (திருவல்லிக்கேணி பார்த்தசாரதி) எல்லையற்ற கருணை, சுவாமிகளுக்குப் பொன் தருவதாகக் கைச்சீட்டு எழுதிக் கொடுத்த கருணை இதில் சுட்டப்படுகிறது. 'நாரணன் தான் நந்தம் ஆவிக்கு அரும் தஞ்சம்' (பாடல் 8) என்றும் 'அத்தாமரைக் கண் இறையே' (பாடல் 14) என்றும் 'காட்டில் நடித்த கருணாலயா' (பாடல் 22) என்றும் இறைவனின் கருணையை வியந்து போற்றுகின்றார்.

தண்டபாணி சுவாமிகளின் சமயக் கொள்கையான அறுசமயக் கோட்பாட்டை வலியுறுத்துமாறு, ஆறு சமயங்களுக்கும் விளை நிலமாக நாராயணனே உள்ளான் என்று கூறுகிறார். இதனை 'ஆறுசெய்' (பாடல் 15) என்று வருமிடம் வலியுறுத்தும்.

உயிர்நிலை

உயிர் இறைவன் கருணையே வேண்டி நிற்கும். தன்னை வாட்டும் கலியின் பிடியிலிருந்து விடுபட்டு இறைவனை உணரவும், பக்தி செலுத்தவும் இறைவன் திருவடியை அடையவும் அடியார் கூட்டத்தில் இருக்கவும் தனக்கு உயிர்த்துணையான ஞானாசிரியனை அறிந்து அவன் வழிகாட்டலில் இறையருளைப்

பெறவும் விரும்புவது உயிர் இயல்புகளாகும். அதற்கு இறைவனின் அருள் துணைசெய்ய வேண்டும். உயிர்களிடம் உள்ள மயக்கத்தைப் போக்கி தன்னை உணரும் ஞானத்தையும் தன்னிடம் செலுத்தும் பக்தியையும் நாராயணனே தருகிறான். இதனை, 'மயர்வற மதிநலம் அருளினன்' என்று நம்மாழ்வார் அருளிச் செய்கிறார். இந்த அடிப்படையிலே தண்டபாணி சுவாமிகளும் பாடுகிறார். திருமாலின் திருவடியை அடைதலே உயிர் பெற விரும்பும் மிக உயரிய குறிக்கோள் ஆகும். திருவடிப்பேறு எனவும் திருவடி சம்பந்தம் எனவும் வைணவத்தில் இது கொண்டாடப்படும். இந்த நெறியில் தண்டபாணி சுவாமி களும் உயிர் இதனை மிகவும் விரும்புவதாகப் பாடுகிறார். 'நினதாளை மறக்கலனே' (பாடல் 3) எனவும் 'தஞ்சம் கருதில் அராஏறி ஆடிய தாள் மலரே' (பாடல் 9) எனவும், 'உன தாளில் கலந்திடவே' (பாடல் 20) எனவும் பாடுகிறார். திருவடிப் பேற்றைப் போற்றுவதுடன், நாராயணனின் அருள்காட்சியையும் வேண்டுகிறது உயிர். அவனுடைய கருணையை வேண்டுவதும் உயிரின் இயல்பு. இறைவனின் அளப்பரும் கருணை தன்மீது படியவேண்டும் என்றும், கருணையின் மூலமாகவே தன் வினையை – கலியை – வீழ்த்த முடியும் எனவும் உயிர் உணர்கிறது. இந்த ஞானமே நாராயணன் தந்ததுதான். நாரா யணனின் கருணைமொழியும் தோற்றப் பொலிவையும் அவனுடைய அருள்பொழியும் கண்களையும் தண்டபாணி சுவாமிகள் சிறப்பித்துப் பாடுகிறார். கடல் அமுது ஈந்தாய் எனக்குவரமருளே' (பாடல் 6) எனவும், 'தாமரைக் கண் இறையே' (பாடல் 14) எனவும், 'கண்ணியவாறு செயாதிருந்தால் மனம் தன்றிடுமே' (பாடல் 15) எனவும், 'கலகச் சமயம் எல்லாம் அஞ்சுமாறு அருள்காட்சி நல்கே' (பாடல் 21), 'காட்டில் நடித்த கருணாலயா எனைக் கைவிடலே' (பாடல் 22) எனவும். 'கை யானைக்கு அன்று அருள் ஆழியப்பா வந்து காத்தி' (பாடல் 23) எனவும், 'இன்னல் அகற்றி... ரட்சி' (பாடல் 24) எனவும், 'தயையால் பத்து அன்பருடனாக என் தனைத் தாங்குதி' (பாடல் 25) எனவும் 'தாங்கத் தகாத கலிவேர்களையத் ததி யிதுவே' (பாடல் 26) எனவும் பாடுவது இதனை வலியுறுத்தும். நாராயணனின் அருள் மூலமாக மட்டுமே இன்னல் அகற்றப்படவும், கலி நீக்கப்படவும் முடியும் என்று கூறுகிறார். கலி வேருடன் களையப்பட அவனருள்

ஒன்றே துணை எனவும் பாடுகிறார். அருள்பெற விரும்பும் உயிர், அவனால் முன்னமே அருள் செயப்பட்ட அடியார் கூட்டத்தை - சத்சங்கத்தை நாடுகிறது. மயர்வற மதிநலம் அருளப்பட்ட ஆழ்வார் பதின்மருடைய கூட்டு தமக்கு வேண்டும் என்று சுவாமிகள் ஆசைப்படுகிறார். அவர்களுடன் சேர்த்துத் தன்னையும் தாங்கவேண்டும் என்று நாராயணனின் தயை வேண்டிப் பாடி மகிழ்கிறார். இதனை, 'தயையால் பத்து அன்பர் உடனாக என்தனைத் தாங்குதி (பாடல் 25) என்பதால் அறியலாம். இதில் தயை, கருணை வேண்டும் பக்தனின் அன்பு வேண்டுதலும் தாயாக இருப்பவனான ஈசுவரன் தானாக முன் வந்து நம்மைத் தாங்க வேண்டும் என்பதும் சுட்டப்படுகின்றன. அவன் தாங்கும் ஆதாரமாக இருக்க, உயிர் தாங்கப்படு பொருளாக ஆதேயமாக உள்ளோம் என்னும் இறைஉயிர் தொடர்பு சுட்டப்படுகிறது.

உயிர்கள் இறைவனால் மதியும் (ஞானம்) நலமும் (பக்தியும்) அருளப்பட்டு, அவனிடம் பக்திகொள்ளுகின்றன. நாராயணனிடம் கொண்டுள்ள பக்தி முதிர்ந்து, மறந்தும் புறந்தொழாத நிலை ஏற்பட்டு, பரபக்தியாக, அவனை மட்டுமே அடையும் இலக்காகவும் அடையும் வழியும் (உபாயம்) அவனாகவும் உயிர் கருதுகிறது. இந்த உயர் ஞானம் பரஞானமாகி, அவனையே அடைய விரும்பும் பரமபக்தனாகக் கனிகிறான். இதனைத் தண்டபாணி சுவாமிகள், 'அழகிய நாரணன் தான் நந்தம் ஆவிக்கு அரும் தஞ்சமே. (பாடல் 8) என்றும் 'மாமனை அட்டவன் அன்றி மற்றாரை மதிக்குதுமே' (பாடல் 5) என்றும் பாடுவதால் அறியலாம். மோட்சத்தை விரும்பும் மோட்சகாமி களும் பிறரும் எதை விரும்புகின்றனரோ அதற்கு ஏற்ற சிறு தெய்வங்களை நாடி அலைவர்; நாம் வாசுதேவனைத் தவிர பிற தெய்வங்களை மதியோம் என்று அவனை ஏகபாத மூர்த்தியாக-பரவாசுதேவனாக நிறுவுகிறார்.

நாராயணனை மட்டுமே மதித்து வணங்கி வழிபடும் உயிர், நாராயணனின் அடியார்களான பாகவதர்களையும் தம்முடைய தெய்வக் கூட்டமாக எண்ணி வணங்குவர். வைணவத்தில் பாகவத கைங்கர்யம் (அன்பர் பணி செய்வது) என்பது மிக உயர்ந்த ஒன்றாகும். மதுரகவியாழ்வார், 'தேவு மற்றறியேன் குருகூர் நம்பி' என்று பாடி இதனை உருவாக்கித் தந்துள்ளார்.

வைணவ உட்கிடக்கையை நம்மாழ்வாரைப் போற்றிப் பரவுவதன் மூலம் உணர்ந்து கொண்ட தண்டபாணி சுவாமிகள், 'கார் அனையான் அடியார் நந்தம் தெய்வக் கணமென்பதே' (பாடல் 17) என்று பாடுகிறார். பிற தெய்வங்கள் யாவும் நாராயணனின் கலாமிசம் என்பதும், நாராயணனின் அடியார்களை மட்டுமே மதித்து, கடவுளராக வணங்குவோம் என்று உறுதிபடக் கூறுகிறார். இவ்வாறு, முதிர்ந்த மனநிலையில் வைணவ தத்துவ நடைமுறைகளை அவர் எடுத்துரைக்கிறார்.

கலியின் நிலை

இறையருளை உயிர்பெறவிடாது தடுக்கும் கலியின் நிலையை உயிர்க்குரிய தடைகளாகத் தண்டபாணி சுவாமிகள் காட்டுகிறார். உயிர் மனம் வாடுவதையும், உயிர் படும் துன்பம் கண்டு கலி நகுவதையும் காட்டுகிறார். அதனால் கலியை அறக் காய வேண்டும் என்று ஈசுவரனிடம் வேண்டுகிறார். 'கலியறக் காயின் அல்லால் உன தாளில் கலந்திடனே' (பாடல் 20) என்பதில் இறைவன் திருவடியை உயிர் அடைதலைக் கலி தடுப்பதையும், கலியை அறவே காயவேண்டியது இறைவன் கருணை எனவும் பாடுகிறார். உன் கருணை என்னிடம் படியவில்லை என்றால் தீய கலி நகுமே என்று பாடுகிறார். அப்படி கலி நகும்படி விடுவது அவனுடைய தலைமைப் பண்பிற்கு (ஸ்வாமித்துவத்திற்கு) இழுக்கு என்று பாடுகிறார். இதனைக் 'கருணை என் மட்டிலையேல் உனைத் தீய கலி நகுமே' (பாடல் 19) என்ற பாடலடி காட்டும்.

நெறி

இறைவன் திருவடிகளைப் பற்றாகக் கொண்டு பிரபத்தி செய்யும் சரணாகதியை அவனை அடையும் நெறியாகக் காட்டுகிறார். 'தாள் மலரே தஞ்சம்' என்பதில் இது வலியுறுத்தப்படும்.

தம்முடைய அறுவகைச் சமய நெறிக்கு ஏற்ற முறையில் நாராயணனை ஏகபாதமூர்த்தியாக வைத்து வைணவ தத்துவச் சிந்தனைகளைத் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளார். ஏகபாதத்தில் இவ்வளவையும் பாடுவது அருமை.

சுவாமிகளின் சமுதாயச் சிந்தனைகள்

ந. வேலுசாமி

'யான் பெற்றபேறு பெறுக இவ்வையகம்' என்ற பொதுநலம் பேணும் பண்பும், 'நாடெங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை' என்ற உள்ளச் செம்மையும் கொண்டவைதாம் சமுதாயச் சிந்தனைகள்.

அடியார்கள் பெரும்பாலும் இகவாழ்க்கையில் இருந்து கொண்டு எஞ்ஞான்றும் பரத்தைப் பற்றியும், பரம்பொருள் பற்றியுமே நினைந்து வாணாளைக் கழிப்பர். இது ஆன்மீகவாதிகளின் இயல்பு.

ஆனால் திருப்புகழ்ச் சுவாமிகள் என்றும், முருகதாச சுவாமிகள் என்றும், வண்ணச்சரபம் என்றும் திருப்பெயர்கள் பூண்ட தண்டபாணி சுவாமிகள் 1839 முதல் 1898 வரை வாழ்ந்து, ஆன்மீகத்தில் மட்டும் ஆழ்ந்து விடாமல் சமுதாயப் பிரக்ஞையிலும் ஈடுபாடு கொண்ட ஞானியாகவும் ஒளிவீசியுள்ளார் என்பது அவரது பாக்களாலும், நூற்பாக்களாலும் உய்த்துணர முடிகிறது.

இராமலிங்க அடிகள், வீரத்துறவி விவேகானந்தர், நாராயண குரு ஆகியோர் வரிசையில் வைத்துச் சுவாமிகளை எண்ணத் தோன்றுகிறது.

மரபு மீறிய மாஞானி

ஐம்பதாயிரம் பாடல்களை ஓலைச்சுவடிகளிலே எழுதி வைத்த தீரர்.

ஒரு பாடலைக் கொண்ட தனி நூல்களாகச் சுமார் 168 நூற்களைச் சுவாமிகள் இயற்றியுள்ளார். ஆய்வாளருக்குப் புதுமையும் மகிழ்ச்சியுமான ஓர் அனுபவம் இது. வகுப்பு, விநாயகர் வெண்பா, முருகன் திருப்புகழ், அம்பிகை வெண்பா போன்றவற்றை எடுத்துக்காட்டுக்களாகச் சுட்டலாம். இரு

பாடல்களைக் கொண்ட நூல், ஏழு பாடல்களைக் கொண்ட நூல், ஒன்பது பாடல்களைக் கொண்ட நூல் வகைகளும் இவரது ஆக்கத்தில் உண்டு.

சாத்திரம், தோத்திரம், காவியம் என்ற களங்களில் இறங்கிச் சாதனை நிகழ்த்தியதோடு, மருத்துவம், அரசாட்சி மொழி பெயர்ப்பு என்ற வாழ்க்கையின் யதார்த்தத்திற்குப் பயன்தரும் படைப்புக்களையும் உருவாக்கி உலவ விட்டுள்ளார்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் தொண்டாற்றிய மென்தொண்டர்.

ஆன்மீகப் பழமாகத் துலங்கினாலும், தமிழ்ப்பற்றும் தமிழன் என்ற உணர்வும் இவரை எவரெஸ்ட் சிகரத்தில் வைத்துப் போற்ற வைக்கிறது.

மறந்ததேன்?

கோவணாண்டியாகத் தோற்றம் தந்திருந்தாலும் தம் பின்னோர் பின்பற்றக் கூடிய கொள்கைக் குன்றாகக் காட்சியளிப்பதே சுவாமிகளின் தனித்த இயல்பாம்.

இத்தகைய அறிஞராகிய ஞானியாரைப் பற்றிய ஆய்வுகள் மிகவும் சொற்பமாகவே காட்சியளிப்பது வேதனை தருகிறது.

'தண்டபாணி சுவாமிகளின் கூற்றிருக்கைகள் என்றும்,

'தண்டபாணி சுவாமிகளின் அணியிலக்கணக் கொள்கை' என்றும் தான் ஆய்வுரைகள் வந்துள்ளனவே தவிர வேறு காண இயலவில்லை.

சமுதாயச் சிந்தனைகள்

தண்டபாணி சுவாமிகளை, அவரின் முன்னோடியான அருணகிரியருடன் ஒப்பிடும்போது அருணகிரியாரின் பாடல்களில் சந்தங்கள் அதிகமாக இருப்பதைப் போன்றே தத்துவங்களும் அதிகம்.

தண்டபாணி சுவாமிகளின் பாடல்களில் சமுதாயத்திற்கும், தனிமனிதனுக்குமான ஆக்கப்பூர்வமான சிந்தனைகளே மிகை. அவைதானே இன்று நமக்குத் தேவை? அவற்றைத் தாராளமாக வழங்கியிருக்கிறார் சுவாமிகள்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐவகை இலக்கணத்தோடு புலமை என்ற இலக்கணத்தையும் யாத்து அறுவகை இலக்கணம் என்றே பெயர் சூட்டியுள்ளார். ஐவகை இலக்கணம் என்று சொல்லித்திரிவதை மாற்றி அறுவகை இலக்கணம் என்ற மரபை ஏற்படுத்தினார். அனைவரும் தாய்நாடு என்று அழைத்து வந்தபோது மகாகவி பாரதி 'எங்கள் தந்தையார் நாடு' என்று புதுநெறியைப் புகட்டியதைப் போல ஏழாம் இலக்கணத்தையும் இவர் எழுத மறக்கவில்லை.

புலமையிலக்கணம் என்ற புதுமை இலக்கணத்தையும் படைத்தார். சிரவைக் கௌமார மடாலயமும், பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடமும் சுவாமிகளின் நூல்களைச் சமய இலக்கியமாக மட்டுமின்றிச் சமுதாய நோக்கிலும் ஆராய்ந்து வெளிப்படுத்தும் அரிய பணியில் ஈடுபட்டமை என்ற கருத்து ஈண்டு நோக்கத்தக்கது.

ஓர் ஆன்மீக இலக்கியவாதியாகிய தண்டபாணி சுவாமிகள், வருங்காலச் சமுதாயத்தினருக்கு எளிதில் பயன்படும் வண்ணம் புலவர் புராணம், அருணகிரிநாதர் புராணம் என்ற வாழ்க்கை வரலாற்றுக் காப்பியங்களையும் (Biographic Epic) குருபர தத்துவம் என்ற தன்வரலாற்றுக் காப்பியத்தையும் (Auto-Biographic Epic) யாத்திருப்பது நோக்கத்தக்கது.

'இம்மி' (அளவு) என்பதையும் 'சங்கம்' என்பதையும் மக்கள் வழக்கத்தில் புழக்கத்தில் இருப்பதைத் தனது நூற்பாவில்

'அலகு இனத்து இம்மி ஆதிய கீழும்
சங்கம் ஆதிய மேலும் தள்ளிடல்
உருவிலா ஓசையாம் என உணர்ந்தே'

(அறுவகை இலக்கணம் பக். 65)

கீழ் அலகுகளில் இம்மி முதலிய மிகமிகச் சிறிய பின்னங்களையும், மேல் அலகுகளில் சங்கம் போன்ற மிகமிகப் பெரிய எண்களையும் அவை தமக்கே உரிய தனியான வரிவடிவங்களற்ற வெறும் ஓசைகள் என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து மக்களின் வழக்காற்றினை அறிந்து வைத்திருக்கும் பான்மை அவரது சமூகப் பார்வையைப் புலப்படுத்துகிறது.

கற்பனை என்பது இலக்கியத்திற்கு – உணவிற்கு உப்புபோல் இல்லறத்திற்கு ஊடல் போல் அளவாக இருக்க வேண்டுமேயன்றி

இயற்கையிரந்த கற்பனை கலைக்குதவாது என்று அணியிலக்கணத்தில்

கற்பனை மீதொரு கற்பனை கூறுதல்
இயல்பு எனக் காண்கிலம்

(அறுவகை இலக்கணம் பக். 419)

என்று அறுதியிட்டுரைப்பதைக் காண முடிகிறது. இவ்வரிகளில் கலை கலைக்காகவேயல்ல, கலை வாழ்க்கைக்காகவே என்ற குரல் ஒலிப்பதை உணர முடிகிறது.

மருத்துவம் போன்ற அறிவு நூல்களை நல்ல காவியங்களை எழுதிய பின்பே எழுத வேண்டும். எடுத்த எடுப்பிலேயே எழுதினால் குற்றப்படும் என்பதை

''காவியநிலைகளும் கண்டு தேறி
நூலினம் பகர்வது நுண்ணிமையாமே''

(அறுவகை இலக்கணம் பக். 455)

என்று குறிப்பிடுவதில் மக்கட் சமுதாயத்திற்கு அறிவு கொளுத்துவதில் சுவாமிகளுக்கு உள்ள அக்கறை புலப்படுகிறது.

அதுமட்டுமோ? மனிதர்கள் குறிப்பாகப் புலவர்கள் காகங்கள் போல் பகுத்துண்டு கூடி வாழ வேண்டுமேயன்றி நாய்கள் போல் ஒன்றை ஒன்று வெறித்துப் பிரியக் கூடாது என,

காகப் புள் என இனைத்தொடு கலவாது
ஞாளி போற் பகைக்கும் நாவலர் பலரே

(அறுவகை இலக்கணம் பக். 467)

கூறுவது குறிப்பிடத் தக்கதாகும்.

இன்றைக்கு மஞ்சள் பத்திரிகைகளும், மஞ்சள் பிரசுரங்களும் நச்சு, நசிவு இலக்கியங்களும் சமுதாயத்திற்கு நாளும் செய்து வரும் தீங்குகளை நூறாண்டுகளுக்கு முன்பே சமூகப் பிரக்ஞையுடன் எதிர்த்து ஒதுக்கியுள்ளார். தமது புலமை இலக்கணத்தில்,

''காமக்கடலே கதி எனக் கருதிப்
போவார் புலமையிற் புண்ணியம் இன்றே''

(அறுவகை இலக்கணம் பக். 473)

என, தம் தமிழ்ப்புலமையை வெளிக் காட்டக் காமச் சுவையை மிக விரித்தும், பச்சையாகவும் கொச்சையாகவும்

பாடுதலே சிறந்த நெறியாகும் என நம்பி, அவ்வழியில் ஈடுபடு வோரின் புலமையில் அவர்களுக்கோ, நாட்டுக்கோ, மொழிக்கோ சற்றும் ஆக்கபூர்வமான பயன் இல்லவேயில்லை என்று கூறி யிருப்பது ஒன்றே, மானிட சமுதாயத்தின் மீது வைத்திருந்த நல்லெண்ணத்தைப் பறைசாற்றும்.

இவற்றோடு தண்டபாணி சுவாமிகள் நின்றாரா? இல்லை. காலத்தோடு ஒட்டிவாழவும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே'

என்ற கடைசி நன்னூல் நூற்பாவும், 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவில்லாதார்' என்ற குறளும், சுவாமிகள் கூறும் கூற்றில் உள்வாங்கியுள்ளன எனக் கருதும் நிலை உளது.

'காலவேற்றுமை கருதாப்புலவன்
சிலனே எனினும் சிறுமையினனே'.

(அறுவகை இலக்கணம் பக். 478)

என்று மாறிவரும் காலப்போக்கின் இயல்பைச் சிந்தித்துப் பார்க்காத கவிஞர் சிறப்புடையவனாக இருந்த போதிலும் உலகின் அன்றைய சிந்தனையை உணராதவர் என்னும் குறையை உடையவர் ஆகிறார் என்று குறிப்பிட்டிருப்பது ஆழ்ந்த கவனத்திற்குரியது.

கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும், சமய பேதவாதச்சார்பற்ற பொதுநெறிக் கொள்கையையும், தெய்வ வடிவம் பல எனினும் பொருள் ஒன்றே என்பதையும் நிலை நிறுத்தி 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமந்திர நெறியை நினைவுபடுத்துவதும் நெஞ்சில் பதிக்கத்தக்கனவாகும்.

''ஐந்தே இலக்கணம் என்று ஆயிரம் பேர் வறல் கண்டும்
செந்தேன் என்று ஆறுவிதம் செப்புவிப்பது''

''எளிதான செயல்அல்ல, அதைச் செய்து காட்டினார் தண்டபாணி சுவாமிகள்.

தாய்மொழிக்கு உயர்மொழி தரணியில் உளது எனின்
வெகுளியற்று இருப்போன் வெறும் புலவோனே''

என்ற சாட்டை அடியும்,

''தமிழுக்கும் தனக்கும் சார்தரு நெறிக்கும்
தன் இனத்தினர்க்கும் தவறு உறா வண்ணம்
முயல்வோன் புலமை முதன்மைத்தாமே''

என்று நெற்றியடியும் கொடுத்து மகாகவி பாரதியைப் போல் மொழியுணர்வு ஏற்றுகிறார்.

இவற்றோடு அவர் நிற்கவில்லை. தமிழைத் தாழ்த்தும் ஒரு தெய்வம் உண்டெனில் அது தெய்வமே அல்ல, பேயை விடத் தாழ்ந்தது என்றும் தீர்ப்பளிக்கிறார்.

''தமிச்சுவை அறியாத் தெய்வம் உளது எனில் அஃது அலகையில் தாழ்வு எனில் அறமே'' என்பதே அத்தீர்ப்பு. சமுதாயச் சிந்தனைகளை ஆன்மீகத்தில் குழைத்துத் தந்த தண்டபாணி சுவாமிகளின் எழுத்துக்கள் வெறும் எழுத்துக்கள் அல்ல, சமுதாய இருளகற்றும் விளக்குகள் என்பதே உண்மை.

கணபதி ஆயிரம்

ம. ஷீலா

முன்னுரை

விநாயகரைப் பரம்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட நூல் 'கணபதி ஆயிரம்'. இது பெயருக்கேற்றாற் போல் ஆயிரம் பாக்களையுடையது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகள் பதிக வகையிலான நூறு பத்துக்களாக இந்நூலை யாத்துள்ளார். இந்து சமயத்தின் உட்பிரிவான காணாபத்தியம்சார்ந்த இந்நூலில் கணபதியின் உருவம், புராணக் கூறுகள், அருள் மற்றும் மறச்செயல்கள், கணபதி தமக்கு அருள்புரிந்தவை, தம்வேட்பு, வேண்டல் போல்வனவற்றை நயமுற சுவாமிகள் விளக்கியுள்ளார். அதனைப் பற்றி இங்குக் காண்போம்.

சுவாமிகளும் காணாபத்தியமும்

காணாபத்தியம், கௌமாரம், சௌரம், வைணவம், சாக்தேயம், சைவம் என்பன முறையே கணபதியையும், முருகப் பெருமானையும், சூரியனையும், திருமாலையும், சக்தியையும், சிவபெருமானையும் முழுமுதல் பொருள்களாக வணங்கும் வணக்கமுறைகளாம். (வேங்கடவன், 1995 பக். 5-6) பரம் பொருள் ஒன்றே; அதனையடைய முயலும் வழிகளே வேறுவேறு எனும் நிலையில் ஆதிசங்கரர் இவ்வழிபாடுகள் யாவற்றையும் இந்துமதத்தில் இணைத்தார். காலத்தின் கட்டாயமான இந்நிலை பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் மீண்டும் எழுந்தது. ஆங்கில வருகை, ஆட்சி, கல்வி மற்றும் கிறித்தவ மதமாற்ற நிலை களால் அறிஞர் கருத்து இத்திசையில் திரும்ப பலரும் இந்துமத சமரசம் செய்யத் தொடங்கினர். மக்களை எளிமையாக சென்று சேரும் நிலையில் பாடல்களாகவும், உரைநடைகளாகவும் நூல்கள் யாத்தனர். தாயுமானவர், இராமலிங்கர் போன்றோரின் சமரச சன்மார்க்கமும், வேதநாயகம் பிள்ளையின் 'சர்வசமய

சமரச கீர்த்தனைகளும்' (1867), மனோன்மணியம், சுந்தரம் பிள்ளையின் 'பொதுப்பள்ளியெழுச்சியும்' (1893), ஆறுமுக நாவலரின் 'இந்துமத இணைப்பு விளக்கமும்' (1963) இதற்குச் சான்றுகளாகும்.

தண்டபாணி சுவாமிகளோ இவர்களிடமிருந்து மாறுபட்ட வராய் இப்பிரச்சனையை அணுகக் காணலாம். அறுவகைக் கடவுளருடன், பொதுவான பரம்பொருள் பற்றியும் பேசுகின்றார். ஞாயிறு – சூரியன், திங்கள் – சிவன், செவ்வாய் – சக்தி, புதன் – வைணவம், வியாழன் – கணபதி, வெள்ளி – குமரன், சனி – பொதுக்கடவுள் என வாரத்தின் ஒவ்வொரு கிழமை களையும் ஒவ்வொரு கடவுளர்க் குரியதாக்கி ஒவ்வொருவருக்கும் ஆயிரம் பாடல்கள் பாடியுள்ளார். இதுவே 'ஏழாயிரப் பிரபந்தமாம்'.

'ஒலியிலந்தாதி', 'பேரொலியிலந்தாதி', 'தியானானுபதி (1965). எழுபா எழுபஃது (1971), 'ஏகன் எழுபது (1980) என்பனவும் இப்பாடுபொருள்களைப் பற்றியதேயாம். இந் நூல்கள் யாவற்றையும் பற்றிய ஆய்வுடனேயே 'கணபதி ஆயிரம்' பற்றிய ஆய்வு முற்றுப் பெறும் என்றாலும், நூல்கள் கிடைக்கப்பெறாமை மற்றும் காலச்சுருக்கம் கருதி இங்கு தனித்து நோக்கப்படுகின்றது. இவ் இலக்கியக்கடலின் ஒருபகுதி யாகவே இவ்ஆய்வு அமைகின்றது.

விக்கினங்களை தீர்ப்பவர்; செயலுக்கு முன்வணங்கப் படுபவர் என்னும் பெருமைக்குரியவர் கணபதி. அப்பர் பாடல் களிலேயே முதன் முதலாக கணபதி பற்றிய குறிப்பு வருகின்றது. ஐந்தாம் நூற்றாண்டில் தமிழகத்தில் கணபதி வழிபாடு பரவத் தொடங்கி ஏழாம் நூற்றாண்டில் பெருமளவில் பரவத்தொடங் கியது. (ந. கலியாண சுந்தரம், 1994, ப. 15) வாதாபியிலிருந்து சிறுத்தொண்டர் கணபதி நிலையைக் கொண்டு வந்தபின்பே கணபதி வழிபாடு பரவத் தொடங்கியது என்பது பிழையான கருத்தே என்கிறார் வீரபத்ரன் (மேற்படி,ப.14).

கணபதி ஆயிரம்

பரம்பொருளாய கணபதியின் உருவம் செயல்கள், வாகனங்கள், சுவாமிகளுக்கு அருளியமை, மற்றும் அவர்தம்

துயரங்கள், வேண்டுதல்கள் போல்வனவும் இதன் கூறுகளாக வருகின்றன.

கணபதி ஆயிரமும் கணபதியும்

கணபதியின் பரம்பொருள் நிலை, உருவம், செயல்கள், புராணக்கூறுகள் போல்வன இதிலடங்கும்.

பரம்பொருள்

எல்லையற்ற ஆற்றலும் அருளுமுடையவர் கணபதி; யாவுமாகி நிற்பவன்; நிகரில்லா இயல்புடையவன், 'அவன் அவள் அது' வாக நிற்பவன் (812:1); 'ஆதி நாயகனே தானெனத் தெரிவிக்கும் ஆனைமா முகத்தன்' (773:2) 'சித்திக்கும் முத்திக்கும் வித்தாகி நின்றதோர் செங்களிறே' (535:4); 'பிறப்பறுக்கும் பெருமான்' (514:2); தேநீர் பொழிவதன் மூலம் உயிர்களின் மலமழிப்பவன் (251:1): உணர்வுடையார் போற்றும் தெய்வமும் விநாயகனே (822:1).

தன்னை நாடியவர்க்கும், பணிவார்க்கும் அருள்பவன்; ஔவையை விரைந்து கைலாயம் கொண்டு சேர்த்தது (400); இந்திரனுக்கும் அகத்தியருக்கும் நதிநீர் வழங்கியமை (798:1–2) போல் இதற்குச் சான்றாகும். அல்லவை செய்து துயர் செய்வாரை ஒறுத்துத் தண்டிக்கும் இயல்புடையவனாகவும் கணபதி விளங்குவதைத் தன் கொம்பால் பகையளிக்கும் செயலைக் கூறுகின்றார் (796:1–2) பரம்பொருள் எனும் நிலையில் வேண்டுவார்க்கு வேண்டுவ அளிக்கும் நிலையை, 'சங்கரர்புத்திரர்' (816:4);

"சிவத்துடன் அருட்பரை சேர்ந்த ஆதிநாள்
நவத்தலை மதலையா நண்ணும் நாகமே" (க.ஆ.821:1–2)

என்னும் கூற்றுகள் தெளிவாக்கும். தாயும் தந்தையுமானவன் இவ்விநாயகன். (80631) பக்தர்க்கு அருள்புரிய விரைந்து வரும் எளியன்.

"எல்லவரும் முதற்போற்றச் சந்தி தோறும்
எந்நகரினும்குலவும் யானைக் கன்றே" (க.ஆ. 523:1)

என்னும் மொழிகளால் கணபதியின் பரம்பொருள் நிலையினைச் சுட்டுகின்றார்.

தோற்றப்பொலிவு

பரம்பொருளாய கணபதி சடாதாரி என்பதை பிள்ளையார்ப் பட்டிக் கோவில் விளக்கும். கொன்றை, அறுகு சூடிய சடையன், ஐந்து கரங்களை உடையான் (1:3-4); யானை முகத்தன் (2:4); முக்கண்ணன் (497:4); நுதில் கண்ணன் (825:2); செம்பவளப்பனை போலும் துதிக்கை (11:3) யன்;

''ஒருமருப்பால் ஒன்னலர்தம் உயிர்குடித்து மற்றொன்றாற்
திருமருவு பாரதப்போர் சிறப்பெழுதும் சிந்துரமே!''
(க.ஆ.548:1–2)

என தந்தங்களுடைய நிலையினையும் கூறுகின்றார்.

''மழைபுரை மதங்கள் மூன்றும் வார்தர மனத்துள் வந்த
தழைசெவிப் பெருமான் ...' (க.ஆ.815:3–4)

'பன்னப்பூ ணொடுநாவற் பசும்பொன்னும் புனைந்தாடும், முன்னவனே' (4:3-4), 'தெவைப்படும் வெண்தோட்டோர் செழும்பவளக்கிரி போல்வாய்' (10:3) இத்தகைய உருவப் பொலிவினையுடையவன், ''வானவர் மானிடம் மிருகம்வன்குறள்'' (823:1) எனும் நான்குருவும் ஒன்றாயமைந்த கோலமுடையான். சித்திபுத்தி வல்லவையெனும் (376:1) மூன்று அம்பிகையினரை துணையாகவுடைய கணபதி; பெருச்சாளியினையும் (32:4), பரியினையும் (545:2–1) ஊர்தியாக உடையான். சிவன்போல் நடனமாடும் கோலமுடையான் (804:1)

திருவிளையாடல்கள்

இறைவன் உயிர்கள் மீது கொண்டுள்ள அருளே அருளிச் செயல்களாக மலர்கின்றன. இது உயிர்களின் துயர் போக்கு விலையிலும், அவர்கட்கு நல்லன, இனியன அருளும் நிலையிலும் அமையலாம். விநாயகர் பரம்பொருளே எனும் நிலையில் சிவபெருமானின் உருவ நிலைகள், செயல்கள் போல்யனவும் கணபதியின் அருளிச் செயல்களாக 'விநாயக விஜயம்' கூறுகின்றது 'கணபதி ஆயிரமும்' இதனையே மொழிகின்றது.

பிறையணிதல் (797:1–2) யானைமுகம் (829:1–2) நெற்றிக்கண் (535:3–4) உந்தியில் பாம்பணிதல் (323:1) படைக்கலன்களை ஏந்தல் (494:3–4) பெருச்சாளி (32:4) பரியினை (506:1–2) ஊர்தியாக ஏற்றல், முத்தேவியருடன் இருத்தல் (835:1–2);

அரிக்கு சக்கரப் படையினை வழங்கல், (234:1); முப்புரம் எரிக்க துணைசெயல்; கொம்பு ஆயுதமாகவும் (796:1–2) பாரத கதை எழுதவும் பயன்படல் (507:1–2); இந்திரன், மற்றும் அகத்தியர்க்கு நதியினைவழங்கல் (398:3–4); வள்ளியை மணம்புரிய துணைபுரியல் (529:3-4); ஔவை விரைந்து கயிலை செல்ல உதவுதல் (830:1–2); நடனமிடல் (814:1–2); தவத்தின் பலனாய் சக்திக்கு மகனாகப் பிறத்தல் (541:1–2) போல்வன கணபதியின் திருவிளையாடல் களாகவும், உயிரிகட்களுள் புரியும் செயல்களாகவும் வருகின்றன.

தண்டபாணி சுவாமிகளுக்கு அருளியமையும் வேண்டலும்

ஒவ்வொரு வியாழக்கிழமையும் பதிகங்களாகப் பாடப்பட்ட பாக்களாதலின், தனித்தனிப் பாடுபொருள்களாய் அமையினும் தமக்கு அருளியமை, தற்போதைய துயர், காம மயக்கங்கள் நீக்க வேண்டுதல், தம் எளிய நிலை கூறி இரங்கல் எனும் நிலைகளிலேயே இவையாவும் வருகின்றன.

புராணக் கூறுகளைச் சுட்டி அருள் புரிய வேண்டும் நிலையும் உண்டு. வள்ளியை மணம்புரியும் பொருட்டு, கானகத்தில் ஆனையாக வரவேண்டிய போது துணைபுரிந்தமை (399:3–4); ஔவைக்கருள்புரிந்தமை (550) போல்வன முறையே ஒவ்வொரு பத்துக்களின் ஒன்பதாம், பத்தாம் பாடல்களாய் வந்துள்ளன. இது கணபதியின் முந்துற்று உதவும் பான்மையை விளக்கும் நிலையில் 'எமக்கருள்வாய்' எனும் பொருளுக்காக வருகின்றது.

ஒவ்வொரு ஒன்பதாம் பாடலிலும் இந்திரன் மற்றும் அகத்தியருக்கு நதிநீர் வழங்கிய அருள் செயல் கூறப்படுகின்றது நதிநீர் இறைவன் அருள்வேட்டலாகவும் (498), தாம் வெட்டிய பாறை கிணற்றில் நீர் பெருகச் செய்யும் வேட்டலாகவும் (18) ஒலிக்கின்றது.

இளம்வயதில் கனவில் தோன்றி தம் நெற்றியில் நீறிட்டு வாழ்த்திய செய்தியும் பலவிடங்களில் சுட்டப்படுகின்றது. (502:3-4), (814:3–4), அன்று துணை நின்றவன் இன்று துயருறும் வறுமை (323:3–4) அருள்வேல் என்று கூறியது மறந்தாயோ? (63:1–2) எனும் நிலைகளில் விரைந்துதவ வேண்டும் நிலையில் இக்கூறு வருகின்றது.

முருகப்பூசனையால் விளைந்த கடன்தீர்க்க செல்வர்களை நாடி இரந்தமையையும் (796:3-4) தமிழ்பா கூறியும் ஈயாத அவர்களின் நிலையினையும் இரக்கும் இழிநிலைக்கு ஆளாக்கி விட்டாயே (796:3–4) காத்தருளக் கூடாதா என இரங்கும் நிலையினையும் இவற்றில் காண்கின்றோம்.

காம மயக்கங்களை என்னிடமிருந்து நீக்கல் வேண்டும் என்னும் நோக்கினையும் (523:2–4), (840:1–2) நாம் சுவாமிகளின் வேண்டுதல்களில் வரக் காணலாம். காமத்தினைத் தூண்டும் மாரனை அடக்கும் ஆற்றலுடையவன் நீயே யாதலின் அவனை வெல்லும் வலிமையை தரவேண்டும். (507:3–4) எனும் பாங்கு இக்கூறில் அமைகின்றது.

கணபதியினை வேண்டும் நிலைகளில் எல்லாம், சிறுவயதில் அருள்புரிந்த நீ, தற்போதைய வாழ்வின் கூறுகளில் உன்னை நம்பியிருக்கும் எனக்கு உதவாமல், பிறரின் எள்ளலுரைகளுக்கும், கேலிப்பேச்சுகளுக்கு உரியவனாக்குவதும் முறையோ? (514:3–4) எனும் நிலைகளிலே அமையக் காணலாம்.

வழிபடு நிலை

கணபதியை வழிபடும் பாங்குபற்றியும் சுவாமிகள் ஆங்காங்கு கூறிச் செல்கின்றார். தேங்காய் உடைத்தல், சதுர்த்தியன்று நோன்பு நோற்றல் (36); பாடல் புனைந்து பாடல் (40:2); மற்றும்;

'மணங்கொள் பூச்சொரித் துண்டிகள் பலபல
வகைப்பட எதிர்சேர்த்தி
இணங்கு தூபதீபம் கொடுத் துனைத்தொழும்
ஏற்றமென் றருள்வாயோ''. (க.ஆ.416:1–2)

என தூப தீப வழிபாடு பற்றியும்;

''அன்னம் மோதகம் தோசையெள் ளுண்டைபச்
சரிசிமுக் கனிதேங்காய்
கன்ன லொப்பன மொக்குநால் வாய்ப்பெரும்
கரிமுகப் பெரியோனே''. (க.ஆ.417:3–4)

என நைவேத்தியப் பொருட்களின் வழிபாடு பற்றியும் பேசுகின்றார்.

முடிவுரை

பரம்பொருள் எனும் நிலையில் ‘கணபதி ஆயிரம்’ பாக்களின் ஒவ்வொரு கூறும் அமையக் காணலாம். தமிழகத்தில் ஐந்தாம் நூற்றாண்டே கணபதி வழிபாடு பரவியுள்ளது. சங்கரனுக் குரியனவாக்கப்பட்ட அணிகள், வாகனம், நடனம், உருக நிலைகள், செயல்கள் போல்வன யாவும் கணபதிக்காக்கப் பட்டுள்ளன. இவர் முப்பெருங்கடவுளரும் வணங்கும் நிலையில் சந்திகள் தோறும் முதல் பூசைக்குரியவராக உள்ளார். தண்டபாணி சுவாமிகள் வாழ்வின் நிகழ்வாய கணபதி கனவில் அருளியமை கூறப்படுவதுடன், வறுமை மற்றும் வாழ்க்கைத் துயர் நீங்கவும் கிணற்றில் நீர் பெருகவும் வேண்டல்; மற்றும் பதிக இயல்பிற்கேற்ப எட்டாம், ஒன்பதாம், பத்தாம் பாடல்கள் முறையே இந்திரன் அகத்தியருக்கு நதி வழங்கியது; வள்ளியை மணம் புணர குமரனுக்கு உதவியது; ஔவை கயிலை செல்ல உதவியது போல்வன வரும்படியும் பாடியுள்ளார். பதிகத்தின் ஒவ்வொரு பாக்களிலும் இறுதி அடியில், சொல் அல்லது ஒரே தொடர்கள் வரும்படியும் ‘கணபதி ஆயிரம், அமைகின்றது.

துணை நின்ற நூற்கள்

1. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், **கணபதி ஆயிரம்**, ஸ்ரீதேவி கருமாரி தாச சுவாமிகள் (ப.ஆ), 1984, உலகத் தமிழ்க்கல்வி இயக்கம், 33, திருமலைநகர் இணைப்பு, பெருங்குடி, சென்னை–96.

2. கழகப்புலவர் குழுவினர், **கழகத்தமிழகராதி**, 1974 திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1/140 பிரகாசம் சாலை, சென்னை–1.

3. கோ. மோகனரங்கன், **தமிழ்க்கவிதைகளில் சந்த அமைப்பு–வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார்**, 1991, வசந்தா பதிப்பகம், 21, தருமராசா கோயில் தெரு, ஆலந்தூர், சென்னை–16.

4. ந. சுப்பிரமணியன், **விநாயக விஜயம்**, 1992, தி லிட்டில் பிளவர் கம்பெனி, 43, ரெங்கநாதன் தெரு, தியாகராயநகர், சென்னை–17.

5. வேங்கடவன், **வினைதீர்க்கும் விநாயகர்**, 1995, யமுனா பிரசுரம், ராஜபாதர் தெரு, தி. நகர், சென்னை–17.

6. ந. கல்யாண சுந்தரம் **தமிழ்நாட்டில் கணபதி வழிபாடு**, 1994, திருக்குமரன் பதிப்பகம், 66, சபாபதி தெரு, திருச்செந்தூர்.

அறுவகையிலக்கணத்தில் உயிர்மெய்யெழுத்துக்கள்

த. ஜெய பிரேமா

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் பெரியார்களுள் ஒருவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆவார். இவர் எண்ணற்ற தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். இவர் தம் நூல்கள் அச்சிலும், ஓலைச்சுவடியிலும் தலைசிறந்து விளங்குகிறது. அவற்றுள் ஒன்றே 'அறுவகையிலக்கணம்' என்னும் இலக்கண நூலாகும். இவ்விலக்கணநூல் தமிழ்மொழியின் சிறப்பினை நிலைநாட்டி நிற்கிறது. அறுவகை இலக்கணத்துள் எழுத்திலக்கணம் என்னும் முதல் பகுதியின் மூலம் உயிர்மெய்யெழுத்துக்கள் பற்றிய குறிப்புக்களை நோக்குவதோடு, அவற்றை நன்னூல் என்னும் இலக்கண நூலோடும் இக் கட்டுரை ஒப்பிட்டுப் பார்க்கிறது.

அறுவகை இலக்கணம்

எழுத்து, சொல், பொருள் என மூவகை இலக்கணம் வகுத்தார் தொல்காப்பியர். பின்னாளில் அவர் வகுத்துரைத்த பொருளதிகாரத்தின் அங்கமான யாப்பையும், அணியையும் சேர்த்து ஐந்திலக்கணமாக இலக்கணம் பொலிவு பெற்றது. இந்த ஐந்திலக்கணத்துடன் ஆறாவதாக 'புலமையிலக்கணம்' என்ற ஒன்றைச் சேர்த்து அறுவகையிலக்கணம் என்னும் நூலை தண்டபாணி சுவாமிகள் இயற்றினார்.

அறுவகையிலக்கணம் என்னும் நூலில் முதலாவதாக எழுத்திலக்கணம் என்ற பகுதி காணப்படுகிறது. இப்பகுதியில் மூன்று இயல்புகள் அமைந்துள்ளன. முதலிரண்டு இயல்புகளில் உயிர்மெய்யெழுத்துக்களைப் பற்றி விளக்குகிறார்.

ஓசை மட்டுமல்லாது வடிவும் கொண்டு உயிர்மெய்யெழுத்துக்கள் திகழ்கின்றன. இவ்வெழுத்துக்கள் முதலிரண்டு இயல்பு

களில் வந்துள்ள நிலைகளைக் கீழ்க்கண்டவாறு வகைப் படுத்தலாம் அவை, உயிர்மெய்யெழுத்துக்களின் தொகை, உயிர்மெய்யெழுத்துக்களின் வரிவடிவும், ஒலிப்பு முறையும், உயிர்மெய்யெழுத்துக்களின் ஒலி நிலை, உயிர்மெய்யெழுத்துக் களின் இன நிலை, உயிர்மெய்யெழுத்துக்களின் தெய்வ நிலை, என ஐந்தாகப் பிரிக்கலாம்

நன்னூல்

தமிழ் இலக்கண நூல்களில் தொன்மையும் முதன்மையும் வாய்ந்தது தொல்காப்பியம். அதற்குப் பின்னர் எழுந்த இலக்கண நூல்களில் ஒன்று நன்னூல். நன்னூலின் ஆசிரியர் பவணந்தி முனிவர். அதில், இன்று வழக்கில் எழுத்து, சொல் என இரண்டு அதிகாரங்களே உள்ளன. பிற அதிகாரங்கள் அழிந்து போயின. எழுத்ததிகாரத்தில் அமைந்த எழுத்தியலில் உயிர் மெய்யெழுத்துக்களைக் குறித்து நன்னூலார் தரும் கருத்துக்கள் பின்வருமாறு பிரிக்கப்படுகின்றன. அவை, உயிர்மெய்யெழுத்துக் களின் தொகை, உயிர்மெய்யெழுத்துக்களின் ஒலிப்பு முறை உயிர் மெய்யெழுத்துக்களின் ஒலி நிலை, உயிர்மெய்யெழுத்துக்களின் இன நிலை என நான்காகப் பகுக்கலாம்.

தண்டபாணி சுவாமிகள், உயிர்மெய்யெழுத்துக்களின் தொகையை,

"......உயிர்மெய் யாம்இவை இருநூற்று
ஒருபதிற்றாறு அலகுடைமை" (எழுத்து - 4)

என்று நூற்பா வழி உயிர்மெய்யெழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறு என்று சுட்டுகின்றார்.

நன்னூலார் எழுத்தை முதலெழுத்து, சார்பெழுத்து என இரண்டாகப் பகுப்பார். பின்னர் சார்பெழுத்தை விரிவாகக் கூறும்போது உயிர்மெய்யெழுத்துக்களின் தொகையைக் குறிப்பிடுகின்றார்.

"உயிர்மெய் யிரட்டுநூ ற்றெட்டு" (நன். எழுத்து - 61)

என்ற சூத்திரத்தில் உயிர்மெய்யெழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறு எனக் குறிக்கின்றார்.

உயிர்மெய்யெழுத்துக்களின் வரிவடிவும் ஒலிப்பு முறையும்

வருக்க இனத்தின் அடிப்படையில் உயிர்மெய்யெழுத்துக்களின் வரிவடிவத்தையும் ஒலிப்பு முறையையும் பதினெட்டு நூற்பாக் களின் வழி விளக்கிச் செல்கின்றார்.

''இருசுழி எழுதா ஈகாரத்(து) ஈறு
பற்றி, இடவரை அடிசுழி யாததன்
இடம்சிறி திடம்பட மேல்நோக்கி, வலமா
நடுவளைத்(து) அவ்விரு வரைக்குறுக் கேற்றி,
மேல்வரை யளவிற் கொணர்ந்து, கீழ்ஒரு
தோட்டியில் வளைக்கில் ககரம். அதன்வலம்
முற்பகர் குறியுறில் காஆம்'' (எழுத்து – 18)

''அடிநாக் கொடுமிட நடைத்தொலிப் பனவே''
(எழுத்து – 18)

இந்நூற்பாவில் ககர காகரம் மட்டுமின்றி கௌகாரம் வரையுள்ள ககர வருக்க எழுத்துக்களின் வரிவடிவத்தையும், ஒலிப்பு முறையையும் ஒரே நூற்பாவில் விளக்கிச் செல்கின்றார் ஆசிரியர்.

அதைப் போன்றே 'னௌ'காரம் ஈறாக உள்ள இருநூற்றுப் பதினாறு எழுத்துக்களுக்கும் வரிவடிவத்தையும் ஒலிப்பு முறையையும் சுட்டுகின்றார் தண்டபாணி சுவாமிகள்.

நன்னூலார் உயிர்மெய்யெழுத்துக்களின் ஒலிப்பு முறையை மட்டும் தருகின்றார். ஒலிப்பு முறையை 'பிறப்பு' என்று சுட்டு கின்றார். எட்டு சூத்திரங்களில் ககர முதல் னகரம் வரை உள்ள எழுத்துக்களின் பிறப்பைக் கூறுகின்றார்.

''கஙவும் சஞவும் டணவு முதலிடை
நுனிநா வண்ண முறமுறை வருமே'' (நன் – 79)

என்ற சூத்திரத்தில் க, ங, ச, ஞ, ட, ண முதலிய ஆறு எழுத்துக் களின் ஒலிப்பு முறையைத் தருகிறார். அதைப் போன்று 'ன' கர இறுவாயுள்ள பிற எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் குறிப்பிடுகின்றார்.

உயிர்மெய்யெழுத்துக்களின் ஒலி நிலை

எழுத்திலக்கணத்தின் இரண்டாவது இயல்பான நிலை இயல்பு பகுதியில் உயிர்மெய்யெழுத்துக்களின் மாத்திரை அளவை தண்டபாணி சுவாமிகள் விளக்குகின்றார். உயிர் எழுத்துக்களின்

மாத்திரை அளவே உயிர்மெய்யெழுத்துக்களுக்கும் மாத்திரை யாம். அதாவது, 'உயிரும் மெய்யும் கூடி ஒலிக்கும் முறையே கூட்டி உச்சரித்தால் மெய்யின் மாத்திரையும் உடன் தோன்றும்; அங்ஙனம் உச்சரிக்காமல் உயிரின் மாத்திரை மட்டுமே உச்சரிக்க வேண்டும் என்பது வண்ணச்சரப சுவாமிகளின் கருத்தாகும். மெய்யெழுத்துக்கு அரை மாத்திரை என்கிறார்.

''ஒற்றொ(டு) உயிர்கலந் துயிர்மெய் ஆயினும்
அவைஉயி ரொலியன வாகும்மாத் திரையே''
(எழுத்து – 62)

என இயம்புகின்றார்.

நன்னூலார் உயிர்மெய்க்கென்று தனியாக மாத்திரை சுட்ட வில்லை. அதாவது ஒரு சூத்திரத்தில் 'மூன்றுயிரளபு' – (நன்–99) என்று சுட்டியதால் உயிர்மெய்க்கு மாத்திரைக் கூறவில்லை என்கிறார். இங்கும் உயிரெழுத்துக்களின் மாத்திரை அளவைச் சுட்டலாம் என்பது கருத்து.

உயிர்மெய்யெழுத்துக்களின் இன நிலை

தண்டபாணி சுவாமிகள் உயிர்மெய்யெழுத்துக்களுக்கு இனம் சுட்டுகின்றார். மெய்யெழுத்துக்கள் பதினெட்டை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்றாக இனப்பாகுபாடு செய்து அவற்றிலேயே உயிர்மெய்யெழுத்தையும் சேர்த்து ஓரினமாகச் சொல்கின்றார்.

''கசடதபற என்(று) இரு மூன்றெழுத்தும் அவ்
வருக்கமும் வல்லின மாமெனல் வழக்கே'' (எழுத்து 89)

என்ற நூற்பாவில் வல்லினத்தைக் கூறுகின்றார். இங்கு 'வருக்கம்' என்பது க முதல் கௌ, ச–சௌ, ட–டௌ, த–தௌ, ப–பௌ, ற–றௌ முதலியன அடங்கும். இதைப் போன்றே மெல்லினமும் இடையினமுமாம்.

உயிர்மெய்யின் இனத்தை மூன்று சூத்திரங்களில் குறிக் கின்றார் நன்னூல் ஆசிரியர். அவை, வல்லினம், மெல்லினம், இடையினம் என்பனவாகும்.

''வல்லினம் கசடதபற வெனவாறே'' (நன்–68)

இதைப் போன்றே மெல்லினத்தையும், இடையினத்தையும் சுட்டு கின்றார் நன்னூலார்.

உயிர்மெய்யெழுத்துக்களின் தெய்வ நிலை

அண்ட சராசரங்களிலெல்லாம் இறைவன் நிறைந்திருக்கின்றான். அவனன்றி ஓரணுவும் அசையாது. எழுத்துக்கள் ஆதியில் இறைவனிடத்தே தோன்றின. இப்படிப் பல பெருமைகளை உடையது தெய்வத்தின் நிலையாகும். உயிரில் உருவத்துடன் தெய்வ நிலையைச் சுட்டும் ஆசிரியர் ஒற்றில் (மெய்) அருவமாகப் புகுந்து செல்லும் என்கின்றார். உயிரும் மெய்யும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்தில் பல்தெய்வங்கள் உள்ளன என்று விளக்குகின்றார். அதனை நூற்பா வடிவில் தரும் சுவாமிகள்,

"உயிர்மெய் ஆதியில் உரைக்கரும் பேதத்(து)
அளவில்பல் தெய்வம் அண்ணுறும் அன்றே" (எழுத்து 100)

என நூற்பா யாத்துள்ளார்.

ஒப்பீடு

தண்டபாணி சுவாமிகள் உயிர்மெய்யெழுத்துக்களின் தொகை, வரிவடிவம், ஒலிப்புமுறை, ஒலிநிலை, இனம், தெய்வ நிலை என ஒவ்வொரு நிலையையும் அனைவரும் புரிந்து கொள்ளும் நிலையில் எளிமையாக விளக்குகின்றார். ஒவ்வொரு உயிர்மெய்யெழுத்துக்கும் வரிவடிவம், ஒலிப்புமுறை, ஒலிநிலை, இனம் முதலியன அமைத்திருப்பது இவருடைய தனிச்சிறப்பாகும். க முதல் கௌ வரையுள்ள எழுத்துக்களை வருக்கம் என்கிறார். இவற்றிற்கு ஒரே நூற்பாவில் வரிவடிவத்தையும், ஒலிப்பு முறையையும் சுட்டியிருக்கின்றார். இங்ஙனம் ன முதல் னௌ ஈறாக உள்ள எழுத்துக்களுக்கும் தருகின்றார். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புலமை என ஆறுவகை இலக்கணத்தை விளக்குகின்றார் ஆசிரியர். நன்னூலார் உயிர்மெய்யெழுத்துக்களின் தொகை, ஒலிப்புமுறை, ஒலிநிலை, இனம் முதலியவைகளைக் குறிப்பிடுகின்றார். ஆனால் வரிவடிவத்தைச் சுட்ட வில்லை. க முதல் ன வரையுள்ள எழுத்துக்களுக்கு ஒலிப்பு முறை, ஒலிநிலை, இனம் அமைத்திருக்கின்றார். ஒலிப்பு முறையைப் பிறப்பு என்கிறார். உயிர்மெய்யெழுத்துக்கென்று தனியே மாத்திரை சுட்டாது செல்கின்றார். தண்டபாணி சுவாமிகளைப் போன்றே நன்னூல் ஆசிரியரும் எளிய நடையில் சூத்திரங்களை அமைத்திருக்கிறார். எழுத்து, சொல் என இரண்டு அதிகாரத்தைத் தெளிவுபட விளக்குகின்றார்.

தண்டபாணி சுவாமிகள் உயிர்மெய்யெழுத்தை ஓரினமாகக் கொள்கின்றார். க-கௌ எழுத்தை வருக்கம் என்கின்றார். எழுத்துக்களுக்கு வரிவடிவம் சுட்டுகின்றார். இவருடைய அறுவகையிலக்கணம் ஒரு புதுமை இலக்கணமாகப் பொலிவு பெறுகின்றது.

அறுவகை இலக்கணம் கூறும் இசை வடிவங்கள்

ந. ஜெயவித்யா

முன்னுரை

அறுவகை இலக்கணம் என்ற நூலானது வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பட்டது. இவர் கி.பி 19-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இந்நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இவற்றொடு புலமை இலக்கணத்தையும் சேர்த்து ஆறு எனக் கணக்கிட்டு அவற்றிற்கு இலக்கணம் வகுத்துள்ளார். இவற்றில் யாப்பிலக்கணம் பற்றிக் கூறும்பொழுது நாடகத்தமிழ் நிலையில் இசை மற்றும் இசை வடிவங்கள் பற்றிய பொதுவான இலக்கணத்தை எட்டு நூற்பாக்களில் எடுத்துரைக் கிறார். ''இயல் முதலாகிய பகுதியை அடுக்கி முத்தமிழ்ப் பாமாலையில் மொழிந்தாலும் இசை மற்றும் இசை வடிவங்களான கீர்த்தனை, பதம், சிந்து இவற்றின் இலக்கணங் களை இங்குக் காணலாம்.

கீர்த்தனை

இறைப்புகழைப் பாடுவது என்னும் பொருள்பட அமைந்த கீர்த்தனை என்ற சொல்லானது தமிழிலக்கிய மரபில் காணப்படுகிறது. தமிழிலக்கிய மரபில் கீர்த்தனை என்ற சொல்லானது துதிப்பாடல்கள் பக்திப்பாடல்கள் என்னும் பொருள்பட வழங்கத் தொடங்குவதற்கு முன்னர் இத்தகைய துதிப்பாடல்கள் தேவாரம், தேவபாணி, திருப்புகழ் முதலான சொற்களால் வழங்கப்பட்டன. ஒன்பது பக்தி ஒழுக்கங்களில் ஒன்றான கீர்த்தனை என்ற அமைப்பிற்குத் தாழிசைப் பாடல் முன்னோடியாக விளங்கியுள்ளது.

கீர்த்தனைக்கு முன்னோடி தாழிசைப் பாடல்

கலிப்பாவின் ஓர் உறுப்பான தாழிசையானது ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வரும் பாடற்பத்திகளாலமையும்

''தத்தம்மில் ஒத்துத்தரவின் அகப்பட
நிற்பன மூன்று நிரந்தவை தாழிசை'' (காக்கை பாடினியம்)

அதாவது தாழிசையில் ஒவ்வொரு அடியும் சீர் அளவால் ஒத்திருக்கும் என்ற பொருளுடன் அடுக்கி வரும் பாடற்பத்திகளில் முதற்பாடல் ஈரடித்தாழிசையாயிருந்து அடுத்து வரும் பிறவும் அவ்வாறே அமையும். பத்திகள் மூன்று அல்லது நான்கு அடிகளிலும் அமையும் கடைசி அடிகள் ஒத்த மையக் கருத்தை சுருங்கச் சொல்லி அமையும் சிறப்புத் தாழிசைப் பாடலுக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

இவ்வகை அமைப்புடைய தாழிசைப் பாடல்களைக் கீர்த்தனையில் அடிப்படை உறுப்புகளோடு ஒப்பிட்டு காணலாம். அவ்வாறு நோக்கும்போது தாழிசைப் பாடலின் ஈற்றடிகள் தவிர்த்த பாடற்பத்திகள் கீர்த்தனையின் சரணங்களுக்கும் அப்பாடற்பத்திகளில் திருவம்பரல் முறையாய் அமைந்து காணப்படும். அவை தம் இதர அடிகள் கீர்த்தனையின் பல்லவிக் கும் ஒத்திருப்பதைக் காணலாம்.

''பல்லவத்து இருபங்கு அனுபல்லவமும்
அதன் இரு பங்காம் சரணமும் தாளம்
பிழையாது அமைத்து அதில் பேரின் பம் சொலின்
கீர்த்தனை என்னும் ……………………
… … … சொலல் பாவலர் வழக்கே

அதாவது பேரின்பப்பொருளைப் பாடுபொருளாய்க் கொண்டதும், அப்பொருளை ஒன்றுக்கொன்று முறையாக இரட்டித்த அடி யளவில் அமைந்த பல்லவி, அநுபல்லவி, சரணம் என்னும் மூன்று அங்கங்களில் வளர்த்து இசைக்கும் முறையில் அமைந்ததுமான பாடலைக் கீர்த்தனை என்று பாவலர் வழங்குவர் எனக் கூறுகிறார்.

வெளிப்பாட்டிற்கெனத் தேர்ந்து கொள்ளப்பட்ட செய்தி யொன்றின் கரு வெளிப்பாட்டின் தொடக்கமாகவும், அக்கருவின் வளர்ச்சி வெளிப்பாட்டின் தெளிவுப்போக்காகவும், கருவின் கனிந்த நிலை அச்செய்தி வெளிப்பாட்டின் முடிவாகவும் அமை கிறது. இந்த இயலிசைப்பாங்கின் வளர்நிலையையே பல்லவி, அநுபல்லவி, சரணம் எனக் குறிப்பிடுகிறார் சுவாமிகள்.

மேலும் அநுபல்லவியும், சரணமும் அளவில் கூடினாலும் பல்லவி, அநுபல்லவி, சரணம் ஆகியவற்றில் வர்ணித்துப் புகழப் படும் இறைப்புகழ் செய்தியானது அதன் வெளிப்பாட்டிற்கென அமைந்த இராகதாளத்தின் படிப்படியான வளர்முறைகளினடிப் படையிலேயே எளிய பொருள் கொண்ட சொற்களைக் கொண்டு அமைவது சிறப்பு அவ்வாறு அமையும் பொருள் சிறப்பாக அமையாமல் இருந்தாலோ அல்லது இயலிசைத் தமிழுக்குரிய திரிசொற்கள் மிகவும் அதிகமாகச் சேர்ந்தாலோ அப்பாடலின் தரங்குறைந்து விடும் எனவும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''பொருட்சுவை அழியினும் இயலிசைச்
சொல்மிகப் புணரினும் சோர்வுபடுமே'' (நூற்பா-54)

என்றும்,

''அநுபல்லவமும் சரணமும் அளவில்
கூடினும் தாளம் குழம்பாது, மாவரும்
அறிவுறும் பொருள் அடைந்து அவர்களின் நலமே''

என்றும் குறிப்பிடுகிறார். சரணமானது எண்ணிக்கையில் மிகுந்து காணப்படும் என்பதை,

''பல்லவம் போன்றே அநுபல்லவமும்
ஒன்று அலது ஒன்றாது; சரணம் ஒன்று அன்றி
மூன்றும் வரல் மிகை; ஐந்தேழ் ஒன்பது
பதினொன்று ஒன்றினும் பல்லவத்தலையில்
அவற்றின் ஈறு ஒன்றும் அடிகால் திகழ்பவே''

என்ற நூற்பாவின் மூலம் தெளிவு படுத்துகிறார்.

சிலப்பதிகார வரிப்பாடல்களிற் சில கீர்த்தனை அமைப்பின் பகுதிகளைப் பெற்றுள்ளன. ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வரும் பாவினம் கீர்த்தனை வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளது. திருஞானசம்பந்தரின் திருவலஞ்சுழிப்பதிகத்தில் 'என்ன புண்ணியம் செய்தன நெஞ்சமே' என்பதில் கீர்த்தனைப் பண்புண்டு. திருநாவுக்கரசரின் திரு அங்கமாலைப் பதிகம் பெருகக் கீர்த்தனைத் தன்மையுடையதே.

பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற இந்த முறையானது கி.பி.15-ம் நூற்றாண்டிலேயே, இயலிசையறிஞர்களால் கையாளப் பட்டுள்ளது. தெலுங்கு அன்னமாச்சாரியாவும், கன்னடத்தில்

புரந்ததாசரும், வடமொழியில் ஜெயதேவரும் இவ்வமைப்பைக் கையாண்டுள்ளனர் ஆனால் இவர்களுடைய பாடல் அமைப்புக் கீர்த்தனை வடிவில் அமைந்தாலும் புரந்தரதாசர் பாடல்களைத் ''தாசரபதகலு'' என்றும் ஜெயதேவருடைய பாடல்களை ''அஷ்டபதி'' என்றும் வழங்குகிறோம்.

தமிழில் முதன் முதலில் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற இம்முறையைக் கையாண்டவர் சீர்காழி முத்துத் தாண்டவர் என்பது துணிவு.

எ. கா.

இராகம்: மாயாமாளவ கௌளை தாளம்: ஆதி

பல்லவி

ஆடிக்கொண்டாரந்த வேடிக்கை காண கண்
ஆயிரம் வேண்டாமோ

அநுபல்லவி

நாடி துதிப்பவர் பங்கிலுறைபவர்
நம்பர் திருச்செம்பொன் அம்பலவாணரே

சரணம்

ஆரநவமணி மால்களாட ஆடும்மரவம் படம் விரித்தாட
சீனி கொன்றை மலர்தொடையாட சிதம்பரத்தேராட
பேரணி வேதியர்தில்லை மூவாயிரம் பேர்களும் பூசித்துக்
கொன்று நின்றாட
காரணி காளி எதிர்த்து நின்றாட கனகசபை தனியே

பதம்

பதத்தினைப் பற்றிக் கூறும்போது உலகியற் காதலாகிய சிற்றின்பத்தை உரைப்பது என்று பாவலர் வழங்குவதாகக் கூறுகிறார் சுவாமிகள்.

''மற்று ஏனையைக் கிளத்தில்
பதம் எவவும் செலல் பாவலர் வழங்கே'

கீர்த்தனையின் அமைப்பினை போன்று அமைவதால் பதத்தினைப் பற்றி விரிவாக கூறவில்லை.

பதங்கள் எல்லாம் அகப்பொருள் சார்ந்த பாடலாகும். புணர்ச்சி இன்பம், பிரிவுத்துன்பம், ஆற்றாமை முதலான

நுட்பமான அக உணர்வுகள் பதங்களில் வெளிப்படையாகவும் சிற்சில சமயம் உள்ளுறையாகவும் வைத்துப் பாடப்படுகின்றன. சிற்றின்ப உணர்வுகளை தருபவை போல் காணப்படும். ஆயினும் இவை பேரின்பத் தத்துவத்தை உணர்த்துகின்றன. இதுவே பதத்தின் இலக்கணமாகும் பசு – பதி ஆன்மா உறவை உணர்த்தும் பாடல்களே பதங்களாகின்றன.

எ.கா.

இராகம்: பைரவி தாளம்: சாபு

பல்லவி

முகத்தை காட்டியே தேகம் முழுமையும் காட்டாத
மூடு மந்திரம் ஏதய்யா

அநுபல்லவி

ஜகத்தில் அதிகமான ஆருரின் வாசலே
செயித்த மேனியில் ஊனம் உண்டோ தியாகசிரே

சரணம்

சாயக்ஷயில் வந்து சலிக்க பார்ப்போம் என்றாள்
சார்ந்தணிந்த செவ்வந்தி தோட்டைகாட்டி மயக்கி
மாயாவி தணமுள்ள மந்தஹாசத்துடனே
மால்பரு வேந்தியகரத்தை கூட மறைத்து

பதம், கீர்த்தனைப் போன்று அமைப்பு முறையில் ஒன்றா யிருப்பினும் பாடுபொருள், ராகதாள வேக அமைப்பில் பதம் கீர்த்தனையினின்று முற்றிலும் வேறுபடுகிறது.

சிந்து

நாட்டுப்புற இசைப்பாடலான அம்மானை, கும்மி, ஏசல் போன்ற பல சிற்றிலக்கியங்களில் சிந்துப்பாடலும் ஒன்று. இசைத்தமிழுக்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியம், பஞ்சமரபு இவற்றில் சிந்து என்பதை ஒன்பது வகையான இசைப்பாக்களுள் ஒன்றாக சிந்தப்பாடல் குறிப்பிடப்பட்டுள்ளது. சிந்து என்பது ஏழு எழுத்து முதல் ஒன்பது எழுத்து ஈறாகிய

அடியைக் கொண்டு மூன்று சீர்களைப் பெற்று வரும் சிந்தடி யாலானப் பாடல்கள் சிந்து வழங்கப்பட்டன.

'இரண்டியிரயத் தமிழ்லொத்து வந்த சிந்து கண்டு கொள்க' எனக் குறித்து சிந்து என்னும் இசைப்பாடலுக்கு இலக்கணம் கூறிய முதல் நூல் பஞ்சமரபேயாகும்.

பிங்கல நிகண்டு, திவாகரம், சூடாமணி நிகண்டு, ஆசிரிய நிகண்டு ஆகிய நிகண்டுகள் சிந்துப்பாட்டிற்குப் பொருள் கூறினாலும் சிந்துவின் இலக்கணம் கூறிய பஞ்சமரபு நூலிற்கு பிறகு எழுந்த நூல் தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணமாகும்.

இந்நூலின் பல்லவி, அநுபல்லவி என்னும் இருவகை உறுப்புகள் இல்லாமலும் நடனத்திற்கு ஏற்பக் குறிப்பிட்ட ஒரு பாடுபொருளைக் கூறுவதாகவும், இரண்டு அல்லது நான்கு அடிகளைக் கொண்டதாகவும் அமைவது சிந்து என்று தண்டபாணி சுவாமிகள் கூறுகின்றார்.

இருவகைப் பல்லவம் இன்றி ஆடலுக்கு
இசைவுறத் தனித்தனி ஈரடி நான்கடி
காட்டியோர் பொருளைக் கருதிக்கூறித்
தொகுப்பது சிந்ததெனச் சொல்வது வழக்கே.

சிந்திற்கு எட்டு சான்றளித்துள்ள அறுவகையிலக்கண உரையாசிரியர் இரண்டடிக் கண்ணியைக் கொண்ட சிந்திற்குப் பாரதியாரின் ''சின்னஞ்சிறு கிளியே'' என்ற பாடலையும், நான்கு அடியாலான சிந்திற்கு ''சுட்டும் விழிச்சுடர்தான்'' என்ற பாடலையும் குறிப்பிடுகிறார். மேலும் பல்லவியைக் கொண்ட இரண்டடி, நான்கடியாலான சிந்திற்கு ''தீராத விளையாட்டுப் பிள்ளை'' என்ற பாடலையும்'' பக்திகள் செய்தாரே'' என்ற பாடலையும் சான்றாகத் தருகிறார். இதில் தீராத விளையாட்டுப் பிள்ளை'' என்ற பாடல் அகப்பொருள் சார்ந்த பல்லவி என்ற உறுப்பு வருவது. இதனை சிந்திற்கு உதாரணமாக கொடுத் திருப்பது அறுவகை இலக்கண நூற்பா 53-க்கு முரணாக அமைகிறது. ''சுட்டும்விழிச்சுடர்'' என்ற பாடல் பதத்தின் இலக்கணத்தை பெற்று கண்ணிகளால் அமைகின்றன. அதனால்

இவ்விரண்டினையும் சிந்திற்கு சான்றாக உரையாசிரியர் கூறுவதை ஏற்றுக் கொள்ள இயலாததாகிறது.

முடிவுரை

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 19-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். ஆனால் இவரது காலத்திற்கு முன்பே இவர் கூறிய இசை வடிவங்களான கீர்த்தனை, பதம், சிந்து ஆகியவற்றிற்குப் பல இயலிசை அறிஞர்கள் வடிவம் கொடுத்துள்ளனர். கீர்த்தனை முறையானது பல் வடிவத்தில் தேவார மூவர்கள், ஆழ்வார்கள் மற்றும் இசையறிஞர்களால் கையாளப்பட்டுள்ளன. இலக்கண விளக்கமாக, தமிழில் நமக்குத் தெரிந்தவரை யாரும் கொடுக்கவில்லை என எண்ணலாம். அதனைத் தண்டபாணி சுவாமிகள் தமக்குச் சாதகமாகக் கொண்டு பாடலமைப்பு முறையை வைத்துப் பல்லவி அநுபல்லவி, சரணம் எனப் பிரித்து விளக்கமளித்துள்ளார் என்பது தெளிவு.

பதம் என்பதின் இலக்கணத்தை இசையியலாகச் சரிவர கொடுக்கவில்லை. ஆனால் கீர்த்தனையின் அமைப்பினையே கூறி "மற்று ஏனைய திளத்தில்" எனக் கூறுகிறார். இதிலிருந்து பதம் என்பது சிற்றின்பச் சொற்களைக் கொண்டு அமைவதையே பதம் என ஒருவரியில் குறிப்பிட்டுச் சொல்கிறார். இஃது ஆராய் வதற்கு உரியது.

சிந்தின் இலக்கணத்தைக் கூறிய பஞ்சமரபிற்குப் பிறகு இதை தெளிவாக விளக்கிய நூல் அறுவகை இலக்கணமேயாகும். ஆனால் இவற்றிற்கு உரையாசிரியர் தந்த மேற்கோள் பாடலில் பல்லவி, சரணம் என்ற அமைப்பில் இடம் பெற்ற பதத்தினைக் குறிப்பிடுகிறார். பல்லவி, சரணம் என்ற அமைப்பு மட்டும் இடம் பெறும் கீர்த்தனை மற்றும் பதங்கள் ஏராளம்.

தென்னக இசையின் பிரிவில் செவ்விசை வடிவங்களான கீர்த்தனை, பதம், நாட்டுப்புற இசை வடிவமான சிந்து இவற்றிற்குத் தாம் வாழ்ந்த காலத்தில் இருந்த பாடுமுறையைக் கொண்டு இசை இலக்கண நூற்பா அமைத்துள்ள பெருமை தண்டபாணி சுவாமிகளையே சாரும். அறுவகை இலக்கணத் திற்கு உரை எழுதுவோர் இசை இலக்கண நுட்பத்தையும் பாடுமுறையை அறிந்து உரை எழுதினால் மேலும் இப்பகுதி பயனுள்ளதாக அமையும்.

சுவாமிகளது மாண்பு

எஸ். ஆர். ஜெயவேலு

சைவம் தழைத்து ஓங்கவும், சிவநெறியில் ஒழுகி நிற்கும் அடியார்கள், சமயம், ஆன்மீகம் ஆகிய துறைகளில் மேம்பாடடைந்து வாழ்க்கையின் குறிக்கோளினை எளிதில் எய்தவும் சுவாமிகள் அரும்பெரும் தொண்டாற்றியவராவார். இறைவனாரை, குமரன், குருபரன், முருகன், சரவணன், குகன், சண்முகன், குழகன், சிவசுதன், சிவன், குருமணி என்ற நிலைகளில் கௌமார முறையில் வழிபட்டு சித்திகள் பல கைவரப் பெற்றவர். இன்றைக்கு சுமார் 630 ஆண்டுகளுக்கு முன் அவதரித்த ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் குகநெறியே தம் நெறி என மேற்கொண்டு வாழ்ந்து வந்தவர்.

சுவாமிகள் அருணகிரிநாதர் போலவே ஆழ்ந்த தமிழ்ப்பற்று உடையவர். அருணகிரிநாதரைப் பின்பற்றித் தமிழே, இனிதே, அமுதே, அழகே, உயிரே எனும்படி தமிழ் ஆர்வத்தில் திளைத்தவர். அவரது காவியங்கள், செய்யுள்கள் முதலியன, ஆழ்ந்த ஆன்மீக உண்மைகளை தம்முள் அடக்கிக் கொண்டிருப்பன. அவற்றில் நுட்ப திட்பங்கள் செறிந்து காணப்படுகின்றன. இயற்கை வருணனை, இறைமாட்சி, நாட்டு வளம் என்ற பல செய்திகளில் நம் சுவாமிகளும், அருணகிரிநாதரும் கவிநயம், நுட்பங்கள் சேர செய்யுள்கள் பல இயற்றியுள்ளனர்.

'வண்ணம்' என்பது அழகு, ஒப்பனை, குணம், சிறப்பு, வடிவமைப்பு, பாவின் ஓசை, கலிப்பாவின் ஓர் உறுப்பான முடுகியல், இசைப்பாட்டு எனும் பல்பொருள் பொதிந்த-ஒரு சொல்லாகும். 'சரபம்' என்பது சிங்கத்தைக் கொல்லக்கூடிய வலிமையுள்ளதான எட்டுக்கால் பறவை எனும் பொருளில், இரணியவதத்தின் போது கொதித்தெழுந்த நரசிம்ம மூர்த்தியின் கோபக் கனலை ஒடுக்க சிவபெருமான் சரபப் பக்ஷியாகத் தோன்றி எதிர்போர் செய்த வரலாற்றின் அடிப்படையைக்

குறிப்பதாயிற்று. ஈண்டு, திரிபுவனத்தில் சிவன் இப்பக்ஷி வடிவில் சரபேஸ்வரராக அருள்பாலிப்பது நினைவு கூர்தல் நலம். நம் தண்டபாணி சுவாமிகள் செய்யுள்கள், பாக்கள் இயற்றுவதில் மிக வல்லவராயினமையின் ஏனைய கவிஞர்களின் கவித்திறனை சிங்கத்தினையும் வெல்லக்கூடிய சரபப்பக்ஷியைப் போல் எளிதில் வெல்லக்கூடியவர் என்பது கருத்து.

சுவாமிகள் குறிப்பாக வண்ணங்கள் பாடுவதில் மிக சமர்த்தர். சேரமான் பெருமானாயனார் விளக்கந்தரும் பொன் வண்ணத்தந்தாதியின் இலக்கணத்துக்குத்தக சுவாமிகள் வண்ணங்கள் பல இயற்றியுள்ளதாகத் தெரிய வருகிறது.

சுவாமிகளுடைய பாடல்களில் பல தெய்வீக, ஆன்மீக, யோக நுட்பங்கள் பொதிந்து மிளிர்வதைக் காண முடிகிறது. ஸ்ரீ அருணகிரிநாதரின் கருத்துக்கள் பல சுவாமிகளின் பாடல்களில் ஆங்காங்கே காண்கிறோம். இவண், பாம்பன் சுவாமிகள் பஞ்சாமிர்த வண்ணம் இயற்றியுள்ளதை நினைவில் கொள்ளுதல் நலம்.

நக்கீரர் இயற்றிய கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதியைப் போல் சுவாமிகள் தில்லை பாதி – நெல்லை பாதி என்ற, அக்ஷரத்துக்கொன்று என 51 பாக்கள் அடங்கிய செய்யுளை இயற்றியுள்ளார். அருணகிரிநாதரின் கந்தரநுபூதியும் 51 செய்யுட்கள் கொண்டதே. சுவாமிகளின் பாடல்களிலுள்ள கருத்துக்கள் சிலவற்றை அருணகிரிநாதர் போன்ற சான்றோர் களது கருத்துக்களுடன் ஒப்புமை காண்போம்:

தில்லை பாதி – நெல்லை பாதி	திருப்புகழ் – அலங்காரம்
செந்திருவும் வெண்திருவும் சேர்ந்து விளையாடுகையால் இந்திரனும் ஒக்கு நெல்லையே	திருமகளுலாவு மிருபுயமுராரி திருமருக நாமப் பெருமாள்காண் மருவுமடியார்கள் மனதில் விளையாடு மரகதமயூரப் பெருமாள்காண்

பத்தர்களும் முத்தர்களும் பாவலரும் காவலரும் சித்தர் களும் நந்து திருத்தில்லையே	பத்தர் கணப்பிரிய நிர்த்த நடித்திடு பக்ஷி நடத்திய குக
	நாவலர் பாடிய நூலிசையால் வரு நாரதனார் புகல் குறமாதை நாடியகானிடை கூடிய சேவக
பையரவத்தாள் முனியும் பாய் புலிக்கால் மாதவனும் செய்ய கதி பெற்றுயர்ந்த தில்லை	இனியமுதுபுலிபாதனுடனரவு சதகோடி
எண்டோட் பரமர்	எண்டோளர் காதல்கொடு
நெல்லையே கூற்றனஞ்சூர் அன்பர்க் கெளியாராய் அந்தரத்தோர் ஆதியர்வெண் என் பணிந்தார் ஆறு நெல்லையே.	காதல்கறியே பருகு ஆறுமுகவா கருணை நெறி புரியுமன்பர்க் கெளியோனே
சிந்தாகுலம் தீர்க்கும் தில்லையே	சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள் கந்தா

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும், நெல்லையப்பர் கோவில் விமானத்துறை முருகப் பெருமானை தம்முடைய அகநெகிழ்ச்சியில் எழுந்த இறை நாட்டத்தை, எண்ணத்தை, உள்ளத்தை, சிந்தையை, புந்தியை, நோக்கத்தை, நெஞ்சத்தை, வேண்டலை, ஞானத்தை, வழிபாட்டினை, பூர்த்தி செய்ய வேண்டி ஒரு பதிகம் பாடி துதிக்கிறார்.

அருணகிரிநாதர் கந்தரநுபூதி வழங்கியவண்ணம் சுவாமிகள் 'தியானானுபூதி' என்ற 33 செய்யுள்கள் கொண்ட ஒரு நூலை இயற்றியுள்ளார். இந்நூலில் தியானத்தின் அத்தியாவசியத்தை சுவாமிகள் வலியுறுத்துகிறார். பரம்பொருள் அருவமாயினும் தம்மை எளிதில் பற்றுக்கோடாக பெற்று அதில் தியானத்தை மேற்கொள்வதற்கு, அவ்வருவமே உருவமாய் நின்று கைகொடுத் துதவும் என்பதை பல்வேறு உபமான உபமேயங்கள் கொண்டு விளக்குவார். ஈண்டு, "அருவமொடு நான்காகி, உருவமொடு நான்காகி, அரையிரண்டு மருவியுள உருவருவமும் ஒன்றாகி, முத்திறமும் வழுத்தவொண்ணா பெருவெளிக்கு அப்பாலாய்

உள்ள பொருள்'' என்று அருணகிரிநாதர் கொள்வர் என்றும், அப்பொருளே அவருக்கு சேயோனாகவே உபாசனா தியான மூர்த்தமாக அமைந்துள்ளது என்பதை பாம்பன் சுவாமிகள் பகர்வார். அருணகிரிநாதர் தம் உபாசனா மூர்த்தமாகிய முருகப்பெருமானை 'கனவிலும் நனவிலும் மறவேனே' என்று தம் தியான உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவார். பாம்பன் சுவாமிகளோ குகேசனை தம் பிண்டாகாசமாய தகராலயம் எனும் இதய குகையில் இருத்தி தியானிக்கும் நெறியே அண்டாகாசமாய பொன்னம்பலத் தியானத்துக்கு நிகர் என்பதைத் தம் தகராலய ரகசியத்தில் விளக்கிக் கூறியுள்ளார்.

தியானப் பயிற்சியில் பாவனா ஏகாக்கிர முறையின் முக்கியத்துவத்தை வெகுவாக சுவாமிகள் வற்புறுத்திக் கூறுவார். அந்த பாவனையும் தாம் மேற்கொண்ட ஒரு உபாசனாமூர்த்தி யிலேயே செயல்படுத்தி, முழுப்பலன் காணமுடியும் என்பது சுவாமிகளின் முடிபு. இத்தகைய பாவனை உரிய பொழுதில் (தூக்கத்தில் கைப்பொருள் நழுவ விடுவதுபோல்) தன்னால் கழன்று விடும் என்றும் தெளிவுபடுத்துகிறார். (அப்படி பாவனை நீங்கிய காலத்து ஆன்மா அருவமானதும், அதற்கப்பாலுமான பரவெளியின் கருப்பொருளாம் 'உண்மையில்' இயல்பாகவே இலயித்துவிடும் என்பது குறிப்பு).

ஈண்டு, சிவப்பிரகாசம் 86-வது செய்யுளில் பாவனையைப் பற்றி வரும் விளக்கம் நினைவில் கொள்ளுதல் நலம்.

பாவிக்கின் மனாதி வேண்டும் பயனிலை கரணம் நீத்துப்
பாவிப்பன் என்னின் என்ன பழுதுள பாவகத்தாற்
பாவிக்க ஒண்ணான் என்று பாவிப்பன் என்னின் நீ என்
பாவிக்க வேண்டா ஆண்டபரனருள் பற்றினோர்க்கே

எனும் இச்செய்யுளின் கருத்தாவது:- (1) அந்தக் கரணத்தால் பாவித்தல், (2) அவற்றை நீக்கி பாவித்தல், (3) பாவனைக் கெட்டான் என பாவித்தல், இம்மூன்றும் முறையே அசத்தும், கேவலமும், தற்போதமும், ஆதலை விளக்குவன. இப்படி யெல்லாம் பாவித்தாலும் உரிய பருவத்தில் அவனருளால், அவ் வருளையே கண்ணாகக் கொண்டு காண்பவர்க்கு ஒரு பாவனை யும் வேண்டா என்பது தெளிவு. அருணகிரிநாதரின்

திருப்புகழில் ''பதிபாவனையுற்று, அநுபூதியிலே அப்படியே அடைவித்து அருள்வாயே,'' என்ற குறிப்பும் உன்னற்பாலது.

உயிர்க்கொலை, ஊன் உண்ணல் முதலியவற்றைக் கண்டித்தலில் சுவாமிகளின் கருத்துக்கள் திருமூலர்,திருவள்ளுவர், வள்ளலார், பாம்பன் சுவாமிகளுடைய கருத்துக்களுடன் நேர்காண முடிகிறது.

அருணகிரிநாதர் மிகவும் வலியுறுத்தும் பெண்ணாசைத் தவிர்த்தலை சுவாமிகளின் பாடல்களில் அவ்வளவு அழுத்தமாகக் காண முடியவில்லை. சுவாமிகளின் இந்நிலை பாம்பன் சுவாமி களுடைய ஆத்தியாச்ரம (இல்லறம் முதிர்ந்த துறவு) நோக்குடன் ஒத்ததாகக் காணப்படுகிறது. வள்ளலார், மணிவாசகர், மற்றும் சான்றோர் பலரது ''மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டு''மென்ற கொள்கையை சுவாமிகள் வற்புறுத்திக் கூறுவதாகத் தெரியவில்லை. சுவாமிகளும் பாம்பன் சுவாமி களைப் போலவே இல்லறம் நடாத்தி பின்னர் துறவு பூண்டவர் என்பதால் இந்நோக்குடையவர் என்றும் சொல்லிவிடுவதற் கில்லை. இல்லறம் மேற்கொண்டு, பின்னர் துறவறம் ஏற்ற பட்டினத்தடிகள், மற்றும் தாயுமான சுவாமிகள் போன்றோர் 'பெண்ணாசையை இனி விட்டொழித்தல் அவசியம்' என்பதை வலியுறுத்துவர். (சுவாமிகளின் மகனாரும் மாணவருமான செந்தினாயக சுவாமிகள், தந்தைவழி நின்று, அவர் இயற்றிய நூல்களுக்கு உரை நல்கியிருப்ப, சுவாமிகளின் பேரன் முருகதாசர் கல்வி பயிலவும், குருபூசை முதலியன செய்வதற்கும் வசதி குன்றி சென்னைப் பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் மோசூர் கந்தசுவாமி முதலியார் இல்லத்தில் மூன்றாண்டுகள் தங்கி புலவர்பட்டக் கல்வி பயின்று வந்ததாக மேற்படி கந்தசுவாமி முதலியாரின் மகள் திருமதி அருள்பிரகாச அம்மையார் கூறுவர். ஒரு சமயம், நம் சுவாமிகள் ''தம் (சுவாமிகளுடைய) மனைவியால் (சுந்தர அம்மையார் அவரை மணந்ததால்) தாம் கெட்டதாகவும், வள்ளல்பெருமான் அவரது திருக்கூட்டத்தால் கெட்டதாகவும் (எப்படி என்று தெரியவில்லை!)'' சுவாமிகளின் பேரன் (முருகதாசர்) கூறியதாக செவிவழிச்செய்தி ஒன்று உண்டு. (ஈண்டு, பாம்பன் சுவாமிகளின் நேர்சந்ததியார், தாயுமானார் சந்ததியார் ஆகியோர், இன்று சீரிய நிலையில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது).

நம் சுவாமிகள் வேள்விகளைப் புறக்கணித்தார் என்பதும், சித்துக்கள் சில பிறருடைய நன்மைக்காக செய்தார் என்றும் தெரிகிறது. இவ்வகைகளில், அருணகிரிநாதர், ஆடுமயிலில் முருகனை வரவழைக்கச் செய்தது, மற்றும் கிளியுடலில் பரகாயப் பிரவேசம் செய்தது தவிர, வேறு சித்து ஆற்றல்கள் புரிந்த தாகத் தெரியவில்லை.

அருள் கைவரப்பெற்ற போது "அமுதூறல் நாடி யதன் மீது போய்நின்ற ஆநந்த மேலை வெளியேறி நீயின்றி நானின்றி நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற" யோக நிலைகளை மிக ஆழமாக, நுட்பமாக அருணகிரிநாதர் வடித்துக் காட்டுவர். நம் சுவாமிகள் இந்த நிலைகளை ஓரளவே தொட்டுக் காட்டுவர். "பக்குவ வாசார லட்சண" சிவயோகர் இதனை அனுபவத் திலேயே உணர முடியும் என நம் சுவாமிகள் விவரியாமல் விடுத்தனர் போலும்!"

திருஞானசம்பந்தர் முருகப் பெருமானின் ஒரு (அம்சம்) கூறு என்று அருணகிரிநாதர் தம் திருப்புகழில் பல இடங்களில் குறிப்பர். அத்தகைய ஞானசம்பந்தரின் பிரிதொரு தோற்றமே அருணகிரிநாதர் என்ற கருத்தும் பரவலாக உள்ளது. அருணகிரி நாதரையே தம் ஞானகுருவாக மேற்கொண்டு ஒழுகிய மற்றொருவர் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் ஆவர்.

முருகவழிபாட்டு நெறியில் நின்றதையும் அளப்பெரும் கவித்திறன் பெற்றதையும் பல யோக, ஆன்மீக நுட்பங்களை அனுபவத்தில் கைவரப் பெற்றதையும், இருவரும் முருகன் அருள் கைவராத நிலையில் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்த போது முருகனால் ஆட்கொள்ளப்பட்டதையும் கொண்டு நம் சுவாமிகள் அருணகிரிநாதரின் மறு அவதாரமே என்ற ஒரு கருத்தும் பல அன்பர்களிடையே பரவலாக உள்ளது.

இதுபோலவே தாயுமானார் பாடல்களையும், குணங்குடி மஸ்தான் சாகிப்பின் பாடல்களையும் ஆழ்ந்து பார்த்தால் இவை இரண்டுமே ஒரே ஒருவரால் இயற்றியவை என அதிசயத் தக்க வகையில் ஒற்றுமை காணலாகும். பாம்பன் குமரகுருதாச சுவாமிகளை உபய அருணகிரி என்று அழைப்பதின் கருத்தும் ஈண்டு உன்னற்பாலது. இது போன்று, பிரகலாதாழ்வாரே

ஸ்ரீராகவேந்திர சுவாமிகளாகவும், சீரிடி சாயிபாபாவே புட்டபர்த்தி சத்யசாயி பாபாகவும், மறு அவதாரம் செய்துள்ளனர் என்ற கருத்தும் மிகப் பரவலாக உள்ளது.

ஈண்டு ஒரு கேள்வி எழக்கூடும். முத்தி, சித்தி எனும் நிலைகளைப் பெற்ற சான்றோர் எவ்வண்ணம் மீண்டும் பிறப்பெடுக்கக் கூடும் என்பதே அந்தக் கேள்வி. இங்கு ஒரு யோக ரகசியத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

ஞானசம்பந்தர், அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள் என்ற வரிசையில் எண்ணிறந்த சான்றோர் பெருமக்கள் அவதரித்து, பல நுட்பமான ஆன்மீக கருத்துக்கள் இயற்றியதோடு, அரிய பல ஆன்மீக சாதனைகள் புரிந்துள்ளனர். அச்சான்றோர்கள் இப்போது தூலத்தில் இல்லை எனினும், அவர்கள், சூக்கும கதியில் தம் சாதனைகள், பாடல்கள், முதலியவற்றில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் எனும் உண்மை யோக வட்டாரத்தில் நிலவுகின்றது. ஏட்டுப்பிரதி, அச்சுப் பிரதியானாலும், அல்லது அவர்களது அந்தக்கரண அருள் ஆற்றல்கள் ஆனாலும், அத்தனையும் பரவெளியெனும் Aakashic Record – ல் நிரந்தரமாக (Record) பதிவு செய்யப் பட்டுள்ளன.

நவநீத கிருட்டிணன் கலம்பகத்தில் பக்தியும் கருத்துப் புலப்பாடும்

வ. ஜெயா

முன்னுரை

தன்னலம் கருதாது இறைவனிடம் காட்டும் அன்பே பக்தியாகும். திருமால் வழிபாடு தமிழ்நாட்டில் தொன்மை காலத்தே தோன்றி வளர்ந்து வரும் நெறியாகும். தொல் காப்பியம் திருமாலை முல்லை நிலத் தெய்வமாகச் சுட்டிக் காட்டுகிறது. மா, மால் என்ற சொற்கள் கருமை நிறத்தைக் குறிப்பிடுவதாக பொருள் கூறுவர். கருமை நிறத்தவரான மாயோன் பின்னர்த் திருமால், கண்ணன் என்ற பெயரில் அழைக்கப்படலானார். திருமால் வழிபாட்டைக் குறித்த கருத்துக்கள் பரிபாடலில் விரிவாக எடுத்தாளப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்திலும் திருமால் பெருமை சுட்டிக்காட்டப்படுகிறது. தொன்மை காலத்தே தோன்றி வளர்ந்த திருமால் வழிபாடு பக்தி இயக்கக் காலத்தில் மேன்மையடைந்தது. திருமாலின் அடியார்கள் ஊர் ஊராகச் சென்று அவரது திருத்தலங்களைக் கண்டு வணங்கி போற்றி பாமாலை பாடினர். இவ்வாறு திருமாலின் திருவருள் பேற்றில் மூழ்கித் திளைத்த அடியார்களை ஆழ்வார்கள் என்று அழைத்தனர். அவர்களின் பாடல்களில் காணப்படுகின்ற திருமாலின் பெருமை, கருணை, அருளிச் செயல்கள், தத்துவம் ஆகியவற்றில் மனதைப் பறிகொடுத்த வண்ணச்சரபர் வீரகேரளம்புதூரில் குடிகொண்ட நவநீத கிருட்டிணன் பெயரில் கலம்பகம் ஒன்றை இயற்றியுள்ளார். (வே. இரா. மாதவன் (பதி) பாவை வெளியீட்டகம், தஞ்சை) அக்கலம்பகம் வெளிப்படுத்தும் பக்தி நெறியினையும் கருத்துப் புலப்பாட்டுத் திறனையும் விளக்குவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

கலம்பகம்

தமிழில் தோன்றிய பல்வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று கலம்பகம். பல மலர்களைத் தொடுத்துக் கதம்ப மாலையாக

மாற்றுவது போல் பல பாவகைகள், பல உறுப்புக்கள், பொருளணிகள், சந்தப்பாக்கள், பலவகைச் சுவைகள் அடங்கியதைக் கலம்பகம் என்று கூறப்படுகிறது. இதில் புயவகுப்பு, தவம், சித்து, தூது, ஊர், அம்மானை, மதங்கு, குறம், பாண், கைக்கிளை, தழை, சம்பிரதம், கழிக்கரைப் புலம்பல், மறம், களி, ஊசல், இரங்கல், காலம் ஆகிய பதினெட்டு உறுப்புகள் அமையப் பெற்றுள்ளன. பாட்டுடைத் தலைவனின் சிறப்பைப் பலவகை யாப்புகள், அகம், புறம் போன்ற அமைப்புகள் வாயிலாக புலப்படுத்தப்படுகின்றன. இத்தகைய அமைப்பில்தான் நவநீத கிருட்டிணன் கலம்பகம் அமைக்கப்பட்டுள்ளது.

திருமால் மீது கொண்ட பக்தி

வண்ணச்சரபர் முதலில் சைவ பக்தியுடையவராய் விளங்கினார். நம்மாழ்வாரின் பாடல்களில் தோய்ந்த பின்னர் திருமாலையும் வழிபடலானார். திருமாலின் பெருமை, அவதாரக் கதைகள், அருளிச் செயல்கள், குணநலன் ஆகியவற்றைத் தமது நூலில் விரிவாக விளக்குகிறார் வண்ணச்சரபர்.

புலிமுற் போயமான் கன்றெனத் தளரப்
　　புரிந்துன் மெய்யருட் புகழ் சொலல் விழைந்தேன்
கலியிற் புண்படக் காண்பது முறையோ?
　　கருத்துள் வந்து அநாள் கழறல் பொய்ம் மொழியோ''

என்ற பாடல் திருமாலின் அருளுக்கும் ஏங்கும் நிலையை விரித்துரைக்கின்றது.

''கள்ளன்என ஏசினர்க்கும் காதலற தீர்த்தருளும் வள்ளல்''

என்ற வரியானது இறைவனைப் பழிப்பவர்களுக்கும் கூட அருள் வழங்கும் வள்ளலாக விளங்குவதை விளக்குகிறது.

''ஆம்பலன் றோலிட சென்றளித்தாய்என் றறைதலினால்
நோம்பல வாதனை யுந்தவிர்ப் பாய்என்ன
　　　　　　　　நோக்குகின்றேன்''

என்ற வரிகள் முதலையின் வாயில் சிக்கிய யானையின் துன்பத்தைப் போக்கிய திருமால் தன்னையும் காத்தருள வேண்டும் என்று வினவுதல் போல அமைக்கப்பட்டுள்ளன. உண்மையான பக்தியோடு எவர் அழைத்தாலும் இறைவன் அருள்புரிவான் என்ற கருத்தை உணர்த்தவே இவ்வரிகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

"அருங் கானகத்தில் விழல்வாய்ப்ப நீர்இறைப் பாரென்ன
வேபைம்பொன் வெஃகி நொந்தேன் அழல்வட்டு
மென்மெழு காகாமுன்
ஆண்டருள் அங்கையில் வேய்ங் குழல்கேட்கும் மால்''

என்ற பாடல் இவ்வுலக மாயையிலிருந்து மீண்டும் எப்பொழுதும் இறைவனையே நாட வேண்டும் என்ற கருத்தை உவமைகள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

"அகம்விட்டு ஒவரும் ஆணவக் கரைஅற
அழிக்குமா றறியாயோ''

என்ற வரிகள் மனதிலிருந்து ஆணவம் என்ற மலத்தை அறுக்க இறைவனை வேண்டுவதைக் குறிப்பிடுகின்றன.

"ஒழிக்கரும் ஆணவப் பேய்தலைக் கேறலில் ஓகை மிஞ்சிக்
கழிக்கரு வாதனைக் காளா யுளீர்சகம் காக்கும்மலர்
விழிக் கருணைத் திரு மால்''

என்ற பாடல் ஆணவத்தால் ஏற்படும் துன்பத்தில் உழன்று வாடும் மக்களைக் காக்க முழுமுதற் தெய்வமான திருமால் இருக்கிறார் என்ற கருத்தை விளக்குகின்றது.

சுத்த வெளிற்றுக் கலியொன்று
சொன்னானுடன் போய் மீண்டு வரும்
தொன்மைக் குணம்இன் றிலைகொல்லோ
துயர்மிக் குழன்றேன் அருள் சுரந்துஆள்''

என்ற பாடல் திருமழிசையாழ்வார் பாடலில் ஈடுபட்ட இறைவன் அவர் கூறியவுடன் பின் சென்றார். அதுபோல் தனக்கு ஏற்படும் துன்பங்களைக் களைய வேண்டும் என்று வினவுவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. அஞ்சனன், அச்சுத நாதன், அண்டர் நண்பன், ஆதிமால், கண்ணன், காகுத்தன், ஞானகுருபரன், நவநீதன், நாரணன், நெடுமால், பெருமாள், வரதன், வள்ளல், விகிர்தன், கரியவன், கிருட்டிணன், குழகன், கொண்டல்வண்ணன், கோபாலன், ஸ்ரீதரன், நேமியான், புருடோத்தமன், புனிதன், முகுந்தன், மணிவண்ணன் என்று திருமாலைப் பலவாறு போற்றிப் பாராட்டுகிறார் வண்ணச்சரபர். காயாமலர்த் துணர்போல் நின்றெறிக்கும் கண்ணபிரான், கொண்டல் மேனியன், கருமுகில், நீலமால் வரை, பச்சை நெடுமேனி அம்மான், செங்கண் நெடுமால், சங்காழிப்

படைக்கை மால், நான்முகனைப் பயந்த வுந்தி நளினத்தான், என்று இறைவனின் திருவுருவ அழகை வருணிக்கிறார். காக்கும் தொழில் கண்ணன், கருணை மால்வரை, கருணைக் கடல், பொழியருள் விளக்கிப் பொலிந்த புண்ணியன் என்று காத்தருளும் தன்மையை விளக்குகிறார். உள்ளக் கருத்தறிவான் வள்ளல், பன்மறையும் சொல் புனிதன், சிவனாதியர் தவநாடிய சீலன், துதிப்பவர் கெளியான், முல்லை நிலத்தலைவன், வேதன் அரன் இந்திரற்கு மேலானான் திருமாலே முழுமுதற் தெய்வம் பரம்பொருள் என்று விளக்குகிறார் வண்ணச்சரபர்.

கருத்துப் புலப்பாட்டுத்திறன்

கருத்துப் பரிமாற்றம் என்பது ஒரு கருத்தை வழங்கு பவனுக்கும் பெறுபவனுக்கும் இடையே தோன்றும் செயல்; அதாவது கருத்து ஒருபுறம் கொடுக்கப்படுகிறது; மறுபுறம் கொள்ளப்படுகிறது. இத்தகைய பரிமாற்றத்தில் மொழி பேச்சாகவும் எழுத்தாகவும் அமைகிறது. சமுதாய இயக்கத்திற்கு இதுபோன்ற கருத்துப் பரிமாற்றம் தேவையாகிறது. கருத்துப் பரிமாற்றம் நிகழும்போது அது செம்மையாக அமைய சில நெறிமுறைகள், மொழிக்கூறுகளின் தேர்வு, வெளிப்பாட்டு உத்திகள் போன்றவை தேவைப்படுகின்றன. இவையனைத்தையும் ஒருங்கிணைத்த விளக்கமே கருத்துப் பரிமாற்ற கோட்பாடு எனப்படுகிறது. அதாவது கருத்து கொடுக்கப்படுவதிலிருந்து அது எதிர்பார்க்குமிடத்தை அல்லது நபரைச் சென்று சேர்வது வரை அதிலிடம், பெறும் அமைப்பு, கருத்து, செயல், நபர்கள், உத்திகள் போன்றவை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தப்பட்டு கருத்துப் புலப்பாட்டிற்குரிய வகையில் வழிவகுத்துக் கொடுப்பதை விளக்கும் அமைப்பியல் நெறிமுறைகளின் ஒருங்கிணைப்பே கருத்துப் புலப்பாட்டுக் கோட்பாடு எனப் படுகிறது. இதனை மூன்று வகையில் பிரித்துக் கருத்தினை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

1. சொல்லாட்சி – மொழித்திறன்

சொற்கள் மொழியமைப்பிற்கு அடிப்படை. பெயர், வினை எனச் சொற்கள் பாகுபடுத்தப்பட்டு வாக்கியங்களிலும் உரைக் கோவையிலும் கருத்து வெளிப்பாட்டிற்கு ஏற்ற வகையில்

மையமாக அமைகின்றன. பல்வேறு சொற்கள், சொல்லமைப்புக்கள் ஓர் உரைக்கோவையில் / கவிதைக் கோவையில் இடம் பெற்றிருந்தாலும் அவற்றில் சிலவே மையச்சொற்களாக இடம் பெறுகின்றன. ஏனெனில் இவற்றை ஒட்டியே பிற சொற்கள் சொல்லமைப்புகள் வந்தமைகின்றன.

''கொண்டல் வண்ண மேனியும்
குவிந்த பொற்கி ரீடமும்
கோவை வாயும் முண்டகம்
குலாவு கண்க ளும்திருத்
துண்ட மும்செவிக் கணிந்த
குண்ட லங்க ளும்கையிற்
சோதி ஆழி சங்கமுற்
சொல்லும்பல் சீரும் என்னுள்ளே''

மேனி > கொண்டல் வண்ணம்
கிரீடம் > பொன்
வாய் > கோவை (சிவப்பு நிறம்)
கண்கள் > முண்டகம் (தாமரை)
செவி > குண்டலம்
கை > சோதி ஆழி, சங்கு

சிறந்த சொற்களைக் கையாண்டு இறைவனின் அங்கங்களை ஓவியாகத் தீட்டியுள்ளார் வண்ணச்சரபர்.

''சீதளநீர்ப் பதத்தானே சீதளநீர்ப் பதத்தானே
நாதருக்கார் தம்மானே நாதருக்கார் தம்மானே
காதலறத் தடுப்பானே காதலறத் தடுப்பானே
வீதனையூர் வீரையனே வீதனையூர் வீரையனே''

என்ற பாடல் இரு பொருளை விளக்கிக் காட்டுகிறது.

சீதளநீர்ப் பதம் — தாமரைத்திருவடி
சீதளநீர்ப் பதம் — குளிர்ச்சி மிக்க பாற்கடல்
நாதருக்கார் தம்மானே — வேதங்களை ஓதும் அந்தணர்களின் தலைவன்
நாதருக்கார் ஆர்த்து அம்மானே — ஞானிகளுக்கு அருளும் தலைவர்
காதுஅல் அற தடுப்பானே — அறியாமையை விலகச் செய்பவன்

காதல் அறத்து அடுப்பானே — தரும நெறியில்
ஒழுகுபவரின் அருள் புரிவான்
வீதனை ஊர் வீர ஐயனே — கருடப் பறவையைக்
கொண்டவன்
வீதல் நை ஊர் வீரையனே — வறுமையைப் போக்கும்
ஊராகிய வீரகேரளம்புதூர் இறைவன்

2. உரைக்கோவை – மொழித்திறன்

கருத்துப் பரிமாற்றத்திற்கு உரைக்கோவையே மிகவும் தேவையானது. சில சூழல்களில் சொல் – சொல்லமைப்புகள் போன்ற சிறு கூறுகள் ஓரளவிற்கு அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன. ஆனால் பெரும்பாலான சூழல்களில் உரைக் கோவையே அதிகப் பயன்பாட்டினைப் பெற்று விளங்குகின்றன. இதற்கு முக்கியக் காரணம் ஒரு கருத்தானது கோர்வையாக ஒன்றன்பின் ஒன்றாக ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்டு விளக்கம் பெறுவதற்கு உரைக்கோவையே ஏதுவாகிறது. ஒரு குறிப்பிட்ட சொற்கள் / சொல்லமைப்புகள் மூலம் அனைத்துக் கருத்துக்களையும் வெளியிட இயலாது. அவ்வாறு குறைந்தளவு சொற்கள், சொல்லமைப்புகள் மூலம் கருத்து வெளிப்படுத்தும் போது பொருள் குறைவு, பொருள் மயக்கம் ஏற்பட வாய்ப்பேற் படுவதுண்டு. அதனால் உரைக்கோவையே ஏற்ற மொழியமைப் பாகக் கொள்ளப்படுகிறது.

"வேதனரன் இந்திரற்கும் மேலானான் அம்மானை
வேதனரன் இந்திரற்கும் மேலானான் ஆமாகில்
பூதலத்துஏ னத்திற் புகுவானேன் அம்மானை
போதகனா வைத்துப் புரந்தான் காண்"

என்ற பாடல் வினா–விடை அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

வேதன் — பிரம்மன்; அரன் — சிவன்;
இந்திரன் — தேவர்களுக்குத் தலைவன்; ஏனம் — பன்றி
உருவம் (வராக அவதாரம்)

திருமால் எல்லா கடவுளர்களுக்கும் பரம்பொருள். முழுமுதற் கடவுள். ஆனால் வராக அவதாரம் எடுத்தது ஏன் என்ற வினாவினை வினவி அதற்குப் பதிலாக பூமியைக் காக்க என்ற பதிலைக் கூறுவதாக இப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது.

மேலானான் - பரம்பொருள்; புரந்தான் - காத்தான்

இறைவன் உலக மக்களைக் காக்கப் பல்வேறு அவதாரங்கள் எடுத்தான் என்ற கருத்தை இப்பாடல் விளக்குகிறது.

"நாரணனே! சங்காழிப் படைக்கை மாலே!
நான்முகனைப் பயந்தவுந்தி நளினத்தானே
வாரணமுன் சென்றாங்குஎன் முன்னும் இன்னே
வருகவென செந்தமிழால் வாழ்த்துவார்"

என்ற பாடல் இறைவாழ்த்துவது போல் அமைக்கப் பட்டுள்ளது.

நாரணன், சங்காழிப் படைக்கைமால் என்று இறைவனின் நாமத்தைக் கூறுகிறார்.

3. கருத்தமைவு - கருத்துப் புலப்பாடு

இலக்கியத்திற்கு இரு முக்கிய நோக்கங்கள் உண்டு. அதில் ஒன்று சமுதாய நோக்கு. மற்றொன்று கருத்துப் புலப்பாட்டு நோக்கம். முதல் நோக்கம் கருத்தடிப்படையில் அமைவது. இரண்டாவது கருத்தோடு மொழியும் இணைந்து அமைவது. பொதுவாக எந்தவொரு கருத்தும் சமுதாய அடிப்படையில் அமைந்ததே; மொழியால் அமைந்ததே. கருத்தை வெளிப் படுத்தும் நிலையில் மொழித்திறன் முதன்மை பெறுகிறது. கருத்தைப் புரிந்துகொள்ளும் நிலையில் புரிதிறன் முதன்மை பெறுகிறது. கருத்துக்கள் பேச்சு மூலமோ, எழுத்து மூலமோ எடுத்துச் சொல்லப்படும்போது சொல்லப்படும் கருத்துக்கள் அனைத்தையும் சிலரால் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது. வேறு சிலரால் ஓரளவு மட்டுமே புரிந்து கொள்ள முடிகிறது. கருத்து வெளிப்பாட்டில் ஒவ்வொருவரும் பயன்படுத்தும் மொழியமைப்பின்வழி மொழித்திறன் / புரிதிறன் மாறுபடுகிறது.

"ஐயமுற்றுத் தவமெதுவோ என்றேங்கித்
தடுமாறும் அறிவி லீர்கள்
... ...
துயருக்குஆ ருயிராகித் துட்டருக்கோர்
எமனாகித் துணிதல் தானே"

என்ற பாடலும்,

"மணிமுகில் எனநின் றருள் செய்வான் மலர்த்தாள்

மறந்தவர் பிறந்துழல் வாரே"

என்ற பாடலும் திருமாலே முதற் தெய்வம். அவரைத் தொழுதால் துன்பங்கள் நீங்கும். அவரைச் சரணடைந்தால் இறையின்பம் பெறலாம் என்ற கருத்தை உணர்த்துகின்றன. இறைவனைக் கருணைக்கடல், அவனைக் காணாத கண்கள் இருந்தென்ன பயன் என்று தமது பாடல் மூலம் விளக்குகிறார் வண்ணச்சரபர்.

முடிவுரை

வண்ணச்சரபர் சிறந்த சொல்லாட்சியினைக் கையாண்டு கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்தியிருப்பதை அவரது பாடல்கள் நமக்கு விளக்குகின்றன. அவதாரக் கதைகள் வாயிலாகச் சிறந்த கருத்தினைப் புலப்படுத்துகிறார். இறைவனின் பல்வேறு நாமங்களைத் தமது இலக்கியத்தில் கையாண்டுள்ளார். பல்வேறு யாப்புகளைக் கையாண்டு சிறப்பான இலக்கியத்தைப் படைத்துள்ளார் வண்ணச்சரபர்.